அடுத்த
வீடு
"லக்ஷ்மி"
பூங்கொடி
பதிப்பகம்

அடுத்த வீடு

''லக்ஷ்மி''

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி: 24643074

MAJESTIC BOOK HOUS
53-54, RAJA STREET,
NEAR FIVE CORNER,

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர் : அடுத்த வீடு
நூலாசிரியர் : லக்ஷ்மி
பொருள் : நாவல்
நூல் உரிமை : டாக்டர் கே.மகேஸ்வரன்
மொழி : தமிழ்
வெளியிடுவோர் : பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்குத் தெரு
மயிலாப்பூர், சென்னை-600 004.
வெளியிட்ட ஆண்டு : முதற்பதிப்பு : ஜனவரி 1979
இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 1982
மூன்றாம் பதிப்பு : ஜூலை 1986
நான்காம் பதிப்பு : அக்டோபர் 1991
ஐந்தாம் பதிப்பு : டிசம்பர் 1994
ஆறாம் பதிப்பு : மே 2000
ஏழாம் பதிப்பு : ஏப்ரல் 2005
எட்டாம் பதிப்பு : செப்டம்பர் 2009
நூல் அளவு : 1 x 8 கிரவுன்
பக்கங்கள் : 458
எழுத்து அளவு : 10 புள்ளி
தாள் : 11.6 கி.கி. வெள்ளைத்தாள்
பைண்டிங் : சாதா அட்டை
ஒளி அச்சுக்கோர்வை : வள்ளி லேசர் கிராஃபிக்ஸ்
சென்னை-600 018
அச்சிட்டோர் : அமர் ஆப் செட், சென்னை-5
விலை : ரூ.175.00

பதிப்புரை

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.''

மனித இனத்தில் விவசாய மக்கள் எத்தகைய உன்னதமான இடத்தைப் பெற்றுள்ளார்கள் என்பதை இந்தக் குறள் விளக்குகிறது.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்று விடுதலைக் கவி பாரதியும் முழங்கியுள்ளார்.

இந்தியாவின் பொருளாதாரம் விவசாயத்தை மையமாகக் கொண்டிருக்கிறது என்று நம் நாட்டுத் தலைவர்களும் அறிஞர்களும் கூறுகின்றனர்.

இத்தனைச் சிறப்பிற்கும் மதிப்பிற்கும் உரிய விவசாய மக்களின் சமுதாய வாழ்வு எத்தகைய அவல நிலையில் உள்ளது என்பதை ''அடுத்த வீடு'' என்ற இந்த நாவல் படம் பிடித்துக் காட்டுகிறது.

முப்பத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டு ஆனந்த விகடன் வார இதழில் தொடர் கதையாக வெளி வந்த இந்த நாவலில் புரட்சிகரமான சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை துணிந்து புகுத்தி நாவலை உருவாக்கி இருக்கிறார் ஆசிரியர் ''லக்ஷ்மி'' அவர்கள்.

புரட்சிகரமான பல அரிய கருத்துக்களைத் துணிந்து கூறுகின்ற இந்த நாவலை வெளியிடுகின்ற வாய்ப்பை எங்களுக்கு அளித்த திரு. கே. மகேஸ்வரன் அவர்களுக்கு எங்கள் நன்றி உரியதாகும்.

— வே. சுப்பையா

“லக்ஷ்மி”யின்

“பூங்கொடி” வெளியீடுகளில் சில...

• அழகின் ஆராதனை.	80.00
• அவள் தாயாகிறாள்.	35.00
• அசோகமரம் பூக்கவில்லை.	55.00
• அரக்கு மாளிகை.	180.00
• அதிசய ராகம்.	90.00
• அவள் ஒரு தென்றல்.	75.00
• இவளா என் மகள்.	65.00
• இனிய உணர்வே என்னைக்கொல்லாதே.	105.00
• இன்றும் நாளையும்.	90.00
• உறவுகள் பிரிவதில்லை.	40.00
• உறவின் குரல்.	65.00
• என் வீடு.	55.00
• என் மனைவி.	85.00
• ஒரு காவிரியைப் போல (சாகித்ய அகடமி பரிசு பெற்றது)	125.00
• கங்கையும் வந்தாள்.	115.00
• கதாசிரியையின் கதை (முதல் பாகம்)	60.00
• கதாசிரியையின் கதை (இரண்டாம் பாகம்).	70.00
• கழுத்தில் விழுந்த மாலை.	70.00
• கணவன் அமைவதெல்லாம்.	85.00
• காளியின் கண்கள்.	75.00
• கைமாறியபோது.	85.00
• கோடை மேகங்கள்.	90.00
• திரும்பிப் பார்த்தால்.	55.00
• துணை.	60.00
• தோட்டத்து வீடு.	50.00
• நாயக்கர் மக்கள்	150.00
• நிற்க நேரமில்லை.	80.00
• நிகழ்ந்த கதைகள்.	95.00
• நீலப்புடவை.	60.00

அடுத்த வீடு

1

மருதப்பக் கவுண்டர் மனத்திலே நிம்மதி நிறைந்திருந்தது. புதிய மருமகன் வரவை முன்னிட்டுத் தயாரித்திருந்த விருந்து அன்று வெகு அருமையாக அமைந்து விட்டிருந்தது. சாப்பாடு முடிந்ததும், அவர் வாசல் வராந்தாவில் வந்து அமர்ந்து கொண்டார். வெயிலின் கொடுமையை அறியாவண்ணம் இருக்கப் பச்சை வர்ணம் பூசப்பெற்ற தட்டிகளால் அடைத்த அந்த இடம், அன்று மிகவும் குளுமையாக இருந்தது. தட்டிகளின் மீது செழிப்பாகப் படர்ந்திருந்த கொடி -சம்பங்கியின் மலர்களிலிருந்து லேசான மணம் காற்றுடன் கலந்து கமழ்ந்து கொண்டிருந்தது. அதை நுகர்ந்தவண்ணம் கவுண்டர் கண்களை மூடிக்கொண்டு ஆனந்தமாகப் பல கற்பனைகளில் மூழ்கிப்போனார்.

வீட்டு காரியங்களை ஒருவிதமாக முடித்துக்கொண்டு ஜெகதா வாயிற் பக்கம் வந்தாள். எதிர்புறத்திலே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு கம்பளிச் சட்டை, தைக்கநூல், ஊசி சகிதம் உட்கார்ந்தாள்.

மருதப்பக் கவுண்டர் தமது கனவினின்று விழித்துக் கொண்டு திரும்பிப் பார்த்தார். ஜெகதா தலையைக் குனிந்தபடி மும்முரமாகத் தையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள். கவுண்டர் தமக்கு முன் தெரிந்த வாயிற்புறத்தைச் சிறிது நேரம் வெறித்துப் பார்த்தார். சம்பங்கி மலர்களைச் சற்று உற்றுக் கவனித்தார். கூரை முகட்டை அண்ணாந்து கவனித்துவிட்டு, தமது வழுக்கைத் தலையை இடது கரத்தால்

தடவிக்கொண்டார். பிறகு தம்மைச் சுற்றிலும் ஒரு முறை பார்த்துவிட்டு ஜெகதா பக்கம் மீண்டும் திரும்பினார்.

அவர் அருகிலே இருப்பதைக் கவனியாதவள் போல் அவள் வேகமாகக் கம்பளி நூலைப் பின்னிக் கொண்டிருந்தாள். அசாதாரணமான வேகத்துடன் அவளது கரங்கள் அசைந்ததைக் கவனித்த கவுண்டர் தமக்குள்ளே புன்னகை செய்து கொண்டார். ஆமாம், ஜெகதாவுக்குத் தங்கை மீதும், தந்தைமீதும் ஏற்பட்டிருந்த கோபம் இன்னமும் ஆறவில்லை!

தான் சிரமப்பட்டு சிபாரிசு செய்த பெரிய இடத்துப் பிள்ளைகளையெல்லாம் தந்தை தட்டிக் கழித்துவிட்டு, முடிவில் முன்பின் தெரியாத ஒரு நாட்டுப்புறத்தானுக்கு பெண்ணைக் கட்டிக் கொடுத்தது பற்றி அவளுக்கு அசாத்தியக் கோபம். "அப்பாவுக்குத்தான் வயது காலத்தில் அறிவு மங்கிக்கொண்டு வந்தது என்றால், பங்கஜத்திற்குமா புத்தி இப்படி ஒரேயடியாக மழுங்கிப் போகவேண்டும்? என்னத்தைக் கண்டு அவள் சதாசிவத்தை மணக்க மனம் ஒப்பினாள்? பணத்திற்கா? பதவிக்கா? அல்லது படிப்பிற்கா?" என்று ஜெகதாவிற்குத் தங்கைமீதும் பெரும் மனத்தாங்கல் ஏற்பட்டிருந்தது. கல்யாணத்திற்கு வந்ததிலிருந்து அவள் யாரிடமும் கலகலப்பாகவே பேசவில்லை. ஏதோ பறிகொடுத்து விட்டவள் போல் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு, அவள் தனது மனஸ்தாபத்தை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டிருந்தாள்.

கவுண்டரின் கடைசி மகள் பங்கஜத்திற்குத் திருமணம் நடந்து ஒரு வார காலம் சென்றிருந்தது. புது மருமகன் சதாசிவம் தன் மனைவியை அழைத்துப்போக வந்திருந்தான். அன்று இரவு வண்டிக்கு மணமக்கள் ஊருக்குப் புறப்பட இருந்தனர். பங்கஜம் புக்ககம் சென்றதும், கவுண்டருக்குக் குடும்ப பாரம் அனைத்தும் ஒருங்கே அகன்றுவிடும். எவ்விதப் பொறுப்பும் இன்றி மீதிக் காலத்தை கவலையற்று தள்ளலாம் என்ற நினைவில் அவர் நிம்மதியும் ஆனந்தமும் அடைந்திருந்தார்.

கவுண்டர் தமது மூத்த மகளின் கோபத்தைச் சிறிதும் , லக்ஷியம் செய்யவில்லை. அதற்கு மாறாக அவளது அறியாமையைக் குறித்துத் தமக்குள்ளே பெரிதும் அனுதாபப்பட்டுக் கொண்டார்.

நீலாம்பிகை அச்சகத்தின் முதலாளி என்று வெளிப்பார்வைக்கு அவர் கௌரவமாகத்தான் வாழ்ந்து கொண்டிருந்தார். வசதி மிக்க அழகிய மாடி வீடு, அச்சகத்திற்குச் சென்றுவர மோட்டார்வண்டி, ஏவிய வேலைகளைச் செய்ய வேலையாட்கள் என்று அவர் ஒரு குறையுமின்றி மிகவும் ஆடம்பரமாகத்தான் வாழ்ந்து கொண்டிருந்தார். நீலாம்பிகை அச்சகத்தையும், அவரது வீட்டையும் பார்த்துவிட்டுப் பங்கஜத்தை வரிக்க வந்த வாலிபர்கள் பலரும் அவரது செல்வத்தைக் கணக்கிட்டார்கள். அமெரிக்காவுக்கு மேல் படிப்பிற்கு அனுப்பினால் போதும், சொந்தத்தில் தொழில் நடத்த ஆரம்பத்தில் பண உதவி செய்தால் நல்லது, என்றெல்லாம் அவர்கள் ஒவ்வொருவரும் பேரம் பேசினார்கள். கவுண்டர் வலிய வந்த பல நல்ல வரன்களுக்குப் பிடி கொடுத்துப் பேசாது தட்டிக் கழித்த மர்மம் அவர் ஒருவருக்கு மட்டும்தான் தெரியும். அவரது மூத்த மகள் ஜெகதாவுக்குக்கூட தெரிய வழியில்லாதிருந்தது.

நீலாம்பிகை அச்சகம் என்று பார்ப்பவர்களின் கண்ணைக் கவர்ந்த அவரது அச்சுத் தொழிற்சாலையும், அழகிய வீடும், காலிலிருந்து தலைவரை கடனில் மூழ்கிக் கிடந்தன! மாரடைப்பினாலோ, தலைவலியினாலோ கவுண்டர் கண்களை மூடவேண்டியதுதான் தாமதம்; வீட்டையும், அச்சகத்தையும் கடன்காரர்கள் வந்து பலாப் பழத்தின் மேல் ஈக்களைப்போல் சூழ்ந்து கொண்டு விடுமளவுக்கு அவரது பொருளாதார நிலைமை படுமோசமாயிருந்தது. ஆனால் அதைப் பற்றிக் கவுண்டர் அணுவளவும் கவலைப்படவே இல்லை. தமது பெண்களையெல்லாம் தக்க இடத்திலே மணம் செய்து கொடுத்த பின்பு சொத்து இருந்தால்தான் என்ன? கடன் இருந்தால்தான் என்ன? உலகைவிட்டுப் போகும் பொழுது இவைகளில் எதைத்தான் எடுத்துக் கொண்டு போகப் போகிறோம்?-என்று வேதாந்த மனப்பான்மை அவருக்கு. மேலும் பங்கஜத்திற்கு வந்திருந்த கணவன் சதாசிவத்தை அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. படிப்பிற்கும் பதவிக்கும் என்று தமது மற்ற மூன்று பெண்களையும், அவர் பூரண மனத் திருப்தியுடன்தான் மணம் செய்து கொடுத்திருந்தார்.

மூத்த மருமகன் சோமசுந்தரம் நன்றாகப் படித்தவன். புகையிலை வியாபாரத்தில் பணத்தைக் கொள்ளையாகத்தான் சம்பாதித்திருந்தான். நகரத்திலே நான்கு வீடுகளைச் சேர்ந்தாற்போல் வாங்கி ஜெகதாவுக்கு சொந்து சேர்த்து வைத்திருந்தான். ஆனால் என்ன? ஜெகதாவை மூன்றாவது தாரமாக அவன் மணந்து கொள்ளும்பொழுது அவனுக்கு வயது ஐம்பதாகிவிட்டிருந்தது. தாம்பத்திய வாழ்வை ஆரம்பித்த பத்து வருஷங்களுக்குள் கவுண்டரின் மூத்த மகள் விதவையாகி விட்டிருந்தாள்.

இரண்டாவது பெண் கோகிலாவைப் பதவியை முன்னிட்டு கவுன்சிலர் கந்தசாமிக்கு இரண்டாவது தாரமாக மணம் செய்து கொடுத்திருந்தார். அந்த சம்பந்தத்தினால், குடும்ப கௌரவம் எவ்வளவு தூரம் உயர்ந்தது என்று கவுண்டர் ஆராய்ந்து அறியுமுன்பு, அவரது மகள், திருமணம் ஆன மறுமாதம் திடீரென்று ஒரு நாள் காய்ச்சலில் காலமாகிவிட்டாள்.

மூன்றாவது மகள் சுலோசனாவைக் கொழும்பிலிருந்த பிரபல ஹுண்டி வியாபாரி குமரப்பனுக்கு விவாகம் செய்து கொடுத்திருந்தார். அளவற்ற திரவியத்தை உத்தேசித்து அவளும், இரண்டாவது தாரமாகத்தான் வாழ்க்கைப் பட்டிருந்தாள். ஆனால், சுலோசனா நீண்ட நாள் கணவனின் செல்வத்தை அனுபவிக்கக் கொடுத்து வைத்திருக்கவில்லை. முதல் பிரசவத்திலேயே அபாயத்திற்குள்ளாகி, அவள் தந்தை வந்து பார்க்குமுன் மரணமடைந்துவிட்டாள்.

மற்ற மூன்று பெண்களது வாழ்க்கையையும் பங்கஜத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், கவுண்டருக்குப் பலவகையிலும் இந்த சம்பந்தம் மெத்த திருப்தியை அளித்தது.

நான்காவது மருமகனுக்குக் கிராமத்திலே சொந்த வீடும் நிலமும் இருந்தன. வாழ்வின் தேவைகளைப் பற்றிக் கவலையின்றி பங்கஜத்தை சுகமாக வைத்துக் காப்பாற்றுவான் என்று கவுண்டர் பூரணமாக நம்பினார். சதாசிவத்தின் இளம் வயதும், கவர்ச்சிகரமான தோற்றமும், சாதுர்யமான பேச்சுக்களும் வாழ்க்கையிலே முன்னுக்கு வரக்கூடிய வாலிபன் என்ற எண்ணத்தை அவருக்கு ஊர்ஜிதம் செய்தன. சகல விதத்திலும் பங்கஜத்திற்குப் பொருத்தமான ஒரு வரன்

தானே வலிய வந்து அமைந்தது பற்றிக் கவுண்டர் தமக்குள் எண்ணி எண்ணிப் பூரித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

நகரத்திற்கு ஏதோ சொந்த அலுவலாக வந்திருந்த சதாசிவத்திடம் கிராம முன்சீப் தமது மகள் திருமண அழைப்பிதழை அச்சடித்துக் கொண்டுவரும்படி கேட்டுக் கொண்டிருந்தார். வாங்க வேண்டிய சாமான்களையெல்லாம் வாங்கிக் கொண்டு தன் சொந்த அலுவல்களை முடித்துக் கொண்டு ஊருக்குக் கிளம்பு முன்புதான் அவனுக்கு முன்சீப் அவர்களின் வேண்டுகோள் ஞாபகத்திற்கு வந்தது. ஸ்டேஷனுக்கு அருகேயிருந்த நீலாம்பிகை அச்சகத்திற்குள் அவசரமாகப் புகுந்தான். கையில் எடுத்துக் கொண்டிருந்த வேலையைக்கூட ஒத்திப் போடும்படி உத்தரவிட்டு கவுண்டர் சதாசிவத்தின் காரியத்தை முதலில் முடித்துக் கொடுத்தார்.

திருமண அழைப்பிதழுக்காக அவன் ஒரு தினம் கூடவே நகரத்தில் தங்க நேர்ந்தது. சிறிது பொழுதில் பேச்சுவாக்கிலே நண்பராகிவிட்ட கவுண்டர், அன்று பகல் சாப்பாட்டு வேளையின்போது சதாசிவத்தை தமது காரிலே வீட்டிற்கு விருந்து சாப்பிட அழைத்துச் சென்றுவிட்டார். அதற்கு பிறகு நகரத்திற்கு வர நேர்ந்த ஒவ்வொரு சமயமும் சதாசிவம் கவுண்டரைச் சந்திக்கத் தவறவில்லை. இந்த சந்திப்பு விரைவில் பங்கஜத்தின் திருமணத்தில் வந்து முடிந்துவிட்டது.

சிந்தனையினின்று விடுபட்ட மருதப்பக் கவுண்டர், தொண்டையை ஒரு முறை பலமாக இருமினார். ''என்ன, ஜெகதா! யாருக்காக இவ்வளவு அவசரமாகச் சட்டை தைக்கிறாய்?'' என்று தாமே பேச்சைத் துவக்கினார். அவரது கண்களிலே பரிகாசம் மிதந்து கொண்டிருந்தது. ஜெகதா பதில் பேசாது தையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள். ஆனால் கவுண்டர் அத்துடன் விட்டுவிடவில்லை. ''பங்கஜத்திற்குத்தான் தைக்கிறாய் போலிருக்கிறது?'' என்று வினவினார்.

அதைக் கேட்டதுமே ஜெகதா கோபத்துடன் வெடுக்கென நிமிர்ந்தாள். கையிலிருந்த கம்பளிச் சட்டையை பெஞ்சு மீது வீசிப் போட்டுவிட்டு, ''இது ஒண்ணுதான் அந்த பட்டிக்காட்டிற்குக்

குறைச்சலாக இருந்திச்சு. பேரைப்பார், காரிகுளம்'' என்று கடுத்துக் கொண்டாள்.

கவுண்டர் பதிலுக்குக் கடகடவென்று நகைத்தார். ''நல்ல பெண் நீ, ஜெகதா ஊரின் பேருக்கும், பங்கஜத்தின் கணவனுக்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேலியாகக் கேட்டார்.

''ஊரின் பேரைக் கேட்டாலே சுத்த அநாகரிகம் பிடித்த பட்டிக்காடு என்று நல்லாப் புலப்படவில்லையா? ஊருக்கும் சதாசிவத்திற்கும் என்ன சம்பந்தம்னா கேக்கறீங்க? பட்டிக்காட்டிலே பிறந்து வளர்ந்த அந்த நாட்டுப்புறத்தானுக்கு, பங்கஜத்தைப்போல சொகுசா வளர்ந்த ஒரு பெண்ணை வச்சுக் காப்பாத்த எங்கே தெரியப்போகுது? நிலத்த உழ சந்தையிலே மாடுகள் வாங்கிக் கொண்டு போவது போல, வீட்டை நிர்வகிக்க உங்க பெண்ணைக் கட்டிக் கொண்டதாக அவன் நினைக்கிறான்'' என்று படபடப்பாகப் பேசினாள் ஜெகதா.

''இன்னும் சதாசிவத்தோடு நீ ஒரு வார்த்தை கூடப் பேசிப் பார்க்கவில்லை. அதற்குள் அவனை மிகவும் அறிந்து கொண்டவள்போல் 'அவன் அப்படி நினைக்கிறான். இப்படி நினைச்சுத்தான் செய்திருப்பான்'னு குறை சொல்கிறாயே?'' என்று பரிகாசமாகக் கேட்டார் கவுண்டர்.

அசட்டையாக ஜெகதா முகத்தைச் சுளுக்கினாள். ''ஒரே பார்வையிலே எனக்கு ஒருத்தருடைய குணம் அப்படியே படம் பிடிச்சாப்பிலே தெரிஞ்சுடும். ஏன், உங்க மருமகன் கூட அடிக்கடி சொல்லி ஆச்சரியப்படுவாரே! ஒரு வாட்டி கூட நீ சரியா ஆளைப் பார்க்கல்லை. அதுக்குள்ளே அவுங்க குணத்தை அப்படியே ஒப்பிக்கிறியே?'' என்று அதிசயப்படுவார்!'' என்று தலையை ஆட்டி பெருமை தொனிக்க மிடுக்காகப் பேசினாள். காலஞ் சென்ற தன் கணவனைப் பற்றி தினசரி ஒரு முறையாவது பேச்சில் குறிப்பிடாது அவளால் இருக்க முடியாதாகையினால், கவுண்டர் தமக்குள்ளே லேசாகப் புன்முறுவல் செய்து கொண்டார். அதைக் கவனிக்காது ஜெகதா மேலே தொடர்ந்தாள்.

''பந்தலில் வந்து சதாசிவம் நின்னபோது ஏறஇறங்க ஒரு தரம் அவனை உற்றுக் கவனிச்சேன். பங்கஜத்தை சந்தோஷமா ஒரு நாளும்

இவன் காப்பாத்த மாட்டான்னு எனக்கு ஏதோ ஒண்ணு சொல்லிச்சு. 'இருந்திருந்தும் அப்பா பங்கஜத்தை இவனுக்கா கொண்டு கொடுக்கணும்'னு நினைச்சப்போ எனக்கு பகீர்னு இருந்தது'' என்று முடித்தாள்.

கவுண்டர் அசட்டையாகச் 'சூள்' கொட்டினார். ''ஆதாரமில்லாத வீண் மனப்பான்மையை வைத்துக் கொண்டு நீ இப்படி அர்த்தமில்லாமல் பேசுகிறாய். சுமார் ஆறுமாத காலமாக எனக்கு அந்தப் பையனைத் தெரியும். மரியாதையான சுபாவம், அடக்கமான பழக்க வழக்கம் உள்ளவன். விரைவிலே முன்னுக்கு வரக் கூடியவன். இப்போ இப்படிதான் 'முணுமுணுப்பாய். சில வருஷங்கள் கழித்து, நீ சதாசிவத்தைப் பத்திப் பேசுகிற விதமே முற்றிலும் மாறியிருக்கும். பார்த்துக்கொண்டே இரு. அப்போ நான் கேட்கிறேன்'' என்று சமாதானப்படுத்தும் தோரணையில் சொன்னார்.

''உசிரோட இருந்தா நான் பார்க்காமலா போகிறேன். என் மனசிலே பட்டது ஒரு நாளும் தவறாகவே போனதில்லை. என்னவோ, அப்பா! ஆனாலும் நீங்க அவசரப்பட்டு இந்தக் கல்யாணத்தை முடிச்சிருக்க வேண்டாம்'' என்றாள் ஜெகதா, மனத்தாங்கல் நிறைந்த மெல்லிய குரலில்.

''நீ இவ்வாறு மனதை அலட்டிக் கொள்ள சதாசிவத்திற்கு என்ன குறையிருக்கிறது! அதைத்தான் சொல்லேன்!'' என்று கவுண்டர் பொறுமையை இழந்து சற்று அதட்டிக் கேட்டார்.

''என்ன குறையா! இந்த வீட்டிற்கு மருமகனாக வர அவனுக்கு என்ன யோக்யதை இருக்கிறது? சொல்லுங்க பார்க்கலாம்! படிப்பு உண்டா, பணம் உண்டா? அந்தஸ்து உண்டா? பதவிதான் உண்டா? உதியமரத்தைப் போல ஆள் ஆறடிக்கு மேலே வாட்டசாட்டமாக இருக்கிறான். அவ்வளவுதான்!'' என்று அலக்ஷியமாகப் பதிலளித்தாள் மகள்.

''பார்க்கிறதுக்கு லட்சணமா இருக்கிறான்னாவது ஒப்புக்கொள்கிறாயே? போகட்டும் போ!'' என்று ஏளனமாகச் சொன்னார் கவுண்டர், தமது கோபத்தை அடக்கிக் கொண்டு.

''அழகிருந்தால் மட்டும் போதுமா? அழகு சோறு போட்டு விடுமா? மனுஷனுக்குப் படிப்பு வேண்டாமா? பதவி வேண்டாமா?''

என்று வெடுக்கென்று கேட்டாள் அவள்.

''ஜெகதா! படிப்பு என்றால் நீ எதைக் குறித்துப் பேசுகிறாய் என்று புரியவில்லை. சதாசிவம் நீ நினைக்கிறதுபோல் தற்குறிப் பேர்வழியல்ல. ஏதோ கொஞ்சம் படித்திருக்கிறான்'' என்று கவுண்டர் உரத்த குரலில் அதட்டினார்.

ஊருக்குப் புறப்படத் தன் சாமான்களையெல்லாம் சேகரித்து பெட்டிக்குள் அடுக்கி வைத்துவிட்டு மாடியறையிலிருந்து அது சமயம் பங்கஜம் கீழே இறங்கி வந்து கொண்டிருந்தாள். வாயிற் புறத்திலே கவுண்டர் இரைந்து பேசுவது காதில் படவே கலவரத்துடன் அவள் மாடிப்படியின்மீது அப்படியே நின்றுவிட்டாள்.

''என்ன படிக்க கிழிச்சிருக்கான்? வெட்கக் கேடு. கல்யாணத்தன்றைக்கு வந்த வாழ்த்துத் தந்திகளைப் படிச்சுப் புரிஞ்சுக்க அவனுக்குத் தெரியவில்லை. நம்ப ஆபீஸ் பையன்தான் எல்லாத்தையும் படிச்சு அவனுக்கு அர்த்தம் சொன்னானாம். யாரையும் குத்தம் சொல்லி இனி பயன் என்ன; இரண்டு வார்த்தை இங்கிலீஷ் கூடப் படிக்காத ஒரு பட்டிக்காட்டானுக்கு வாழ்க்கைப்படணும்னு பங்கஜம் தலையிலே எழுதியிருக்கு'' என்று வெறுப்புடன் ஜெகதா உரத்த குரலில் பேசினாள்.

பங்கஜத்தின் முகம் அவமானத்தில் சிவந்துவிட்டது. அவளது நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. தன் கணவன் சதாசிவத்தைப்பற்றி ஜெகதா செய்த விமர்சனத்தைக் கேட்டுக் கொண்டு அங்கே நிற்க அவளால் முடியவில்லை. விடுவிடுவென்று படிகளை ஒரே நொடியில் கடந்து வாயிற்பக்கம் ஓடி வந்தாள் அவள்.

''அக்கா! போதும்! நீங்கள் பேசுவது அவர் காதில் பட்டால் பிறகு வீண் பொல்லாப்புத்தான் சம்பவிக்கும்?'' என்று கோபத்துடன் அதட்டினாள்.

எதிர்பாராத இந்த தாக்குதலில் ஜெகதா ஒரு கணம் அரண்டு போய் விட்டாள். எனினும் சட்டென தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''இப்பொழுது நான் இல்லாத பொய் என்னத்தைச் சொல்லிவிட்டேன்? உண்மையைச் சொல்ல நான் யாருக்காக பயப்படவேணும்? நான் இன்னும் ஆயிரம் தடவைகள்

வேணுமானாலும் இதையே சொல்லிக்கிட்டுத்தான் இருக்கப் போகிறேன். நேத்திக்கு முளைச்ச பெண் என்னை வந்து அதட்டுகிறதைப் பாரு! அப்பாவுக்குதான் வயசு காலத்திலே யோசனை மங்கிப் போச்சுன்னா உனக்குந்தான் அறிவு மழுங்கிக் கிடக்கிறது. என்னத்தக் கண்டு இந்த மன்மதனை மணந்து கொண்டாயோ தெரியவில்லை?'' என்று சீறினாள்.

''உஸ்... ஜெகதா!'' என்று கவுண்டர் தம் மூத்த குமாரத்தியைப் பார்த்துக் கோபத்துடன் ஒரு அதட்டல் போட்டார்.

பங்கஜத்தின் முகம் ரத்தமென மேலும் சிவந்து போயிற்று. அவளது கண்களில் நீர் திரையிட்டுக் கொண்டது. நெஞ்சு இரண்டாக வெடித்துவிடும் போல் வேகமாக அடித்துக் கொண்டது. உதடுகள் உணர்ச்சி வசத்தில் துடித்தன.

''உண்மையைச் சொல்ல வேணுமானால் நானும் எவ்வளவோ சொல்லமுடியும். முதலில் நான் கேட்கிறதற்கு பதில் சொல்லுங்கோ பார்க்கலாம். என்னத்தைக் கண்டு அத்தான் சோமசுந்தரத்தை நீங்க கட்டிக்கிட்டீங்க?'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள் பங்கஜம்.

கண்கள் பிதுங்கிவிடும் போல் ஜெகதா கோபத்துடன் தங்கையைப் பார்த்து விழித்தாள். மிதமிஞ்சிய சினத்தினால் அவளுக்கு வார்த்தைகள் தடுமாறின. ''என்னத்தைக் கண்டா? சென்னை ராஜதானிக்கே முதலாக அத்தான் பி.ஏ. பரீட்சை கொடுத்தவராக்கும்! உன் புருஷனைப்போல வாழ்த்துத் தந்தியைக் கூடப் படிக்கத் தெரியாத அறிவிலி இல்லை. நாவை அடக்கிப் பேசு!'' என்று இரைந்து கத்தினாள்.

''பணமும் படிப்பும் உங்களுக்கு உயர்வாகத் தோன்றலாம். எனக்கு இளமையும், அழகும் உயர்வாகத் தோன்றுகிறது. இவ்வளவுதானே அக்கா? என்ன இருந்தாலும் உங்களைப்போல பணத்திற்கும் பதவிக்கும் ஆசைப்பட்டுக் கொண்டு நான் ஒரு நாளும் மூன்றாவது தாரமாக வயசு வந்தவரை மணந்து கொண்டிருக்க மாட்டேன்'' என்று சுடச்சுடப் பதிலளித்தாள்.

ஜெகதா சினம் தாளாது பெஞ்சியைவிட்டு எழுந்தாள். ''நன்றி கெட்ட பெண்ணே? பெற்ற குழந்தைக்கு மேலே உன்னிடம் அன்பு

செய்திருக்கிறார்? நான் மட்டும் வக்க அத்தான் உனக்கு எவ்வளவு செய்திருக்கிறார்? நான் மட்டும் கல்யாணம் செய்து அத்தான் அவர்களை மூணாவது தாரமாகக் கல்யாணம் செய்து கொண்டிருக்காவிட்டால் மருதப்பக் கவுண்டர் மகள் பங்கஜம் இருந்த இடம் புல் முளைச்சிருக்கும்!'' என்று இரைந்து கூச்சலிட்ட அவள், தந்தையின் பக்கம் திரும்பி, ''ஏன் அப்பா, நீங்களே சொல்லுங்க. அத்தான் இந்த வீட்டுக்கு மருமகனா வந்த பிறகுதானே கோகிலாவிற்கும் கலோசனாவிற்கும் நல்ல இடங்களிலே கல்யாணம் நடந்தது? அவர் உதவி செய்திரா விட்டால் அந்தக் கல்யாணங்களை அவ்வளவு விமரிசையாக செய்து முடிச்சிருக்க முடியுமா?'' என்று கையை ஆட்டிக் கொண்டு உரத்த குரலில் மூச்சுத் திணற ஆர்ப்பரித்தாள்.

தொண்டையைக் கனைத்துக்கொண்டு கவுண்டர் ஜெகதாவைப் பார்த்துக் கடுமையாக உறுத்து விழித்தார். ''போங்க ரெண்டு பேரும் உள்ளே! குழந்தை ஊருக்குப் புறப்படுகிற சமயத்திலே இப்படிப் பேசுகிறதான்னு உனக்கும் அறிவில்லை. அக்காவாச்சுதேன்னு பங்கஜத்திற்கும் மரியாதை இல்லை. சே! சே! கேட்க நல்லாவேயில்லை. போங்கோ உள்ளே!'' என்று இரண்டு பெண்களையும் கோபத்துடன் கடிந்து கொண்டார்.

ஆனால், பங்கஜம் அப்பாவின் வார்த்தைகளைக் காதிலே வாங்கிக் கொள்ளவில்லை. ''என்ன நல்ல இடம் அவர்களுக்குக் கிடைத்துவிட்டது? பணத்துக்காக அந்த அக்கா ரெண்டு பேரையும், இளையதாரமாக வயது வந்த கிழங்களுக்குத்தான் கட்டிக் கொடுக்க உதவினீங்க! நல்லவேளை, என் கல்யாணத்திலே நீங்க குறுக்கிட்டு அப்பாவுக்கு யோசனை சொல்லுமுன்னே, தெய்வாதீனமா நான் தப்பித்துக் கொண்டேன். எனக்கு உங்களைப் போல பணத்து மேலே ஆசையில்லை. பதவி மேலேயும் மோகம் இல்லை. படிப்பும் எனக்குத் தேவையில்லை. மனசுக்குப் பிடிச்ச புருஷன் இருந்தா எனக்குப் போதும். உதியமரமோ உத்திரமோ, அவரை எனக்குப் பிடிச்சது. கல்யாணம் செய்துகொண்டேன். உங்களுக்கு என்ன இதைப்பத்தி?'' என்று துடுக்காகப் பேசினாள்.

முகத்திலே அரும்பி வழிந்த வியர்வையை ஜெகதா புடவைத் தலைப்பால் அழுத்தித் துடைத்துக்கொண்டாள். ''இளமைத் துடிப்பிலே, புது மோகத்திலே, மண்டைக்கர்வமாக நீ இப்படி முறை

தவறிப் பேசுகிறாய். வாழ்க்கையிலே மனத்துக்குப் பிடித்த புருஷன் மட்டும் இருந்தால் போதாது. பணமும் முக்கியம். பணம் இல்லாவிட்டா ஒரு நிமிஷங்கூடக் காலம் தள்ள முடியாதுங்கிறதை நீ இன்னிக்கு இல்லாவிட்டாலும், ஒரு நாளைக்குத் தெரிஞ்சுக்கப் போகிறாய். அப்போது உனக்கு அக்கா ஜெகதா ஞாபகம் வரும்'' என்றாள்.

''அப்படி ஒரு காலம் வந்தாலும், உங்ககிட்ட உதவிக்கு வரமாட்டேன். கவலைப்பட வேண்டாம்'' என்று வார்த்தை அம்புகளை வாரிவீசிய பங்கஜமும், விம்மிக் கொண்டு உள்ளே ஓடினாள். பெட்டியைத் திறந்து அவசரமாக அடியிலிருந்த ஒரு பட்டுச் சேலையை எடுத்துக் கொண்டு வாயில் பக்கம் வந்தாள். ''இந்தாங்க அக்கா! இவ்வளவு பேசிய பிறகு உங்கள் பரிசு ஒண்ணுதான் எனக்கு பாக்கியாக இருந்ததா? இதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்!'' என்று மிடுக்காகக் கூறியபடி, கல்யாணத்திற்கு ஜெகதா பரிசாக அளித்திருந்த விலையுயர்ந்த பட்டுச் சேலையை அவள் முன்பு தரை மீது வீசியெறிந்தாள்.

அதைக் கண்டு ஜெகதா பதில் பேசவில்லை. 'பார்த்துக் கொள்ளுங்கள் உங்க சின்ன மகளை!' என்ற பாவத்தில் தந்தையின் முகத்தைப் பார்த்தாள்.

''பங்கஜம்!'' என்று கவுண்டர் அதட்டி அழைக்கும் முன் அவள் விம்மியழுதுகொண்டு உள்ளே ஓடி விட்டாள்.

அதற்குப் பிறகு அன்று அக்காவும் தங்கையும் பேசிக் கொள்ளவேயில்லை. கணவனுடன் ஊருக்குப் புறப்படுமுன் மரியாதைக்காக 'போய் வருகிறேன்' என்று அக்காவின் முகத்தைப் பாராமலே தங்கை முனகிவிட்டு விடைபெற்றுக் கொண்டாள்.

அன்று ரயில் பிரயாணத்தின்போது வழி நெடுகிலும் சதாசிவம் பங்கஜத்திடம் மிகவும் அன்பு பாராட்டி அதிக உபசரணைகள் செய்தான். ''குளிருகிறது. இந்த போர்வையை எடுத்துக் கொள்ளேன். தாகத்திற்கு சோடா வேணுமா? வாசனைக் கதம்பம் வேண்டுமா?'' என்றெல்லாம் நிமிஷத்திற்கு நிமிஷம், அவளது சௌகர்யங்களிலே கண்ணும் கருத்துமாக இருந்தான்.

கணவன் காட்டிய பரிவும் அன்பும் பங்கஜத்திற்கு மிகவும் இனிமையாக இருந்தன. ஆனால் என்ன முயன்றும் அவளால் அக்கா கூறிய அந்தக் கடும்மொழிகளை மறக்கவே முடியவில்லை. ''பணம் என்பது இல்லாமல் ஒரு நிமிஷம் காலம் தள்ள முடியாது என்பதை இன்றைக்கு இல்லாவிட்டாலும் ஒரு நாளைக்குத் தெரிஞ்சுக்கப் போகிறாய். அப்போது உனக்கு அக்கா ஜெகதாவின் ஞாபகம் வரும்'' என்ற அந்த வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவளது காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருந்தன.

2

அன்னம்மாளுக்கு முன்போல் உடம்பில் வலுவு இருக்கவில்லை. கிராமத்திலே வயதில் அவளை ஒத்திருந்த கிழங்கள் அனைவரும் மண்ணோடு மண்ணாகி மறைந்து விட்டிருந்தனர். எழுபத்தெட்டு வயதாகியும், என்ன காரணத்தாலோ, மரண தேவதை அவளை எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

இவ்வளவு வருடங்களில் அவள் காய்ச்சல் என்று ஒருநாள் தலையைக் கீழே சாய்த்தவள் அல்ல. தலைநோவு என்று வாயால் கூறியது கூடக் கிடையாது. காலையில் எழுந்ததிலிருந்து, இரவு படுக்கும்வரை துருதுருவென ஓயாது ஒழியாது வேலை செய்து வந்த அவளுக்குக்கூடச் சமீப காலமாக உடலிலே சோர்வு காணத் தொடங்கியிருந்தது. போதாததற்கு இவ்வளவு காலமாகக் கூர்மையாக இருந்த அவளது பார்வை, கடந்த சில மாதங்களாகப் பாதியாகக் குறைந்துவிட்டிருந்தது. அன்று காலைப் பொழுது நன்றாக விடியும் முன்பு, இருளில் தட்டுத் தடுமாறிக் கொண்டு அன்னம்மாள் புழக்கடைத் தோட்டத்திற்குச் சென்றாள். அவளது காலடி ஓசையைக் கேட்டதுமே கொட்டிலிலிருந்த பசு உடலைச் சிலிர்த்துக் கொண்டு, ''அம்மா!'' என அழைத்தபடி எழுந்து நின்றது.

''வரேன், சித்த இரு!'' என்று பதில் கொடுத்துவிட்டு அன்னம்மாள், தாழ்வாரத்திலே கிடந்த கூடையை எடுத்துக் கொண்டு மேலே நடந்தாள். தோட்டத்தின் மறுகோடியிலிருந்த பவள மல்லிகை

மரம், தரைமீது பாய் விரித்ததுபோல் மலர்களை உதிர்த்து விட்டிருந்தது. கண்களை உபயோகிக்காது, நிதானத்தின் பேரில் ஒரு மலரைக்கூட மீதம் வைக்காது அவள் கணப்பொழுதிலே அவ்வளவையும் வாரிக் கூடையிலே சேர்த்தாள். பிறகு, அருகிலேயிருந்த செடிகளில் மலர்ந்திருந்த ரோஜா மலர்களையும் ஒன்று விடாது பறித்துக் கூடையில் நிரப்பிக் கொண்டு திரும்பினாள். பத்திரமாக அதை உள்ளே கொண்டுவைத்து விட்டு பால் செம்பும், காலணைக் கயிறுமாக, மறுபடியும் தோட்டத்திற்குள் வந்தாள்.

''அம்மே! அம்மே!'' என்று பலமாக மீண்டும் பசு அவளைக் கூவியழைத்துக் கத்தியது. அதற்கு ஒத்துப் பாடுவதுபோல் கொட்டிலின் மறு மூலையிலிருந்த கன்றுக்குட்டியும் அம்மா!'' என்று அடித்தொண்டையிலே அலறியது.

''சனியனுக்குப் போடும் நீனி தண்டம்'' என தனக்குள்ளே முணுமுணுத்த கிழவி, கன்றுக்குட்டியை அவிழ்த்து விட்டாள். பிறகு வைக்கோல் போரினின்று, ஒரு கை அளவு வைக்கோலைக் கணக்காக எடுத்து வந்து, பசுவுக்கு முன்பு அதை விட்டெறிந்துவிட்டுப் பால் கறக்க உட்கார்ந்தாள். வற்றிக் காய்ந்து எலும்பும் தோலுமாக நின்ற அந்தப் பசு அன்னம்மாளைப் பரிதாபமாகப் பார்த்தது. ''தவிடும் புண்ணாக்கும் தாராளமாகப் போட்டால், உனக்குச் செம்பு நிறைய பால் கொடுக்க மாட்டேனா? பட்டினி போட்டு என்னைக் கொல்கிறாயே, பாட்டி!'' என்று கேட்பது போன்றிருந்தது அந்தப் பார்வை. அன்னம்மாள் அதிருப்தியுடன் பால் செம்பை எடுத்துக் கொண்டு எழுந்திருந்தாள். ''ஆனையைக் கட்டித் நீனி போடறாப்பல உன்னைக் கட்டி நீனி போட்டு நான் உருப்பிட்டா போலத்தான். இந்தக் கறவைபோட உன்னைச் சந்தையிலே கொண்டு தொலைச்சு விடுகிறேன்'' என்று கோபத்துடன், அதனிடம் பேசிவிட்டுக் கிணற்றடிக்குச் சென்றாள்.

ஒரு வாளி குளிர்ந்த நீரை இறைத்து, பல் துலக்கி முகத்தைக் கழுவிக் கொண்டாள். வாளியில் மீதமிருந்த தண்ணீரைத் தாராளமாக, பால் செம்பிற்குள்ளே விட்டு, நிரப்பிக்கொண்டு உள்ளே சென்றாள். இதற்குள் கிழக்கு வெளுத்து, இருள் மறைந்து பொழுது நன்றாக விடிந்து விட்டது. பூக்காரக் கந்தப்பன் வாயிற்கதவை உடைத்து விடுகிறவன்போல் பலமாகத் தட்டிக் கொண்டிருந்தான்.

''சித்த மெதுவா, தம்பி! உன் வலு முழுவதையும் என் கதவுமேலே காட்டறியே!'' என்று பொக்கை வாயைக்காட்டிச் சிரித்த கிழவி, கதவைத் திறந்தாள். கூடத்திலே வைத்திருந்த பூக்கூடையை எடுத்து, தான் கொண்டு வந்திருந்த பெரும் குடலைக்குள் கவிழ்த்துக் கொண்டான் கந்தப்பன். கிழவிக்குப் பதிலளிக்கவோ, அவளுடன் ஊர் வம்பு பேசிக் கொண்டிருக்கவோ அவனுக்குப் பொழுதே இருக்கவில்லை. வெய்யில் ஏறு முன் பத்து மைலுக்கு அப்பாலிருந்த பூக்கடையில், அதைக் கொண்டு சேர்த்துவிட வேண்டும் என்ற பரபரப்பு அவனுக்கு. தயாராகக் கையில் கொண்டு வந்திருந்த நாலணா நாணயத்தைக் கிழவியின் முன்னால் வீசி எறிந்துவிட்டு, அவன் அவசரமாக வெளியே நடந்தான்.

''ஏ தம்பி! கந்தப்பா!'' என்று அன்னம்மாள் கூப்பிட்டு விலையைப் பற்றி பேரம் பேசுமுன் அவன் தெருக்கோடியைத் தாண்டிவிட்டான்.

''இந்தப் பாழாப் போகிற பயல், நாலு வருஷமா ஒரே விலையாகவல்லவா எடுத்துக்கிட்டுப் போறான்? பூவுக்குப் பஞ்சமா இருக்கிற இந்தக் காலத்திலே, கொஞ்சம் கூடவிலை கொடுத்தால் என்னவாம்!'' என்று தனக்குள்ளே சபித்துக் கொண்டு, யோசனையுடன் அன்னம்மாள் தலையைச் சொறிந்து கொண்டாள்.

அடுத்தாப்போல் ஜிலுக் ஜிலுக்கென்று கால் மெட்டி இனிய ஓசை எழுப்ப கோடி வீட்டு பங்காரு வெண்கல லோட்டாவுடன் உள்ளே நுழைந்தாள். ''என்ன இன்னிக்கு இத்தனை நேரம்?'' என்று குசலம் விசாரித்த அன்னம்மாள், பால் செம்பை எடுத்துக் கொண்டு வந்தாள்.

''காலை வேளையிலே வீட்டை விட்டுக் கிளம்பறதுன்னா பெரும்பாடாக இருக்குது'' என்று அலுத்துக் கொண்ட பங்காரு, கிழவி அளந்துவிட்ட பாலை சந்தேகத்துடன் விறைத்துப் பார்த்தாள். ''என்ன பாட்டி, இன்னிக்கு ஒரே தண்ணியா இருக்குதே?'' என்று திடுக்கிட்டு வினவினாள் அவள்.

கொக்கு இறகு போன்று கழுத்தின்மீது புரண்டு கொண்டிருந்த தனது நரைத்த கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டாள் அன்னம்மாள். ''நல்லா பார்த்துவிட்டுப் பேசு. கள்ளிச் சொட்டு போல பாலு பாத்திரத்தை விட்டு வர மாட்டேங்குது. இதைப் போய்த்

தண்ணீங்கிறியே! பத்து நாளா மாட்டுக்கு அகத்திக்கீரை வாங்கி போடுகிறேன். அதனாலே பார்க்க கொஞ்சம் நீரா கறக்குது. குழந்தைக்குன்னு சொல்லி வாங்கிப் போறே. அதிலே போய் நான் தண்ணியைக் கலப்பேனா?'' என்று கோபம் தொனிக்கும் குரலில் மிரட்டினாள்.

லோட்டாவை எடுத்துக் கொண்டு புறப்பட்ட அந்தப் பெண் பெருமூச்சு விட்டாள். ''போனதெல்லாம் போகட்டும்! இது ஒண்ணாவது நல்லா இருக்கட்டும்னு பணத்தைப் பார்க்காமே நான் பாலும் நெய்யும் வாங்கிப் போடுகிறேன். அப்படியும் உடம்பு தேறவே மாட்டேங்குது'' என்றாள் விரக்தியாக.

அன்னம்மாளின் மெலிந்த உதடுகளில் புன்னகையொன்று லேசாக அரும்பியது. ''பங்காரு! நான் சொன்னதைக் கேட்டால் உன் மகன் இரண்டே மாசத்தில் கொழுக்கட்டை மாதிரி உப்பிப் போயிடுவான். நீதான் காதிலே போட்டுக்க மாட்டேங்கிறே!'' என்றாள்.

''லேகியத்திற்கு ஒரு ரூபாய் கேக்கிறயே பாட்டி. ஒரு முழு ரூபாயைக் கண்டு எத்தனை மாசமாகுது? அவர் கொடிக்கால் பக்கமே போய் வருஷத்திற்கு மேலாச்சு. மேலே போட்டிருந்த நகையெல்லாம் ஒண்ணு விடாமே வித்துத் தின்னாச்சு'' என்றாள் துயரத்துடன்.

''ஒரு ரூபாயும் எனக்கா கேட்கிறேன்? லேகியம் கிளற குங்குமப்பூ, பசும் நெய், கல்கண்டு, தேன் இதெல்லாம் வேணாமா? இதோ பார், பங்காரு! உனக்காக ஒரு கால் ரூபா வேணுமானா குறைச்சுக்கறேன். பணம் இன்னிக்குப் போகும், நாளைக்கு வரும். பிள்ளை அப்படியா?'' என்று அதட்டிக் கேட்டாள் கிழவி.

''காது ஓலை ஒண்ணுதான் பாக்கி. அதை எங்கேயாவது அடகு வச்சால்தான் பணம் உண்டு'' என்றாள் பங்காரு.

அதைக் கேட்ட அன்னம்மாளின் கண்களில் பேராசை பொங்கி வழிந்தது. ''உனக்கு இதுக்குக் கூட யோசனை தோணலையே! தாயா பிள்ளையா நாம் பழகினோம். பணம் இல்லாட்டி என்னைக் கேட்கக் கூடாதா? அந்த ஓலையை வச்சிக்கிட்டு நான் பணம் தர மாட்டேனா?'' என்று தேன்போல் இனிக்க நயமாகக் கேட்டாள்.

''அப்படியானால் நாளைக்கி வரச்சே அதைப்பத்தி முடிவு

செய்வோம்'' என்ற கூறிவிட்டு அந்தப் பெண், தனது புடவை முந்தானையில் பத்திரமாக முடிந்து வைத்துக் கொண்டிருந்த மூன்று காலணா நாணயங்களை அவிழ்த்து எடுத்துக் கிழவியிடம் கொடுத்தாள். அலட்சியமாகக் கையை நீட்டி பெற்றுக் கொண்ட அன்னம்மாள், அந்தப் பெண் வீட்டை விட்டுப் போனவுடன், அந்த நாணயங்களைத் தரையில் போட்டுத் தட்டிப் பார்த்தாள். அவைகள் செல்லும் காசுகள்தான் என்று அறிந்ததும் திருப்தியுடன் தனது புடவைத் தலைப்பில் பத்திரப் படுத்திக் கொண்டாள்.

பங்காரு வீட்டு வாயிலை விட்டுத் தாண்டு முன், அவள் மீது மோதிக் கொண்டு விடுகிறவன்போல், பத்து வயது சிறுவன் ஒருவன் கிழவியின் வீட்டிற்குள் ஓடி வந்தான். ''சீக்கிரம் பாலை ஊத்திக் கொடுங்க! பள்ளிக்கூடத்துக்கு நேரமாகுது'' என்று துரிதப்படுத்திய சிறுவன் ஒரு அணா காசை அவளிடம் கொடுத்தான். ''விடியறதுக்குள்ளே அங்கே போய் நீ என்ன பண்ணப் போறே!'' என்ற உரிமையுடன் அதட்டிய கிழவி, சிறுவனிடம் பேச்சுக் கொடுத்தபடி, உழக்கை சாய்த்துப் பிடித்து குறைவாகவே பாலை அளந்து பாத்திரத்தில் ஊற்றினாள். 'அதைக் கவனித்த சிறுவன், ''பாட்டி! வர வர நீ ரொம்ப தண்ணியைப் பாலிலே ஊத்திவிடுகிறாய்னு உன்னை அய்யா திட்டுறார். இனி தண்ணி கலந்து கொடுத்தா டிகிரி போட்டு பார்த்து விடுவேன்னு சொல்லச் சொன்னார்'' என்றான்.

அன்னம்மாள் கோபத்துடன் தனது முகத்தை வலித்தாள். ''டிகிரி போட்டுத்தான் பார்க்கட்டும். உங்கப்பன் பாலுக்குள்ளே தன் தலையைத்தான் விட்டுப் பார்க்கட்டும். எனக்கு என்ன பயம்? நோயாளியா இருக்கிறானே பாவம்னு நல்ல பாலா கொடுத்தா, பேச மாட்டானா அவன்!'' என்று உறுமினாள்.

அவள் மேலே தொடர்ந்தாப்போல இன்னும் அதிகம் பேசுமுன் அந்தச் சிறுவன், ஒரே பாய்ச்சலில் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வெளியே ஓடி மறைந்து விட்டான். இதற்குப் பிறகு கிழவி எழுந்திருந்து தனது மற்ற வீட்டு வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள். புழக்கடை கிணற்றிலிருந்து ஒரு குடம் தண்ணீரை இறைத்து வந்து வாயிலில் தெளித்துப் பெருக்கிக் கோலமிட்டாள். வீடு முழுவதும் சுத்தமாகப் பெருக்கி முடித்துவிட்டு, கையையும்

கழுவிக் கொண்டு சமையலறைக்குள் புகுந்தாள். அடுப்பு மேடைமீது இருந்த பெரிய சட்டியில், பாதிக்குமேல் பழைய சாதம் அப்படியே இருந்தது.

அன்று பொழுதிற்கும், அடுத்த நாளைக்கும் சமையலைப் பற்றியே கவலையில்லை என உணர்ந்ததும் அன்னம்மாளின் மனம் நிம்மதியடைந்தது. சாதத்தின்மீது நின்ற நீரை ஒரு பாத்திரத்தில் வடித்து எடுத்துக் கொண்டு, அதிலே ஒரு பிடி உப்பைப் போட்டுக் கலக்கி, வயிறு புடைக்கப் பருகினாள். தனது காலை ஆகாரத்தை இவ்வாறு சிக்கனமாக முடித்துக் கொண்டதும், புடவைத் தலைப்பிலிருந்த பணத்தை அவிழ்த்து எடுத்துக் கணக்கிட்டுப் பார்த்தாள். விடிந்ததிலிருந்து அதற்குள் அவள் ஐந்தே முக்கால் அணா சம்பாதித்து விட்டிருந்தாள். அவ்வளவு தொகையையும் உரியில் தொங்கிய பானைக்குள் பத்திரப் படுத்தினாள். சமையலறைக் கதவைத் தாளிட்டு வெளியே பூட்டினாள். நன்றாகப் பூட்டிக் கொண்டதா என்று தெரிந்து கொள்ள பூட்டை இருமுறை பலமாக இழுத்துப் பார்த்தாள். திருப்தியானதும் சாவியை ஒருவர் கண்ணிலும் படாது, கூரையிடுக்கிலே வழக்கம்போல் செருகிவிட்டு, வாயிற் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

இடுப்பிலிருந்த சிறு துணிப்பையை எடுத்து வெற்றிலைக்காக அதைத் துழாவிக் கொண்டிருக்கையில், தெருகோடியில் வண்டி வருகிற சப்தம் கேட்டது. நரைத்துக் கண்களின் மீது தொங்கிக் கொண்டிருந்த அன்னம்மாளின் புருவங்கள் இரண்டும் வியப்பினால் வில்போல் வளைந்து கொண்டன. முகத்தின் மீது வந்து விழுந்து பார்வையை மறைத்த வெய்யிலை, இடது கரத்தால் தடுத்து மறைத்துக் கொண்டு, தெருக் கோடியை ஊன்றிப் பார்த்தாள் ஆச்சர்யத்துடன்.

ஜில் ஜில் என்ற சதங்கை நாதம் காதைப் பிளக்க, இரட்டை மாட்டு வில் வண்டி ஒன்று அடுத்த வீட்டு வாயிலில் வந்து நின்றது. வண்டியிலிருந்து இறங்கிய இளம் வயது பெண்ணைக் கண்டதும், அன்னம்மாளுக்கு விஷயம் நொடிப் பொழுதில் விளங்கி விட்டது. அடுத்த வீட்டு சதாசிவம் தன் புது மனைவியை அழைத்துக் கொண்டு வந்திருந்தான்.

அன்னம்மாளுக்கு அதற்குமேல் திண்ணைமீது இருப்புக் கொள்ளவில்லை. சதாசிவம் பட்டணத்திலிருந்து ஒரு பெண்ணை மணந்து கொண்டிருக்கிறான் என்கிறது அவளுக்கு அரைகுறையாகத் தெரியும். ''பட்டணத்துப் பெண் எப்படியிருக்கிறாள்? என்ன விதமான நகைகள் அணிந்து கொண்டிருக்கிறாள்? பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வந்துள்ள சீர் வகைகள் என்ன!'' என்ற விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? இவைகளைக்கூட அறிந்து கொள்ளவில்லையென்றால் பிறகு அடுத்த வீட்டிலேவாழ்ந்து தான் என்ன பயன்? 'கிறீச்' சென்று கதவு வேகமாகத் திறக்கப்பட்ட ஓசை கேட்டது. அன்னம்மாள் ஆவலுடன் திண்ணையிலிருந்து அடுத்த வீட்டின் பக்கம் எட்டிப் பார்த்தாள்.

வாயிற் திண்ணையில் வண்டிக்காரன் இறக்கி வைத்த மூட்டைகளை எடுத்துப் போகப் பெரியநாயகி உள்ளேயிருந்து வந்தாள். அவளுக்கும் அன்னம்மாளுக்கும் கொஞ்ச நாட்களாகவே பேச்சு வார்த்தையில்லாமல் இருந்தது. ஒரு சிறு விஷயத்திலே ஆரம்பித்துச் சண்டை வலுத்து விடவே, பெரியநாயகி கிழவியுடன் பேசுவதையே நிறுத்திக் கொண்டு விட்டிருந்தாள். திண்ணையிலிருந்தபடியே விஷயத்தை கிரகித்துக் கொண்டுவிட வேண்டும் என்ற ஆவலில் அன்னம்மாள் துடித்துக் கொண்டிருந்தாள். தனக்கும் பெரியநாயகிக்கும் இடையே ஏற்பட்டிருந்த மனஸ்தாபத்தை உதறிவிட்டு, ''பெரியநாயகி! சதாசிவம் பெண்ஜாதி ஊரிலிருந்து வந்திருக்காப்பலே இருக்குதே!'' என்று விசாரித்தாள்.

பெரியநாயகிக்கு அது சமயம் ஒரே கோபம். சதாசிவத்தின் மீது எவ்வளவு மனத்தாங்கல் இருந்தாலும் அதை அவள் தற்சமயம் பெரிதாகப் பாவிக்காது, புது தம்பதியை வரவேற்கக் காலையிலிருந்து எவ்வளவோ வேலைகள் செய்திருந்தாள். மணமக்கள் வந்தவுடன் சாப்பிடச் சுடச்சுட இட்லியும், சதாசிவத்திற்குப் பிடித்தமான வெங்காய சாம்பாரும் தயார்செய்து வைத்திருந்தாள். வீடுமுழுவதையும் பெருக்கி, நீர் தெளித்துக் கோலமிட்டு அழகுபடுத்தியிருந்தாள்.

இவ்வளவு செய்தும் சிறிதும் நன்றியில்லாது, வீட்டிற்குள் வந்ததும் வராததுமாக, சதாசிவம் அவள்மீது சள்ளென எரிந்து விழுந்தான். சலிப்பின்றி வீட்டு வேலைகளைச் செய்து கொண்டு,

அவனது கடுஞ்சொற்களைக் கேட்டுச் சகித்துக் கொண்டிருக்க அவள் அந்த வீட்டுவேலைக்காரியா என்ன? துயரத்தினால் பெரியநாயகியின் கண்களில் நீர் மல்கியது. உள்ளே குமுறிய கோபத்தை அடக்கிக் கொள்கிறவள் போல் கீழ் உதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டாள். ''பெரியநாயகி? உன்னைத் தானே!'' என்று கிழவி மீண்டும் உரத்த குரலில் கூப்பிட்டாள். திடுக்கிட்டுத் திரும்பிய பெரியநாயகி, அசட்டுச் சிரிப்பு பொக்கை வாயில் வழிந்தோட அன்னம்மா தன் பக்கமே பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்தாள். அவளது முகம் கடுமையாக மாறியது. எரித்து விடுகிறவள்போல் கிழவியை உறுத்துப் பார்த்தாள். அடுத்த கணம் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு விர் என உள்ளே சென்று விட்டாள்.

அன்னம்மாளுக்கு இந்த அவமானத்தைச் சகிக்க முடியவில்லை. ''தன் அண்ணன் மகளைக் கட்டிக் கொள்ளவில்லை என்று ஆத்திரம். வயிற்றெரிச்சல்பட்டு என்ன புண்ணியம்?'' என்று தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டாள்.

ரேழி அறையிலே மூட்டைகளைக் கொண்டு வைத்து விட்டு ஒரு மூச்சுவிட்டபடி கூடத்திற்கு வந்தாள் பெரியநாயகி. ''ஊரிலிருந்து வந்திருக்கிறாங்களே, பசியா இருக்கலாம். முதல்லே அதைக் கவனிப்போங்கிறதில்லாமல் இதெல்லாம் என்ன வேலை? பிறகு கவனிச்சுக்கப்படாதா?'' என்று சதாசிவம் இரைந்து அவளை அதட்டினான். பெரியநாயகி கோபத்துடன் அவனை ஒரு முறை வெறிக்கப் பார்த்தாள். 'பொறுத்துக் கொண்டு போனால் ஓட ஓட விரட்டுகிறாயே? நான் என்ன உன்வீட்டு வேலைக்காரியா? வாயை அடக்கிப் பேசு' என்று பதிலுக்கு பாணம் வீச வேண்டுமென்று அவள் நாக்கு துடித்தது. கணவனிடம் காணப்பட்ட புதிய குண மாறுதலைக் கண்டு பிரமித்துப் போய், செயலற்று நின்று கொண்டிருந்த பங்கஜத்தைப் பார்த்ததும் அவள் மனம் இளகிப் போயிற்று. ''கணவன் வீட்டிற்கு முதல் முதல் பங்கஜம் வந்திருக்கிறாள். இந்த நல்ல நாளில், அபசகுனம் போல் சண்டை போடுவானேன் என்று எண்ணி தனது கோபத்தை அடக்கிக் கொண்டு அப்பால் சென்று விட்டாள்.

பலகாரம் அருந்தி விட்டு, சதாசிவம் வாயிற்பக்கம் சென்றான். இதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அன்னம்மாள்

திண்ணையினின்று இறங்கி, மெல்ல அடுத்த வீட்டிற்குள் வந்தாள்.

''என்ன தம்பி சதாசிவம்! உன் பெண்ஜாதியை அழைச்சிக்கிட்டு வந்திருக்கிறாப்பல இருக்குது; நீ குடியும் குடித்தனமுமா இருக்கிறதை உங்கம்மா பார்க்கக் கொடுத்து வைக்காட்டியும், பக்கத்து வீட்டு மனுஷங்களாவது பார்த்துச் சந்தோஷப்படறோம்'' என்று மிகவும் இனிமையாக விசாரித்தாள்.

சதாசிவம் பதிலுக்குப் புன்முறுவல் செய்தான். அவனுடன் பேச்சுக் கொடுத்தபடி கிழவி, மெல்ல உள்ரேழியைத் தாண்டி, கூடத்திற்குள் வந்து விட்டாள். சமையலறை ஜன்னலினின்று எட்டிப் பார்த்த பெரியநாயகிக்குத் தூக்கிவாரிப் போட்டது. இன்றுவரை வீட்டிற்குள்ளே நுழைய தைரியமற்றிருந்த அன்னம்மாள், கூடத்து ஊஞ்சல் மீது மிகவும் சகஜமாக உட்கார்ந்து சதாசிவத்துடன் சரி சமமாக வார்த்தையாடிக் கொண்டிருப்பதைக் கண்டாள். ''ஆமை நுழைஞ்ச வீடும் இந்த அன்னம்மா நுழைஞ்ச வீடும் உருப்பட்டாப்போல்தான். இவள் முதல் முதலில் வந்து கல்யாணம் விசாரித்து விட்டாள் அல்லவா? இனி இங்கே நல்ல வார்த்தை எங்கே கேட்கப் போகிறோம்!'' எனக் கடுத்துக் கொண்டாள்.

சுவர் ஓரமாக நின்று கொண்டிருந்த பங்கஜம் அதைக் கேட்டதும் கலவரம் அடைந்து போனாள். ரயில் பிரயாணத்தின்போது, அன்பே உருவமாகத் தென்பட்ட சதாசிவம், வீட்டிற்கு வந்ததும் திடீரென்று மாறிவிட்டதைக் கண்டு அவள் ஏற்கெனவே மிரண்டு உள்ளம் கலங்கிப் போயிருந்தாள்.

முந்திய நாள் ஜெகதா கூறிய கடும் மொழிகள் வேறு அவள் மனத்தைத் துன்புறுத்திக் கொண்டேயிருந்தன. பெரியநாயகி கூறிய அந்த வார்த்தைகளும் சேர்ந்து கொள்ளவே, அவளுக்கு விவரிக்க இயலாத ஒரு பீதி ஏற்பட்டது. எவ்வளவோ கட்டுப்படுத்தியும், அவளால் தாள முடியவில்லை. முதன் முதலாகக் கணவன் வீடு வந்துள்ளதைப் பற்றி மகிழ்ச்சிப்பட வேண்டியதற்குப் பதில் பங்கஜம், சிறு குழந்தையைப்போல் விம்மி விம்மி அழுதாள்.

இவ்வாறு அழ வேண்டிய சந்தர்ப்பங்கள், வாழ்க்கையிலே பின்னால் எவ்வளவோ இருந்தன என்பதை முன் கூட்டியே அவள்

அறிந்திருந்தால் ஒரு சமயம், அந்த ஒரு தினமாவது சந்தோஷமாக இருந்திருப்பாளோ என்னவோ?

3

பங்கஜத்தின் திருமணம் நடந்து இரண்டு மாதங்கள் கூடப் பூர்த்தியாகவில்லை. ஒரு நாள் பிற்பகல் நீலாம்பிகை அச்சகத்தினின்று மிகவும் களைப்புடன் மருதப்பக் கவுண்டர் திரும்பி வந்தார், ''பையா! கொஞ்சம் தண்ணி கொண்டா'' என்று தமது வேலையாளுக்கு உத்தரவிட்ட பிறகு, சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டார். குளிர்ந்த நீரைக் கண்ணாடி டம்ளரில் நிரப்பிக் கொண்டு உள்ளிருந்து ஓடிவந்த வேலைக்காரப் பையன், எஜமானது முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு நடு நடுங்கிப் போய் டம்ளரைக் கீழே போட்டுவிட்டான்! சற்று முன் அவனிடம் பேசிய கவுண்டர் சவமாகி நாற்காலியில் சாய்ந்து கிடந்தார்!

மாரடைப்பால் மாமனார் இறந்து விட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் சதாசிவம் சிறிதும் காலதாமதம் செய்யவேயில்லை. அடுத்த ரயிலுக்கே மனைவியுடன் புறப்பட்டு நகரத்திற்கு ஓடோடியும் வந்து சேர்ந்துவிட்டான். ஜெகதா வந்து சேருமுன், தான் முந்திக் கொள்ள வேண்டும் என்ற பரபரப்பு அவனுக்கு. கவுண்டர் காலமான செய்தியை அறிந்ததும் அவரது மற்ற இரு மருமகன்களும் ஆளுக்கொரு அனுதாபச் செய்தியைத் தந்தி மூலம் அனுப்பிவிட்டு, நிம்மதியாக இருந்த இடத்திலேயே இருந்து விட்டார்கள்.

விஷயத்தை அறிந்து அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்திருந்த ஜெகதா, மனஸ்தாபத்தை மறந்து தங்கையைத் தழுவிக் கொண்டு தந்தைக்காக ஒரு மூச்சு கண்ணீர் வடித்தாள். வந்திருந்த உறவினர்களிடமும் நண்பர்களிடமும் கவுண்டரின் மேன்மையான குணங்களைப் பற்றிப் புகழ்ந்து பேசிப் புலம்பி அழுது, ஒருவாறு ஓய்ந்த பின்புதான் ஜெகதாவிற்கு ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வந்தது.

வீட்டிற்கு வந்திருந்த தினசரிப் பத்திரிகைகள் அனைத்தையும்

மோட்டார் வண்டியில் அவள் எடுத்துப் புரட்டிப் பார்த்தாள். கண் தெரியாது கிணற்றில் மோதுண்டு மாண்டவர்களைப்பற்றியும், தகவல் தெரிவித்த அந்த குதித்துவிட்ட கிழவிகளைப் பற்றியும் கவுண்டரின் மரணச் செய்தி ஒரு பத்திரிகைகள் ஒன்றில்கூட காணப்படவில்லை. ''பல வருஷங்களாக அச்சுத் வரியேனும் கவுண்டரின் திடீர் மரணத்தைக் குறித்துத் தொழிலில் ஈடுபட்டிருந்த கவுண்டரின் திடீர் மரணத்தைக் குறித்துச் சுடச்சுட செய்தி வெளிவராது, பிறகு ஆற அமர சில தினங்கள் பொறுத்து வெளிவந்துதான் என்ன பயன்?'' என்று ஜகதாவிற்குக் கோபம் ஏற்பட்டது. வெளியூரிலிருக்கும் நண்பர்களும் உறவினர்களும் கவுண்டரின் மறைவைப் பற்றி உடனுக்குடனே தெரிந்து கொண்டால் ஒழியக் குடும்பத்தின் கௌரவம் பாழாகிவிடும் என அவள் கவலைப்பட்டாள்.

தாமதம் செய்யாது உடனே ஓடி, வீட்டுக் கூடத்தில் ஒட்டடை படிந்து தொங்கிக் கொண்டிருந்த புகைப்படம் ஒன்றை எடுத்தாள். கவுண்டரின் திருமணத்திற்கு முந்தி எடுத்திருந்த அந்தப் படத்தின் சட்டங்களை கழற்றிவிட்டு அச்சகத்து மானேஜரிடம் கொடுத்தாள். கவுண்டர் பிறந்த தேதி, மறைந்ததேதி, இடையே வாழ்விலே அவர் சாதித்த காரியங்கள், உறவினர்கள் பற்றிய குறிப்பு, தான தர்மங்கள்ளப்பற்றிய தகவல் ஒன்றையும் விடாது விவரமாக எழுதி அத்துடன் கொடுத்து, அதை எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கும்படி உத்தரவிட்டாள். அதற்குண்டாகும் செலவை தான் ஏற்றுக் கொண்டதும், தந்தைக்குத் தான் செய்ய வேண்டிய கடமைகள் யாவும் பூர்த்தியாகி விட்டதென்ற நினைவில் திருப்தியடைந்தவளாக அவள் வேறு ஆக வேண்டிய காரியங்களைப் பற்றிக் கவலையில்லாது இருந்து விட்டாள்!

வீட்டிற்குப் புதிதாக வந்த மருமகன் என்ற உறவிற்கும் எல்லோருக்கும் முன்பு பரபரப்பாக வந்து சேர்ந்ததற்கும் சதாசிவத்திற்குத் தக்க பயன் இல்லாது போகவில்லை. கவுண்டரின் ஈமச் சடங்குகளை விமரிசையாகச் செய்து முடிக்க வேண்டிய பொறுப்பு முழுவதும் சதாசிவத்தின் மேல் வந்து விழுந்தது. மாமனாரின் அழகிய பங்களாவையும் அதிலிருந்த இரும்பு பீரோக்களையும் மனதிற்குள் விலை போட்டு, தன் பங்கைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தான் அவன். அதனால் முகத்தைச்

சுளிக்காது பணத்தை தண்ணீராகப் பாவித்து அவரது ஈமச்சடங்குகளை ஆடம்பரமாகச் செய்து முடித்தான். முன்னால் போட்டு பின்னால் புரட்டிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் நிலத்திற்கு எரு வாங்க வைத்திருந்த எழுநூறு ரூபாய்களையும் இரண்டே தினங்களில் செலவிட்டுவிட்டான்.

மருதப்பக் கவுண்டரின் உண்மையான பொருளாதார நிலை அவர் மறைந்த நான்காவது நாளே குபீரென அம்பலமாகிவிட்டது. கவுண்டரின் அச்சகமும், வீடும் அதிலுள்ள பொருள்கள் அனைத்தையும் கடனுக்காக ஜப்தி செய்யப்போவதாகக் கடன்காரர்கள் பகிரங்கமாக அறிக்கை விட்டதுடன், நடவடிக்கைகளும் மேற்கொள்ளத் துவங்கிவிட்டார்கள். அதைக் கேட்டதும் ஜெகதாவும் சதாசிவமும் ஒருங்கே அதிர்ச்சியடைந்து போனார்கள். கடன், வக்கீல், நோட்டீஸ், ஜப்தி, கோர்ட்டு முதலிய விஷயங்களை அவள் வாழ்விலே அன்று வரை ஜெகதா காதால்கூடக் கேட்டறியாதவள். தலைக்குமேல் கடனை வாங்கிச் சுமத்தி கடைசிக் காலத்தில் தந்தை இவ்வாறு குடும்ப கௌரவத்தை நாசமாக்கி விடுவார் என்று அவள் கனவில்கூட எதிர்பார்த்தவள் இல்லை. நீலாம்பிகை அச்சகத்தின் முதலாளியென மேன்மையாக அவர் வாழ்ந்த வீட்டைக் கடன்காரர்கள் வந்து பறிமுதல் செய்து கொள்வதைப் பார்த்துக் கொண்டிருப்பதா என்று அவளுக்கு மெத்த அவமானமாக இருந்தது.

கடன் விஷயம் வெளியாகி விட்டதிலிருந்து தெருவில் போவோரும் வருவோரும் தங்கள் வீட்டைச் சுட்டிக்காட்டி இழிவாகப் பேசுவதுபோல் அவளுக்குத் தோன்றியது. ''அப்பா இவ்வாறு செய்திருப்பார் என்று தெரிந்திருந்தால் அவசரப்பட்டுக் கொண்டு அவர் புகைப்படத்தைப் பத்திரிகையில் பிரசுரித்திருக்கமாட்டேன்! கொஞ்சம் அரை குறையாக அறிந்திருப்பவர்கள்கூடப் புகைப்படத்தைக் கண்டு முழுவதும் அறிந்து கொண்டு விடுவார்களே!'' என்று அங்கலாய்த்துக் கொண்டாள். துக்கம் விசாரிக்க வரும் பந்துமித்திரர்கள் கடனைப்பற்றி விசாரித்துத் தன்னை அவமானப்படுத்த இடம் கொடுக்கக்கூடாது என்று எண்ணிய ஜெகதா அடுத்தநாளே தனது மூட்டைகளைக் கட்டிக் கொண்டு கிளம்பிவிட்டாள்.

செய்வார்னு நான் நினைக்க

''அப்பா இப்படி மோசம் செய்வார்னு நான் நினைக்க இங்கே யார் முகத்தையும் பார்க்கக் வில்லையடி, பங்கஜம். எனக்கு இங்கே யார் முகத்தையும் பார்க்கக் கூச்சமாக இருக்கிறது. இந்த சமயம் உங்க அத்தான் உசிரோட இருந்தார்னா அவமானத்திலே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு உயிரை விட்டிருப்பார். அத்தனை பெரிய மானி அவர்!'' என்று தங்கையிடம் வருத்தத்துடன் முறையிட்டுக் கொண்டு ஊருக்குச் சென்று விட்டாள்.

உண்மையை அறிந்ததும் சதாசிவத்திற்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை விவரிக்கவே இயலாது. பங்கஜத்தின் அழகிற்காகவோ, வேறு குண விசேஷங்களுக்காகவோ அவன் அவளை மணந்து கொள்ளவில்லை. உறவில் இருந்த பல பெண்களையும் உதறிவிட்டு, முன்பின் அதிகம் தெரியாத கவுண்டரின் குடும்பத்திலே வந்து சம்பந்தம் செய்து கொண்டதற்குத் தக்க காரணங்கள் இல்லாது போகவில்லை.

வாழ்க்கையிலே சீக்கிரம் முன்னுக்கு வரவேண்டும் என்ற துடிப்பும் ஆவலும் உள்ள இளைஞன் சதாசிவம். பூர்விக சொத்து என்று அவனுக்கு அவனது தந்தை அரை ஏக்கர் நிலத்தையும்; சிறு வீடு ஒன்றையும் மட்டுமே விட்டுப் போயிருந்தார். சொந்த உழைப்பினாலும், முயற்சியினாலுமே, அவன் தன் சொத்தைப் பன்மடங்காகப் பெருக்கிக் கொண்டிருந்தான். காரிகுளத்திலே வெகு விரைவில், பெரிய மிராசுதாரராகிவிட வேண்டும் என்ற பேராவலினால், தனது நிலைமைக்கு மீறி பத்து ஏக்கர் நிலத்தை உழுது பயிர் செய்ய குத்தகைக்கு எடுத்துக்கொண்டிருந்தான். அதன் விளைவாக அவனுக்கு இரண்டாயிரம் ரூபாய் வரை கடன் ஏற்பட்டிருந்தது. வெளியிடத்திலே கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொள்வானேன், உறவுக்குள்ளாகவே இருந்தால் 'பிறருக்கு அதைப் பற்றித் தெரியாதிருக்கும் என எண்ணிய அவன், தன் சிறிய தாயார் பெரிய நாயகியிடம் அந்தத் தொகையை வாங்கிக் கொண்டிருந்தான்.

சிறுவயதிலே விதவையாகிவிட்டிருந்த பெரியநாயகி, சதாசிவத்தின் தாயார் சுந்தரத்தின் இளைய சகோதரி. அக்கா இருமல் ஜுரத்திலே படுத்தபடுக்கையாக இருந்ததைக் கேள்வியுற்றுப் பணிவிடைசெய்ய தங்கை தன் கிராமத்தினின்று வந்திருந்தாள். பெரிய இடத்திலே வாழ்க்கைப் பட்டிருந்ததனால், சாப்பாட்டிற்கும் துணிக்கும் செலவானதுபோக வட்டிக்கு விட்டு வைக்க அவள்

கையில் கொஞ்சம் ரொக்கப் பணம் தாராளமாக இருந்தது. சுந்தரம் சீக்காக கிடந்த பொழுது மருந்திற்கும் மற்றும் பலவித செலவுகள் ஏற்பட்டன. அத்துடன் நில விஷயமாகவும் சிறிது பணம் தேவையாக இருந்தது. சதாசிவம் எல்லாவற்றிற்கும் சேர்த்து, தன் வீட்டை அடமானமாக எழுதிக் கொடுத்து விட்டுப் பெரியநாயகியிடம் இரண்டாயிரம் ரூபாய் வரை கடன் பெற்றுக் கொண்டிருந்தான். எவ்வளவோ செலவு செய்தும், நன்றாகக் கவனித்துப் பார்த்தும், சுந்தரம் நோயினின்று குணமடையாது, சில மாதங்களில் காலமாகி விட்டாள்.

சதாசிவத்திற்குத் தன் சிறிய தாயார்மீது அப்படி திடீரென்று பாசம் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. கடன் வாங்கிய தொகையை உடனே திருப்பித் தரும்படி கேட்டால் என்ன செய்வது என்ற எண்ணத்தினால், அவளைத் தொடர்ந்தார்போல் தன் வீட்டிலே தங்க அனுமதித்திருந்தான். வருஷங்கள் இரண்டிற்கு மேலாகியும், அவளிடம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வசதிஇல்லாது, ஏதாவது ஒரு செலவு வந்து குறுக்கிட்டுத் தடுத்த வண்ணம் இருந்தது.

வட்டி விஷம்போல் ஏறிக்கொண்டு போவது போதாதுபோல், தன் வீட்டை இஷ்டப்படி நடத்திக் கொண்டு பெரியநாயகி சுகமாக அங்கேயே தங்கியிருந்தது அவனுக்கு ஒரு பெரிய பாரமாகத் தென்பட்டது. வாங்கிய கடனைக் கொடுத்த மறுகணமே, அவளை வீட்டைவிட்டு அப்புறப்படுத்திவிட்டு வேறு வேலை பார்க்க வேண்டும் என்று துடியாகத் துடித்துக் கொண்டிருந்தான்.

பெரியநாயகி, சதாசிவத்திற்குக் கடன் கொடுக்க முன் வந்ததற்கும் ஒரு சிறு காரணம் இருந்தது. அதை அவன் நன்கு அறிவான். தாய் தந்தையற்று அனாதையாக மாமனிடம் வாழ்ந்து வந்த தனது ஒன்றுவிட்ட அண்ணன் மகள் ரத்தினத்தை அவனுக்குக் கட்டிக் கொடுத்துவிட வேண்டுமென்று அவள் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தாள். பணத்தைக் கடன் வாங்கும்வரை சதாசிவம், அவள் வெளிப்படையாக தெரிவித்த ஆவலை எதிர்த்து ஒன்றும் கூறவில்லை. சரி என்றோ மாட்டேன் என்றோ ஒன்றுமே கூறாது மௌனமாக இருந்தான்.

சிறிய தாயாரிடம் கடனுக்குப் கட்டுப்பட்டுப் போன பின்பு அவனுக்கு ரத்தினத்தை மணந்து கொள்ளச் சிறிதும் விருப்பம் இருக்கவில்லை. ஏற்கனவே பணத்தைக் கொடுத்துவிட்டு வீட்டில் உரிமை பாராட்டிக் கொண்டு வாழும் பெரியநாயகி, பெண்ணையும் கொடுத்துவிட்டாளானால் பிறகு வீட்டைவிட்டு வெளியே நகருவாளா என்ன? வேண்டாத உறவினர்களின் பந்தத்தையெல்லாம் விலைக்கு வாங்கிக் கொள்ள சதாசிவம் மடையனா என்ன? மேலும் ரத்தினம் சொத்து ஒன்றும் இல்லாத அனாதைப் பெண். பெரியநாயகிக்குச் சோறுபோட்டுக் காப்பாற்றும் கடமை போதாதென்று, அவளது அண்ணன் மகளுக்கும்கூடப் போட்டுக் காப்பாற்ற, சதாசிவத்திடம் அப்படி சொத்து ஒன்றும் மிதமிஞ்சி கொட்டிக் கிடக்கவில்லை. ஆகவே அவன் பெரியநாயகியின் மனஸ்தாபத்தைச் சிறிதும் பொருட்படுத்தாது ரத்தினத்தை மணந்து கொள்ள மறுத்துவிட்டான்.

வேறு உறவுப் பெண்களையும் வேண்டாம் என்று மறுத்ததன் மர்மமும் இதுவேதான். அவர்களில் யாரை மணந்து கொண்டாலும் அவனுக்குப் பொருளாதார வழியில் ஒரு வித பயனும் இல்லாதிருந்தது. கவுண்டரின் புத்திரி பங்கஜத்தைக் கல்யாணம் செய்துகொள்ள மனம் ஒப்பியதன் காரணமும் இதுவேதான். ''கவுண்டருக்குப் பின்னால் அவரது சொத்துகளுக்கு வாரிசாக இருந்தவர்கள் இரண்டு பெண்கள்தான். என்னதான் செலவுகள் ஆனாலும், அவருக்குப்பின் கட்டாயம் பங்கஜத்திற்கு குறைந்தது அரை லக்ஷமாவது சொத்தாகத் தந்தை விட்டுச் செல்வார். இதற்கிடையே அவசரத்திற்கு ஒரு பத்தாயிரம் ரூபாய்கள் தேவையென்று மருமகன் கேட்டால் கவுண்டர் இல்லையென்று மறுத்துவிடப் போவதில்லை. சில மாதங்கள் சென்றதும் மாமனாரை அண்டி அத்தொகையைப் பெற்று, பெரியநாயகியின் கடனை அடைத்து, முதலில் அவளை ஊருக்குத் திரும்ப அனுப்பிவிட வேண்டும். மீதிப் பணத்திலே, இன்னும் இரண்டு ஏக்கர் குத்தகைக்கு எடுத்து வாழையைப் பயிர் செய்தால், கஷ்டம் என்பதே இன்றி சுகமாக வாழ முடியும்' என்று பலவிதமாக 'அல்நாஷ'ரைப் போல அவனது மனோராஜ்யம் விரிவடைந்து, ஆகாய மண்டலம் பூராவும் வியாபித்திருந்தது.

கவுண்டரின் திடீர் மரணத்தைத் தொடர்ந்து எழுந்த கடன் விவரம் சதாசிவத்தின் கற்பனைக் கோட்டைகளைப் பொடிப்பொடியாகச் சிதறவைத்துவிட்டது. ஒரு துரும்புகூட சொத்து என்று விட்டு வைக்காது போன ஒரு மனிதனுக்கு, அரும்பாடுபட்டுச் சேர்த்து வைத்திருந்த பணத்தை வீணாகச் செலவிட்டு விட்டோமே என எண்ணி ஏமாற்றமும் கோபமும் அடைந்த அவனுக்கு, அதற்குமேல் அங்கே தங்க விருப்பமில்லை. ஜெகதா ஊருக்குப் பறப்பட்ட அதே தினம் அவனும் கிளம்பிவிட்டான்.

''போதும், இங்கே வந்ததற்கு லாபம் பழுத்துவிட்டது! சாமான்களை எடுத்துக் கொண்டு தயாராக இரு. ராத்திரி வண்டிக்குப் புறப்படுகிறோம்'' என்று மனைவியிடம் திடீரென்று எரிந்து விழுந்தான் சதாசிவம். இரண்டுமாத தாம்பத்திய வாழ்க்கையிலே அவளுக்குத் தனது கணவனின் குணம் முழுவதையும் அறிந்துகொள்ள சந்தர்ப்பங்கள் அதிகம் இருக்கவில்லை. ஆகவே, அவளுக்குக் கணவனின் கோபத்தின் உள் அர்த்தம் சிறிதும் விளங்கவேயில்லை என்றாலும், வீணாக விவாதிக்க விரும்பாது, அவன் விருப்பப்படி அன்றே அவள் பிரயாணப்பட்டு விட்டாள்.

தன் தந்தையின் மரணத்திற்குப் பிறகு கணவன் தன்னிடம் நடந்துகொண்டவிதம் முற்றிலும் மாறிவிட்டதை உணர்ந்து பங்கஜம் மனம் கலங்கிப் போனாள். சதாசிவத்தின் களை பொருந்திய முகத்தை அழகு செய்த அந்தப் புன்னகை அவனது மாமனாருடனேயே மறைந்து போய்விட்டது. ஒரு சிறு காரியத்திற்கெல்லாம் பொறுமை இழந்து மனைவியிடமும், சிறிய தாயாரிடமும் அவன் கோபித்துக் கொள்ளத் தலைப்பட்டான். முன்போல் வெளியிலிருந்து வரும்பொழுது, வாசனைக் கதம்பமும் நெய் மிட்டாயும் மனைவிக்கு வாங்கிக் கொண்டு வருவதை நிறுத்தி விட்டான். பங்கஜமும் முன்போல், அவைகளை எதிர்பார்த்து ஆவலுடன் அவன் வருகைக்காகக் காத்து நிற்பதை நாளடைவில் கைவிட்டு விட்டாள். வீட்டிற்குள் வரும்பொழுது கணவன் கோபாவேசத்துடன் வராது, சுமுகமாக வந்தால் அதுவே பெரிய 'காதல் பரிசு' என்று எண்ணும் அளவிற்கு அவளது நிலைமை பரிதாபகரமாக மாறிவிட்டிருந்தது.

சிறிய தாயாரிடம் கடனுக்குக் கட்டுப்பட்டுப் போன பின்பு அவனுக்கு ரத்தினத்தை மணந்து கொள்ளச் சிறிதும் விருப்பம் இருக்கவில்லை. ஏற்கனவே பணத்தைக் கொடுத்துவிட்டு வீட்டில் உரிமை பாராட்டிக் கொண்டு வாழும் பெரியநாயகி, பெண்ணையும் கொடுத்துவிட்டாளானால் பிறகு வீட்டைவிட்டு வெளியே நகருவாளா என்ன? வேண்டாத உறவினர்களின் பந்தத்தையெல்லாம் விலைக்கு வாங்கிக் கொள்ள சதாசிவம் மடையனா என்ன? மேலும் ரத்தினம் சொத்து ஒன்றும் இல்லாத அனாதைப் பெண். பெரியநாயகிக்குச் சோறுபோட்டுக் காப்பாற்றும் கடமை போதாதென்று, அவளது அண்ணன் மகளுக்கும்கூடப் போட்டுக் காப்பாற்ற, சதாசிவத்திடம் அப்படி சொத்து ஒன்றும் மிதமிஞ்சி கொட்டிக் கிடக்கவில்லை. ஆகவே அவன் பெரியநாயகியின் மனஸ்தாபத்தைச் சிறிதும் பொருட்படுத்தாது ரத்தினத்தை மணந்து கொள்ள மறுத்துவிட்டான்.

வேறு உறவுப் பெண்களையும் வேண்டாம் என்று மறுத்ததன் மர்மமும் இதுவேதான். அவர்களில் யாரை மணந்து கொண்டாலும் அவனுக்குப் பொருளாதார வழியில் ஒரு வித பயனும் இல்லாதிருந்தது. கவுண்டரின் புத்திரி பங்கஜத்தைக் கல்யாணம் செய்துகொள்ள மனம் ஒப்பியதன் காரணமும் இதுவேதான். ''கவுண்டருக்குப் பின்னால் அவரது சொத்துகளுக்கு வாரிசாக இருந்தவர்கள் இரண்டு பெண்கள்தான். என்னதான் செலவுகள் ஆனாலும், அவருக்குப்பின் கட்டாயம் பங்கஜத்திற்கு குறைந்தது அரை லக்ஷமாவது சொத்தாகத் தந்தை விட்டுச் செல்வார். இதற்கிடையே அவசரத்திற்கு ஒரு பத்தாயிரம் ரூபாய்கள் தேவையென்று மருமகன் கேட்டால் கவுண்டர் இல்லையென்று மறுத்துவிடப் போவதில்லை. சில மாதங்கள் சென்றதும் மாமனாரை அண்டி அத்தொகையைப் பெற்று, பெரியநாயகியின் கடனை அடைத்து, முதலில் அவளை ஊருக்குத் திரும்ப அனுப்பிவிட வேண்டும். மீதிப் பணத்திலே, இன்னும் இரண்டு ஏக்கர் குத்தகைக்கு எடுத்து வாழையைப் பயிர் செய்தால், கஷ்டம் என்பதே இன்றி சுகமாக வாழ முடியும்' என்று பலவிதமாக 'அல்நாஷ'ரைப் போல அவனது மனோராஜ்யம் விரிவடைந்து, ஆகாய மண்டலம் பூராவும் வியாபித்திருந்தது.

கவுண்டரின் திடீர் மரணத்தைத் தொடர்ந்து எழுந்த கடன் விவரம் சதாசிவத்தின் கற்பனைக் கோட்டைகளைப் பொடிப்பொடியாகச் சிதறவைத்துவிட்டது. ஒரு துரும்புகூட சொத்து என்று விட்டு வைக்காது போன ஒரு மனிதனுக்கு, அரும்பாடுபட்டுச் சேர்த்து வைத்திருந்த பணத்தை வீணாகச் செலவிட்டு விட்டோமே என எண்ணி ஏமாற்றமும் கோபமும் அடைந்த அவனுக்கு, அதற்குமேல் அங்கே தங்க விருப்பமில்லை. ஜெகதா ஊருக்குப் பறப்பட்ட அதே தினம் அவனும் கிளம்பிவிட்டான்.

''போதும், இங்கே வந்ததற்கு லாபம் பழுத்துவிட்டது! சாமான்களை எடுத்துக் கொண்டு தயாராக இரு. ராத்திரி வண்டிக்குப் புறப்படுகிறோம்'' என்று மனைவியிடம் திடீரென்று எரிந்து விழுந்தான் சதாசிவம். இரண்டுமாத தாம்பத்திய வாழ்க்கையிலே அவளுக்குத் தனது கணவனின் குணம் முழுவதையும் அறிந்துகொள்ள சந்தர்ப்பங்கள் அதிகம் இருக்கவில்லை. ஆகவே, அவளுக்குக் கணவனின் கோபத்தின் உள் அர்த்தம் சிறிதும் விளங்கவேயில்லை என்றாலும், வீணாக விவாதிக்க விரும்பாது, அவன் விருப்பப்படி அன்றே அவள் பிரயாணப்பட்டு விட்டாள்.

தன் தந்தையின் மரணத்திற்குப் பிறகு கணவன் தன்னிடம் நடந்துகொண்டவிதம் முற்றிலும் மாறிவிட்டதை உணர்ந்து பங்கஜம் மனம் கலங்கிப் போனாள். சதாசிவத்தின் களை பொருந்திய முகத்தை அழகு செய்த அந்தப் புன்னகை அவனது மாமனாருடனேயே மறைந்து போய்விட்டது. ஒரு சிறு காரியத்திற்கெல்லாம் பொறுமை இழந்து மனைவியிடமும், சிறிய தாயாரிடமும் அவன் கோபித்துக் கொள்ளத் தலைப்பட்டான். முன்போல் வெளியிலிருந்து வரும்பொழுது, வாசனைக் கதம்பமும் நெய் மிட்டாயும் மனைவிக்கு வாங்கிக் கொண்டு வருவதை நிறுத்தி விட்டான். பங்கஜமும் முன்போல், அவைகளை எதிர்பார்த்து ஆவலுடன் அவன் வருகைக்காகக் காத்து நிற்பதை நாளடைவில் கைவிட்டு விட்டாள். வீட்டிற்குள் வரும்பொழுது கணவன் கோபாவேசத்துடன் வராது, சுமுகமாக வந்தால் அதுவே பெரிய 'காதல் பரிசு' என்று எண்ணும் அளவிற்கு அவளது நிலைமை பரிதாபகரமாக மாறிவிட்டிருந்தது.

மருதப்பக் கவுண்டர் இறந்து ஆறுமாத காலம் விரைவில் ஓடிச் சென்றுவிட்டது. ஒருநாள் மாலை, நல்ல கடும் வெய்யிலில் வெளியே சுற்றியலைந்து விட்டு, உடல் சோர்ந்தவனாக சதாசிவம் வீட்டிற்குள்ளே நுழைந்தான். அவனது வருகையைக்கூட கவனியாது, பங்கஜமும், பெரியநாயகியும் தாழ்வாரத்தில் சுவாரஸ்யமாகப் பேசிச் சிரித்துக் கொண்டு தாயக்கட்டம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ''நெற்றி வியர்வை நிலத்தில் விழ வெளியே சென்று புருஷன் உழைத்துப் போட்டால், நிழலில் உட்கார்ந்து இந்த இரு பெண்களும் வெட்டியாகவல்லவா கொட்டமடிக்கிறார்கள்?'' என்று அக்காட்சியைக் கண்டு தனக்குள்ளே வெகுண்டான் அவன்.

அவனது கோபத்திற்கு தூபம் போடுவதுபோல் அப்பொழுது வீட்டின் பின்தோட்டத்திலே இன்னொரு சம்பவம் நடந்து கொண்டிருந்தது. கொட்டிலிலிருந்த கூழைப் பசு கயிற்றை அவிழ்த்துக் கொண்டு, அவன் சிரமப்பட்டு பயிரிட்டு வளர்த்திருந்த கத்தரிப்பயிரையும், கீரைப் பாத்திகளையும் துவசம் செய்து கொண்டிருந்தது. ''இப்படிச் சோம்பேறியாக உட்கார்ந்து சாப்பிட்டுத்தான் அப்பனை ஒழிச்சிக்கட்டினே! இப்போ என்னை ஒழிக்கக்கட்ட ஆரம்பிச்சுட்டியா? இங்கே வந்து இந்த அநியாயத்தைப் பார்!'' என்று கோபாவேசத்துடன் கூக்குரலிட்டான் சதாசிவம்.

திடுக்கிட்டுப் போன பெரியநாயகியும் பங்கஜமும் விருக்கென்று எழுந்து தோட்டத்தின் பக்கம் விரைந்தார்கள்.

பங்கஜத்தினால் அந்தக் காட்சியைக் காணச் சகிக்கவே முடியவில்லை. கையில் பிடித்துக் கொண்டிருந்த விறகுக் கட்டை இரண்டாக ஒடிந்துவிடுமளவு சதாசிவம், மூர்க்கத்தனமாக அந்தப் பசு மாட்டை அடித்துக் கொண்டிருந்தான். கோபத்தினால் கனல் போன்று சிவந்திருந்த அவனது முகத்தையும், தப்பி ஓடமுடியாது தவித்துக் கதறிக் கொண்டிருந்த பசுவின் அலறலையும் அதன் முதுகுத்தோலிலிருந்து வழிந்த இரத்தத்தையும் கண்ட பங்கஜத்தின் உடலும் உள்ளமும் பயத்திலே பதறின. பூமியும், மற்ற எல்லாப் பொருள்களும் அவள் முன்பு பம்பரமாகச் சுழன்றன. மறுகணம் கிரீச்சென்று கூவிக்கொண்டு அவள் மயக்கமாகக் கீழே விழுந்துவிட்டாள்.

திரும்பிப் பார்த்த சதாசிவம், கோபம் தாளாது விறகுக் கட்டையை ஓங்கியபடி, ''பாசாங்குக் கள்ளி, வேஷமா போடுகிறாய்?'' என்று பல்லைக் கடித்துக்கொண்டு நெருங்கினான்.

புடவைத் தலைப்பை இழுத்துச் செருகிக் கொண்டாள் பெரியநாயகி. ஆத்திரத்தில் அவளது நெஞ்சு படபடத்தது. குபீரெனப் பாய்ந்து அவனது கரத்திலிருந்த கட்டையைப் பிடுங்கி அப்பால் வீசிப் போட்டாள். ''ஆட்டையும் மாட்டையும் அடிப்பது போல் நினைச்சுகிட்டியா என்ன? கர்ப்பிணி பெண் மேலே கை வைச்சின்னா தெரியும் சேதி!'' என்று கோபத்துடன் கூக்குரலிட்டுவிட்டு, பங்கஜத்தை வாரித் தன் மடிமீது போட்டுக் கொண்டாள். ''கிளியை வளர்த்துப் பூனைகிட்ட கொடுத்தாப்பல உன்கிட்ட இவளைக் கொண்டு வந்து கொடுத்தவன் புத்தியைத்தான் சொல்லணும். இங்கே வந்து பார்!'' என்று பெரியநாயகி அதட்டவே, சதாசிவம் திரும்பினான்.

வாயிற்படி மீது தலை பலமாக மோதி விட்டதனால், நெற்றி ஓரத்தில் ஏற்பட்டிருந்த சிறு காயத்தினின்று இரத்தம் பங்கஜத்தின் அழகிய கன்னத்தின்மீது பாய்ந்தோடிக் கொண்டிருப்பதைக் கண்டதும் சதாசிவம் முகத்தைச் சுளித்துவிட்டு உள்ளே சென்றுவிட்டான்.

''இரக்கமத்த பாவி! கொஞ்சமாவது நெஞ்சிலே ஈரமிருந்தா இப்படி முகத்தைத் திருப்பிக்கிட்டு போவானா? நல்ல வேளை! என் ரத்தினத்தை இவனுக்குக் கட்டிக் கொடுக்காமல் போனேன்? கொடுத்திருந்தா அந்தப் பெண் கதியும் இது மாதிரிதானே ஆகியிருக்கும்?'' என்று தனக்குள்ளே கோபத்துடன் பேசிய பெரியநாயகி, தன் மடி மீது மூர்ச்சித்துக் கிடந்த பங்கஜத்தின் முகத்தை உற்றுப் பார்த்தாள். எவ்வளவோ மேன்மையாகவும் அருமையாகவும் வாழ்ந்த பெண், இவனிடம் சீர்குலைய வந்திருக்கிறாளே என்று எண்ணிய மாத்திரம், தாய்மை உணர்ச்சி மேலோங்கி நின்ற அவளது கண்களில் நீர் பொங்கி வழிந்தது.

4

வீட்டு நடையிலே கிடந்த பாதரக்ஷைகளை அவசரமாகக் கால்களில் திணித்துக்கொண்டு சதாசிவம் வண்டியில் ஏறி உட்கார்ந்தான். கணவனைப் பின் தொடர்ந்தபடி உள்ளிருந்து வந்த பங்கஜம், கதவருகில் வந்து நின்றாள்.

நிலத்திற்கு எரு வாங்க அயலூர் சந்தைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான் அவன். பூரண கர்ப்பிணியான தன்னைக் கணவன் தனியே விட்டு வெளியூர் செல்வது பங்கஜத்திற்கு மனக் கலக்கத்தை உண்டு பண்ணியிருந்தது. அவன் எப்போது வருவான்? வரத் தாமதமாகுமா? விரைவில் வர இயலுமா? என்பன போன்ற பல கேள்விகளையும் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று அவள் துடித்துக் கொண்டிருந்தாள். ஆனால் அது சமயம் அவனிடம் ஒரு வார்த்தைகூடப் பேச அவளுக்குப் பயமாக இருந்தது.

சந்தைக்குப் புறப்படத் தேவையான பணம் இருக்கவில்லை என்று சதாசிவம் அன்று காலையிலிருந்து ஒரே கோபமாக இருந்தான். மனைவியிடம் பல தடவைகள் வீணாக எரிந்து விழுந்தான். பெரியநாயகியோடு கடுமையாக வார்த்தையாடினான். வேலைக்காரர்களைக் காரணமின்றி கடிந்து கொண்டான். அவன் வெளியூருக்குச் சீக்கிரம் புறப்பட்டுச் சென்றுவிட்டால் போதும் என அவர்கள் அனைவரும் எண்ணும்படி அவன் வீட்டை இரண்டுபடுத்தி விட்டிருந்தான்.

பணம் என்ற பிரச்சனை தங்கள் இல்லற வாழ்வை மிகவும் பாழாக்கிக் கொண்டு வருவதைப் பங்கஜம் அறியாமல் இல்லை. ஆனால், அதை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பது தான் அவளுக்கு விளங்கவில்லை. கல்யாணத்தின் போது தன் தந்தை செய்து போட்டிருந்த இரண்டொரு நகைகளையும் வீட்டுச் செலவிற்காக அவள் தன் கணவனிடம் கழட்டிக் கொடுத்துவிட்டிருந்தாள். பிறந்த வீட்டிலே வாழ்ந்து வந்த ஆடம்பரமான வாழ்க்கை புக்ககத்திற்குக்

கட்டிவராது என்று உணர்ந்துகொண்டு அதை அறவே மறந்து விட்டிருந்தாள். கணவனது பொருளாதார நிலை உயர வேண்டும். அதற்குத் தானும் ஒத்துழைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தன் உடல் அயற்சியையும் களைப்பையும் பொருட்படுத்தாது, வீட்டு வேலைகளைச் சலிப்பின்றி சதா செய்து கொண்டுதான் இருந்தாள். பங்கஜம் இவ்வாறு பல வழிகளிலும் முயற்சித்தும் பயன் இருக்கவில்லை. பணத்தின் தேவை என்பது அவர்களது வாழ்விலே அடிக்கடி தோன்றிக் கொண்டுதான் இருந்தது. தேவை வந்து குறுக்கிடும் பொழுதெல்லாம் சதாசிவம் கருணையற்ற மனிதனாக மாறி, வார்த்தைகளாலும் செயல்களாலும் அவளை இம்சை செய்து கொண்டிருந்தான். இப்படிப்பட்ட இல்வாழ்க்கையை விட மரணமே மேலானது என அவள் எண்ணி உள்ளம் நைந்து உருகி வருந்தும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டுதான் இருந்தன.

வண்டிக்குள் சௌகர்யமாக உட்கார்ந்ததும் குறுக்குக் கம்பியை எடுத்துச் செருகிவிட்டுச் சதாசிவம் தொண்டையைக் கனைத்தான். சிந்தனையினின்று விடுபட்டு விழித்துக் கொண்ட பங்கஜம் ஆவலுடன் அவன் பக்கம் திரும்பிப் பார்த்தாள். 'விரைவில் வந்து விடுகிறேன். உன் உடம்பைக் கவனித்துக்கொள்' என்று ஏதேனும் கட்டாயம் கூறுவான், வெளியூருக்குச் செல்லுமுன் அவ்வளவாவது சொல்லாது போவானா? எனத் தனக்குள்ளே எண்ணிய அவள், ஏக்கத்துடன் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சதாசிவம் வண்டியினின்று தலையை நீட்டி உரத்த குரலில், ''கூழைப் பசு இரண்டு நாளா தீனி சரியாகவே திங்கமாட்டேங்குது, வைத்தியருக்கு உடனே ஆள் அனுப்பி சட்டுனு வந்து கவனிக்கச் செய்யுங்க!'' என்று பெரிய நாயகிக்கு ஒரு உத்தரவைப் பிறப்பித்து விட்டு, முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டான். மறுகணம் வண்டி புறப்பட்டு விரைவாக தெருக் கோடியை அடைந்து மறைந்துவிட்டது. கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்த பங்கஜத்திற்குத் துக்கம் தாளமுடியவில்லை. தாழ்வாரத்திலிருந்த தூணை ஆதரவாகப் பிடித்துக் கொண்டு அவள் தன் கண்ணீரைக் கட்டுப்படுத்த இயலாது விசும்பி விசும்பி அழுதாள்.

முற்றத்துத் தரையை வேகமாகப் பெருக்கிச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்த பெரியநாயகி, கோபத்துடன் துடைப்பத்தை வீசி

அப்பால் போட்டுவிட்டு, கையைக் கழுவிக் கொண்டாள். புடவைத் தலைப்பிலே கையைத் துடைத்துக் கொண்டு தாழ்வாரத்திற்குள் ஓடி வந்தாள்.

''என்னத்துக்கு இப்படி நீ அழுவணுமாம்?'' என்று அவள் அதட்டினாள்.

''ஒன்றுமில்லை, அத்தை, கூழைப் பசு மேலே இருக்கிற அக்கறைகூட அவருக்கு என்மேலே இல்லையினு நினைச்சா என் மனசு வெடிச்சுப் போகிறது. எனக்கு இந்த உலகத்திலே யார் இருக்கிறார்கள்? அப்பாவும் அம்மாவும் இல்லாத அனாதைப் பெண் நான். இந்த சமயத்திலே ஆதரவா ஒரு வார்த்தை சொல்லக்கூட அவருக்கு மனசு இல்லையே. அதை நினைக்கும்போது...'' என்று மேலே கூற முடியாது விசும்பினாள்.

பெரியநாயகி கோபத்துடன் பற்களைக் கடித்தாள். ''போடி பயித்தியக்காரி! உன் புருஷன் குணத்தை இப்பத்தான் புதுசா கண்டவள்போல் அழுகிறயே! கூழைப் பசு கன்று போட்டாக்க, சந்தையில் விற்று பணமாக்கலாம். நீ குழந்தை பெத்தால் சதாசிவத்திற்கு இன்னும் வீண் செலவல்லவா வந்து சேரும்? உனக்கும் பசுவுக்கும் உள்ள வித்தியாசம் இப்போவாவது தெரிஞ்சுதா?'' என்று கூடக்கூடக் கேட்டாள்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பங்கஜம் அவளை வெறித்துப் பார்த்தாள். பெரியநாயகி கூறிய வார்த்தைகளில் ததும்பி நின்ற உண்மை அவளுக்கு மிக்க கசப்பாகத்தான் இருந்தது. தானும் தனது குழந்தையும், கணவனுக்குப் பெரும் பாரமாகிவிட்டதை எண்ணிய மாத்திரம் அவள் உள்ளம் துயரத்திலே மூழ்கியது. ''அத்தை! இந்தக் குழந்தையுடன் நான் இறந்து விட்டால்கூட மேல். எனக்கு இந்த உலகத்திலே வாழவேணும் என்ற ஆசை சிறிதும் இல்லை'' என்று கூறிவிட்டு மறுபடியும் விம்மினாள்.

அதைக் கண்டு மனம் கசிந்து போன பெரியநாயகி, ''பங்கஜம், நீ எதுக்காக வருத்தப்பட்டுக்கிறே? அவன் குணந்தான் தெரிஞ்சு கிடக்கிறதே? விட்டுத் தள்ளு. அவன் உன்னைக் கவனிக்காட்டி, நாங்கள் இல்லையா, கவனிச்சுக்க?'' என்று தணிவான குரலில் வினவினாள். கண்ணீரைத் துடைத்துக்கொண்டு சிறிது நேரம் பங்கஜம் மௌனமாக இருந்தாள். பிறகு தனக்குள்ளே ஏதோ நினைத்துக் கொண்டவள் போல், மெல்லச் சிரித்தாள்.

''அத்தை, இவரைக் கட்டிக் கொண்டதும், ஊருக்குப் புறப்படும்போது என் அக்கா ஜெகதா சொன்ன வார்த்தைகள் இப்போ எனக்கு நினைவுக்கு வருகிறது. அன்றைக்கு எனக்கு அவங்கமேலே ரொம்பக் கோபம் ஏற்பட்டது. ஆனால் இன்றைக்கு அது எவ்வளவு உண்மை என்று நன்றாக விளங்குகிறது. என் அக்கா சொன்னாங்க, ''அழகும் இளமையும் மட்டும் வாழ்க்கையிலே இருந்து விட்டால் போதாது. பணமும் வேண்டும் என்கிறதை உணர்கிற காலம் வரும். அப்போ ஜகதா ஞாபகம் உனக்கு ஏற்படும்'' என்றார்கள். அவர்கள் வார்த்தைகள் இவ்வளவு விரைவில் பலித்துவிடும் என்று நான் நினைக்கவில்லை'' என்று கூறிவிட்டு, துக்கம் தாளாது கண்ணீர் உகுத்தாள்.

''என்னவோ அக்கா தங்கச்சிகள் போட்டுக்கிற சண்டை, அதெல்லாம் பத்தி இப்போ ஏன் நினைச்சு வேதனைப்படுகிறே? எழுந்திருந்து முகத்தைக் கழுவிக்கிட்டுச் சாப்பிட வா. நேரமாகுது'' என்று சமாதானப்படுத்தினாள் பெரியநாயகி.

''இல்லை, அத்தை! அப்போ திரும்பி நான் ஒரு வார்த்தை அக்காகிட்ட எதிர்த்துச் சொன்னேன். அப்படி ஒரு சமயம் வந்தாலும், உங்ககிட்டே நான் உதவிக்கு ஒரு காலமும் வர மாட்டேன் என்று வீராப்பாகப் பேசினேன். பெரியவங்ககிட்டே மரியாதையில்லாம பதட்டமாகப் பேசினதற்கு கடவுள் எனக்குத் தக்க தண்டனையைக் கொடுத்து விட்டார். வீட்டிலே இல்லாமையினால் கஷ்டம் ஏற்படும் போதெல்லாம், அக்காவுக்கு ஒரு காகிதம் எழுதி கொஞ்சம் பணம் கேட்டு வரவழைக்கலாமென்று எனக்கு ஆசை தோன்றுவது உண்டு. ஆனால் அதே சமயம் அக்கா உதவியைக் கேட்பதான்னு ரோஷமாகவும் இருக்கு. உடனே பேசாமல் இருந்து விடுகிறேன். நாளைக்கு எனக்கு நடக்கப் போகும் பிரசவத்திற்கு மருத்துவ தாதிக்கு கொடுக்கக்கூடக் கையில் ஒரு செம்பு தம்படி இல்லை. அத்தை! இதையெல்லாம் நினைச்சுப் பார்த்தால்...'' என்று துக்கத்துடன் மேலே பேச முடியாது திணறினாள் பங்கஜம்.

''உன்னை பிரசவத்திற்குக் கூட்டிப்போக உன் அக்கா வந்தாலும்

எழுந்து சாப்பிடு'' என்றாள்

வருவா. அதனாலே நீ கவலைப்படாம எழுந்து சாப்பிடு'' என்றாள் பெரியநாயகி.

''அக்கா வருவாங்களா? அவளுக்கு இது விஷயமே நான் தெரியப்படுத்தலையே!'' என்று அதிசயத்துடன் கேட்ட பங்கஜம் எழுந்திருந்தாள்.

''தாயாரும் தகப்பனாரும் இல்லையென்றால் அக்காவாவது சமயத்திற்கு வந்து, செய்யவேண்டியதைச் செய்ய வேணாமா? உன் புருஷனுக்கு இதெல்லாம் பத்தி அக்கறை ஏது? ஆனா நான் வழக்கத்தை விட்டுக் கொடுக்கக் கூடாதுன்னு, உன் அக்காவுக்கு ஒரு கடுதாசி எழுதிப்போட ஏற்பாடு செய்தேன். அதனாலே அவ கட்டாயம் புறப்பட்டு வருவான்னு எனக்குத் தெரியும்'' என்றாள் பெரியநாயகி பெருமையுடன்.

''ஐயோ, அத்தை! என்ன காரியம் செய்து விட்டீங்க, என்னைக் கேட்காம? அக்காவுக்கு எழுதிப் போட்டுட்டீங்களே? உங்களுக்கு எங்க ஜகதா சங்கதியே தெரியாது. செய்கிறதை செய்துவிட்டு சமயத்தில் இடிச்சுக் காட்டுவாங்க'' என்று அரற்றினாள் பங்கஜம்.

அதற்கு பெரியநாயகி அலக்ஷியமாக சூள் கொட்டினாள். ''சமயத்திற்கு வந்து உதவி செய்ய அக்கா வேணும். உண்மையை எடுத்துச் சொன்னா ஆகாதுன்னு பார்த்தா முடியுமா? ஏன் வீணாக் கவலைப்படுகிறே? இன்னிக்கோ நாளைக்கோ அவள் வரப்போகிறாள். வந்ததும் உன்னை உடனே தன்னோடு கூட்டிக் கொண்டு போகப் போகிறாள். குழந்தை பிறந்ததும் நாலைந்து மாசமாவது நீ அங்கே அவளோட நிம்மதியா இருந்துவிட்டுப் பிறகு மெல்ல வந்தாப்போதும்'' என்று உபதேசித்தாள்.

இதையெல்லாம் கேட்டு பங்கஜத்தின் மனம் சமாதானமடைய வில்லை.

ஜெகதாவின் வருகை அவளுக்கு சிறிதும் பிடிக்கவில்லை. தொலைவிலே நகரத்திலே வசிக்கும் அக்கா, தங்கை சௌக்கியமாக வாழ்வதாக இதுவரை எண்ணிக் கொண்டிருக்கிறாள். நேரில் வந்து பார்க்கையில் அவளுக்கு உண்மை தெரிந்துவிடும். நான் முன்பே கூறினேன். இப்போது என்ன ஆயிற்று. பார்த்தியா? என்று

சுட்டிக்காட்டிப் பேச அவளுக்கு ஒரு சந்தர்ப்பம் அல்லவா வந்து வாய்த்துவிடும்? இந்த அத்தை சொல்லாமல் கொள்ளாமல் என்ன காரியம் செய்துவிட்டார்கள்! என்று பலவும் எண்ணிக் கவலைப்படலானாள்.

பங்கஜத்தை நீண்ட நாட்கள் கவலையிலே அல்லலுறச் செய்யாது அடுத்த நாளே ஜகதா வந்து சேர்ந்தாள். விடிந்ததும் விடியாததுமாக வாசலிலே வந்து நின்ற குதிரை வண்டியைக் கண்டதுமே, பங்கஜத்திற்குத் தனது சகோதரி வந்துவிட்டாள் என்ற விஷயம் விளங்கிவிட்டது.

''ஏனம்மா பங்கஜம். கொஞ்சம் முன்னாடியே ஒரு கடிதாசி போட்டிருக்கக்கூடாதா? காரியத்தைக் கொட்டு வாயிலே வச்சுக்கிட்டு எழுதியிருக்கிறியே?'' என்று வண்டியிலிருந்தபடி இரைந்து கேட்டுக் கொண்டு ஜெகதா இறங்கினாள். அக்கம் பக்கத்தவர்கள் எல்லோரும், வாசலில் வந்து வேடிக்கை பார்ப்பதை அறிந்த பங்கஜம் வெட்கத்துடன், ''வாங்க உள்ளே, பிறகு பேசலாம்'' என்று தன் சகோதரியை வரவேற்றாள்.

உள்ளே நுழைந்தவுடன், ஜெகதா தன் மூக்குக் கண்ணாடியை மூக்கின் மீது சரிப்படுத்திக் கொண்டு சுற்றிலும் ஒரு முறை கண்ணால் ஆராய்ந்தாள். ''என்னம்மா பங்கஜம் இந்த வீட்டிலே சௌகர்யமாக பிரசவத்தை நடத்த ஒரு அறைகூட இருக்காது போலிருக்கிறதே! இந்த சமாச்சாரத்தை முன்னாடியே எழுதிப்போட்டிருந்தால் மேலே ஒரு மாடி வீட்டைக் காலி பண்ணச்சொல்லி கோர்ட்டு வரைக்குமாவது போயிருப்பேன். 'எங்க குழந்தை பிரசவத்திற்கு வரப்போகிறாள். கொஞ்சம் வீட்டைக் காலிபண்ணிக் கொடுங்க?' என்று அந்த முதலியாரை நூறு தடவைகள் கேட்டுக் கொண்டேன். அந்த பாவி முடியாதுன்னு சொல்லிவிட்டான். நான் இருக்கிற வீட்டிலே, சௌகர்யம் பத்தாதுன்னு உனக்குத் தெரியுமே! சரி, பிரசவத்தை மருமகன் வீட்டிலேயே தக்க மருத்துவர் வச்சு நடத்திவிட்டாப் போகுதுன்னு நான் எல்லா ஏற்பாடுகளோடேயும் கிளம்பி வந்திருக்கிறேன். இங்கே என்னடான்னா எங்கே பார்த்தாலும், நெல்லு மூட்டையும் வைக்கோலும் சாணியுமா ரொம்ப அசிங்கமா இருக்கிறதே? நீ படிச்ச படிப்பு என்ன? இப்போ வீட்டை

வைச்சிருக்கிற லக்ஷணம் என்ன? சே! சே! நல்லாவேயில்லையே?'' என்று வந்ததும் வராததுமாகத் தனது அதிருப்தியைத் தெரிவித்தாள் ஜெகதா.

பங்கஜத்திற்கு அதைக் கேட்டதும் திகில் அதிகரித்தது. ஜெகதா தங்களுடன் சில மாதங்கள் அங்கே தங்கியிருக்க வந்திருப்பதை அறிந்ததும் அவளது கவலைகள் பன்மடங்காகப் பெருகின. அக்காவின் டாம்பீக குணத்திற்கும் தன் கணவனின் கருமித்தனத்திற்கும் சிறிதும் பொருந்தி வராதேயென்று எண்ணி அவள் கலங்கிப் போனாள்.

''கிராமத்து வீடுகள் எல்லாம் இப்படித்தான் இருக்கும். சோபாவுக்கும் நாற்காலிக்கும் நாங்கள் எங்கே போவோம்.'' என்று சிரித்து மழுப்பினாள் தங்கை பதிலுக்கு. அத்துடன் ஜெகதா ஓய்ந்து விடவில்லை. தங்கையை ஏற இறங்க ஒரு முறை கூர்ந்து கவனித்துவிட்டு ''கல்யாணத்தும் போது அப்பா போட்டிருந்த புதிய செயின் எங்கே? உன் கழுத்திலே காணவில்லையே அதை? தங்க வளையல்களைக் கழற்றி வைத்துவிட்டு, கண்ணாடி வளையல்களைப் போட்டுக்கிட்டு இதென்ன அலங்காரம்?'' என்று விடாது மேலும் மேலும் கேட்டாள்.

தன் நகைகள் யாவும் வீட்டுச் செலவிற்கும் கடனுக்கும் போய் விட்டன என்ற உண்மையை ஜெகதாவிடம் ஒப்புக் கொள்ள இஷ்டமில்லை. ''இவருக்கு நகைகள் போட்டுக் கொண்டாலே பிடிக்காது. வீண் டம்பம் என்று பரிகசிக்கிறார். அதனால் கழற்றி உள்ளே பெட்டியில் வைத்திருக்கின்றேன்'' என்று கூறிவிட்டு, தன்னுடன் இந்தக் கூற்றை ஒத்துக்கொள்ளும்படி பெரியநாயகிக்கும் கண்களால் ஜாடை செய்தாள் பங்கஜம். அக்கா பாடு தங்கை பாடு. இருவரும் வேண்டிய அளவு பொய்யை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளட்டும். இடையே நமக்கு வீண் வம்பு ஏன் என்ற ஹோதாவிலே பெரியநாயகியும், பங்கஜமும் கூறியதைக் கேட்டுக்கொண்டு குறுக்கே ஒன்றும் சொல்லாது மௌனமாக இருந்துவிட்டாள்.

இரண்டு தினங்கள் சென்றன. சந்தையினின்று திரும்பி வந்த சதாசிவம், கூடத்திற்குள் நுழைந்ததும் திடுக்கிட்டுப் போனான். சுவர்

ஓரமாகக் கிடந்த பெஞ்சியில் டிரங்கு பெட்டிகளும், ஒரு படுக்கையும் வைத்திருந்ததைக் கண்டான். நிலத்திற்கு வேண்டிய எருகூட வாங்கப் பணம் இல்லாது தான் திண்டாடிக் கொண்டிருக்கையில் அழைக்காத விருந்தாளி யாரோ தன் வீட்டிற்கு வந்திருப்பதைக் காண அவனுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டிவிட்டுக் கைகழுவ முற்றத்திற்கு வந்தான். முற்றத்திலே கிடந்த காப்பிப் பாத்திரங்களைக் கண்டதும் அவனது கோபம் எல்லைகடந்து போயிற்று.

''பங்கஜம்! இங்கே வா!'' என்ற கூடத்திலிருந்தபடியே உரத்த குரலில் உறுமினான் அவன். தோட்டத்திலே துணி துவைத்துக் கொண்டு நின்ற பங்கஜம், அதைக் கேட்டதும் நடுநடுங்கிப் போய் ஓட்டமும் நடையுமாக வந்து நின்றாள். அப்பொழுதுதான் அவளுக்குத் தன் கணவன் சந்தையிலிருந்து திரும்பி வந்தது தெரியும். ''எப்போ வீட்டை விட்டு ஒழிவான்னு இரண்டு பேரும் காத்திருந்தீர்களா! இந்த வீட்டிலே காப்பி, பலகாரம் என்கிற பேச்சே கூடாதுன்னு நான் சொல்லியிருந்தும் இப்படித் திருட்டுத்தனமா எவ்வளவு நாளா நீங்க இரண்டு பேரும் அக்கிரமம் பண்ணுகிறீங்க!'' என்று உச்சஸ்தாயியில் அதட்டினான்.

''ஊரிலிருந்து அக்கா வந்திருக்கிறாங்க. அவங்களுக்காக இரண்டு நாளா அத்தை காப்பி பலகாரம் செய்கிறாங்க. நீங்க இப்படிச் சத்தம் போட்டுப் பேசாதீங்க. அவங்க காதில பட்டால் ரொம்பப் பொல்லாப்பாயிடும்'' என்று பங்கஜம் கெஞ்சாத குறையாக மொழிந்தாள். சகோதரியின் காதுகளில் எங்கே கணவன் கூறியவைகள் விழுந்துவிடுமோ என்ற அச்சத்திலே அவளது உடல் நடுங்கியது. ''அழையாத வீட்டுக்குள்ளே நுழைஞ்சிருக்கிற விருந்தாளி உங்க அக்காதானே? பெரிய மனுஷன் பெண் ஜாதியில்லையா? காலையிலே காப்பி குடிக்காட்டி அவளுக்கு தலைவலி வந்துவிடும். அப்படிச் சொல்லு சங்கதியை!'' என்று ஏளனமாகப் பேசி, பற்களைக் கோபத்துடன் கடித்தான் அவன்.

''ஊரிலிருந்து வரும்போது அவங்களே காப்பிப்பொடி, சர்க்கரை எல்லாம் கையோட கொண்டு வந்தாங்க. பிரசவம் முடிஞ்சதும் போய்விடுவாங்க. அதனாலே...'' என்று முடிக்கமுடியாது பங்கஜம் நிறுத்தினாள். அவமானத்தினால் அவளது

முகம் முழுவதும் சிவந்து போயிற்று. துக்கத்தினால் அவளுக்கு அழுகை வந்தது.

''பிரசவத்திற்கு உதவி செய்ய நான் உன் அக்காவை இங்கே அழைக்கவில்லையே? என்னைக் கேட்காமல் இங்கே வர அவளுக்கு என்ன உரிமை இருக்கிறது. விருந்தாளிகளை வைச்சுப் படைக்க இங்கே கொட்டியா கிடக்கிறது? உன் அப்பனைக் கடனாளியாக்கினாள் உங்க அக்கா. இப்போ என்னையும் கடனாளியாக்க வந்திருக்கிறாளா?'' என்று இரைந்து கத்தினான் அவன்.

''ஐயோ, நீங்க ஒண்ணும் பேச வேண்டாம். நானே ஏதாவது சொல்லி அவங்களை ஊருக்கு அனுப்பிவிடுகிறேன். எனக்காக ஒரு நாள் பொறுத்துக்குங்க'' என்று கண்ணீர் வழியப் புலம்பினாள் பங்கஜம். ''என் மனைவியை கவனித்துக் கொள்ள எனக்குத் தெரியும். இங்கே உதவிக்கு யாரும் தேவையில்லை. உடனே இன்று இரவு உன் அக்காவை ஊருக்கு அனுப்பிவிட்டு மறுவேலை பார். இல்லாவிட்டால் நான் பொல்லாதவனாக இருப்பேன்'' என்று கடும் உத்தரவு போட்டுவிட்டு, சதாசிவம் காலை ஆகாரம் கூடச் சாப்பிடாது கோபமாக வெளியே சென்று விட்டான்.

'அக்காவுக்கு என்ன சொன்னால் நம்புவாள்? எதைச்' சொல்லி அவளை இங்கிருந்து ஊருக்கு அனுப்ப முடியும்?' என்று பலவிதமாக தனக்குள்ளே எண்ணிக் குழம்பிய பங்கஜம், காலடி ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். வில்லினின்று விடுபட்ட அம்புபோல் பாய்ச்சல் வேகத்தில் கூடத்திற்குள் நுழைந்த ஜெகதா, தரதரவென்று ஆத்திரத்துடன், பெட்டிகளை பெஞ்சியினின்று தூக்கி தரையில் ஒன்றன்பின் ஒன்றாக வைத்தாள். முற்றத்தில் கிடந்த வெள்ளிக் கூஜாவை பாய்ந்தோடி எடுத்து மூடியைப் போட்டுத் திருகிக் கொண்டு, ''டேய் குப்பா! ஸ்டேஷனுக்குப் போக ஒரு மாட்டு வண்டி கொண்டு வா, சீக்கிரம்'' என்று கிரீச்சிட்டுக் கத்தினாள்.

அக்கா காதுகளில் கணவன் வார்த்தைகள் கேட்டுவிட்டன. அதனால் கோபித்துக்கொண்டு விட்டாள் என்பதை ஊகித்துக்கொண்ட பங்கஜம், கலவரத்துடன், ''அக்கா!'' என்று சமாதானம் கூற அழைத்தாள்.

''பங்கஜம், போதும்! உன் வீட்டிற்கு நான் வந்ததற்கு தக்க பரிசு கிடைச்சுடுச்சு. நீ எதுவும் எனக்குச் சொல்ல வேண்டாம். உன் புருஷன் சொன்னது எல்லாவற்றையும் நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். அப்பா செத்தபோது உன் புருஷன் வந்து காரியங்களை நடத்தினதைக் கண்டு அவன் மேலே கொண்டிருந்த அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டேன். 'நல்ல பையன்'னு நினைச்சு ஏமாந்து போனேன். உன் புருஷன் எப்படிப்பட்ட அயோக்கியன்னு இப்பத்தான் தெரிகிறது. உட்கார்ந்து தின்னு என் அப்பன் குடும்பத்தைக் கெடுத்தேனாமே! எத்தனை தைரியம் அவனுக்கு என்னை அப்படிப் பேச! என் மூஞ்சிக்கு எதிரே சொல்லியிருந்தா அவனை நான் சும்மா விட்டிருக்க மாட்டேன்'' என்று ஆவேசம் பிடித்தவள் போல், நெஞ்சு படபடக்க, முகத்தில் வியர்வை அரும்ப உணர்ச்சி வசத்திலே வார்த்தைகள் தடுமாற, மூச்சுத் திணறக் கத்தினாள் ஜகதா.

பங்கஜம் தன் இரு கரங்களாலும் தலையைப் பிடித்துக் கொண்டாள். ''அக்கா! என் புருஷன் சங்கதிதான் உங்களுக்கு ஆரம்பத்திலேயே தெரியுமே. அப்படியிருந்தும் நீங்க புறப்பட்டு இங்கே வந்தது தப்பு!'' என்றாள் தன் துயரத்தை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு.

இதைக் கேட்டதும் ஜகதாவின் கோபம் பன்மடங்காகப் பெருகிவிட்டது. ''அழைக்காம ஒண்ணும் உன் வீட்டிற்கு நான் வந்துவிடவில்லை. உன் அத்தையின் கடிதத்தைப் பார்த்துவிட்டு கர்ப்பிணிப் பெண் என்ன மனசு கஷ்டப்படுகிறாளோன்னு ஆதங்கப்பட்டு நான் வந்தேன். வெறும் கையோட வந்துவிடவில்லை. உனக்கும் குழந்தைக்கும் வேண்டிய துணி மணிகள், மருந்துகள் எல்லாம் பெட்டி நிறைய அமுக்கி எடுத்துக் கொண்டுதான் வந்தேன். நீ எப்பவுமே நன்றி கெட்ட பெண். உனக்கு அக்கான்னு விசுவாசமே கிடையாது. கழுத்திலே கட்டின தாலியையும் பிடுங்கி வித்துத் தின்கிற இந்த தரித்திரம் பிடிச்ச புருஷன்தான் உனக்குப் பெரிசாகப் போயிட்டான். வருந்திக் கூப்பிட்டாக்கூட உன் வீட்டுக்குள்ளே இனி அடியெடுத்து வைக்கமாட்டேன்'' என்று கர்ஜித்தாள் சகோதரி.

பங்கஜத்தினால் அவளது வார்த்தைகளைக் கேட்டுச் சகிக்க முடியவில்லை.

''வேண்டாம், அக்கா. நீங்க என் வீட்டுக்கு வரவே வேண்டாம். நான் செத்தாலும் நீங்க என் பிணத்தைப் பார்க்கக்கூட வரவேண்டாம்'' என்று கூறிவிட்டு அழுது கொண்டே சமையலறைக்குள் சென்று உட்கார்ந்து கொண்டாள். இடையே பெரியநாயகி எவ்வளவோ சமாதானம் செய்தும், ஜகதா அந்த வீட்டிலே அதற்கு மேல் ஒரு கணம்கூடத் தங்க மனமின்றி, தனது பெட்டி படுக்கை சகிதம் ஊருக்குப் புறப்பட்டு விட்டாள்!

ஒரு வார காலம் சென்றது. அவசர நிமித்தம் பக்கத்து ஊருக்குக் காரியமாகச் சென்றிருந்த சதாசிவம் வீடு திரும்பு முன், பலத்த மழையொன்று கொட்டத்துவங்கியது. அத்துடன் அண்ட சராசரமெல்லாம் கோரமாக வீசத் துவங்கியது.

பிரசவ வேதனை ஒரு பக்கமும், கணவனைக் காணவில்லையே என்ற கவலையொரு புறமும் வாட்ட, நெருப்பிலிட்ட புழுவாகப் பங்கஜம் துடித்துக் கொண்டிருந்தாள். முதல் நாள் பகல் ஆரம்பித்த பேய்க் காற்று, மறுநாள் விடியற்கால சமயம்தான் ஒரு வழியாக ஓய்ந்தது. புயல் ஓய்ந்து லேசாக மழை தூறிக் கொண்டிருந்த விடியற்கால சமயம், பங்கஜம் ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானாள்.

பெரியநாயகி தன் அருகே கொண்டுவந்து கிடத்திய தன் அருமை மகனைப் பங்கஜம் மார்புடன் அணைத்துக் கொண்டாள். அவளது கண்களில் கண்ணீர் வெள்ளமாக வழிந்தோடியது. ''அத்தை! இப்போது எங்கப்பா மட்டும் உயிரோடு இருந்தால் பேரனைப் பார்த்து எவ்வளவு சந்தோஷப்படுவார், தெரியுமா? அத்தை, இவனுக்கு நான் ஆனந்தன் என்று பெயர் வைக்கப் போகிறேன். இவன் பிறந்த பிறகாவது என் வாழ்விலே கஷ்டம் நீங்கி ஆனந்தம் ஏற்படாதா என்ற நம்பிக்கையால் இவனுக்கு நான் அந்தப் பேர் வைக்கிறேன்'' என்று உணர்ச்சி பொங்கக் கூறினாள். அது சமயம் வாயிற் கதவு இடிபடும் ஓசைகேட்டு, பெரியநாயகி விரைந்து சென்று கதவைத் திறந்தாள்.

நனைந்து சேறு படிந்த உடையும் அலங்கோலமான தலையுமாக உள்ளே வந்த சதாசிவம் பித்தம் பிடித்தவன் போல் கட்டிலின்மீது உட்கார்ந்து கொண்டான். ''ஆண் குழந்தை பிறந்திருக்கிறது'' என்று

பெரியநாயகி தெரிவித்த பொழுது, ''சந்தோஷம்! இனி குறைச்சல் என்ன!'' என்று கூறிவிட்டு உரத்துச் சிரித்தான்.

விஷயம் புரியாத பெரியநாயகி அவனை வெறித்துப் பார்த்துவிட்டு திகிலுடன் உள்ளே சென்று விட்டாள். தன் வரவால் தாயாருக்கு எல்லையற்ற ஆனந்தத்தைக் கொடுத்த ஆனந்தன் அதே சமயம் தன் தந்தைக்கு சமாளிக்க முடியாத பெரும் துரதிர்ஷ்டத்தைக் கொடுத்திருந்தான். ஒருநாள் முழுவதும் கோரமாக வீசிய கொடும் காற்றினால் சதாசிவத்தின் பத்து ஏக்கர் வாழைப் பயிர் முழுவதும் பூவும், பிஞ்சுகளுமாக, குலைகளுடன் ஒடிந்து சாய்ந்து பாழாகிக் கிடந்தது.

5

''ஆனந்தன்!'' என்று மைந்தனது பெயரை வாய் இனிக்கப் பங்கஜம் அழைத்து மகிழ்ந்தாளே தவிர, அவள் விரும்பிவேண்டி நின்ற ஆனந்தம் அதற்குப் பின் அவளது வாழ்விலே தலைகாட்டவேயில்லை. வருஷங்கள் நான்கிற்கு மேலாகியும், அன்றைய தினம் வீசிய கொடும் புயல் விளைவித்த நஷ்டத்தினின்று சதாசிவம் நிமிரவேயில்லை. வாழைப் பயிரை நம்பி வாங்கியிருந்த கடன் சுமை ஒரு புறமும், வேகமாகப் பெருகிக் கொண்டு சென்ற குடும்பத்தின் பாரம் இன்னொரு புறமுமாக அவனைச் சமாளிக்க இயலாது அழுத்தின.

ஆனந்தன் பிறந்த மூன்றாவது வருஷம், இந்திராணி பிறந்தாள். அண்ணனைப் போன்று தங்கை தான் பிறக்கும் பொழுது, மழையையும் புயலையும் துணைகொண்டு வரவில்லை. பௌர்ணமி நிலவு பால்போல் காய்ந்து கொண்டிருந்த அழகிய கோடை இரவின் முற்பகுதியில், தாய்க்கும் மற்றவர்களுக்கும் அதிகத் தொல்லை கொடுக்காது விரைவிலே வந்து தோன்றினாள். எனினும் சதாசிவத்திற்கு அதனால் தன் மகளிடம் அலாதியான பாசம் பெருகி ஓடி வந்து விடவில்லை. சோற்றுக்கும், துணிக்கும் செலவு வைக்க இன்னொரு ஆத்மா தன் குடும்பத்திலே அதிகரித்து விட்டதை அறிந்து

அவன் உள்ளூர வெகுண்டான். இரண்டாவதாகப் பிறந்தது ஆண் குழந்தையாகப் பிறந்திருந்தால் ஒரு சமயம் அவன் அவ்வளவு தூரம் மனம் கசந்து கொண்டிருக்கவே மாட்டானோ, என்னவோ! எனினும் இந்திராணி தன் தந்தையின் தனிப்பட்ட அன்பைக் கவர்ந்து கொள்ள அப்படியொன்றும் விசேஷமான அதிர்ஷ்டத்தைத் தன்னுடன் கொண்டு வந்துவிடவில்லை. அவள் பிறந்த பின்பு சதாசிவத்தின் பொருளாதாரம் இன்னும் மோசமான நிலையையே அடைந்தது.

அன்றுவரை உணவுக் கஷ்டமின்றி அவனது குடும்பத்தைப் போஷித்து வந்த சொந்த நிலம், கடனுக்கு மூழ்கி விட்டது. குடும்பச் செலவை சரிக்கட்ட பங்கஜத்தின் மீது எஞ்சியிருந்த இரண்டொரு நகைகளும் காகக் கடையில் அடைக்கலமாகிவிட்டன. கல்யாணத்தின்போது மகளுக்கு கவுண்டர் சீராகக் கொடுத்திருந்த வெள்ளிப் பாத்திரங்களும், கண்ணாடி பீரோவும், அடுத்த வீட்டு அன்னம்மாவிடம் அடமானமாகப் போய்ச் சேர்ந்துவிட்டிருந்தன. நான்கு வருஷ தாம்பத்திய வாழ்விலே சதாசிவத்திடம் எஞ்சியவை மனைவியும், குழந்தைகளும், தவிர்க்க முடியாத தரித்திரமுந்தான்.

அன்று பகல், பங்கஜம் வீட்டின் கூடத்திலே உட்கார்ந்து கொண்டு கிழிந்துபோன ஆடைகளை ஒன்றன் பின் ஒன்றாக மிகவும் பொறுமையுடன் தைத்துச் சரிப்படுத்திக் கொண்டிருந்தாள். அவளது மடியின்மீது தலையை வைத்துக் கொண்டு கவிழ்ந்தபடி படுத்துக் கிடந்த ஆனந்தன் சிறிது நேரத்திற்கொரு தடவை விசும்பிக்கொண்டிருந்தான். சமையலறையினின்று வெளிப்பட்ட பெரியநாயகி, தன் நெற்றியில் படிந்திருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள். ஆனந்தன் அருகே வந்து குனிந்து பார்த்து விட்டு, ''குழந்தைக்கு என்ன தெரியும்? வழியில் பால் செம்பை வைச்சது என் பிசகு. தவறி கொட்டிவிட்டான். அதுக்காகப் பிள்ளையைப் போட்டு இப்படியா ஒருத்தன் அடிப்பான்!'' என்று ஆச்சர்யத்துடன் வினவினாள். சிவந்த வரிகள்போல், விரல்களின் அடையாளம் படிந்திருந்த தனது மைந்தனின் முதுகை மீண்டும் ஒருமுறை உற்றுக் கவனித்த பங்கஜம், கண்ணில் பெருகிய நீரைச் சமாளித்துக் கொண்டாள். குமுறிய துக்கத்தை அடக்க கீழ் உதட்டைப் பற்களால் அழுத்திக் கடித்துக் கொண்டு மௌனமாகத் தைப்பதிலே ஈடுபட்டாள்.

மாடத்திலிருந்த விளக்கெண்ணெய் சீசாவைக் கையில் எடுத்துக் கொண்டு பெரியநாயகி அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். விரல்களிலே எண்ணெயைத் தொட்டு லேசாக ஆனந்தனின் முதுகிலே பரிவுடன் பூசினாள். ''என்னைப் பெத்த என் ராஜா! அழாதேடா என் தங்கம்!'' என்று அந்தச் சிறுவனுக்கு சமாதானமாக இரண்டு வார்த்தைகள் கூறிவிட்டு; வீட்டு வேலைகள் செய்து களைத்துப் போன தன் முதுகை வளைத்து ஒருமுறை கொட்டாவி விட்டாள். பிறகு பங்கஜத்தின் பக்கம் திரும்பி, ''என் மேலே ஏற்பட்ட கோபத்தை எங்கே காட்டுகிறதுன்னு புரியாம இந்தக் குழந்தையைப் போட்டு அடிச்சுக் கொன்னான் உன் புருஷன். நீயே சொல்லு பங்கஜம், இந்த வீட்டிலே நான் வீணா உங்களுக்கெல்லாம் பாரமாகக் குந்திக்கொண்டு தின்கிறேனா? எவ்வளவு வேலை செய்கிறேன்? மாட்டுக்குத் தீனி வச்சு, பால் கறந்து, கொல்லை வாசல் பெருக்கி, சமைத்துப் போட்டு, நெல்லுப் புழுங்கி, மாவு இடிச்சு...'' என்று மூச்சு விடாது அடுக்கிக் கொண்டு போனாள்.

''இல்லையினு நான் சொன்னேனா அத்தை!...'' என்று பங்கஜம் துயரத்துடன் பெருமூச்சு விட்டாள்.

''ஒரு வேலைக்காரி இருந்தா அவளுக்குச் சம்பளம் கொடுத்தால்தானே இவ்வளவு செய்வா? வேலைக்காரிக்கு வேலைக்காரியா, உறவுக்கு உறவா இருந்து நான் நடத்தி விட்டுப் போகிறேன். உன் புருஷனுக்குக் கொஞ்சமும் நன்றியே இல்லை. கஷ்டப்பட்டு உழைத்தும், பேச்சுக் கேட்டுக்கொண்டு இங்கே கிடக்க, எனக்கு அப்படி விதியத்தா போச்சு?'' என்று படபடப்பாகக் கேட்டாள்.

பெரியநாயகிக்கும் சதாசிவத்துக்கும் இடையே ஏற்படும் பூசல்களைக் கேட்டுப் பழக்கம் அடைந்திருந்த பங்கஜம், அவளது வார்த்தைகளைப் பொருட்படுத்தவேயில்லை. குடும்பத்திற்குப் பல வகையிலும் உதவியாக இருந்த தன் சிறிய தாயாரை மரியாதையின்றிக் கணவன் நடத்துவது முறையல்ல என்பதைப் பங்கஜம் அறிந்து கொண்டிருந்தாள். எனினும் கடுமையாக அவனுக்கு எதிராகப் பேச

அவள் மனம் இடம் கொடுக்கவில்லை. சதாசிவம் இவ்வாறு அன்பற்ற கணவனாகவும், இரக்கமற்ற தந்தையாகவும் மாறியதற்குக் காரணம் வாழ்க்கையிலே அவனுக்கு ஏற்பட்ட பொருளாதாரத் தோல்விதான் என்று அவள் பூரணமாக நம்பினாள். ஆகவே அவள் விட்டுக் கொடுக்காமல், ''அத்தை, அவரைக் குற்றம் சொல்லி என்ன பயன்? எதைத் தொட்டாலும் தோல்வின்னு கஷ்டம் மேலே மேலே ஏற்பட்டு விட்டதனால் அவர் குணம் இப்படி மாறிவிட்டது. அந்தப் பத்து ஏக்கர் வாழைப் பயிரும் புயலடித்து நாசமாகி விடாமல், செழித்து வளர்ந்திருந்தால், அவர் என்னிடம் இப்படியா நடந்து கொள்வார்? ஆவந்தனைப் போட்டு இப்படி அடிக்கத்தான் அவருக்கு மனம் வருமா?'' என்று கூறிவிட்டுத் துயரம் தாளாது தேம்பினாள். வழக்கம் போல் பங்கஜத்தின் கண்ணீர், பெரியநாயகியின் மனத்தைப் பாகாய் இளக்கிவிட்டது.

''ஒரு பேச்சுக்குச் சொல்ல வந்தேன், பங்கஜம்! நீ ஏன் இப்படி வருத்தப்பட்டுக்கிறே? உன் புருஷனுக்காகவோ, கடனுக்கு எனக்கு வரவேண்டிய பணத்துக்காகவோ நான் இந்த வீட்டிலே இருக்கல்லை. கடன் பணம் திரும்பி வந்தா வருது, வராட்டிப் போகட்டும்னு நான் எப்பவோ புறப்பட்டு ஊர் போய்ச் சேர்ந்திருப்பேன். உன் முகத்துக்காகவும், இந்தப் பச்சைப் பாலகங்க ரெண்டு பேருக்காகவும், நான் சகிச்சுக்கிட்டு இங்கே இருக்கிறேன். பெத்தபொண்ணுன்னு இல்லாட்டியும், பழகின குறை, உன்னை என் சொந்த மகளாட்டமா பிடிச்சுப்போச்சு. கையிலே எடுத்து வளர்த்த பாசம் இந்தக் குழந்தைகளை விட்டுப் பிரியமனம் இல்லை'' என்று கூறிய அவள் மேலே ஏதோ பேசுமுன் தொட்டிலில் கிடந்த இந்திராணி விழித்துக் கொண்டு அழத் துவங்கினாள்.

''இதோ வந்துவிட்டேன்!'' என்று குரல் கொடுத்துவிட்டு பெரியநாயகி எழுந்து சென்றாள். அழும் குழந்தையை வாரித் தூக்கிக்கொண்டு சமயலறைக்குள்ளே புகுந்தாள். சற்றுப் பொழுதில் ஒரு கிண்ணத்திலே சாதமும், பருப்பும் கலந்து எடுத்துக் கொண்டு குழந்தையை இடுப்பிலே சுமந்தபடி வெளியே வந்தாள். மீண்டும் பங்கஜத்தின் அருகில் வந்த அமர்ந்து கொண்டு, பரிவுடன் பருப்பு கலந்த சோற்றை அழுது கொண்டிருந்த குழந்தையின் வாயிலே திணித்தாள்.

''நல்ல பசிப்போல இருக்குது, பாவம்! குழந்தைவிடாம அழுதது. இவளுக்குச் சோறு போட்டு முடிந்ததும் அந்தப் பயலை எழுப்பி கொஞ்சம் வயித்துக்குப் போடணும். தங்க பொம்மைகளாட்டம் ரெண்டும் எவ்வளவு அழகா இருக்கு! எடுத்து வைக்கக் கொஞ்சிவிளையாட அவனுக்குக் கொடுத்து வைக்கலையே? ஒவ்வொருத்தர் ஒரு குழந்தை வேணுமின்னு எத்தனை கோயில்களுக்குப் போறாங்க. எத்தனை தெய்வங்களை வேண்டுகிறாங்க!'' என்று அலுப்பு நிறைந்த குரலில் சொன்னாள் பெரியநாயகி.

''அப்படி வேண்டி விரும்புகிறவங்க வீட்டிலே பிறக்கப்படாதா இவைகள்? என் வயிற்றிலே வந்து ஏன் பிறக்கணும் அத்தை! கடவுள் இந்த விஷயத்திலே இல்லாதவர்களை ரொம்ப சோதிக்கிறார்'' என்று கூறிவிட்டுத் துயரத்துடன் பெருமூச்செறிந்தாள் பங்கஜம்.

திடுக்கிட்ட பெரியநாயகி ஆச்சர்யத்துடன் அவளை ஒரு முறை உற்றுக் கவனித்தாள். ''நீ சொல்கிறது விளங்கவில்லையே?'' என்று குறிப்பாக வினவினாள்.

''விஷயம் தெரிஞ்சா மனசு கஷ்டப்படுவாரென்று நான் இதுவரை அவருக்குத் தெரிவிக்காமல் இருந்தேன். காலையிலேதான் சொன்னேன். இருக்கிற கஷ்டத்திலே இன்னொரு குழந்தையான்னு அவர் கசந்து கொள்கிறார். என்ன செய்வது? கடவுள் இப்படி சோதிக்க வேண்டாம்'' என்று துயரத்துடன் கூறிமுடித்தாள் பங்கஜம், தான் மூன்றாவது முறையாகத் தாயாகப் போகும் ரகஸியத்தை.

பெரியநாயகி முகவாயைத் தோள்மீது கோபத்துடன் இடித்துக் கொண்டாள். மனைவியையும் குழந்தைகளையும் பாரமாகக் கருதும் மனிதனை அவள் மனிதனாகவே எண்ணவில்லை. ''போதும், பங்கஜம். அவனைப்பற்றி என்னிடம் பேசாதே. கல்யாணம் செய்து கொள்ளும் முன்னாடி குடும்பம்னா என்னன்னு யோசித்துப் பார்த்திருக்கணும். குடும்ப வாழ்விலே ஈடுபட்டு விட்டு, பின்னாடி தன் கடமைகளைக் கண்டு பயந்து ஓடினால் தீர்ந்து விடுமா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டுவிட்டு, இந்திராணியைத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றுவிட்டாள்.

அவளது வார்த்தைகளில் ததும்பி நின்ற உண்மை பங்கஜத்திற்கு

மிக்க கசப்பாகத்தான் இருந்தது. அவள் மேலே தர்க்கித்து தன் கணவனுக்காகப் பரிந்து எதுவும் பேச முற்படவில்லை. பங்கஜத்திற்கு முன்போல உடலில் வலிமை இருக்கவில்லை. போஷாக்கான உணவும், ஓய்வும், மன அமைதியும் இல்லாததனால் அவளது ஆரோக்கியம் ஏற்கனவே சீர்குலைந்து விட்டிருந்தது. அத்துடன் மூன்றாவது முறையாக விரைவிலே தாய்மையும் வந்து சேர்ந்துவிடவே, அவள் நாளடைவிலே நலிந்து போனாள்.

நிலம், கடன், வட்டி என்று பலவிதத் தொல்லைகளிலே மூழ்கிக் கிடந்த சதாசிவத்திற்கு மனைவியைக் கவனிக்க பொழுதும் இருக்கவில்லை; அக்கறையும் இருக்கவில்லை. பங்கஜத்தையும் அவள் குழந்தைகளையும் வேண்டாத பெரும் பாரமாக எண்ணி உள்ளூர வெறுத்தான். அன்றாட ஜீவியத்திற்குச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் அது சமயம் மூன்றாவது குழந்தையொன்றிற்கு அவள் தாயாகப் போகும் சங்கதியை அறிந்ததிலிருந்து அவனது வெறுப்பு பன்மடங்காகப் பெருகிப் போயிருந்தது. ஆகவே அவன் தன் கண்முன்னே, பங்கஜம் இளைத்துத் துரும்பாகித் தேய்ந்து கொண்டு வருவதை உணரவேயில்லை.

பங்கஜத்தின் வெளுத்த முகத்தையும் வீங்கிய பாதங்களையும் காணும் பொழுதெல்லாம் பெரியநாயகி உள்ளூரக் கவலைப்படலானாள். ''முந்திய தடவைகள் போல இல்லை. இம்முறை பெருத்த அபாயம் ஏதோ வரவிருக்கிறது'' என்று அவளது உள்ளுணர்வு சதா அறிவுறுத்திக் கொண்டிருக்கவே, பிரசவ நாட்கள் நெருங்கி வருவதை உணர்ந்து மிகவும் சஞ்சலத்தில் ஆழ்ந்து விட்டாள்.

பிறக்கும் பொழுது மூன்றாவது குழந்தை எந்தவிதமான துரதிர்ஷ்டத்தை தன்னுடன் கொண்டு வருமோ என அஞ்சியவனாக, அன்று காலையிலேயே சதாசிவம் வீட்டை விட்டு வெளியே சென்று விட்டான். பெரியநாயகி வழக்கம் போல், தனக்குத் தெரிந்த சிகிச்சைகளையெல்லாம் கையாண்டுவிட்டுச் சோர்ந்து போனாள்.

காலை மாலையாகி, அந்திப் பொழுதும் மறைந்து இரவு வந்ததும், பங்கஜத்தின் வேதனை தீர்ந்தபாடில்லை. உதடுகள்

நீலமாகி, சிரமத்துடன் அவள் மூச்சு விடுவதைக் கண்டதும் பெரியநாயகிக்கு திகில் அதிகரித்து விட்டது. சமயத்திற்கு வீட்டிலே சதாசிவம் இல்லாமற் போகவே, அவளது உள்ளமும் உடலும் பதறிப் போயின.

அன்று நாள்வரை அடுத்த வீட்டு அன்னம்மாவிடம் அவள் கொண்டிருந்த பகைமை உணர்ச்சி ஆபத்து சமயத்தில் அவளுக்கு மறைந்து போயிற்று. வாயிற் கதவைத் திறந்து கொண்டு தடதடவென்று அடுத்த வீட்டிற்கு மூச்சுவாங்க ஓடினாள் அவள். ''பாட்டி! உங்களுக்குப் புண்ணியமுண்டு. சித்த வந்து பங்கஜத்து நாடியைப் பார்த்துச் சொல்லுங்க. ஐயோ, எனக்கு ஒண்ணும் தோணலையே!'' என்று கண்ணீர் வழிய அன்னம்மாளைக் கெஞ்சினாள்.

'அப்படி வா வழிக்கு' என்பதுபோல் அன்னம்மா கர்வத்துடன், அவளை உற்றுப்பார்த்துவிட்டு தனக்குள்ளே லேசாகச் சிரித்துக்கொண்டு எழுந்து வந்தாள். பங்கஜத்தின் கை நாடியைத் தொட்டுப் பார்த்த பின்பு அன்னம்மாள் உதட்டை வளைத்தாள். மருத்துவத் துறையிலே பெரியநாயகியைவிட தான் மிகவும் அனுபவசாலி என்ற ஹோதாவில் புருவங்களை உயர்த்திக்கொண்டு, ரகசியமான குரலில், ''அடி பெரியநாயகி! இது நம்மாலே ஆகிற காரியமில்லை. பக்கத்து டவுனுக்கு ஓடி, டாக்டர் அய்யாவை இட்டுக் கொண்டு வந்தால்தான் உண்டு'' என்று நிர்த்தாக்ஷண்யமாகக் கூறிவிட்டாள்.

அபாயத்தை உணர்ந்த பெரியநாயகியின் நெஞ்சு பதறியது. கண்களிலே நீர் பெருகியது. ''பாட்டி! நடந்ததை மறந்துவிட்டு பங்கஜத்துக்காகச் சித்த இங்கே இவளையும் குழந்தைகளையும் பார்த்துக்கிட்டு பக்கத்திலே இருங்கோ. நான் ஓடிப் போய் டாக்டரை மோட்டார் வண்டி வைச்சு விரைவிலே அழைச்சிட்டு வரேன்'' என்று வாய் குழற வேண்டிக் கொண்டாள்.

கர்வம் பிடித்த பெரியநாயகி, தன் காலிலே விழுந்து கெஞ்ச சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதைக் குறித்து அன்னம்மாளுக்கு மெத்த மகிழ்ச்சி. எனினும், அதை வெளியே காட்டாது பகட்டாக, ''போடி பயித்தியக்காரி. ஆபத்துச் சமயத்திலே பேசிக்கிட்டுப் பொழுதைப்

டாக்டரைக் கூட்டியா, போ!''

ஒடிப் போய்ச் சீக்கிரம் டாக்டரைக் கூட்டியா, போ!'' அதுவரை போக்காமல் ஒடிப் போய்ச் சீக்கிரம் பானைக்குள்ளே அதுவரை என்று துரிதப்படுத்தினாள். புளிப் பானைக்குள்ளே சொந்தப் பணத்திலே ரகசியமாகச் சேமித்து வைத்திருந்த தனது சொந்தப் பணத்திலே இருபது ரூபாய்களை எடுத்துப் புடவைத் தலைப்பில் அவசரமாகச் செருகிக் கொண்ட பெரியநாயகி, எட்டு மைலுக்கு அப்பாலிருந்த பக்கத்து ஊருக்கு மாட்டு வண்டியொன்றில் அவசரமாகப் புறப்பட்டுச் சென்றாள்.

வாடகை மோட்டார் வண்டியிலே, வைத்தியருடன் அவள் வீடு திரும்பும் பொழுது, நடு இரவாகிவிட்டிருந்தது. வாசற்படியிலே காலை வைக்குமுன் உள்ளே குழந்தை அழும் சப்தம் கேட்கவே பிரமித்துப்போய் வைத்தியர் முகத்தை திரும்பிப் பார்த்தாள். தயாராக வீட்டு வாசலில் வந்து நின்று கொண்டிருந்த அன்னம்மாள், ''இனி பிரயோசனம் ஏதும் இல்லை. பங்கஜத்திற்கு உயிர் போய் ஒரு மணி நேரத்திற்கு மேலே ஆகும். நீ வரணும்னு நான் துடியாத் துடிச்சிட்டுக் காத்திருந்தேன். சாகும்போது அந்தப் பொண்ணு, இந்தக் கடுதாசியை உன்கிட்டே கொடுக்கச் சொன்னாள். உம், அவ்வளவுதான் கொடுத்து வைச்சது!'' என்று கூறிவிட்டு கிழவி, அங்கே நிற்கப் பிரியமில்லாதவன் போல் அப்பால் சென்றுவிட்டாள்.

''பங்கஜம்!'' என்று கிரீச்சிட்டு அலறிக்கொண்டு உள்ளே ஓடிய பெரியநாயகியினால் அந்தக் காட்சியைக் காணச் சகிக்கவில்லை. விஷயம் என்னவென்று புரியாத ஆனந்தனும் இந்திராணியும், திகிலடைந்து போய் 'அம்மா அம்மா!' வென்று தாயின் சடலத்தைச் சுற்றிக் கொண்டு அலறி அழுது கொண்டிருந்தார்கள். இந்த உலகிலே தான் தோன்றியவுடன், தாயாருக்கு விடை கொடுத்து மறு உலகிற்கு அனுப்பிவிட்ட பெருமையை பறையறிவிப்பதுபோல், மூன்றாவதாகப் பிறந்த பெண் மகவு, வாய் ஓயாது கத்திக் கொண்டிருந்தது. தன் துன்ப வாழ்விற்கு முற்றுப் புள்ளி வைத்தாகி விட்டது என நிம்மதியடைந்தவள் போல் பங்கஜம், மீளா நித்திரை செய்கிறவள் போல், கயிற்றுக் கட்டிலிலே அசைவற்றுக் கிடந்தாள்.

''ஐயோ, என் கண்ணே! எங்களைப் பரிதவிக்கவிட்டுப் போய் விட்டியே!'' என்று கூச்சலிட்ட பெரியநாயகி, அவளது சடலத்தைத் தழுவிக்கொண்டு வெகுநேரம் அன்றிரவு அழுது கொண்டிருந்தாள்.

பங்கஜத்தின் மரணச் செய்தியுடன் அன்றைய தபாலில் தனக்கு வந்து சேர்ந்த இன்னொரு கடிதத்தை எடுத்துப் பிரித்தாள் ஜெகதா. பங்கஜத்தின் கையெழுத்து காணப்படவே, பரபரப்போடு வாசித்தாள்.

அன்புள்ள அக்கா,

இந்தக் கடிதம் தங்களை வந்து சேரும்பொழுது, நான் இந்த உலகில் இருக்க மாட்டேன் என்று நம்புகிறேன். இம்முறை பிரசவத்தினின்று நான் பிழைத்து எழ மாட்டேன் என்று எனக்கு ஏதோ ஒன்று நிச்சயமாக அறிவுறுத்துகிறது. என்னைவிட வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர்களான நீங்கள் அன்று கூறிய புத்திமதி முற்றிலும் உண்மை என்பதை நான் என் வாழ்விலே உணர்ந்து விட்டேன். அழகும் இளமையும் மட்டும் இருந்தால் போதாது; வாழ்வின் தேவைகளுக்குப் பணமும் வேண்டும் என்பதை இந்த நான்கு வருஷ தாம்பத்திய வாழ்வு எனக்கு நன்றாக உணர்த்திவிட்டது.

என் அருமை அக்கா! உங்கள் பொன்னான மொழிகளை அன்று நான் உதாசீனம் செய்தேன். அதனால் தாங்கள் மனம் மிகவும் நொந்து பேசினீர்கள். பெரியவர்கள் மனத்தைப் புண்படப் பேசிய பயனை நான் அனுபவிக்காமல் போகவில்லை. பணம் இல்லாததனால் இந்த நாலு வருஷமும் நான் அனுபவித்த கஷ்டங்களை எழுதினாலோ, சொன்னாலோ போதாது. வயிறாரச் சாப்பிட உணவும், உடுத்த உடையும் இல்லாது நானும் குழந்தைகளும் எவ்வளவோ கஷ்டப்பட்டோம். எவ்வளவோ முறை என் தரித்திரத்தை எடுத்துச் சொல்லி, உங்களிடம் உதவி பெற என் மனம் விரும்பியது. ஆனால், வெட்கமானது இடையே குறுக்கிட்டு ஒவ்வொரு முறையும் என்னைத் தடுத்துவிட்டது.

மரணப் படுக்கையில் இருக்கும் என்னை மனமார மன்னித்து விடுங்கள். அக்கா! என்னைப் பிரிந்த பின்பு என் மூன்று குழந்தைகளும் அனாதையாகிவிடுவார்கள் என்பதை அறிவேன். எப்பொழுதாவது ஒரு சமயம் அவர்களில் யாரேனும் ஒரு குழந்தை தங்களிடம் உதவியை நாடி வந்தால், என் பொருட்டு, மறுக்காமல் உதவி செய்து ஆதரிக்க வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
பங்கஜம்

6

அன்று மாலை வகுப்பிற்குள் நுழைந்ததும், தனது ஆசனத்தில் சென்று அமர்ந்து கொண்டாள் ஆசிரியை. அவள் அந்தப் பள்ளிக்கு வந்து வேலைக்கு அமர்ந்து ஒரு வாரகாலந்தான் சென்றிருந்தது. பாடம் துவங்குமுன் வகுப்பை ஒரு தடவை நாலா பக்கமும் கூர்ந்து ஆராய்ந்தாள். மூன்றாவது வரிசையில் சுவரின் ஓரமாக உட்கார்ந்திருந்த ஏழு வயதுச் சிறுமி மீது அவளது பார்வை முடிவில் லயித்தது.

வயதிற்குத் தகுந்த வளர்ச்சியற்றவளாக மிகவும் மெலிந்து காணப்பட்டாள் அந்தச் சிறுமி. எண்ணெய் கண்டு பல மாதங்கள் சென்று விட்டனபோல் அவளது கூந்தல் புரண்டு பறந்து, நெற்றிமீதும், கழுத்தின் இரு புறமும் தொங்கிக் கொண்டிருந்தது. நிறம் இன்னதென்று ஊகிக்க முடியாத அளவு அழுக்கேறியிருந்த சட்டை, நெஞ்சை முழுவதும் மூடாது திறந்தபடி அவளது உடலை அலங்கரித்துக் கொண்டிருந்தது. முழங்கால்வரை மட்டுமே நீண்டு தொங்கிக் கொண்டிருந்த பாவாடை ஓரமெல்லாம் கிழிந்து, நைந்து உருக்குலைந்து போயிருந்தது!

கடுமையாக ஆசிரியை தன்னை உறுத்து நோக்குவதை அந்தச் சிறுமி உணர்ந்து கொண்டுவிட்டாள். பயத்தினால் அவளது மெல்லிய இதழ்கள் துடித்தன. மருட்சி பொங்கிய தன் விழிகளைக் கீழே தாழ்த்திக் கொண்டாள். உள்ளத்திலே குமுறிய திகிலை அடக்க முயற்சித்த அவள், தன் சிறுகரங்களால் பாவாடையின் ஓரத்தைப் பிடித்து வேகமாக முறுக்கத் துவங்கினாள். ஆசிரியை மீண்டும் அவளை நோக்கிக் கடுமையாக விழித்தாள்.

''கையைக் கீழே போடு! இதென்ன குரங்குச் சேஷ்டை!'' என்று கண்டிப்பான குரலில் அதட்டினாள்.

சங்கோஜத்துடன் நாக்கை ஒரு முறை வெளியே நீட்டி உள்ளே இழுத்துக் கொண்டாள் அந்தச் சிறுமி. கைகளைச் சட்டென எடுத்து முகத்தை மூடிக்கொண்டு தலையை இன்னும் கீழே கவிழ்த்துக் கொண்டாள்.

''உஸ்! உன்னைத்தானே! உன் பெயர் என்ன?'' என்று ஆசிரியை மறுபடியும் அதட்டினாள்.

''அருணா!'' என்று கூறிமுடிப்பதற்குள் அந்தச் சிறுமியின் இருதயம் இரண்டாக வெடித்து விடும் போல் பயத்தினால் அடித்துக் கொண்டது.

''உன்னைத்தானே, அருணா! முகத்தின் மீது கையென்ன. போன தடவை நான் சொன்னது ஞாபகத்தில் இல்லை? ஏறு பெஞ்சிமீது!'' என்று கடுமையாக உத்தரவிட்டாள் ஆசிரியை. ஆசனத்தை விட்டுத் துள்ளி எழுந்துநின்ற சிறுமி, வெட்கத்துடன் சிறிது நேரம் தயங்கினாள். 'ம்!' என்று ஆசிரியையிடமிருந்து எழுந்த கர்ஜனையைக் கேட்டதும், மறு பேச்சின்றி பெஞ்சி மீது ஏறி நின்றாள்.

உயரமான அந்த நிலையிலிருந்து கீழே காணப்பட்ட தனது வகுப்புத் தோழிகளைப் பார்க்கவும் அவளுக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. அவ்வளவு பெண்களும் தன்னைக் கண்டு தங்களுக்குள்ளே பரிகாசமாகச் சிரித்து மகிழ்வது போல் ஒரு பிரமை அவளுக்கு ஏற்பட்டது. துக்கம் நெஞ்சையடைக்க, கண்களிலே லேசாக நீர் துளிர்க்க, தலையைக் கவிழ்த்துக் கொண்டு அவள் நின்றாள்.

பிற்பகல் வகுப்புகள் நடந்தேறின. முடிவில் பள்ளிக்கூடம் விடுவதற்கு அறிகுறியாக மணியும் அடித்து ஓய்ந்தது. கூட்டினின்று விடுதலையடைந்த குருவிகளைப்போல், புஸ்தகப் பையைத் தூக்கித் தோள் மீது போட்டுக் கொண்டு வெளியே ஓட, குழந்தைகள் யாவரும் துடித்துக் கொண்டு எழுந்து நின்றனர்! பிரார்த்தனை கீதம் முடிந்ததும், குபீரெனப் பாய்ந்து வெளியே தடதடவென ஓடினார்கள் அந்தச் சிறுமிகள் அனைவரும்.

ஜன்னல் வழியே, வெளியே பார்த்தாள் அருணா. அவள் சகோதரி இந்திராணி, தன் வகுப்பு மாணவி ஒருத்தியின் தோள் மீது கையைப் போட்டு அணைத்தபடி, சிரித்துப் பேசிக்கொண்டு வீட்டை நோக்கிப்

போய்க்கொண்டிருந்தாள். விர் என்று பாய்ந்து பின்னால் ஓடி அவளை அடைந்து விட வேண்டுமென்று அருணாவின் கால்கள் துடித்தன. கடைக்கண்ணால், மேஜையருகே நின்று கொண்டிருந்த உபாத்தியாயினியைப் பார்த்தாள். ''ஓமே இறங்கு! நீ வீட்டிற்குப் போகலாம்'' என்று அவளிடமிருந்து இன்னும் உத்தரவு பிறக்கவில்லையே?

அருணா மற்றப் பெண்களைப்போல் எவ்வாறு உடனே வீட்டிற்குப் போக முடியும்? மாணவிகள் எழுப்பிய கூச்சலும் சப்தமும் குறைந்து கொண்டு வந்தன. பள்ளிக் கூடத்தின் மதில் சுவரைத் தாண்டி, சாலையை சமீபித்து விட்டார்கள் ஏனையோர்கள் என்பதை உணர்ந்து கொண்ட அருணாவுக்கு வாய்விட்டு அழ வேண்டும் போலிருந்தது. துக்கம் நெஞ்சை பலமாக அழுத்த, கண்களில் நீர் மல்க, அவள் உபாத்தியாயினியை நோக்கிப் பரிதாபமாக விழித்தாள்.

''ம்! இப்பொழுதுதான் உனக்கு ஞாபகம் இருக்கும். சரி, பெஞ்சியை விட்டு இறங்கி, இப்படி வா!'' என்று அதட்டிய உபாத்தியாயினி, நாற்காலியில் சாய்ந்து கொண்டாள். மழையில் நனைந்துபோன பூனைக்குட்டியைப் போல் உடலைக் குறுக்கி வளைத்துக் கொண்டு பயத்துடன் எதிரே வந்து நின்றாள் அருணா.

''தினமும் நான் வகுப்பில் சொல்வதைக் கவனித்துக் கொண்டுதானே வருகிறாய்? எல்லாப் பெண்களும் சுத்தமாகத் தலையை வாரி, உடை உடுத்தி வரவேண்டும் என்று எவ்வளவு முறைகள் சொல்கிறேன்? ஏன் அது உனக்கு ஞாபகத்தில் இருக்கவில்லை. நீ தலைவாரி எத்தனை நாட்களாகின்றன?'' என்று கடிந்து கொண்டாள் ஆசிரியை.

''மூன்று நாளாகிறது, டீச்சர்...!'' என்று மென்று விழுங்கினாள் அருணா, பயத்துடன். அதைக் கூறி முடிக்குமுன் அவளது உள்ளங்கைகள் வியர்வையினால் நனைந்து விட்டன.

''மூன்று நாட்களா? ஏன், உன் தாயாருக்குத் தலையை வாரிவிடக்கூடப் பொழுது இல்லையா?'' என்று ஏளனமாகக் கேட்டாள் ஆசிரியை.

அருணா பதில் பேசாது மௌனமாகி விட்டாள். ''உன்னைத்தான் கேட்கிறேன். ஏ பேசா மடந்தை! உன் அம்மாவுக்கு உன்னைக்

கவனிக்க முடியாது அவ்வளவு வேலை இருக்கிறதா என்ன?'' என்று அதட்டினாள் ஆசிரியை, உரத்த குரலில்.

''டீச்சர், எனக்கு அம்மா இல்லை!'' என்று பதில் அளித்த அருணாவின் விழிகளிலிருந்து முத்துக்கள்போல் கண்ணீர்த் திவலைகள் திரண்டு கன்னங்களில் உருண்டோடின.

அதைக் கேட்டதும் உபாத்தியாயினி திடுக்கிட்டுப் போனாள். அதுவரை அவளிடம் குடிகொண்டிருந்த கண்டிப்பான பாவனை கணப் பொழுதிலே மறைந்தோடி விட்டது. ''அருணா, முதலிலே இதை ஏன் நீ சொல்லவில்லை? உன் அம்மா இறந்து போய் எவ்வளவு காலமாகிறது?'' என்று வினவினாள்.

கிழிந்த பாவாடையினால் தனது கண்களைத் துடைத்துக் கொண்டாள் அந்தச் சிறுமி. அம்மா என்ற சொல்லானது அவளது உள்ளத்திலே புதைந்து கிடந்த ஏக்கத்தைக் குமுறியெழச் செய்துவிடவே, ''எங்க அம்மா நான் பிறந்ததுமே செத்துப் போயிட்டாங்களாம்'' என்று கூறிவிட்டு, தன் துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறினாள்.

அருணாவின் முதுகை மெல்லத் தடவிக் கொடுத்த ஆசிரியை, 'வருத்தப்படாதே, அருணா! உனக்கு அம்மா இல்லையென்பது எனக்கு இப்பொழுதுதான் தெரியும். வீட்டிலே உன்னை கவனிக்க வேறு யாருமே இல்லையா?'' என்றாள்.

''எங்க பாட்டி இருக்காங்க, ஆனா அவங்களுக்கு வேலை அதிகம். மாடுகளைக் கவனிக்கவும், சோறு சமைக்கவுமே நேரம் இல்லை. அதனாலே அவங்க எங்களுக்கு மூணு நாளைக்கு ஒரு தரம்தான் தலையைச் சீவிவிடுவாங்க'' என்று திக்கினாள் அந்தச் சிறுமி, பதிலுக்கு.

உபாத்தியாயினி சிறிது நேரம் ஏதும் பேசவில்லை. அருணாவின் தோற்றத்தை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டு வாளா இருந்தாள். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவள் போல் ''நானும் ஒரு வாரமாகப் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன். இந்த ஒரே ஆடையைத் தினமும் போட்டுக் கொண்டு வருகிறாயே? கிழிந்து மிகவும் அழுக்காகி இருக்கிற இதைப் போட்டுக் கொள்ள உனக்கு

அருவருப்பாக இல்லையா? வேறு உடையாவது உடுத்திக் கொண்டு வரலாம் அல்லவா'' என்று கனிவாகக் கேட்டாள் ஆசிரியை.

''எனக்கு இந்த ஒரு பாவாடையும் சட்டையுந்தான் இருக்கிறது டீச்சர்! வேறு இல்லை'' என்று பளிச்சென்று பதிலளித்தாள் அந்தச் சிறிய மாணவி.

ஏழ்மையும் இல்லாமையும் கிராமப் பள்ளிக்கூடத்தின் உபாத்தியாயினியான அவளுக்குப் புதியவை அல்ல. எனினும், அந்தக் குழந்தையின் பதில் அவள் மனத்தை மிகவும் கலக்கியது ''உன் தந்தை என்ன வேலை செய்கிறார்?'' என்று வினவினாள்.

''எங்க வீட்டிலே நாலு மாடுகள் இருக்கு டீச்சர். எங்கப்பாவுக்கு பால் விக்கிற வேலை'' என்றாள் மாணவி.

''பால்காரர் மகளா நீ! அப்படி இருந்தும் உன் உடல் இவ்வளவு மெலிந்து இருக்கிறதே. நீ தினசரி பால் சாப்பிடுவது உண்டா?'' என்று ஆசிரியை மிகவும் கருத்துடன் கேட்டாள்.

இல்லை என்பதற்கு அடையாளமாக அந்தச் சிறுமி தலையைப் [illegible]மாக அசைத்தாள். ''நாங்கள் ஒருவரும் பால் சாப்பிட மாட்டோம். அப்பா மிகவும் கோபிப்பார்'' என்றாள்.

''வேடிக்கைதான், போ'' என்று ஆசிரியை முணுமுணுப்பதைக் கண்டு அருணா தன் கண்களை அகல விரித்து. ''நாங்கள் எல்லாப் பாலையும் குடித்து விட்டால் பிறகு அப்பா எதைக்கொண்டு போய் கடையில் விற்பார்? ஏழைகளுக்கு ஒரு வேளை சாப்பாடு தினமும் கிடைச்சா போதும். பால் வேண்டாம்னு அப்பா சொல்கிறார்'' என்றாள் ஆச்சர்யம் ததும்பிய மெல்லிய குரலில்.

அந்த வார்த்தைகளில் பிரதிபலித்த உண்மை ஆசிரியை மனத்தை வேதனை செய்தது. ''நாங்கள் என்றாயே அருணா, வீட்டில் நீயும் இன்னும் யாரும் இருக்கிறீர்கள்?'' என்று கேட்டுவிட்டு வெளியே செல்ல எழுந்தாள்.

''அண்ணன் ஆனந்தன், அக்கா இந்திராணி, நான், பாட்டி, அப்பா இத்தனைபேரும் வீட்டில் இருக்கிறோம் டீச்சர்! ஆனந்தன் பையன்கள் பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது படிக்கிறான். இந்திராணி இந்தப் பள்ளிக்கூடத்திலே நான்காவது படிக்கிறாள்'' என்று பெருமையுடன் கூறிக்கொண்டாள்.

இவ்வளவு நேரம் சகஜமாகப் பேசியதில் அவளுக்கு ஆரம்பத்தில் ஏற்பட்டிருந்த பயம் தெளிந்து விட்டிருந்தது. சற்றுமுன் திகிலைக் கொடுத்த அந்த உபாத்தியாயனியை அவளுக்கு இப்போது மிகவும் பிடித்து விட்டிருந்தது. அவளுடன் நீண்ட நேரம் தன்னைப் பற்றியும் தன் அம்மாவைப் பற்றியும் பேச அவளது இளம் உள்ளம் வெகுவாக ஆசை கொண்டது. பள்ளிக்கூடத்து வேலைக்காரன் அறையின் ஜன்னல் கதவுகளைத் தாளிடத் தொடங்கினான்.

நேரமாகிவிட்டதை உணர்ந்த ஆசிரியை மேஜையினின்று சில நோட்டுப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு அறையினின்று வெளியே வந்தாள். அவளைப் பின் தொடர்ந்து, வேலைக்காரனும் அருணாவும் வெளியே வந்தார்கள். அறையின் கதவைப் பெரிய பூட்டினால் பூட்டி சாவியை இடையில் செருகிக் கொண்டாள் ஆசிரியை. வேலைக்காரன் பணிவுடன் நீட்டிய குடையை வாங்கி, பிரித்துத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குச் செல்லப் படிகளில் இறங்கினாள்.

''டீச்சர்!'' என்று மெல்லிய குரல் கேட்டு அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள். ''அந்த நோட்டுப் புத்தகங்ளை நான் தூக்கிட்டு வரேன் டீச்சர்!'' என்று கேட்டாள் சங்கோஜத்துடன் அருணா. ஆசிரியை முகத்திலே லேசானதொரு புன்முறுவல் பூத்தது. ''எடுத்துக் கொண்டு வா'' என்று சிரித்தபடி கூறிவிட்டு, புத்தகச் சுமையை மாணவியிடம் நீட்டினாள்.

பக்தி சிரத்தையுடன் ஸ்ரீராமபிரானது பாதுகைகளைத் தன் சிரமேற் தாங்கியவனாகச் சென்ற பரதன் போன்று மிகவும் பக்தியுடன் அப்புத்தகங்களைத் தன் சிறு தலை மீது வைத்துக் கொண்டு, இரு கைகளாலும் தாங்கியபடி ஆசிரியை பின்னால் அருணா மெல்ல நடந்து சென்றாள். குடையைப் பிடித்துக் கொண்டு வெள்ளைப் புடைவையின் தலைப்பு காற்றில் பறக்க , சரக் சரக்கென்று செருப்பு ஒலிக்க ஆசிரியை முன்னால் நடந்து சென்று கொண்டிருந்தாள். அந்தக் காட்சியை பிரமிப்புடன் ப்ார்த்த வண்ணம் பின்னால் குதித்தோடி நடந்து சென்று கொண்டிருந்த அருணாவின் மனம் ஆனந்தத்திலே, பூரித்துக் கொண்டிருந்தது. இந்தச் சிறு பணிவிடையால் தன் வகுப்பு

ஆசிரியையின் மட்டற்ற அன்பைத்தான் பெற்றுக் கொண்டு விட்டதை எண்ணிப் பெருமிதமடைந்த அவள் தன் வீட்டையும் தன் தந்தையையும் அறவே மறந்து போனாள்.

வீட்டை அடைந்ததும், ஆசிரியை உள்ளே சென்று முற்றத்தில் இருந்த செம்பு நீரால் தன் கைகால்களைக் கழுவிக் கொண்டாள். புத்தகச் சுமையை கீழே இறக்கி வைத்துவிட்டு விழித்துக்கொண்டு நின்ற அருணாவை அவள் அழைத்தாள். ''கைகால்களைக் கழுவிக் கொண்டு உள்ளே வா' என்று அவள் கூறியதைக் கேட்டதும் அருணா தன் புத்தக மூட்டையைத் தோளிலிருந்து இறக்கி, தரை மீது வைத்துவிட்டு அவ்வாறே செய்தாள்.

தாழ்வாரத்துத் தரையை நன்றாகப் பெருக்கி சுத்தமாக்கிவிட்டு வேலைக்காரப் பெண், இரண்டு இலைகளை விரித்தாள். ஆசிரியையின் அருகே உட்கார்ந்து கொண்டு அந்தப் பெண் சுடச்சுட இலையில் பரிமாறிய வெண்பொங்கலை எடுத்து வாயில் போட்டுக் கொண்ட அருணாவுக்கு 'இது பூவுலகந்தானா?'' என்று ஆச்சர்யமாக இருந்தது.

''நீ பகலில் என்ன சாப்பிட்டாய்?'' என்று வினவிய ஆசிரியை, மாணவியை அன்புடன் உற்றுப் பார்த்தாள்.

''பகலிலே நாங்கள் ஒன்றும் சாப்பிட மாட்டோம். காலையிலே எழுந்ததும் பல் விளக்கிவிட்டு பழைய சோறு சாப்பிடுவோம். மறுபடி ராத்திரிதான் சாப்பிடுவோம்'' என்று பதிலளித்த அந்த சிறுமி, பொங்கலை எடுத்து வாய் நிறையத் திணித்துக் கொண்டாள்.

''இடையே பகலில் உங்களுக்குப் பசிக்காதா?'' என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள் உபாத்தியாயினி அம்மாள்.

''பசிக்கும், டீச்சர். ஆனந்தன் தினமும் வேர்கடலை உருண்டை வாங்கிச் சாப்பிட்டுவிடுவான். இந்திராணி, தன் கூடபடிக்கிற லக்ஷ்மியோட சாப்பாட்டைப் பாதி வாங்கிச் சாப்பிட்டு விடுவா. எனக்கு அதிகம் பசிச்சா, பள்ளிக் கூடத்துக் கிணற்றுத் தண்ணீரை இழுத்து வயிறு நிறையக் குடிச்சு விடுவேன்'' என்று அருணா விளக்கினாள்.

தன் கண்களிலே கசிந்த நீரை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள் உபாத்தியாயினி அம்மாள். ''அருணாவைப் போல் எவ்வளவு குழந்தைகள், ஒரு வேளை சாப்பிட உணவுகூட இல்லாது பட்டினியாக இருக்கிறார்களோ?'' எனத் தனக்குள்ளே எண்ணிய அவள், மனம் கலங்கினாள். ஆனால் அவளைப்போன்ற ஒரு எளிய ஆசிரியையால் நிவர்த்திக்க கூடிய பிரச்சினை அல்ல அது. ஆகவே, அவள் தன் மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''அருணா! இந்தக் காப்பியையும் சாப்பிட்டுவிட்டு பிறகு எழுந்திரு'' என்றாள்.

வேலைக்காரப் பெண் விளக்கை எடுத்து வந்து மேஜையின் மீது வைத்தாள். உபாத்தியாயினி அம்மாள் மாடத்திலிருந்த ஒரு சீப்பை எடுத்துக்கொண்டு, அருணாவிடம் நெருங்கினாள். ''இப்படி தலையைப் பரட்டையாக வைத்துக் கொள்வது தவறு. நிதமும் நீயாவது வாரிக் கொள்ளவேண்டும். தெரிந்ததா? பாவாடை ஓரமெல்லாம் கிழிந்து தொங்கவிட்டிருக்கிறாயே, அதை தைத்துக் கட்டிக் கொண்டால் இன்னும் சில தினங்களுக்கு வருமல்லவா? தினசரி, பாவாடையையும் சட்டையையும் தோய்த்துக் காயவைத்து சுத்தமாக உடுத்திக் கொள். வம்பு பேசாது பாடத்தை ஒழுங்காகப் படித்துப் புத்திசாலியாக இருக்க வேண்டும்'' என்று பலவாறு உபதேசம் செய்த வண்ணம், அவளது கூந்தலை எண்ணெய் தடவி வாரி, இரட்டையாகப் பின்னலிட்டு விட்டாள்.

எதிரே இருந்த கண்ணாடியில், கடைக் கண்ணால் தன்னை ஒரு முறை கவனித்துக் கொண்டாள் அருணா. தோள்மீது இரு பக்கமும் வந்து தொங்கிய தன் ஜடைகளைப் பார்த்த அவளுக்கு மிகவும் பெருமையாக இருந்தது. தங்கள் வீட்டுப் பசுங்கன்றின் கழுத்தைத் தடவி விளையாடுவதுபோல் தன் இரு ஜடைகளையும் அன்புடன் தடவிக் கொண்டு மகிழ்ச்சியுடன் நின்றாள் அவள்.

சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் டாண் டாண் என்று எட்டு அடிப்பதைக் கேட்டதும் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. பரபரப்பாகப் புத்தக மூட்டையைத் தோளில் தூக்கிப்போட்டுக் கொண்டு, ''டீச்சர்! எங்கப்பா தேடுவாங்க'' என்று கூறிவிட்டு, பதிலைக்கூட எதிர்பாராது ஒரே துள்ளலில் வாயிற் பக்கம் ஓடினாள்.

தெரு மூலையில் மினுக்கிட்டுக் கொண்டு எரிந்து கொண்டிருந்தது கிராமப் பஞ்சாயத்து மண் எண்ணெய் விளக்கு. அதனின்று எழுந்த வெளிச்சம் தெருக்கோடிவரை வியாபித்து நின்ற அந்தகாரத்தைப் போக்க இயலவில்லை. பாதை நடுவே இருட்டிலே படுத்துக் கிடந்த நாய் ஒன்றின் காலை அவசரத்தில் மிதித்து விட்டாள் அருணா. வேதனையும், சினமும் தாளாது 'லொள் லொள்' என்று உறுமிய நாயின் குரைப்பு தெருவின் நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு பயங்கரமாக எழுந்தது.

இருட்டும் முன்பே உணவருந்திப் படுக்கைக்குச் சென்று விட்டதனால் பெரும்பாலானவர்கள் வீட்டுக் கதவுகள் தாளிடப்பட்டிருந்தன. இருளும், தனிமை மூர்க்க நாயின் குரைப்பும் அருணாவிற்குப் பயத்தை உண்டாக்கின. வீட்டை நோக்கி மூச்சுத் தெறிக்க அவள் ஓடினாள். திறந்து கிடந்த கதவு வழியே ரேழியை அடைந்தாள். தரை மீது கிடந்த பாதரக்ஷைகளைக் கண்டதுமே அவளுக்கு திக்கென்று இருந்தது. ஓடி வந்த களைப்பைச் சமாளித்துக் கொள்ள சில வினாடிகள் அவள் ரேழியிலேயே நின்று கொண்டிருந்தாள். கூடத்திலிருந்து ஆனந்தன் படிக்கும் குரல் கேட்டது. 'அறம்செய விரும்பு, ஆறுவது சினம்' என்று ராகம் போட்டுக்கொண்டு உரத்த குரலில் அவன் வாசித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு எதிர்ப்புறமாக இந்திராணி தலையைக் கவிழ்த்துக்கொண்டு ஒரு புத்தகத்தைப் படிக்கும் பாவனையில் உட்கார்ந்திருந்தாள். அவள் உண்மையிலேயே புத்தகத்தைப் படிக்கவில்லை.

முற்றத்துக் கயிற்றுக் கட்டிலின் மீது உட்கார்ந்திருக்கும் அப்பாவிற்காக, அவ்வாறு பாவனை செய்கிறாள் என்ற ரகசியம் அருணாவுக்கு நன்கு தெரியும். முற்றத்திலிருந்து சதாசிவத்தின் கனைப்பு எழுந்தது. அருணாவின் உடல் பயத்திலேயே சில்லிட்டுப் போய்விட்டது. நெஞ்சு பதை பதைக்க, உடல் நடுங்க, சப்தமிடாது, மெல்ல அவள் கூடத்திற்கு வந்தாள். முற்றத்திலே படிந்த சிறு நிழலைக் கண்ணுற்ற சதாசிவம் புலிபோல் பாய்ந்து எழுந்திருந்தான். தாழ்வாரத்தில் கிடந்த புளிய விறகுக் குச்சிகளில் மெல்லியதான ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு தந்தை தன் பக்கம் திரும்புவதை

அருணா கண்டாள். அவளது இருதயம் நின்று விடும்போல வேகமாக அடித்துக் கொண்டது.

''இருட்டி எட்டு ஜாமமாகுது. இப்பத்தான் வீட்டு நினைவு வந்துச்சா... பள்ளிக்கூடம் விட்டதும் நேரே வீடு வராம, ஒரு பெண் குழந்தை இந்த வயதிலே ஊரைச் சுத்த ஆரம்பிச்சா, நான் என்ன கதியாகிறது?'' என்று கர்ஜித்த அவன், பற்களை நறநறவென்று கடித்தான். ஆனந்தன் அதைக் கேளாதவன்போல் இன்னும் உரத்த குரலில் தன் பாடத்தை வாசித்தான். இந்திராணி புத்தகத்தினால் தன் முகத்தை நன்றாக மூடிக்கொண்டுவிட்டாள். அருணாவின் மெல்லிய முதுகின் மீது சுளீர் சுளீர் என வேகமாகவும் ஆக்ரோஷமாகவும் அடிகள் ஒன்றன்பின் ஒன்றாக விழுந்தன.

''இல்லையப்பா! நான் வந்து...'' என்று பேசி முடிக்க முடியாது கிரீச்சிட்டு அலறினாள் அருணா.

''இல்லையாவது, ஒண்ணாவது! இன்னிக்கு உனக்குச் சோறு கிடையாது. ஒரு ராத்திரி பட்டினி போட்டால்தான் புத்திவரும்'' என்று கர்ஜித்த சதாசிவம், காலை நீட்டி எட்டி உதைத்தான். சிறு பந்தைப்போல் உருண்டு முற்றத்தில் விழுந்த அருணா விம்மிக்கொண்டு எழுந்து நின்றாள்.

''ஆறுவது சினம்'' என்று இரைந்து வாசித்த ஆனந்தனின் குரல் கம்மியது. கண்களில் பொங்கி, எழுத்தை மறைத்த நீரை இரகசியமாகத் துடைத்துக் கொண்டு அவன் ''அறஞ்செய விரும்பு'' என்று மீண்டும் இரைந்து படிக்கத் துவங்கினான்.

7

காரின் கதவைத் திறந்துவிட்டு, டிரைவர் பயபக்தியுடன் ஒரு சலாம் போட்டு நின்றான். ''நீங்க சும்மா வாங்க, உங்களை வீட்டிலே கொண்டு விட்ட பின்னாடி நான் போனால் போதும்'' என்று அழைத்தாள் லோகநாயகி அம்மாள்.

புடவைத் தலைப்பை இழுத்து மூடிக்கொண்டு ஜெகதா உடலை

சங்கோஜத்துடன் மூடிக்கொண்டாள். தன்னைவிட மீறிய அந்தஸ்து உடையவர்களிடம் சம்பாஷிக்க நேரிட்டால் அவளுக்கு எப்போதுமே வெட்கம் வந்துவிடும். ''என்னத்துக்கு உங்களுக்கு வீண் சிரமம்?'' என்று நாத்தடுமாற பதிலுக்குத் திணறினாள்.

''இதெல்லாம் ஒரு சிரமமா?'' என்று கேட்டுவிட்டு லேசாக நகை புரிந்த லோகநாயகியம்மாள், பரிவுடன் அவள் கையைப் பற்றி இழுத்தாள் உரிமையாக.

ஜெகதாவின் உடல் மகிழ்ச்சியினால் சிலிர்த்தது. நகரத்திலே மிகவும் பிரபலமாக விளங்கிய 'குருவி மார்க்' வாசனைப் பாக்குத்தூள் வியாபாரி பழனியப்பக் கவுண்டரின் மனைவியின் சிநேகிதம் கிட்டுவதென்றால் சாதாரண சம்பவமா என்ன?

வண்டியினுள் ஏறி உட்கார்ந்ததும் ஜெகதாவின் நெஞ்சு உணர்ச்சி வேகத்தில் படபடத்தது. முகத்தில் அரும்பிய வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்து விட்டுக் கொண்டாள். ''மகேஸ்வரி காலனி பக்கம் வண்டியைத் திருப்பு'' என்று உத்தரவிட்ட லோகநாயகி, காரின் ஆசனத்தில் ஏறிச் சாய்ந்து கொண்டாள். என்ன பேசுவதென்று விளங்காமல், ''இந்த பிளாஸ்டிக் விரிப்பு என்ன விலைக்கு உங்களுக்குக் கிடைத்தது? இப்பொழுதெல்லாம் இது ரொம்ப மலிஞ்சு கிடக்கே!'' என்று ஜெகதா சம்பந்தமற்ற ஒரு சம்பாஷணையைத் துவங்கினாள். லோகநாயகி பதிலுக்குச் சிறிது அசட்டையாகச் சூள் கொட்டினாள்.

''எனக்கு ஞாபகமில்லை. புதுக் காரின் ஸீட்டு சீக்கிரம் அழுக்காகிவிடும் என்று டிரைவர் போய் இதை வாங்கி வந்தான்'' என்றாள் அவள்.

''ஓகோ! இது புதுக் காரா?'' என்று இழுத்தாற்போல் அதிசயத்துடன் வினவினாள் ஜெகதா.

''ஆமாங்க! வீட்டிலே நாலு கார்கள் இருக்கிறதுன்னு பேர். எல்லாத்துக்கும் வேலை சரியா இருக்கு. இவர் சொந்த உபயோகத்திற்கு ஒரு கார் போய்விடுகிறது. குழந்தைகள் பள்ளிக்கூடம் போய்வர ஒரு காருக்கு வேலை சரியாக இருக்கிறது. மத்த இரண்டுக்கும் ஆபீஸ் காரியங்களுக்கே நேரம் பத்தவில்லை.

இடையிலே நான் மீட்டிங், கீட்டிங்குக்குப் புறப்படணும்னா, சமயத்துக்கு எனக்கு வண்டி கிடைக்கிறதில்லை. போனவாட்டி நம்ப கிளப் மீட்டிங்குக்கு நான் பஸ்ஸிலே வந்தேன். வீட்டுக்குப் போனதும் அன்னிக்கு நான் அவர் கிட்ட 'எனக்குத் தனியா ஒரு கார் வாங்கிப் போட்டுடுங்க. பஸ்ஸிற்கு நிற்க நம்மால் ஆகாது'ன்னு கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன். மறுநாள் காலையிலேயே இதைக்கொண்டுவந்து வாசலில் நிறுத்திவிட்டார்'' என்றாள். தன் கணவரிடம் தனக்குள்ள செல்வாக்கைக் குறிப்பாகப் பெருமையுடன் இவ்வாறு வெளியிட்டு முடித்து அவள், இடது கரத்தினால் தன் கூந்தலை நாசூக்காகத் தடவிக்கொண்டாள்.

அவளது மோதிர விரலில் பளிச்சிட்டு மின்னிய வைர மோதிரத்தின் வேலைப்பாட்டை மிகவும் அதிசயமாகக் கவனித்துக் கொண்டிருந்த ஜெகதா, ''அப்படியா!'' என்று கேட்டுவிட்டு, தன் மேல் பற்களில் முன் வரிசையில் இரு பக்கமும் அலங்காரமாக சமீபத்தில் அவள் கட்டிக்கொண்டிருந்த தங்கப் பற்கள் தெரியும்படி சிரித்தாள்.

பல் வலியினால் சில காலமாக அவள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். மேல்வரிசையில் இருந்த இரண்டு சொத்தைப் பற்களையும் பிடுங்கிவிட்டு செயற்கை பற்களை வைத்துக் கட்டிக்கொண்டால் நோயும் தீரும், பற்களின் அழகும் கெடாது என்று ஒரு பல் வைத்தியர் ஆலோசனை கூறினார். ஜெகதாவிற்கு அவர் யோசனை சிறிதும் பிடிக்கவில்லை. சொத்தைப் பற்கள் என்றாலும் சொந்தப்பற்கள் அல்லவா? அவைகளை விட அவளுக்கு மனம் இல்லை.

அடுத்த வீட்டு அம்மாளின் ஆலோசனைப்படி அவள் கடைத் தெருவிலிருந்த சீன தேசத்துப் பல்கட்டும் தொழிலாளியிடம் தன் பற்களுக்குச் சிகிச்சை செய்து கொண்டாள். அவள் இஷ்டப்படியே சொத்தைப் பற்களை அப்படியே வைத்து, நோயின் சின்னம் தெரியாதிருக்க, தங்கத் தகட்டினால் பற்களை நன்றாக மூடிச் சரிப்படுத்தி விட்டார் அவர். அதன் விளைவாக தங்கத் தகட்டிற்குள் ஒளிந்து கொண்டிருக்கும் சொத்தைப்பற்கள், அடிக்கடி வேதனை கொடுத்துத் தொந்தரவு செய்து கொண்டுதான் இருந்தன. இருந்தாலும், ஜெகதா நோவை அவ்வளவாகப் பொருட்

படுத்தவில்லை. அவனது புன்னகையைப் பொன்னகையாக்கிக் கொண்டிருந்த அந்தத் தங்கப்பற்களை அவள் பெரிதும் நேசித்தாள். சிரிக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்ட பொழுதெல்லாம் அவை நன்கு தெரிய வாயைத் திறந்து அவள் சிரிக்கத் தவறுவதே இல்லை.

'மகேஸ்வரி காலனி' தெருவிற்குள்ளே வண்டி நுழைந்ததும், இடது வரிசையிலிருந்த சிறு பங்களா ஒன்றைச் சுட்டிக்காட்டி, ''இதுதான் என் வீடு. இங்கே நிறுத்தச் சொல்லுங்க'' என்று பரபரப்பாகத் தெரிவித்தாள் ஜெகதா. சில மாதங்களுக்கு முன்புதான் அவள் மகேஸ்வரி காலனியில் புதிதாகக் கட்டப்பட்டிருந்த அந்தச் சிறிய பங்களாவை விலைக்கு வாங்கியிருந்தாள்.

முன்பு நகரத்திலே சொந்தமாக் இருந்த சிறிய வீடாக இருந்திருந்தால், ஜெகதாவிற்கு லோகநாயகியம்மாளை உள்ளே அழைக்கக்கூட தயக்கமாக இருந்திருக்கும். பணக்காரர்கள் வசித்த மகேஸ்வரி காலனியில் அவளும் தற்சமயம் அங்குள்ள எல்லோருக்கும் சமமாக அழகியதொரு சிறிய பங்களாவில் வசித்துக் கொண்டிருந்தாள். அதனால் மிகவும் துணிவுடன், ''நீங்க இப்படியே வாசலோடு வந்துவிட்டுப் போகக்கூடாது. உள்ளே வந்து சித்த நேரம் இருந்துட்டுத் தான் போகணும்'' என்று வற்புறுத்தலாகச் சொன்னாள்.

சாப்பாடு, தூக்கம், மாதர் சங்க அலுவல்கள் என்றவைகளுக்குப் போக லோகநாயகியம்மாளுக்குப் பொழுது அப்படியே பாரமாக நீண்டு கிடந்தது. பொழுதைக் கழித்துத்தொலைக்க யாருடனாவது சம்பாஷித்துக் கொண்டிருக்க அவள் தயாராக இருந்தாள். மேலும் புதிய சிநேகிதிகள் என்றால் அவளுக்கு மிகவும் பிடித்த விஷயம். சமீபத்திலே அவர்களது மாதர் சங்கத்திலே பஞ்சநிவாரண நிதி ஒன்று சேகரிக்கும் அலுவலில் அவள் ஈடுபட்டிருந்தாள். அது சம்பந்தமாக, அவளுக்கு ஜெகதாவின் பரிச்சயம் ஏற்பட்டிருந்தது. அவளும் தன்னைப் போலவே பொதுஜனத் தொண்டுகளில் மிகவும் ஆர்வம் உடையவளாக இருப்பதை அறிந்து, அவளுடன் தானே வலுவில் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டாள் 'என்ன சௌக்கியமா?' என்று சங்கத்திலே எதேச்சையாகக் கண்ட பொழுது புன்னகை செய்து கைகுவித்து நமஸ்கரிப்பதிலிருந்த அவளது சிநேகிதம், ஜெகதாவின் வீட்டிற்கு விஜயம் செய்யும் வரை வளர்ந்து முற்றிவிட்டிருந்தது.

முதல் முதலாக தன் கிருகத்திற்குப் பெரிய மனிதர் மனைவியான அவளை அழைத்துக் கொண்டு வருவதைப் பற்றி ஜெகதாவிற்குப் பெருமை பொங்கி வழிந்தது. அவளது உள்ளக் கிளர்ச்சி அவளது குரலிலே தொனித்தது. கதவைத் திறந்த வேலைக்காரியிடம், ''போய், பொன்னம்மா கிட்டச் சொல்லி இரண்டு வெள்ளி லோட்டாவிலே காப்பி கலந்து எடுத்துக் கொண்டு சீக்கிரம் வரச்சொல்!''என்றாள்.

''இதெல்லாம் என்னத்துக்கு? நான் காப்பியே சாப்பிடறதில்லைங்களே! கொஞ்சம் ஜில்லுனு தண்ணி கொடுத்தால் போதும்'' என்று மறுத்துக் கூறிய லோகநாயகி, ஹாலுக்குள்ளிருந்த சோபா ஒன்றிலே சாய்ந்து கொண்டாள்.

''காப்பி பிடிக்காட்டி, கொஞ்சம் 'ஓவல்' சாப்பிட்டாப் போச்சு'' என்று மகிழ்ச்சியாக வற்புறுத்திப் பேசிய ஜெகதா பரபரப்புடன், ''வள்ளி! காப்பி வேணாமாம். அதற்குப் பதிலா 'ஓவல்' கலக்கி எடுத்துக் கொண்டு வரச்சொல். அத்தோட மலாம் பழத்தை நறுக்கி, சர்க்கரையோடு கூட எடுத்து வரச் சொல்லு'' என்று உத்தரவிட்டாள். பிறகு மிகவும் பதட்டத்துடன் எழுந்து சென்று, உள்ளே நன்றாகக் காற்று வீசும்படி ஜன்னல் திரைகளை அவசரமாக ஒதுக்கி விட்டாள். மின்சார சுழல் விசிறியைப் போட்டு விட்டு, அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். ''வீடு ரொம்பச் சின்னதுதான். என் ஒருத்திக்கு இது போதாதான்னு வாங்கிவிட்டேன்'' என்று பற்களைக் காட்டினாள் ஜெகதா.

''சிறியதாக இருந்தாலும் ரொம்ப அழகா வச்சிருக்கீங்களே. ஒருத்தருக்கு இது போதாதா?'' , என்று புகழ்ச்சியாகக் கூறிய லோகநாயகி தன் கண்களைச் சுழற்றி ஹால் முழுவதையும் கூர்ந்து பார்வையிட்டாள்.

இந்தச் சிறிய வீட்டைப் பார்த்துவிட்டு அவள் தவறிப் போய்த் தனது செல்வ நிலையைக் குறைவாகக் கணக்கிட்டு கொண்டு விடப் போகிறாள் என்று அஞ்சிய ஜெகதா உடனடியாக, 'டவுனிலே வாடகைக்கு விட்டிருக்கிற நாலு வீடுகளும், அந்தக் காலத்துக் கட்டடங்கள். அரண்மனை போல மாடியும், கீழும் ரொம்பப் பெரிசா இருக்கு. கொஞ்ச நாள் அதுகளில் ஒரு வீட்டிலே குடியிருந்தேன். அவ்வளவு பெரிய வீட்டைப் பெருக்கி சுத்தமா வைக்கக்கவே எனக்கு

பொழுது போதவில்லை. அதை வாடகைக்கு விட்டு விட்டு இதை விலை பேசி வாங்கி இங்கே வந்துட்டேன்'' என்று பெருமையாகத் தன்னைப் பற்றிக் கூறிக்கொண்டாள்.

லோகநாயகியம்மாள் அவள் கூறியதைப் பாதி காதில் வாங்கிக் கொள்ளவேயில்லை. பொன்னம்மாள் வெள்ளித் தட்டிலே கொண்டு வந்து வைத்த வெள்ளி டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டு உதட்டிலே வைத்து நாசுக்காக உறிஞ்சியபடி அவள் தன்னைச் சுற்றிலும் மீண்டும் ஒரு முறை ஆராய்ந்தாள். ''சமையலுக்கு, வீட்டைக் கவனிக்க எல்லாத்துக்கும் உங்களுக்கு ஆள்கள் இருக்கிறாங்க போலிருக்கிறது?'' என்றாள் அவள்.

தன் வீட்டைக் கவனித்துக் கொண்டு சமையல் வேலைகளையும் செய்து வந்த பொன்னம்மாள், தனக்குத் தூர பந்துதான் என்று அது சமயம் உறவு பாராட்டிக் கொள்ள ஜெகதாவிற்கு மனம் இடம் கொடுக்கவில்லை. ''சமையலுக்கு இந்தம்மாளை ஊரிலிருந்து தருவித்தேன். இதுக்கு முன்னாடி இருந்த ஆளுக்கு உடம்பு சுகம் இல்லாது போய் விட்டதிலே வேலையை விட்டு நீக்கி விட்டேன். கொஞ்ச நாள் ஆள் இல்லாம ரொம்பத் திண்டாடிப் போய் விட்டேன்'' என்று கௌரதையாகப் பேசினாள்.

லோகநாயகியம்மாள் வீட்டிற்குக் கிளம்ப எழுந்திருந்தாள். அவளது கண்கள் எதிர்ப்புறத்துச் சுவரிலே மாட்டியிருந்த ஒரு போட்டோவிலே வந்து நிலைத்தன. ''இது யார், இந்தப் பெண்? உங்களுக்கு இவள் என்ன வேணும்?'' என்று மிகவும் ஆவலுடன் வினவினாள். ஜெகதாவின் நெஞ்சு காரணமின்றி படபடவென்று அடித்துக் கொண்டது. ஒரு கணம் அவமானத்தினால் அவள் உடல் குன்றிப் போய்விட்டது. ''என் தங்கை, பங்கஜம். அவள் இறந்து போய் ஏழு வருஷங்களுக்கு மேலாகிறது'' என்று குழறினாள். பங்கஜத்தின் குடும்பத்தைப் பற்றி மேலே அந்த அம்மாள் விசாரித்து விடுவாளோ என்ற அச்சத்திலே அவள் முகத்தில் குப்பென்று வியர்வைத் துளிகள் அரும்பின.

''பார்க்க மிகவும் அழகான பெண்ணாக இருந்திருக்க வேண்டும்!'' என்று கூறிய லோகநாயகி, போட்டோவினின்று

திரும்பி ஜெகதாவை ஏற இறங்க கவனித்தாள்.

கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்ட ஜெகதா, ''என்னைப் போல அவள் கறுப்பாக இருக்க மாட்டாள். நல்ல சிகப்பு நிறம்; ஒடிய உயரம்; சுருண்ட கூந்தல். எங்க வீட்டுக்குள்ளேயே அவள் நல்ல அழகி. அப்பாவும் அவளை நல்ல இடத்தில் தான் கட்டிக் கொடுத்தார். ஆயுசுதான் இல்லை. மூணாவது குழந்தை பிறந்ததும் பிரசவ அறையிலேயே இறந்து போய் விட்டாள்'' என்று சுருக்கமாகக் கூறி முடித்தாள்.

''ஏன், தக்க டாக்டரை வைச்சுக் கவனிக்கவில்லையா?'' என்று ஆச்சரியத்துடன் லோகநாயகி குறுக்குக் கேள்வி கேட்டது அவளுக்கு மனத்தை உறுத்தியது. ''எல்லாம் எவ்வளவோ செய்தார்கள். அவள் கணவன் பெரிய மிராசுதாராயிற்றே? மனைவியை கவனிக்காமலா இருந்திருப்பார்? ஆயுசுக்கு எந்த டாக்டரிடம் தான் மருந்து இருக்கு? பங்கஜத்து மேலே அவர் உயிராயிருந்தார். அதனால்தான் வருஷம் ஏழு ஆகியும் அவர் மறு கல்யாணம் செய்து கொள்ளவேயில்லை'' என்று கூறிவிட்டு, நிராசையாகப் பெருமூச்சுவிட்டாள். இவ்வாறு பொய் சொல்லிக் குடும்ப கௌரவத்தை நிலைநாட்டும்படி தன்னை அவல நிலையில் விட்டு வைத்திருந்த சதாசிவத்தை எண்ணி அவளது உள் மனம் கோபத்தினால் கொந்தளித்தது.

''தாயில்லாத குழந்தைகளாகி விட்டார்களே, பாவம்! உங்ககிட்ட அதுகளைக் கூட்டி வந்து வச்சுக் கொண்டிருக்கலாமே?'' என்று வினவினாள் லோகநாயகி, மிக்க அனுதாபத்துடன்.

''வச்சுக்கலாம், வச்சுக்கலாம்'' என்று தடுமாறிய ஜெகதா தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''அவங்க அப்பாவுக்குக் குழந்தைகளைப் பிரிய மனசே கிடையாதுங்க. எவ்வளவோ வாட்டி, கடிதம் எழுதிப் போட்டேன். குழந்தைகள் வளரும் பருவத்திலே அப்பா அம்மா ஆதரவிலேதான் வளரணும்னு அவருடைய நோக்கம். அடிச்சிப் பேசி நம்ப இஷ்டப்படி காரியத்தை நடத்த நமக்கு இனி அவர்கள் வீட்டிலே என்ன உரிமை இருக்கு? எப்பவாவது எனக்கு அதுகளைப் பார்க்கணும்னு ஆசையிருந்தா, நான் ஒரு தடவை கிராமத்துக்குப் போய் பார்த்துட்டு வருவேன். தாயார் இல்லையென்கிற குறை தவிர அதுகளுக்கு வேறே குறையொண்ணும்

கிடையாது'' என்று துணிச்சலாக ஒரு பெரும் பொய்யைக் கூறினாள்.

இதற்குள் லோகநாயகி பேசிக் கொண்டே வாயில்வரை வந்துவிட்டாள்! அதற்குமேல் சம்பாஷிக்க வேறு விஷயம் ஒன்றும் கிடைக்கவில்லையாதலால் அவள், ''சரி! நான் வரேன். நாளை மறுநாள் கிளப்பிலே சந்திக்கலாம்'' என்று விடை பெற்றுக் கொண்டு சென்று விட்டாள்.

கார் வீதியின் மறுகோடியில் மறையும்வரை வாயிலிலேயே நின்று கொண்டிருந்த ஜெகதா, உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டாள். பங்கஜத்தைப் பற்றிப்பேசியதனால் ஏற்பட்ட நெஞ்சின் படபடப்பு அவளுக்கு வெகு நேரமாகியும் அடங்கவே இல்லை. ''சதாசிவத்தைக் கட்டிக் கொண்டதனால் என்ன சுகத்தைக் கண்டாள்? அவனைப் பத்தி நாலு மனுஷர்கள் நடுவே பேசக்கூட வாய் கூசுதே!'' என்று தனக்குள்ளே எண்ணி ஆத்திரத்தில் குமுறியபடி தலைக்குமேல் இருந்த சுவரில் தொங்கிய தங்கையின் படத்தை நிமிர்ந்து பார்த்தாள். 'ஏழு வருஷங்களாக என் குழந்தைகளை ஒரேயடியாக மறந்து விட்டீர்களே அக்கா?'' என்று குற்றம் சாட்டி பங்கஜம் கேட்பதுபோல் ஒரு பிரமை ஏற்படவே ஜெகதா திடுக்கிட்டாள்.

பங்கஜம் மரணமடைந்த செய்தி அறிந்தும், அக்கா உடனே துக்கம் விசாரிக்க கிராமத்திற்குப் புறப்பட்டு விடவில்லை. சில வருஷங்களுக்கு முன்பு முதல் முதலாகத் தங்கை வீட்டிற்கு சென்றிருந்தபோது சதாசிவம் தன்னை உதாசீனம் செய்து அவமானப்படுத்தியதை அவள் சுலபமாக மறந்துவிடவில்லை. ''தங்கையே போன பின்பு, இனி அந்தக் கயவனுடன் என்ன உறவு வைத்திருக்கிறது?'' என்ற வெறுப்பில் அவள், தனது அனுதாபத்தை ஒரு கடிதம் மூலம் தெரிவித்துவிட்டு வாளா இருந்துவிட்டாள்.

சில தினங்கள் சென்ற பின்பு ஒரு சமயம் ஏதோ சாமான் எடுக்க பீரோவைத் திறந்து ஆராயும் பொழுது, பங்கஜம் கடைசியாக எழுதிய அந்தக் கடிதம் கண்களில் தென்பட்டு விட்டது. அதை எடுத்து மீண்டும் ஒரு முறை வாசித்த தமக்கையின் உள்ளத்தைத் தங்கையின் கடைசி வேண்டுகோள் மிகவும் உருக்கிவிட்டது. பங்கஜத்தின் குழந்தைகள்

எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டுமென்ற ஆசையைக் கட்டுப்படுத்த முடியாது அவள் மறுநாளே காரிகுளம் கிளம்பி விட்டாள்.

வாயிலில் வண்டி வந்து நின்றதும் ஜெகதா உடனே கீழே இறங்கிவிடவில்லை. உள்ளே சதாசிவம் இருக்கிறானா என்று துப்பு அறிந்து வர வண்டிக்காரனை முதலில் அனுப்பினாள். சதாசிவம் வீட்டில் இருக்கும் பொழுது அந்த வீட்டிற்குள் தான் நுழைவதில்லை என்பது அவளது சபதம். ''அயலூர் சந்தைக்குப் போயிருக்கிறார். வர இரண்டு தினங்கள் ஆகும்'' என்று வண்டிக்காரன் உறுதி சொன்ன பின்புதான் அவள் இறங்கி உள்ளே சென்றாள்.

கூடத்தில் பெரியநாயகி அது சமயம் தயிர் கடைந்து கொண்டிருந்தாள். முற்றத்திலே மரப் பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்த இரு குழந்தைகள் அவளைக் கண்டதும் ஆச்சரியத்துடன் விழித்தன. சாயலில் தந்தையை ஒத்திருந்த அந்த இரு குழந்தைகளையும் ஏற இறங்கப் பார்த்த ஜெகதா அதிருப்தியுடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அவர்களது கிழிந்த உடைகளையும், வாராது புரண்டு கொண்டிருந்த கூந்தலையும், மேலே படிந்திருந்த அழுக்கையும் கண்டு அருவருப்புடன் முகத்தைச் சுளித்துக் கொண்டாள். வந்திருந்தவள் யார் என்பதைப் புரிந்து கொண்டதும் பெரியநாயகி, கைவேலையை உதறிவிட்டு, ஓடிவந்து ஜெகதாவை அணைத்துக் கொண்டு 'ஹோ'வென்று கதறினாள்.

முடிவில் பெரியநாயகியின் பிணைப்பிலிருந்து தன்னை மெல்ல விடுவித்துக் கொண்ட அவள், தங்க பிரேம் கண்ணாடியைக் கழற்றிவிட்டுத் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். ''அத்தையம்மா! இப்படி நடக்கும்னு எனக்கு முன்பே தெரியும். நான் கல்யாணத்தின்போது எவ்வளவோ முட்டிக் கொண்டேன், என் பேச்சைக் கேட்கவேயில்லை. ஆனா அவளுக்கு என்ன, மகராஷி போய் விட்டாள். அதன் பலனை அனுபவிக்கிறது இந்தக் குழந்தைகள்தானே?'' என்று கேட்டுவிட்டு, கூடையில் கொண்டு வந்த பழங்களை எடுத்து ஆனந்தனுக்கும் இந்திராணிக்கும் விநியோகம் செய்தாள். அதுவரை ஆரஞ்சுப் பழங்களைக் கண்களால்

பார்த்திராத அந்தக் குழந்தைகள் பாய்ந்து கிரீச்சிட்டுக் கூவி, சண்டை போட்டுப் பழங்களை ஆளுக்கு இரண்டாக எடுத்துக்கொண்டு தோட்டத்திற்கு ஓடி விட்டார்கள்.

பங்கஜத்தைப் பற்றி வெகுநேரம் வாய் ஓயாது பேசி முடித்து அழுது ஓய்ந்த பின்புதான் ஜெகதாவிற்கு அவள் தங்கையின் மரணத்திற்குக் காரணமாக இருந்தமூன்றாவது குழந்தையின் ஞாபகம் வந்தது. ''அத்தையம்மா! அந்த சின்னச் சனியன் எங்கே?'' என்று முடிவில் கேட்டாள்.

''அதோ!'' என்று பெரியநாயகி சுட்டிக்காட்டிய தாழ்வாரத்தின் பக்கம் திரும்பிப் பார்த்தாள். மண் தரைமீது புழுதியில் கிழிந்த துணி ஒன்றின் மீது பாதி உடலும் தரையில் பாதி உடலுமாகப் புரண்டு கொண்டிருந்த மூன்று மாதப்பெண் குழந்தை அவளை உறுத்து விழித்து மூக்குக் கண்ணாடி, முகத்தைப் பார்த்து 'களுக்'கென்று கன்னங்குழியச் சிரித்தது. கைகளையும் கால்களையும் உற்சாகத்துடன் உதைத்துக் கொண்டு, 'ங்கூ, ங்கூ' என்று தனது பாஷையிலேயே அவளிடம் ஏதோ பேசியது. குழந்தையின் முகத்தைக் கூர்ந்து கவனித்த ஜெகதாவின் கண்களை நீர் மறைத்துக் கொண்டுவிட்டது. பங்கஜத்தைப் போன்று குழந்தை நல்ல வெளுத்த நிறமாக இல்லாவிடினும் அதனுடைய மூக்கும், விழிகளும் பங்கஜத்தைத் திரும்பப் பார்ப்பதுபோல் தோன்றவே, அவளுக்குத் துக்கத்தினால் குரல் கம்மியது. ''அத்தையம்மா! இதுக்கு என்ன பேர் வச்சிருக்கீங்க?'' என்று மெல்ல வினவினாள்.

'இது பிறந்த ஒரு அழகுக்குப் பேர் ஒண்ணுதான் பாக்கின்னு வெறுப்பிலே பேர்கூட இன்னும் வைக்கலை'' என்று விரக்தியாக மொழிந்தாள் பெரியநாயகி.

''அப்படின்னா இதுக்கு 'அருணா' என்று நான் பேர் வச்சுடறேன். அருணாவுக்கு எப்பவாவது ஏதாவது தேவையா இருந்தால் எனக்கு எழுதுங்க, மறக்காதீங்க. இப்ப சத்தியா குழந்தை செலவுக்கு இதை வச்சுக்குங்க'' என்று பத்து ரூபாய் நோட்டொன்றைப் பெரியநாயகியிடம் கொடுத்தாள். அதற்குமேல் அங்கிருக்கவோ, சாப்பிடவோ மனமின்றி வந்த வண்டியிலேயே ஊருக்குத் திரும்பிவிட்டாள்.

வருஷங்கள் ஏழு ஓடிச்சென்றுவிட்டது. ஜெகதா அன்றுவரை அருணாவை அறவே மறந்துவிட்டிருந்தாள்.

ஏதோ குற்றம் செய்து விட்டாற்போல் அவளுக்குப் பரபரப்பு ஏற்பட்டது. உள்ளே வேகமாகச் சென்று இரும்பு பீரோவைத் திறந்தாள். ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக்கொண்டு மேஜையருகிலே வந்து உட்கார்ந்தாள்.

மணியார்டர் பாரம் ஒன்றை அவசரமாகப் பூர்த்தி செய்து, ''வள்ளி! இங்கே வா! இதைக்கொண்டு தபாலாபீஸிலே சேர்த்துவிட்டு வா, சீக்கிரம்'' என்று உத்தரவிட்டாள்.

அருணாவின் செலவுக்காக என்று ஐந்து ரூபாய்களைப் பெரியநாயகி பெயருக்கு அனுப்பி விட்டதுடன் தன் கடமை தீர்ந்துவிட்டதென்ற உணர்வில், கண்களில் ததும்பிய நீரைத் துடைத்துக் கொண்டு தன் வீட்டு அலுவல்களைக் கவனிக்க எழுந்தாள் ஜெகதா.

8

முதன் முதலாகக் காரிகுளம் கிராமத்திற்குத் தான் வந்த பொழுது மிகவும் பிசகானதாகத்தான் இருக்கவேண்டும் என்று பெரியநாயகி பெரிதும் நம்பினாள். ஏனெனில் சமீபகாலத்தில் அவளது நிலைமை மிகவும் மோசமாகி விட்டிருந்தது.

கிராமத்திலேயிருந்த அவளது சொந்தவீடு, பல வருஷங்கள் கவனிக்கப்படாது பூட்டிக் கிடந்ததில் ஒரு பெரும் மழையைத் தாங்காது இடிந்து விழுந்துவிட்டிருந்தது. மீண்டும் சுவர்களை எழுப்பி, கூரை வேய, அவளிடம் பணம் ஏதும் இருக்கவில்லை. வருஷங்கள் பல ஓடிச்சென்றும் சதாசிவத்திற்கு அவள் கடன் கொடுத்திருந்த தொகையிலிருந்து ஒரு செப்புத் தம்பிடி கூட திரும்ப அவள் காணவில்லை. காரிகுளத்திலே அவள் நிரந்தரமாகத் தங்கிவிடக்கூடும் என்பதை ஊகித்துக் கொண்ட அவளது பங்காளிகள்

அவளுக்கு அளித்து வந்த ஜீவனாம்ச பணத்தை ஒழுங்காகக் கொடுத்து வராது இடக்கு செய்து, வழக்கமாக வருஷந்தோறும் சாக்குபோக்குகள் கூறிக்கொண்டிருந்தனர். தன் கிராமத்திற்கு ஒருமுறை நேரில் சென்று தன் சொந்த விவகாரங்களை ஒழுங்குபடுத்திவிட்டு வரலாம் என்றாலோ அவளால் முடியவில்லை.

பல வருஷங்கள் நெருங்கிப் பழகியிருந்ததில் சதாசிவத்தின் குணம் பெரியநாயகிக்கு நன்கு தெரிந்தது. வீட்டை விட்டு ஒரு அடிஎடுத்து வைத்தாலும் பிறகு மறுபடி திரும்ப அங்கே வந்து தங்க அவன் அனுமதிக்கவே மாட்டான். வயோதிகத்தின் தளர்வினால் அவளுக்கு இப்போது உடல் வலிமை குறைந்துவிட்டிருந்தது. கையிலிருந்த பணத்தை கடனுக்குக் கொடுத்துவிட்டு தங்க நிழலின்றி அனாதையாகத் தள்ளாத காலத்தில் அவள் எங்கே போகமுடியும். ஆகவே, சதாசிவத்தின் வீட்டின் மீது தனக்கு இருந்த உரிமையை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு அக்குடும்பத்துடன் உழன்று கொண்டிருந்தாள்.

சதாசிவத்தின் குடும்பத்திலே வந்து தங்கி அவனது ஆதரவை அனுபவித்துக் கொண்டிருந்த பெரியநாயகி அதற்குப் பிரதியாக தன் உடலை வாட்டி, சிறிதும் வஞ்சனையின்றி அவன் குடும்பத்திற்கு உழைத்துக் கொண்டுதான் இருந்தாள்.

பங்கஜத்தின் மரணத்திற்குப் பிறகு அவளது மூன்று குழந்தைகளையும், அன்பும் ஆதரவும் காட்டி தாய்போல் பராமரித்து வந்தாள். அவர்கள் அனைவருக்கும் சமைத்துப் போட்டு வீட்டை நிர்வகித்ததுடன், சதாசிவம் புதிதாக ஆரம்பித்திருக்கும் பால் வியாபாரத்திற்கும் தன்னால் முடிந்த சரீர உதவிகளைச் சளைக்காது செய்துவந்தாள். அன்றாடம் மாட்டுக் கொட்டில்களைப் பெருக்கி சுத்தமாக்கி, கறவை மாடுகளுக்கு வேலை தவறாது தீனி வைத்துக் கருத்துடன் கவனித்துக் கொண்டாள். தாயற்ற குழந்தைகளுக்குத் தாயாகவும், வீட்டிற்கு உற்ற வேலைக்காரியாகவும் அவள் தன் உடல் சோர்வைப் பார்க்காது உழைத்தும் சதாசிவத்திற்கு சிறிது கூட நன்றி ஏற்படவே இல்லை. ஏற்கெனவே பல வழியில் கஷ்டத்திற்குட்பட்ட தன் குடும்பத்திற்கு அவள் வீணாக வந்து சேர்ந்த ஒரு பெரும் பாரம் என எண்ணி அவளை வெறுத்தான். மேலும் தன் சிறிய தாயாரின் மீது

அவனுக்கு வேறு ஒரு காரணம் பற்றி அலாதியானதொரு துவேஷமும் கூடவே இருந்தது. முதன் முதலாகக் கடன் என்று கைநீட்டி அவளிடம் வாங்கிய தொகையை அவன் திரும்பக்கொடுக்க முடியாது போனதன் குற்றம் அவளுடையது என்று கருதினான். விவசாயத்தில் ஏற்பட்ட நஷ்டங்களுக்கும், மனைவியின் மரணத்திற்கும், உடனடியாக ஏற்பட்ட தீராத தரித்திரத்திற்கும், எல்லாவற்றிற்கும் ஆதிகாரணம் அவளது துரதிர்ஷ்டம்தான் என்று அவன் உள்ளூர நம்பியதனால் தன் சிறிய தாயாரை அவன் விஷமாக வெறுத்ததில் வியப்பே இல்லை.

சதாசிவம் தன்மீது கொண்டிருந்த அபிப்பிராயத்தைப் பெரியநாயகி நன்கு உணர்ந்து கொண்டிருந்தாள். 'துரதிர்ஷ்டம் பிடித்தவள்', 'அஷ்ட தரித்திரம்' என்று புனைப் பெயர்கள் இட்டுத் தன்னைக் குறிப்பாக ஏசும்பொழுது அவளுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டுதான் வந்தது. 'என்னைச் சொல்கிறாயே, நீ தொட்டது எது உருப்பட்டது? கட்டின பெண்ஜாதியை விரைவிலே கரை ஏத்திவிட்டே' என்று சுடச்சுடக் கேட்க வேண்டுமென்று அவளுக்கு அடிக்கடி ஆவல் ஏற்படுவதுண்டு.

சதாசிவத்தின் மூளையில் அறிவு ஒரு பொழுதுமே உதயமாவதில்லை என்ற உண்மையை நன்கு அறிந்து கொண்டிருந்ததனால் அவள் சமீப காலத்தில் அவனுடன் தர்க்கம் செய்வதை அறவே விட்டிருந்தாள். மிகவும் அவசியம் இருந்தால் ஒழிய சாதாரணமாக சம்பாஷிப்பதையே அவள் நிறுத்தி விட்டிருந்தாள். 'வீட்டுச் செலவிற்குப் பணம் தேவை என்றோ, குழந்தைகளைப் போட்டு ஏன் இப்படி அடிக்கிறாய்?' என்றோ அவனிடம் எதற்கும் வாயைத் திறப்பதே இல்லை.

செல்வ நிலை குறையக் குறைய சதாசிவத்திற்குக் கருமித்தனம் அதிகரித்து விட்டிருந்தது. பெரியநாயகியின் மௌன விரதம் அவனுக்குப் பெரிதும் அனுகூலமாக இருந்தது என்றே சொல்லவேண்டும். குழந்தைகளுக்காகவும் வீட்டுக்காகவும் ஆகும் செலவை தம்பிடி கணக்குப் பார்த்து மிகவும் சிக்கனமாகவே செலவிடத் தொடங்கினான். சில சமயம் வீட்டிற்கு அவசியமான பொருள்களைக்கூட சரிவர வாங்கிப் போடாது தாமதம் செய்து, அசட்டையாக இருக்கவும் தலைப்பட்டான். இதன் விளைவாக, குழந்தைகளும், பெரியநாயகியும், வேளைக்கு வயிறாரச் சாப்பிட

உணவும் உடுக்க சரியான உடையும் இன்றி தரித்திரத்திலே தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

அன்று இரவு சாப்பாட்டிற்கு என்ன செய்வது என்று கவலையில் ஆழ்ந்து போயிருந்தாள். வாரத்திற்கு வீட்டுச் செலவிற்கு வேண்டிய அரிசி, பருப்பு முதலிய சாமான்களை வாங்கிப் போடாமல் சதாசிவம் வெளியூர்ச் சந்தைக்குத் தன் சொந்தக் காரியமாகச் சென்றிருந்தான். பானையிலிருந்த மீதி அரிசி முழுவதையும் போட்டுச் சமைத்து முதல் நாள் இரவு குழந்தைகளும், அவளும் அரை வயிற்றுக்குச் சாப்பிட்டு விட்டிருந்தனர்.

அடுத்த வீட்டு அன்னம்மாளிடம் கால்படி அரிசி கெஞ்சாது கெஞ்சிக் கடனாக வாங்கி வந்து அன்று காலைப்பொழுதை எப்படியோ ஓட்டி விட்டிருந்தாள். அதற்குமேல் சதாசிவம் வரும்வரை இரண்டு தினங்களை எப்படி சமாளிப்பது என்ற பிரச்னையில் பெரியநாயகியின் மூளை குழம்பியது. அன்றிரவு போஜனத்தைப் பற்றித் தீராத கவலையில் மூழ்கியிருந்த சமயம், அன்று பிற்பகல் தபாலில் ஜெகதாவின் மணியார்டர் வந்து சேர்ந்தது. கருணை கூர்ந்து அவள் அனுப்பியிருந்த ஐந்து ரூபாய்களும் பெரிய நாயகிக்கு அது சமயம் ஐம்பதாயிரத்துக்கு ஒப்பாக இருந்தன என்று கூறத் தேவையில்லை.

அருணாவிற்கு அன்று நடந்ததெல்லாம் மிகவும் அதிசயமாக இருந்தது. அழுக்கேறிக் கிடந்த அவர்கள் உடைகள் எல்லாவற்றையும் சோப்புப் போட்டு துவைத்து காய வைத்தாள்,பெரியநாயகி. பிறகு மூன்று குழந்தைகளுக்கும் எண்ணெய் தேய்த்து வெந்நீரில் ஸ்நானம் செய்வித்தாள். காலையில் பழைய சோறும், இரவில் சோறும் குழம்பும் தவிர வேறு தின்பண்டம் என்பதையே கண்களால் கண்டிராத அவர்களுக்கு, அன்றைய சாயங்காலம் வடையும் காப்பியும் கிடைத்தன. இந்திராணியும் ஆனந்தனும் அதைக் கண்டதும் சந்தோஷத்துடன் ஆர்ப்பரித்தனர். ''பாட்டி இன்னிக்கி என்ன விசேஷம்?'' என்று இந்திராணி ஒரு முழு வடையை ஒரே வாயில் திணித்துக் கொண்டு ஆச்சர்யத்துடன் வினவினாள். காலை நீட்டிக் கொண்டிருந்த பெரியநாயகி ஒரு பெரும் லோட்டா நிறைய இருந்த காப்பியைக் கடகடவென்று குடித்து முடித்தாள். பல நாட்கள் கழித்து

அந்தப் பாயசத்தைப் பருகியதனால் ஏற்பட்ட இன்பம் அவளது உடலிலும் உள்ளத்திலும் பரவிக் கிடந்தது.

''விசேஷமா! உங்கப்பன் வீட்டை விட்டுத் தொலைஞ்சிருக்கிறானே, அந்த விசேஷந்தான்!'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள். இந்திராணியும் ஆனந்தனும் ஏதோ பெரிய ஹாஸ்யத்தைக் கேட்டுவிட்டது போல் பாட்டியுடன் சேர்ந்து விழுந்து விழுந்து சிரித்தார்கள். பேசிக்கொண்டே காப்பியை விழுங்கியதினால் ஆனந்தனுக்கு புரை ஏறிக் கொண்டு விட்டது. 'கொல் கொல்'லென்று இருமிக்கொண்டு, தலையில் அடித்துக் கொண்டான். அதைக் கண்டதும் இந்திராணி கைகொட்டி உரக்கச் சிரித்தாள். ''உங்கப்பன் உன்னை நினைக்கிறான் போலிருக்கிறது. இந்தப் பயல் ஆனந்தன் மாடுகளைக் குளிப்பாட்டினானா, அவைகளுக்குச் சரியா வைக்கோல் அள்ளிப்போட்டானான்னு நினைச்சுக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறான் போலக் காண்கிறது'' என்று பரிகாசமாக மொழிந்தாள் பெரியநாயகி.

''வேறே எதற்கு அவருக்கு என் ஞாபகம் வரும்!'' என்று கடுத்துக் கொண்டான் ஆன்ந்தன், இருமலின் நடுவே.

''ஏன் வராது? சந்தையிலே சில சாமான்களைப் பார்க்கும்போது அப்பாவுக்கு நம்ப ஞாபகம் வரும். புதுசா நல்ல சாயம் பூசிய சின்ன பிரம்புகளைக் கடையிலே பார்த்தால் அப்பாவுக்கு உடனே நம் ஞாபகம்தானே வரும்?'' என்று இந்திராணி கூறிவிட்டு, களுக்கென்று சிரித்தாள்.

''பிரம்பு மட்டும் என்ன? கடையிலே பார்க்கிற பல சாமான்கள் அவருக்கு நம்மை ஞாபகப்படுத்தும். அப்பாவுக்கு கோபம் வரச்சே பிரம்பு ஒண்ணைத்தானா உபயோகப்படுத்துகிறார்? சட்டி, பானை, விறகுக்கட்டை, சாட்டைக்குச்சி, மாடு கட்டுகிற கயிறு எதையோ கையில் அகப்பட்டதை எடுத்துக்கிட்டு அடிக்க ஆரம்பிக்கிறார்'' என்றான் ஆனந்தன், மனத்தாங்கல் நிறைந்த குரலில்.

''அப்பா மட்டும் இப்போ இங்கிருந்தால்-'' என்று கேட்டுவிட்டு, போலியானதொரு கோபத்துடன் கண்களை அகல விரித்தாள் இந்திராணி.

இப்படிப் பேசிச் சிரிப்பதைக் கண்டால் மென்னியை முறிச்சுப்

போட்டு விடுவார்'' என்று பதிலளித்த ஆனந்தன் சிரித்தான்.

''இன்னும் இரண்டு நாளைக்கு வீட்டிலே சத்தமும் கூச்சலும் இல்லாம நிம்மதியா இருக்கலாம்'' என்று பெரியநாயகி பெருமூச்சு விட்டாள்.

''பாட்டி, ரெண்டு நாளைக்குப் பள்ளிக்கூடத்திலே எங்களுக்கு லீவு. அப்பாவும் ஊரிலே இல்லையா? நாங்கள் தெருப் பிள்ளைகளோட பயமில்லாமல் விளையாடப் போகிறோம்'' என்று ஆனந்தன் குதூகலத்துடன் சொன்னான். ''இன்னும் ரெண்டு நாளைக்குக் கவலையில்லை, பாட்டி. ரேழியிலே இருமல் சத்தம் கேட்குதான்னு காதைத் நீட்டிக் கிட்டிருக்கவேணாம். வாசலிலே செருப்பு சத்தம் கேட்டதும் பாடிய பாட்டை டக்குனு நிறுத்திக்க வேண்டாம்'' என்று கூறிவிட்டு இந்திராணி மகிழ்ச்சியுடன், ''அருணா! உனக்குக்கூடத்தான்! இந்த இரண்டு நாள் உன்னை அவுத்து விட்டிருக்கிறதுன்னு நினைச்சுக்கோ. இஷ்டப்படி ஊரைச் சுத்திவிட்டு, வீட்டுக்கு ராத்திரிப் பொழுதுக்கு வந்தாலும் உன்னை ஏன்னு கேக்கறவங்க இல்லை'' என்று சொல்லிவிட்டுப் பற்களைக் காட்டி நகைத்தாள்.

அருணா கோபத்துடன் முகத்தைச் சுளித்துக் கொண்டாள். அவர்கள் பேசிய பேச்சுக்கள் ஒன்றுமே அவளுக்குப் பிடிக்கவில்லை. தங்கள் தந்தையை அவர் பின்னால் கேலி செய்து பேசுவது பெரும் தவறு என அவள் எண்ணினாள். அவர் வீட்டில் இல்லாத பொழுதெல்லாம் அந்த மூவரும் இவ்வாறு மகிழ்ச்சியுடன் பலவும் பேசி ஆர்ப்பரிப்பது வழக்கமாகி விட்டிருந்தது. தந்தையை அவர்கள் தூஷிக்கும் பொழுதெல்லாம் அருணாவின் மனம் விவரிக்க முடியாத துயரத்தில் ஆழ்ந்துவிடும். ''பாவம் அப்பா! தப்பு செய்யும் பொழுதுதானே தண்டிக்கிறார்? அதற்காகப் பெரியவர்களைத் தூஷித்துப் பேசுவது மிகவும் தவறல்லவா?'' என்று அவளது இள உள்ளம் எண்ணித் தந்தைக்காக பச்சாதாபப்படுவது வழக்கமாகியிருந்தது. இன்று அந்த மூவரும் பேசிய மொழிகள் அவள் மனத்தை உறுத்தி வேதனை செய்யவே, அவள் பதில் ஒன்றும் கூறாது மௌனமாக இருந்தாள்.

இந்திராணியும் ஆனந்தனும் அவளைப் பொருட்படுத்தவேயில்லை. சிறிது நேரம் குதூகலமாகப் பல விஷயங்களைப் பேசி ஆர்ப்பரித்துவிட்டு விளையாட தோட்டத்திற்கு ஓடிவிட்டார்கள். சிறிது நேரத்தில் பெரியநாயகியும் எழுந்து தன் காரியங்களைக் கவனிக்க உள்ளே சென்று விட்டாள். தனிமையில் தவித்த அருணா, மரப்பொம்மையை எடுத்துக் கொண்டு, புழக்கடைத் தாழ்வாரத்திலே சென்று உட்கார்ந்து கொண்டாள். கிழிந்த துணி ஒன்றை பொம்மைக்குக் கட்டி அலங்கரித்து, அழகு பார்த்து விளையாடிக் கொண்டிருந்தாள். அது சமயம் இரண்டு வீடுகளையும் பிரித்து நின்ற மண் சுவரின்மீது நரைத்துப்போன தலை ஒன்று திடீரென எழும்பியது. ''ஏ! அரணை! அரணை!'' என்று கூவிய குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள். ''காது செவிடாடி, நாசமாய் போகிறவளே! கூப்பிட்டால் ஏன் என்று கேட்க என்ன கொள்ளை!'' என்று ஆத்திரமாகக் குரல் நடுங்கக் கூவினாள் அன்னம்மாள். கையிலிருந்த மரப்பொம்மையை மடிமீது பத்திரமாக வைத்துக் கொண்டு கிழவி பக்கம் உறுத்து விழித்தாள் அந்தச்சிறுமி.

''என் பேர் அருணா! அரணையுமில்லை, தவளையுமில்லை'' என்று ரோஷத்துடன் பதிலளித்தாள்.

கிழவி பதிலுக்கு முகத்தை வலித்துக் கொண்டாள். ''முகரக்கட்டையின்னுதான் வச்சுக்கோயேன். உன் அண்ணனும் அக்காவும் எங்கே? கூப்பிடு அவுங்களை'' என்று கிரீச்சிட்டு அலறினாள் ஆத்திரத்துடன் அன்னம்மாள்.

தும்பைப்பூ போன்று வெளுத்த அவளது தலையையும், தொங்கிய புருவங்களையும், இடுங்கியிருந்த கண்களையும் வியப்புடன் ஒரு முறை பார்த்த அருணா உடலை பயத்துடன் சிலிர்த்துக் கொண்டாள். இரண்டு தினங்களுக்கு முன்பு அவள் அண்ணன் ஆனந்தன் கூறியிருந்த ஒரு ரகசியம் அவளுக்கு அப்பொழுது நினைவிற்கு வந்தது. கிழவி அன்னம்மாள் வயது பல ஆகியும் சாகாமல் உயிரோடு திரிந்து கொண்டிருந்ததற்கு ஒரு காரணம் இருந்ததாக எல்லோரும் சொல்லிக் கொண்டார்கள். அவளிடம் மந்திர சக்தி மிகுந்த ஒரு மை கைவசம் இருந்தது. அதைக் கண்களில் தீட்டிக் கொண்டு யாரையாவது உறுத்துப் பார்த்தால் அந்த நபருடைய ஆயுசிலே பாதியை அவள் இழுத்துக் கொண்டு விடுவாளாம்.

இவ்வாறு அந்தக் கிழவி மந்திர மையைத் தீட்டிக் கொண்டு அவர்கள் தாயார் பங்கஜத்தை அடுத்த வீட்டிலிருந்தபடி தினசரி உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்ததனால்தான் அவர்கள் தாயார் ஆயுசு பாதியாகக் குறைந்து சிறு வயதிலேயே அநியாயமாக மரணமடைந்து போனாள். இந்தச் சங்கதியை ஆனந்தன் விவரித்துக் கூறிய பொழுது அருணாவின் உடல் பயத்திலே சிலிர்த்துப் போயிற்று. அடுத்த வீட்டு மாயக்காரக் கிழவியை எண்ணி பயத்திலே அன்று இரவு முழுவதும் அவள் தூங்கவேயில்லை. அதனால் அன்னம்மாளை நேருக்கு நேர் பார்த்துப் பேசப் பயந்து கொண்டு, ''அவங்க எங்கேயோ, எனக்குத் தெரியாது பாட்டி!'' என்று கூறிவிட்டுத் தன் தலையைக் குனிந்து கொண்டாள்.

''எங்கே போய் விடுவாங்க? இந்தப் பக்கம் என் தோட்டத்திலே அவங்க இனி காலை வைக்கட்டும், சொல்கிறேன். முட்டி ரெண்டையும் எடுத்துக் கையிலே கொடுத்து விடுவேன். ஊரான் வீட்டு சொத்துக்குப் பேயாப் பறக்குதுகள் பரதைகள்'' என்று சபித்தாள் கோபத்துடன்.

சுவரின்மீது தெரிந்த அவளது தலை மறைந்து சில வினாடிகள் சென்றதும், தோட்டத்து வைக்கோல் போருக்குப் பின்னால் சரசரவென்று ஓசை ஏற்படுவதை அருணா உணர்ந்தாள். ஆவலுடன் அந்தத் திக்கை நோக்கினாள். வைக்கோல் போரின் பின்னாலிருந்து இந்திராணியும் ஆனந்தனும் குபீரென்று பாய்ந்து ஓடி வந்தார்கள்.

''கிழம் ஏமாந்துவிட்டது. 'யாரது! யாரது'ன்னு கத்திக்கிட்டு தோட்டத்துக்கு வரதுக்குள்ளே, நாங்க சுவரைத் தாண்டி இப்பாலே குதிச்சுவிட்டோம்'' என்று இந்திராணி மூச்சு வாங்க சிரித்தாள்.

''வைக்கப்போருக்கு பின்னாடி நாம் ஒளிஞ்சு கொண்டது அதுக்கு கண் தெரியலை, பாத்தியா!'' என்று ஆனந்தன் அதிசயித்தான்.

பாவாடையில் பத்திரமாகச் சுருட்டி வைத்திருந்த வஸ்துவை இந்திராணி மிகவும் பெருமையுடன் கையில் எடுத்தாள், ''இந்தா, உனக்கு ஒரு பங்கு மீதி வச்சிருக்கிறோம்!'' என்று தங்கையிடம் நீட்டினாள். கண்களைப் பறித்த சிவந்த மாதுளம் பழத்தை ஆச்சர்யத்துடன் உற்றுப் பார்த்தாள் அருணா. தன் வாயில் ஊறிய எச்சிலை அவசரமாக விழுங்கிக் கொண்டாள். ''பாட்டி வீட்டு

மரத்திலிருந்துதானே இதை அறுத்தீங்க!'' என்று கேட்டாள் முடிவில்.

''ஆமாம்'' என்று அழுத்தந்திருத்தமாகப் பதிலளித்தான் ஆனந்தன்.

''திருடிக்கிட்டு வந்த பழம் எனக்கு வேண்டாம்!'' என்று, நீட்டிய தன் கைகளை அதை வாங்காது மடக்கிக் கொண்டாள்.

''இங்காட்டிப் போயேன்! யாருக்கு மோசம்?'' என்று கோபமாகப் பதிலளித்த இந்திராணி, பழத்தை உரித்து முத்துக்களை உதிர்த்து அவசரமாகத் தன் வாயிலே போட்டுக் கொண்டாள்.

அருணாவுக்குக் கொடுக்காமல் தாங்கள் மட்டும் அதைத் தின்று சுவைத்தது ஆனந்தனுக்குப் பிடிக்கவில்லை. ''ஒரு பழத்தை பாட்டி தோட்டத்திலிருந்து திருடிக் கொண்டு வந்தால் என்ன தப்பு? அவங்க மட்டும் நம்ப வீட்டிலிருந்து எத்தனை சாமான்களைத் திருடிக் கொண்டிருக்கிறாங்க தெரியுமா? நம்ம வீட்டு கண்ணாடி பீரோ, வெள்ளித்தட்டு, கூஜா எல்லாத்தையும் திருடி சேர்த்துக் கிட்டிருக்கிறாளே!'' என்று ஆத்திரத்துடன் விவாதித்தான் அவன், தன் சகோதரியிடம்.

அருணா எல்லாம் தெரிந்தவள்போல் தலையை பலமாக அசைத்தாள். ''இல்லைண்ணா! பாட்டி நம்ம வீட்டிலே அதுகளை ஒண்ணும் திருடிகிட்டு போகலை. அப்பாதான் செலவிற்குப் பணம் இல்லையினு எல்லாத்தையும் கொண்டு அவங்ககிட்டே அடகு வைச்சாராம்'' என்றாள் நிதானமாக.

இந்திராணி இதை பலமாக ஆக்ஷேபித்தாள். தங்களுக்குப் பிறகு கடைசியாகப் பிறந்த அருணா வயதிலே மிகவும் சிறியவள். அவளுக்கு விஷயங்களைப் புரிந்து கொள்ளவே மூளை கிடையாது என்பது அவளது அபிப்பிராயம். ஆகவே, அவள் கோபத்துடன், ''ஏய்! மக்குப் பிளாஸ்த்திரி, வாயை மூடு. உனக்கு ஒண்ணும் தெரியாது. பாட்டி மந்திரம் போட்டு அப்பாவை மயக்கி, மேஜை, பீரோ இதுகளை திருடிக் கொண்டுதான் போனாங்களாம். எனக்குத் தெரியும்'' என்று கத்தினாள்.

''போ! போ நீ பொய் சொல்கிறாய்'' என்று கிரீச்சிட்டாள் பதிலுக்கு அருணா.

''நீதான் பொய் சொல்கிறே! மூஞ்சியைப் பார். ஆந்தையைப்போல'' என்று ஆத்திரத்துடன் கத்திய இந்திராணி, தன்

சினத்தை அடக்க முடியாது அவன் தலையில் வெடுக்கென்று ஓங்கிக் குட்டினான்.

இவ்வாறு ஒரு சிறு யுத்தம் அவர்களிடையே ஆரம்பமாகிக் கொண்டிருந்த சமயம், பெரியநாயகி புழக்கடைக் கதவை வேகமாகத் திறந்து கொண்டு பரபரப்புடன் தலையை வெளியே நீட்டி, "குழந்தைகளா! ஏன் சத்தம் போடுகிறீங்க? உங்கப்பன் வந்துவிட்டான்!" என்று எச்சரிக்கை செய்தாள்.

சந்தைக்காக வெளியூர் சென்றிருந்த தந்தை எதிர்பாராது திரும்பி வந்து விட்டிருந்ததைக் கேட்டதும், அம்மூவர் முகத்திலும் பீதி குடிகொண்டது. பயத்தினால் அவர்களது இளம் உள்ளம் படபடத்தது. ஒருவரையொருவர் திருதிருவென்று சில வினாடிகள் பார்த்துக் கொண்டு பேசாது உட்கார்ந்திருந்தனர். கையிலிருந்த மாதுளம் பழத்தைத் தின்னவும் பிடிக்காது இந்திராணி அதை வீசி வைக்கோல் போருக்கப்பால் எறிந்தாள். கையைப் பாவாடையில் துடைத்துக்கொண்டு சிந்தனையுடன் உதட்டைக் கடித்துக் கொண்டு எழுந்து நின்றான். முற்றத்தில் கிடந்த விறகுக் குச்சிகளில் ஒன்று படக்கென்று ஒடிக்கப்படும் சப்தம் கேட்டது. தண்டவாளத்திலே வேகமாகச் செல்லும் ரயில் வண்டிபோல் அவர்கள் மனம் திக்திக்கென அடித்துக் கொண்டது. கிலியுடன் ஒருவரையொருவர் அர்த்த பாவத்துடன் பார்த்துக் கொண்டனர்.

"ஏய் ஆனந்தன்! இந்திராணி!" என்று முற்றத்திலிருந்து எழுந்த கர்ஜனையைக் கேட்டதும், இருவரும் உள்ளே ஓடினார்கள். பூனையைப் போன்று அருணா அடிமேல் அடிவைத்து அவர்களைப் பின் தொடர்ந்து உள் தாழ்வாரத்தில் வந்து நின்று கொண்டாள்.

"என்ன செய்தீங்க? உண்மையை சொல்லாவிட்டால் முதுகுத் தோல் உரிஞ்சு போயிடும். அன்னம்மா பாட்டி தோட்டத்திலே புகுந்து ஊட்டி அடிச்சிங்களாமே? ஒரு நாள் நான் வீட்டிலே இல்லாட்டா, உங்களை அண்டுவார் அடக்குவார் கிடையாதா? திருட்டுக் கழுதைகள்!" என்று இரைந்த சதாசிவம், ஓங்கி இந்திராணியையும் ஆனந்தனையும் மாறி மாறி கையிலிருந்த குச்சியால் ஆத்திரத்துடன் அடிக்கத் தொடங்கினான்.

"இல்லேப்பா" என்று அவர்கள் அலறியதைக் கண்டு திக்பிரமையடைந்து போய் அருணா நின்று கொண்டிருந்தாள். அவர்கள் இரண்டு பேரையும் அடித்து ஓய்ந்தவுடன் சதாசிவம் தாழ்வாரத்திற்குப் பாய்ந்தான். "நீ மட்டும் என்ன? நீயும்தான் நான் வீட்டைவிட்டு எப்ப ஒழிவேன்னு காத்துகிட்டுக் கிடக்கிற. ஊர்சுத்திக் கழுதை" என்று பற்களைக் கடித்துக் கொண்டு, அருணாவின் முதுகில் அதே குச்சியினால் பலமாக நான்கு அடிகள் வைத்தான்.

அருணா அவர்களைப்போல் கிரீச்சிட்டு அலறவில்லை. தன் சிறு கரத்தினால் வாயைப் பொத்திக் கொண்டு, கண்களில் கசிந்த நீரை அடக்கிக் கொண்டு, நோவு பொறுக்க முடியாது மெல்ல விம்மினாள்.

அப்பா ஊரில் இல்லாத சமயம், வயிறு புடைக்கக் காப்பியும் வடையும் தின்று கொட்டமடித்து சந்தோஷத்துடன் பேசி மகிழ்ந்து கொண்டிருந்தது தவறானதொரு செய்கை என்று அவளது மனதிற்குப்பட்டது. அந்தச் செய்கைக்கு அப்பா தனக்களித்த தண்டனை தகுந்ததுதான் என்று அவள் எண்ணியதால், தன்மீது விழுந்த அடிகளை மௌனமாக ஏற்றுக் கொண்டாள்.

9

பகல் பொழுதிலே வீட்டில் தாயாருக்கும் மற்றவர்களுக்கும் தொல்லை கொடுத்துக் கொண்டு துஷ்டத்தனம் செய்து திரியாதபடி குழந்தைகளை அடக்கி, தடுத்து வைக்கத்தான் பள்ளிக்கூடங்கள் என்பவை ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது பெரியநாயகியின் கருத்து. கல்வியைப். பற்றிப் பொதுவாக அவள் கொண்டிருந்த இந்தத் தாழ்வான அபிப்பிராயத்தினால் வீட்டில் குழந்தைகளில் யாரேனும் ஒருவர் பள்ளிக்கூடம் செல்லாது தலைமறைவாக இருந்துவிட்டால், அதைப் பற்றி அவள் கவலைப்பட்டதேயில்லை. விசாரித்துக் கண்டித்ததுமில்லை.

சிலசமயங்களில் வீட்டில் தன்னால் சமாளிக்க முடியாத

அலுவல்கள் அதிகம் இருந்தால், குழந்தைகளில் ஒருத்தரைத் தனக்கு உதவி செய்யப் பள்ளிக்கூடம் போகாது நிறுத்திக் கொண்டு விடுவாள். ''இன்னிக்கு எனக்குப் பரீட்சை, என்னால் வீட்டில் நிற்க முடியாது'' என்று இந்திராணி பிடிவாதமாக மறுத்தால், அவளுக்கு மிகவும் கோபம் வந்து விடும். ''என்ன பரீட்சை? என்ன படிப்பு! வயது பத்தாகுது. அடுப்பைப் பத்த வச்சு உலை வைக்க இன்னும் தெரியலை? உன் வயசுக்கு நான் எத்தனை வேலைகள் செய்வேன், தெரியுமா?'' என்று அதட்டிப் பேசுவாள்.

பாட்டியின் வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் இந்திராணி பள்ளிக்கூடத்திற்கு ஓடிவிட்டால் அவளது கோபம் முழுவதும் கல்வி ஸ்தாபனங்கள் மீதுதான் திரும்பிவிடும். ''அந்தப் பாழும் பள்ளிக்கூடங்களை இடிச்சு நிரவி கோயில்களாகக் கட்டிப் போட்டாலும் போகிற வழிக்குப் புண்ணியமுண்டு'' என்று அலுத்துக் கொள்வாள்.

அன்றையதினம் பெரியநாயகிக்கு வீட்டில் வேலை அதிகம் இருந்தது. சந்தையில் மலிவாகக் கிடைத்ததென்று ஒரு மூட்டை புளியைத் தாராளமாக வாங்கிப் போட்டிருந்தான் சதாசிவம். மூன்று தினங்களாக முற்றத்திலே காய்ந்து கொண்டிருந்த அதை எடுத்துப் பானையில் அடைத்துப் பத்திரப்படுத்த பெரியநாயகிக்கு ஒழியவே இல்லை. அதற்காகத் தன்னுடன் இருந்து உதவி செய்ய அருணாவை அவள் அன்று வீட்டில் நிறுத்திக் கொண்டிருந்தாள்.

பள்ளிக்கூடம் செல்லாது பாட்டியுடன் வீட்டிலே தங்கி விடுவதென்றால் அருணாவுக்கு அலாதியானதொரு மகிழ்ச்சி. இவ்வாறு ஏதாவது ஒரு சந்தர்ப்பம் ஏற்படாதா என்று அவள் எதிர்பார்ப்பதும் உண்டு. அடிக்கடி பாட்டியுடன் தனியே வீட்டிலிருக்க அவள் பெரிதும் விரும்பினாள். அதற்கு ஒரு காரணமும் இருந்தது. அருணா, தான் கனவிலும் கண்டிராத தாயை மிகவும் நேசித்தாள். அவளைப் பற்றிப் பேசுவதும், அவளைப் பற்றிய பல விஷயங்களைக் கேட்டு அறிந்து கொள்வதும் அந்தச் சிறுமிக்கு மெத்தவும் ஆனந்தத்தை அளித்தன. தன் தாயைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்றால் அவள் அந்த வீட்டில் பாட்டியைத் தவிர வேறு யாரிடம் கேட்க முடியும்?

காலை நீட்டியபடி தாழ்வாரத்தில் அமர்ந்து புளிக்கோதை நீக்கி கொண்டிருந்த பெரியநாயகி, தானே பேசலுற்றாள். பங்கஜத்தின் கடைக்குட்டியுடன் தனித்து இருந்து வார்த்தையாடும் பொழுதெல்லாம் அவளுக்குப் பங்கஜத்தின் நினைவு அதிகம் ஏற்பட்டுவிடும். ''இப்படித்தான் உன் அம்மாவும் என் கூடவே பின்னாடி நிழலைப்போல வீட்டிலே சுத்தி வந்துகிட்டிருப்பா. என்ன சொன்னாலும் முகத்தைச் சிணுங்கவே மாட்டா. உன் அப்பன் குணத்துக்கு வேறொரு பெண்ணாயிருந்தா சரிப்பட்டு வந்திருக்குமா? பெரிய இடத்துப் பெண்ணுன்னு அவளுக்கு கருவம் குந்துமணிகூடக் கிடையாது. உன்பாட்டன் மட்டும் உசிரோட இருந்தார்னா எத்தனையோ சிறப்பா இருந்திருக்கலாம்'' என்று கூறிவிட்டு நிராசையாகப் பெருமூச்செறிந்தாள்.

அருணாவின் கண்கள் ஆச்சர்யத்திலே அகன்றன. முகத்திலே மகிழ்ச்சியின் ரேகை அரும்பியது.

''தாத்தா கிட்டப் பணம் நிறைய இருந்ததா பாட்டி?'' என்று வியப்புடன் கேட்டாள்.

''நல்லா வாழ்ந்து உடைஞ்ச குடும்பமாச்சே? பணத்திற்கு என்ன குறைச்சல்? உங்க அம்மாவுக்குத்தான் அதிர்ஷ்டம் இல்லை. உன் தாத்தா உசிரோட கொஞ்சநாள் இருந்திருந்தால் நீங்கள் எல்லாம் இப்படி சோற்றுக்குத் தடுமாறிக்கிட்டு இருக்க மாட்டீங்க. தன் சொத்துப் பூராவையும் குழந்தைகளுக்கு எழுதி வச்சிருப்பார். மாரடைப்பிலே பொக்குன்னு அவர் போயிடவே, அவர் பணம் முழுவதும் விவகாரமில்லாமே தாறுமாறாகப் போயிடுச்சு. பங்கஜத்து மேலே அவருக்குப் பிரியம் அதிகம். கட்டில், மேஜை, அண்டா, குடம்னு சீர் வகை ஏகப்பட்டது கல்யாணத்தின்போது வாங்கி வச்சார்'' என்று பெரியநாயகி அடுக்கினாள்.

தனது தாயின் பூர்வ சரித்திரத்தை அதிசயத்துடன் கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்த அருணா குறுக்கே பேசவில்லை. ''அந்தக் கண்ணாடி பீரோ மேலே பங்கஜத்திற்கு உசிரு. தாயாரு காலத்திலே பிடிச்சு வீட்டிலே புழக்கத்தில் இருந்ததுனு அது மேல் அவளுக்குத் தனி ஆசை. நகை நட்டெல்லாம் வித்தபோதுகூட பங்கஜம் வருத்தப்படவில்லை.

அந்தக் கண்ணாடி பீரோவைக் கொண்டு கால் விலைக்கு உங்கப்பன் வித்தபோது அவள் 'ஓ'ன்னு வாய்விட்டு அழுதுவிட்டா. பீரோன்னா பீரோவா? இந்தக் கூடத்துக்கே ஒரு களையா அது இருந்திச்சு. உங்கப்பன் கையிலே தொட்டது எதுதான் தொலங்கிச்சு? அதெல்லாம் நினைச்சாக்கூட என் வயத்தைச் சங்கடம் பண்ணும்'' என்று கூறி முடித்தாள் பெரியநாயகி.

அருணாவினால் ஆவலைக் கட்டப்படுத்த முடியவில்லை. ''அடுத்த வீட்டில் இருக்கிற பீரோ நம்முடையதுதானே பாட்டி?'' என்று வினவினாள்.

''ஆமாம்! ஆமாம். அதுதான்! அதைப் பார்க்கிற போதெல்லாம் எனக்கு பங்கஜத்தின் நினைப்பு வந்துடும். மனசு வேதனைப்படும்!'' என்று அலுத்துக் கொண்டாள் பெரியநாயகி.

தலையைக் குனிந்து கொண்டு அருணா ஒரு கணம் யோசனையில் ஆழ்ந்து போனாள். இனம் விளங்காத ஒரு துயரம் அவள் நெஞ்சை அமுக்கியது. ''பாட்டி பணத்தைக் கொடுத்து அதைத் திரும்ப நாம் வாங்கிக்க முடியாதா?'' என்று ஆவலுடன் கேட்டாள்.

பெரியநாயகி பதிலுக்கு வறட்சியாக நகைத்தாள். ''யானை வாயிலே போன கரும்புபோலத்தான், அன்னம்மாகிட்டப் போன சாமான்கள். பணத்தைக் கொடுத்தாலும் கிழவி அதைத் திரும்பிக் கொடுப்பாளா? அதை வாங்கத்தான் இங்கே நம்பகிட்டப் பணம் கொட்டிக் கிடக்கிறதா? ஒண்ணும் இல்லை. எல்லாத்துக்கும் கொடுத்து வச்சிருக்கணும். மருதப்பக் கவுண்டர் வீட்டு பீரோவை அன்னம்மா பேரன் எடுத்து ஆளனும்னு விதியிருக்கச்சே, நம்ப இடையிலே ஆசைப்பட்டு என்ன பயன்?'' என்றாள் விரக்தியாக.

அருணாவின் சிறுஉள்ளம் அதைக் கேட்டதும் உணர்ச்சி வெள்ளத்திலே குமுறியது. மனத்தில் கொந்தளித்த சிந்தனைகளை வார்த்தைகளால் வெளியிட அவளால் இயலவில்லை. முன்பின் கண்டறியாத அன்னம்மாளின் பேரனை அவள் வெறுத்தாள். ''பாட்டி, அவன் பெயர் என்ன?'' என்று கட்டுப்படுத்த இயலாத பொறாமையுடன் ஆவலாகக் கேட்டாள்.

பெரியநாயகி அலக்ஷியமாகச் சூள் கொட்டினாள். ''அவன் பேரும் ஊரும் யாருக்குத் தெரியும்? அன்னம்மா மகன் வெளியூரிலே

வேலைக்குப் போன இடத்திலே ஒரு பெண்ணைத் தாயாருக்குத் தெரிவிக்காமே கட்டிக்கிட்டான். விஷயம் தெரிஞ்சதும் கிழவிக்குக் கோபம் தாங்க முடியலை. அவள் என்ன குலமோ, எப்படிபட்டவளோன்னு சந்தேகம் ஏற்பட்டது. அவளைக் கூட்டிக்கிட்டு வீட்டுக்குள்ளே நுழையப்படாதுன்னு கடுமையா உத்தரவு போட்டுவிட்டா. மகனும் ரொம்ப பிடிவாதக்காரன். பெண்ஜாதி இல்லாம இந்த வீட்டுக்கு வரதில்லைன்னு ஒரே பிடியா வெளியூரிலேயே தங்கிவிட்டான். இனி மேலே அவன் எங்கே வரப்போகிறான்? போன வருடம் காலராவிலே திடீர்னு அவன் போய்விட்டான்னு சேதிவந்தது. அன்னம்மாளுக்கு ஈவு இரக்கம் என்பதே கிடையாது. நெஞ்சிலே கொஞ்சமாவது ஈரம் இருந்தால், மகன் செத்ததைக் கேட்டதும் அலறி அடிச்சிக்கிட்டு ஓடியிருக்க மாட்டாளா? விட்டது பந்தமின்னு, தலையை முழுகிவிட்டு நிம்மதியா இருந்து விட்டா!'' என்றாள் வெறுப்பாக.

அருணா மேலே எதுவும் தூண்டிக் கேட்கவில்லை. அவளது சிந்தனை முழுவதும் தங்களுக்கு ஒரு காலத்தில் சொந்தமாயிருந்த கண்ணாடி பீரோமீது வியாபித்து இருந்ததனால் அவள் மௌனமாக இருந்துவிட்டாள்.

அண்ணனும் அக்காவும் பட்டினியாகப் பள்ளிக்கூடத்தில் அடைந்து கிடக்கையில், அருணாவுக்கு மட்டும் அன்று பகல் சோறும் தயிரும் கிடைத்தன. கூட இருந்து தன்னுடன் வேலைகளைக் கவனித்துக் கொண்டதற்காக பெரியநாயகி தாராளமாக இரண்டு கரண்டி தயிரைக் குழந்தையின் இலையில் பரிவுடன் பரிமாறி உபசரித்தாள். சாப்பாடு முடிந்ததும் தன்னுடைய மரப் பொம்மைகளை எடுத்துக்கொண்டு வாயிற் திண்ணையில் விளையாட வந்து உட்கார்ந்தாள் அவள். அது சமயம் அடுத்த வீட்டு வாயிற் கதவைத் திறந்துகொண்டு, அன்னம்மாள் இடுப்பிலே கூடையுடன் வெளியே வந்தாள். சுற்றும்முற்றும் உறுத்துப் பார்த்த கிழவியின் கண்களில் திண்ணைமீது உட்கார்ந்திருந்த அருணா தென்படவேயில்லை.

சற்றுத் தொலைவிலே சாலையிலேயிருந்த பெரிய புளிய மரத்தை யாரோ வெட்டிக் கொண்டிருந்தார்கள். மரத்தடியில் சிதறிக்கிடந்த

சிராய்களைத் தெருவில் உள்ள பெண்கள் காத்திருந்து ஆளுக்குக் கொஞ்சமாக அள்ளிக் கொண்டு போனார்கள். ஒரு கூடை நிறையத் தானும் அதை அள்ளிக் கொண்டு வந்தால் ஒரு வார காலத்திற்கு அடுப்பு எரிக்க உதவும் எனக் கணக்கிட்ட கிழவி, வெய்யிலைப் பாராது, தன்னாடிக் கொண்டு அங்கு சென்றாள்.

இதை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த அருணாவுக்குத் திடீரென்று ஒரு பரபரப்பு ஏற்பட்டது. திண்ணையிலிருந்து தொப்பெனக் கீழே குதித்தாள். இரு புறமும் தெருவைக் கண்களால் ஆராய்ந்து கொண்டு, கை விரலைக் கடித்தபடி ஆவலுடன் சிறிது நேரம் நின்றாள். அன்னம்மாள் அவசரத்தில் வாயிற் கதவை வெளியே விட்டுப் பூட்டாது சென்றிருந்தாள். தெருவில் மனித சஞ்சாரமும் காணப்படவில்லை. சப்தமிடாது கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்று ஒரு முறை அந்தக் கண்ணாடி பீரோவை நன்றாகப் பார்க்க வேண்டும் என்ற ஆசையை அச்சிறுமியால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. கதவை மெல்லத் திறந்து கொண்டு பூனைபோல் அடிமேல் அடிவைத்து அருணா, முடிவில் உள்ளே துணிவாகச் சென்று விட்டாள்.

அன்னம்மாளின் வீட்டுக் கூடத்திலே வைக்கப்பட்டிருந்த தங்கள் சொத்தான கண்ணாடி பீரோ அருகில் வந்ததும், அருணாவிற்குத் துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது. வழுவழுப்பாக இருந்த பீரோவின் மரக்கதவை மெல்லத் தடவிப் பார்த்தாள். தூசி படிந்து கிடந்த கண்ணாடி முன்பு தன் பிரதிபிம்பத்தை ஏற இறங்க கவனித்துக் கொண்டாள். இந்தக் கண்ணாடி பீரோவுக்குள்ளே அம்மா தன் புடைவைகளை எல்லாம் அடுக்கி வைத்திருப்பாள். பண்டிகை தினங்களின்போது, இடுப்பிலிருந்த சாவிக் கொத்தை எடுத்துக் கதவைத் திறந்து, தன் சிவந்த விரல்களால் பட்டுப் புடவைகளைப் பொறுக்கி எடுப்பாள். பாட்டி தான் சொல்லியிருக்காளே, அம்மாவின் சிவப்பு நிறத்திற்கு கருப்பு பட்டுசேலை மிகவும் எடுப்பாக அழகாக இருக்கும் என்று! நெற்றியிலே குங்குமம் வைத்துக் கொண்டதும் அம்மா இப்படித்தான் கண்ணாடி முன்னால் வந்து அழகு பார்த்துக் கொண்டு நிற்பாள் - எனப் பலவாறு தன் தாயைப்பற்றிக் கற்பனைகள் செய்தவண்ணம் கண்ணாடியில் தெரிந்த தன் சிறு உருவத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு தன்னை மறந்து நின்று விட்டாள்.

கிரீச்சென்று கதவு அசையும் ஓசை கேட்டதும் அருணா திடுக்கிட்டுத் திரும்பினாள். ஆனால் அதற்குள் அன்னம்மா கூடையுடன் உள்ளே வந்து விட்டாள். வாயிற்கதவு திறக்கப்பட்டிருப்பதைக் கண்டதும் கிழவிக்கு பலவிதமான சந்தேகங்கள் ஏற்பட்டன. வெய்யிலிலிருந்து வந்ததனால் அவளது கண்களை இருட்டு திரையிட்டு மறைத்திருந்தது. எனவே, உள்ளே நின்று கொண்டிருப்பது யாரென அவளால் தெரிந்து கொள்ள முடியவில்லை. கூடையைக் கீழே இறக்கி வைத்துவிட்டு, கோபத்துடன் "யாரது வீட்டுக்குள்ளே?" என்று உரத்த குரலில் அதட்டினாள்.

அருணாவின் நெஞ்சு பயத்திலே படபடவென்று துடிக்கத் துவங்கியது. கால்களும் கைகளும் தடுமாற அவள் "நான்தான் பாட்டி" என்று கூறிவிட்டு ஒரு கணம்கூட அங்கே தாமதிக்க விரும்பாது 'விர்' எனப் பாய்ந்து ஓடிவிட்டாள்.

"யாரது அரணைக்குட்டியா? அடிப்பாவி மகளே! நான் இல்லாதபோது வீட்டைத் திறந்து கொண்டு..." என்று ஆச்சரியத்துடன் கூவிய கிழவி, சந்தேகத்துடன், இங்குமங்கும் ஆராயத் துவங்கினாள். வீட்டிலிருந்த சாமான் யாவும் இருந்த இடத்தில் பத்திரமாகத்தான் இருந்தன என்றாலும், அன்னம்மாவின் மனம் சமாதானமடையவில்லை; ஏதாவது ஒன்றைத் திருடிக் கொண்டு போகத்தான் அந்தச் சிறுமி அங்கே வட்டமிட்டுக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால், அவளுக்கு அங்கே என்ன வேலை?- இவ்வாறு எண்ணிய அன்னம்மாவுக்கு அருணா மீது ஆத்திரம் பொங்கி கொண்டு வந்தது.

அன்று மாலை, வீட்டுக்குத் திரும்பி வந்த சதாசிவம் மிகவும் கோபமாக இருந்தான். முதல் நாள் மாலை அவன் கொடுத்துச் சென்ற இரண்டு குடம் பாலும் திரிந்து நாசமாகிவிட்டதென்று வாடிக்கையாக அவன் விற்பனை செய்து வந்த காப்பி கடைக்காரன் அதற்கு விலைகொடுக்க மறுத்துவிட்டான். பெரியநாயகி பால் குடங்களைக் கவனமாகப் பார்த்துத் தேய்த்து சுத்தப்படுத்தியிருந்தால் இந்த எதிர்பாராத நஷ்டம் ஏற்பட்டிருக்குமா என்று சதாசிவத்திற்கு அவள் மீது மனத்தாங்கல் ஏற்பட்டது. பொறுப்பற்றவர்களுக்கெல்லாம்

சோறு போட்டு தன் வீட்டிலே பாரமாக வைத்துக் காப்பாற்றும்படி தன் நிலைமை கேவலமாகிவிட்டதே என்று தனக்குள்ளே எண்ணி வெருண்டவனாக அவன் வீட்டுக்குத் திரும்பி வந்திருந்தான். வண்டியினின்று அவன் இறங்குமுன்பே அன்னம்மாவின் அதட்டல் குரல் கேட்டது.

''சதாசிவம்! உன் குழந்தைகள் படுத்தும்பாடு என்னால் சகிக்க முடியவில்லையப்பா. அந்தக் கடைசி குட்டி இருக்குதே அது நான் இல்லாத சமயம் வீட்டுக்குள்ளே புகுந்து என் பெட்டியை திறந்து ஒரு ரூபாயைத் திருடிக்கிட்டு ஓடிவிட்டது. நீ இந்தக் குழந்தைகளைக் கொஞ்சம் அடக்கி வைக்காட்டி பிறகு நான் பொல்லாதவளாக இருப்பேன்'' என்றாள் கோபத்துடன்.

''கவனிக்கிறேன்'' என்று பதில் அளித்த சதாசிவம் கோபத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டு உள்ளே நுழைந்தான். தாழ்வாரத்தில் தரைமீது புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு, அதைக் குனிந்து பார்த்துத் தன் கற்பலகையில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள் அருணா. வாயிற்படியைத் தாண்டிய சதாசிவம் ஒரே பாய்ச்சலில் மகளை அணுகி, இடது கரத்தால் அவளது கூந்தலைப் பற்றி பயங்கரமாகக் குலுக்கி, தூக்கி நிற்க வைத்தான்.

இவ்வளவும் ஒரு கணத்திலே நடந்ததாகையால், பயத்திலே கை கால்கள் பதற ''பாட்டி!'' என்று அபயக்குரல் கொடுத்து குழந்தை அலறிவிட்டாள். அவள் பிடியிலிருந்த கரும்பலகை கீழே நழுவி விழுந்து சுக்கல் நூறாக உடைந்து, துண்டுகள் நாலாபுறமும் சிதறின. ''திருட்டு நாயே! பாட்டியை ஏன் கூப்பிடுகிறே?'' என்று ஆத்திரத்துடன் கூச்சலிட்ட தந்தை, அருகில் கிடந்த விறகுக் கட்டை ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டான். இதைக் கண்ணுற்ற பெரியநாயகி தண்ணீர்குடத்தை அவசரமாகக் கீழே இறக்கி வைத்துவிட்டு, பின்கட்டிலிருந்து ஓடி வந்தாள். ஆனால் அவள் வந்து தடுக்குமுன் சதாசிவம் மூர்க்கத்தனமாக அடிக்கத் துவங்கிவிட்டான். ஒன்று, இரண்டு, மூன்று என்று அருணா தன்மீது விழுந்த அடிகளை எண்ணினாள். அவ்வளவுதான், அவளுக்குத் தெரியும். தாங்க முடியாத ஒரு வேதனை வலது கையில் ஏற்படவே அவள் கண்கள் இருண்டன. ''இனிமேலே அடுத்த வீட்டிற்குள்ளே காலை வைப்பியா?'' என்று கர்ஜித்த தந்தை, நான்காவது முறையாகக் கையிலிருந்த ஆயுதத்தை

உயர்த்துமுன் தரையில் உணர்வற்றுச் சுருண்டு விழுந்துவிட்டாள்.

அருணாவின் முகத்தை உற்றுக் கவனித்த பெரியநாயகியின் நெஞ்சு பதைபதைத்தது. ''அடே பாவி! குழந்தையைக் கொன்றுவிட்டியே! அருணா செத்து விட்டாளே!'' என்று அலறியபடி வேதனையுடன் முகத்திலே அறைந்து கொண்டு அவள் ஓலமிடத் துவங்கினாள்.

அசைவற்றுக் கிடந்த குழந்தையின் உடலை சில வினாடிகள் வெறித்துப் பார்த்தான் சதாசிவம். குப்பென்று அவன் தேகம் முழுவதும் வியர்வை அரும்பி ஆறாக வழிந்தோடியது. கையில் பிடித்திருந்த விறகுக் கட்டையை வெறுப்புடன் வீசிவிட்டுத் தோட்டத்தின் பக்கம் சென்று விட்டான்.

10

காரின் பின் ஆசனத்தினின்று நிமிர்ந்து உட்கார்ந்தாள் ஜெகதா. மூக்கின்மேல் நழுவி விழுந்து கொண்டிருந்த மூக்குக் கண்ணாடியை இடது கரத்தினால் சற்றுத் தூக்கிச் சரிப்படுத்திக் கொண்டாள். பிறகு, அருகில் ஆசனத்தில் கிடந்த அழகுப் பையை எடுத்து ஆராய்ந்து பார்த்தாள். இரண்டு தினங்களுக்கு முன்பு பாங்கிலிருந்து எடுத்து வந்திருந்த இருநூறு ரூபாய்களில், மீதமிருந்த இரண்டு பத்துரூபாய் நோட்டுகள்தான் என்பதை உணர்ந்த மாத்திரத்தில் அவள் உடல் முழுவதும் திகிலில் குப்பென்று ஒரு முறை வியர்த்தது. ''இந்தச் செலவுகளை எவ்வளவு காலம் சமாளிக்கமுடியும்!'' என்று தனக்குள் எண்ணிக் கலவரமடைந்த அவள், கண்களை மூடிக்கொண்டு, ஆசனத்தில் சாய்ந்து கொண்டாள்.

தம்படியைக்கூட விடாது பலமுறை எண்ணிப் பார்த்துக் கணக்கிட்டுச் செலவழிக்கும் வழக்கமுள்ள ஜெகதாவிற்குச் சில காலமாக அபாரமான பல வகைச் செலவுகள் ஏற்பட்டிருந்தன. அவளது கணக்கையும் கட்டுப்பாடுகளையும் மீறி, பணம் தண்ணீர்போல் வேகமாகச் செலவழிந்து கொண்டு போயிற்று.

பழனியப்பக் கவுண்டரின். தர்மபத்தினியின் சிநேகிதம் ஏற்பட்டதிலிருந்து தனது பணத்திற்கு வந்த ஆபத்தை ஜெகதா அறியாது இருக்கவில்லை. லோகநாயகியம்மாளின் சிநேகிதம் அவளுக்கு மெத்தவும் பிடித்திருந்தது. அந்த அம்மாளுடன் கிளப்புகளிலும், மற்ற பொது இடங்களிலும் சேர்ந்து காணப்படுவது மிகவும் பெருமையாகத்தான் இருந்தது. அவர்கள் வீட்டுச் சிநேகிதத்தினால்தான், அவள் கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாத நகரத்தில் பிரபலமான பணக்காரர்கள், ஆபீஸர்கள் வியாபாரிகள் இவர்கள் குடும்பத்துடன் நெருங்கி உறவாடும் சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டன.

சில மாதங்களுக்கு முன்பு ஜெகதா என்பவள் யார் என்றுகூட நினைத்துப் பார்க்கவும் பொழுதில்லாத லேடி கந்தசாமிகூட, ''மிஸஸ் சோமசுந்தரம் இன்று கிளப்பிற்கு வரவில்லையா? ஏன்?'' என்று கவலைப்பட்டு விசாரிக்கும் அளவு, ஜெகதா நகரத்தின் பெரிய மனிதர்களின் வட்டாரத்திலே பிரபலமடைந்து விட்டிருந்தாள்.

ஸ்ரீமதி லோகநாயகியம்மாளுக்குப் பொதுநல சேவை என்பது மனதிற்குப் பிடித்த காரியம். அவர்கள் செய்து வந்த 'பால பரிபாலனம்' என்ற சமூகத்தொண்டில், மாதம் இருமுறை ஏழைக் குழந்தைகளுக்குப் பாயாசம் வார்ப்பது என்பது ஒரு முக்கிய பாகமாக இருந்தது.

ஒரு சமயம் பால பரிபாலன சேவையின்போது லோகநாயகி அம்மாள் கையில் பிடித்து குழந்தைகளுக்குப் பாயசம் வார்த்த பாத்திரத்தை ஜெகதா அருகில் நின்றபடி கையால் தொட்டுக் கொண்டிருந்தாள். அந்த நிலையிலே ஒரு பத்திரிகை நிருபர் அக்காட்சியை படமெடுத்து, நகரத்திலே பிரபலமாக விளங்கிய ஒரு பத்திரிகையில் வெளியிட்டிருந்தார். 'இடது புறம் நிற்பவர், பிரபல பாக்குத்தூள் வியாபாரி பழனியப்பக் கவுண்டர் அவர்கள் மனைவி லோகநாயகி. வலது பக்கம், பாத்திரத்தை தாங்கி நிற்பவர் 'ஸ்ரீமதி ஜெகதா' என்று படத்தின் அடியில் ஒரு சிறு குறிப்பும் வெளிவந்திருந்தது. அந்தப் பத்திரிகையைப் படித்த அநேக ஸ்திரீ நேயர்களுக்கு ஜெகதா யார் என்று கூடத் தெரிந்திருக்கப் பிரமேயமிருக்கவில்லை. பிரபல பாக்குத்தூள் வியாபாரி

பழனியப்பரின் மனைவி ஸ்ரீமதி லோகநாயகியை அவர்களில் பலர் அறிந்திருந்தார்கள். பத்திரிகையைப் பார்த்த அவர்கள், ''யார் இந்த அம்மாள், லோகநாயகியின் புடவைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு சதா வால்போல் திரிகிற இந்த அம்மாள் யார்?'' என்றுதான் அலட்சியமாகப் பேசினார்கள்.

தன்னைப் பற்றிப் பிறர் கொண்டிருந்த அபிப்பிராயத்தை ஜெகதா அறிந்திருந்தாளானால் அந்தப் பத்திரிகையில் வந்த படத்தை பக்தி சிரத்தையுடன் கத்தரித்துப் பொக்கிஷம்போல் சேகரித்து வைத்திருக்க மாட்டாள். பழனியப்பக் கவுண்டர் குடும்பத்தின் உறவால் தனது கௌரவமும் அந்தஸ்தும் வானளாவ உயர்ந்துவிட்டதாக அவள் பெருமைப்பட்டுக் கொண்டாள். பிரபலமடைய வேண்டும், பெரிய மனிதர்களுடன் தோளோடு தோள் உராய நெருங்கி உறவு கொள்ள வேண்டும். 'ஜெகதா! ஜெகதா!' என்று அடிக்கடி நாலுபேர் வாயில் தன் பெயர் அடிபடவேண்டும் என்றெல்லாம் ஆசை தீவிரமாக இருந்ததால், 'ஐயோ காசே! கையை விட்டுப் போகிறாயே?' என்று அழுது சாத்தியப்படுமா?

ஆனாலும் இவ்வளவு பணம் செலவாகிவிட்டதே என்று அப்போதைக்கப்போது ஜெகதாவின் அந்தராத்மா விழித்துக் கொண்டு கணக்குப் பார்த்துக் கலங்கி கூக்குரலிடுவது உண்டு. கூடவே புகழ் என்பதன்மீது ஏற்பட்டிருந்த அபார மோகம், அந்தராத்மாவின் கூக்குரலை அப்படியே சடக்கென்று அமுக்கி விட்டதனால் ஜெகதாவின் மனக் கலக்கம் ஒரே ஒரு கணந்தான் வியாபித்து நிற்கும். அடுத்த கணம், '' நமக்கு செலவிற்கு இல்லாத இந்தப் பணம்தான் யாருக்கு?'' என்று சமாதானப்படுத்திக் கொண்டு மனக் கலக்கத்தை உதறிவிடுவாள்.

மேற்கூறிய சமாதான மொழியானது ஜெகதாவின் சொந்தக் கற்பனை அல்ல. லோகநாயகி அம்மாளின் போதனையானது நாள்தோறும் காதிலே ரீங்காரம் செய்து, முடிவில் அவளையும் அறியாது அவளது உள்ளத்திலே குடிகொண்டு விட்டது. லோகநாயகிக்கு ஒரு தனித் திறமை இருக்கத்தான் இருந்தது. தன்னுடன் பழகும் சிநேகிதிகள் மீது தனது கொள்கை, தனது நாகரிகம், தனது மனப்பான்மை யாவற்றையும் விரைவில் ஏற்றி

அவர்களை புது மனிதர்களாக மாற்றிவிடும் ஒரு விசேஷ சக்தி நிறைந்து இருந்தது. 'நீங்கள்', 'வாருங்கள்' என்ற மரியாதையான மொழிகளின்று 'நீ', 'வா', 'போ' என்று ஒருமை வாசகத்திலே பேசும் அளவு லோகநாயகியும் ஜெகதாவும் நெருங்கிப் பழகி விட்டார்கள். அந்நிலை வரக் காத்திருந்த லோகநாயகி, தனது அபார சக்தியை மெல்லத் தன் சிநேகிதி மீது பிரயோகிக்கத் துவங்கினாள்.

இந்தப் புது சிநேகிதம் ஆரம்பித்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள், லோகநாயகியம்மாள் ஜெகதாவின் பங்களாவிற்குத் திடீரென்று பிரவேசம் செய்தாள். "ஜெகதா! இன்னிக்கு நான் ஒரு ...ரியம் செய்தேன். நீ கோபிக்கக் கூடாது. வீட்டிலே கிடக்கும் 'குளிர ...வக்கிற பெட்டி' ரிப்பேராகிவிட்டது. வெய்யில் நாளோ நெருங்கி வருகிறது. கோடை காலத்திலே ஐஸ் தண்ணியில்லாம என்னால் ஒரு மணி நேரங்கூட காலந் தள்ளமுடியாது. என் சித்தப்பார் மகன் ஒருத்தன் குளிர வைக்கும் பெட்டிகள் வியாபாரம் செய்கிறான். கமிஷன் தள்ளி, கொள்ளை லாபத்திலே பெட்டியை நமக்குக் கொடுப்பதாகச் சொன்னான். அதனால், எங்கள் வீட்டிற்கு, ஒரு பெட்டியும், உனக்கு ஒன்றும் ஆர்டர் கொடுத்து விட்டேன். விலை ஆயிரத்து எழுநூறுதான்!" என்றாள்.

"குளிர வைக்கும் பெட்டியா?... வந்து... அது எனக்கு..." என்று முடிக்க முடியாது உளறினாள் ஜெகதா கலவரத்துடன். திகிலில் குபீரென்று அவள் உடல் ஒரு முறை வியர்த்து ஓய்ந்தது.

"வெய்யில் காலத்திலே ஒரு டம்ளர் ஐஸ் தண்ணி குடிக்க வேணுமின்னா, 'குளிரவைக்கும் பெட்டி'யிருந்தால்தானே சௌகர்யப்படும்?" என்று அதட்டிப் பேசினாள் லோகநாயகி.

'ஒரு லோட்டா ஐஸ் தண்ணி வேணுமானால், பக்கத்திலிருக்கும் வெற்றிலை பாக்குக் கடையில் காலணாவுக்கு ஐஸ் கட்டி வாங்கினால் போதுமே? ஒரு டம்ளர் தண்ணிக்காக ஆயிரத்து எழுநூறு ரூபாயா செலவழிப்பது? ஐயையோ!' என்று கூக்குரலிட வேண்டுமென்று ஜெகதாவிற்கு ஆவேசம் வந்தாலும் பேச முடியாது தொண்டை அடைத்துக் கொண்டு விட்டது.

"என்ன யோசிக்கிறாய் ஜெகதா? தண்ணியென்றால் வெறும் ஐஸ்

தண்ணி மட்டும்தானா? இன்னும் எவ்வளவோ சௌகரியங்கள் இந்தப் பெட்டியினால் ஏற்படும். உனக்கு வேண்டாம் என்றால் அதனால் பரவாயில்லை. நானே அதற்கும் சேர்த்துப் பணம் அனுப்பி விடுகிறேன். ஏன் என்றால் ஒரு தடவை ஆர்டர் செய்துவிட்டு, வேண்டாம் என்று திருப்பி அனுப்புவது அவ்வளவு நல்லதில்லை பார்!" என்று பிகுவாகவும் பிடிவாதமாகவும் பகர்ந்தாள்.

"சே சே! அதெல்லாம் ஒன்றுமில்லை. எங்கே வைப்பது அதை என்று யோசித்துக் கொண்டிருந்தேன்" என்று திணறிவிட்டு, லோகநாயகி அளித்த பில் தொகைக்கு உடனே ஒரு 'செக்' எழுதி கையெழுத்திட்டுக் கொடுத்து விட்டாள்.

ஒரு கூஜா குளிர்ந்த நீருக்காக அவ்வளவு பணத்தை விழுங்கிவிட்டு வீட்டில் வந்து உட்கார்ந்திருந்த அந்தப் பெட்டியைப் பார்க்கும் போதெல்லாம் அவளது வயிறு அனலாகப் பற்றி எரிந்தது என்னவோ வாஸ்தவம். ஆனால் அதை அவள் வெளியே சொல்லிக்கொள்ள முடியவில்லை.

இவ்வாறே அவளுக்கு இன்னொரு சமயம் ஒரு பெரிய செலவு திடீரென்று எதிர்பாராத விதமாக ஏற்பட்டு விட்டது.

லோகநாயகி அம்மாள் ஒரு புடவைக் கடைக்குள் பிரவேசித்தாள். காரில் உட்கார்ந்திருந்த ஜெகதாவையும் உள்ளே வரும்படி மிகவும் வற்புறுத்தினாள். கல்யாணத்தின்போது எடுத்த இரண்டு விலையுயர்ந்த டிஷ்யூ ஜரிகைப் புடவைகள் ஜெகதாவிடம் இருந்தன. எங்கேயாவது கல்யாணம் அல்லது விசேஷம் என்றால், பெட்டியிலே கிடக்கும் அவைகளில் ஒன்றை எடுத்து, தூசி போகத் தட்டிவிட்டுக் கட்டிக்கொண்டு வெளியே கிளம்பி விடுவது அவள் வழக்கமாக இருந்தது. அதனால், சிகப்பு அல்லது ஊதா நிற டிஷ்யூ சேலை, தலைப்பு மட்டும் தொலைவிலே தெரிந்தால் கூடப்போதும், 'ஜெகதா வந்திருக்கிறாள் போலிருக்கிறது' என்று அவளுடைய உறவினர்கள் கண்டு கொண்டு எச்சரிக்கை ஆகிவிடுவது வழக்கமாகியிருந்தது.

இவ்வாறு அந்த வர்ணத்துடன் ஒன்றிவிட்டிருந்த ஜெகதாவை வேறு வர்ணங்களுக்கு அறிமுகப்படுத்தும் கைங்கர்யத்தை

லோகநாயகி ஏற்றுக் கொண்டிருந்தாள். கடைக்குள் நுழைந்ததும், தனக்கு பலவித வர்ணத்திலே பத்து சேலைகளை அரைக் கணத்திலே எடுத்து அடுக்கிக் கொண்டதும், அதேபோல் ஜெகதாவிற்கும் அரை டஜன் சேலைகளை விரைவாகப் பொறுக்கி அடுக்கிக்கொண்டாள்.

''எனக்கு இதெல்லாம் என்னத்துக்கு லோகா?'' என்று ஜெகதா கூறி மறுப்பதற்கு இடமே கொடுக்காமல், ''நீ கட்டிக்கிற இரண்டு டிஷ்யூக்களும் ரொம்பக் கனமாஇருக்கு. இந்த வெய்யில் காலத்திலே அதை ஏன் தூக்கிக் கொண்டு கஷ்டப்படணும், பாவம்! என்னைப் போல இது மாதிரி மெல்லிய சேலைகளை நீயும் கட்டிக்கொள். விலை ஒண்ணும் அதிகம் இல்லை, ஜெகதா. நீ மலைக்க வேண்டாம். ஆமாம், உன் செலவு என்றதும் நீ ஏன் இப்படி அரண்டு போகிறாய். அத்தான்தான் உனக்கு வேண்டியது விட்டு விட்டுப் போயிருக்கிறார். நீ சந்தோஷமாக இருக்க உதவாம பின்னால் யாருக்கு இந்தப் பணம்?'' என்று அதட்டி விட்டு, அவளது வார்த்தைகளைக் காதில் போட்டுக்கொள்ளாமல், புடவைகளுடன் கடையினின்று வெளிப்பட்டு விட்டாள் லோகநாயகி.

ஒவ்வொரு செலவின் போதும் லோகநாயகி கூறிய சமாதான மொழிகள் பசுமரத்து ஆணிபோல் நன்றாக ஜெகதாவின் மனதிலே பதிந்துவிட்டன. தானே ஏதாவது ஒரு அனாவசியச் செலவை இழுத்துவிட்டுக் கொண்டால் கூட தனக்குத் தானே அவள் சமாதானம் கூறிக்கொள்ள அந்த வார்த்தைகள் உதவின. 'நமக்கில்லாமல் இந்தப் பணம் யாருக்கு? இவ்வளவு காலமும் செட்டாக வாழ்ந்தாயிற்று. இருக்கிற மிச்ச காலத்திலாவது நன்றாக சுகமாக வாழ்ந்தால் யார் அடிக்கப் போகிறார்கள்?'' என்று ஒவ்வொரு சமயமும் அவள் தன்னைத்தானே தேற்றிக் கொண்டாள்.

லோகநாயகியின் போதனையின் பேரில்தான் அவள் சமீபத்தில்தன் சொந்த உபயோகத்திற்காக ஒரு சிறு கார் வாங்கியிருந்தாள். அந்தக் காரில்தான் அன்று காலை ஒரு காரிய நிமித்தம் கடைத்தெருவிலே பவனி வந்து கொண்டிருந்தாள். அன்றைய தினம் அவளது பிறந்த நாள். அன்று பகல் விருந்தின்போது தன்னுடன் கூட இருந்து சாப்பிட தன் சிநேகிதி லோகநாயகியையும் அவளது இரு குழந்தைகளையும் அழைத்திருந்தாள். விருந்து

சாப்பாட்டிற்கு வேண்டிய சாமான்களை நேரில் வாங்கி வரவே காரை எடுத்துக்கொண்டு காலை வேளையில் வெளியே கிளம்பியிருந்தாள். பாதாம்கீர், தயிர்வடை, மைசூர்பாகு, ஐஸ்கிரீம், கோஸ்பட்டாணி கூட்டு, வெண்டைக்காய் சாம்பார் என்று விருந்தைப் பற்றி மனத்திற்குள்ளே ஒரு அட்டவணை தயாரித்துக் கொண்டிருந்த ஜெகதா திடுக்கிட்டு விழித்துக்கொண்டாள்.

காய்கறிக் கடைகளைத் தாண்டி கார் பல கஜம் அப்பால் சென்றுவிட்டதை உணர்ந்ததும், ''டிரைவர்!'' என்று கிரீச்சிட்டு அலறினாள். ஒரே அழுத்தலில் காரை நிறுத்தி விட்டு டிரைவர் அவள் பக்கம் வியப்புடன் திரும்பிப் பார்த்தான். சுருண்டு கிடந்த அவனது கிராப்பு சிகை காற்றிலே பறந்து ''என்ன?'' என்று வினவும் தோரணையில் ஒரு கேள்விக் குறிபோல் வளைந்து நெற்றிமேல் குத்திட்டு நின்று கொண்டிருந்தது.

''காய்கறிக் கடை கிட்ட நிற்கச் சொன்னால் காரைக் கொண்டு எங்கே நிறுத்தியிருக்கிறாய்?'' என்று கோபத்துடன் பற்களைக் கடித்த ஜெகதா, அவனை உறுத்து விழித்து அதட்டினாள்.

''உங்கள் மனசிலே என்ன எண்ணம் ஓடுதுன்னு எனக்கு ஜோஸியமா தெரியும்?'' என்று கூறும் பாவனையில் பதிலுக்கு விறைத்துப் பார்த்த வண்டியோட்டி, தனக்குள் எழுந்த சினத்தை வண்டிமீது காட்டுகிறவன் போல், பின்நோக்கி 'விர்' என்று வண்டியை துரிதமாகச் செலுத்திக் குறிப்பிட்ட கடை முன் டக்கென்று நிறுத்தினான். தலையை நீட்டி காரின் பின் பக்கத்தை கவனமாகப் பார்த்து வந்த ஜெகதா மீண்டும் கிரீச்சிட்டாள். ''டிரைவர்! உனக்கு கண் கிண் ஏதாவது இருக்கிறதா? அந்த வண்டி மேலே கொண்டு போய் மோதி விடறாப்பல நிறுத்தறியே?'' என்று கூக்குரலிட்டுவிட்டு மிகவும் கோபத்துடன் கதவைத் திறந்து கொண்டு இறங்கினாள்.

கடையினுள்ளே சென்று அவள் தலை மறையும் வரை காத்திருந்த டிரைவர், சாவதானமாக வண்டியை விட்டு இறங்கி, காரின் கதவின் மீது சாய்ந்து கொண்டு ஒரு பீடியைப் பற்ற வைத்துக்கொண்டான்.

''என்னண்ணே! அம்மா ரொம்ப கோவிச்சுக்கிறாப்பலே இருக்குது?'' என்ற கண்களைச் சிமிட்டிப் பரிகாசக் குரலில்

வினவினான், அங்கு நின்று கொண்டிருந்த மற்றொரு காரின் டிரைவர்.

''இந்தம்மா அப்படித்தான். அவங்க கோபம் இந்த பூபதியை ஒண்ணும் செஞ்சுக்க முடியாது'' என்ற உறுமிய டிரைவர், வாயினின்று எழும்பி வெளிவந்த புகை மண்டலத்தை அசட்டையாக 'பூ' என்று ஊதிச் சிதற விட்டான்.

''காரு புதுசு போல இருக்குதே. இதுக்கு முன்னாடி என்ன மாடல் வண்டி வச்சிருந்தாங்க?'' என்ற குசலம் விசாரித்தான் மற்றவன்.

''மண்ணாங்கட்டி மாடல்! ஜன்மத்திலே இப்பத்தான் ரெண்டு மாசத்துக்கு முன்னாடி அம்மா கார் வாங்கியிருக்கிறாங்க. முன்னே பின்னே கார் வச்சிருந்தாத்தானே டிரைவரை நடத்தற அருமை தெரியும். மாட்டு வண்டி ஓட்ற வண்டிக்காரனை அதட்டறாப்பல அல்லவா அதட்டறாங்க? கார் வாங்கி அறுபது நாள் ஆகலை. அதுக்குள்ளே நான் மூன்றாவது டிரைவர்ணா, பார்த்துக்க அண்ணே!'' என்று அலட்சியமாகப் பேசினான் பூபதி.

''வெளியிலே கிளம்பினா நாஸ்தா கீஸ்தாவுக்கு ஒண்ணும் கொடுக்கிறதில்லையா?'' என்று குறிப்பாக வினவினான் மற்றவன்.

''வெளியிலே சொன்னா வெக்கக்கேடு! காலையிலே ஏழு மணிக்கு வந்தால் வூட்டுக்குத் திரும்ப ராவுக்கு ஏழு மணியாகுது. இடையே பகல் சாப்பாட்டுக்கு அனுப்புறாங்களே அத்தோட சரித்தான். கடைகளுக்கு, மீட்டிங்குக்கு, அதுக்கு இதுக்குனு பொழுதனைக்கும் அம்மா சுத்திக்கிட்டே இருந்தா டிரைவரும் மனுசன்தானே. காருக்கு பெட்ரோல் போடறாப்பலே எனக்கும் அப்பப்போ ஒரு கப் காப்பித் தண்ணி போட்டாத்தான் 'ஸ்டியரிங்' கைப் பிடிக்க முடியும். நாஸ்தாவுக்கு டிரைவருக்கு நாலணா காசாவது கொடுப்போமுனு தோணினாத்தானே? ரொம்ப பேஜாரு பொழப்பு இது! இவங்களோட பெரிய ரோதனை; போங்க அண்ணாத்தே! ஏதாவது நல்ல ஸ்டுடியோ அம்பிட்டுதுன்னா இதை விட்டுவிட்டுப் போயிடலாம்னு யோசனை பண்ணிக்கிட்டிருக்கிறேன்'' என்று அலுத்துக்கொண்டான் பூபதி.

''இதுக்கு முன்னாடி யார் கிட்டேப்பா இருந்தே?'' என்று கவலையுடன் விசாரித்தான் அந்த டிரைவர்.

''ஒரு ஸ்டுடியோவிலேதான் இருந்தேன். எவ்வளவோ சுகமாக

இருந்திச்சு. நாஸ்தா என்கிற கவலையே கிடையாது. அண்டாவிலே எப்பப் பார்த்தாலும் காப்பி கொதிச்சுக்கிட்டே கிடக்கும். போறச்சேயும், வரச்சேயும், கப்கப்பா மொண்டு குடிச்சாலும் கேட்கிறவங்க கிடையாது'' என்றான் பூபதி.

''பின்னே அதை ஏன் விட்டுட்டே?'' என்று மற்றவன் குறுக்கே விசாரித்தான், விடாப்பிடியாக.

''ராத்திரி ஷூட்டிங்குக்கு கண்ணு முழிச்சு, உடம்பு ரொம்பப் பேஜாராப் போச்சு. இதென்ன பெரிய வேதனையா இருக்குதேன்னு அதை விட்டுட்டு இங்கே வந்து மாட்டிக்கிட்டேன்; தலைவிதிதான்; வேறே என்ன!'' என்று முணு முணுத்த பூபதி, அணைந்துபோன பீடித் துண்டைத் தூக்கி விட்டெறிந்தான் அலுப்புடன்.

''இவங்க எல்லாம், தானே கார் ஓட்டக் கத்துக்கிறதுதானே! நம்ப பிராணனை ஏன் வாங்கணுமாம்?'' என்று ஒத்துப் பாடிய மற்ற வண்டியின் டிரைவர், தன் எஜமானி வந்துவிடப் போகிறாள் என்ற ஓலியில் சுற்றுமுற்றும் ஒரு முறை பார்த்துக் கொண்டான்.

''இந்தம்மா அந்தக் காரியத்தையும் செய்து பார்த்து விட்டுத்தான் என்னை வேலைக்கு வச்சிருக்காங்க, 'ஸ்டியரிங்' கைப் பிடிச்சா வண்டி ரோட்டு மேலே ஓடினாத்தானே! நடை பாதை மேலே பாய ஆரம்பிச்சதும் அம்மாவுக்கு நடுக்கமாகிவிட்டது. இந்தத் தொல்லை என்னாத்துக்குன்னு டிரைவர் வெச்சுட்டாங்க. வண்டி ஓட்டுறதுன்னா சும்மாவா? இரும்பைப் பிடிச்சு, சும்மா பெட்ரோல் சூட்டிலே உட்கார்ந்து உடம்பு துரும்பா உருகிப் போகுது. அது எங்கே இவங்களுக்குத் தெரியுது? சரி, நான் வரேன். அதோ அம்மா வந்துட்டாங்க'' என்று முனகிவிட்டு கதவைத் திறந்து வண்டிக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

''வீட்டுக்கு ஓட்டு. கொஞ்சம் நிதானமாகப் போ, பீச்சி ரோடுனு நினைக்கிட்டு ஓட்டாதேயப்பா. வாங்கி இரண்டு மாசமாகலை, அதுக்குள்ளே வண்டி கலகலத்துப் போச்சு!'' என்று அதட்டிய ஜெகதா, சாமான்களை வண்டிக்குள் வைத்துவிட்டு, ஆசனத்திலே சாய்ந்து கொண்டாள்.

பங்களாவை அடைந்ததும் வண்டியினின்று இறங்கிய அவள்,

சுற்றிப் பிரதக்ஷணம் செய்தாள். ஒரு முறை தனது வாகனத்தைச் சுற்றிப் பிரதக்ஷணம் செய்தாள். வண்டியின் பின் சக்கரத்தையும், மற்ற பாகங்களையும் கூர்ந்து பார்த்துவிட்டு, "டிரைவர் இதோ பார். இந்த எழவுக்குத்தான் அப்பவே அடிச்சுக்கிட்டேன். அந்த வண்டியிலே மோதி கீறல் ஏற்பட்டு விட்டதே. வண்டி மேலே அருமையே இல்லாத நீ என்ன டிரைவர் போ! மாட்டு வண்டி ஓட்டறாப்பல அல்லவா இதை ஓட்டறே?" என்று இரைந்து கத்திவிட்டு அதே குரலில், "வள்ளி!" என்று கூவினாள்.

"ஏனம்மா!" என்று குரல் கொடுத்துக் கொண்டு ஓடிவந்த வேலைக்காரியிடம், "இந்த சாமானையெல்லாம் உள்ளே கொண்டு வை" என உத்தரவிட்டு, ராணிபோல் தலை நிமிர்ந்து மிடுக்கு நடையுடன் உள்ளே சென்றாள். சோபாவிலே உட்கார்ந்து கொண்டு பொன்னம்மாள் கொண்டு வந்து அளித்த குளிர்ந்த நீரைப் பருகிய பின் தான் அவளது கோபம் சிறிது தணிந்தது. சுற்று முற்றும் தன் கண்களை நாலா பக்கமும் செலுத்தி விட்டுத் தாழ்வான குரலில், "பொன்னம்மா, டிரைவர் தண்ணிவேணுமென்று கேட்டான்னு, அவனை நீ சமையல் அறைவரை உள்ளே வர அனுமதிக்காதே! அவன் பாக்குற பார்வையும் முழிக்கிற முழியும் எனக்கு ரொம்பப் பயமா இருக்கு. நேத்திப் பேப்பரில் ஒரு விஷயம் படிச்சேன். டிரைவர் போல நாலைஞ்சு தினம் வேலை பார்த்துவிட்டு ஒருத்தன், யாருமில்லாத சமயம் எஜமானி மூஞ்சியெதிரே கத்தியை நீட்டிப் பயமுறுத்தி, நகைகளைக் கழற்றி வாங்கிக் கொண்டு ஓடிவிட்டானாம். இந்த பூபதியைப் பற்றி எனக்குச் சந்தேகமா இருக்கு. எதுக்கும் வேலைக்காரங்களையும் மற்றவங்களையும் இருக்கிற இடத்திலே வைக்கிறதுதான் நல்லது" என்று பிரசங்கித்தாள்.

பொன்னம்மாள் பதில் கூறாது மௌனமாக நிற்பதை உணர்ந்த ஜெகதா, "போய் விடுவிடுன்னு வேலையைக் கவனி. அவங்க எல்லாம் பதினோரு மணிக்கு டாண்ணு வந்து விடுவாங்க" என்று அதட்டலாக உத்தரவிட்டு எழுந்து தன் காரியங்களைக் கவனிக்க உள்ளே சென்று விட்டாள்.

சரியாக காலை பதினோரு மணிக்கு லோகநாயகியம்மாள் ஜெகதா பங்களா வாசலில் காரினின்று கம்பீரமாக இறங்கினாள்.

அவ்வளவு பெரிய மனிதர் மனைவி தன்னை ஒரு பொருட்டாக மதித்து, தன் வீட்டில் விருந்து சாப்பிட வந்தது பற்றி ஜெகதாவுக்கு ஒரே பெருமை; அத்துடன் தாள முடியாத பரபரப்பு!

"வாங்க, வாங்க, குழந்தைகளையும் மறக்காம கூட்டிக்கிட்டு வந்தது பற்றி சந்தோஷம்" என்று வாய் குழற, வார்த்தைகள் தடுமாற ஆனந்தத்துடன் வரவேற்று உபசரித்த ஜெகதாவிடம், வீட்டு வேலைக்காரி வள்ளி தயக்கத்துடன் வந்து, "அம்மா! உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க" என்றாள்.

"இதோ வந்து விட்டேன்!" என்று அலட்சியமாகப் பதிலளித்துவிட்டு ஜெகதா, விருந்தாளிகள் சௌகர்யமாக உட்கார வசதிகள்செய்து கொடுத்தாள். சோபாவைத் தட்டி, திண்டுகளை ஒழுங்குபடுத்திவிட்டு, பாய்ந்து சென்று மின்சார விசிறியைச் சுழல விட்டாள். "உட்காருங்கள்! உட்காருங்கள்" என்று பரபரப்புடன் உபசரித்து விட்டு, நெற்றிமீது வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு, தன்னைத் தேடிக் கொண்டு வந்து நின்ற ஆசாமியைச் சந்திக்க வெளியே வந்தாள்.

கையில் பலத்த கட்டுடன், அழுக்குப் பாவாடையும், பரட்டைத் தலையுமாக ஒரு குழந்தையைப் பக்கத்தில் நிறுத்திக்கொண்டு, கிழிந்த புடவையை தரித்த ஒரு கிழவி நின்று கொண்டிருந்தாள். பிச்சை கேட்கத்தான் யாரோ வந்து விட்டார்கள் போலிருக்கிறது என்று எண்ணி வெகுண்ட ஜெகதா, என்னம்மா வேணும்?" என்று அதட்டி விட்டு மூக்குக் கண்ணாடி வழியே அவர்களை வெறித்துப் பார்த்தாள்.

"ஜெகதா! என்னை உனக்கு அடையாளம் தெரியலையா? நான் பெரியநாயகி. ஆசையோட நீ அருணான்னு பேர் வச்ச குட்டி இவதான்" என்று கூறிவிட்டு, "இந்தக் கோலத்தைப் பார்! இவ அப்பன் விறகுக் கட்டையால் இந்த பச்சைக் குழந்தையைப் போட்டு அடிச்சு கையையே முறிச்சு விட்டான். உன்னை நினைச்சி உடனே இதை எடுத்துக்கிட்டு ஓடிவந்தேன்" என்று மடமடவென்று பேசிவிட்டு, 'ஓ'வென்று வாய்விட்டு அழத் துவங்கினாள் பெரியநாயகி.

தன்னைச் சுற்றிலும் உள்ள பூமி கிர் என்று சுற்றுவது போல்

ஜெகதாவிற்கு பிரமை ஏற்பட்டது. இவ்வளவு காலமாக சிரமப்பட்டு பணமும் காலமும் செலவிட்டு சேகரித்து வைத்திருந்த அவளது குடும்ப கௌரவமும், அந்தஸ்தும் அந்த இரண்டு பேரினாலும் பொடிப் பொடியாகச் சிதறிவிடப் போகிறது என்று எண்ணிய மாத்திரத்தில் அவளுக்கு ஏற்பட்ட ஆத்திரத்தை விவரிக்கவே முடியாது. ''ஒரு கடிதாசி போட்டு விட்டு வரக்கூடாதா? திடுதிப்புனு கிளம்பி வந்து விட்டால்...'' என்று அந்தக் கிழவிமீது சீறி விழுந்தாள். பிறகு ''போதும், கொஞ்சம் உங்க அழுகையை நிறுத்திக் கொள்ளுங்கள். உள்ளே எனக்கு வேண்டியப் பட்டவங்க கல்யாண விஷயமாகப் பேச வந்திருக்கிறாங்க. அழுகுரல் கேட்டா அபசகுனம்னு எண்ணுவாங்க'' என்று அதட்டிவிட்டு, ''வள்ளி! இவங்க ரெண்டு பேரையும் நான் கூப்பிடறவரையில் கார்ஷெட்டிலே உட்கார்ந்திருக்கச் சொல்லு, அந்தக் குழந்தைக்குப் பசித்தால் பொன்னம்மாளைக் கேட்டு ஒரு லோட்டா பால் வாங்கிக் கொண்டு பின் புறத்திலே போய் கொடு'' என்று கூறிவிட்டு, விர் என்று உள்ளே திரும்பிச் சென்றுவிட்டாள்.

உல்லாசமாக சோபாவில் சாய்ந்து கொண்டு பத்திரிகை ஒன்றை புரட்டிப் பார்த்த வண்ணமிருந்த லோகநாயகி புன்முறுவலுடன், ''யாரது ஜெகதா?'' என்று விசாரித்தாள்.

ஜெகதாவின் நெஞ்சு பயத்திலே படபடவென்று அடித்துக் கொண்டது. வெட்கத்தினால் அவள் மனம் கூசியது. ''வர வர இந்த ஊரிலே பிச்சைக்காரர்கள் தொந்தரவு ரொம்ப ஜாஸ்தியாயிட்டதுங்க. யாரோ வழிப்போக்கர்கள்'' என்று சூள் கொட்டிவிட்டு, ''நாம்ப சாப்பிடலாமே!'' என்றாள்.

''நாங்கள் எல்லாம் ரெடிதான்!'' என்று கலீரென நகைத்த லோகநாயகி, ''நளினி! சுரேஷ்! அங்கே என்ன வேடிக்கை. வாங்க சாப்பிட!'' என்று அழைத்தவண்ணம் எழுந்தாள்.

11

கார் ஷெட்டின் தகரக் கூரை தண்ணீராக உருகிக் கீழே விழுந்துவிடும் போல் கோடை சூரியன் கொடுமையாக எரிந்து கொண்டிருந்தான். காரின் பின்புறத்திலே மறைவாகச் சென்று தரைமீது உட்கார்ந்து கொண்ட பெரியநாயகிக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. அவமானம் உடலை அனலாகத் தகிக்கச் செய்யவே, 'உஸ்! உஸ்!' என்று பெருமூச்சு விட்டவண்ணம் புடவைத் தலைப்பில் விசிறி, தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தாள். பாட்டியின் மீது தலையைச் சாய்த்துக் கொண்டு இடது கைக் கட்டை விரலைச் சுவைத்த வண்ணம் மடிமீது உட்கார்ந்திருந்த அருணாவினால் ஆவலை அடக்கமுடியவில்லை. ''பாட்டி! அந்தம்மா யார்?'' என்று மிகவும் ரகசியமாக முடிவில் கேட்டு விட்டாள்.

ஜெகதாவிடம் இத்தகையதொரு வரவேற்பைச் சிறிதும் எதிர்பாராது புறப்பட்டு வந்திருந்த பெரியநாயகியின் உள்ளம் ஏமாற்றத்தினால் குமுறிக் கொண்டிருந்தது. மேலும், ''கையிலிருந்த பணத்தைக் கடனுக்கு உதவி விட்டு, சதாசிவத்தின் வீட்டுக்கு உழைப்பது போதாதென்று, இந்த அவமானம் வேறேயா பாக்கியிருந்தது? தங்கை மகளைப் பற்றி அக்காவுக்கு இல்லாத உறவு எனக்கல்லவா ஏற்பட்டிருக்கிறது? இதை விதி என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது?'' என்று தன்னுடைய நிலையைக் குறித்துத் தன்னுள் மெத்தவும் வருந்திக் கொண்டிருந்தாள். ஆகவே குழந்தையின் பேச்சு அவள் காதுகளில் விழவில்லை. ஆவலில் துடித்துக் கொண்டிருந்த அருணா அத்துடன் விட்டு விடாமல் பாட்டியின் கன்னத்தை இடது கரத்தால் வருடிவிட்டு, ''பாட்டி! அந்தம்மா யார்?'' என மீண்டும் கேட்டாள்.

''அவதான் உன் அழகான பெரியம்மா! சித்த பேசாம சும்மா இரு'' என்று அதட்டிவிட்டு, பெரியநாயகி தன் கண்களில் நிரம்பிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். பாட்டி மிகவும் மன

வருத்தமாக இருக்கிறாள் என்பதை ஊகித்துக் கொண்ட குழந்தை, மேலே பலவும் கேட்டுத் தொந்தரவு கொடுக்க அஞ்சி, மீண்டும் வாயில் விரலைப் போட்டு சுவைத்துக் கொண்டு, மௌனமானாள். இது சமயம் வேலைக்காரி வள்ளி ஒரு லோட்டாவில் பாலை நிரப்பி எடுத்துக்கொண்டு கார் ஷெட்டிற்குள் நுழைந்தாள்.

''குழந்தைக்கு இதைக் கொடுக்கச் சொன்னாங்க. உங்களுக்கு ஏதாச்சும் வேண்டுமானால்....'' என்று இழுத்தாற்போல் வினவிவிட்டு தலையைச் சொறிந்து கொண்டு பற்களைக் காட்டி நாணிக் கோணி உடலை வளைத்துக் கொண்டு நின்றாள். நடந்து வந்த களைப்பும், வெய்யிலும் சேர்ந்து கொள்ளவே, பெரியநாயகிக்கு தாகத்தில் நாக்கு வறண்டு போயிருந்தது. ''குடிக்க குளிர்ந்த தண்ணி ஒரு சொம்பு கொண்டாம்மா'' என்று கேட்க வாயைத் திறந்தவள், சட்டென மனத்தை மாற்றிக்கொண்டு, ''ஒண்ணும் வேண்டாம். குழந்தையுடைய பசி அடங்கிச்சே அதுவே நான் சாப்பிட்டது போல'' என்று கூறிவிட்டு, விரைவில் அருணா காலி செய்து கொடுத்த பாத்திரத்தை வாங்கி வள்ளியிடம் நீட்டினாள்.

''அவர்கள் எல்லாம் சாப்பிட்டு விட்டுப் போனதும் கூப்பிடுகிறேன். அதுவரை இந்த இடத்தை விட்டு எங்கேயும் போகவேணாம்னு அம்மா சொல்லச் சொன்னாங்க'' என்று கூறியவள், மீண்டும் ஒரு முறை பற்களைக்காட்டி, குறுநகை செய்துவிட்டு, பின் பக்கமாக வீட்டிற்குள் சென்று மறைந்துவிட்டாள். பெரியநாயகி ப்திலுக்கு நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். சுவரின் மீது சாய்ந்தபடி கண்களை மூடிக்கொண்டு, சிந்தனையில் ஆழ்ந்து போனாள்.

குழந்தை அருணா அடியின் நோவு தாளாது இறந்துதான் போய்விட்டாள் என்று முதலில் பெரியநாயகி எண்ணிக் கலவரமடைந்து கூக்குரலிட்டுவிட்டாள். குழந்தையை வாரி மடிமீது போட்டுக்கொண்டு புலம்பி அழுது கொண்டிருக்கையில் இடையே எதேச்சையாக அருணாவின் முகத்தை உற்று நோக்கியபோது, கண் இமைகள் லேசாக அசைவது புலப்பட்டது. குழந்தை இறக்கவில்லை. மயக்கமடைந்து கிடக்கிறாள் என உணர்ந்ததும், தாமதம் செய்யாது மடியில் கிடந்த சிறுமியைத் தரையில் கிடத்திவிட்டு,

சமையலறையினின்று ஒரு செம்பில் குளிர்ந்த தண்ணீரை எடுத்துக்கொண்டு ஓடிவந்து முகத்தில் தெளித்து, பரபரப்புடன் விசிறியால் விசிறினாள். நெற்றிமீது அரும்பியிருந்த வியர்வையைத் துடைத்துவிட்டு குழந்தையின் உடலைப் பற்றி, ''அருணா! அருணா! இங்கே பாரம்மா! இங்கே பாருடா, என் கண்ணு!'' என்று தழதழத்த குரலில் பலமுறை கூப்பிட்டு, மூர்ச்சித்துக் கிடந்த குழந்தையைத் தட்டி எழுப்ப முயற்சித்தாள். பெரியநாயகியின் சைத்தியோபசாரங்களாலும், அவளது சிகிச்சை முறைகளாலும், சில நிமிஷங்கள் சென்றதும், அருணா முடிவில் கண்களைத் திறந்து பார்த்துவிட்டு ''பாட்டி''! என்று அழைத்தாள்.

தன் மகளை அந்நிலையிலே காணநேரிட்டால் பங்கஜம் அது சமயம் என்ன செய்திருப்பாளோ, தெரியாது. ஆனால் பெற்றதற்கு மேல் வளர்த்த பாசத்தினால் பீடிக்கப்பட்டு, அந்த குடும்பத்துடன் உழன்று கொண்டிருந்த அந்தக் கிழவியினால் தன் கண்ணீரைக் கட்டுப்படுத்தவே இயலவில்லை. ''என் தங்கக் கிளியே! இந்த வீட்டிலே வந்து பிறக்காம பிள்ளை அருமை தெரிந்த மகாராஜன் எவன் வீட்டிலாவது பிறந்திருக்கப்படாதா? மாட்டை அடிக்கிறாப்பல உன்னை அடிச்சுட்டானே, பாவி! அவன் கையைப் பாம்பு பிடுங்க'' என்று அரற்றிவிட்டு, குழந்தையைத் தன் மார்புடன் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

''பாட்டி! என்னை விடு. ஐயோ! வலிக்குது!'' என்று குழந்தை வலியுடன் அலறியபொழுதுதான் முதன் முதலாக அவள் அருணாவின் வலது கரத்தைக் கவனிக்க நேர்ந்தது. முழங்கை முடக்கின் மேல் பாகத்தில் கை கொழுக்கட்டை போல் வீங்கிச் சிவந்து இருந்தது.

வழக்கம்போல், மாடத்திலிருந்த விளக்கெண்ணெய்க் குப்பியை எடுத்து, சிறிது எண்ணெயை வீக்கத்தின் மீது பூசினாள். ஆனால் அவள் மனம் அந்தச் சிறு சிகிச்சையினால் சமாதானமடையவில்லை. வீக்கம் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்துக் கொண்டு போவதுபோல் ஒரு பரபரப்பு ஏற்படவே, தன் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள தெருக் கோடியிலிருந்த சுப்பையா பண்டாரத்திடம் குழந்தையைத் தூக்கிக் கொண்டு சென்றாள்.

மாட்டு வைத்தியர் சுப்பையா பண்டாரம் சில அவசர சமயங்களில் மனிதர்களுக்கும் வைத்தியம் செய்வது உண்டு. அருணாவின் வலது கரத்தைப் பலமாகப் பிடித்து குழந்தை அலற அலற, இப்படியும் அப்படியும் பரிசோதித்துவிட்டு, முடிவில் உதட்டை வளைத்தார் அவர். ''உள்ளே எலும்பு இரண்டா ஒடிஞ்சு போச்சே! பச்சிலைசாறைப் புழிஞ்சி எலும்பைப் பொருத்தி நல்லா சிம்பு வச்சுக் கட்டிவிடு. என்ன இருந்தாலும் பெண் குழந்தை பாருங்க! அதுவும் வலது கை. நாளைக்கு இந்தக் கை எலும்பு சரியாப் பொருந்திக் கூடவில்லையானா அவ அப்பன் என்னைத்தான் பழி சொல்லுவான். நோவு தெரியாம இருக்க இப்ப சத்தியா சிம்பு வச்சுக் கட்டிவிடுகிறேன். நீங்க எதுக்கும் குழந்தையை டவுனிலிருக்கிற பெரிய ஆஸ்பத்திரிக்கு இட்டுக்கிட்டு போயிடுங்க. அங்கே போட்டோ படம் எடுத்து மாவு கட்டி பிளாஸ்திரி போட்டு ஒழுங்கு செய்துவிடுவாங்க'' என்று உபதேசித்தார். அதன்படியே அருணாவின் வலது கையின் இருபுறமும் இரண்டு சிறு மூங்கிற் பிளப்புகளை முட்டுக் கொடுத்து, கிழிந்த புடவைத் துணியால் இறுக்கிக்கட்டி, அதைக் கழுத்துடன் சேர்த்து மாட்டி முதல் உதவி செய்து வீட்டிற்கு அனுப்பிவிட்டார் பண்டாரம்.

அன்று பொழுது அஸ்தமிக்கும் சமயம், சற்று தாமதமாகவே பள்ளியினின்று வந்த இந்திராணியும் ஆனந்தனும் கூடத்திற்குள் வந்ததும் திடுக்கிட்டுப் போய் நின்றார்கள். விளக்கு அருகில் தரை மீது சுவரின்மேல் சாய்ந்து கொண்டு கையில் பலத்த ஒரு கட்டுடன் காணப்பட்ட அருணாவை அவர்கள் இருவரும் ஆச்சரியத்துடன் சிறிது நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

புழுங்கல் அரிசிக் குருணையை அவசரமாக உலையில் போட்டுப் பொங்கி, ஒரு கரண்டி சோற்றில் கொஞ்சம் ரஸத்தை ஊற்றி, குழந்தைக்கு உணவாக அதை எடுத்துக் கொண்டு வெளியில் வந்த பெரியநாயகி, வாயின் மீது விரலை வைத்து அவர்களுக்கு ஜாடை செய்தாள். ''உஸ்! பேசாதீங்க. போய் காலு கையைக் கழுவிக் கொண்டு புத்தகத்தை வச்சுப் படியுங்க. உங்கப்பனுக்கு இன்னிக்கு ஆவேசம் பிடிச்சிருக்கு'' என்று தாழ்ந்த குரலில் எச்சரித்தாள்.

அருணாவின் அருகே நெருங்கி சிவந்து வீங்கிப் போன அவளது

விழிகளையும், கண்ணீர்க் கறைபடிந்த முகத்தையும் ஆச்சர்யத்துடன் கூர்ந்து பார்த்த இந்திராணி, ''பாட்டி! அப்பா அருணாவை அடிச்சாரா?'' என்று வினவினாள். தங்கையின் அருகே ஓடிவந்து நின்ற அண்ணன் அவளை அனுதாபத்துடன் உற்று கவனித்துவிட்டு, ''கையில் என்ன கட்டு, பாட்டி? அருணா என்ன தப்பு செய்தா? எதுக்காக அடிச்சார்? பள்ளிக்கூடம் போகலையினு கோவிச்சுக்கிட்டாரா?'' என்று பல பல கேள்விகள் ஓயாது கேட்கத் துவங்கினான்.

பெரியநாயகிக்கு இருந்த மன நிலையில் அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கப் பிடிக்கவில்லை. ''அருமையில்லாத அப்பனுக்குப் பெண்ணாகப் பிறந்ததுதான் அருணா செய்த தப்பு. வேறே ஒண்ணுமில்லை. பேசாம போய் உங்க காரியங்களைக் கவனியுங்கள். உங்கப்பன் தோட்டத்திலேதான் இருக்கிறான். அருணாவை அடிச்சு கையை ஒடிச்சது போதாதுன்னு உங்களை உதைச்சு காலை ஒடிச்சுப் போட்டுவிடுவான். அப்பால் போய்த் தொலையுங்க?'' என்று கடிந்து கொண்டாள். குழந்தைகள் இருவரும் தங்கள் சகோதரியைப் பரிதாபமாகப் பார்த்துவிட்டு, மௌனமாக முற்றத்திற்குச் சென்றுவிட்டார்கள்.

அன்று இரவு போஜனத்தின்போது, இலையில் எல்லோருக்கும் உணவு பரிமாறிக் கொண்டிருக்கையில்தான் பெரியநாயகிக்குச் சட்டென்று அந்த யோசனை தோன்றியது. மற்ற குழந்தைகளைவிட பங்கஜத்தின் கடைசி பெண்மீது ஜெகதாவிற்குக் கொஞ்சம் தனி அபிமானம் இருந்தது. அதனால்தான் அவள் சமீபத்தில்கூட குழந்தையின் செலவிற்காக ஐந்து ரூபாய் பணம் அனுப்பியிருந்தாள். அருணாவை இந்நிலையில் அவளிடம் எடுத்துக்கொண்டு போனால் அவள் கட்டாயம் மனம் இரங்கி, தக்க சிகிச்சை செய்விக்க உதவி செய்வாள் என்று தனக்குள்ளே எண்ணி முடிவுக்கு வந்த கிழவி, துணிச்சலாகத் தான் உத்தேசித்ததை சதாசிவத்திடம் கூறினாள். ''குழந்தை கை எலும்பு ஒடிஞ்சி போயிருக்கிறதாம். பட்டணத்தில்தான் அதைச் சரிப்படுத்த முடியுமாம். பண்டாரம் சொல்லிவிட்டார். அதனால் இரவு பதினோரு மணி வண்டிக்கு நான் குழந்தையைப் பட்டணத்திற்கு அழைச்சிக்கிட்டு போகலாம்னு

மாட்டு வைத்தியர் சுப்பையா பண்டாரம் சில அவசர சமயங்களில் மனிதர்களுக்கும் வைத்தியம் செய்வது உண்டு. அருணாவின் வலது கரத்தைப் பலமாகப் பிடித்து குழந்தை அலற அலற, இப்படியும் அப்படியும் பரிசோதித்துவிட்டு, முடிவில் உதட்டை வளைத்தார் அவர். "உள்ளே எலும்பு இரண்டா ஒடிஞ்சு போச்சே! பச்சிலைசாறைப் புழிஞ்சி எலும்பைப் பொருத்தி நல்லா சிம்பு வச்சுக்கட்டிவிடு. என்ன இருந்தாலும் பெண் குழந்தை பாருங்க! அதுவும் வலது கை. நாளைக்கு இந்தக் கை எலும்பு சரியாப் பொருந்திக் கூடவில்லையானா அவ அப்பன் என்னைத்தான் பழி சொல்லுவான். நோவு தெரியாம இருக்க இப்ப சத்தியா சிம்பு வச்சுக் கட்டிவிடுகிறேன். நீங்க எதுக்கும் குழந்தையை டவுனிலிருக்கிற பெரிய ஆஸ்பத்திரிக்கு இட்டுக்கிட்டு போயிடுங்க. அங்கே போட்டோ படம் எடுத்து மாவு கட்டி பிளாஸ்திரி போட்டு ஒழுங்கு செய்துவிடுவாங்க" என்று உபதேசித்தார். அதன்படியே அருணாவின் வலது கையின் இருபுறமும் இரண்டு சிறு மூங்கிற் பிளப்புகளை முட்டுக் கொடுத்து, கிழிந்த புடவைத் துணியால் இறுக்கிக்கட்டி, அதைக் கழுத்துடன் சேர்த்து மாட்டி முதல் உதவி செய்து வீட்டிற்கு அனுப்பிவிட்டார் பண்டாரம்.

அன்று பொழுது அஸ்தமிக்கும் சமயம், சற்று தாமதமாகவே பள்ளியினின்று வந்த இந்திராணியும் ஆனந்தனும் கூடத்திற்குள் வந்ததும் திடுக்கிட்டுப் போய் நின்றார்கள். விளக்கு அருகில் தரை மீது சுவரின்மேல் சாய்ந்து கொண்டு கையில் பலத்த ஒரு கட்டுடன் காணப்பட்ட அருணாவை அவர்கள் இருவரும் ஆச்சரியத்துடன் சிறிது நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

புழுங்கல் அரிசிக் குருணையை அவசரமாக உலையில் போட்டுப் பொங்கி, ஒரு கரண்டி சோற்றில் கொஞ்சம் ரஸத்தை ஊற்றி, குழந்தைக்கு உணவாக அதை எடுத்துக் கொண்டு வெளியில் வந்த பெரியநாயகி, வாயின் மீது விரலை வைத்து அவர்களுக்கு ஜாடை செய்தாள். "உஸ்! பேசாதீங்க. போய் காலு கையைக் கழுவிக் கொண்டு புத்தகத்தை வச்சுப் படியுங்க. உங்கப்பனுக்கு இன்னிக்கு ஆவேசம் பிடிச்சிருக்கு" என்று தாழ்ந்த குரலில் எச்சரித்தாள்.

அருணாவின் அருகே நெருங்கி சிவந்து வீங்கிப் போன அவளது

விழிகளையும், கண்ணீர்க் கறைபடிந்த முகத்தையும் ஆச்சர்யத்துடன் உற்று பார்த்த இந்திராணி, "பாட்டி! அப்பா அருணாவை அடிச்சாரா?" என்று வினவினாள். தங்கையின் அருகே ஓடிவந்து நின்ற அண்ணன் அவளை அனுதாபத்துடன் உற்று கவனித்துவிட்டு, "கையில் என்ன கட்டு, பாட்டி? அருணா என்ன தப்பு செய்தா? எதுக்காக அடிச்சார்? பள்ளிக்கூடம் போகலையினு கோவிச்சுக்கிட்டாரா?" என்று பல பல கேள்விகள் ஓயாது கேட்கத் துவங்கினான்.

பெரியநாயகிக்கு இருந்த மன நிலையில் அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கப் பிடிக்கவில்லை. "அருமையில்லாத அப்பனுக்குப் பெண்ணாகப் பிறந்ததுதான் அருணா செய்த தப்பு. வேறே ஒன்னுமில்லை. பேசாம போய் உங்க காரியங்களைக் கவனியுங்கள். உங்கப்பன் தோட்டத்திலேதான் இருக்கிறான். அருணாவை அடிச்சு கையை ஒடிச்சது போதாதுன்னு உங்களை உதைச்சு காலை ஒடிச்சுப் போட்டுவிடுவான். அப்பால் போய்த் தொலையுங்க?" என்று கடிந்து கொண்டாள். குழந்தைகள் இருவரும் தங்கள் சகோதரியைப் பரிதாபமாகப் பார்த்துவிட்டு, மௌனமாக முற்றத்திற்குச் சென்றுவிட்டார்கள்.

அன்று இரவு போஜனத்தின்போது, இலையில் எல்லோருக்கும் உணவு பரிமாறிக் கொண்டிருக்கையில்தான் பெரியநாயகிக்குச் சட்டென்று அந்த யோசனை தோன்றியது. மற்ற குழந்தைகளைவிட பங்கஜத்தின் கடைசி பெண்மீது ஜெகதாவிற்குக் கொஞ்சம் தனி அபிமானம் இருந்தது. அதனால்தான் அவள் சமீபத்தில்கூட குழந்தையின் செலவிற்காக ஐந்து ரூபாய் பணம் அனுப்பியிருந்தாள். அருணாவை இந்நிலையில் அவளிடம் எடுத்துக்கொண்டு போனால் அவள் கட்டாயம் மனம் இரங்கி, தக்க சிகிச்சை செய்விக்க உதவி செய்வாள் என்று தனக்குள்ளே எண்ணி முடிவுக்கு வந்த கிழவி, துணிச்சலாகத் தான் உத்தேசித்ததை சதாசிவத்திடம் கூறினாள். "குழந்தை கை எலும்பு ஒடிஞ்சி போயிருக்கிறதாம். பட்டணத்தில்தான் அதைச் சரிப்படுத்த முடியுமாம். பண்டாரம் சொல்லிவிட்டார். அதனால் இரவு பதினோரு மணி வண்டிக்கு நான் குழந்தையைப் பட்டணத்திற்கு அழைச்சிக்கிட்டு போகலாம்னு

நினைக்கிறேன். அவன் பெரியம்மா இட்ட் கொண்டு குழந்தையை விட்டால்'' என்று முடிக்காது நிறுத்திய பெரியநாயகி, தட்டிலிருந்த சோற்றை அவன் இலையில் வட்டித்து விட்டு பதிலுக்காக முகத்தைப் பார்த்தாள்.

குழம்பைக் கலந்து ஒரு பிடி எடுத்து வாயில் போட்டுக்கொண்ட சதாசிவத்தினால் அந்தச் சோற்றை விழுங்கவே முடியவில்லை. கூடத்தினின்று எழுந்த சிறு விசும்பல் ஒலி, அவன் வயிற்றை என்னவோ செய்தது. அவனது உடலில் உள்ள தசை முழுவதும் ஒரு முறை அவனை அறியாது குலுங்கியது. ''சரி!'' என்று மட்டும் அதற்குச் சுருக்கமாகப் பதிலளித்தான். அதற்குப் பிறகு அவன் பெரியநாயகியுடன் ஏதும் பேசவேயில்லை; அவளும் பேசவில்லை.

இரவு பத்து மணி சுமாருக்கு அவன் தங்கள் வீட்டு மாட்டு வண்டியைப் பூட்டி வாயிலில் கொண்டு வந்து நிறுத்தினான். பெரியநாயகியும் அருணாவும் வண்டியில் ஏறிக்கொண்டதும், தன் மற்ற இரு குழந்தைகளையும் அதே வண்டியில் ஏறிக்கொள்ள உத்தரவிட்டான். வாயிற்கதவைப் பூட்டி, சாவியை இடையில் செருகிக் கொண்டு வண்டியை ஸ்டேஷனுக்கு ஓட்டினான்.

அவர்கள் ஸ்டேஷனை அடைந்த சமயம் வண்டி வர சில நிமிஷங்கள் மட்டுமே இருந்தன. அதையறிந்த சதாசிவம் பரபரப்பாக, டிக்கெட் கொடுக்குமிடத்திற்கு ஓடி அவர்கள் இருவருக்கும் வேண்டிய டிக்கெட்டுகளை வாங்கிக்கொண்டு வந்தான்.

அப்பாவிற்கு முன் வாயைத் திறக்கவும் அஞ்சி, மௌனமாக பரிதாபமாக தங்கையைப் பார்த்துக்கொண்டு, பிளாட்பாரத்திலே வந்து நின்ற இந்திராணியையும் ஆனந்தனையும் விட்டுச்செல்ல பெரியநாயகிக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. பங்கஜத்தின் குழந்தைகளை அவர்கள் பிறந்ததிலிருந்து அன்றுவரை கண நேரம் கூட அவள் பிரிந்தது கிடையாது. புடவைத் தலைப்பில் முடிந்து வைத்திருந்த இரண்டணா நாணயத்தை அவசரமாக அவிழ்த்து எடுத்த அவள் சதாசிவம் பாராத சமயம், அந்த நாணயத்தை ஆனந்தன் கரத்தில் ரகசியமாக வைத்து மூடினாள். ''பாட்டி! நீ எப்போ வருவே!'' என்று மெல்ல இந்திராணி கேட்ட பொழுது அவளுக்கு அழுகையே வந்துவிட்டது.

''ஆளுக்கு ஒரு அணா எடுத்துக்கொண்டு மிட்டாய் வாங்கிச் சாப்பிடுங்க. நாளை மறுநாள் வந்துவிடுவேன். அதுவரை சண்டை போடாம, அடி வாங்காம, நல்ல பிள்ளைகளாக இருங்க'' என்று உபதேசித்தாள்.

அதற்குள் ரயில் ஸ்டேஷனுக்குள் பலத்த இரைச்சலுடன் பிரவேசிக்கத் தொடங்கி விட்டது. ''உம்! நீங்க இரண்டு பேரும் இங்கேயே நில்லுங்க'' என்று மற்ற இரு குழந்தைகளுக்கும் உத்தரவிட்ட சதாசிவம், அருணாவைத் தூக்கி தோளில் வைத்துக்கொண்டு மூட்டையைக் கையில் எடுத்துக் கொண்டான். ''உம்! புறப்படுங்கள். வண்டியிலே இடம் பிடிச்சு உட்காரணும். இன்னிக்கு ஒரே கூட்டமா இருக்கு'' என்று முணுமுணுத்தான். இரண்டாவது மணி அடித்து ஓய்ந்து வண்டி மெல்ல அசைந்து நகர ஆரம்பித்ததும், அவன் ஏதோ நினைத்துக் கொண்டவன்போல் சட்டைப் பைக்குள் கைவிட்டு கசங்கிப்போன ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை அவசரமாக எடுத்தான். ''இதை செலவுக்கு வச்சுக்குங்க'' என்று பெரியநாயகியிடம் கொடுத்து விட்டு, கூட்டதிற்குள் சென்று மறைந்து விட்டான்.

முன்கோபமும் ஆத்திரமும் ஒருங்கே உருவாகிய சதாசிவமே, தணிந்து தன் தவறை உணர்ந்தவன் போல் இதமாக நடந்து கொண்டதைக் கண்டு பெரியநாயகி, அதை ஒரு நல்ல சகுனமாக எடுத்துக்கொண்டாள். ஜெகதாவின் விலாசத்தைத் தேடிக்கொண்டு போக வேண்டியதுதான் பாக்கி. மற்ற காரியங்கள் தாமே மளமளவென நடந்துவிடும் என்று அவள் பெரிதும் நம்பினாள். என்னைக் கண்டதும் 'அத்தை! வாருங்கள்' என்று அன்புடன் அழைத்து உபசரிப்பாள். அருணாவைக் கண்டதும் வாரி மார்புடன் அணைத்து உச்சி முகர்ந்து, பங்கஜத்தை நினைத்து உருகி, கண்ணீர் வடித்து விடுவாள் என்றெல்லாம் பலவாறு ரயில் பிரயாணத்தின் போது கற்பனை செய்து கொண்டிருந்தாள்.

ஏழு வருஷங்களுக்கு முன்பு பார்த்த ஜெகதாவும் தற்சமயம் உள்ள ஸ்ரீமதி ஜெகதா சோமசுந்தரமும் தோற்றத்திலும் மன

வித்தியாசப்பட்டவர்கள் என்று பாவனையிலும் மிகவும் வீட்டிற்குள் காலை வைக்குமுன் பெரியநாயகி எதிர்பார்க்கவில்லை. விழுந்து ஜெகதா மரியாதைக் கடுகடுவென்று தன்னிடம் எரிந்து விழுந்து ஜெகதா மரியாதைக் குறைவாக நடந்து கொண்ட விதத்தை அவளால் சகிக்கவே முடியவில்லை.

விர் என்று பங்களா வாயிலிலிருந்து ஒரு கார் புறப்பட்டுச் செல்லும் சப்தம் கேட்கவே கனவினின்று விழித்துக் கொண்டவள்போல் பெரியநாயகி, கண்களைத் திறந்து தோட்டத்தின் பக்கம் திரும்பினாள். பாதரஸை வேகமாக ஒலிக்க, யாரோ தாங்கள் இருந்த திசையை நோக்கி வருவது போன்று கேட்டது. குழந்தையைத் தூக்கித் தோளில் சாத்திக் கொண்டு எழுந்து நின்றாள். இடுப்பில் ஒரு கையை வைத்துக்கொண்டு நாட்டிய பாவத்தில் வந்து நின்ற ஜெகதா, ''இனிமேல் உள்ளே வரலாம், வாங்க. நல்ல வேளை கொஞ்சம் பொறுத்து வந்தீங்க, அவங்க வந்த சமயத்திலே நீங்களும் வந்திருந்தால் என் மானம் இன்னிக்குக் கப்பலேறிப் போயிருக்கும். என் தங்கச்சி புருஷனுக்குத்தான் புத்தி என்பது கடுகளவுகூடக் கிடையாது. உங்களுக்குக்கூடவா யோசனை தோணாது போச்சு? புறப்பட்டு வரு முன்னாடி ஒரு கடுதாசி போட்டால் என்னவாம்?'' என்று அதட்டிக் கேட்டாள்.

''கடுதாசி போட நேரம் எங்கிருந்திச்சு? நேத்து சா்யங்காலம் கை எலும்பு முறிஞ்சி போச்சு. ராத்திரி வண்டிக்கு கிளம்பிவிட்டேன்'' என்று பதிலளித்த பெரியநாயகியின் நெஞ்சை துக்கம் பிடித்துக்கொண்டது.

வந்த காரியத்தை கவனித்து விட்டு ஊருக்குக் கிளம்பிவிட வேண்டும் என்ற ஒரு வைராக்கியத்தில், சிரமப்பட்டு தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு பெரியநாயகி, பங்களாவிற்குள் அவளைப் பின் தொடர்ந்தாள். ''கடிதாசி போடாட்டா, தந்தி ஒண்ணு அடிக்கிறது. உங்களையெல்லாம் சொல்லிக் குத்தமில்லை. அந்தப் பாவிப்பெண் பங்கஜத்திற்குப் புத்தியிருந்திருந்தால் இப்படி நான் ஏன் அவதிப்பட வேண்டும்? 'அழகு சோறு போடும்' என்று வீறாப்பாகப் பேசினாள். அரைக் காசிற்கு உதவாத முரட்டுத் தடியன் சதாசிவத்தைக்

கட்டிக்கொண்டாள். மகராஜி அவள் கண்களை மூடிக்கொண்டு போய்விட்டா. அந்தப் பலன் என்னையல்லவா வந்து சமயத்திலே பிடிச்சு கழுத்தை அறுக்கிறது?'' என்று கண்கள் சிவக்க, இரைந்து கத்தினாள். சோபாவின் மீது தொப்பென்று உட்கார்ந்து கொண்டு, ''கல்யாணத்திற்குப் பிறகு புருசன் வீட்டிற்குப் புறப்படும்போது நான் சொன்னேன். அது சரியாப் போச்சு. இப்போ இந்த ஜெகதாவுடைய உதவிதானே வேண்டியிருக்கு?'' என்று கர்ஜித்துவிட்டு, மேஜைமீது கரத்தால் ஓங்கிக் குத்தினாள்.

தரையில் விரிக்கப் பெற்றிருந்த ரத்தினக் கம்பளத்தின் மீது உட்கார்ந்திருந்த பெரியநாயகி, ''பங்கஜம் உயிருடன் இருந்தால் நடந்து போனதைப் பற்றி பேசினால் லாபம் உண்டு. என்னிடம் சொன்னால் நான் இதற்கு என்ன பதில் சொல்லமுடியும்? ஆயிரம் சண்டைகள் போட்டுக் கொண்டாலும் அக்கா தங்கை என்கிற உறவு விட்டுப் போகுமா அம்மா? அருணாவுக்கு உதவி செய்வாய், மறுக்க மாட்டேன்னு நான் குழந்தையைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன்!'' என்றாள்.

''அவள் அப்பன் சதாசிவம் என்னை நடத்திய மரியாதைக்கு அவன் குழந்தைகளுக்கு நான் ஏதும் உதவி செய்யவேண்டியதே இல்லை. இருந்தாலும்....'' என்று கூறிவிட்டு யோசனையுடன் அருணாவை ஏற இறங்க உறுத்துப் பார்த்தாள் கோபத்துடன் ஜெகதா.

அகன்ற விழிகள், எடுப்பான மூக்கு, சிறிய வாய், சற்று நீண்ட முகவாய் என்று ஒரு பார்வையில் ஆராய்ந்த அவள், மின்சார அதிர்ச்சி கண்டவள்போல், தன்னையறியாது ஒரு கணம் திடுக்கிட்டு மெய் பதறி நின்று விட்டாள். பாட்டியின் மடியிலே பங்கஜம் குழந்தையுருவிலே படுத்திருப்பதுபோல் ஒரு பிரமிப்பு அவளுக்கு ஏற்பட்டது.

தனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை சமாளிக்க ஜன்னல் அருகில் சென்று திரையை ஒதுக்கிவிட்டு, சிறிது நேரம் நின்றாள். பிறகு, விருக்கென திரும்பி வந்து சோபாவில் உட்கார்ந்து கொண்டாள்.

''அருணாவுக்கு உதவி செய்வதிலே ஆக்ஷேபனை இல்லை. ஆனால் ஒரு நிபந்தனை'' என்று கைகளை ஆட்டிக்கொண்டு, புருவங்களை உயர்த்தி மிகவும் கண்டிப்பான தோரணையில்

பெரியநாயகி பதில் பேசவில்லை.

ஆரம்பித்தாள். பெரியநாயகி பதில் பேசவில்லை. ஒரு கடிதாசு

''என் தங்கை மரணப் படுக்கையிலே ஒரு கடிதாசு எழுதியிருந்தாள். அதன்படி அவள் குழந்தைகள் யாருக்காவது ஏதாவது உதவி வேண்டுமானால் நான் செய்வதாக தீர்மானித்திருந்தேன். என் தங்கை குழந்தைகளில் எனக்குக் கொஞ்சம் பிடித்திருப்பது இந்தக் குட்டிதான். இவளுக்குத் தக்க சிகிச்சை செய்து நான் கவனித்துக் கொள்கிறேன். ஆனால் ஒண்ணு; கை எலும்பு கூடி குணம் ஆனதும் நான் இவளை என்னுடனே வைத்துக் கொண்டு படிக்க வைத்து என் இஷ்டப்படி வளர்ப்பேன். அதற்கு சம்மதம்னா இங்கே விட்டுவிட்டுப் போங்க. இல்லையென்றால் இப்பவே அடுத்த ரயிலில் புறப்பட்டுப் போகலாம்'' என்று அதட்டலாக சவால் விடுத்தாள் ஜெகதா.

12

முற்றத்துக் குறட்டில் அருணா, அக்கா இந்திராணி தோள்மீது சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள். ஆனந்தன் தங்கைகள் இருவருக்கும் வேடிக்கை காட்டி சிரிப்பு மூட்டிக்கொண்டிருந்தான். கரிப் பொடியை மூக்கின் மீது இருபுறமும் தடவிக் கொண்டு, அப்பாவுடைய மேல் துண்டை தலையில் பெரிய முண்டாசாகக் கட்டிக்கொண்டு நின்றபொழுது, அவன் அசல் தபால்கார தங்கசாமியைப் போலவே காணப்பட்டான். கடிதங்கள் என்ற பாவனையில் கையில் பிடித்திருந்த பழைய புத்தகங்களைக் குறட்டின்மீது வைத்துவிட்டு, தங்கசாமியைப் போல் மூக்கைச் சுளித்து வாயைக் கோணி, ''என்ன கடிதாசியா? உங்களுக்கா ஓ! இருக்கு. உங்க சித்தப்பா இன்னும் எழுதிக்கிட்டிருக்கிறாராம். நாளை தபாலில் வரும்'' என்று தலையை ஆட்டிய ஆனந்தன், அவனைப்போல் அபிநயித்துக்கொண்டிருந்தான்.

சிரமப்பட்டுத் தன் குரலை அடக்கிக் கொண்டு தங்கசாமியைப் போல் கீச்சு மூச்சென்று அவன் பேசியதைக் கேட்டு அக்காவும் தங்கையும் அடக்கமாட்டாது வாய் விட்டுச் சிரித்தார்கள். அவனது

நடிப்பு மிகவும் வேடிக்கையாக இருக்கவே, 'கலுக்' 'கலுக்' என்று சிரித்துக் கொண்டிருந்த அருணாவுக்கு ஆனந்தத்தில் கண்களில் நீர் ததும்பி வழிந்தோடியது. வயிற்றைப் பிடித்துக்கொண்டு விடாது நகைத்த இந்திராணி தன் பின்புறத்திலே என்ன நடக்கிறது என்றே கவனிக்கவில்லை.

ரேழிக் கதவு மெல்ல அசையும் ஓசை கேட்கவே, அருணா திடுக்கிட்டுப் போய்த் திரும்பினாள். அவளது சிரிப்பு 'டக்' கென்று பாதியிலே நின்றுவிட்டது.

கிலியில் நெஞ்சு படபடக்கத் தொடங்கியது. மெல்ல அடிமேல் அடி வைத்து உள்ளே வந்து கொண்டிருந்த சதாசிவம் கோபத்துடன் கையை ஓங்கியவனாக ஆனந்தன் அருகே நெருங்கிக் கொண்டிருந்தான். தந்தையின் வருகையை உணராது ஆனந்தன் காதின் மீது பென்சிலை செருகிக்கொண்டு உடம்பை நெளித்து தங்கசாமியைப் போல் நடந்து வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தான். இந்திராணியும் விடாது இடி இடியென்று சிரித்து ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தாள். 'அப்பா வந்து விட்டார்!' என்று அவர்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும் என அருணாவின் நாக்கு துடித்தது. ஆனால் என்னவோ அவளால் பேச முடியவில்லை. வாயோடு ஒட்டி உலர்ந்து போன நாக்கை அவளால் புரட்டவே முடியவில்லை.

கையை ஓங்கிக்கொண்டு வேகமாக நெருங்கிய சதாசிவம் ஆனந்தன் பின்னால் வெகு அருகில் வந்துவிட்டான். அருணா பேச மிகவும் முயற்சித்தாள். அவளது தொண்டையை ஏதோ இறுக்கமாக அமுத்திக் கொண்டிருந்ததனால் மூச்சுத் தடுமாறியது. அடுத்த கணம் பளீர் என்று பயங்கரமானதொரு சப்தம் கேட்டது. பயத்துடன் கண்களை மூடிக்கொண்டு அருணா முழு பலத்தையும் உபயோகித்து ''பாட்டி! பாட்டி'' என்று உரத்த குரலில் கிரீச்சிட்டு அலறி அழுதுவிட்டாள்.

விம்மிக்கொண்டு அருணா கண்களை மெல்லத் திறந்து பார்த்தாள். அவள் அண்ணன் ஆனந்தனோ அக்கா இந்திராணியோ, சதாசிவமோ யாரும் அங்கே காணப்படவில்லை. மிருதுவான

8

மீது அவள் படுத்திருந்தாள். பஞ்சணை விரித்த பெரியகட்டில் ஒன்றின் மீது அவள் படுத்திருந்தாள். எதிர்பக்கத்து ஜன்னலினின்று தொங்கிய நீலத் திரையை அசைத்து ஆடவிட்டு, காற்று இனிமையாக வீசிக் கொண்டிருந்தது. 'என்ன பாப்பா' ஏன் கூச்சல் போட்டே? கனவு கண்டியா?' என்று வினவிய வண்ணம் தன் அருகே குனிந்த பெண்மணியை உற்றுநோக்கினாள் அருணா. அவளது பேச்சும் தோற்றமும் அந்தச் சிறுமிக்கு மிக்க ஆச்சரியத்தைக் கொடுத்தன. பாதி கூந்தலை மறைத்தபடி தன் தலைமீது அணிந்திருந்த வெள்ளைத் தொப்பியைச் சரிப்படுத்திக் கொண்டு புன் முறுவலித்தாள் அந்தப் பெண்மணி.

''பாப்பா! கொஞ்சம் பால் வேணுமா?'' என்று கேட்டாள். நெருப்புபோல் சிவந்திருந்த அவளது வாயை வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்த அருணாவுக்கு எல்லாம் ஒரே குழப்பமாக இருந்தது. விஸ்தாரமான அந்த அறை, அதிலிருந்த பொருள்கள், கட்டிலருகே நின்று கொண்டிருந்த வெள்ளையுடை தரித்திருந்த அந்தப் புதிய பெண்மணி எல்லாம் அவளுக்கு ஒரு கனவு போல் பிரம்மையைக் கொடுத்தன. அறையை நன்றாகச் சுற்றி கவனித்துவிட்டு அவள் மிரளமிரள விழித்தாள்.

அவளது அருமைப் பாட்டியை ஏன் காணவில்லை? அவள் எங்கே போய்விட்டாள்? இனம் விளங்காத ஒரு பயமும் துக்கமும் ஒருங்கே எழுந்து அவளது நெஞ்சை இரண்டாகப் பிளந்து விடும்போல் வேதனை செய்தன. கழுத்துடன் சேர்ந்தாப் போல் மடக்கிக் கட்டப்பட்டிருந்த வலது கரத்தை அவளால் அசைக்க முடியவேயில்லை. கன்னத்தின் மீது வழிந்த கண்ணீரைத் தன் சிறு இடது கரத்தால் துடைத்துக் கொண்டு, ''பாட்டி எங்கே? எங்க பாட்டி வேணும்'' என்று பரிதாபமாக அவள் விம்மினாள்.

கட்டில் மீது வந்து அமர்ந்துகொண்ட தாதிப் பெண், மேஜைமீது கிடந்த வெள்ளைத் துண்டினால் அவள் முகத்தை மெல்லத் துடைத்து விட்டாள். ''நீ நல்ல பிள்ளை இல்லே! இப்படியா அழுவாங்க. உங்க பாட்டி சாப்பிட ஊட்டுக்குப் போயிருக்காங்க. இதோ வந்துவிடுவாங்க'' என்று கொச்சைத் தமிழிலே கொஞ்சி மொழிந்த அந்த ஆங்கிலோ இந்திய தாதிப்பெண், எழுந்திருந்து மின்சார விளக்கைப் பொருத்தினாள். டக் டக்கென்று பாதரக்ஷை பலமாக ஒலிக்க அறையின் கதவை வேகமாகத் திறந்த வண்ணம் வந்து நின்ற

மனிதரைக் கண்டதும் அருணாவின் உடல் பயத்தினால் நடுங்கியது. ''மயக்கம் தெளிந்துவிட்டதா! ஓகோ!'' என்று தமக்குள்ளே பேசிக் கொண்ட அந்த மனிதர் அருகில் வந்து ''என்ன பாப்பா! ரொம்ப பயந்து கூச்சல் போட்டியே, வலிக்குதா'' என்று கனிவாக வினவினார்.

அருணாவுக்கு அவர் முகத்தைப் பார்க்கவே பயமாக இருந்தது. சற்று முன்பு, அவள் வாழ்க்கையிலே முதல் முதலாக அனுபவித்த பல புதிய அனுபவங்கள் தொடர்ந்தாற்போல் அவளது ஞாபகத்தில் எழுந்தன. ''கொஞ்சம் பால் சாப்பிட்டுவிட்டு நீ சீக்கிரம் தூங்கப்போகவேணும் தெரிஞ்சுதா!'' என்று உத்தரவிட்டு, அவர் வெளியே சென்றதைக் கூட அருணா கவனிக்கவில்லை. ஊரிலிருந்து வந்ததிலிருந்து நடந்த பலவித சம்பவங்களையும் நினைத்துப்பார்த்து ஆச்சரியமும் குழப்பமும் எய்தியவளாக பிரமிப்புடன் உட்கார்ந்திருந்தாள்.

ஜெகதா விடுத்த நிபந்தனைக்கு எதிராகப் பெரியநாயகியால் ஏதும் பதில் கூற முடியவில்லை. குழந்தையின் கை எலும்பு கூடி குணமாகிவிட்டால் போதும் என்ற மன நிலையில் அவள் அது சமயம் எந்தவிதமான நிர்ப்பந்தத்திற்கும் செவி சாய்க்கத் தயாராக இருந்தாள். ஆகவே அவள் ''பங்கஜத்தின் மகளை உன்னிடம் கொண்டுவந்து சேர்த்துவிடுகிறது என் பொறுப்பாக இருந்தது. நான் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டேன். மற்றது உன்பாடு. நான் வேறே சொல்ல என்ன இருக்கு?'' என்று தன் அனுமதியைச் சுருக்கமாகத் தெரிவித்து விட்டாள்.

அதற்குப் பின் அவள் அங்கே நீண்ட நேரம் தங்கவில்லை. தன்னைச் சிறிதும் மதிக்காத ஜெகதாவின் வீட்டிலே இருக்கவோ, உணவு கொள்ளவோ அவளுக்கு விருப்பமிருக்கவில்லை. ஜெகதாவும் வேண்டா வெறுப்பாகவே, வெளி பகட்டிற்காக, ''சாப்பிட்டுவிட்டுப் போகலாமே! உடனேயா பிரயாணப்படுறீங்க?'' என்று விசாரித்தாள்.

''வீட்டிலே போட்டதைப் போட்டபடி நான் கிளம்பி வந்திருக்கிறேன். அதுகள் இரண்டும் அறியாப் பசங்கள். நான் அடுத்த

வண்டிக்குத் திரும்பியாகணும்'' என்று பிடிவாதமாக மறுத்துக்கூறிய பெரியநாயகி, காரிகுளத்திற்கு உடனே கிளம்பிவிட்டாள்.

அருணா பிறந்ததிலிருந்து கணமும் பிரியாது வளர்த்ததனால் ஏற்பட்ட பாசம் அவள் மனத்தைப் பிய்த்தெடுத்தது. திரும்பி வந்துவிடப் போவதாகப் பொய் சொல்லி குழந்தையை ஏமாற்றிவிட்டு செல்கிறோமே என்று எண்ணிய மாத்திரம் அவள் கண்கள் கலங்கின. வளர்த்த பாசமும் பிரிவுத் துயரமும் தாள முடியாது அந்தக் கிழவி அருணாவை மார்புடன் அணைத்துக் கொண்டாள். 'கடைத் தெருவுக்குப் போய்விட்டு வரேன். நீ நல்ல பிள்ளையா பெரியம்மா சொல்றதைக் கேட்டுக்கிட்டு இருக்கணும்'' என்று தழதழத்த குரலில் திணறிவிட்டு, தன் புடவைத் தலைப்பு முடிச்சை அவிழ்த்து, ஒரு அரையணா நாணயத்தை எடுத்துக் குழந்தையின் கையில் கொடுத்தாள். ''மிட்டாய் வாங்கிச் சாப்பிட பத்திரமா இதை வச்சுக்கோ?'' என்று ஆறுதல் கூறிவிட்டு, தன் கண்களைத் துடைத்துக் கொண்டு மூட்டையுடன் அவள் ரயில்வே ஸ்டேஷனுக்குக் கிளம்பிச் சென்றுவிட்டாள்.

வீறாப்பாக சவால்விடுத்த ஜெகதாவின் உணர்ச்சியும் கொந்தளிப்பும் கொஞ்ச நேரத்தில். அடங்கி மனம் அமைதியை அடைந்தது. மூக்குக் கண்ணாடியைக் கழற்றி அவசரமாக அழுத்தித் துடைத்துச் சரிப்படுத்தி மீண்டும் அதை அணிந்து கொண்டு, கம்பளத்தின் மீது உட்கார்ந்திருந்த சிறுமியைக் கூர்ந்து கவனித்தாள். அப்பொழுதுதான் அவளுக்கு தான் விடுத்த சவாலினால் எவ்வளவு பெரும் பொறுப்பு தன் தலையில் வந்து சுமந்துவிட்டது என்ற உண்மை முதன்முதலாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு புலப்பட்டது. ''அருணாவை இனி என்ன செய்வது? எப்படி அவள் கை முறிவைக் குணப்படுத்துவது? சும்மா வாயை மூடிக்கொண்டிராமல் வம்பையல்லவா விலைக்கு வாங்கிவிட்டோம்?'' என்று ஒரு வினாடியில் பலவும் எண்ணிக் கலங்கிப் போன ஜெகதா, இருப்புக் கொள்ளாமல் மாடியறைக்கு விரைந்தாள்.

செய்வது என்ன என்று தெரியாமல் மூளை குழம்பிவிடும் இது மாதிரி சந்தர்ப்பங்களில் அவள் எப்பொழுதும் லோகநாயகி அம்மாளின் உதவியை நாடுவது வழக்கம். ஆகவே டெலிபோன்

மேஜை அருகே சென்று அமர்ந்து கொண்டு, டெலிபோன் ரிஸீவரைக் கையில் எடுத்தாள். அது சமயம் சட்டென்று ஒரு விஷயம் அவள் மூளையில் மின்னலைப் போல் பாய்ந்து ஓடியது. தேள் கொட்டி விட்டது போல் பரபரப்புடன், டெலிபோன் ரிஸீவரைத் திரும்ப கட்டைமீது வைத்துவிட்டு எழுந்திருந்து, நான்கு தாவலில் மாடிப்படிகளைக் கடந்து மூச்சு இறைக்கக் கீழே விரைந்தோடி வந்தாள்.

''ஏ அருணா! உன்னைத்தான் கூப்பிடுகிறேன். ஆமாம், உனக்கு உடுத்திக் கொள்ள இந்த அழுக்குக் கந்தையைத் தவிர வேறு ஒண்ணும் கிடையாதா?'' என்று அதட்டினாள்.

நகத்தைக் கடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த அருணா திடுக்கிட்டுப் போனாள். பெரியம்மாவின் முகத்தை நிமிர்ந்து பார்க்கவும் பயந்து அவள் மௌனமாக ரத்தினக் கம்பளத்தைக் கால் விரல்களால் வருடிக்கொண்டு வீற்றிருந்தாள். அந்தச் சிறுமியின் அருகே கிடந்த ஒரு சிறு மூட்டையை அப்பொழுதுதான் ஜெகதா கவனித்தாள். அதைத் தன் கையால் தொட மனமின்றி, ''ஏ வள்ளி! இங்கே வா! அங்கே என்ன இடிச்ச புளியாட்டம் நின்னுக்கிட்டு? வந்து இதை அவுத்து உள்ளிருக்கிறதை எடுபார்க்கலாம்'' என்று உரத்த குரலில் ஒரு அதட்டல் போட்டாள்.

மூட்டையினின்று வேலைக்காரி உருவி எடுத்த உருக்குலைந்து கிழிந்து தொங்கிய இரு சிறு பாவாடைகளைக் கண்டதும் ஜெகதா, அருவருப்புடன் உடலைச் சிலிர்த்துக் கொண்டாள். ''குழந்தைக்கு உடுத்த துணி ரெண்டு நல்லதா வாங்கிக் கொடுக்கக்கூட முடியாதபடி குடும்பம் நடத்தி, குட்டிச் சுவராப் போனான். நல்ல மனுஷன்! கந்தலைக் கட்டி இங்கே எத்தனை துணிச்சலுடன் அனுப்பியிருக்கிறான்? வெட்கக்கேடு!'' எனத் தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டு, ஆத்திரத்தில் குமுறிக் கொண்டு, மாடிக்கு விரைந்து, தனது அறைக்குள் சென்றாள்.

அவசரமாக பீரோவைத் திறந்து, தான் உடுத்திக்கொள்ள வாங்கியிருந்த புதிய புடவை ஒன்றை எடுத்துக்கொண்டு கீழே வந்தாள். புத்தம் புதிய புடவையென்று அவள் சிறிதும் அஞ்சவில்லை.

லோகநாயகி இந்த நிலையில் பங்கஜத்தின் குழந்தையைக் காண நேரிட்டால் தன் கௌரவம் என்ன கதியாகும் என்ற ஒரு அச்சம்தான் ஜெகதாவின் உள்ளத்தை ஒரே உலுக்காக உலுக்கிக் கொண்டிருந்தது. படாரென்று நிர்த்தாக்ஷண்யமாகத் தன் புடவையைக் கிழித்து இரண்டு துண்டாக்கினாள். ஒரு பகுதியை அலமாரிக்குள் வைத்து பத்திரப்படுத்தி விட்டு, இன்னொரு பகுதியை எடுத்துக் கொண்டு தையல் மிஷின் அருகே சென்று உட்கார்ந்தாள்.

அரை மணி நேரத்திலே, அருணாவுக்குப் புத்தம் புதிய பட்டுப் பாவாடையொன்று தயாராகிவிட்டது. கையில் கத்தரிக்கோலை எடுத்துக் கொண்டு, தன் பெரிய தாயார் அருகே நெருங்குவதைக் கண்ட அருணா 'ஓ' வென்று அலறிக் கூச்சலிட்டு விட்டாள். கை எலும்பு முறிந்து நகரத்திற்கு வந்து அந்த பங்களாவை அடையும்வரை அவள் தன் பெரியம்மாவைப்பற்றி பற்பல இனிய கனவுகளைக் கண்டு கொண்டிருந்தாள். ஜெகதாவைப் பற்றி பாட்டி வருணிக்கும் பொழுதெல்லாம் அவளது மனக்கண் முன் கருணையே உருவான ஒரு வயதான அம்மாதான் எப்பொழுதும் தோன்றுவது வழக்கம். அவளது கற்பனைப் பெரியம்மாவிற்கும், உண்மையான பெரியம்மாவிற்கும், இடையே இருந்த ஏற்றத்தாழ்வு அந்தச் சிறுமிக்கு தாங்கொணாத பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருந்தது. அத்துடன் ஜெகதாவிடம் அவளுக்கு விவரிக்க இயலாத ஒருபயம் வேறு ஏற்பட்டிருந்தது. ஆகவே அவள், அந்த ஆயுதத்தைக் கண்டதும், அதனால் எங்கே தன் கையைப் பெரியம்மா வெட்டி விடுவாளோ என்று கிலியடைந்து போய் அலறிக் கூச்சலிட்டுவிட்டாள்.

''சே! ஏன் கத்தறே? உன்னை நான் என்ன பண்ணி விட்டேன்? மிச்ச காலமும் எப்படித்தான் உன்னை வச்சுக் காப்பாத்தப் போறேனோ! சும்மா இரு. உன் மேலே போட்டிருக்கிற அழுக்குச் சட்டையை எப்படிக் கழற்றுகிறது?'' என்று ஜெகதா அதட்டவே, அருணா பயந்து கொண்டு மௌனமாகி விட்டாள்.

டக் டக் என்று இரண்டே வெட்டலில் அந்தச் சிறுமி மீது போர்த்தியிருந்த சட்டையை வெட்டி அப்புறப்படுத்தி விட்டு, ஜெகதா அவள் இடுப்பிலிருந்த பழைய பாவாடையை நீக்கி வெறுப்புடன் தரைமீது விசியெறிந்தாள். ''ஏ வள்ளி! இந்தப் பழைய கந்தைகளைக் கொண்டு ஷெட்டிலே போடு. கார் துடைக்க உதவும்'' என

உத்தரவிட்டு விட்டு, புதிதாகத் தான் தைத்த பட்டுப்பாவாடையை அருணாவுக்கு அணிவித்தாள். முகத்தைத் துடைத்து, தலையை வாரி, இரட்டைப்பின்னல் போட்டு அலங்கரித்து விட்டு, சலவையினின்று வந்த ஒரு பெரிய வெள்ளைத் துண்டினால் அருணாவைப் போர்த்தினாள்.

''எல்லாம் சரியாக உள்ளதா?'' என்ற பாவனையில் ஒரு முறை ஏற இறங்க அருணாவை நன்றாக உற்றுக் கவனித்துவிட்டு, அதற்குமேல் காலதாமதம் செய்யாது மாடிக்கு விரைந்தாள்.

ஜெகதா டெலிபோனை வைத்து விட்டுக் கீழே இறங்குவதற்கும், லோகநாயகி காரில் வந்து இறங்குவதற்கும் சரியாக இருந்தது.

''என்ன, என்னமோ ரொம்ப அவசரம் என்றாயே? என்ன விசேஷம்?'' என வினவிக் கொண்டு மிகவும் உரிமையுடன் உள்ளே வந்து சோபா ஒன்றின்மீது சாய்ந்து கொண்டாள் லோகநாயகி.

''ஆமாம் லோகா. ரொம்ப அவசரம். இந்தப் பெண், இவள்தான் என் தங்கை பங்கஜத்தின் கடைசிக் குழந்தை, அருணா. விளையாடி, கீழே விழுந்து கையை முறித்துக் கொண்டுவிட்டாள். பங்கஜத்தின் புருஷன் இவளை அழைத்துக் கொண்டு இங்கே வந்தார். பாவம், அவருக்கு இப்போது அங்கே அறுவடை காலம். ஒரு நிமிஷம் கூட இங்கே தங்கியிருக்க முடியாது. 'நீங்க குழந்தையை விட்டு விட்டுப் போங்க, நான் கவனிச்சுக்கிறேன்' என்றேன். அவருக்கு அப்படி விட்டுப் போக மனசில்லை. நான் மிகவும் எடுத்துச் சொன்னதும் இவளை ஒப்படைத்துவிட்டு ஊருக்குப் போயிருக்கிறார். எனக்கு இந்த மாதிரி காரியங்கள் ஏதும் பழக்கமில்லையா, ஒரே திகிலா இருக்கு. ஒரே குழப்பமாக இருக்கு. நீதான் இதற்கு உதவி செய்யணும்'' என்று மூச்சுவிடாது பேசினாள் ஜெகதா.

பூனைக் குட்டியைப்போல் சுருண்டு கொண்டு சோபா ஒன்றிலே உட்கார்ந்திருந்த சிறுமியை, லோகநாயகி ஒரு முறை ஆராய்ச்சிக் கண்களோடு மேலும் கீழும் கூர்ந்து கவனித்தாள். பிறகு, வாயோடு லேசாகச் சிரித்துக் கொண்டு, ''ஜெகதா! நீ சுத்த பயந்தாங் கொள்ளி. கை எலும்பு முறிஞ்சு போனா என்னவாம்! எங்க நளினிகூட ஒரு வாட்டி பள்ளிக்கூடத்திலே ஓடிவிளையாடிக் கீழே விழுந்து தோள்பட்டை எலும்பை முறிச்சுக்கொண்டு விட்டாள். அதற்காக

உன்னைப்போல் இப்படி கை கால் பதற நான் நடுங்கிப் போகவில்லை. என்னத்திற்குப் பயப்படணும்? அதுவும் டாக்டர் 'நஞ்சப்பா நர்ஸிங் ஹோம்' இருக்கையிலே நாம் எதுக்கும் கவலைப்பட வேண்டாம்'' என்றாள் மிகவும் அதிகாரமான குரலில்.

''நஞ்சப்பா நர்ஸிங் ஹோமா!'' என்று ஜெகதா ஆச்சர்யத்துடன் கேட்டு முடிக்குமுன், ''டாக்டர் நஞ்சப்பாவைப்பற்றி நீ கேள்விப்பட்டதில்லையா, என்ன? எலும்புகளைப் பத்தி, சீமையிலும், அமெரிக்காவிலும் பல பரீக்ஷைகள் கொடுத்திருக்கிறவராச்சே? நம்ப நளினிக்குக் கை முறிஞ்சபோது அவர்தானே பார்த்துச் சொஸ்தப்படுத்தினார். போன வருஷம் நம்ம வீட்டிலே அவருக்குக் கால் சுண்டு விரலிலே ஒரு மாதிரி வலி ஏற்பட்டிருந்தது. இந்த டவுனிலே உள்ள ஒரு டாக்டருக்குக்கூட அதைக் கண்டு பிடிக்கத் தெரியலை. கடைசியிலே நஞ்சப்பாதான் கண்டு பிடிச்சு ஏதோ ஒரு ஊசி போட்டு 'நர்ஸிங் ஹோமி'லே பத்து நாள் படுக்க வைச்சு, சிகிச்சை செய்து குணப்படுத்தினார். அந்த 'நர்ஸிங் ஹோமை' நீ பார்க்கணும் ஜெகதா. என்ன காற்றோட்டம், என்ன சௌகர்யம், போ! இத்தனைக்கும் ஒரு தினத்துக்கு அறைக்கு வாடகை இருபத்தைந்து ரூபாய்தான் வாங்குகிறார்!'' என்று வருணித்தாள்

''இருபத்தைந்து ரூபாயா!'' என்று ஜெகதா திடுக்கிட்டு வினவ வாயைத் திறக்குமுன் லோகநாயகி முந்திக் கொண்டாள். ''நஞ்சப்பா 'கன்சல்டேஷன் பீஸ்' ரூபாய் ஐம்பதுதான் வாங்குகிறார். 'பீஸ்' கொஞ்சம் ஜாஸ்தி. பல ஊர்களில் போய் படித்துப் பட்டம் பெற்றிருக்கிறார் அல்லவா? அதனால் கேட்டதைக் கொடுத்துத்தான் ஆகணும். 'நர்ஸிங் ஹோம்' வாடகை, சிகிச்சை செலவு, எல்லாம் சேர்த்து எங்க நளினிக்கு நானூறு ரூபாயாச்சு. கை நன்றாகக் கூடி சொஸ்தமானதும், நான் டாக்டருக்கு ஒரு வெள்ளித்தட்டு வாங்கிப் பரிசாகக் கொடுத்தேன். கொடுக்கிறதும் கொடுக்காததும் நம்ம இஷ்டம்'' என்று சூள் கொட்டினாள்.

நானூறு ரூபாய் என்றதும் ஜெகதாவின் இருதயம் படபடவென்று அடித்துக்கொண்டது. ஒருமுறை குப்பென்று பயத்தில் அவள் உடல் வியர்த்து அடங்கியது. ''சர்க்கார்

ஆஸ்பத்திரியிலேயே எலும்பு முறிவுகளைப் பார்க்கிற இடம் இருக்கே, அங்கே போனால் என்ன?'' என்று குழறியபடி இழுத்தாற்போல சொன்னாள்.

''ஐயோ! அங்கே யார் போவாங்களாம். அறுபத்து மூவர் திருவிழா போலவே அங்கே நிற்கும் கூட்டத்திலே போய் நம்மாலே நிற்க சாத்யப்படுமா? 'க்யூ' விலே நின்று கடைசியிலே அப்படியும் இப்படியுமாக டாக்டரைக் கண்டு பிடிச்சாலும், காரியமெல்லாம் சட்டுப்புட்னு நடக்குமா? 'எக்ஸ்ரே' படம் எடுக்க நாலு மணி நேரம், அதை எடுத்து வர ஐந்து மணி, டாக்டரைப் பார்க்க ஒரு நாள் இப்படின்னு பொழுது போய்விடும். சர்க்கார் ஆஸ்பத்திரின்னாலும் உனக்குச் செலவு அப்படி ஒன்றும் குறைந்துவிடாது. எனக்கு இதெல்லாம் பற்றி நல்ல அனுபவம் உண்டு. அங்கேயும் தான் 'எக்ஸ்ரே' படத்திற்கும் அதுக்கும் இதுக்கும் பணம் கட்டவேண்டும். இவள் அப்பா பெரிய மிராசுதாரர் அல்லவா? வருஷத்திற்கு அரை லக்ஷமாவது வரும்படி வருமல்லவா? வரும்படியைச் சொன்னா பல்லைத் தட்டி அங்கேயும் பணம் வாங்கி விடுவார்கள்! நம்மை யொத்தவர்கள் ஆஸ்பத்திரிகளில் போய் நிற்கத்தான் சாத்தியப்படுமா? பார்க்க நன்றாகத்தான் இருக்குமா? பணத்தைப் பற்றி நீ ஏன் கவலைப்பட வேணும். டாக்டர் கொடுக்கிற 'பில்'லை அவள் அப்பாவுக்கு அனுப்பிவிடு'' என்று அலட்சியமான பாணியில் உபதேசித்தாள்.

திருடனுக்குத் தேள் கொட்டிய நிலையில் ஜெகதா இருந்தாள். அந்தஸ்து நிமித்தம் அவள் உண்மையைக் கூற விரும்பவில்லை. அதே சமயம் நானூறு ரூபாய்களை அருணாவிற்காக வாரியிறைப்பதென்றால் அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. ஆனால், லோகநாயகி அவளை அத்துடன் விட்டு விடவில்லை. 'நஞ்சப்பா நர்ஸிங் ஹோமை'த் தவிர வேறு எங்கு சென்றாலும், அந்தஸ்திற்கோ, அல்லது சௌகரியத்திற்கோ சரிப்பட்டு வராது என்று உறுதியாகக் கூறி, ஜெகதாவை அங்கு செல்ல ஒப்பும் படி செய்துவிட்டாள்.

இவ்வாறு லோகநாயகியம்மாளின் உதவியால், 'நஞ்சப்பா நர்ஸிங் ஹோ'மிற்கு வந்திருந்த அருணாவுக்கு அப்பொழுதுதான் மயக்கம் தெளிந்து நினைவு ஏற்பட்டிருந்தது.

''டாக்டர் சொன்னபடி நீ கேட்கவேணும், தெரிஞ்சுதா?'' என்று லேசாக மிரட்டிய தாதிப் பெண், கோப்பையொன்றில் பாலை நிரப்பி எடுத்துக் கொண்டு படுக்கையருகே வந்தாள். பாட்டியையும், வீட்டையும், தன் சகோதரர்களையும் நினைத்துக் கொண்ட சிறுமிக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. ''பால் எனக்கு வேணாம்'' என்றாள், கண்களில் தளும்பிய நீரைச் சமாளித்துக் கொண்டு. குழந்தையின் மனோபாவனையை ஒருவாறு ஊகித்துக் கொண்ட தாதிப்பெண், கனிவான குரலில், ''சாப்பிடம்மா பாப்பா! ஆமாம். இந்தக் கையை எப்படி முறிச்சுக்கொண்டே? ஓடி விளையாடி கீழே விழுந்துட்டியா?'' என்று வினவினாள்.

அருணா பதிலுக்கு இல்லையென்று தலையை அசைத்தாள். தொண்டைவரை வந்த விம்மலை விழுங்கிக் கொண்டு, ''இல்லை, அப்பா அடிச்சார், கை ஒடிஞ்சுபோச்சு?'' என்று திணறினாள்.

'ஊ!' என்று தாதிப்பெண் தன் சிவந்த உதடுகளைக் குவித்துக்கொண்டு ஆச்சர்யத்துடன் கூவினாள். ''உண்மையாகவா? கை ஒடிகிறபடி கம்பாலேயா அடிச்சார்? நீ கீழே விழுந்து கையை ஒடிச்சுக்கிட்டேன்னு - அந்த அம்மா டாக்டர் கிட்டே சொன்னாங்களே!'' என ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

அருணா தன் தலையைப் பலமாக ஆட்டினாள். ''இல்லை. நான் கீழே விழுந்து ஒடிக்கக்கலை. அப்பாதான் என்னை அடிச்சார். விறகுக்கட்டையால் ஓங்கி அடிச்சார்!'' என்றாள் நிதானமாக.

'ஊ!' என்ற மறுபடியும் தாதிப் பெண் வியப்புடன் வாயைக் குவித்துக் கூவினாள். ''மை காட்! என்ன முரட்டு மனுஷன்! இப்படியும் ஒரு அப்பன் இருப்பானா? நம்ப முடியலையே. ஏன் பாப்பா? உண்மையாகவா உன்னை உன் அப்பா விறகுக் கட்டையாலே அடிச்சார்?'' என்று கேட்டாள்.

காரினின்று இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்த ஜெகதாவின் காதுகளில் விறகுக் கட்டை என்ற சொல் கணீர் என்று கேட்டது. அவமானத்தினால் அவள் முகம் குப்பெனச் சிவந்து போயிற்று. தாமதிக்காது ஒரே பாய்ச்சலில் அறையின் கதவை வேகமாகத் திறந்து

கொண்டு படபடக்கும் நெஞ்சுடன் உள்ளே வந்து நின்றாள்.

''நர்ஸ்! ஏதாவது வேலையிருந்தால் நீ போய் கவனித்துக்கொள். நான் கூப்பிட்ட பொழுது வரலாம்'' என்று உத்தரவிட்டு, தன் கைப் பையை மேஜைமீது வைத்துவிட்டு தன் உணர்ச்சிகளைச் சமாளிக்க கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். தாதிப் பெண் வெளியே சென்றதும் அறையின் கதவை நன்றாக மூடித் தாளிட்டுவிட்டு கோபம் பொங்கும் கண்களால் அருணாவை ஏறிட்டுப் பார்த்து, ''உன்னிடம் புறப்படும் பொழுது என்ன சொன்னேன்? இத்தனை பணத்தை வாரி இறைச்சும் கடைசியில் பயனே இல்லாமல் போவதுடன் என் மானத்தையும் கப்பல் ஏற்றி விடுவாய் போலிருக்கிறதே! ஏன் முழிக்கிறாய். உன்னிடம் என்ன சொன்னேன்?'' என்று அதட்டினாள்.

பயத்தில் அருணாவின் இதயம் வெடித்துவிடும் போல வேகமாகத் துடித்தது. கண்களை நீர் திரையிட்டு மறைத்தது.

''யார் கேட்டாலும், 'கீழே விழுந்து கை ஒடிஞ்சு போச்சு'ன்னு சொல்லச் சொன்னேன் அல்லவா? உன் அப்பன் ஒரு கட்டையாலே அடிச்சான். உன் வீட்டிலே தரித்திரம் தாண்டவமாடுகிறது என்ற விஷயமெல்லாம் தெரிஞ்சா என் சிநேகிதிகள் என் முகத்திலும் விழிக்க மாட்டார்கள்! ஏண்டி அருணா! உன்னாலே நான் மானமா வாழ்ந்த இத்தனை நாள் வாழ்வும் மண்ணாகவாடி போகணும்?'' என்று அதட்டினாள் கோபத்துடன்.

அருணாவுக்கு ஒன்றும் புரியவில்லை. தந்தை செய்த ஒரு காரியம், பெரியம்மாவின் வாழ்வை எப்படிப் பாதிக்கக் கூடும் என்று அலசிப் பார்க்கும் ஆற்றல் அந்தச் சிறுமிக்கு இருக்கவில்லை. ஆகவே, அவள் திருதிருவென முழித்துக் கொண்டு பயத்துடன் விம்மி அழத்தொடங்கினாள்.

13

'நஞ்சப்பா நர்ஸிங் ஹோம்'லிருந்து அருணா வீட்டிற்கு வந்து நான்கு மாதங்கள் விரைவில் சென்று மறைந்து விட்டிருந்தன. கையில்

போட்டிருந்த கட்டு அவிழ்க்கப்பெற்ற சில நாட்களில் அவளால் முன்போல் கையை சுவாதீனமாக உபயோகிக்க முடிந்தது.

அன்று காலை அவள் பங்களா வாசல் தோட்டத்திலிருந்த கொன்றைமரத்து நிழலில் விளையாடிக் கொண்டிருந்தாள். தரை முழுவதும் பாய் விரித்தார்ப்போல் உதிர்ந்து கிடந்த சிவந்த மலர்களை வாரி, சிறிய கூடையொன்றில் சேர்ப்பதில் மிகவும் மும்முரமாக முனைந்திருந்த அருணா, உள்ளேயிருந்து அங்கே வந்த ஜெகதாவைக் கவனிக்கவேயில்லை.

''உன்னைத்தான் அருணா! எவ்வளவு முறை கூப்பிடுகிறது! காதா கேட்கவில்லை?'' என்று அதட்டிய பெரியம்மாவின் கோபக் குரலைக் கேட்டதும், திடுக்கிட்டுப் போன அந்தச் சிறுமி, கையிலிருந்த கூடையைக் கீழே நழுவ விட்டாள்.

புழுதியில் விளையாடியதினால் அழுக்கு ஏறிக்கிட்ந்த அவளது உடையையும், அலைந்து புரண்டு காணப்பட்ட கூந்தலையும் கவனித்த ஜெகதாவிற்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. ''குப்பை மேட்டு நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தால் அதுக்கு குப்பை மேட்டு ஞாபகம் போகாது என்பார்கள். அதுபோல்தான் இருக்கிறது உன் காரியமும். இப்பத்தானே வள்ளி உன்னைக் குளிப்பாட்டி, புது உடை போட்டு, தலை வாரிப் பின்னிவிட்டு மற்ற வேலைகளைக் கவனிக்கப் போனாள். அதுக்குள்ளே சட்டையை நாசம் பண்ணிக்கொண்டு நிற்கிறியே? என்ன பொண்ணு, போ? பங்கஜத்திற்குன்னு இப்படி ஒரு உதவாக்கரை பிறக்கவேணாம்'' என்று கடுத்துக்கொண்டாள் ஜெகதா.

பதிலளிக்காது, கீழே சிதறிக் கிடந்த சிவந்த மலர்களை வெறித்துப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள் அந்தச் சிறுமி.

''ஏதாவது கேட்டால் ஈசநாட்டுக் குறத்திபோல முழிக்க வேண்டியது. நல்ல பொண்ணு எனக்கு வந்து சேர்ந்திருக்கிறாய்! காலையிலே எழுந்ததும் ஒரு நாளைப் போல தோட்டத்திலே மண்ணிலே என்ன விளையாட்டு வச்சுக் கிடக்கு? போட்ட சட்டையை கசக்காமல் பூப்போல ஒரு இடத்திலே சும்மாக் காலையும் கையையும் மடக்கிக்கிட்டு உட்கார்ந்திருக்கப்படாதா? உள்ளே வா! உன்கிட்ட ஒரு

சமாச்சாரம் பேசணும்'' என்றாள் ஜெகதா.

விளையாடிக் கொண்டிருந்த பூக்கூடையைக் கூட எடுத்துப் போவதா அல்லது தோட்டத்திலே போட்டுச் செல்வதா என்று அருணாவினால் உடனே தீர்மானிக்க முடியவில்லை. அவள் யோசித்து முடிவுக்கு வருமுன், வேகமாக முன்னே நடந்து சென்று கொண்டிருந்த ஜெகதா வெடுக்கெனத் திரும்பி, ''என்னாடி அருணா, அன்ன நடை போடுகிறாய்? உள்ளே ஓடியா சீக்கிரம்! எனக்கு இன்னும் எவ்வளவோ காரியங்கள் இருக்கு கவனிக்க'' என்று அதட்டினாள்.

''இதோ வந்துவிட்டேன், பெரியம்மா!'' என்று மெல்லிய குரலில் பதில் கொடுத்த அருணா, அவள் பின்னால் கன்றுக்குட்டிபோல் தொடர்ந்து ஓடி வந்தாள்.

இடுப்பில் கையை வைத்துக்கொண்டு ஜெகதா மீண்டும் ஒரு முறை திரும்பி தோட்டத்தைப் பார்த்தாள். ''ஏண்டி பெண்ணே! உனக்குச் சாமான்கள் மேலே ஏதாச்சும் கருத்து கொஞ்சமாவது இருக்கா? போன மாசம்தான் மார்க்கெட்டிலே நான் வாங்கின புத்தம் புதிய கூடை. அதை அப்படியே தோட்டத்திலே போட்டுவிட்டு வரியே? போய் சீக்கிரம் அதை எடுத்துக்கிட்டு உள்ளே வா. உம்! உன்னைச் சொல்லி குத்தமில்லை. என் தலைவிதி!'' என்று அலுத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

அருணா தயங்கிக் கொண்டு உள்ளே வருவதைக் கண்டதும், ''கூடையை அப்படியே மூலையில் வைத்துவிட்டு இங்கே வந்து இந்த நாற்காலியிலே உட்கார்ந்து கொள்'' என்று உத்தரவிட்ட ஜெகதா, எதிர்ப்புறமிருந்த ஆசனமொன்றில் சாய்ந்து கொண்டாள். குற்றவாளிக் கூண்டிலே நிற்கும் கைதியைப் போன்று, பெரியம்மா என்ன கூறப்போகிறாளோ என்னவிதமான புதிய உத்தரவோ என்று எண்ணிக் கலங்கியபடி அருணா நாற்காலியிலே ஒண்டிக் கொண்டு வீற்றிருந்தாள்.

தான் கூறப் போகும் விஷயங்கள் அந்தச் சிறுமியின் மூளையில் பதியுமா? அவைகளை கிரகித்துக் கொண்டு, தனக்குள்ளே ஆராய்ந்து பார்க்கும் அளவுக்கு அவளுக்கு வயதாகிவிட்டதா என்றெல்லாம்

ஜெகதா சிறிதும் சிந்திக்கவில்லை. கவலையும் படவில்லை. ''தினசரி இப்படியே விளையாடிக்கொண்டு, பொழுதைக் கழித்துவிடலாம் என்று நினைக்கவேண்டாம். உங்க காரிகுளத்திலே, உங்க வீட்டுத் தோட்டத்திலே பொழுது விடிஞ்சதிலிருந்து அஸ்தமிக்கும்வரை, மண்ணிலே புரண்டு, சாணியிலே படுத்து எழுந்து, நீ விளையாடித் திரிஞ்சாலும் கேட்பவர்கள் இல்லை. அது ஒரு சுத்த பட்டிக்காடு. படிப்பு வாசனை என்பதே தெரியாத உன் பாட்டியும் கவலைப்பட மாட்டாங்க. ஆனால் இங்கே விஷயமே வேறே. எப்பப்பார்த்தாலும் தோட்டத்து மண்ணிலே புரண்டு விளையாடிக்கொண்டு சுத்த மக்குப் பிளாஸ்திரியா இருந்தியானா உன்னால் எனக்குத்தான் அவமானம் ஏற்படும். தெரிஞ்சுதா!'' என்று உக்கிரமாகத் தலையை அசைத்துக் கொண்டு கடுமையாகக் கேட்டாள் ஜெகதா.

புரிந்தது என்கிற பாவனையில் தலையை அசைத்த அருணா பயத்தினால் பேசவேயில்லை. ''உன்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துப் படிக்க வைக்கத் தீர்மானித்திருக்கிறேன். உங்க கிராமத்துப் படிப்பு இந்தப் பட்டணத்துப் பள்ளிக்கூடங்களுக்குப் பத்தவே பத்தாது. உன்னைக் கொண்டு நான் சேர்த்தால், முதல் வகுப்பிலே கூட எடுத்துக்கொள்ள மாட்டாங்க! அதனால...'' என்று கூறிவிட்டு நிறுத்தினாள்.

பெரியம்மா என்ன சொல்லப்போகிறாள் என்று ஊகிக்க முடியாத அருணா, இடதுகைக் கட்டைவிரலை வேகமாகக் கடிக்கத் துவங்கினாள்.

''சே! பெண்ணே! கையை வாயிலிருந்து எடு. என்ன கெட்ட வழக்கம்! நீ இப்படியெல்லாம் நடந்துகொண்டா, லோகநாயகி வீட்டவர்கள் உன்னைப் பார்த்துச் சிரிப்பார்கள். அத்துடன் என்னைப் பற்றியும் கேவலமாக எண்ணிக் கொள்வார்கள். இப்பொழுது நான் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறேன் தெரியுமா? இந்த இரண்டுமாத லீவு முழுவதும் உன்னை லோகநாயகி வீட்டிற்குத் தினசரி காலையிலும் மாலையிலும் காரில் அனுப்பப் போகிறேன். உன் படிப்பைப் பற்றி அவளோடு பேசிக் கொண்டிருந்தபொழுது அவள் தான் எனக்கு இந்த யோசனையைச் சொன்னாள். அவர்கள் வீட்டில் குழந்தைகளுக்கு தினசரி பாடம் சொல்லிக்கொடுக்க 'பிரைவேட்' வாத்தியார் வந்து போய்க் கொண்டிருக்கிறார். அந்தக்

குழந்தைகளோடு சேர்ந்து படித்து, இந்த லீவுக்குள்ளே உனது இங்கிலீஷ் ஞானத்தை அபிவிருத்தி பண்ணிவிட்டால், பிறகு பள்ளிக்கூடத்தில் சுலபமாகச் சேர்த்துவிடலாம். அதுபோல் செய்யாது இந்த நிலையிலே உன்னைக் கொண்டு பள்ளிக்கூடத்திலே சேர்த்தால் வருஷம் எட்டு ஆனாலும் நீ முதல் வகுப்பை விட்டு வெளியேற மாட்டாய். அப்படி கண்டபடி செலவழிக்க இங்கே எனக்குப் பணம் கொட்டிக் கிடக்கவில்லை, தெரிஞ்சிதா!'' என்று அதட்டினாள்.

பெருமாள்கோயில் மாட்டைப்போல் அருணா அதற்குத் தலையை அசைக்கவே ஜெகதா மேலே பேசலுற்றாள். ''இதுவரை உனக்கு நான் எவ்வளவு செலவு செய்திருக்கிறேன், தெரியுமா? டாக்டர் பில்லுக்கு நானூறு ரூபாய். உனக்குச் சட்டை துணிமணி வாங்கியது ஒரு நூறு ரூபாய். பிறகு மருந்து, மாயம், பழம் முதலிய செலவுக்கு ஒரு நூறு ரூபாய். 'நர்ஸிங் ஹோமு'க்கு தினசரி போய் வந்த கார் பெட்ரோல் செலவு நூறு. எல்லாம் கணக்குப் போட்டுப் பார். எவ்வளவு ஆகியிருக்கும்னு விளங்கும். இனி பள்ளிக்கூடத்திலே உன்னைச் சேர்த்தால் புஸ்தகத்திற்கும், சம்பளத்திற்கும் வேறு செலவழிக்க வேண்டும். இவ்வளவும் உனக்கு நான் எதற்காக செய்ய வேண்டும்? நீ யார்? நான் யார்?'' என்று அதட்டலாகக் கேட்டுவிட்டு, உறுத்து விழித்தாள் அவள் சிறிது கோபத்துடன்.

அருணாவுக்கு இந்தக் கேள்வி மிகவும் விசித்திரமாகத்தான் இருந்தது. 'நீங்கள் யாரா? பெரியம்மாவுக்கு உறவு மறந்து போய்விட்டதா என்ன? நீங்கள் என் பெரியம்மா? நான் உங்கள் தங்கை மகள் அருணா!' பளிச்சென்று பதிலளிக்க வேண்டுமென்று மிகவும் ஆவலாக இருந்தது. ஆனால் ஜெகதாவின் முகத்தைப் பார்த்ததும், பயந்து கொண்டு அவள் மௌனமாக இருந்து விட்டாள்.

இருமித் தொண்டையைக் கனைத்துவிட்டு ஜெகதா மறுபடியும் உரத்த குரலில் மிகவும் அதிகாரமாகப் பேச ஆரம்பித்தாள். ''உன் தகப்பன் என்னிடம் நடந்து கொண்ட முறைக்கு உனக்கும் எனக்கும் உறவு வேறே வச்சிக் கிடக்கிறதா என்ன? 'நீ யார்? நான் யார்?' என்று உன்னை நீ வந்த அன்றே உதறி ஊருக்கு அனுப்பியிருப்பேன். ஆனால், ஒரு காரணத்திற்காக நான் அப்படிச் செய்யவில்லை. உன்னை நான் வைத்துக் காப்பாற்றுவதாக ஏன் ஒப்புக் கொண்டேன் தெரியுமா?'' என்று கேட்டாள்.

இம்முறை அருணாவுக்குத் தலையை அசைக்கக்கூட சந்தர்ப்பம் கொடுக்காது ஜெகதா,.தானே அதற்குப் பதிலும் கூற ஆரம்பித்தாள். ''ஏன் ஒப்புக்கொண்டேன் தெரியுமா? உன் தாயார் இறந்த பின்பு உன் வீட்டுக்கு உன் பாட்டியிடம் துக்கம் விசாரிக்கச் சென்றிருந்தேன். அப்பொழுது நீ தாழ்வாரத்து மண் தரையில், மரக்கட்டை போல், ஒரு கிழிந்த துணிமீது உருண்டுகொண்டு கிடந்தாய். 'பங்கஜத்தின் உயிருக்கு எமனா வந்த சனியனா இது?' என்று கேட்டுக் கொண்டு அருகில் வந்து குனிந்து பார்த்தேன். அப்பொழுது நீ என்னைப் பார்த்துச் சிரித்தாய். அதைக் கண்டதும் என் மனம் அப்படியே உருகிவிட்டது. ஏன் தெரியுமா? சாயலில் அப்படியே என் அருமைப் பங்கஜத்தை உரித்து வைத்தது போலிருந்தது உன் தோற்றம்''.

''உன்னைப்போல் சிறு பெண்ணாக இருக்கையிலே பங்கஜத்தை என் குழந்தைபோல் வளர்த்து வந்திருக்கிறேன். கல்யாணம் ஆன பின்பு மிதமிஞ்சிய கர்வத்திலே, நான் செய்த நன்மைகளை எல்லாம் மறந்து, மிகவும் அகங்காரத்தோடு என்னை அவள் துச்சமாகப் பேசி விட்டாலும், சிறு பிராயத்திலே அவளை வளர்த்த பாசம், என் மனத்தின் அடியிலே அப்படியே அமுங்கிக் கிடந்தது. கன்னம் குழிய பொக்கை வாயைக் காட்டி என்னைப் பார்த்து நீ அன்று சிரித்தபொழுது, என் மனம் அப்படியே பாகாய் உருகிப் போய்விட்டது. பங்கஜத்தை நினைத்து எனக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்துவிட்டது. சரி இந்தக் குழந்தைக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று அன்றே என் மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டு விட்டேன். அதனால்தான் செலவைப் பொருட்படுத்தாது, உனக்கு வைத்தியம் செய்து படிக்க வைத்து என்னுடன் வைத்துக் காப்பாற்றுவதாக உன் பாட்டியிடம் ஒப்புக் கொண்டேன்'' என்றாள்.

பங்கஜத்தின் நினைவினால் தழுதழுத்த தனது குரலை இருமிச் சரிப்படுத்திக் கொண்ட ஜெகதா, தனது மனவெழுச்சிகளை அந்தச் சிறுமி முன் பகிரங்கமாகக் காட்டிக்கொள்ள மனமின்றி, மிகவும் அழுத்தலாக, ''லோகநாயகி வீட்டிற்கு உன்னை இன்று கூட்டிக்கொண்டு போகப் போகிறேன். லோகநாயகி யார் என்று உனக்குத் தெரியும் அல்லவா?'' என்று வினவினாள்.

''தெரியாது பெரியம்மா!'' என்று தீர்மான குரலில் அருணா பதிலளித்ததைக் கேட்டதும் ஜெகதா ஆச்சர்யத்திலே ஆசனத்தினின்று துள்ளி எழுந்துவிட்டாள்.

''தெரியாதா? நல்ல மக்குப் பெண் நீ, போ! லோகாவைத் தெரியவில்லை என்கிறாயே? தினமும் சாயங்காலம் 'நர்ஸிங் ஹோமு'க்கு என்னுடன் உன்னைப் பார்த்துப் போக வருவாளே ஒரு அம்மாள், அவள்தான் லோகநாயகி! அவள் குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கூடத்தில்தான் உன்னைச் சேர்க்க உத்தேசித்திருக்கிறேன். உன்னை அங்கே அவர்கள் வீட்டுக்கு தினமும் படிக்க அனுப்பப் போகிறேன் என்றாலும் வேறு ஒரு காரியத்திற்காகவும் உன்னை அங்கே அனுப்ப நான் சம்மதித்திருக்கிறேன். லோகநாயகியின் குழந்தைகளிடமிருந்து நல்ல பழக்க வழக்கங்களை நீ கற்றுக்கொண்டு, அவர்களைப்போல் நன்றாக நடந்து கொள்ளத் தெரிந்து கொள்ள வேண்டும். நல்ல அந்தஸ்து உள்ளவர்களுடன் பழகினாலாவது உன்னிடம் உள்ள அற்ப குணங்கள், அசட்டுத்தனம் எல்லாம் மறைந்து உனக்கு நல்ல பண்பாடு ஏற்படும் என்று நினைக்கிறேன்.

''லோகாவின் குழந்தைகள் உன்னைப்போல் உடைகளை அசுத்தமாக்கிக் கொள்ள மாட்டார்கள். மண்ணில் விழுந்து புரளவும் மாட்டார்கள். உன்னையொத்த வயதுடையவள்தான் அந்த நளினி, அவள் அதற்குள் பெரிய இங்கிலீஸ் புஸ்தகங்களையெல்லாம் அலட்சியமாகப் படித்து விடுகிறாள். என்ன பேச்சுப் பேசுகிறாள் தெரியுமா? ரொம்பவும் கெட்டிக்காரி. ஆனால் ஒன்று. உன்னை இப்போதே எச்சரிக்க விரும்புகிறேன். நீ உண்டு, உன் பாடம் உண்டு என்று அங்கே மிகவும் கௌரவமாக நடந்துகொள்ள வேண்டும். உன் அப்பாவைப் பற்றியோ, வீட்டைப் பற்றியோ எதுவுமே நீயாக அவர்களிடம் பேசப் போக வேண்டாம். அப்படியே மீறி லோகாவோ, வேறு யாரோ, உன் அப்பாவுக்கு என்ன வேலை என்றால், அவர் ஒரு மிராசுதார் என்று மட்டும் கூறினால் போதும். அசட்டுத்தனமாக உன் குடும்பத்தைப் பற்றி அவர்களிடம் ஏதும் கூறி வைத்தாயானால், பிறகு எனக்குத்தான் அவமானம். அப்படி ஏதாவது செய்தாயானால் என்னால் உன்னைப் பிறகு மன்னிக்கவே முடியாது. இது உன் ஞாபகத்தில் இருக்கட்டும்'' என்று மூச்சு விடாது பிரசங்கித்தாள்.

இம்முறை அருணாவுக்குத் தலையை அசைக்கக்கூட சந்தர்ப்பம் கொடுக்காது ஜெகதா, தானே அதற்குப் பதிலும் கூற ஆரம்பித்தாள். ''ஏன் ஒப்புக்கொண்டேன் தெரியுமா? உன் தாயார் இறந்த பின்பு உன் வீட்டுக்கு உன் பாட்டியிடம் துக்கம் விசாரிக்கச் சென்றிருந்தேன். அப்பொழுது நீ தாழ்வாரத்து மண் தரையில், மரக்கட்டை போல், ஒரு கிழிந்த துணிமீது உருண்டுகொண்டு கிடந்தாய். 'பங்கஜத்தின் உயிருக்கு எமனா வந்த சனியனா இது?' என்று கேட்டுக் கொண்டு அருகில் வந்து குனிந்து பார்த்தேன். அப்பொழுது நீ என்னைப் பார்த்துச் சிரித்தாய். அதைக் கண்டதும் என் மனம் அப்படியே உருகிவிட்டது. ஏன் தெரியுமா? சாயலில் அப்படியே என் அருமைப் பங்கஜத்தை உரித்து வைத்தது போலிருந்தது உன் தோற்றம்''.

''உன்னைப்போல் சிறு பெண்ணாக இருக்கையிலே பங்கஜத்தை என் குழந்தைபோல் வளர்த்து வந்திருக்கிறேன். கல்யாணம் ஆன பின்பு மிதமிஞ்சிய கர்வத்திலே, நான் செய்த நன்மைகளை எல்லாம் மறந்து, மிகவும் அகங்காரத்தோடு என்னை அவள் துச்சமாகப் பேசி விட்டாலும், சிறு பிராயத்திலே அவளை வளர்த்த பாசம், என் மனத்தின் அடியிலே அப்படியே அமுங்கிக் கிடந்தது. கன்னம் குழிய பொக்கை வாயைக் காட்டி என்னைப் பார்த்து நீ அன்று சிரித்தபொழுது, என் மனம் அப்படியே பாகாய் உருகிப் போய்விட்டது. பங்கஜத்தை நினைத்து எனக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்துவிட்டது. சரி இந்தக் குழந்தைக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று அன்றே என் மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டு விட்டேன். அதனால்தான் செலவைப் பொருட்படுத்தாது, உனக்கு வைத்தியம் செய்து படிக்க வைத்து என்னுடன் வைத்துக் காப்பாற்றுவதாக உன் பாட்டியிடம் ஒப்புக் கொண்டேன்'' என்றாள்.

பங்கஜத்தின் நினைவினால் தழுதழுத்த தனது குரலை இருமிச் சரிப்படுத்திக் கொண்ட ஜெகதா, தனது மனவெழுச்சிகளை அந்தச் சிறுமி முன் பகிரங்கமாகக் காட்டிக்கொள்ள மனமின்றி, மிகவும் அழுத்தலாக, ''லோகநாயகி வீட்டிற்கு உன்னை இன்று கூட்டிக்கொண்டு போகப் போகிறேன். லோகநாயகி யார் என்று உனக்குத் தெரியும் அல்லவா?'' என்று வினவினாள்.

''தெரியாது பெரியம்மா!'' என்று தீர்மான குரலில் அருணா பதிலளித்ததைக் கேட்டதும் ஜெகதா ஆச்சர்யத்திலே ஆசனத்தினின்று துள்ளி எழுந்துவிட்டாள்.

''தெரியாதா? நல்ல மக்குப் பெண் நீ. போ! லோகாவைத் தெரியவில்லை என்கிறாயே? தினமும் சாயங்காலம் 'நர்ஸிங் ஹோமுக்'கு என்னுடன் உன்னைப் பார்த்துப் போக வருவாளே ஒரு அம்மாள், அவள்தான் லோகநாயகி! அவள் குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கூடத்தில்தான் உன்னைச் சேர்க்க உத்தேசித்திருக்கிறேன். உன்னை அங்கே அவர்கள் வீட்டுக்கு தினமும் படிக்க அனுப்பப் போகிறேன் என்றாலும் வேறு ஒரு காரியத்திற்காகவும் உன்னை அங்கே அனுப்ப நான் சம்மதித்திருக்கிறேன். லோகநாயகியின் குழந்தைகளிடமிருந்து நல்ல பழக்க வழக்கங்களை நீ கற்றுக்கொண்டு, அவர்களைப்போல் நன்றாக நடந்து கொள்ளத் தெரிந்து கொள்ள வேண்டும். நல்ல அந்தஸ்து உள்ளவர்களுடன் பழகினாலாவது உன்னிடம் உள்ள அற்ப குணங்கள், அசட்டுத்தனம் எல்லாம் மறைந்து உனக்கு நல்ல பண்பாடு ஏற்படும் என்று நினைக்கிறேன்.

''லோகாவின் குழந்தைகள் உன்னைப்போல் உடைகளை அசுத்தமாக்கிக் கொள்ள மாட்டார்கள். மண்ணில் விழுந்து புரளவும் மாட்டார்கள். உன்னையொத்த வயதுடையவள்தான் அந்த நளினி, அவள் அதற்குள் பெரிய இங்கிலீஸ் புஸ்தகங்களையெல்லாம் அலட்சியமாகப் படித்து விடுகிறாள். என்ன பேச்சுப் பேசுகிறாள் தெரியுமா? ரொம்பவும் கெட்டிக்காரி. ஆனால் ஒன்று. உன்னை இப்போதே எச்சரிக்க விரும்புகிறேன். நீ உண்டு, உன் பாடம் உண்டு என்று அங்கே மிகவும் கௌரவமாக நடந்துகொள்ள வேண்டும். உன் அப்பாவைப் பற்றியோ, வீட்டைப் பற்றியோ எதுவுமே நீயாக அவர்களிடம் பேசப் போக வேண்டாம். அப்படியே மீறி லோகாவோ, வேறு யாரோ, உன் அப்பாவுக்கு என்ன வேலை என்றால், அவர் ஒரு மிராசுதார் என்று மட்டும் கூறினால் போதும். அசட்டுத்தனமாக உன் குடும்பத்தைப் பற்றி அவர்களிடம் ஏதும் கூறி வைத்தாயானால், பிறகு எனக்குத்தான் அவமானம். அப்படி ஏதாவது செய்தாயானால் என்னால் உன்னைப் பிறகு மன்னிக்கவே முடியாது. இது உன் ஞாபகத்தில் இருக்கட்டும்'' என்று மூச்சு விடாது பிரசங்கித்தாள்.

அருணா அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டதும் ஜெகதா, "வள்ளி, இங்கே வா. இவளை அழைத்துக் கொண்டு சென்று, முகத்தைத் துடைத்து, தலைவாரி, வேறு உடை போட்டு, வெளியே செல்லத் தயார் செய், நேரமாகிறது" என்று உத்தரவிட்டுவிட்டு மாடிப்பக்கம் சென்று மறைந்தாள்.

சில நிமிஷங்களில், ஜெகதா சோமசுந்தரத்தின் கார் பழனியப்பக் கவுண்டர் வீட்டு வாயிலில் வந்து நின்றது. காரினின்று இறங்கிய அருணா, தன் முன் தெரிந்த அழகிய பெரிய தோட்டத்தை ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டு பெரியம்மாவைப் பின் தொடர்ந்து செல்ல மறந்து நின்று விட்டாள்.

அதைக் கண்ணுற்ற ஜெகதா, "உஸ், அருணா! பட்டிக்காட்டான் யானையைப் பார்ப்பதுபோல் ஏன் மிரண்டு கொள்கிறாய்? பேசாமல் என்னுடன்கூட உள்ளே வா" என்று தாழ்ந்த குரலில் உத்தரவிட்டாள்.

"வாம்மா குழந்தை!" என்று கனிவுடன் தன்னை அழைத்த லோகநாயகியின் முகத்தை நிமிர்ந்து பார்க்கக் கூச்சம் அடைந்தவளாக அருணா, தன் பெரியம்மாவின் பின்னால் மறைந்தபடி, உள்ளே தயக்கத்துடன் சென்றாள்.

அருணாவுக்கு எல்லாம் கனவுபோல் ஒரே ஆச்சரியமாக இருந்தது. தான் உட்கார்ந்திருந்த சோபாவை, பெரியம்மாள் தன்னைக் கவனிக்காத சமயம் மெல்ல இடது கரத்தினால் தடவிப் பார்த்தாள். பூனைக்குட்டியின் அடி வயிற்றைத் தடவினாற்போல் அந்த ஆசனம் அவ்வளவு மிருதுவாக இருந்தது அவளுக்கு எல்லையில்லா வியப்பை அளித்தது. ஜன்னல்களில் தொங்கிய திரைச் சீலையில் செய்திருந்த பூ வேலைப்பாடு அவளுக்கு மிக்க ஆச்சரியத்தைக் கொடுத்தது. சுவரில் மாட்டியிருந்த படங்கள், மேஜைமீது வைக்கப் பெற்றிருந்த புஷ்பத் தொட்டிகள் மூலையில் சுவருடன் பதிக்கப் பெற்றிருந்த மாடத்தில் காணப்பட்ட சலவைக் கல் பதுமை எல்லாம் அவளுக்கு வியப்பை அளித்தன.

அது சமயம் "மம்மி! மம்மி!" என்று உரத்த குரலில் உற்சாகத்துடன் கூக்குரலிட்டுக் கொண்டு மிகவும் உரிமையுடன்

உள்ளே ஓடி வந்தான், ஒரு சிறுவன். கனவினின்று விழித்துக் கொண்டவள்போல் திடுக்கிட்ட அருணா, அவனை நிமிர்ந்து பார்த்தாள். கால் சட்டையும் பூட்ஸும் அணிந்து மிகவும் நாகரிகமாகத் தோன்றிய அந்தச் சிறுவன் வாயிற்படியிலே தயங்கியபடி நின்றுவிட்டான். அறைக்குள்ளே தன் தாயுடன் அவளது சிநேகிதியும் மற்ற ஒரு பெண் குழந்தையும் இருப்பதைக் கண்ணுற்றதும் அவனுக்குத் தாங்கொணாத சங்கோஜம் ஏற்பட்டது. "சுரேஷ்! இங்கே வா!" என்று தாயார் கூப்பிட்டதைக் காதில் கேளாதவன்போல் அவன், "இந்த நளினியைக் கூப்பிட்டு விசாரியுங்கோ, மம்மி! என் நோட்டுப் புத்தகத்தைக் கிழித்து விட்டாள்!" என்று சங்கோஜத்தினால் சிவந்து போன தன் முகத்தைக் கதவின்புறம் திருப்பிக்கொண்டு, கோபமாகக் கூறிவிட்டு, அங்கிருந்து அப்பால் சென்றுவிட்டான்.

"சுரேஷுக்கு ரொம்ப சங்கோஜம். புதுசா யாரையாவது பார்த்துட்டா அவனுக்கு வெட்கம் வந்துவிடும். பேசவேமாட்டான்" என்று பெருமையாகக் கூறிய லோகநாயகி, "நளினி இங்கே வாம்மா!" என்று உரத்த குரலில் தன் மகளை அழைத்தாள்.

"மம்மி! நான் கிழிக்கவில்லை. சுரேஷ் பொய் சொல்கிறான்" என்று கத்திக்கொண்டு உள்ளே ஓடி வந்த சிறுமியை ஏற இறங்கக் கவனித்தாள் அருணா.

"இதோ பார் நளினி. அருணா உன்னோடு படிப்பதற்கு இங்கே வந்திருக்கிறாள். நீ அண்ணனுடன் சண்டை போடுவதைப் பார்த்தால் அவள் என்ன நினைப்பாள்?" என்று அன்புடன் கடிந்து கொண்ட லோகநாயகி, தன் மகளைப் பரிவுடன் மார்போடு அணைத்துக் கொண்டாள்.

கண்கள் மீது புரண்டு பார்வையை மறைத்த தன் சுருண்ட கூந்தலைக் கைகளால் ஒதுக்கிவிட்டு, நளினி அருணாவைத் திரும்பி ஆச்சர்யத்துடன் உற்றுப் பார்த்தாள். சிறிது நேரம் இரண்டு குழந்தைகளும் ஒருவரையொருவர் சந்தேகத்துடனும் கலக்கத்துடனும் மௌனமாகப் பார்த்துக் கொண்டனர்.

அவர்களை அறிமுகப்படுத்திய பின்பு அந்நிலையிலே வீட்டுப் பெரியவர்கள் இருவரும் தங்களுக்குள் பொது விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். அருணாவை ஒரு முறை உற்றுப்

பார்ப்பதும் பிறகு முகத்தை மறுபுறம் திருப்பிக் கொள்வதுமாக சில நிமிஷங்களைக் கழித்ததும் நளினிக்குக் கொஞ்சம் துணிவு ஏற்பட்டது. அடுத்த முறை அருணாவை உற்றுப் பார்த்தபொழுது, அவள் மெல்லியதாகப் புன்முறுவல் செய்தாள். அந்தப் புன்னகையிலே தொனித்த சிநேக பாவத்தை விரைவில் உணர்ந்துகொண்ட அருணா, கண்களை இடுக்கிக் கொண்டு பதிலுக்குப் புன்னகை செய்தாள்.

அருணாவை விட்டுவிட்டு ஜெகதா விடை பெற்றுக்கொண்டு சென்ற கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, மாடி அறையினின்று இறங்கி வந்தாள் ஒரு யுவதி. கையில் சுமந்து கொண்டிருந்த புத்தகங்களை மேஜைமீது தொப்பென வைத்துவிட்டு, ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். தோட்டத்துப் புல் தரைமீது நளினியுடன் ஓடி விளையாடிக் கொண்டிருந்த பெண் குழந்தையைக் கண்டதும், அவள் நெற்றி சிந்தனையினால் சுருங்கியது. கூடத்து ஊஞ்சலில் அமர்ந்திருந்த லோகநாயகியிடம் அவள் வேகமாக ஓடிவந்து, "அத்தை! அந்தக் குழந்தையைப் பற்றித்தானே சொல்லிக் கொண்டிருந்தீர்கள்?" என்று ஆவலுடன் விசாரித்தாள்.

"ஆமாம் மனோ! ஜெகதாவின் தங்கை மகள் அருணா, நளினியோட பள்ளிக்கூடத்திலே சேர்க்கச் சொல்லியிருக்கிறேன்" என்றாள் லோகநாயகி.

மனோன்மணி பதில் பேசவில்லை. கீழ் உதட்டைச் சிந்தனையுடன் கடித்துக் கொண்டாள். தன் அத்தையுடன் ஜெகதா மிகவும் நெருங்கி உறவு பாராட்டி வந்ததை அவள் விரும்பவேயில்லை. "என்னவோ அத்தை, முன் பின் தெரியாத குழந்தைகளுடன் நளினியைப் படிக்க விடுவது அவ்வளவு சிலாக்கியமாகத் தோன்றவில்லை. பிறகு உங்கள் இஷ்டம்" என்று கூறிவிட்டு அப்பால் சென்றுவிட்டாள்.

14

பழனியப்பக் கவுண்டரின் செல்வமகள் நளினி படிப்பில் மிகவும் புத்திசாலிப் பெண்ணாக இருந்தாள். இயற்கையாகவே அவளுக்கு இனிய குரல் இருந்தது. சங்கீதத்தில் விசேஷ பயிற்சிகள் பெறுவதற்குத் தக்க வாய்ப்புகளும் இருந்தன. ஆகவே, மிகவும் சிறிய பெண்ணான போதிலும் அவள் தேர்ச்சி பெற்ற பாடகிபோல் அழகாகவும் இனிமையாகவும் பாடினாள். நளினியின் அழகு, படிப்பு, பாட்டு எல்லாம் அருணாவை வெகுவாகக் கவர்ந்து கொண்டுவிட்டன. விரைவில் இருவரும் ஆருயிர் சிநேகிதிகளாகி விட்டனர்.

நளினியின் சிநேகிதம் அருணாவுக்குப் பல வகைகளிலும் நன்மையளிப்பதாக இருந்தது. தன் சிநேகிதியைப் போல் சுத்தமாக உடுத்திக் கொள்ள வேண்டும், பணிவாகப் பேச வேண்டும் என்றெல்லாம் அருணாவுக்கு ஆசைகள் ஏற்பட்டன. அதன் விளைவாக அவள் விரைவில் வெகுவாக மாறிவிட்டிருந்தாள்.

விரலைக் கடித்துக் கொண்டு எதற்கெடுத்தாலும் பயத்துடன் அழுது விடும் கிராமத்துப் பேதைச் சிறுமியாக இல்லாது, பெரியவர்களிடம் அடக்கமாகவும் பணிவாகவும் பேசப் பழகிக் கொண்டாள். நளினியைப்போல் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச வேண்டும், கணக்குகளை விரைவில் சரியாகப் போட்டுவிட வேண்டும் என்றெல்லாம் ஆசை ஏற்படவே, அச்சிறுமிக்கு கல்விமீது அபார மோகம் ஏற்பட்டது.

லோகநாயகி அம்மாள் தனக்கு அளித்திருந்த பிரத்யேக சலுகைகளைச் சிறிதும் வீணாக்காமல், அவள் நன்கு பயன்படுத்திக் கொண்டாள். அதன் பயனாக, இரண்டு மாத காலத்தில், நளினி படித்த அதே வகுப்பில் சேர்ந்து படிக்க வேண்டிய அளவு கல்வி அறிவை விரைவில் சம்பாதித்துக் கொண்டுவிட்டாள்.

பழனியப்பக் கவுண்டரின் குடும்பத்தவர்களில் ஒரே ஒருத்தியைத் தவிர மற்ற எல்லோருக்கும் அருணாவை மிகவும் பிடித்திருந்தது. தாய்மை உணர்ச்சி மேலோங்கியிருந்த லோகநாயகி அம்மாளுக்கு, அருணாமீது காரணமற்றதொரு பற்றுதல் ஏற்பட்டிருந்தது. வெளிப்படையாகத் தனது அன்பை அவள் அடிக்கடி காட்டிக் கொள்ளாவிடினும் தன் மகளுடன் அருணா நெருங்கி உறவாடிப் பழகியதை அவள் பெரிதும் ஆதரித்தாள்.

பழனியப்பக் கவுண்டருக்கு தாம்பத்திய வாழ்விலே நீண்ட நாட்கள் புத்திரப் பேறு இல்லாதிருந்தது. வேண்டாத தெய்வங்களை எல்லாம் வேண்டி, தவம் புரிந்து, மெத்தவும் விரும்பி, பல வருஷங்களுக்குப் பிறகு அருமையிலும் அருமையாகப் பெற்றெடுத்திருந்த மகன் சுரேஷ்குமாரனையும், மகள் நளினியையும் அவர் தமது கண்ணின் கருமணிகள்போல் நேசித்தார். பொதுவாகவே அவருக்குக் குழந்தைகள் என்றால் அபாரப்பிரியம். தங்கள் வீட்டிற்குள் வேற்றுமையின்றி சகஜமாகப் பழகி வந்த அருணாவை அவர் தனது குழந்தைகளில் ஒன்றைப் போலவே வித்தியாசமின்றிப் பாராட்டி வந்தார்.

லோகநாயகியின் செல்வப் புதல்வன் சுரேஷ்குமார், ஆரம்பத்திலே சங்கோஜம் காரணமாக, அருணாவிடம் பேசவோ, பழகவோ, விளையாடவோ விரும்பவில்லை! ஆனால் நாளடைவில் அவன் சங்கோஜம் துரிதமாகத் தெளிந்துவிட்டது. அருணா வேறு ஒருவர் வீட்டுப் பெண் குழந்தை என்ற மனப்பான்மையை விடுத்து, அவளையும் தன் தங்கை நளினியைப் போலவே பாவித்து, அன்பு பாராட்டி பழகி வந்தான்.

இவ்வாறு எல்லோருக்கும் மிகவும் பிடித்து விட்டிருந்த அருணாவை மனோன்மணிக்கு மட்டும் ஏனோ பிடிக்கவில்லை! ஒரு சமயம் அவள் வேறு யார் வீட்டுக் குழந்தையாக இருந்தாலும் அவள் கவனத்தை அவ்வளவு கவர்ந்திருக்க முடியாது. தனக்குக் கொஞ்சமும் விருப்பமில்லாத ஜெகதாவின் உறவுப் பெண்ணை அத்தை குடும்பத்தவர்கள் கூட வைத்து கொஞ்சி, உறவு கொண்டாடி மகிழ்வதை அவளால் சகிக்கவே முடியவில்லை.

அதனால் சந்தர்ப்பம் நேர்ந்த பொழுதெல்லாம் மனோன்மணி

தனது அதிருப்தியை வெளிப்படையாக வார்த்தைகளாலும் செயல்களாலும் காட்டி வந்தாள். அருணா வயதிலே மிகவும் சிறியவளாக இருந்த பொழுதிலும் மனோன்மணியின் மனப்போக்கை நன்கு உணர்ந்து கொண்டு விட்டாள். ஒரு தவறும் செய்யாதிருந்தும், தன் மீது அந்தப் பெண்மணிக்கு ஏன் கோபம் ஏற்படுகிறது என்பது அச்சிறுமிக்குப் புரியாத புதிராக இருந்தது. எனினும், அவள் கூடியவரை மனோன்மணியின் அதிருப்திக்கு ஆளாகாது இருக்க முயற்சித்து வந்தாள்.

பழனியப்பக் கவுண்டரின் மனைவி லோகநாயகியம்மாள் பெயருக்குத்தான் வீட்டின் எஜமானியாக இருந்தாள். உண்மையில் குடும்பத்தை நிர்வகிக்கும் பொறுப்பு முழுவதும் மனோன்மணியின் கையில்தான் இருந்தது. அவ்வளவு பெரிய பங்களாவையும், செல்வ சுகம் மிகுந்த குடும்ப பாரத்தையும் தான் திறமையுடன் நிர்வகிக்கிறோம் என்று அவளுக்கு அசாத்திய கர்வம் ஏற்பட்டிருந்தது. அதனால் அவள் யாரையும் லட்சியம் செய்யாது மிகவும் துச்சமாகப் பேசிவிடும் வழக்கத்தைக் கொண்டிருந்தாள். எஜமானி லோகநாயகிக்குக் கூட அஞ்சாது எதிர்த்துப் பேசிவிடும் துணிச்சல் நிறைந்த வேலைக்காரர்கள் மனோன்மணியிடம் வாயைத் திறக்கவே அஞ்சுவார்கள். ''சின்னம்மா கோபிப்பார்கள். சின்னம்மா இதைச் செய்ய சொன்னார்கள், சின்னம்மாவிடம் கேட்டுச் செய்கிறோம்'' என்று ஆள்படைகள் திக்கு சலாமிட்டுப் பணிந்து கடமையாற்றும் அளவிற்கு அந்த வீட்டில் அவள் ராணியாக வாழ்ந்து கொண்டிருந்தாள்.

இந்த மட்டில் வீட்டுத் தொல்லைகளைக் கவனிக்க பொறுப்பான ஒரு ஆள் கிடைத்தாளே என்று லோகநாயகி ஆரம்பத்திலேயே அசட்டையாக இருந்துவிட்டாள். மனோன்மணி, வீட்டைத் தன்னுடையதுபோல் பாவித்து கருத்தாக கவனித்து வந்ததனால், அவளுக்கு வீட்டின் பொறுப்பே சிறிதும் இல்லாது இருந்தது. நிம்மதியாக, கிளப்புகளுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் போய் வர அவளால் முடிந்தது.

குடும்பத்தை நிர்வகிக்கும் பொறுப்புடன் மனோன்மணி தனது ஆதிக்கத்தை நிறுத்திக் கொண்டு விடவில்லை. அவ்வாறு ஒதுங்கிப்

போயிருந்தால் அவளைப் பற்றி அந்தக் குடும்பத்தில் யாருமே சிந்தித்திருக்க மாட்டார்கள். குடும்ப பாரத்தை வகிப்பதுடன் நிற்காது, மனோன்மணி குழந்தைகளுடைய வாழ்க்கையிலும், லோகநாயகியின் இஷ்டங்களிலும், அடிக்கடி குறுக்கிட்டு, தனது ஆதிக்கத்தை ஸ்தாபிக்க முயற்சித்தாள்.

இதனால் அடிக்கடி அந்தக் குடும்பத்திலே பெண்களிடையே சிறு மனஸ்தாபங்கள் தலை காட்டிக் கொண்டிருந்தன. ஒரேயடியாக மனோன்மணியின் சலுகைகளை அடக்கி அவளது அட்டகாசங்களை ஒடுக்கவும் லோகநாயகியால் முடியவில்லை. அதே சமயம் தனது அண்ணன் மகள் ஆதிக்கத்திற்கு உட்பட்டு அடிமைபோல் சொன்னபடி கேட்டு ஆடிக்கொண்டிருக்கவும் அவளால் சகிக்க முடியவில்லை. 'பாம்பு என்று தாண்டவும் முடியவில்லை. பழுதை என்று மிதிக்கவும் முடியவில்லை' என்ற மனநிலையிலே அவள் சஞ்சலத்தில் உழன்று கொண்டிருந்தாள். அண்ணன் மகளுடன் மனஸ்தாபம் அடையும் போதெல்லாம் அவள் ''சும்மா வாயை வைத்திருக்காது பரோபகாரம் செய்யப் போய் வம்பை அல்லவா விலைக்கு வாங்கிக் கொண்டோம்?'' என்று தனக்குள்ளே வருந்தினது உண்மையே.

மனோன்மணி, லோகநாயகியின் அண்ணன் சுந்தரக் கவுண்டரின் ஒரே மகள். நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகிக் கிடந்த கவுண்டர் தாம் கண்ணை மூடு முன் மகளுக்குத் திருமணம் செய்து பார்த்து மகிழ பெரிதும் ஆசைப்பட்டார். அதன் விளைவாக மனோன்மணிக்கு அவளது பதின்மூன்றாவது வயதிலேயே கல்யாணம் நடந்தேறிவிட்டது. நோயினின்று திரும்ப எழப் போவதில்லை என்றிருந்த கவுண்டர், ஆச்சர்யமாக பிழைத்து எழுந்துவிட்டார். ஆனால், அதற்குப் பதில் கட்டக் கடுங்காளையாயிருந்த இருபத்தைந்து வயது வாலிபனான மருமகன் குருமூர்த்தி, ஒரே நாளில் காலராவில் திடீரென்று மரணமடைந்து விட்டான்.

துக்கம் விசாரிக்கச் சென்றிருந்த இடத்தில் அண்ணனின் அருமை மகளின் நிலைமை, லோகநாயகியின் உள்ளத்தை மிகவும் உருக்கிவிட்டது. பதினான்கு வயது கூடப் பூர்த்தியாகாத இளம் கைம்பெண், வறுமை நிறைந்த குடும்பத்திலே கிராம வாழ்க்கை.

மனோன்மணியின் எஞ்சிய வாழ்க்கை மிகவும் இருண்டு, முடிவில்லாத் துயரமாக இருக்கும் என்று எண்ணி பச்சாதாபமடைந்த லோகநாயகி, அண்ணனின் சம்மதத்தின் பேரில் அவளைத் தன்னுடன் பட்டணத்திற்குக் கூட்டி வந்து விட்டாள்.

அத்தையின் உதவியால் வீட்டிலேயே தக்க ஆசிரியர்களை வைத்துக் கல்வி கற்றுக் கொண்டு, சில வருஷங்களில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறிவிட்டிருந்தாள் மனோன்மணி. அதற்குப் பிறகு, கலாசாலையில் சேர்ந்து படித்து பி.ஏ. பட்டத்தையும் பெற்றுவிட்டாள். நகரத்து வாழ்க்கை, படிப்பு, இவைகள் ஏற்பட்டதும், மனோன்மணியின் தோற்றத்திலும், மனோபாவத்திலும் பலவித மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. மெட்ரிகுலேஷன் படிப்பு வரை அவள் வெள்ளைப் புடவையும், விபூதியுமாக கைம்பெண் நோன்பை மிகவும் கடுமையாக அனுசரித்து வந்தாள். கலாசாலைப் படிகளை மிதித்ததும் அவளது மனோபாவனையும் மாறுதலை அடையத் துவங்கியது. யாருக்காக யார் இந்தக் கஷ்டத்தையெல்லாம் அனுபவிக்க வேண்டும்? பெண்ணுக்கு மட்டும் சமூகத்திலே பாரபக்ஷமாக இந்தத் தண்டனை ஏன்? என்றெல்லாம் அவளது மனசாட்சி புரட்சி செய்யத் தொடங்கியது. வெள்ளைப் புடவைகளைக் களைந்துவிட்டு, விதவிதமான வர்ணச் சேலைகளை அணியத் துவங்கினாள். அன்று நாள்வரை விபூதியில் துலங்கிய நெற்றியில் குங்குமம் அணிந்து கொண்டாள். பழனியப்ப கவுண்டரின் பங்களாவில் பூத்துச் சொறிந்த புஷ்பங்கள் அனைத்தையும் கூந்தலில் முடித்துக் கொண்டாள்.

மனோன்மணி செய்து கொண்ட அலங்காரத்தைப் பற்றியோ, அவள் கல்வி கற்று முன்னேறுவது பற்றியோ லோகநாயகிக்கு எந்தவித ஆட்சேபணையும் இருக்கவில்லை. படிப்பு முடிந்ததும், தனக்கு உதவியாக வீட்டை நிர்வகிக்க அவள் முன் வந்ததை லோகநாயகி மிகவும் சந்தோஷத்துடன் ஆதரித்தாள்.

மனோன்மணியைப் பொறுத்தவரை கல்வியானது அவளது செருக்கை அதிகரிக்கத்தான் செய்தது. விதிவசத்தினால் பணக்காரன் மனைவியாகிவிட்டாலும், அத்தையம்மாள் கல்வி அறிவு அதிகம் அற்றவள். தன்னைப் போல் ஒரு பட்டதாரி அல்ல என்ற எண்ணத்தை அவளால் மறுக்க முடியவில்லை. வீட்டிற்கு நான்கு

பி.ஏ.பட்டதாரிகள் விகிதம் பெண் கல்வி அபாரமாக முன்னேறி விட்டுள்ளது என்ற உண்மையை நன்கு உணர்ந்திருந்தும், தான் ஒரு பட்டதாரி என்ற அகம்பாவம் அவள் தலைக்கு ஏறி விட்டிருந்தது. பழனியப்பக் கவுண்டர் வீட்டிலே, தான் ஒரு விருந்தினள், அவர்களது உதார குணத்தினால் முன்னுக்கு வந்தவள் என்ற தனது நிலைமையை மறந்து அவள், ராணிபோல் அதிகாரம் செலுத்தி வந்தாள்.

இதனால் அத்தைக்கும் அண்ணன் மகளுக்கும் சிறு சிறு மனஸ்தாபங்கள் அதிகம் எழத் தொடங்கின. அவளது அதிகப் பிரசங்கித் தனத்தை சகிக்க முடியாது, எப்பொழுதாவது லோகநாயகி எதிர்த்துப் பேசி அதட்டிவிட்டால் போதும், ''அத்தை! உங்கள் நன்மைக்குச் சொன்னேன். எனக்கென்ன வந்தது? நான் எல்லோர் போலும் இருக்கிறபடி இருந்தால் என்னை இவ்வாறு சொல்வீர்களா? எனக்கு வாழ்விலே இனி என்ன இருக்கிறது? ஆயுசு முழுவதும் கைம்பெண் என்ற இந்த அழகிய பட்டத்தை என் தந்தை எனக்கு ஆஸ்தியாக விட்டுப் போயிருக்கிறார்!'' என்று அழுது புலம்பி ஆர்ப்பரிப்பாள்.

லோகநாயகியின் கடுமையெல்லாம் அவளது கண்ணீரைக் கண்டதும் மாயமாக மறைந்துவிடும். ''ஏற்கெனவே மனம் புண்பட்டிருக்கும் இந்தப் பெண்ணை வீணாகக் கோபித்துக் கொள்வது மகாபாவம்'' என்று தனக்குள் எண்ணி பச்சாதாபமடைந்து மனம் உருகிவிடுவாள். ''மனோ! தெரியாமே சொல்லிவிட்டேன். மன்னிச்சுக்கோம்மா!'' என்று இறைஞ்சி வேண்டிக் கொள்வதுடன் தான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தம் செய்வதுபோல் அன்று பொழுதிற்குள் நகரத்துக் கடைக்குச் சென்று இரண்டு பட்டுச் சேலைகளோ, அல்லது ஏதோ ஒரு சிறு நகையோ வாங்கிக் கொண்டு வந்து மனோன்மணிக்குப் பரிசாக அளித்து சமாதானம் செய்து கொண்டுவிடுவாள்.

பழனியப்பக் கவுண்டரின் குடும்பத்துடன் அருணா நெருங்கிப் பழகத் துவங்கிய சில மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் ஒரு சிறு சம்பவம் நடந்தது.

கவுண்டர் ஆபீஸிலிருந்து அப்பொழுதுதான் பங்களாவுக்குத்

திரும்பி வந்திருந்தார். பள்ளிக்கூட விடுமுறை நாட்களில் பகல் போஜனத்தின்போது தமது குழந்தைகளுடன் கூட அமர்ந்து உணவு அருந்துவதை அவர் ஒரு பழக்கமாகக் கொண்டிருந்தார். கைகால்களைக் கழுவிக் கொண்டு தந்தை போஜன அறையின் பக்கம் செல்வதைக் கண்ணுற்றதும் நளினி உடனே அங்கு தானும் போகத் திரும்பினாள். தன்னுடன் கூட அதுவரை விளையாடிக் கொண்டிருந்த சிநேகிதியின் நினைவு வந்ததும் அவளுக்குத் தயக்கம் ஏற்பட்டது! அருணாவை விட்டுத் தான் மட்டும் சாப்பிடச் செல்ல அவளுக்கு மனம் வரவில்லை. அதே சமயம் தந்தையின் உத்தரவின்றி அவளை உள்ளே தன்னுடன் சாப்பிட அழைக்கவும் அச்சமாக இருந்தது.

இலைக்கு முன் வந்து உட்கார்ந்த கவுண்டர் திரும்பிப் பார்த்தார். சுரேஷ்குமாரின் பக்கத்தில் நளினியைக் காணவில்லை. தமது அருமைப் புதல்வி சாப்பிட உட்காராது தயங்கிக் கொண்டு வாயிற்படியில் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் வியப்புடன், ''நளினி! ஏன் நிக்கிறே? வந்து உட்காரம்மா'' என்று பரிவுடன் அழைத்தார்.

சமையற்கட்டின் கதவு பக்கத்திலே சமையற்காரர்களின் வேலையை மேற்பார்வையிட்டுக் கொண்டு நின்ற மனோன்மணியை அச்சிறுமி கடைக் கண்ணால் பார்த்துவிட்டு பேசத் தயங்கினாள். 'மனோ அக்கா கோபிப்பார்களோ' என்ற பயத்திலே அவள் உதடுகள் பேச முடியாது துடித்தன.

''நளினிக் கண்ணு! என்னம்மா வேணும்?'' என்று மீண்டும் பரிவுடன் விசாரித்தார் கவுண்டர்.

''அப்பா! என் சிநேகிதி அருணாவும் இங்கே இருக்கிறாள். அவளை நம்முடன் சாப்பிட அழைக்கட்டுமா?'' என்று முடிவில் துணிவுடன் கேட்டுவிட்டாள் மகள்.

பதிலுக்குக் கவுண்டர் கடகடவென்று சிரித்தார். ''இதுதானா? என்னவோ ஏதோன்னு நினைச்சேன். உன் சிநேகிதியைக் கூப்பிட்டு சாப்பிடச் சொல்ல என்னைக் கேட்கணுமா என்ன? போய் சீக்கிரம் அவளையும் கூட்டிக் கொண்டு வா!'' என்றார் அன்புடன்.

எவ்வளவோ பழகியும், கவுண்டருடன் அருகில் அமர்ந்து உணவு உட்கொள்ள அருணாவுக்கு பயமாகவும் சங்கோஜமாகவும் இருந்தது.

''ஐயோ, நான் வர மாட்டேன். எங்க பெரியம்மா திட்டுவாங்க'' என்று அவள் பிகு செய்து கொண்டே சாப்பாட்டு அறைக்குள் வந்தாள். ''உட்கார் அம்மா, அருணா! ஏன் இப்படி வெட்கப்படுகிறாய்? என்னைக் கண்டு இவ்வளவு சங்கோஜப்பட்டால் சாத்தியப்படாது. தெரிந்துகொள். நீ நளினியுடன் பழக ஆரம்பித்ததிலிருந்து நான் ஒரு தீர்மானம் செய்துவிட்டேன். உன்னை என்றும் எங்கள் வீட்டுப் பெண்ணாக இருக்கச் செய்து விடுவது என்று உத்தேசித்திருக்கிறேன்'' என்று பரிகாசமாகக் கூறிவிட்டு தமது மனைவியின் முகத்தை அர்த்த பாவத்துடன் பார்த்துப் புன்முறுவலித்தார்.

''அருணாவுக்கு என்ன? மிகவும் நல்லபெண். புத்திசாலி. அவளை நமக்கு சொந்தமாக்கிக் கொள்ள கொடுத்து வைக்க வேண்டும்'' என்று கூடமாகப் பதிலளித்த லோகநாயகி, மகிழ்ச்சியுடன் மெல்லச் சிரித்தாள்.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே நடந்த சம்பாஷணையின் அர்த்தம் முழுவதையும் உணர்ந்து கொள்ள முடியாவிடினும், அவர்கள் தன்னைப்பற்றிப் பேசுவதைக் கேட்ட அருணா, வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டே சாப்பிட்டாள்.

போஜனத்திற்குப் பிறகு சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு கவுண்டர் ஆபீஸிற்குப் புறப்பட்டுச் சென்றார். அவர் வெளியே எப்பொழுது செல்வார் எனக் காத்திருந்தவள்போல் மனோன்மணி, லோகநாயகியிடம் வேகமாக ஓடி வந்தாள். ''அத்தை! நான் சொல்கிறேன் என்று கோபிக்கக்கூடாது. இந்த விளையாட்டெல்லாம் பின்னாடி விபரீதமாகப் போகிறது'' என்றாள் மிகவும் கோபத்துடன்.

அருணாவைப் பரிகசித்து தன் கணவன் பேசியதை அவள் விரும்பவில்லை என்பதை உணர்ந்து கொண்ட லோகநாயகி அதற்கு நேரிடையாகப் பதில் சொல்லாது மௌனமாக இருந்தாள். ''நீங்கள் கொடுக்கும் இடம்தான் இது. குழந்தைகள் வரவர மிகவும் மோசமாகிக் கொண்டு வருகிறார்கள். அந்த அசட்டுப் பெண்ணை உள்ளே இழுத்து வைத்துக் கொண்டு உறவாடுவது எவ்வளவு தவறாகப் போகப் போகிறது என்று எனக்குத் தெரியும். சொன்னால்

உங்களுக்குக் குற்றமாகப் படுகிறது. அத்தான் சாப்பிடும்போது வேற்று மனிதர் வீட்டுப் பெண்ணான அவளையும் கூட்டி வைத்துச் சாப்பாடு போடாவிட்டால் என்ன? நளினிக்கு புத்தியே இல்லை. சிநேகிதம் என்றால் அதற்கு ஒரு எல்லை இல்லையா?'' என்று அதட்டினாள்.

''என்ன பெரிய தவறு செய்துவிட்டாள்? கூட சாப்பிட அழைத்து வந்தாள். ஒரு குழந்தையை விட்டுவிட்டு மத்த ரெண்டும் சாப்பிட உட்கார்ந்தால் நன்றாக இருக்குமா நீயே சொல்லு மனோ!'' என்றாள் லோகநாயகி.

''தவறு என்ன செய்துவிட்டாளா? நளினி வரவர அந்தப் பெண்ணோடு சேர்ந்து சுத்த கழுதையாகவல்லவா மாறிவிட்டிருக்கிறாள்? நேற்று அவள் என்ன செய்தாள் தெரியுமா? மாடியறைக்குத் தன் சிநேகிதியைக் கூட்டிக் கொண்டுபோய் பீரோவைத் திறந்து தனது உடைகள் அனைத்தையுமே எடுத்து அவளுக்குக் காட்டிக் கொண்டிருந்தாள்'' என்று மனோன்மணி முடிக்குமுன், அவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு, அருகில் அமர்ந்திருந்த சுரேஷ்குமார் கோபத்துடன், ''காட்டினால் என்ன குறைந்து விடும்? நான்கூட அருணாவுக்கு என் புத்தக அலமாரியைத் திறந்து எல்லா வர்ணப் படங்களையும் எடுத்துக் காட்டினேன். அவள் எங்களுடைய சிநேகிதி. நாங்கள் அப்படித்தான் செய்வோம்!'' என்று இரைந்து கத்தினான்.

''சுரேஷ்! வாயை மூடு. வரவர நீயும் சுத்த கழுதையாகத்தான் போய்க் கொண்டிருக்கிறாய். பெரியவர்கள் பேசும்போது குறுக்கே தலையிடக்கூடாது என்னும் மரியாதைகூட மறந்துவிட்டது!'' என்று மனோன்மணி அடக்கமாட்டாத கோபத்துடன் பற்களைக் கடித்தாள்.

பள்ளிக்கூடம் திறக்க இன்னும் சில தினங்களேதான் இருந்தன. நடந்துபோன பரீக்ஷையில் பாஸ் செய்து சுரேஷ்குமாரன், மூன்றாவது பாரத்திற்கு அனுப்பப்பட்டிருந்தான்.

'பள்ளிக்கூடத்திலே மிகவும் பெரிய வகுப்பை அடைந்து விட்டோம். பெரிய பையனாக வளர்ந்து விட்டோம்' என்ற எண்ணம் அவனது உள்ளத்திலே சில நாட்களாக ஏற்பட்டிருந்தது. முன்போல்

மனோ அக்கா தன்னைச் சிறு குழந்தை என எண்ணி அதட்டியதை அவனால் தாள முடியவில்லை.

"மனோ அக்கா! வாயை மூடுங்கள். உங்களைப்போல் நான் ஒன்றும் பிறர் காரியங்களில் தலையிடவில்லை" என்று மிகவும் ஆக்ரோஷமாகச் சுடச்சுட பதிலளித்தான்.

எதிர்க்கப்படுவது என்பதை அன்றுவரை அறிந்திராத மனோன்மணிக்கு இதைக் கேட்டதும் கோபமும், துக்கமும் ஒன்று சேர்ந்து பொங்கிக் கொண்டு வந்துவிட்டது. "பாருங்க அத்தை! சுரேஷ் பேசுவதை!" என்று கோபத்துடன் கத்திவிட்டு விம்மிக்கொண்டே மாடியறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டுவிட்டாள்.

அன்று முழுவதும் எவ்வளவு வேண்டியும் அவள் சாப்பிடவேயில்லை. இந்தப் பட்டினிச் சத்தியாக்கிரகத்தைக் காணச் சகிக்க முடியாது லோகநாயகி, தன் மகனது துஷ்டத்தனத்திற்கு மன்னிப்புக் கோர நேர்ந்தது. அத்துடன் இல்லாது, அவளுக்குக் கொஞ்சம் பணச்செலவும் அதனால் ஏற்பட்டது.

அன்றிரவு, அத்தையம்மாள் தனது கோபத்தைத் தீர்க்க அவசரமாகக் கடையிலிருந்து பரிசாக வாங்கி வந்திருந்த முத்துமாலையைக் கழுத்தில் போட்டு அழகு பார்த்துவிட்டு, திருப்தியுடன் அதைத் தன் பீரோவிற்குள் அடக்கம் செய்து கொண்டாள் மனோன்மணி. அவளைச் சமாதானப்படுத்த அத்தையம்மாள் வாங்கியளித்த ஆபரணங்களும், புடவைகளும் ஒரு தலைமுறைக்குப் போதிய அளவு, பீரோவுக்குள் நிறைந்து கிடந்தன. ஆனால் அவைகள் ஒன்றும் அவளுக்குத் திருப்தியை அளிக்கவில்லை.

தன்னைத் தவிர உலகில் உள்ள மற்ற எல்லோரும் சந்தோஷமாக வாழ்வதாக அவள் உள்ளம் கற்பனை செய்தது. அக்கற்பனையினால் அவளுக்குத் தன்னைத் தவிர மற்ற எல்லோர் மீதும் கட்டுக்கு அடங்காத காரணமற்ற பொறாமை ஏற்பட்டது.

தாயற்ற குழந்தை அருணா, வயதிலும், மற்ற பல நிலையிலும் மனோன்மணிக்கு ஒருவகையிலும் சமதையற்றவள். இருந்த போதிலும் அந்தச் சிறுமிமீது கூட அவளுக்கு எல்லையற்ற பொறாமை ஏற்பட்டது. கவுண்டர் கூறியபடி, ஒரு சமயம் அவள்

சுரேஷ்குமாரனின் மனைவி ஆகிவிட்டால்!... இந்த நினைவு ஒன்றே அவளுக்கு அருணாவை துவேஷிக்கப் போதியதாக இருந்தது. அன்றைய சம்பவத்திலிருந்து மனோன்மணி அருணாவை விஷம்போல் வெறுத்தாள்.

15

அறையைப் பெருக்கிக் கொண்டிருந்தாள் வள்ளி. மேஜையைத் துடைத்து, புத்தகங்களை அடுக்கி வைத்துக் கொண்டு நின்ற அருணாவின் கண்களில் அக்கடிதம் தென்பட்டது. ஆனந்தன் ஒரு வாரத்திற்கு முன்பு கிராமத்தினின்று கடைசியாக எழுதியிருந்த அக்கடிதத்தை அருணா இதுவரை பல தடவைகள் வாசித்திருந்தாள். இருந்த போதிலும் மீண்டும் ஒரு முறை அதை வாசிக்க அவளுக்கு அலுக்கவேயில்லை. "வேலையை முடித்துவிட்டால் நீ கீழே போய் இரு. நான் கொஞ்ச நேரத்தில் வருகிறேன்" என்று வள்ளியிடம் கூறிவிட்டு, அக்கடிதத்தைப் பிரித்து சாவதானமாகப் படிக்க ஆரம்பித்தாள் அருணா.

அன்புள்ள எங்கள் அருணா,

"பரீக்ஷைகளை நன்றாக கவனித்து எழுதிருக்கிறாய் என்பதை அறிய மெத்த மகிழ்ச்சி. இப்பொழுதுதான் எல்லாம் நடந்ததுபோல் தோன்றுகிறது. இப்பொழுதுதான் உன் கை எலும்பு முறிந்ததுபோல் இருக்கிறது! உன்னை ஊருக்கு அனுப்பும் தினம் ரயில்வே ஸ்டேஷனுக்கு நாங்கள் பின்தொடர்ந்து வந்து, பேச முடியாது பேசி, பிரியா விடை கொடுத்தது இன்று போல் என் மனத்திரையில் ஒவ்வொன்றாகத் தோன்றுகிறது.

ஆனால், வருஷங்கள் ஏழு அல்லவா இடையே விரைவாக ஓடிவிட்டிருக்கின்றன! என்ன ஆச்சர்யம்! என்னால் நம்பவே முடியவில்லை. எங்கள் அருமைத் தங்கை அருணாவைப் பிரிந்து இவ்வளவு காலம் சென்றுவிட்டது உண்மை என்று ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை!

பெரியம்மாவுடன் தங்கி நீ கல்வி கற்பது பற்றி எனக்கும், இந்திராணிக்கும் மிகவும் பெருமையாக இருக்கிறது. தண்ணீர் எடுக்க வாய்க்காலுக்குச் செல்லும்பொழுது, அங்கு சந்திக்கும் ஊர்ப் பெண்களிடம் இந்திராணி, வாய்க்கு வாய் 'எங்கள் அருணா பட்டணத்திலே படிக்கிறாள்' என்று புகழ்ந்து பேசுகிறாள். நான் மட்டும் என்ன? சந்தையிலே சந்திக்கும் எனது நண்பர்களிடம் 'என் தங்கை அருணா பட்டணத்திலே எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சைக்குப் படிக்கிறாள்' என்று பெருமையாகப் பேசி மகிழ்கிறேன்! நன்றாகப் படித்து, நீ பெரிய மேதையாகி நம் வீட்டிற்கும், நமது கிராமத்திற்கும் கீர்த்தியைக் கொண்டு வருவாய் என்று எண்ணுகிறேன்.

'டில்லிக்கு பாதுஷாவானாலும், தாயாருக்கு அவன் பிள்ளைதானே' என்று ஒரு பழமொழி உண்டல்லவா? அதுபோல நீ பட்டணத்திலே எவ்வளவு பெரிய பரீட்சை கொடுத்து, எவ்வளவு பட்டங்கள் பெற்று, கல்வியில் சிறந்த மேதையாகக் கீர்த்தி பெற்றாலும், எங்களைப் பொறுத்தவரை, நீ எங்கள் குட்டித்தங்கை அருணாதானே? இல்லையா சொல்? உன்னைப் பார்க்க வேண்டும் என்று எங்கள் கண்கள் ஏக்கத்தில் பூத்துப் போய் இருக்கின்றன. உன்னுடன் பேச வேண்டும் என்று எங்கள் உள்ளம் ஏங்கித் துடிக்கிறது. ஆகவே, இவ்வருஷம் நீ எப்பாடுபட்டாவது கிராமத்திற்கு ஒரு முறை வந்து போக வேண்டும்.

''உன்னை அனுப்பி வைக்க வேண்டுமென்று பெரியம்மாவிற்கு நான் ஒரு கடிதம் எழுதி வெகுவாக வேண்டிக் கொண்டிருக்கிறேன். ரயில் செலவுகளைப் பற்றி அவர்கள் சிந்தித்தால் அதற்காக நீ கவலையடைய வேண்டாம். நமது வீட்டில் அப்பாவுக்கு உதவியாகப் பால் வியாபாரம் செய்தது போக மீதிப்பொழுதில் நான், இங்கே ஒரு கடையில் சாமான் எடுத்துவர டவுனுக்கு வண்டியோட்டிக் கொண்டிருக்கிறேன். அதில் கொஞ்சம் எனக்குப் பணம் கிடைக்கிறது. என் செலவு போக அதில் மீதி பத்து ரூபாய்கள் உனக்காக சேர்த்து வைத்திருக்கிறேன். ரயில் செலவுக்குப் பணமில்லை என்றால் ஒரு கடிதம் போடு. அதை அனுப்பி வைக்கிறேன். நீ உடனே புறப்பட்டு வரலாம். எனினும் நீ வருவதையும் வராததையும் விரைவில் தெரியப்படுத்த வேண்டும் என்று மிகவும் வேண்டிக் கொள்கிறேன். உனக்கு எங்கள் ஆசி.

இப்படிக்கு,
உன் அன்புள்ள அண்ணன்,
ஆனந்தன்.

பின் குறிப்பு: ''இப்பொழுது நீ உயரமாக வளர்ந்து தோற்றத்திலே மிகவும் மாறியிருப்பாய், ஆனாலும் உன்னைப் பற்றி எண்ணும் பொழுதெல்லாம் என் கண்ணில் சுருண்ட கூந்தல் நெற்றிமீது புரள, கன்னம் குழிய நகை செய்து நிற்கும் சின்னஞ்சிறு ஒரு சிறுமி தான் தோன்றுகிறாள்! எவ்வளவு முயற்சித்தாலும் எனது கற்பனையில் சிறு தோற்றத்தினின்று வளரவே மாட்டேன் என்கிறாய்! ஆழமாகப் பதிந்துவிடும் எண்ணங்களை உதறி அகற்றி விடுவது என்பது எவ்வளவு கடினமான காரியம் பார்த்தாயா?''

கடிதத்தைப் படித்து முடித்ததும் அருணா, கண்களில் கசிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, தனக்குள் மெல்லச் சிரித்துக்கொண்டாள். ஆனந்தனின் அன்பை எண்ணியபொழுது அவள் உள்ளம் உருகியது. இயற்கையாகவே அவனிடம் எப்பொழுதும் உள்ள ஹாஸ்ய உணர்ச்சி அக்கடிதத்தில் பிரதிபலிப்பதைக் கண்ணுற்றதும், அவளுக்குச் சிரிப்பு வந்தது.

கடிதத்தை மடித்து பத்திரமாக பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டு, பீரோ கதவின் மீது பதிந்திருந்த நீண்ட கண்ணாடி முன்பு சிறிது நேரம் வியப்புடன் நின்றாள். கண்ணாடி பிரதிபலித்த தன் உருவத்தைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு ஆச்சர்யம் அதிகரித்தது. அண்ணன் ஆனந்தன் கற்பனையில் கொண்டிருந்த சின்னஞ்சிறு பெண் அருணாவிற்கும், இப்பொழுது கண்ணாடி பிரதிபலிக்கும் பதினைந்து வயது பாலிகை அருணாவிற்கும் எவ்வளவு வித்தியாசம் இருந்தது?

''அருணா! அருணா!'' என்று இடியோசை போல் கீழிருந்து முழங்கிய ஜெகதாவின் குரல் அவளது கற்பனையை ஒரு கணத்தில் சிதறச் செய்யவே, ''இதோ வந்துவிட்டேன், பெரியம்மா'' என்று குரல் கொடுத்து விட்டு, மின்னலைப்போல் படிகளைத் தாவிக்கொண்டு கீழே ஓடி வந்தாள் அருணா.

கீழே கூடத்தில் தொங்கிய பெரிய ஊஞ்சலில், ஜெகதா கம்பிமீது

சாய்ந்துகொண்டு உட்கார்ந்திருந்தாள். ஏழு வருஷ காலத்திலே, அவளது மேல்வாய் முன் வரிசைப் பற்கள் அனைத்தும் தங்கமயமாக மாறி விட்டிருந்ததனால் சிரிக்கும் பொழுதெல்லாம் பொன் ஒளி வீசிய பற்கள், இப்பொழுது கோபத்திலும், தங்க ஜ்வாலையை அள்ளிக் கக்கிக்கொண்டிருந்தன. கறுப்புப் பூச்சுகளுக்கு மீறி நரையை வெளிப்படுத்தி நின்ற, தன் கூந்தலை அள்ளி முடிந்து கொண்ட ஜெகதா, தன் தங்கப் பற்களை அழுத்தி ஒருமுறை கோபத்துடன் கடித்தாள்.

''அருணா? உன்னைக் கூப்பிடுவதற்குள் என் உயிரே போய்விடும் போலிருக்கிறதே! வேலை முடிந்தபின் மாடியில் என்ன செய்து கொண்டிருந்தாய்? வயது இவ்வளவு ஆகியும் உனக்கு விவேகம் என்பதே இன்னும் ஏற்படவில்லை. உன்னைப்போல் சிறு பெண்ணா இருக்கையில் நான், கல்யாணமாகி புக்ககத்திற்குக்கூட வந்து விட்டேன். உன்னைப்போல் மசமசவென்று சோம்பேறியாக மூலைக்கு மூலை நின்று கொண்டிருந்தால் அந்தக்காலத்தில் எல்லாம் சாத்தியப்பட்டிருக்குமா?'' என்று இரைந்து பேசினாள்.

பெரியம்மா எதிரில் ஓடி வந்து நின்ற அருணா பதில் பேசவில்லை. ஒரே பாய்ச்சலாக மாடியினின்று இறங்கி வந்ததனால் அவளுக்கு மூச்சு வாங்கிக்கொண்டிருந்தது.

''அப்படி உட்கார் எதிரே'' என்று உத்தரவிட்ட ஜெகதா, ராணிபோல் முகத்தை மிகவும் அதிகார தோரணையில் நிமிர்த்திக்கொண்டு பேசலுற்றாள். ''அத்தான் வீட்டில் வருவோரும் போவோரும் தினம் நூற்றுக்குமேல் சத்திரம்போல் அமர்க்களமாக இருக்கும். அவ்வளவு பேருக்கும் நான் ஒருத்திதான் சமைத்துப் போட்டு சமாளிக்க வேண்டும். உன்னைப்போல் தூங்கிவழிந்தால் சரிப்பட்டு வந்திருக்குமா? காலையில் எழுந்தவுடன் பம்பரம் கணக்கா சித்த நாழி கூட நிற்காது அப்படியே சுத்திக்கிட்டே இருப்பேன்'' என்றாள் ஜெகதா.

பெரியம்மா கூறுவதில் தொண்ணூறு பங்குக்கு மேல் அவ்வளவும் கலப்பற்ற சுத்தப்பொய் என்பதைப் பழக்கத்தில் நன்கு அறிந்திருந்த அருணாவுக்குச் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது. ஆனால் அதை சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு பணிவாக தரையைப்

பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

ஜெகதா மேலும் தொடர்ந்தாள், ''நீ என்னடா என்றால், வயது இவ்வளவு ஆகியும் இரண்டு பேருக்கு ஒழுங்காகச் சமைத்துப் போட இன்னமும் பழகிக் கொள்ளவில்லை. உன்னை சொல்லிக் குற்றமில்லை. உன்னை அந்தப் பெண் நளினியுடன் பழக விட்டேனே அதுதான் என் பிசகு. புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கொண்டதாமே, அதுபோல் அவளைப் பார்த்து நீ பெரிய மனுஷர் வீட்டுக் குழந்தைபோல ஒய்யாரம் பண்ணுகிறாய். காலையிலே படுக்கையை விட்டு பத்துமணிக்கு அந்த நளினி எழுந்திருப்பாள். அவளுக்குக் கட்டுப்படியாகும். பண்ணுவது பாக்குத்தூள் வியாபாரம்னாலும் அவ அப்பாவுக்கு பணம், லக்ஷம் லக்ஷமா வந்து கொட்டிக் குவிஞ்சு கொண்டிருக்கு. ஆனால் உன் சங்கதி அப்படியா? கௌரதைக்காக உன் அப்பா மிராசுதார்னு சொல்லி வச்சிருக்கிறேன். உண்மையிலே உங்கப்பனுக்கு உன்னை இவ்வளவு தூரம் படிக்க வைக்கக் கூட யோக்யதை இல்லை'' என்று அதட்டினாள்.

அருணா மௌனமாகத் தலையைக் குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்தாலும், அது சமயம் அவள் மனம் தன்னுள்ளே ஒரு சந்தேகத்தை எழுப்பிச் சிந்தித்துக் கொண்டிருந்தது உண்மை. நளினியுடன் சிநேகிதம் கொண்டு பழகியதால் வீணான அகம்பாவமும், டாம்பீகமும் பழகி விட்டதாக பெரியம்மா சொல்கிறார்கள். ஏழைப் பெண் அருணாவுடன் நட்பு பூண்டிருந்ததால், தரித்திர சுபாவமும், அசட்டுப் பழக்கமும், குறுகிய நோக்கங்களும் படித்துவிட்டதாக நளினியைப் பற்றி மனோன்மணி அடிக்கடி குறை கூறுகிறாள். இதில் உண்மை எது? இந்த நட்பினால் உண்மையிலேயே இருவருடைய குணங்களும் பாழாகிவிட்டனவா? பெரியவர்கள் ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொள்ளாது, வீண் பெருமையினால் குழந்தைகளின் நட்பின் மீது சுமத்தும் அபாண்டமான குற்றச்சாட்டா?

''என்னமோ பெரிய கோட்டையைப் பிடிக்கிறவன் போல அப்படியே யோசனையில் முழுகிவிட்டியே? நான் சொன்னது ...
படுகிறதல்லவா?'' ...

சிந்தனையினின்று விழித்துக்கொண்டு திடுக்கிட்டு, ''தெரிகிறது பெரியம்மா'' என்று முணுமுணுத்தாள்.

''லோகநாயகி ஒரு மாதம் தன் குழந்தைகளுடன் உதகமண்டலம் போகப் போகிறாளாம். என்னையும்கூட வரச்சொல்லிக் கூப்பிட்டிருக்கிறாள். அவள் மட்டும் தனியே போகப் போகிறாள். அந்தப் பீடை மனோன்மணியும் போவதாயிருந்தால் நான் ஒப்புக் கொண்டிருக்கமாட்டேன். அவளுக்கு என்னவோ உன்னைக் கண்டால் கட்டோடு பிடிப்பதில்லை. எப்பொழுதும் உன் மேல் என்னிடம் ஏதாவது குற்றப் பத்திரிகை படித்துக்கொண்டே இருக்கிறாள். அவள் குற்றம் கண்டு பிடிக்கிறாப்போல நீ ஏன் தவறாக அவர்கள் வீட்டில் நடந்துகொள்ள வேண்டும்'' என்று கோபமாகக் கேட்டாள்.

'பெரியம்மா! என்னை மட்டுமல்ல. உங்களைக் கண்டால் கூட மனோன்மணிக்குப் பிடிப்பதில்லை. உண்மையில் அவளுக்கு மனித சமுதாயத்திலே யாரையுமே பிடிப்பதில்லை. அவள் அப்படிப்பட்டதொரு விசித்திரமான பிறவி. நம்மை வெறுப்பது என்பதை லட்சியமாகக் கொண்டுள்ளவர்களிடம் எவ்வாறு விருப்பத்தை எதிர்பார்க்க முடியும்?' என்று தன் மனத்திலே எண்ணுவதைக் கூறவேண்டும் என்று அருணாவின் நாக்குத் துடித்தது. ஆனால் பெரியம்மாவின் சுபாவத்தை அவள் நன்கு அறிவாள். தனது அபிப்பிராயத்திற்கு எதிரான பேச்சே இல்லையென எண்ணும் ஜெகதாவிடம் விவாதித்துப் பேச அருணாவுக்கு இன்னும் துணிவு ஏற்படவில்லை. ஆகவே, அவள் ''எனக்குத் தெரியாது பெரியம்மா'' என்றாள் ஹீனஸ்வரத்தில்.

''நன்றாகச் சாப்பிடத் தெரியுமா? அதுவும் தெரியாது என்றாலும் நான் ஆச்சரியப்பட மாட்டேன். நான் லோகநாயகியுடன் உதகமண்டலம் போகப்போகிறேன். கூட உன்னை அங்கே கூட்டிச் செல்லமுடியாது. மேலும், பட்டணத்திலே பாலும் பழமும் சாப்பிட்டு, வாழ்க்கையிலே கஷ்டம் என்பதே தெரியாது நீ தத்தாரியாக வளர்ந்து வருவது எனக்குப் பிடிக்கவில்லை. பஞ்சமும் பட்டினியும், வெளியில் எப்படித் தலைவிரித்தாடுகின்றன என்பதைக் கண்ணால் பார்த்தாலாவது உனக்குப் புத்தி வரட்டும் என்று உன் கிராமத்திற்கு உன்னை இந்த விடுமுறைக்கு அனுப்பத் தீர்மானித்திருக்கிறேன். கிராமத்திலே உன் வீட்டிலே பாலாறும்

நெய்யாறும் பாய்ந்தோடுவது போல் உன் அண்ணன் வேறு வருந்தி வருந்தி உன்னை அனுப்பும்படி கேட்டு எழுதியிருக்கிறான். அந்த சுகத்தையும் போய் அனுபவித்துவிட்டு வா! அதை நான் ஏன் தடுக்க வேணும்? கிராமத்திலே உன் அப்பாவிடம் இரண்டுநாள் தங்கினால்தான் இந்த ஜெகதா உனக்கு எவ்வளவு செய்திருக்கிறாள் என்ற உண்மை உனக்கு உதயமாகும்! அதனால் உன்னை இன்று இரவு வண்டிக்கு ஊருக்கு அனுப்பப் போகிறேன். ஸ்டேஷனில் வந்து கூட்டிக்கொண்டு போகும்படி உன் அண்ணனுக்கு முந்தாநேத்தியே கடுதாசி போட்டு விட்டேன். நீ வேண்டியதை எடுத்து சீக்கிரம் மூட்டை கட்டிக்கொள்'' என்று முடித்தாள்.

அருணாவின் முகம் மகிழ்ச்சியினால் மலர்ந்தது. சந்தோஷத்தினால் அவள் நெஞ்சு விம்மியது. ''சரி, பெரியம்மா, உங்களுக்கு மெத்த வந்தனம்'' என்று மெல்லிய குரலில் பதிலளித்துவிட்டு, அவள் துள்ளி எழுந்து நின்றாள்.

''இரு, அதற்குள் பறக்கவேண்டாம். மூட்டைக் கட்டிக் கொள் என்றதும், நான் வாங்கிக் கொடுத்திருக்கும் பட்டுப் பாவாடை, தாவணிகள் எல்லாம் அந்தப் பட்டிக்காட்டிற்கு எடுத்துப் போ என்று அர்த்தமில்லை. பழையதான இரண்டு நூல் பாவாடையையும் தாவணியையும் மட்டும் எடுத்துப் போனால் போதும். உன்னை நான் படிக்க வைப்பதற்குச் செலவழிப்பதே மிகவும் அதிகம். ஊருக்கு அனுப்பும் ரயில் செலவு வேறு என்றால் எனக்குச் சாத்தியப்படாது. அதனால் உன்னை மூன்றாவது வகுப்பில்தான் அனுப்பப் போகிறேன். ஆனால் ஒன்று. நளினியோ அல்லது வேறு யாரோ உன்னை விசாரித்தால் இரண்டாவது வகுப்பிலே பிரயாணம் செய்ததாகக் கூற வேண்டும், தெரிந்ததா?'' என்று ஜெகதா முடித்தாள்.

''வீணாக அல்ப காரியங்களுக்கு ஏன் இந்தப் பொய். ஐயோ பெரியம்மா, உங்களுக்குப் போலி கௌரவத்தின் மீது ஏன் இந்த மோகம்?'' என்று அருணாவிற்குப் பதிலளிக்க மிகவும் ஆவலாக இருந்தது. எனினும் அவள் தன் அபிப்பிராயத்தைத் தன்னுள்ளேயே வைத்துக் கொண்டு பிரயாணத்திற்கு ஆயத்தம் செய்ய விரைந்து ஓடினாள்.

பெரியம்மாவின் உத்தரவின்பேரில், தன் சிநேகிதியிடம் விடைபெற்றுக் கொள்ள பழனியப்பக் கவுண்டர் கிரகத்திற்கு அன்று மாலை அருணா சென்றிருந்தாள். பல நாட்கள் சென்ற பிறகு அவர்கள் வீட்டிற்கு அன்றுதான் அவள் மீண்டும் வந்திருந்தாளாதலால் அவளுக்கு, தாராளமாக உள்ளே நுழையக்கூட சங்கோஜமாக இருந்தது.

நளினிக்குத் தன் வரவை வேலைக்காரன் மூலம் தெரிவித்துவிட்டு, அங்கிருந்த சோபா ஒன்றில் காத்துக்கொண்டு அமர்ந்திருந்த அருணா, மாடிப் படிகளில் யாரோ இறங்கி வரும் பாதரட்சை ஓசை கேட்டு ஆவலுடன் அந்தத் திக்கு நோக்கினாள். 'ஓய்' என்று வியப்புடன் சீட்டியடித்த சுரேஷ்குமாரன் கையில் பிடித்திருந்த டென்னிஸ் மட்டையைச் சுழற்றிக் கொண்டு மிகவும் மகிழ்ச்சியுடன் அவள் அருகே வந்தான்.

''ஹல்லோ! அருண்! இரண்டு வருஷ காலத்தில் நீ எவ்வளவு மாறிவிட்டிருக்கிறாய்? உன்னை முதலில் அடையாளமே தெரியவில்லை?''என்று வியப்பும் ஆனந்தமும் பொங்க ஆர்ப்பரித்தான் சுரேஷ்குமாரன்.

''உங்களையும்தான் எனக்கு அடையாளமே தெரியவில்லை. நீங்கள் மிகவும் உயரமாக வளர்ந்து விட்டிருக்கிறீர்களே!'' என்று பதிலளித்த அருணாவின் நெஞ்சு மகிழ்ச்சியா திகிலா என்று இனம் விளங்கா உணர்ச்சியினால் படபடவென்று அடித்துக் கொண்டது.

''நீதான் என்னை விட உயரமாக வளர்ந்திருக்கிறாய் என்று நான் நினைக்கிறேன். எங்கே எழுந்து என்னருகில் வந்து நில். நீ உயரமா, நான் உயரமா என்று பார்ப்போம்!'' என உற்சாகமான குரலில் பரிகாசம் செய்த சுரேஷ்குமாரன், உரத்த குரலில் இடிஇடியென்று நகைத்தான்.

பின்கட்டு முற்றத்திலே புத்தகமொன்றைப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த மனோன்மணி, எதேச்சையாக வெளி ஹால் புறத்தை எட்டிப் பார்த்தாள். சுரேஷ்குமாரனுக்கு சமதையாக அருணா உட்கார்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்ததைக் கண்டதும் அவள் முகம் கடுமையாக மாறியது. புத்தகத்தை மூடி தொப்பெனக் கீழே விசிறியெறிந்துவிட்டு, வேகமாக ஹாலுக்கு வந்தாள். ''சுரேஷ்!

உன்னை அம்மா எதற்காகவோ ரொம்ப நேரமாகக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீ போய் விசாரி'' என்று தன் கோபத்தையடக்கிக் கொண்டு புன்முறுவல் செய்தாள்.

''அப்படியா அக்கா! இப்பொழுதுதான் அம்மாவிடம் சொல்லிக் கொண்டு டென்னிஸ் ஆடக் கிளம்பினேன். எதற்காகக் கூப்பிடுகிறார்களோ, தெரியவில்லை'' என்று தனக்குள்ளே யதார்த்தமாகப் பேசிக் கொண்டு அவன் பின் கட்டிற்குச் சென்றான்.

அவன் அப்பால் செல்லும்வரை காத்திருந்த மனோன்மணி, விழிகளில் தீப்பொறி பறக்க, பற்களை நெரித்துக் கொண்டு உக்கிரமாக அருணாவின் பக்கம் ஆத்திரத்துடன் திரும்பினாள். ''அருணா! இதுவரை உன்னிடம் நான் கண்டிப்பாகப் பேசியதில்லை. ஆனால் இன்று அவ்வாறு பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. சுரேஷ்குமாரன் முன்போல் சிறிய பையன் அல்ல, இருபது வயது வந்த வாலிபன். நீயும் முன்போல் சிறுபெண் அல்ல. உனக்குப் பொறுப்புத் தெரியும் வயதாகிவிட்டது. இனி மேல் நீயும் சுரேஷ்குமாரனும் சகஜமாகப் பேசுவது நல்லதல்ல என்று எச்சரிக்க விரும்புகிறேன். அவன் இப்பொழுது இன்ஜினியர் பரீக்ஷைக்குப் படிக்கிறான். மேல் படிப்புக்கு அவனைச் சீமைக்கு அனுப்ப அத்தான் உத்தேசித்துக் கொண்டிருக்கிறார். அவனுடைய பிற்காலத்தைப் பற்றி யோசிக்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறது.''

அருணா பதில் பேசவில்லை. துக்கம் அவளது தொண்டையை அடைத்துக் கொண்டது. ''நான் தவறு செய்திருந்தால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்' என்றாள், தழுதழுத்த குரலில் பதிலுக்கு.

''தவறு செய்யக்கூடாது என்பதற்காகத்தான் உன்னை முன்கூட்டியே எச்சரிக்கிறேன். சுரேஷ்குமாரன் இந்தக் குடும்பத்திற்கு ஒரே மகன். இவ்வளவு ஆஸ்திக்கும் ஒரே வாரிசு. அவனுக்கு மனைவியாக வரப்போகும் பெண்ணும் ஏறக்குறைய அதே அந்தஸ்து உடையவளாகத்தான் இருக்க வேண்டும் என்று அத்தான் விரும்புகிறார். அதனால்...'' என்று கூறி முடித்தாள்.

அருணாவின் கண்களில் கண்ணீர் தாரையாக வழிந்து கன்னங்களில் ஓடியது. ''மனோ அக்கா! நான் நளினியைப் பார்க்க

இங்கே வந்தேன். நீங்கள் கூறுவது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. நான் ஊருக்குப் போய் வருவதாக நளினியிடம் கூறினால் போதும். நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டு, வேகமாக ஓட்டமும் நடையுமாகச் சென்று காரில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

கைகளால் முகத்தை மூடிக்கொண்டு அவள் விம்மி விம்மி அழுதாள். மனோன்மணிக்கு அவள் என்ன தீங்கு செய்தாள்? அவள் மனத்தைப் புண்படுத்தும்படி அந்தப் பெண்மணி இவ்வாறு ஏன் பேசவேண்டும்? சுரேஷ்குமாரனுடன் அன்பாக நட்புரிமை பாராட்டுவதில் குற்றம் யாது? நளினி, சுரேஷ் இருவரின் நட்பை அடைய எவ்விதத்தில் அருணா அருகதையற்றவள்?

அன்று இரவு மூன்றாவது வகுப்பு வண்டியில் தங்கள் கிராமத்திற்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்த அருணா தனக்குள் மேற்கூறிய கேள்விகளைப் பலமுறை கேட்டுக் கொண்டாள். எவ்வளவு சிந்தித்தாலும் எந்தக் கோணத்தினின்று ஆராய்ந்தாலும் அவளுக்குச் சரியான பதில் கிட்டவேயில்லை. அதற்குப் பதில் குழப்பமும் துயரமும் அதிகரித்தன. இருள் நீங்கி, சூரியன் கீழ்வானத்திலே உதயமாகும் சமயம் வண்டி காரிகுளம் ஸ்டேஷனில் வந்து நின்றது.

ஜன்னலினின்று அருணா வெளியே எட்டிப்பார்த்தாள். லேசாக ஒளி படர்ந்து வந்த நீலவானமும், மிக தொலைவில் தெரிந்த மலைக்குன்றும், அவள் பிறந்த வீட்டின் நினைவை அதிகப்படுத்தின. மனோன்மணி வெறுத்தால் என்ன? பெரியம்மா நொந்து கொண்டு கடுமையாகப் பேசினால்தான் என்ன? யார் நேசித்தாலும் நேசிக்காவிடினும், அன்பு செய்து வரவேற்க கூடப் பிறந்த சகோதரன் ஆனந்தனும் சகோதரி இந்திராணியும் எப்பொழுதும் காத்திருக்கிறார்கள் என்ற நினைவு அவள் உள்ளத்திற்குச் சாந்தி அளித்தது.

காரிகுளம் மிகவும் சிறிய ஸ்டேஷன் ஆனதனால் வண்டி சில நிமிஷங்கள்தான் நின்றது. பெட்டியை தானே தூக்கிக் கொண்டு பிளாட்பாரத்திலே அருணா இறங்குவதற்குள் வண்டி நகரத் தொடங்கியது.

அருணா சுற்றுமுற்றும் பார்த்தாள். அவளை வரவேற்க அங்கே அண்ணன் ஆனந்தனைக் காணவில்லை. பிரயாணச் சீட்டை டிக்கெட் பரிசோதகரிடம் நீட்டிவிட்டு, ஸ்டேஷனுக்கு வெளியே வந்தாள். அங்கேயும் ஆனந்தனைக் காணவில்லை. அதற்குள் அருகில் தெரிந்த புல் தரையில் மேய்ந்து கொண்டு நின்ற எருமைகளில் ஒன்று, ஒய்யாரமாக அருணாவின் பக்கம் திரும்பி, முகத்தைத் தூக்கி 'ஞொய்! ஞொய்!' என்று கத்தி, அவளுக்கு வரவேற்பு அளித்தது.

பல நாட்களுக்குப் பின் வீடு திரும்பியுள்ள தன்னை வரவேற்க ஸ்டேஷனுக்கு யாரும் வராதிருப்பதை உணர்ந்ததும் அருணாவுக்கு துக்கம் தாள முடியவில்லை. பெட்டியை தூக்கிக்கொண்டு, கண்களில் கண்ணீர் வழிய அவள் தனக்குத் தெரிந்த நீண்ட பாதையிலே வீடு நோக்கி நடக்கலுற்றாள்.

16

அருணா வீட்டைச் சமீபித்த சமயம் இருள் நன்றாக நீங்கிப் பொழுது விடிந்துவிட்டிருந்தது. காலை வேளையில் தங்கள் வீட்டு வாயிலைப் பெருக்கி சுத்தமிட்டுக் கொண்டிருந்த பெண்களும், கோலமிட்டு அழகு செய்து கொண்டிருந்த சிறுமிகளும் கைவேலையை விட்டு ஆச்சர்யத்துடன் அருணாவை வேடிக்கை பார்க்கச் சென்றார்கள். விடியற்காலை வேளையில், கையில் கனமான ஒரு பெட்டியை சிரமப்பட்டுச் சுமந்து கொண்டு இளம் சிறுமி ஒருத்தி தன்னந்தனியாளாக வந்து கொண்டிருந்ததைக் காண அவர்களுக்கு மிகவும் அதிசயமாக இருந்தது.

தன்னைப்பற்றி அவர்கள் ஏதேதோ பேசிக் கொண்டு கண்களால் சமிக்ஞை செய்து கொள்வதை அருணா கவனிக்கத் தவறவில்லை. வீணாக அப்பெண்களின் சந்தேகத்திற்கு ஆளாகத் தன்னை இவ்விதம் தனியே தவிக்க விட்டு, ஸ்டேஷனுக்கு வராது, வீட்டிலே தங்கிவிட்ட அண்ணன் ஆனந்தன்மீது அவளுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. கன்னங்கள் மீது வழிந்த கண்ணீரை அவசரமாகத் துடைத்துக் கொண்டு, முகவாயை நிமிர்த்திய வண்ணம் போலியான ஒரு

துணிச்சல் பாவத்தை முகத்தில் வரவழைத்துக் கொண்டு, அவர்களைக் கவனியாதவள் போல், அவள் விடுவிடுவென நடந்து தன் வீட்டை அடைந்தாள்.

வழக்கம்போல் காலை வேளையில் அவர்கள் வீட்டு வாயிற்கதவு திறந்து கிடந்தது. பெட்டியைத் திண்ணைமீது வைத்துவிட்டு சிறிது தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தாள்.கண்களுக்குத் தெரிந்த மட்டில் தாழ்வாரத்திலோ, வீட்டு முற்றத்திலோ யாரையும் காணவில்லை. விவரிக்க இயலாத பயத்தில் அவளது உள்ளமும் உடலும் பதறின. மீண்டும் பெட்டியை கையில் எடுத்துக் கொண்டு, கால்கள் தடுமாற, நெஞ்சு படபடக்க, நாக்கு உலர, மெல்லத் தங்கள் வீட்டிற்குள் நுழைந்தாள். கூடத்தில் தரைமீது பெட்டியை வைத்துவிட்டு. ''பாட்டி! பாட்டி!'' என்று மெல்லிய குரலில் ஒரு முறை அழைத்தாள். அதற்குள் நெஞ்சு இரண்டாகப் பிளந்துவிடும் போல அச்சம் ஏற்பட்டது.

பின் கட்டுத் தாழ்வாரத்தைச் சாணியினால் மெழுகிக் கொண்டிருந்த இந்திராணி, ''யாரது?'' என்று அதட்டியபடி சுருணையும் கையுமாக வெளியே வந்தாள். அவிழ்ந்து தொங்கிய தன் கூந்தலை இடது கரத்தினால் அள்ளிச் செருகிக் கொண்டவண்ணம், அருணாவை அவள் ஆச்சர்யத்துடன் ஏற இறங்க உறுத்துப் பார்த்தாள். ஒரு கணம் அவளுக்கு அந்தப் பெண் யாராக இருக்கலாம் என்றுகூட ஊகிக்க முடியவில்லை.

மறுகணம் சுருணையைக் கீழே விட்டெறிந்துவிட்டு, இந்திராணி அவசரமாகத் தன் கரத்தைப் புடவைத் தலைப்பில் துடைத்துக் கொண்டாள். ''ஆனந்தா! ஆனந்தா! இங்கே வந்து பார்! யார் வந்திருக்கிறான்னு!'' என்று வியப்புடன் கூவியழைத்துவிட்டு, ''அடி என் குட்டித் தங்கை அருணா! நீ எவ்வளவு பெரியவளா வளர்ந்துவிட்டிருக்கிறாய்! என் கண்களையே நம்ப முடியவில்லையே!'' என்று உற்சாகத்துடன் ஆர்ப்பரித்தவண்ணம் ஓடி வந்து அருணாவைத் தன் மார்புடன் இறுகத் தழுவிக் கொண்டாள்; அவ்வளவுதான், அதுவரை அடக்கி வைத்துக் கொண்டிருந்த துக்கத்தை அந்தச் சிறுமியினால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. ''அக்கா! அக்கா'' என்று விம்மிவிட்டு ஓவென அழ ஆரம்பித்தாள்.

பால் கறக்கக் கால் அணையும் கயிற்றைத் தேடிக் கொண்டு கூடத்திற்கு யதேச்சையாக வந்த ஆனந்தன், தன் பெயரைச் சொல்லி யாரோ அழைப்பதைக் கேட்டு வேகமாக உள்ளே வந்தான். இந்திராணியின் அணைப்பிலே விசும்பிக் கொண்டு நின்ற தன் அருமைத் தங்கையைக் கண்டதும் அவனுக்கு ஆச்சர்யமும் ஆனந்தமும் தாங்க முடியவில்லை, ''அடாடா! அருணாவா? என்னால் நம்பவே முடியவில்லையே! எவ்வளவு உயரமாக வளர்ந்துவிட்டிருக்கிறாள்!'' என்று ஆர்ப்பரித்த அவன், மேலே தொடர்ந்தாற்போல், ''எப்போ வந்தே? எப்படி வந்தே? கூட துணைக்கு யாராவது வந்திருக்கிறார்களா?'' என்று உற்சாகத்துடன் பல கேள்விகளைக் கேட்டான்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அண்ணன் பக்கம் அருணா திரும்பிப் பார்த்தாள். இருபது வயதைப் பூர்த்தியடைந்துவிட்டிருந்த ஆனந்தன் உயரமான வாலிபனாக வளர்ந்துவிட்டிருந்தான். அவனது கம்பீரமான தோற்றம், களை பொருந்திய முகத்தை அலங்கரித்து நின்ற அரும்பு மீசை, இவையனைத்தையும் உற்றுக் கவனித்த சிறுமிக்கு அண்ணனிடம் சிறிது அச்சம் ஏற்பட்டது. முன்போல் அவனை 'நீ' என்று அழைக்க அவளுக்குத் துணிவு வரவில்லை. ''கடிதம் போட்டும் ஸ்டேஷனுக்கு வராது வீட்டிலே தங்கிவிட்டீங்களே அண்ணா! தன்னந்தனியா அங்கிருந்து இங்கே நடந்து வருவதற்குள் எனக்கு மிகவும் பயமாக இருந்தது. கொஞ்சம் வெட்கமாகவும் இருந்தது!'' என்று கூறிவிட்டு, துக்கம் தாளாது விக்கி விம்மி அழத் துவங்கினாள்.

''கடிதமா?'' என்று கேட்டு பிரமித்து நின்றான் ஆனந்தன்.

''ஆமாம்! நான் நேற்று இரவு வண்டியில் வருவதாகப் பெரியம்மா முன்கூட்டியே ஒரு கடிதம் எழுதிப் போட்டிருந்தாங்களே?'' என்று கேட்ட அருணா, வியப்பில் தன் அழுகையை நிறுத்திக் கொண்டாள்.

''பெரியம்மாவிடமிருந்து கடிதம் வந்து இரண்டு மாதத்துக்கு மேலாகிறதே? உன்னை அனுப்பப் போகிற விஷயமே எங்களுக்குத் தெரியாதே? தெரிஞ்சால் ஆனந்தன் இங்கே உட்கார்ந்திருக்குமா? நீ வரப்போகிறது தெரிஞ்சால், முதல் நாள் ராத்திரியே துடிச்சுக்

கொண்டு ஸ்டேஷனுக்கு வந்து காத்திருக்காதா? நீ தன்ன தனியாகவா, யார் துணையுமில்லாத அனாதை போல் வந்தே? இந்தப் பெரியம்மாவுக்கு ஒரு காகிதம் போட என்ன கொள்ளையாம்?'' என்று படபடவென்று பொரிந்தாள் இந்திராணி கோபத்துடன்.

''பெரியம்மா கடிதம் போட்டார்கள். ஒரு சமயம் தபால் சரிவ கிடைக்கவில்லையோ என்னவோ?'' என்று அருணா மறுத்து கூறுமுன் ஆனந்தன் கோபத்துடன் குறுக்கிட்டான்.

''அருணா! பெரியம்மா பேச்சை தயவு செய்து பேசாதே அவர்கள் உதவியால் நீ இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்திருக்கிறாய் வாஸ்தவம். நாம் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டியது முறை. ஆனால், அவர்கள் தான் செய்துவரும் நன்மைகளை கடிதத்திற்குக் கடிதம் இடித்துக்கூறி இழிவாக தூஷிப்பதை என்னால் சகிக்கவே முடியவில்லை. வயது ஆகியும், பெரியம்மாவுக்கு விவேகம் என்பதே சிறிதும் இல்லாது இருப்பது வருந்தத்தக்க விஷயம். தன்னிடம் பண வசதி அதிகம் இருக்கிறது என்ற அகம்பாவம் அவர்களுக்கு மிகவும் அதிகமாகிவிட்டிருக்கிறது. நாம் ஏழைகள் என்பதை எங்கே மறந்து விடுவோமோ என பயப்படுகிறவர்கள்போல் ஒவ்வொரு கடிதத்திலும், நமது நிலையைக் குறிப்பிட்டு எழுதத் தவறுவதேயில்லை. 'உன் தங்கைக்கு இதைச் செய்தேன், அதைச் செய்தேன், இதனால் என் செலவுகள் இவ்வளவு ஆயிற்று. அந்தக் காரியத்தினால் இவ்வளவு தொகை செலவழிக்க நேர்ந்தது' என்று அவர்கள் கணக்கு எழுதும் கடிதங்களை வாசிக்க நேரும் ஒவ்வொரு சமயமும், 'ஐந்தரை அடி உயரமும் வாட்டசாட்டமான தேகமும் வலுவும் கொண்ட ஆண் மகனாகப் பிறந்து என்ன பயன்? கூடப் பிறந்த தங்கையைப் பிறர் பொறுப்பில் வளரவிட்டு உதிய மரத்திற்கொப்பாக, தண்டமாகவல்லவா நிற்கிறோம்?'' என்று என்மீதே எனக்கு துவேஷம் ஏற்படுகிறது'' என்றான் மிகவும் ஆத்திரத்துடன்.

ஜெகதாவுடன் சில வருஷங்கள் நெருங்கிப் பழக நேர்ந்ததனால் அருணாவுக்குப் பெரியம்மாவின் சுபாவம் முழுவதும் நன்றாகப் புரிந்துவிட்டிருந்தது. ஜெகதாவிற்கு அந்தஸ்துமீது இருந்த அபார நம்பிக்கை, குடும்பகௌரவத்தைக் காப்பாற்றும் நிமித்தம் ஏற்படும்

...ரம், இடை இடையே தலைகாட்டி மறையும் கருமித்தனம், ...கோபம், ஏழைகள்பால் காட்டும் அலக்ஷியம், அந்தஸ்து நிமித்தம் ...னசரி பேசும் ஆயிரக்கணக்கான பச்சைப் பொய்கள் ...வற்றையும் அச்சிறுமி நன்கு அறிவாள். 'கடிதம் ...ட்டுவிட்டேன் என்று ஜெகதா ஊருக்குப் புறப்படும்முன் ...னிடம் கூறியதுகூட அவள் தினசரி சொல்லும் பல பொய்களில் ...ன்று போலும்' எனத் தனக்குள் எண்ணி அதிசயமடைந்த அருணா, ''அண்ணா! நீங்கள் ஸ்டேஷனுக்கு வராததைப் பற்றி நான் தவறாக ...ணிக் கொண்டேன். மன்னிக்கவும்'' என்றாள் மிகவும் குழைவாக.

''நானும் இந்திராணியும்தான் படிக்க வசதியில்லாது வீட்டைக் ...வனிக்க இப்படித் தங்கிவிட்டோம். நீ ஒருத்தியாவது படித்து முன்னுக்கு வரவேண்டும் என்பது எனது ஆசை. அதனால் பெரியம்மா கூறும் பல தூஷணைகளை நான் பொறுத்துக் கொள்ளத் தயார். ...தனால் ஒன்று, உனக்கு அவர்கள் செலவு செய்துள்ளதாக எழுதும் தொகைகளை ஒரு புத்தகத்தில் குறிப்பிட்டு வைத்திருக்கிறேன். காலம் இப்படியே போய்விடப் போவதில்லை. பால் விற்று, கல் தூக்கி, மண் ...மந்தாவது நான் நான்கு காசு சம்பாதிக்காது போகமாட்டேன். ...னக்கு ஒரு நல்ல காலம் வராது போய்விடாது. அப்பொழுது அவர்கள் உனக்குச் செலவு செய்துள்ள ஒவ்வொரு தம்பிடியையும் ...ட்டியுடன் திருப்பிக் கொடுத்துவிடுவேன். என் அருமை அருணா! இந்த உலகில் யாருக்கும் கடமைப்பட்டவளாக அடிமையாக இல்லாது நீ சுதந்திரப் பெண்ணாக வாழவேண்டும். அப்பொழுதுதான் என் மனம் ஆறுதலடையும். அப்பொழுதுதான் உனது அண்ணன் என்ற உறவும் எனக்குப் பொருத்தமாகும்'' என்று உணர்ச்சிவசத்தில் கூறி முடிக்குமுன் அவன் குரல் தழதழத்தது. கண்களில் நீர் திரையிட்டது. ''சரி அருணா! நீ குளித்துவிட்டு பலகாரம் சாப்பிடு. நான் பால் கறந்து மாடுகளுக்குத் தீனி போட்டுவிட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு வேகமாக புழக்கடைப் பக்கம் சென்றுவிட்டான்.

''வா அருணா! உனக்குக் குளிக்க வெந்நீர் காய்ச்சித் தருகிறேன். ...த்திரிதான் சாப்பிட்டிருப்பாய். உனக்கு மிகவும் பசியாக இருக்கும். ...ரமா சுடச்சுட தோசை வார்த்துப் போடுகிறேன், வா!'' என்று ...புடன் இந்திராணி உபசரித்தாள்.

அண்ணனும் அக்காவும் தன்மீது காட்டிய பரிவு, அருணாவின்

மனத்தைப் பாகாய் உருக்கியது. சந்தோஷமும், துக்கமும் நெஞ்சை பலமாக அமுக்கின. உணர்ச்சி வசத்தில் சில நிமிஷங்கள் அவளால் பேசவே முடியவில்லை.

ஒருவாறு தன்னைச்சமாளித்துக் கொண்டபின், அதுவரை அடக்கி வைத்திருந்த ஆவலைக் கட்டுப்படுத்த முடியாது, ''அக்கா! அப்பா எங்கே? காணவில்லையே?'' என்றாள்.

''அப்பா வயல் வெளிகளைச் சுற்றிப் பார்க்க போயிருக்கிறார். அப்படியே ஆற்றில் ஸ்நானம் செய்துவிட்டு மெல்ல வருவார். அவர் வீட்டில் இருந்தால் ஆனந்தனும் நானும் இவ்வளவு உரத்த குரலில் பேசியிருப்போமா?'' என்று இந்திராணி பதிலளித்துவிட்டு, களுக்கென்று சிரித்தாள்.

அருணா ஏதோ கேட்க வாயைத் திறந்தாள். அதற்குள் முந்திக் கொண்ட இந்திராணி பரிகாசமாக, ''நீ என்ன நினைக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். பயப்படாதே! முன்போல் அப்பா இப்பொழுதெல்லாம் எங்களை அடிப்பதில்லை. உன் கை ஒடிந்த அன்றிலிருந்தே அடிக்கும் பழக்கத்தை அப்பா நிறுத்திக் கொண்டுவிட்டார்'' எனக் கூறிவிட்டுச் சிரித்தாள்.

''என் கை ஒடிந்துபோனது ஒரு வழியில் நன்மைக்குத்தான் என்று நினைக்கிறேன்'' என்று அருணா பதிலளித்ததைக் கேட்ட இந்திராணியின் அழகிய முகம் சட்டென வாடிப்போயிற்று. அவளது குரலில் மிதந்த பரிகாசமும் மகிழ்ச்சியும் மறைந்து போயின. ''அப்பா இப்பொழுதெல்லாம் எங்களைக் கழியாலும் கம்பாலும் அடிப்பதில்லை என்றுதான் சொன்னேன். அதற்குப் பதில் முகத்தால் அடிக்கிறார். சிறு குழந்தைகளாக இருக்கையில் கம்பால் அடித்தபோது உடல் நொந்தது. இளம் பிராயத்தவர்களாக வளர்ந்திருக்கும் இப்பொழுது அவர் முகத்தால் அடித்து, கடுமையாகப் பேசுகையில் உள்ளம் நொந்து போகிறது. ஒவ்வொரு சமயம் அப்பா மிகவும் கோபமாகத் திட்டும் பொழுது, ஒரு பிரம்பால் நான்கு அடிகள் அடித்தால் கூட தேவலை என்றவரைக்கும் என் மனம் புண்பட்டுப் போவதுண்டு. பிரம்பால் அடித்தால் என்ன, வார்த்தைகளால் அடித்தால் என்ன? அன்பில்லாத பெற்றோர்கள் இருவழியிலும் குழந்தைகளைத் துன்பப்படுத்த முடியும் என்பது

எனது அனுபவம். இதை உனக்கு ஏன் இவ்வளவு தூரம் முன் எச்சரிக்கையாகக் கூறினேன் என்றால், அப்பா இன்னும் சிறிது பொழுதில் திரும்பிவிடுவார். இவ்வளவு வருஷங்கள் கழித்து ஊருக்கு வந்திருக்கும் உன்னைக் கண்டதும் 'கண்ணே' என்று வாரியணைத்துக் கொள்வார் என நீ எதிர்பார்க்க வேண்டாம் என்பதற்காகத்தான்'' என்றாள்.

''அப்பாவையும் உங்கள் இருவரையும் நான் அடிக்கடி நினைத்துக் கொண்டு பார்க்க ஆசைப்பட்டு வருந்துவது வழக்கம். நான் இங்கே வரவேண்டும் என்று அப்பாவுக்கு ஆசை இருக்கவில்லையா? என்னைப்பற்றி எதுவும் அவர் பேச மாட்டாரா?'' என்று அருணா ஏக்கத்துடன் வினவினாள். துக்கத்தினால் அவள் தொண்டை கம்மியது.

''உன்னைப்பற்றி அவர் மனத்தில் என்ன எண்ணிக் கொண்டிருக்கிறாரோ, எனக்குத் தெரியாது. அண்ணனிடமோ என்னிடமோ, அவர் மனதுவிட்டு ஏதாவது பேசினால்தானே? அருணா, நீ ஏன் கண்ணீர் விடுகிறாய்? முதல் முதலாகப் பல வருஷங்கள் கழித்து எங்களுடன் இருக்க ஊருக்கு வந்திருக்கிறாய். ஆனந்தப்பட வேண்டிய சமயத்தில் அழுவானேன்? இவ்வளவு நாட்கள் இல்லாமல் திடீரென்று அப்பா இப்பொழுது தனது குணத்தை மாறிக் கொண்டுவிடப் போகிறாரா? அதில்லை, விட்டுத் தள்ளு'' என்றாள் விரக்தியாகத் தமக்கை.

''ஊருக்கு வரும்போது, உங்கள் எல்லோருக்கும் ஏதாவது கொண்டு வரவேண்டும் என்று ஆசையாக இருந்தது. பெரியம்மா கொடுத்திருந்த பணத்தில் என்னிடம் ஒரு ரூபாய்தான் மீதமிருந்தது. வழியில் ஒரு ஸ்டேஷனில் உங்கள் எல்லோருக்கும் ஒரு ரூபாய்க்கு ஆளுக்கு ஒரு பரிசு வாங்கி வந்திருக்கிறேன். உனக்கு சிவப்பு கலரில் ஒரு ரிப்பன்! ஆனந்தனுக்கு தலைவாரிக் கொள்ள ஒரு அழகான சீப்பு; பாட்டிக்கு என்ன வாங்கினேன் தெரியுமா? பணத்தைப் புடவைத் தலைப்பிலும் பெருங்காயச் சிமிழியிலும், புளிப் பானையிலும் வைக்காது பத்திரமாக வைத்துக் கொள்ள ஒரு அழகான மணிபர்சு'' என்று பேச்சை மாற்றினாள் அருணா.

அதைக் கேட்ட இந்திராணி ஒரு பெருமூச்செறிந்தாள்.

''பாட்டிக்கு நீ பரிசு அளிக்க சிரமப்பட்டிருக்கவே வேண்டாம்'' என்றாள் கூடமாக.

''ஏன், பாட்டிக்கு என்ன? பாட்டி இறந்துவிட்டார்களா என்ன?'' என்று பரபரப்புடன் வினவிய அருணாவின் உடல் அச்சத்தினால் நடுங்கியது.

''இறந்துவிட்டிருந்தாலும் எவ்வளவோ மேலாக இருக்கும். ஏதோ நம்மை எடுத்து வளர்த்தார்கள், கடைசி கால மட்டும் நம்முடன் இருந்தார்கள், சீக்காகப் படுத்திருந்த சமயம் நாமும் ஏதோ சிச்ருஷைகள் செய்தோம். அமைதியாக இறந்து போனார்கள் என்றவரைக்கும் நமக்கு மனத்திற்கு ஆறுதலாக இருந்திருக்கும். அப்படி இல்லாது வயது காலத்திலே அந்தக் கிழவியை நடுத்தெருவிலே அலைய விட்டிருக்கிறோம். அந்த மனத்துயரம்தான் மிச்சமாகிவிட்டிருக்கிறது'' என்றாள்.

அருணா விஷயம் விளங்காது விழித்தாள். ''பாட்டி இங்கே நம்முடன் தங்கியிருப்பதனால்தான் நாம் நித்திய தரித்திரர்களாகத் திண்டாடுகிறோம் என்று அப்பாவுக்கு ஒரு நம்பிக்கை. அதனால் பாட்டியை சதா தூஷித்துக் கொண்டிருந்தார் அல்லவா! போன வருஷம் கரும்பு சாகுபடியில் அப்பாவுக்குக் கொஞ்சம் பணம் கிடைத்தது. அதையும், கூடக் கொஞ்சம் கடன் வாங்கிப் போட்டுப் பாட்டியின் கடனைத் திருப்பிக் கொடுத்து, அவளை வீட்டை விட்டு வெளியே அனுப்பிவிட்டார்'' என்றாள் இந்திராணி தொடர்ந்தாப்போல்.

''அப்படியானால் பாட்டி இப்போது எங்கே? அவர்களை நான் பார்க்க வேண்டுமே'' என்று கேட்ட அருணாவுக்கு அழுகை வந்துவிட்டது.

''பணத்தை நீயே வைத்துக்கொள் அப்பா! பணம் எனக்கு இனி எதற்கு? இந்தக் குழந்தைகளுடன் கடைசிவரை இருந்துவிடுகிறேன்'' என்று பாட்டி கெஞ்சாது எவ்வளவோ கெஞ்சினார்கள். அப்பா பிடிவாதமாக மறுத்துவிட்டார். ஊருக்குப் புறப்படுமுன் பாட்டி என்னையும் ஆனந்தனையும் கட்டிக்கொண்டு அழுதார்கள். எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. அப்பாவுக்கு பயந்து நான் அதிகம்

உணர்ச்சிகளை வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும், பாட்டி ஊருக்குப் போன இரவு முழுவதும் தலையணை நனைந்து ப்பலாகும்வரை அழுது தீர்த்து விட்டேன். அருணா! நீ இனி வேண்டியதில்லை. பாட்டிக்காக, நானும் ஆனந்தனும் வடித்த கண்ணீரில் ஒரு குளத்தைக் கட்டிவிடலாம். நீ அழாதே! சீக்கிரம் குளித்து, பலகாரம் சாப்பிட்டுவிடு. அப்பா வரும்பொழுது அழுது கொண்டு நிற்க வேண்டாம்'' என்று எச்சரித்தாள்.

குளித்துவிட்டு அருணா ஆனந்தன் பக்கத்தில் உட்கார்ந்து, அக்கா வார்த்துப் போட்ட தோசையைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். ஆனந்தன் அவளுக்கு உற்சாகமூட்ட ஊர்க்கதைகள் அனைத்தும் கூறி, சிரிப்பு மூட்டிக் கொண்டிருந்தான். பேச்சு சுவாரஸ்யத்திலே திடீரென்று அருணாவிற்கு அடுத்த வீட்டு அன்னம்மாவின் ஞாபகம் ஏற்பட்டது.

''அண்ணா! அன்னம்மா பாட்டிக்கு இப்பொழுதெல்லாம் நன்றாகக் கண் தெரியுதா? நான் வந்து இவ்வளவு நேரமாகியும் இந்தப் பக்கம் வந்து எட்டிப் பார்க்கவில்லையே? சுகமாகத்தானே இருக்கிறாங்க? நம்ப வீட்டுடன் அவங்களுக்கு மனஸ்தாபம் ஒன்றுமில்லையே?'' என்று ஆவலுடன் கேட்டாள்.

தோசையை விழுங்கி முடிக்குமுன் ஆனந்தன் சிரிக்க முயற்சித்ததனால் அவனுக்கு புரை ஏறிக் கொண்டுவிட்டது. ''அன்னம்மாவின் பிசாசு என்னை நினைத்துக் கொள்கிறாப் போலிருக்கு. புரை ஏறுகிறது!'' என்று பரிகாசமாகக் கூறிவிட்டு, தலையில் அடித்துக் கொண்டான். அருணா வியப்புடன் விழிப்பதைக் கண்ணுற்ற இந்திராணி சிரித்தாள். ''அன்னம்மா பாட்டி செத்து நாலு மாதங்களுக்கு மேலாகிறது. கருமாதியன்னிக்குப் பூட்டின வீடு. அதை இன்னமும் யாரும் திறக்கவில்லை. அன்னம்மா கிழவி பிசாசு ரூபத்திலே வந்து வீட்டிற்குள் அலைவதாக ஊரில் பலவிதமாகப் பேசிக் கொள்கிறார்கள்!'' என்று பதிலளித்தாள்.

''அன்னம்மா பாட்டி செத்துவிட்டார்களா?'' என்று ஆச்சர்யத்துடன் அருணா வினவினாள்.

''செத்தவிதம் கூட கேட்க மிகவும் ஆச்சர்யமாகத்தான் இருக்கும்.

பாட்டிக்கு எவ்வளவு பேராசை உண்டு என்றுதான் உனக்கு தெரியுமோ? பக்கத்து டவுனிலே ராம நாடகம் நடந்து கொண்டிருந்த பாட்டிக்கு இனாம் டிக்கெட் ஒன்று யதேச்சையாக கிடைத்துவிட்ட அன்னிக்கு இலேசாக மழை வேறு பெய்து கொண்டிருந்தது. இனா நாடகம் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் பாட்டி பத்து மைலை பொருட்படுத்தாது, மழையில் நனைந்து கொண்டு நடந்து சென்று நாடகத்தை சுவாரஸ்யமாகப் பார்த்துவிட்டுத் திரும்ப வந்து வீட்டி படுத்தாள். அவ்வளவுதான் மூன்று நாட்களாக வீடு உள்ளே தாளிடப்பட்டிருந்ததைக் கண்டு முன்சீப், போலீஸ் எல்லாம் வந்து உடைத்துத் திறந்தபோது, பாட்டி இரண்டு நாளாக உள்ளே செத்துக் கிடக்கும் விஷயம் தெரிய வந்தது. அவ்வளவுதான், ஊ இரண்டு பட்டுப் போயிற்று.

''இரண்டு நாள் உள்ளே கவனிப்பாரற்றுப் பிரேத கிடந்ததனால், பிசாசு ரூபத்தில் அன்னம்மாள் வீட்டைச் சுற்றி அலைவதாக ஊரில் பலர் நம்பி, வீட்டை அணுகவு பயப்படுகிறார்கள். ஆனால் நாங்கள் ஒன்றும் பயப்படுவதில்லை அந்தி வேளையில் யாரும் காணாத சமயம் இந்திராணி துணிவா அடுத்த வீட்டுப் புழக்கடைக்குச் சென்று பன்னீர்ப் பூ பறித்து கொண்டு வருவாள்'' என்று கூறிவிட்டுச் சிரித்தான் ஆனந்தன்.

''இனாம் டிக்கெட் அன்னம்மாளுக்குப் பெரிய எமனாக வந்து சேர்ந்தது. பாவம் பாடுபட்டு பணத்தைச் சேர்த்தாள். கடைசியி சாகும்போது ஒரு வாய்த் தண்ணீர் கொடுக்க அருகில் யாருமில்லை என்னத்தை வாரி எடுத்துக் கொண்டு போனாள்? ஊரே கிழவியைத் தூற்றுகிறது'' என்று இந்திராணி முடிப்பதற்குள் வாசற்படியிலே பாதரக்ஷை ஓசை கேட்டது. ஆனந்தனும் இந்திராணியும் சட்டெ ஓய்ந்து போனார்கள்.

முற்றத்தில் கால்களைக் கழுவிக் கொண்டு, இருமி தொண்டையைக் கனைத்துவிட்டு சதாசிவம் சமையலறைப் பக்கம் வந்தான். பல வருஷங்களுக்குப் பிறகு தந்தையை சந்திக்கப் போகிறோம் என்ற நினைவில் அருணாவின் நெஞ்சு படபடத்தது தின்று கொண்டிருந்த தோசையை அவளால் விழுங்கவே முடியவில்லை. ''அப்பா, அருணா ஊரிலிருந்து வந்திருக்கிறாள்'' என்று பராக் கொடுத்தான் ஆனந்தன்.

காலமும், வயதும் சதாசிவத்தை முற்றிலும் மாற்றிவிட்டிருந்தன. அலைகள் போல் சுருண்ட அவனது கரிய கேசம் திட்டு திட்டாக வெளுத்துவிட்டிருந்தது. உழைப்பினாலும் அலைச்சலினாலும் சுருந்து விட்டிருந்த அவனது முகத்தில் சுருக்கங்கள் லேசாகப் பரவியிருந்தன. முன்போல் அவன் முதுகை நிமிர்த்திக் கொண்டு விறைப்பாக நடக்காது முதுகைச் சிறிது கூனிக்கொண்டு நடந்து வருவதை அருணா கவனித்தாள். அருகே பலகாரம் சாப்பிட அமர்ந்த தந்தையை நிமிர்ந்து பார்க்கவும் அவளுக்கு அச்சமாக இருந்தது. ஆனால், இந்த உலகத்தின் நினைவே இல்லாதவன் போல் சதாசிவம், இலையில் போட்டதைச் சாப்பிட்டுவிட்டு, கை கழுவிக் கொண்டு தன் அன்றாட வேலைகளைக் கவனிக்க உடனடியாக வெளியே புறப்பட்டுச் சென்றுவிட்டான்.

பகல் பொழுதின் போதும் அவன் அருணாவிடம் ஏதும் பேசவில்லை. ஆனந்தனிடம் மட்டும் மாடுகளைப் பற்றி ஏதோ தகவல்களை தெரிவித்துவிட்டு வழக்கமாகச் செல்ல வேண்டிய வெளியூர் சந்தைக்கு சாமான்கள் வாங்கி வரப் புறப்பட்டுச் சென்றுவிட்டான்.

தந்தை வெளியூர் சென்றதும், அவரது அலுவல்களைக் கவனிக்க ஆனந்தன் கடைத்தெருவிற்குச் சென்றுவிட்டான். இரவு சமையல் வேலையில், இந்திராணி மும்முரமாக ஈடுபட்டிருந்ததனால் அருணாவிடம் பேச யாருக்கும் பொழுது இருக்கவில்லை. கொட்டிலில் நின்ற பசுக்களையும், தோட்டத்தையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு சுற்றிக் கொண்டிருந்த அருணா தோட்டத்தின் முடிவில் அடுத்த வீட்டைப் பிரித்து நின்ற சுவர் அருகே வந்தாள். இரண்டு வீட்டையும் வேறாக்கிய அச்சுவர் பலத்த மழையொன்றால் ஒரு இடத்தில் சிறிது இடிந்து விட்டிருந்தது. அதன் வழியாகத்தான் இந்திராணி அடுத்த வீட்டுத் தோட்டத்திற்குப் போய் வந்து கொண்டிருந்தாள் எனத் தனக்குள் ஊகித்த அருணாவிற்கும் அங்கே போகவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது.

இடிந்த சுவரின் மீது மெல்ல ஏறி அடுத்த வீட்டுத் தோட்டத்திற்குள் குதித்தாள். புதர்போல் மண்டி வளர்ந்திருந்த மல்லிகைச் செடிகளையும், வேப்பமரத்தின்மீது கிளை தெரியாது

பாட்டிக்கு எவ்வளவு பேராசை உண்டு என்றுதான் உனக்
தெரியுமோ? பக்கத்து டவுனிலே ராம நாடகம் நடந்து கொண்டிருந்த
பாட்டிக்கு இனாம் டிக்கெட் ஒன்று யதேச்சையாக கிடைத்துவிட்
அன்னிக்கு இலேசாக மழை வேறு பெய்து கொண்டிருந்தது. இ
நாடகம் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் பாட்டி பத்து மை
பொருட்படுத்தாது, மழையில் நனைந்து கொண்டு நடந்து சென்
நாடகத்தை சுவாரஸ்யமாகப் பார்த்துவிட்டுத் திரும்ப வந்து வீட்
படுத்தாள். அவ்வளவுதான் மூன்று நாட்களாக வீடு உள்
தாளிடப்பட்டிருந்ததைக் கண்டு முன்சீப், போலீஸ் எல்லாம் வ
உடைத்துத் திறந்தபோது, பாட்டி இரண்டு நாளாக உள்ளே
செத்துக் கிடக்கும் விஷயம் தெரிய வந்தது. அவ்வளவுதான்,
இரண்டு பட்டுப் போயிற்று.

''இரண்டு நாள் உள்ளே கவனிப்பாரற்றுப் பிரேத
கிடந்ததனால், பிசாசு ரூபத்தில் அன்னம்மாள் வீட்டைச் சுற்
அலைவதாக ஊரில் பலர் நம்பி, வீட்டை அணுகவு
பயப்படுகிறார்கள். ஆனால் நாங்கள் ஒன்றும் பயப்படுவதில்லை
அந்தி வேளையில் யாரும் காணாத சமயம் இந்திராணி துணிவா
அடுத்த வீட்டுப் புழக்கடைக்குச் சென்று பன்னீர்ப் பூ பறித்து
கொண்டு வருவாள்'' என்று கூறிவிட்டுச் சிரித்தான் ஆனந்தன்.

''இனாம் டிக்கெட் அன்னம்மாளுக்குப் பெரிய எமனாக வந்
சேர்ந்தது. பாவம் பாடுபட்டு பணத்தைச் சேர்த்தாள். கடைசியி
சாகும்போது ஒரு வாய்த் தண்ணீர் கொடுக்க அருகில் யாருமில்லை
என்னத்தை வாரி எடுத்துக் கொண்டு போனாள்? ஊரே கிழவியை
தூற்றுகிறது'' என்று இந்திராணி முடிப்பதற்குள் வாசற்படியிலே
பாதரக்ஷை ஓசை கேட்டது. ஆனந்தனும் இந்திராணியும் சட்டெ
ஒய்ந்து போனார்கள்.

முற்றத்தில் கால்களைக் கழுவிக் கொண்டு, இரும
தொண்டையைக் கனைத்துவிட்டு சதாசிவம் சமையலறைப் பக்க
வந்தான். பல வருஷங்களுக்குப் பிறகு தந்தையை சந்திக்க
போகிறோம் என்ற நினைவில் அருணாவின் நெஞ்சு படபடத்த
தின்று கொண்டிருந்த தோசையை அவளால் விழுங்கவே
முடியவில்லை. ''அப்பா, அருணா ஊரிலிருந்து வந்திருக்கிறாள்''
என்று பராக் கொடுத்தான் ஆனந்தன்.

காலமும், வயதும் சதாசிவத்தை முற்றிலும் மாற்றிவிட்டிருந்தன. அலைகள் போல் சுருண்ட அவனது கரிய கேசம் திட்டு திட்டாக வெளுத்துவிட்டிருந்தது. உழைப்பினாலும் அலைச்சலினாலும் சுருத்து விட்டிருந்த அவனது முகத்தில் சுருக்கங்கள் லேசாகப் பரவியிருந்தன. முன்போல் அவன் முதுகை நிமிர்த்திக் கொண்டு விறைப்பாக நடக்காது முதுகைச் சிறிது கூனிக்கொண்டு நடந்து வருவதை அருணா கவனித்தாள். அருகே பலகாரம் சாப்பிட அமர்ந்த தந்தையை நிமிர்ந்து பார்க்கவும் அவளுக்கு அச்சமாக இருந்தது. ஆனால், இந்த உலகத்தின் நினைவே இல்லாதவன் போல் சதாசிவம், இலையில் போட்டதைச் சாப்பிட்டுவிட்டு, கை கழுவிக் கொண்டு தன் அன்றாட வேலைகளைக் கவனிக்க உடனடியாக வெளியே புறப்பட்டுச் சென்றுவிட்டான்.

பகல் பொழுதின் போதும் அவன் அருணாவிடம் ஏதும் பேசவில்லை. ஆனந்தனிடம் மட்டும் மாடுகளைப் பற்றி ஏதோ தகவல்களை தெரிவித்துவிட்டு வழக்கமாகச் செல்ல வேண்டிய வெளியூர் சந்தைக்கு சாமான்கள் வாங்கி வரப் புறப்பட்டுச் சென்றுவிட்டான்.

தந்தை வெளியூர் சென்றதும், அவரது அலுவல்களைக் கவனிக்க ஆனந்தன் கடைத்தெருவிற்குச் சென்றுவிட்டான். இரவு சமையல் வேலையில், இந்திராணி மும்முரமாக ஈடுபட்டிருந்ததனால் அருணாவிடம் பேச யாருக்கும் பொழுது இருக்கவில்லை. கொட்டிலில் நின்ற பசுக்களையும், தோட்டத்தையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு சுற்றிக் கொண்டிருந்த அருணா தோட்டத்தின் முடிவில் அடுத்த வீட்டைப் பிரித்து நின்ற சுவர் அருகே வந்தாள். இரண்டு வீட்டையும் வேறாக்கிய அச்சுவர் பலத்த மழையொன்றால் ஒரு இடத்தில் சிறிது இடிந்து விட்டிருந்தது. அதன் வழியாகத்தான் இந்திராணி அடுத்த வீட்டுத் தோட்டத்திற்குப் போய் வந்து கொண்டிருந்தாள் எனத் தனக்குள் ஊகித்த அருணாவிற்கும் அங்கே போகவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது.

இடிந்த சுவரின் மீது மெல்ல ஏறி அடுத்த வீட்டுத் தோட்டத்திற்குள் குதித்தாள். புதர்போல் மண்டி வளர்ந்திருந்த மல்லிகைச் செடிகளையும், வேப்பமரத்தின்மீது கிளை தெரியாது

படர்ந்து கொத்துக் கொத்தாக மலர்ந்து வாசனையை அள்ளி வீசிக் கொண்டிருந்த சண்பகக்கொடியையும் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள். ''அன்னம்மா பாட்டி உயிருடன் இருந்தால் இவ்வளவு பூக்களையும் எவ்வளவு பணமாக்கிவிடுவாள்?'' என்று தனக்குள்ளே எண்ணி ஆச்சர்யப்பட்டாள்.

அதே சமயம் சிலுக்கென்று எங்கிருந்தோ ஓர் ஓசை கேட்டது. திடுக்கிட்டு அருணா சுற்றுமுற்றும் பார்த்தாள். யாரையும் காணவில்லை. வேப்ப மரத்தினின்று மைனா ஒன்று கிரீச்சென்று இறக்கையை அடித்துக் கொண்டு அப்பால் பறந்தோடியது. அதனால் அசைந்த கொடியினின்று சில மலர்கள் உதிர்ந்து தரைமீது விழுந்தன. அவைகளைப் பொறுக்கியெடுக்க அருணா கீழே குனிந்தாள். சரக், சரக்கென்று காய்ந்த சருகுகள் காலடியில் நொறுங்கும் சப்தம் பின்னிருந்து எழுந்தது. அத்துடன் மாலை வெய்யிலில் பின்னிருந்து நீண்டதொரு நிழல் அவள் முன்பு விழுந்தது.

அன்னம்மாளின் பிசாசை எண்ணிய மாத்திரம் அருணாவின் உடல் முழுவதும் பயத்திலே சிலிர்த்துப் போயிற்று. சேகரித்த மலர்களை அப்படியே போட்டுவிட்டு ஒரே பாய்ச்சலில், தங்கள் தோட்டத்திற்கு ஓடி விடத் திரும்பிய அவள் தாவணியை யாரோ பிடித்துப் பலமாகப் பின்னிருந்து இழுப்பது போன்று ஓர் உணர்வு ஏற்பட்டது. அவ்வளவுதான். ''அண்ணா! அண்ணா!'' என்று உரத்த குரலில் அருணா கிரீச்சிட்டு அலறினாள்.

17

''அவசரப்பட்டு எழுந்திருக்க வேண்டாம். மரக்கொம்பில் துணி சிக்கிக் கொண்டிருக்கிறது'' என்று யாரோ ஒரு புருஷன் எச்சரிப்பது கேட்டது. ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு அருணா எழுந்து உட்கார்ந்தவள் பேச்சு வந்த திசையை நோக்கினாள். அவள் அண்ணன் ஆனந்தனைவிட சில வருஷங்கள் மூத்தவன்போல் காணப்பட்ட வாலிபன் ஒருவன், தன் முன்னே விரைவாக வந்து கொண்டிருப்பதைக் கண்டாள். அவள் ஆக்ஷேபணை சமாதானங்கள்

ஏதும் கூறுமுன் அந்த வாலிபன், அருகிலிருந்த கொம்பு ஒன்றில் நன்றாகச் சிக்கிக் கொண்டுவிட்டிருந்த அவளது தாவணியின் முனையை, லாவகமாகப் பிரித்து எடுத்துவிட்டான்.

''அவசரப்பட்டிருந்தால் துணி கிழிந்து விட்டிருக்கும். துணி போகட்டும், உடம்பில் ஏதேனும் காயம் ஏற்பட்டதா?'' என்று வெகுநாள் பழகிய நண்பன் போல் பரிவுடன் அவன் விசாரித்தான். விருக்கென ஒரே துள்ளலில் எழுந்து நின்ற அருணா தன்மீது படிந்திருந்த தோட்டத்து மண்ணைத் தட்டி, சரிப்படுத்திக் கொண்டாள். ''இல்லை, காயம் ஒன்றுமில்லை, வந்தனம்'' என்று தடுமாற்றத்துடன் பதிலளித்தாள். அண்டை வீட்டுத் தோட்டத்தில் உள்ள மலர்களைத் தான் திருடிப்போக வந்ததாக அந்த வாலிபன் எண்ணிக் கொள்ளப் போகிறானோ எஃ.ற நினைவு ஏற்படவும் அவளுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

''எதைக் கண்டு நீ இப்படிப் பயந்து போய்விட்டாய்? நீ போட்ட கூச்சலைக் கேட்டு நான் அப்படியே ஒரு கணம் பயத்தில் அசந்து போய்விட்டேன்'' என்று பரிகாசமாகக் கேட்டுவிட்டு அவன் நகைத்தான்.

''ஆமாம், பயந்து போய்விட்டேன்'' என்று பதிலளித்த அருணா, தலையை நிமிர்ந்து அவனை ஏற இறங்கக் கவனித்தாள். ஆனந்தனைப்போல் நல்ல உயரமும், வளமையான உடற்கட்டும் கொண்டிருந்தபோதிலும் நிறத்தில் அவன் அண்ணனைப் போல் அவன் சிவந்த மேனியனாக இருக்கவில்லை. எனினும் அவனது கரிய நிறத்திற்கு ஈடு செய்துவிடுவது போன்று, சிரிக்கையிலே அவனது வரிசைப் பற்கள் முத்துக்கள் போல் ஒளிவீசி முகத்திற்கு ஒரு தனிக் களையை உண்டாக்கியதை அவள் ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

''எதைக் கண்டு பயந்துவிட்டாய்? என்னைக் கண்டா? நான் பயப்படும்படி அவ்வளவு பயங்கரமாகவா தோன்றுகிறேன்?'' என்று பரிகாசமாகக் கேட்ட அவ்வாலிபன் மீண்டும் தன் முத்துப் பற்கள் பளிச்சிட வாய்விட்டு நகைத்தான். அவனுக்குப் பதில் அளிக்க அவள் வாய் திறக்குமுன் பின்னால் வீட்டிலிருந்து ஒரு பெண்ணின் குரல் எழுந்தது. ''செம்பரம், அங்கே என்ன சத்தம்? என்ன நடந்தது?'' என்று

கேட்டவண்ணம் வீட்டினின்று வயது முதிர்ந்த பெண்மணி ஒருத்தி வெளிப்பட்டாள். ''ஒன்றுமில்லையம்மா? இந்தப் பூக்களைப்பறிக்க இந்தப் பெண் வந்திருக்கு. ஓணானையோ, தவளையையோ கண்டு மிரண்டு கூச்சல் போட்டு கீழே விழுந்து விட்டது'' என்றான் சிதம்பரம்.

''அப்படியா, அடபாவமே! விழுந்ததில் அடிகிடி பட்டுவிட்டதா?'' என்று மிகவும் கனிவுடன் விசாரித்த அந்தப் பெண்மணி அருணாவின் பக்கம் வந்தாள்.

''நினைத்தபடி ஆயிற்றே?'' என்று தனக்குள் எண்ணி வெட்கமடைந்த அருணா, ''இல்லையம்மா? நான் இந்தப் பூக்களைப் பறிக்க வரவில்லை. பொழுதுபோக்காக இந்தத் தோட்டத்தை வேடிக்கைப் பார்க்க வந்தேன். பிறர் வீட்டுத் தோட்டத்தில், வீட்டுக்காரர்களின் உத்தரவின்றி நான் பூக்களைப் பறிக்க விரும்ப மாட்டேன்'' என்றாள். அதைக் கூறி முடிக்குமுன் அவள் முகம் வெட்கத்தினால் சிவந்து கை கால்கள் வெலவெலத்து ஓய்ந்துவிட்டன.

அவளது தடுமாற்றத்தை நன்றாக உணர்ந்து கொண்ட அந்த வயோதிகப் பெண்மணி தனக்குள் மெல்லப் புன்முறுவல் செய்து கொண்டாள். ''நீ யாரம்மா? உங்கள் வீடு இங்கே அருகில்தானே இருக்கிறது?'' என்று மிகவும் அன்பாகக் கேட்டாள். ''இதோ தெரியும் இந்த அடுத்த வீடு எங்கள் வீடுதான்'' என்று குழறியபடி பதிலளித்த அருணா முகத்தின்மீது துளிர்த்த வியர்வையை தாவணி முனையினால் அழுத்தி துடைத்துக் கொண்டாள்.

''அடுத்த வீட்டுப்பெண்ணா நீ. அதனால்தான் உனக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வருகிறது. வீட்டுத் தோட்டத்தில் காய்த்த காயையோ, பூத்த பூவையோ காணவில்லையென்றால் சாதாரணமாக சட்டென்று சந்தேகம் அடுத்த வீட்டு துஷ்டக் குழந்தைகள் மீதுதான் ஏற்படும். கவலைப்படாதே! இங்குள்ள பூக்கள் அனைத்தையும் நீ பறித்து எடுத்துக் கொண்டாலும் அம்மா கொஞ்சமும் மனஸ்தாபப்பட மாட்டார்கள். அம்மாவுக்குப் பெண் குழந்தைகள் என்றால் அத்தனை பிரியம்'' என்று கூறிவிட்டு கலகலவென்று சிரித்தான் அவன்.

அருணாவிற்கு வெட்கத்தினால் உடல் குன்றிவிட்டது. மறுத்துக் ...ம் அந்தத் தோட்டத்திலே பூக்களைக் களவாடிப் போக ...வல்லவா அவளைப்பற்றி அவன் எண்ணுகிறான் என்ற ... அவள் மனத்தை உறுத்தியது. ''நான் இந்தத் தோட்டத்தைச் ... பார்க்க வந்தேன், உண்மையிலே பூக்களைத் திருடிச்செல்ல ...'' என்றாள். இதைக்கூறி முடிக்குமுன் அவள் குரல் ...து. அவள் துயரத்தைச் சட்டெனப் புரிந்து கொண்டுவிட்ட ... பெண்மணி, ''உன்னை அப்படி நாங்கள் நினைக்கவில்லை. ...டா! இந்தச் சின்ன விஷயத்திற்கு இவ்வளவு ...ப்படுறாயே? உள்ளே வாம்மா; கீழே விழுந்ததனால் அடிகிடி ...ன்று பார்க்கிறேன் பிறகு போகலாம்'' என்று அழைத்தாள். ... தயாராக நின்ற கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு ... ஒடத் ...ணா, பதிலுக்குப் புன்முறுவல் செய்தாள். ''பிறகு வருகிறேன், ...மாயிற்று. இருட்டப் போகுது'' என்றாள் சங்கோஜத்துடன்.

''மறுக்காதே குழந்தாய்! உள்ளே வா. முதல் முதலாக இந்த ...ற்கு இன்றுதான் வந்திருக்கிறோம். வீட்டைக் கூட்டிப் பெருக்கி ...ப்படுத்த இவ்வளவு நேரப் பொழுது எனக்குச் சரியாக இருந்தது. ... காய்ச்சி சாப்பிட எல்லாம் தயார் செய்து கொண்டிருந்தேன். ...ற்குள், தோட்டத்தில் பூஜைக்குக் கொஞ்சம் புஷ்பம் எடுத்து ...தாகச் சொல்லிவிட்டு சிதம்பரம் இங்கே வந்தான். கொஞ்ச ...திலே யாரோ அலறிப் பெரும் கூச்சல் போட்டதைக் கேட்டதும் ...வோ ஏதோ என்று நடுங்கிப் போய்விட்டேன். தோட்டம் பல ...ளாகக் கவனிப்பாரற்றுக் கிடப்பதால், புல்லும் புதருமாக ...வைக்க முடியாதபடி காடாகிக் கிடக்கிறது. ஆகட்டும், ...வப் பொழுதுக்குள்ளே, இதையும் செப்பனிட்டு சுத்தப்படுத்தி ...றேன்'' என்று விவரித்த அந்த மாது, ''வாம்மா! முதல் முதலாக, ... வீட்டில் குடியேறி வாழ வந்திருக்கும் எங்களுடன் நீயும் ...ஞ்சம் பால் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்'' என்று அழைத்தாள்.

...ற்குமேல் மறுக்க முடியாது அருணா அவர்களைப் ...தொடர்ந்தாள். ''இன்று பகல் வண்டிக்குத்தான் நானும் ...பரமும் இங்கே வந்தோம். என்னால் முடிந்தவரை வீட்டை ...ங்குபடுத்தியிருக்கிறேன். ஏதடா, இந்தம்மா குப்பை கூளத்தின் ...ல, நம்மைக் கூட பால் சாப்பிட உபசாரமாக அழைத்து

விட்டார்களே என்று நினைத்துக் கொள்ளாதே'' என்று அவ
கூறிவிட்டு மெல்லச் சிரித்தாள்.

''வீட்டை நீங்க வைத்துக் கொள்ளும் அழகை அடுத்
வீட்டவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டீர்க
என்றால், இந்தப் பெண்ணை நாளைக்கு நம்முடன் சாப்பி
விருந்துக்கு அழைத்து விடலாம். கவலைப்படாதீங்க'' என்
கூறிவிட்டு மகன் சிரித்தான்.

அவனது ஹாஸ்யத்தில் ஈடுபட்ட அவன் தாயார், ''சிதம்பர
உன் வாயை இன்னிக்கு ஒரு நாளைக்கு சித்த அடக்கி வை அப்பா
என்று கூறிவிட்டு அடக்க முடியாதவள்போல் கலகலவென்
நகைத்தாள். அதைக் கண்டு அருணாவிற்கும் சிரிப்பு வந்தது.

கூடத்தில் தரைமீது விரிக்கப் பெற்றிருந்த பாயி
அமர்ந்துகொண்ட அருணா சுற்றுமுற்றும் கவனித்துவிட்
''முழுவதும் நன்றாகத்தான் சுத்தமாக்கிவிட்டிருக்கிறீர்கள்! இதை
பார்க்கிறவர்கள் நாலைந்து வருஷமாகப் பூட்டிக்கிடந்த வீடு என்
சொல்லமாட்டார்கள்'' என்றாள் உவகையுடன்.

''அப்பப்பா! பகல் பொழுது, நாங்கள் இங்கே வந்த சமயம் நீயு
வந்திருந்தால், உள்ளே அடைந்து கிடந்த புழுதியைக் கண்
அதிசயித்துப் போயிருப்பாய். ஏதோ புலி, சிங்கம் வாழ்ந்த காடுபோ
அவ்வளவு பயங்கரமாகக் காட்சியளித்தது'' என்று பரிகாசமா
பேசிய சிதம்பரம், முற்றத்தின் குறட்டின்மீது அருணா அருகே வந்
உட்கார்ந்து கொண்டான்.

அவன் பேசிய தோரணை, பழகிய முறை எல்லாம் எடுத்
எடுப்பிலேயே அருணாவுக்குப் பிடித்துப் போயின. அவனுட
சமமாக உட்கார்ந்து பேச சங்கோஜமோ பயமோ அவளுக்
ஏற்படவேயில்லை.

''இந்த வீட்டில் அன்னம்மாள் என்ற கிழவி ஒருத்தி வெ
நாட்கள் வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் திடீரென்
மரணமடைந்துவிட்டார்கள். அதனால் இதில் ஏதோ பே
குடியிருப்பதாக ஒரு பொய் வதந்தி இந்தக் கிராமத்திலே பரவி

இடந்தது. அதனால்தான் யாரும் இந்த வீட்டில் குடிவரத்
துணியவில்லையாம்'' என்றாள் அருணா.

''இப்பொழுது எனக்கு விஷயம் விளங்கிவிட்டது. நான்
பின்னால் நடந்து வந்த சத்தத்தைக் கேட்டதும், 'அந்திவேளையில்
பேய்தான் புறப்பட்டு நம்மைப் பிடித்துக் கொள்ள வந்துவிட்டதோ'
என்று பயந்து விட்டாய். அலறிக் கூச்சலிட்டு விட்டாய். அதுதானே
உண்மையில் நடந்தது?'' என்று கேலியாகக் கேட்டான் சிதம்பரம்.

உண்மை அதுதான் என்றாலும் அருணாவுக்கு அவனிடம் அதை
ஒப்புக் கொள்ள மனம் வரவில்லை. ''ஏதோ கொடி ஒன்றை
மிதித்துவிட்டேன். பாம்பு என்ற பிரமையினால் அப்படிக்
கத்திவிட்டேன். அதேயொழிய எனக்குப் பிசாசு, பேய் இவைகள் மீது
நம்பிக்கை கிடையாது. நம்பிக்கை இருந்தால் அந்தி வேளையில்
இந்தத் தோட்டத்திற்கு வந்திருப்பேனா?'' என்று சாதுர்யமாகக்
கேட்டாள்.

பளபளவென்று மின்னிய வெண்கல டம்பளரில் பசும்பாலை
நிரப்பிக் கொண்டு, உள்ளிருந்து வந்த சிதம்பரத்தின் தாயார், அதை
அருணாவிடம் நீட்டினாள். ''சாப்பிடம்மா'' என்று உபசரித்துவிட்டு
தொடர்ந்தாற்போல், ''நீ சொல்வது வாஸ்தவம், குழந்தாய்! இந்த
வீட்டில் ஒரு வகைப் பேய் சில மாதங்கள்வரை குடியிருந்தது. அந்தப்
பேய் சாதாரணப் பேய்களைவிட மிகவும் பொல்லாதது. எங்களை
நான்கு வருஷகாலம் கோர்ட்டுக்கு இழுத்தடித்து, பொருள் நஷ்டமும்,
மனக் கஷ்டமும் கொடுத்து அலட்டிவிட்டது. அந்தப் பேய்'' என்றாள்
வருத்தம் தோய்ந்த குரலில்.

அருணா அதைக்கேட்டு விளங்காமல் விழித்துக்
கொண்டிருப்பதைக் கண்ட சிதம்பரம், ''அம்மா! நீங்கள் கூடகமாகப்
பேசுவது இந்தப் பெண்ணிற்குப் புரியவில்லை. நான் விளங்கச்
சொல்கிறேன்''; என்று இடைமறித்தான். பிறகு, அருணா பக்கம்
திரும்பி, ''அம்மா கூறுவது உண்மை. நான்கு வருஷ காலமாக இந்த
வீட்டில் வியாஜ்யம் என்ற பேய் குடியிருந்தது வாஸ்தவம். இந்த வீடு,
மற்றைய சொத்துகளுக்கு நாங்கள் உண்மையான வாரிசுகளா அல்லது,
இதற்குப் போட்டியிட்ட எங்கள் பங்காளிகள் உண்மையான

வாரிசுதார்களா என்பதைக் கோர்ட்டு நிச்சயிக்க நான்கு வருஷங்கள் சென்றுவிட்டன. அன்னம்மாளின் மகன் வளர்ந்து, பேரன் என்ற உறவு ஸ்தாபிக்கப் பெற்று, சொத்து எங்கள் கை வசம் சட்ட ரீதியாக இரண்டு மாதங்களுக்கு முன்புதான் கிட்டியது. தான் பார்த்திராத, தனது புக்ககத்திற்கு முதன் முதலாக வந்து குடியேறப் போகிறோம் என்பதனால் அம்மா, நாள் நட்சத்திரம் எல்லாம் பார்த்துக் கொண்டு நேற்றுத்தான் ஊரைவிட்டுப் புறப்பட இசைந்தார்கள். அன்னம்மாள் எங்களுடைய அருமைப் பாட்டியார். அப்படியே பேய் உருவில் அவர்கள் அலைந்து கொண்டிருந்தாலும் அருமைப் பேரனை ஒன்றும் உபத்திரவிக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அப்படியே ஏதேனும் கொஞ்சம் தொந்தரவு கொடுக்க விரும்பினாலும், இந்த சௌந்தரம்மாளைத் தான் அவர்கள் பேய் உருவில் வந்து இம்சிப்பார்கள்'' என்றான்.

''சிதம்பரம்! நீ இப்படியெல்லாம் பேசினால் அந்தப் பெண் உன்னைப்பற்றி என்ன நினைத்துக் கொள்ளும்? அம்மா குழந்தாய்! உன் பெயர் என்ன? இதுவரை பேச்சு வாக்கில் அதைக் கேட்கவே மறந்துவிட்டேன்'' என்றாள் சிதம்பரத்தின் தாயார்.

''அருணா!'' என்று சுருக்கமாகப் பதிலளித்துவிட்டு பாலைப் பருக, டம்ளரைக் கையில் எடுத்துக்கொண்டாள் அருணா.

''வெளியில் விளக்கைப் பொருத்தி வைத்து விட்டு வருகிறேன் சற்று இரு அம்மா அருணா!'' என்று கூறியபடி சௌந்தரம்மாள், வாயில் பக்கம் சென்றாள்.

பாலை ஒரு வாய் பருகி முடித்த அருணா ஆச்சர்யத்துடன் சிதம்பரம் பக்கம் திரும்பி, ''அன்னம்மாள் பாட்டிக்கு நீங்கள் பேரன் என்ற விஷயம் எனக்குத் தெரியவே தெரியாது. இந்த வீட்டிற்குக் குடி வந்திருக்கிறவர்கள் என்றுதான் எண்ணிக் கொண்டேன்'' என்று வியப்புடன் சொன்னாள்.

''ஏன்? என்னைப் பார்த்தால் அன்னம்மாள் பாட்டியின் பேரன் போல் காணவில்லையா? நீ சொல்வது உண்மைதான். என் பாட்டி அன்னம்மாளைப் போல் எனக்கு நீண்டு வளைந்த மூக்குக் கிடையாது. மெல்லிய நீண்ட கழுத்தும் கிடையாது. பயப்படாதே. என் பாட்டியாரைப் போல், இங்கிருந்தபடியே என் கழுத்தை நீட்டி உங்கள் வீட்டுக் காரியங்களில் நான் தலையை விட மாட்டேன்'' என்றான்.

அதைக் கேட்டு அருணாவிற்குச் சிரிப்புத் தாள முடியவில்லை. ''உங்களுடன் பேசிக் கொண்டிருந்தால் பொழுது போவதே தெரியாது போல் இருக்கிறது. சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறீர்களே?'' என்று கேட்டு நகைத்து ஓய்ந்த அவள் மிகவும் ஆவலுடன், ''ஆமாம், உங்கள் பாட்டியாருக்கு உங்கள் தாயார் மீது அதிக மன வருத்தம்போல் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதைப் பற்றியும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றாள் மெல்லிய குரலில்.

''என் தாயார் தாழ்ந்த வகுப்புப் பெண்மணி என்ற காரணத்தினால், என் பாட்டியாருக்கு அவர்மீது வெறுப்பு. தாயாரிடம் மனஸ்தாபப்பட்டு, வெளியிடத்தில் பிழைக்கச் சென்றார் என் தந்தை. போன இடத்தில் ஒரு பங்களாவில் கார் ஓட்டும் வேலைக்கு அமர்ந்தார். பங்களா தோட்ட வேலைக்காரன் முனுசாமி மகளை அவருக்குப் பிடித்துப் போயிற்று. ஜாதியில் தன்னைவிட மிகவும் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவள் என்று அறிந்தும், அதைப் பாராட்டாது அவர் அவளை மணந்து கொண்டு விட்டார். அதனால் பாட்டியாருக்கு மெத்த மன வருத்தம்?'' என்றான்.

இதைக் கேட்ட அருணா, தான் சாப்பிட்டுக் கொண்டிருந்த பால் டம்ளரை சட்டென பரபரப்புடன் கீழே வைத்தாள். அதைக் கவனித்த சிதம்பரம் ஆச்சர்யத்துடன், ''ஏன் பாலைச் சாப்பிடாது வைத்து விட்டாய்? சர்க்கரை போதவில்லையா?'' என்று பரிவுடன் விசாரித்தான்.

தனக்குள் எழுந்த சிறிய மனப் போராட்டத்தை அருணா வெளியே தெரிவிக்க மனம் இன்றி, ''இல்லை இங்கே வந்து வெகு நேரமாகிவிட்டது. வீட்டில் அண்ணனும் அக்காவும் என்னைக் காணாது தேடுவார்கள். நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டு துள்ளிக் கொண்டு எழுந்தாள். சிதம்பரம் ஆட்சேபணை கூறித் தடுக்கும்முன், [illegible] விரைந்து சென்று, ''அம்மா! நான் வருகிறேன். நாளைக்கு [illegible] மீண்டும் வந்து பார்க்கிறேன்'' என்று கூறி அவசரமாக சௌந்தரம்மாவிடம் விடை பெற்றுக்கொண்டு, தோட்டத்தின் [illegible] பின்புறமாக வீட்டிற்கு விரைந்தாள்.

அருணா கூடத்திற்குள் நுழையும் சமயமும் இந்திராணி ஆற்றிலிருந்து திரும்பும் சமயமும் ஒன்றாக இருந்தன. குடத்தைக் கீழே இறக்கி வைத்துவிட்டு இந்திராணி வியப்புடன் தங்கையை நோக்கி, ''இவ்வளவு நேரம் நீ எங்கே போய் மறைந்து கொண்டிருந்தாய்? ஆற்றுக்குப் புறப்படும் முன் வாசற் கதவைச் சாத்திக் கொள்ள உன்னைக் கூப்பிட்டுத் தொண்டையே எனக்கு வறண்டு விட்டுப் போ'' என்றாள் சிறிது அதிருப்தியுடன்.

''அடுத்த வீட்டிற்குப் போயிருந்தேன் அக்கா! அடுத்த வீட்டில் அன்னம்மாள் மருமகளும் பேரனும் குடி வந்திருக்கிறார்கள். யதேச்சையாகத் தோட்டத்திற்குப் போன நான் அவர்கள் கண்ணில் பட்டுவிட்டேன். இன்றுதான் குடி வந்தார்களாம். பால் காய்ச்சி சாப்பிடும் சமயமாக இருந்ததனால் என்னையும் கூட அதில் கலந்து கொள்ள அழைத்தார்கள். மறுக்க முடியவில்லை. அதனால் நேரமாகிவிட்டது'' என்று தன் செயலுக்கு காரணத்தை விவரித்தாள்.

''அவர்கள் வீட்டில் ஏதேனும் சாப்பிட்டாயா? ஐயையோ!'' என்று அலறினாள் இந்திராணி மிகவும் கலவரத்துடன்.

''இல்லை அக்கா, கொஞ்சம் பால் மட்டும் சாப்பிட்டேன்'' என்று அருணா பதிலளிக்குமுன் இந்திராணி பதட்டத்துடன், ''அருணா! அழைத்தார்கள் உபசரித்தார்கள் என்று இனி அவர்கள் வீட்டில் எதையும் வாங்கிச் சாப்பிட்டு விடாதே. அவர்கள் வீட்டில் ஒரு லோட்டா தண்ணீர் வாங்கிக் குடித்ததாக விஷயம் தெரிஞ்சாலும், ஊரார் நம்மைச் சும்மா விட மாட்டார்கள். உனக்கு விஷயம் தெரியாதா? அன்னம்மாள் மருமகள் நம் இனத்தைச் சேர்ந்தவள் அல்ல'' என்று மூச்சு விடாது பேசிவிட்டு, யாராவது இருக்கிறார்களா என கவனிப்பது போல் சுற்றுமுற்றும் பார்த்தாள். பிறகு மெல்லிய குரலில் ''அந்தம்மாள் ஹரிஜனப் பெண் என்று சொல்லிக் கொள்கிறார்கள்'' என்றாள் இரகசியமாக.

இதைக் கேட்டதும் அருணாவின் நெஞ்சு சில வினாடிகள் படபடவென்று அடித்துக் கொண்டது. அவள் மனத்தை ஏதோ ஒன்று மிகவும் பாரமாக அழுத்தியது. ''அக்கா, அந்தம்மாளைப் பார்த்தால் நம்பவே முடியாது. அவர்களை ஒரு பொழுதும் ஹரிஜனப் பெண் என்று நினைக்கவே இயலாது. அவ்வளவு களை பொருந்திய முகம்

அன்பு நிறைந்த குணம்'' என்றாள் அருணா முடிவில்.

இந்திராணி அசட்டையாக சூள் கொட்டினாள். ''அருணா! நீ சுத்த மட்டான் பெண். ஜாதி என்பது முகத்தில் எழுதியா ஒட்டியிருக்கும்? என்னவோ அதிசயமாகப் பேசுகிறாயே?'' என்றாள் அதட்டலாக.

அருணாவின் நெஞ்சைத் துக்கம் பிடித்துக் கொண்டது. ''அவ்வாறு முகத்தில் எழுதி ஒட்டியிருந்தால் எவ்வளவோ நலமாகத்தான் இருக்கும் என நினைக்கிறேன். அவர்கள் அளித்த பாலைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவள் திடீரென்று எழுந்து இடையே ஓடி வந்துவிட்டேன். அவர்களது பூர்வீகத்தைப் பற்றி அறியாத வரையில் அந்தப் பால் எனக்கு இனிமையாகத்தான் இருந்தது. நான் பாலை மேலே சாப்பிடாது ஏன் எழுந்து ஓடி வந்து விட்டேன் என்பதை அந்தம்மாள் அறிந்து கொண்டால் அவர்கள் மனம் எவ்வளவு புண்படும்?''

''அக்கா! அவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தால் என்ன? என்னிடம் எவ்வளவு அன்பாகப் பேசினார்கள்! என்னை எத்தனை அருமையாக உபசரித்தார்கள்! அவர்களைப் பார்த்தபோது எனக்குச் சட்டென்று நம் அம்மாவின் நினைவுதான் ஏற்பட்டது. நம் அம்மா மட்டும் இப்பொழுது உயிருடன் இருந்தால் நான் ஊருக்குத் திரும்பி வந்ததைக் கண்டு மகிழ்ந்து இப்படித்தானே என்னை அன்பாக உபசரித்திருப்பார்கள்? 'குழந்தை குழந்தை' என என்னை எவ்வளவு கனிவாக அழைத்தார்கள் அந்த சௌந்தரம்மாள்.

''பெண் குழந்தைகள் என்றால் அவர்களுக்கு மிகவும் பிரியமாம், அக்கா! என்னைக் குழந்தை என்று இன்றுவரை யாரும் அவ்வளவு கனிவாக அன்பு நிறைந்து அழைத்ததில்லை. முதல் முதலாக அவ்வாறு அழைக்க விழைந்த அன்பு உள்ளத்தை நான் எவ்வளவு புண்படுத்தி விட்டேன்! அக்கா! என்ன தவறு செய்து விட்டேன்? சௌந்தரம்மாள் என்னை மன்னிப்பார்களா?'' என்று உணர்ச்சி வேகத்தில் படபடவென்று பேசிய அருணா, தாங்க முடியாது விக்கி விக்கி அழத் துவங்கினாள்.

தங்கையின் மனப் போராட்டங்களையும், உணர்ச்சிகளையும் தமக்கையால் பூரணமாக உணர்ந்து கொள்ள முடியவில்லை.

''பைத்தியம், இதுக்கென்ன அழுகை? எழுந்திரு, முகத்தைத் துடைத்துக் கொள்'' என்று இந்திராணி அலட்சியமாகச் சொன்னாள்.

18

காலை வேளையில் இந்திராணிக்குத் தங்கையுடன் பேசிக் கொண்டிருக்க பொழுது இருக்கவில்லை. இருள் பிரியுமுன்பே அவள் எழுந்து பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டாள். அண்டாவில் ஊறிக்கொண்டிருந்த பருத்திக் கொட்டையை அரைத்து, தவிடும் புண்ணாக்கும் கலந்து கறவை மாடுகளுக்குத் தீனி தயார் செய்தாள். உடனடியாக வீட்டைப் பெருக்கி மெழுகி முடித்தாள். வாசலையும் தெருத்திண்ணைகளையும் கோலமிட்டு அழகுசெய்து விட்டு முற்றத்தில் குவிந்து கிடந்த பாத்திரங்களைத் துலக்கி முடித்தாள். இவ்வளவையும் சூரியன் உதயமாவதற்குள் செய்து முடித்துவிட்டு காலை ஆகாரம் தயார் செய்ய சமையல் அறைக்குள் புகுந்துவிட்டாள்.

ஆனந்தனுக்கும் அவ்வாறே பல வேலைகள் காத்துக் கிடந்தன. மாடுகளுக்குத் தீனி போட்டு, பால் கறந்து வாடிக்கைக்காரர்களுக்கு வழங்கிவிட்டு, அவசரமாகக் குளித்துவிட்டு, உடுத்திக் கொண்டு டவுனுக்கு சவாரி யொன்றிற்கு அவன் கிளம்ப வேண்டியிருந்தது. ''அருணா, நான் போய்விட்டு வருகிறேன். டவுனிலிருந்து உனக்கு ஏதாச்சும் வாங்கி வரணுமா?'' என்று கேட்டபடி, ஆனந்தன் சாட்டையும் கையுமாகத் தாழ்வாரத்தில் வந்தபோதுதான், அருணா படுக்கையினின்று எழுந்திருந்தாள்.

சூரியன் நன்கு உதயமாகி விட்டிருந்ததனால், முற்றத்தின் மீது சுரீர் என மஞ்சள் வெய்யில் மிகவும் பிரகாசமாக வீசிக்கொண்டிருந்தது. சமையலறையிலிருந்து 'சொய்'' என்று தோசை சுடும் ஓசை கேட்டது.

கல்மீது எண்ணெய் காயும் நறுமணம் காற்றுடன் வீசியதை உணர்ந்த அருணா வெட்கத்துடன் படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்தாள். இரவு வெகுநேரம் தூக்கமின்றிப் பற்பல சிந்தனை

செய்தவண்ணம் படுத்திருந்ததனால் அவள், விடிந்தது கூட தெரியாது தூங்கி விட்டிருந்தாள்.

அண்ணனும் அக்காவும் சுறுசுறுப்பாக ஒரு நிமிஷத்தையும் வீணாக்காது வேலைகள் பல செய்து கொண்டிருக்கையில், சோம்பேறி போல் தான் மட்டும் படுக்கையிலே புரண்டு கொண்டு, சூரியன் உதயமானது கூடத் தெரியாது தூங்கியது அவளுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

''என்னை யாராவது எழுப்பியிருக்கக் கூடாதா? எவ்வளவு நேரம் தூங்கி விட்டிருக்கிறேன்'' என்று கூறிவிட்டு எழுந்து படுக்கையைச் சுருட்டி பெஞ்சின் மீது வைத்தாள். ''பரிக்ஷைக்குப் படித்து மிகவும் களைத்துப் போயிருப்பாய். இங்கேயாவது தூங்கட்டும் என்றுதான் நான் எழுப்பவில்லை'' என்று சிரித்த ஆனந்தன், வெளியே கிளம்பி விட்டான்.

வாயிற் கதவைத் தாளிட வெளிப்பட்ட இந்திராணி ''அருணா! சீக்கிரம் முகம் கழுவி வா, காப்பி, பலகாரம் ஆறிப்போகுது'' என எச்சரிக்கை விடுத்துவிட்டு, சமையலறைக்குள் மீண்டும் புகுந்து கொண்டாள்.

காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டு தோட்டத்திற்கு வந்தாள் அருணா. அண்ணனும் அக்காவும் வேலை செய்யும்போது, சாப்பிட்டுவிட்டு, தேகத்தில் அழுக்குப் படாது அவள் மட்டும் வீட்டைச் சுற்றிவருவது அழகல்ல என்று தோன்றவே, கிணற்றிலிருந்து நீரை இறைத்து மாடுகளுக்கு தண்ணீர் காட்டத் தோட்டத்திலே கட்டிவிட்டிருந்த இரு பெரும் சிமெண்டு தொட்டிகளில் தண்ணீர் நிரப்ப ஆரம்பித்தாள். தொட்டிகள் நிரம்பி வருவதற்குள் தண்ணீர் இறைத்த அருணாவின் கரங்கள் சிவந்து போயின. கடைசிக் குடத்தைக் கிணற்றிலிருந்து இழுப்பதற்குள் அவளுக்கு மூச்சுத் திணறியது. ஆசுவாசப்படுத்திக் கொள்ளும் நிமித்தம் குடத்தை மேடைமீது வைத்துவிட்டு கைப்பிடிச் சுவர் மீது சாய்ந்து கொண்டு திரும்பி நின்றவள், ஒரு கணம் திடுக்கிட்டுப் போய்விட்டாள். இடிந்த சுவர் வழியே அடுத்த வீட்டினின்று சிதம்பரம், அவள் செய்யும் வேலையை வேடிக்கை பார்த்தவனாக நின்று கொண்டிருந்தான.

அருணா துணுக்குற்றதைக் கவனிக்காது அவன், ''உங்கள் வீட்டுக் கிணற்று நீர் குடிப்பதற்கு உபயோகமாகுமல்லவா? எங்கள் கிணற்றில் தழைகள் விழுந்து, நீர் பாழாகிவிட்டிருக்கிறது. அதைச் சுத்தப்படுத்தும்வரை, அம்மா ஆற்றிலிருந்துதான் தண்ணீர் கொண்டு வரவேண்டும் போலிருக்கிறது. அம்மா சிரமப்படாதிருக்க, உங்கள் வீட்டுக் கிணற்றில் கொஞ்சம் குடிக்க மட்டும் இரண்டு நாளைக்குத் தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் என்று நான் சொன்னேன். ஒரு குடம் தண்ணீர் இன்று எங்களுக்குக் கொடுத்து உதவ முடியுமா?'' என்று, தான் அங்கே வந்து நின்றுகொண்டிருக்கும் காரணத்தை விளக்கி விட்டுக் குறுநகை செய்தான் சிதம்பரம்.

''அதற்கென்ன, ஒரு குடம் என்ன, பத்துக் குடம் வேண்டுமானாலும் தாராளமாக எடுத்துக் கொள்ளலாம். அம்மாவுக்கு வீண்சிரமம் இல்லாது இதோ நானே கொண்டு வந்து கொடுக்கிறேன்'' என சட்டென்று பதில் அளித்த அருணா, குடத்தை எடுத்துக்கொண்டு சுவர் அருகே வந்தாள்.

''இவ்வளவு உதவி செய்ய முன் வந்திருக்கும் நீ கொஞ்சம் சிரமத்தைப் பாராது இந்தப் பக்கம் வந்து பின்பக்கத் திண்ணைமீது குடத்தை வைத்துப் போனால் உதவியாக இருக்கும். உன்னை இவ்வாறு வேண்டிக் கொள்வதற்காக என்னை நீ மன்னிக்கவேண்டும்'' என்று சிதம்பரம் கூறியதைக் கேட்டு அருணா, அவனை ஆச்சர்யத்துடன் நிமிர்ந்து பார்த்தாள்! தோட்டத்திலே வேலை செய்து கொண்டிருந்ததுபோல் அவனது கரங்கள் இரண்டும் முழங்கை வரையில் ஈர மண் படிந்து மாசு பட்டிருந்தன.

''அதற்கென்ன, அப்படியே செய்கிறேன்'' என்று பதிலளித்த அருணா, இடிந்த சுவர் மீது ஏறி அப்பால் குதித்து, குடத்தை எடுத்துக்கொண்டு, தோட்டத்தின் வழியே பின் கட்டுத் திண்ணைக்குச் சென்றாள். அது சமயம் உள்ளிருந்து வெளியே வந்த சௌந்தரம்மாள் அவளைக் கண்டதும், ''வாம்மா! நீயேன் எடுத்து வரணும்? என்னைக் கூப்பிட்டால் வந்து வாங்கிக் கொண்டு போகிறேன்'' என்று உபசாரமாகக் கூறிவிட்டு, குடத்தை வாங்கிக்கொண்டாள். இதற்குள் தனது கரங்களைக் கழுவி, சுத்தமாக்கிக் கொண்டு சிதம்பரம்

விரைவாக அங்கு வந்து சேர்ந்தான். காலிக் குடத்துடன் திரும்ப வீட்டிற்குப் போக கிளம்பிய அருணாவை அவன் தடுத்து நிறுத்தினான்.

''அம்மா, தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து உதவிய அருணாவை வெறுங்கையுடனா அனுப்பப் போகிறீங்க?'' என்று உரத்த குரலில் தாயை அழைத்தான். ஒரு தட்டிலே கொஞ்சம் பூந்தியும், முறுக்கும் எடுத்துக் கொண்டு வந்த சௌந்தரம்மாள், ''அப்படிச் செய்வேனா அப்பா'' என்று கேட்டுச் சிரித்தபடி அதைத் திண்ணை மீது வைத்தாள்.

''நேத்திக்கு, பாலைச் சாப்பிடாம ஓடிப் போய் விட்டாய். இன்னிக்காவது இதுகளையெல்லாம் கொஞ்சம் சாப்பிடம்மா! ஏன் நீ வெட்கப்படுகிறாய்?'' உன்னை எங்க வீட்டுப் பொண்ணுபோல நினைச்சுத்தான் நான் உபசாரம் செய்கிறேன்'' என்றாள் சௌந்தரம்மாள் மிகவும் அன்பாக.

அருணாவினால் மறுக்க முடியவில்லை. அருகில் திண்ணை மீது வந்து உட்கார்ந்து கொண்ட சிதம்பரம், ''அருணா, இப்பொழுது எங்கள் தோட்டத்தைப் பார்! நேற்றைக்கும், இன்றைக்கும் எவ்வளவு வித்தியாசப்படுகிறது பார்!'' என்று குதூகலமாக மொழிந்தான். முறுக்கை ஒடித்து வாயில் போட்டுச் சுவைத்தபடி அருணா தோட்டத்தைச் சுற்றிலும் நன்றாகக் கவனித்தாள். மண்டிக் கிடந்த எருக்கஞ் செடிகளையும், கள்ளிப் புதர்களையும் அங்கே காணவில்லை. அவ்வளவும் வெட்டி, தோட்டத்தின் மூலையில் போர் போன்று சேர்க்கப் பெற்றிருந்தது. தரை மீது குவிந்து கிடந்த அனைத்தையும் பெருக்கி, ஒரு மூலையில் பதுக்கப் பட்டிருந்தது. அனாவசியமாகக் கிடந்த ஓடுகள், கற்கள் அனைத்தும் அப்புறப்படுத்தப் பெற்றதனால் தோட்டம் மிகவும் சுத்தமாகக் காட்சியளித்தது.

''தோட்டம் மிகவும் அழகாகிவிட்டதே. இவ்வளவு வேலையும் நீங்கள் ஒருவரா செய்தீர்கள்?'' என்று வியப்புடன் கேட்டாள் அவள்.

''ஆமாம். இவ்வளவையும் நான்தான் காலையில் எழுந்ததிலிருந்து இதற்குள் செய்து முடித்தேன். நாளைக்குள் தோட்டத்தைச் செப்பனிட்டு கொஞ்சம் கீரையும், கத்தரியும் பயிரிடப்

போகிறேன். தோட்டத்து மூலையிலே கற்கள் குவிந்து கிடக்குமிடத்திலே நான்கு பசுக்களுக்கு ஏற்றாப் போல் ஒரு கொட்டில் போடப் போகிறேன்.''

''இந்த ஊரில் நானும் உன் தந்தையைப்போல பால் வியாபாரம் ஆரம்பிக்கலாம் என்று உத்தேசம்'' என்றான் சிதம்பரம்.

''உங்களைப் பார்த்தால் படித்தவர்போல் காண்கிறது'' என்று இழுத்தாற்போல் பதிலளித்த அருணா அவனை வியப்புடன் பார்த்தாள்.

''ஏதோ படித்திருக்கிறேன். இங்கே வருவதற்கு முன்பு விவசாய கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். என் படிப்பு முடிவதற்கு வியாஜ்ஜியம் குறுக்கிடவே பரிசைஷிக்குப்போக முடியா நின்றுவிட்டேன். படிப்புக்கும் செய்யும் தொழிலுக்கும் என்ன சம்பந்தம்? ஏதோ படித்து விட்டேன் என்பதற்காக, நான் பால் வியாபாரம் செய்ய ஆரம்பிக்கக் கூடாதா?'' என்று அவன் சிரித்து கொண்டே கேட்டான்.

''படித்த படிப்பெல்லாம் பாழாக, கிராமத்தில் வந்து ஏன் தொழில் செய்ய வேண்டும்? பரீக்ஷை கொடுத்து பட்டம் பெற்றீர்களானால், எவ்வளவோ பெரிய உத்தியோகத்தில் அமரலாமே. பட்டணங்களில் சுகமாக நிம்மதியாக வசிக்கலாம்'' என்று அருணா பதிலளித்தாள் அழுத்தலாக.

''பால் வியாபாரம் செய்வதும் உத்தியோகம்தானே! இந்த உத்தியோகத்தில் மற்ற வேலைகளைப் போல் பிறருக்குக் கைகட்டி சேவகம் செய்யத் தேவையில்லை. நமக்கு நாமே எஜமானன். கிராமத்திலிருந்து பால் வியாபாரம் செய்வது, பயிரிடாது பாழாக கிடக்கும் என் பாட்டியாரது நிலங்களை உழுது பயிரிட்டு விவசாயம் செய்து வாழ்வது என்று ஆசையுடன் நான் பட்டணத்திலிருந்து இங்கே வந்திருக்கிறேன். கிராமத்திலே பிறந்து, வளர்ந்து இங்கே வாழும் இப்படிப் பேசுவது எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது'' என்றான் சிதம்பரம்.

அதைக் கேட்டதும், அருணா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். அவளது உள்ளத்திலே குமுறிக் கொண்டு வந்த உணர்ச்சிகள்

அனைத்தும் காரசாரமான வார்த்தைகளாக வெளியேறின.

''நீங்கள் சொல்வதுபோல் நான் கிராமத்திலே பிறந்தவள்தான். கிராமத்திலேயே முழுவதும் வளர்ந்தவள் அல்ல. ஆனால் அப்படியிருந்தால் ஒரு சமயம் நீங்கள் எண்ணுவதுபோல் நானும் நினைத்திருப்பேன். கிராமத்திலே பிறந்து வளர்ந்த எனக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டு நகரத்திலே சென்று வசிக்க நேர்ந்தது. அதனால் எனக்கு எவ்வளவு பயன் ஏற்பட்டது என்று நினைக்கிறீர்கள்? என்னால் அங்கே கல்வி கற்க முடிந்தது. மேலும் கிராமத்திற்கும், பட்டணத்திற்கும் உள்ள வித்தியாசங்களை அறிந்து கொண்டேன். கிராமத்தைப்போல், அங்கே ஜனங்கள் வாழும் வகை தெரியாது பட்டினியால் வாடிக்கொண்டு கிடக்கவில்லை. அங்கே மக்கள் எவ்வளவு அழகான பெரிய வீடுகளில் வசிக்கிறார்கள்? கிராமத்தைப் போன்று அங்கே வாகன வசதிகள் ஏதாவது குறைவுண்டா? பஸ்கள், கார்கள், வண்டிகள் என்று எவ்வளவு விதமான வாகனங்கள். இதனால் போக்குவரத்து எவ்வளவு துரிதமாக நடக்கிறது. இரவு பகல் என்று தெரியாது கண்களைப் பறிக்கும் மின்சார விளக்குகள். எந்த பொருளையும் நினைத்தபோதெல்லாம் வாங்கிக் கொள்ள கடைகள். இவ்வளவு வசதிகள் கொண்ட பட்டணத்தை விட்டு, இந்தப் பட்டிக்காட்டில் வசிக்க நீங்கள் வந்திருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது'' என்றாள் மனஸ்தாபத்துடன்.

அவள் பேசி முடிக்கும்வரை அவள் வாயையே பார்த்துக் கொண்டிருந்த சிதம்பரம், முடிவில் கடகடவென நகைத்தான். ''பட்டணத்திலே பிறந்து வளர்ந்து, வாழ்க்கையில் ஒரு பகுதியைக் கழித்துவிட்டிருக்கும் எனக்கு நீ நகரத்தைப் பற்றி எடுத்துச் சொல்வது கேட்க ஆனந்தமாக இருக்கிறது.

''நீ கூறுகிற விதம் நகர வாழ்க்கை எல்லோருக்குமே அமைந்திருந்தால், அதைவிட சுவர்க்கம் என்பது வேறு இல்லை என்பேன். நீ நகரத்தில் பணவசதி பெருகி ஓடும் பிரதேசத்தில் வாழ்ந்து வந்திருக்கிறாய் என்று இதனின்று புலனாகிறது. பல வருஷங்கள் நகரத்திலே வாழ்ந்திருக்கிறாய். நீ, அங்கே ஏழைமையையும் இல்லாமையையும் சந்தித்ததே இல்லையா? ஆச்சர்யம்! இருள் அடைந்து, காற்று வசதி இல்லாமல், தெருக்களில் சாக்கடை ஓடும்

நெருங்கிய சந்துக்களையும், அங்கே தெருப் புழுதியிலே ஆடையின்றி விளையாடித் திரியும் ஏழைக் குழந்தைகளையும் கண்டதில்லை போலிருக்கிறது. இவர்களைவிட இன்னொருவகை ஏழைமையையும் நகரத்திலே நீ விரும்பினால் கண்டிருக்கலாம். வீடு என்று வசிக்க ஒரு சாண் இடம் தமக்கென்று இல்லாமல், ஒரு ஜன சமூகமே, உங்களையொத்த பணக்காரர்களைச் சுமந்து செல்லும் வாகனங்கள் செல்லும் தெருவின் இருமருங்கிலும் உள்ள பாட்டையிலே சோறு சமைத்து, உண்டு உறங்கி வாழ்ந்து மடிகின்ற விஷயமே உனக்குத் தெரியாதுபோல் இருக்கிறது.

''ஏழைமை என்பது பட்டணத்திலே கிடையாது என்று யார் சொன்னார்கள்? அடுத்தமுறை நகரத்திற்கு நீ போகும்போது தயவுசெய்து நான் கூறிய பிரதேசங்களுக்குச் சென்று பார்! பட்டினி கிடந்தாலும் இங்கே மக்கள் காற்றோட்டமாக மரத்தடியிலே கிடந்து உயிரைவிட முடியும்; அங்கே அந்த உரிமைகூடக் கிடையாது. சாக்கடை அருகே நாற்றத்திலே கிடந்து ஈக்களும் கொசுக்களும் மொய்க்கச் சாகவேண்டும்!'' என்றான் மிகவும் கோபமாக.

அருணா இந்த விவாதத்தை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளவில்லை. ''நீங்கள் கூறுகிறபடி ஏழைமை என்பது அங்கேயும் இருக்கலாம். ஆனால் ஜனங்களுக்கு வாழ வசதிகள் உண்டு. ஏழைமையை விரட்டியடித்து வேலை தேடிக்கொள்ளப் பல சந்தர்ப்பங்கள் உண்டு. கிராமத்திலே அதுபோல் உண்டா?'' என்று மிகவும் அழுத்தலாகக் கேட்டாள்.

சிதம்பரம் அதற்கு மெல்ல நகை செய்தான். ''சந்தர்ப்பங்கள் என்பது நாமே உண்டாக்கிக் கொள்கிறவை. கிராமத்திலே அவைகளை உண்டாக்கிக் கொண்டால் வசதி தானே பெருகத் துவங்குகிறது. எங்கே வாழ விரும்பினாலும் மனிதருக்கு முயற்சி என்பது தேவை. அது இல்லாவிடில் பட்டணத்திலும் சரி, கிராமத்திலும் சரி வாழ்க்கை வளமாகத்தான் இருக்காது'' என்றான்.

அருணா அதற்கு பலமாகத் தலையை அசைத்தாள். ''சந்தர்ப்பங்கள் என்பது நாமே செய்து கொள்கிறது என்பதை நான் ஆதரிக்க மாட்டேன். முயற்சியால் மேன்மையடையலாம்

என்பதையும் நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். என் தந்தைக்கு தளராத முயற்சியிருந்தது. ஊக்கம் இருந்தது. வசதிகளும் சந்தர்ப்பங்களும் சரியாக அமையாததனால், அவர் முன்னுக்கு வர முடியவில்லை. ஒன்றுக்கு மேல் ஒன்றாக நஷ்டங்கள் ஏற்பட்டு, எங்கள் குடும்பம் தாங்கொணா வறுமையில் மூழ்கிவிட்டது. என் தந்தை மட்டும் தொடக்கத்திலிருந்து நகரத்திலே வசித்து வந்திருந்தால், நாங்கள் ஏழ்மையில் அவதிப்பட்டிருக்கமாட்டோம்.

''என் தாயார் வைத்திய வசதியில்லாது இறந்து போயிருக்க மாட்டாள். எனக்குத் தாயார் இல்லை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. நான் பிறக்கும் பொழுது உடல் நலிவால், என் தாயார் இறந்து போனார்கள். பட்டணத்திலே இருந்து வைத்திய வசதிகள் கொடுத்திருந்தால் பிழைத்திருப்பார்கள் என்று அடிக்கடி என் பெரியம்மா சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. இந்தக் கிராமம், நாங்கள் வசிக்கும் இந்த வீடு இரண்டும் எனக்குப்பிடிக்கவேயில்லை. இந்தக் கிராமத்தில் என் தகப்பனார் வாழ்க்கையில் தோல்வியைத்தான் கண்டார். இந்த வீட்டில் நாங்கள் என்ன கண்டோம்!

''வறுமையையும் துன்பத்தையும்தான் கண்டோம். இந்தப் பட்டிக்காடு என் தாயை என்னிடமிருந்து அபகரித்துக் கொண்டது. இதை நான் வெறுக்கிறேன். மனமார வெறுக்கிறேன். படித்துப் பட்டம் பெற்ற பின்பு ஒரு பொழுதும் இங்கே வந்து நான் வசிக்கமாட்டேன். இங்கே வாழவும் விரும்பமாட்டேன்'' என்று கூறி முடிப்பதற்குள் அவள் கண்களில் நீர் பொங்கியது. உணர்ச்சிவசத்தில் வார்த்தைகள் தடுமாறின.

சிறிது நேரம் மவுனமாக இருந்த சிதம்பரம், தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேசலுற்றான். ''உங்கள் குடும்பத்திற்கு ஏற்பட்ட பல கஷ்டங்களுக்கும் என் மனமார்ந்த அனுதாபம். ஆனால் உணர்ச்சிகள் அடங்கிய பின்பு, நிதானமான மனநிலையில் யோசித்துப்பார். உங்கள் குடும்பத்து வாழ்க்கையிலே ஏற்பட்ட பல கஷ்டங்களுக்கும், நஷ்டங்களுக்கும், இந்த கிராமமோ வீடோ பொறுப்பாளியா என ஆராய்ந்து பார்'' என்றான்.

அருணா பலமுறை தலையை வேகமாக அசைத்தா ''யோசித்துவிட்டேன். இவைகளைப் பற்றி எண்ணி எண்ணி சமயம் என் மூளை குழம்பிக்கூடப்போய் விட்டது. எங்கள் வாழ்க் அவலமானதற்கும், எங்கள் வாழ்க்கை நிலை இன்னும் உயரா இல்லாமையிலேயே உழன்று கிடப்பதற்கும் இந்தப் பாழாய்ப்போ கிராமம்தான் காரணம். இதை நான் கட்டோடு வெறுக்கிறே இந்திராணியும் ஆனந்தனும் இங்கே இல்லாதிருந்தால் இதை தரி நான் மீண்டும் வந்திருக்கவே மாட்டேன். பட்டணத்தில் பிற வளர்ந்து, கல்வியறிவு பெற்ற உங்கள் புத்தி இப்படியா தடுமா போகவேண்டும்? எதைக் கண்டு நீங்கள் கிராமத்தி வந்திருக்கிறீர்கள்? எதைக் கண்டு இங்கே வாழ விரும்புகிறீர்கள்?

''துயரத்தை அனுபவித்த நான் சொல்கிறேன் கேளுங்கள். இ வீட்டைப் பூட்டிவிட்டு இந்தப் பாழும் கிராமத்தைவிட்டு பட்ட திரும்பிப் போங்கள். உங்களை யொத்தவர்களுக்கு அங்கே வாழப் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. வசதிகள் பல இருக்கின்றன!'' என் படபடவெனக் கூறிவிட்டு எழுந்திருந்தாள்!

காலியான குடத்தைத் தானே சுமந்து கொண்டு பின்னால் இடை சுவர் வரை வந்த சிதம்பரம், அங்கே வந்ததும் குடத்தை அவளிட நீட்டினான். ''என் மீது இவ்வளவு அக்கறை கொண்டு புத் சொன்னதற்கு உனக்கு மிக்க வந்தனம். முன்பின் தெரியாத என்பா உனக்கு இவ்வளவு அக்கறை ஏற்பட்டிருப்பதைக் கா மகிழ்ச்சியடைகிறேன்'' என்றான்.

குடத்தை வாங்கி இடுப்பில் வைத்துக் கொண்ட அரு சிரமப்பட்டுப் புன்னகை செய்தாள். ''உங்கள் தாயாரைக் கண்ட எனக்கு என்னவோ ஒருவகைப் பற்றுதல் ஏற்பட்டுவிட்ட இறந்துபோன என் தாயை உயிருடன் பார்ப்பது போல் ஒரு உண எனக்கு ஏற்பட்டது. இந்தக் கிராமத்தில் காலடி எடுத்து வைக்கும் மு என் தாயார் கண்களில் கண்ணீர் என்பதையே யாரு கண்டதில்லையாம். அவ்வளவு மகிழ்ச்சியுடன் அவள் வாழ் கொண்டிருந்தாள். இங்கே காலடி எடுத்து வைத்ததும் அவள துன்பப் படலம் ஆரம்பித்துவிட்டது. சாவுடன்தான் அவள் அழுவ

ன்றது. என் தாயார் இப்பொழுது உயிருடன் இருந்தால் நான் என்ன ர்க்க ஆசைப்படுவேன்? அவள் சந்தோஷமாக இருப்பதைத்தான் ண விரும்புவேன். உங்கள் தாயாராவது சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பது என் அவா. வீணாக இந்தப் பாழுங் கிணற்றில் வாழ்க்கையை ஆரம்பித்து, அவர்களைத் துன்பமடைய விடாதீர்கள்'' என்றாள் பெருமூச்சுடன்.

பார்வைக்குச் சிறு பெண் போல் தோன்றினாலும், அவள் பேசும் பொழுது குரலில் தொனித்த உணர்ச்சிகளையும், பேச்சில் கவிழ்ந்து நின்ற நயத்தையும், வார்த்தைகளில் ததும்பி நின்ற அறிவையும் கண்டு சிதம்பரம் ஸ்தம்பித்துப் போனான்.

''அருணா! என் தாய்மீது நீ காட்டும் அன்பிற்கு மெத்த வந்தனம்!'' என்று அவன் கூறி முடிப்பதற்குள் அருணா, ''உங்கள் தாயாருக்கு நான் அறியாமையினால் ஒரு தவறு செய்துவிட்டிருக்கிறேன். அதற்கு ஈடு செய்யவேதான் இவ்வாறு புத்தி கூற முன் வந்தேன்'' என்று கூறிவிட்டு, சிதம்பரத்தை வியப்பிலே ஆழ்ந்து போகும்படி செய்துவிட்டு விரைவாக தங்கள் வீட்டிற்குள் சென்று மறைந்தாள்.

19

அன்று பகல் போஜனத்திற்குமேல் இந்திராணி, வீட்டிலிருந்த ந்தைகளையெல்லாம் திரட்டி எடுத்துக் கொண்டு தைக்க உட்கார்ந்து விட்டாள். முற்றத்தில் கட்டியிருந்த பசுங்கன்றிற்கு ஆனந்தன் ஏதோ சிகிச்சை செய்து கொண்டிருந்தான். பொழுதைப் போக்குவதற்குப் படிக்க எடுத்த கதைப் புத்தகத்தைக் கீழே போட்டுவிட்டு அருணா அண்ணன் செய்த வேலையை வேடிக்கை பார்க்கலானாள்.

வைத்தியர் கொடுத்த மருந்தைப் பாத்திரத்தில் இருந்த பாலில் போட்டுக் கலக்கினான் ஆனந்தன். பிறகு அதை ஒரு மூங்கில் குழாயில் நிரப்பிக் கொண்டு, கன்றுக் குட்டியின் தலையைத் தன் கால்களில் இடுக்கிக் கொண்டு, குழந்தைக்குப் பால் புகட்டுவதுபோல், மருந்தைப் புகட்டத் தொடங்கினான்.

வியப்புடன் அவன் செய்த காரியத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அருணாவிற்குச் சிரிப்பு வந்தது. பலவந்தமாக விளக்கெண்ணெயைத் தாயார் புகட்டும்போது வேறுவழியின்றி விழுங்கும் குழந்தைபோல, கன்றுக் குட்டி ஆனந்தனின் பிடியினின்று திமிற முடியாது மருந்துப் பாலை கடக் கடக் கென்ற ஓசையுடன் விழுங்கத் தொடங்கியது.

''அக்கா! இதை வந்து பாருங்க'' என்று இந்திராணி பக்கம் கூவிவிட்டு, முற்றத்தில் இறங்கி அண்ணன் அருகே சென்று அமர்ந்து கொண்டாள், அருணா.

அவசரமாகத் தைத்துக் கொண்டிருந்த இந்திராணி தன் வேலையினின்று நிமிர்ந்து பாராமல், ''இதில் என்ன வேடிக்கை இருக்கிறது! இந்தக் காட்சியை தினசரி கண்டு எனக்கு அலுப்புத்தான் ஏற்படுகிறது. கன்றுக்குட்டிக்கு அப்பா மருந்து போடுவதை நீ சிறு குழந்தையாக இருக்கும்போது பார்த்ததில்லை போல் பேசுகிறாயே?'' என்றாள் சிறிது கோபத்துடன்.

தமக்கையின் வார்த்தைகள் தங்கையின் மனத்தை உறுத்தின. எனினும் அதைப் பாராட்டாமல், ''அப்பா சிகிச்சை செய்வதற்கும் அண்ணன் செய்வதற்கும் வித்தியாசம் அதிகமிருப்பதால் எனக்கு இக்காட்சி புதுமையாகப்பட்டது'' என்று கூறிவிட்டுச் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு தொடர்ந்தாற்போல், ''அண்ணா! உங்களைப் பார்த்தால், இப்பொழுது மிகவும் தேர்ந்த மிருக வைத்தியர்போல் தோன்றுகிறது. அவ்வளவு லாவகமாக நீங்கள் இதற்குச் சிகிச்சை செய்கிறீர்கள்'' என்றாள் வியப்பு மேலோங்கிய மெல்லிய குரலில்.

மருந்தைப் புகட்டி முடித்ததும், கன்றுக் குட்டியின் திகிலைத் தவிர்க்க அதன் முதுகை அன்புடன் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்த ஆனந்தன், தங்கை பக்கம் திரும்பினான். களை பொருந்திய அவன் முகம் திடீரெனச் சாம்பியது. ''வைத்தியக் கலைமீது என்றுமே எனக்கு அபாரமானதொரு மோகம். பணவசதியும், சௌகர்யமும் அமைந்திருந்தால் நான் கட்டாயம் டாக்டருக்குத்தான் படித்திருப்பேன்'' என்று கூறிவிட்டு ஏக்கத்துடன் பெருமூச்செறிந்தான்.

விளையாட்டாகக் கூறிய தன் வார்த்தைகள், தன் அண்ணன் மனதிலே புதைந்து கிடந்த நிறைவேறாத இளமைப் பருவத்துக் கனவு ஒன்றை நினைவுக்குக் கொண்டு வந்துவிட்டதை உணர்ந்த அருணா, தன் நாவைக் கடித்துக் கொண்டாள். ஆனந்தனின் மன ஏக்கம் அவள் உள்ளத்தை வருத்தியது. ''அதனால் என்ன அண்ணா? நீங்கள் ஆசைப்பட்டால் இப்பொழுதுகூட டாக்டருக்குப் படிக்க முடியாதா என்ன?'' என்று ஆறுதலாகக் கேட்டாள்.

கரங்களைக் கழுவிக் கொண்டு, மேல் துண்டினால் முகத்தில் வடிந்த வியர்வையை ஆனந்தன் துடைத்துக் கொண்டான். ''ஆன வயதெல்லாம் போய் இனி நான் எப்பொழுது படிக்க ஆரம்பிப்பது? எப்பொழுது டாக்டராக பட்டம் பெறுவது? மேலும், படிப்பதற்கு அந்தக் காலத்திலே இல்லாத வசதிகள் இப்பொழுது மட்டும் நம் குடும்பத்திலே அப்படிப் புதிதாக திடீரென்று தோன்றிவிட்டனவா என்ன!'' என்று கேட்டான்.

அருணா துயரத்துடன் மௌனமானாள். அவர்கள் குடும்பத்தின் பொருளாதார நிலை இன்னமும் பழைய நிலையிலேதான் இருந்தது. முந்தைய நாட்கள்போல் தரித்திரம் அந்த வீட்டில் தலைவிரித்து ஆடவில்லை என்றாலும், கல்வி கற்க வசதிகள் ஒன்றும் பெருகி ஓடிவிடவில்லை. இந்த உண்மை அவளுக்கு மெத்தவும் கசப்பாக இருந்தது. என்ன பதில் கொடுப்பது என்றே விளங்காமல் அவள் அண்ணனைப் பார்த்து அசட்டுப் புன்னகை புரிந்தாள்.

''ஆனாலும் அருணா, என் ஆசை நிறைவேறாத இலக்ஷியமாகப் போய்விடப் போவதில்லை. நாங்கள் படிக்காத குறையை நிவர்த்திக்க நீ படிக்க ஆரம்பித்திருக்கிறாய். நான் கற்க ஆசைப்பட்ட வைத்தியக் கல்வியை நீ கற்று முடித்துவிடப்போகிறாய். படித்து நீ விரைவில் டாக்டர் பட்டம் பெற்று விட்டாயானால், இந்த உலகில் என்னைவிட ஆனந்தமடையப் போகிறவர்கள் யாரும் இருக்க முடியாதென்பது நிச்சயம். என் குட்டித் தங்கை அருணா, கனவை நினைவாக்குவாள் என்ற இந்த நம்பிக்கை எனக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது தெரியுமா?'' என்று அவன் மிகவும் அன்பாகப் பேசினான். அருணாவுக்கு உணர்ச்சிவசத்தில் கண்களில் நீர் பெருகியது. இன்பமும் துன்பமும் நெஞ்சைப் பிளந்தன.

''அண்ணா! இதுவரையில் நான் என் வருங்காலத்தை பற்றி ஒரு நாளும் சிந்தித்துப் பார்த்ததேயில்லை. இந்தப் பரீக்ஷைக்கு மேலே என்ன செய்வது என்ற யோசனையின்றி முட்டாளாக இருந்துவிட்டேன். அப்படியே செய்கிறேன் அண்ணா! உங்கள் மன விருப்பப்படி நான் டாக்டருக்குப் படிக்க முயற்சிக்கிறேன்'' என்றான் தழுதழுத்த குரலில்.

அதுவரை மௌனமாக தைத்துக் கொண்டிருந்த இந்திராணி, தன் கை வேலையைக் கீழே போட்டுவிட்டு எழுந்திருந்தாள். ''அண்ணன் டாக்டருக்குப் படிக்க ஆசைப்பட்டார். அவரது ஆசையை நிறைவேற்ற நீ ஒத்துக் கொண்டிருக்கிறாய். அண்ணனைப் போலவே என் மனமும் நீண்ட நாளாக ஒரு கனவைக் கண்டு கொண்டிருக்கிறது. அதையும் நீ நிறைவேற்றி வைப்பாயா?'' என்று கேட்டாள்.

அருணா பதில் பேச விளங்காது விழிப்பதைக் கண்ட இந்திராணி வறட்சியாக நகைத்தாள். ''அண்ணன் கொண்ட ஆசைபோல் என்னுடைய கனவும் ஈடேறாத ஒரு ஆவல்தான். ஆனால், ஒரு சமயம் உன் வாழ்க்கையிலே அது நடக்கக்கூடும். என் ஆசை நிறைவேற வேண்டிய குணாதிசயங்கள் என்னிடம் தற்சமயம் இல்லை. இந்த நிலையில் நான் பணக்கார, அழகான இளம் வாலிபனுக்கு வாழ்க்கைப்பட ஆசைப்பட்டால் சாத்தியப்படுமா சொல்?'' என்று கேலியாகப் பேசுவது போல் கூறிவிட்டு நகைத்தாள்.

இந்திராணி பரிகாசமாகப் பேசவில்லை. உண்மையிலேயே அவள் இருதயத்திலே குமுறிக் கொண்டிருந்த இளமைப் பருவத்தின் கனவுகளில் ஒன்று அவ்வாறு வெளிப்பட்டது என்பதை உணர்ந்து கொண்ட தங்கை, மன வெழுச்சியடைந்தவளாக, ''உங்கள் ஆசை நிறைவேற முடியாத லக்ஷியமா என்ன? உங்களுக்கு என்ன இல்லை? அழகில்லையா, புத்திசாலித்தனம் இல்லையா?'' என்றாள்.

''இந்திராணியின் அழகு ஒன்றிற்கே,' எவ்வளவோ பெரிய இடங்களிலிருந்து வரன்கள் வரக்கூடும். இனிமேல் நான் படிப்பது என்பது வேண்டுமானால் நடக்கக்கூடாத விஷயம். இந்திராணிக்கு பணக்காரக் கணவன் கிடைப்பது நடக்க முடியாத விஷயமா?

எத்தனையோ பெரிய இடங்களில் ஏழை வீட்டுப் பெண்களை சம்பந்தம் செய்து கொள்கிறார்கள்'' என்று ஆனந்தன் பேசினான்.

''ஆமாம் அண்ணா! நீங்கள் சொல்வதுபோல் சம்பவங்கள் நடக்கின்றன. ஆனால் அது வாழ்க்கையில் அல்ல. சினிமாவிலும், கதையிலும் நடக்கின்றன. என்னை விட அனுபவத்திலும் வயதிலும் மூத்தவராக இருந்தும், நீங்கள் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. உதாரணமாக அயலூர் கிராமத்துப் பெரிய பண்ணை மாரப்பக் கவுண்டர் நமக்கு ஒரு விதத்தில் உறவுக்காரர்தானே! அவர்கள் மகனுக்கு நம் வீட்டில் பெண் எடுக்க வாயைத் திறப்பாரா என்ன?'' என்று மிடுக்காகக் கேட்டாள்.

''கேட்கமாட்டார் என்று எப்படிச் சொல்ல முடியும்?'' என்று விவாதித்தான் ஆனந்தன், அவர்களை விட்டுக்கொடுக்காமல்.

''கேட்க மாட்டார்! அவர் வீட்டிலே சம்பந்தம் செய்து கொள்ள உங்களுக்கு என்ன அந்தஸ்து இருக்கிறது? பெரிய மாடி வீடு இருக்கிறதா, கார் இருக்கிறதா, பாங்கியில் பணம் இருக்கிறதா, ஏக்கர் ஏக்கராகப் பூமி இருக்கிறதா?'' என்று இகழ்ச்சியாகக் கேட்டாள் இந்திராணி.

''நீங்கள் கூறும் பொருள்கள் ஒன்றும் தற்சமயம் இல்லை. ஆனால் அவ்வகைகளைவிட மிகவும் மேலான, அழிக்க முடியாத விலை மதிப்பற்ற பண்பு நம்மிடம் இருக்கிறது'' என்று உற்சாகமாகப் பேசினாள் அருணா.

''உன்னைப்போல் நான் படித்தவள் இல்லை. என்றாலும் எனக்கு உன்னைவிடச் சில உண்மைகள் தெரியும். உங்கள் வீட்டுப் பண்பு இங்கே யாருக்கு வேண்டும்? பணமில்லாவிட்டால் உங்கள் வீட்டுப் பண்பிற்கு மதிப்புக் கொடுப்பவர் யாரும் கிடையாது என்பதை நீ இனியாவது தெரிந்து கொள்'' என்று சிரித்துவிட்டு உள்ளே சென்று விட்டாள் இந்திராணி.

அருணாவும் ஆனந்தனும் அவள் சென்றபின் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். என்ன பேசுவது என்றே புரியாததனால், ஆனந்தன், ''சரி, எனக்கு வெளியே வேலைகள் இருக்கின்றன. கவனிக்க வேண்டும், விவாதிக்கப் பொழுதில்லை'' என்று முணுமுணுத்துவிட்டு, தோட்டத்துப்பக்கம் சென்று விட்டான்.

கதைப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு தாழ்வாரத்தில் படிக்க உட்கார்ந்தாள் அருணா. தமக்கை கூறிய யாவும் சிந்தனையிலே சுழன்று கொண்டிருந்ததனால் அவளால் கதையை ஊன்றிப் படிக்கவே முடியவில்லை. அவள் மனத்திலே திடீரென்று பலவிதமான துயரம் நிறைந்த எண்ணங்கள் வந்து கவிழ்ந்து கொண்டன. உண்மையிலேயே உலகிலே பணம் அவ்வளவு முக்கியமானதா? குணத்திற்கும் மற்ற ஏனைய குண விசேஷங்களுக்கும் அதற்கு முன்பு மதிப்பில்லையா?

''பழனியப்பக் கவுண்டர் எவ்வளவு பெரிய பணக்காரர்! அப்படியிருந்தும் கொஞ்சமும் டாம்பீகமோ ஆடம்பரமோ இன்றி எவ்வளவு எளிமையாகக் காணப்படுகிறார். லோகநாயகி அம்மாள் மட்டும் என்ன? பணம் உள்ள பெருமையை என்றாவது வார்த்தைகளால் தெரிவித்தது உண்டோ? அந்தஸ்தில் சிறிதும் ஒற்றுமை இல்லாத போதும், அந்த தம்பதிகள் அருணாவிடம் அன்பு பாராட்டவில்லையா?' என்று தனக்குள்ளே மிகவும் சிந்தித்துக் கொண்டிருந்த அருணா, திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவள் போல் கதைப் புத்தகத்தைக் கீழே போட்டுவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். இதுவரை மறந்துவிட்டிருந்த அந்தச் சம்பவம் நினைவுக்கு வரவே, அவள் இதயம் உணர்ச்சிக் கொந்தளிப்பில் படபடவென அடித்துக் கொண்டது.

'மனோன்மணி அன்று என்ன சொன்னாள்? இனிமேல் சுரேஷ் குமாரனிடம் நெருங்கிப் பழகுவது கூடாது என்றல்லவா கூறினாள்? சுரேஷ்குமாரன் மீது நான் அன்பு பாராட்டக் கூடாதாம்? ஏன்! ஏன்?' என்று இவ்வாறு அவளது சிந்தனை ஓடியது. 'படித்திருந்தும் மனோன்மணிக்குக் குறுகிய மனப்பான்மை அதிகம். ஏதேதோ பேசி விட்டாள். சுரேஷ்குமாரன் அவளைப்போல் நினைப்பவன் அல்ல. நளினியும் அப்படிப்பட்ட நினைவு கொண்டவள் அல்ல. சிநேகிதத்திற்கும், அந்தஸ்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என இருவரும் நினைப்பவர்கள். சுரேஷ் குமாரன் சிறுவயதிலேயே மனோன்மணியின் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளமாட்டான். வளர்ந்து வாலிபனாகி விட்டான். பெரிய பரீக்ஷைக்குப் படிக்கிறான். அவனது தன்னம்பிக்கை முன்னைவிட இன்னும் அதிகமாகவல்லவா வளர்ந்து விட்டிருக்கும்? மனோன்மணி பேச்சைக் கேட்டு சிறுவயதிலேயே பழகிய சிநேகிதர்களின் நட்பை அவன் ஒருக்காலும்

உதறிவிடமாட்டான்' என்று தனக்குள்ளே சமாதானம் செய்து கொண்டாள்.

இரவு போஜனத்திற்குப் பிறகு தாழ்வாரத்தில் கொண்டு வந்து தன் படுக்கையை விரித்துக் கொள்ள, ஜமுக்காளத்தை எடுத்து உதறினாள் அருணா. கசங்கியது போல் காணப்பட்ட சிறு காகித மடிப்பு, எங்கிருந்தோ தொப்பெனத் தரையில் விழுந்தது. எடுத்து மாடத்திலிருந்த விளக்கருகில் சென்று அதைப் பிரித்துப் படித்தாள்.

அன்புமிக்க இந்திராணி,

இரண்டு வருஷ காலம் உன்னைப் பிரிந்து இருக்க வேண்டுமென்ற நினைப்பு என் மனத்தை சித்ரவதை செய்கிறது. உன்னைக் கண்களால் காண முடியாவிட்டாலும் இந்த இரண்டு வருஷமும் என் உள்ளத்திலே சதா உன் நினைவு இருந்து கொண்டே இருக்கும் என்பது நிச்சயம். படிப்பு முடிந்து அயல்நாட்டினின்று நான் வரும்வரை எனக்காக நீ காத்திருப்பாய் எனப் பூரணமாக நம்புகிறேன். முன்பே வாக்கு கொடுத்திருப்பது போல், எண்ணத்தினால் கூட உனக்கு நான் துரோகம் செய்யமாட்டேன் என்பதை மீண்டும் இங்கே வற்புறுத்தி எழுதுகிறேன். அன்பே! துயரப்படாதே, இரண்டு வருஷமும் இரண்டு நொடியில் சென்றுவிடும். விரைவாக திரும்பி வந்து விடுவேன். தற்சமயம் பணம் நம்மைப் பிரிக்க முயற்சித்தாலும், நான் திரும்பி வந்ததும் அதனுடைய ஆதிக்கம் குறைந்துவிடும். பணமோ, அந்தஸ்தோ, வேறு எந்த சக்தியோ நம்மை இனிமேல் பிரிக்க முடியாது.

உன் அன்பன்,
''சேகர்''

கடிதத்தைப் படித்து முடிப்பதற்குள், வாயிற் கதவை யாரோ பலமாகத் தட்டும் ஓசை கேட்கவே, அவசரமாக மடித்து இடுப்பில் செருகிக் கொண்டு ஓடிச் சென்று கதவைத் திறந்தாள், அருணா. சந்தையினின்று சாமான் மூட்டைகள் சகிதம் உள்ளே நுழைந்த தந்தையைக் கண்டதும் அவள் உடல் பயத்திலே வெடவெடவென்று நடுங்கியது. ஏதோ குற்றம் செய்துவிட்டவள் போல் அவள் திருதிருவென விழித்தாள் கலவரத்துடன்.

20

மூட்டைகளை இறக்கி ரேழியில் வைத்த சதாசிவம், ''வண்டியில் பிண்ணாக்குக் கூடை இருக்கு. போய் எடுத்து வா. மலைச்சுப் போய் நிக்கிறியே?'' என்று அதட்டியபோது தான் அருணாவிற்கு தன் உணர்வு வந்தது. சட்டென்று தந்தையின் கட்டளைக்குப் பணிய வாயிலுக்குச் சென்றாள். வண்டியை அருகிலிருந்த சந்தில் வழக்கம் போல் கொண்டு தள்ளி வைத்து விட்டு, கொட்டிலில் மாட்டைக் கட்டினான் ஆனந்தன். போரிலிருந்த வைக்கோலை கொஞ்சம் அள்ளி, கொட்டிலில் வீசிவிட்டு உள்ளே வந்தான். இந்திராணி அவசரமாகப் பரிமாறிய உணவை வேண்டா வெறுப்பாகச் சாப்பிட்டு முடித்த சதாசிவம் கை கழுவிக் கொண்டு வெற்றிலைப் பெட்டியுடன் முற்றத்துக் கயிற்றுக் கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டான். யாரிடமும் ஏதும் பேச முற்படாது அவன் மௌனமாக இருந்ததைக் கண்ணுற்ற ஆனந்தனுக்குத் தந்தை ஏதோ காரணத்தினால் மிகவும் கோபமாக இருக்கிறார் என்பது நொடியில் விளங்கிவிட்டது.

வெற்றிலைப் பெட்டியிலிருந்து கை அளவு பாக்கை அள்ளி வாயில் போட்டுக் கொண்ட சதாசிவம் திடீரென்று மகன் பக்கம் திரும்பி, ''வரவர நிலைமை கெட்டுக் கிடக்கிறது. மோசம் மோசம்!'' என்று உரத்த குரலில் கோபத்துடன் கூறினான்.

பிண்ணாக்குக் கூடையை, புழக்கடைத் தாழ்வாரத்தில் கொண்டு பத்திரப்படுத்திவிட்டு கூடத்திற்கு வந்த அருணா, இருவில் தூண்மீது சாய்ந்து கொண்டு நின்ற தன் அக்காவுக்கு அருகே வந்து நின்று கொண்டிருந்தாள்.

''வரவர யாரையும் நம்ப முடியவில்லை. இப்படியெல்லாம் நடக்குமென்று தெரிந்திருந்தால்...'' என்று கூறி முடிக்காது கோபத்துடன் பற்களை நறநறவென்று கடித்தான் சதாசிவம். திகிலில் அருணாவின் நெஞ்சு உலர்ந்து போயிற்று. நெற்றிமீது ஆறாக வழிந்த வியர்வையை முந்தானையால் துடைத்துக் கொண்டு, அருகிலிருந்த

தூணை ஆதரவாகப் பிடித்துக் கொண்டாள். மூச்சுவிடவும் பயந்தவளாகத் தந்தை மேலே என்ன சொல்லப் போகிறார் என்று ஆவலில் துடித்துக் கொண்டு நின்றாள்.

''கருப்பண்ணன் என்னிடம் இத்தனை வருஷமாக எவ்வளவு பணம் வாங்கித் தின்றிருக்கிறான்? நன்றி கெட்ட கழுதை. நேற்று சந்தையில் அவன் என்னைப் பார்த்துக் கொஞ்சமும் மதிக்காமே ஒரு தினுசா நடந்து கொண்டான். முதலில் எனக்கு அவன் நடத்தை புரியவில்லை. பிறகு மெதுவாக விஷயத்தை விசாரித்ததில், அவன் நமக்கு எதிராகக் காரியம் செய்யக் கிளம்பியிருக்கிறான்னு தெரிஞ்சுது'' என்று கூறிவிட்டு வெற்றிலைப் பெட்டியைக் கோபத்துடன் தடார் என்று மூடினான் சதாசிவம்.

''அப்படியா?'' என்று ஹீனஸ்வரத்தில் ஆனந்தன் பதிலுக்கு முனகியது தந்தையின் கோபத்திற்கு தூபம் போட்டதுபோல் இருந்தது.

''அப்படியான்னு மெல்லக் கேக்கிறியே? அந்தக் கருப்பண்ணன் நம்ப பிழைப்புக்கே மண்ணைப் போடக் கிளம்பியிருக்கிறான். பட்டணத்திலிருந்து, அடுத்த வீட்டுக் கிழவி அன்னம்மா பேரன் எவனோ ஒருத்தன் வரப்போகிறானாம். அவனுடன் கூட்டாகச் சேர்ந்து கருப்பண்ணன் பால் பண்ணை வைத்து நமக்கு எதிராகப் போட்டி வியாபாரம் நடத்தப் போகிறானாம். அதற்காக நேரில் நல்ல பசுக்களாகப் பார்த்து வாங்க சந்தைக்கு வந்திருந்தான். நேற்று வரை, என் கிட்ட பால் வாங்கி, வெளியூரில் விற்றுப் பிழைத்த அல்ப பயல் இவன். என்னை எதிர்த்துப் போட்டி போடப் போகிறானாம்! எவ்வளவு பணம் என்னிடமிருந்து தின்றிருக்கிறான்? கொஞ்சமாவது நன்றியிருந்தால் இந்த அடாத காரியத்தைச் செய்ய முன் வருவானா?

''போன வருஷம் காயலாவிலே கிடந்தபோது இந்த கருப்பண்ணனுக்கு ஒரு மாசம் முன் பணம் வாங்காமலேயே, நம்பிக்கையின் பேரிலே வாடிக்கையாகப் பால் ஊற்றினேன். அதையெல்லாம் நினைத்துப் பார்த்தானா? ஏதோ ரெண்டு காசை அந்தப் பட்டணத்துப் பையனிடம் கண்டதும், நமக்கு எதிரியாகப் புறப்பட்டுட்டான். அதற்குத்தான் சொன்னேன். யாரை நம்புறதுன்னே தெரியாமல் உலகம் வரவரக் கெட்டுக்

கிடக்குதுன்னு'' என்று படபடவென்று பேசினான்.

ஆனந்தன், தலையைச் சொறிந்து கொண்டான். சட்டைப் பித்தானை ஒரு முறை திருகிவிட்டு, லேசாக இருமிக் கொண்டான். தந்தை கோபமாக இருக்கையில் அவரிடம் பேச, இத்தகைய சேஷ்டைகளை மேற்கொண்டால்தான் அவனுக்கு துணிச்சல் ஏற்படுவது வழக்கம்.

''அடுத்த வீட்டு அன்னம்மா பாட்டியின் பேரன் நீங்கள் சந்தைக்குப் புறப்பட்ட பின்னாடியே இங்கே குடி வந்து விட்டானே! காலையிலே தோட்டத்தைப் பெருக்கி, சுத்தப்படுத்திக் கொண்டிருப்பதைக் கூடப் பார்த்தேன்'' என்று முடிவில் துணிவாகச் சொன்னான்.

''வந்து விட்டானா? வந்த வேகத்திலே எல்லாம் முசுவாக நடக்கிறது என்று சொல்லு. அப்படியா சங்கதி. சரி, நாளைக் காலையிலே முதலில் ரெண்டு ஆளைக் கூட்டி வந்து இடிஞ்சு கிடக்கிற இடைச் சுவரை எழுப்பிவிட்டு மறு வேலை பார். பட்டணத்திலிருந்து வந்த பயல் எப்படிப் பட்டவனோ! காலம் முன்போல் இல்லை. நம்ப வீட்டில், வயது வந்த பெண் குழந்தைகள் இருக்கிறாங்க. நாம்தான் துஷ்டர்களைக் கண்டால் விலகிப் போக வேணும்'' என்று முணுமுணுத்து விட்டு சதாசிவம், கூடத்திற்குச் சென்றான். பரணில் செருகி வைக்கப் பெற்றிருந்த பாயை இழுத்து எடுத்துக் கொண்டு வாயில் திண்ணைக்குத் தூங்கச் சென்று விட்டான்.

''அப்படியே செய்கிறேன்'' என்று பதிலளித்த ஆனந்தன், தன்னுடைய படுக்கையைத் தூக்கிக் கொண்டு தந்தையின் பின்னால் வாயிலுக்குப் படுக்கக் கிளம்பினான்.

தந்தையும், தனயனும், திண்ணையில் பாயை விரித்துக் கொண்டு படுத்ததும் கதவை தாளிட்டுக் கொண்டு இந்திராணி உள்ளே வந்தாள். ''அப்பாவுக்குக் கோபம் ஏற்படணும்னு ஏதாச்சும் வந்து தொல்லை கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. இந்த அன்னம்மா பேரன் சும்மா பட்டணத்திலே கிடந்து தொலைக்கக் கூடாதா! இவன் எதற்கு நம்ப வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளப் புறப்பட்டு வந்தான்? இனிமேலே சதா அப்பா அடுத்த வீட்டு குற்றப் பத்திரிகை

[illegible]க்கவண்ணமா இருப்பார்'' என்று அலுத்துக் கொண்ட வண்ணம், ஜமுக்காளத்தை விரிச்சு உதறிக் கொண்டிருந்தாள்.

அவளுக்குப் பதில் ஏதும் கூறாது அருணா தன் படுக்கைமீது வந்து உட்கார்ந்தாள். தந்தையின் கோபத்தைப் பற்றி பலவாறு விபரீதமாகத் தானும் கற்பனை செய்து கலங்கிப் போயிருந்த அவளுக்கு, அவர் கோபத்தின் உண்மைக் காரணம் தெரிந்ததும் மிகவும் ஆறுதல் ஏற்பட்டது.

ஆனால் அதற்குப் பதில் அவள் உள்ளத்தை விவரிக்க இயலாத ஒரு வருத்தம் வியாபித்துக் கொண்டது. பார்த்திராத முன்பே துவேஷம் பாராட்டத் தலைப்பட்ட தந்தை அடுத்த வீட்டவர்களுடன் எத்தகைய உறவும் கொண்டாட சிறிதும் விரும்ப மாட்டார். விரோதத்தை நிலை நாட்டுவது போல் இடைச் சுவரும் எழும்பிவிடப் போகிறது. சிதம்பரத்துடன் ஆரம்பித்த நட்பிற்கு இனி முற்றுப்புள்ளி வைப்பதை விட வேறு வழியில்லை. திடீரென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு, பேசாது மௌனம் சாதித்தால், அடுத்த வீட்டு சௌந்தரம்மாள் அருணாவைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வாள்? 'படித்தும், மரியாதையில்லாத மூட ஜன்மம்' என்றல்லவா இழிவாக எண்ணிக் கொள்வாள்!

இந்தச் சிந்தனை, அருணாவிற்கு மெத்த துயரத்தைக் கொடுக்கவே அவள், படுக்கைமீது சாய்ந்து கொண்டு கண்களை இறுக மூடியபடி தூங்க முயற்சித்தாள். எவ்வளவு நேரம் தன்னை மறந்து பற்பல சிந்தனைகளில் ஈடுபட்டிருந்தாளோ, தெரியாது. யாரோ பெருமூச்சு விடும் சப்தம் கேட்கவே, திடுக்கிட்டு விழித்துக் கொண்டு படுக்கையினின்று துள்ளி எழுந்து உட்கார்ந்து கொண்டாள். விடி விளக்கைக் கையில் பிடித்துக் கொண்டு நின்ற இந்திராணி, முற்றத்தில் தரையில் ஏதோ தேடிக் கொண்டிருந்தாள்.

''என்ன அக்கா?'' என்று பின்னிருந்து எழுந்த தங்கையின் குரலைக் கேட்டு அவள், அசந்து போய்விட்டாள். ''ஒன்றுமில்லை'' என்று குழறியபடி பதிலளித்த சகோதரியின் முகத்தை விளக்கு வெளிச்சத்தில் உற்று நோக்கிய அருணாவிற்கு, மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இந்திராணியின் அழகிய முகம், பீதியில் வெளிறடைந்து விட்டிருந்தது. கயல்களைப் போல் சுழலும் அவளது இரு கண்களிலும்

மிரட்சி குடி கொண்டிருந்தது. "என்ன தேடுகிறீர்கள்?" என்று வினவிய அருணா, எழுந்து முற்றத்திற்கு வந்தாள். "ஒன்றுமில்லை" என்று பதிலுக்கு முனகிய தமக்கை தன் கண்களில் பொங்கி எழுந்த கண்ணீரைச் சிரமப்பட்டு அடக்கிக் கொள்வதைக் குறிப்பாகக் கண்டு கொண்ட அருணாவுக்குச் சட்டென்று விஷயம் விளங்கி விட்டது.

"அக்கா, நீங்க இதைத்தானே தேடுகிறீங்க?" என்று கேட்டுக்கொண்டே இடையில் செருகி வைத்திருந்த கசங்கிப்போன அக்கடிதத்தை எடுத்து நீட்டினாள். பதட்டத்துடன் தங்கையின் கரத்தினின்று அதை அவசரமாக எடுத்துக் கொண்ட இந்திராணியின் முகம் பயத்தில் இன்னும் அதிகம் வெளுத்துப் போயிற்று. "உனக்கு இது எப்படிக் கிடைத்தது?" என்று அவள் நடுங்கிய குரலில் மெல்ல வினவினாள்.

"என் தலைகாணி உறைக்குள் கிடந்தது. படுக்கையை உதறும்போது கீழே விழவே, எடுத்துப் பிரித்துப் பார்த்தேன்!" என்று உண்மையை மறைக்காது ஒப்புக் கொண்டாள் அருணா.

"அப்படியானால் இதை நீ முழுவதும் படித்தாய் இல்லையா?" என்று கேட்ட இந்திராணியின் குரல் ஒரு விம்மலில் முடிந்தது.

"என்னவாக இருக்குமென்ற ஆவலில் பிரித்துப் படித்து விட்டேன். இதைப்பற்றி உங்களிடம் பேசுமுன், அப்பா வந்து விட்டார்!" என்றாள் அருணா மிகவும் வருத்தத்துடன்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு இந்திராணி, விளக்கை சுவரின் ஆணியில் மாட்டிவிட்டு தாழ்வாரத்திற்கு வந்தாள். சிறிது நேரம் குழப்பத்தில் மௌனமாக இருந்து விட்டுப் பிறகு, மெல்லிய குரலில் "அருணா! இப்பொழுது நீ என்ன செய்யப் போகிறாய்? அப்பாவிடமோ அண்ணாவிடமோ சொல்லிவிடப் போகிறாய் இல்லையா? உண்மையைச் சொல்!" என்று கேட்டாள்.

இருளில் நின்று கொண்டிருந்த சகோதரியின் முகம் இப்பொழுது அருணாவுக்குத் தெரியவில்லை. எனினும் அவள் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தாள் என்பதை அவளது தழுதழுத்த குரல் அறிவித்தது. "என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை அக்கா. எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. பயமாகவும் இருக்கிறது" என்று பதிலளித்த அருணாவுக்கு அழுகையே வந்துவிடும் போல் மிகவும் துக்கம் ஏற்பட்டது.

"நீ சிறு குழந்தை, வயதில் என்னைவிட இளையவள். உன்னிடம் இதைச் சொன்னால்தான் என்ன விளங்கப் போகிறது! கடிதத்தைப் படித்து அரைகுறையாகத் தெரிந்து கொண்டிருக்கிறாய். முழுவதும் தெரிந்து கொண்டால் எனக்கு உதவி செய்யலாமோ, என்னமோ என்ற ஆசையால் ஒரு வருஷமாக என் உள்ளத்தில் புதைத்து வைத்திருக்கும் ரகசியத்தைச் சொல்லிவிடுகிறேன்.

"அயலூர் பண்ணையார் மகன் சோமசேகரும் நானும் ஒருவரையொருவர் காதலிக்கிறோம். பி.ஏ.பரீக்ஷை கொடுத்துவிட்டு, பண்ணையார் மகன் போன வருஷம் லீவுக்கு கிராமத்திற்கு வந்திருந்த சமயம் யதேச்சையாக என்னை முதல் முதலாக ஆற்றங்கரையிலே சந்தித்தார். பிறகு நான் நீர் எடுக்கப்போன ஒவ்வொரு சமயமும், அவரும் ஆற்றுக்கு வரத் துவங்கினார். எப்படி ஏற்பட்டது என்னவிதமாக ஏற்பட்டது என்றெல்லாம் என்னால் விவரிக்க முடியாது. பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் அன்பு கொண்டிருப்பதை, வார்த்தைகளாலும், கடிதங்களாலும் தெரிவித்துக் கொண்டோம்."

அருணா பதிலளிக்காது பெருமூச்செறியவே, இந்திராணி தொடர்ந்தாற்போல் பேசலுற்றாள். "அருணா! காதல் என்பது எத்தகைய ஒரு உணர்ச்சி என்பதை உனக்கு இந்தச் சமயம் நான் எவ்வளவு எடுத்துக் கூறினாலும் விளங்காது. ஆனால் இப்பொழுது இல்லாவிட்டால் பின்னொரு சமயம் நீ அறிந்து கொள்வாய். சோமசேகர் தற்சமயம் இங்கே இல்லை. மேற்படிப்பிற்காக சீமைக்குச் சென்றிருக்கிறார். திரும்பி வந்ததும் என்னை விரைவில் திருமணம் செய்து கொள்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறார்!" என்றாள் உணர்ச்சியால் தடைப்பட்ட குரலில்.

அருணாவுக்கு இதையெல்லாம் கேட்க கலவரம் மிகவும் அதிகரித்தது. "இந்த விஷயம் அப்பாவுக்கோ, அண்ணனுக்கோ, பண்ணையாருக்கோ ஒருவருக்குமே தெரியாதா?" என்று கலக்கத்துடன் கேட்டாள்.

"ஒருவருக்கும் தெரியாது. பண்ணையாருக்குத் தெரிந்தால், கடுங்கோபம் கொள்வார். தமது மகன் ஏழைப்பெண் ஒருத்தியை மணந்து கொள்ள அவர் ஒருக்காலும் சம்மதிக்கவே மாட்டார்.

அப்பாவுக்கு விஷயம் தெரிந்தாலோ அவ்வளவுதான். பிறகு என்னை உயிருடன் விட்டு வைக்கமாட்டார்'' என்றாள் இந்திராணி.

''அப்படியானால் அக்கா, வந்து...'' என்று அருணா தடுமாறி முடிப்பதற்குள் குறுக்கிட்ட இந்திராணி, ''சோமசேகர் திரும்பி வந்ததும், தனது தந்தை விரும்பினாலும் விரும்பா விட்டாலும் என்னைத்தான் மணந்து கொள்ளப் போகிறார். பண்ணையார் மிகவும் கோபமடைந்தால் ஒரு சமயம் தனது ஆஸ்திகளை மகனுக்கு விட்டு வைக்காது, கோயிலுக்கோ, பொது தர்மத்திற்கோ அர்ப்பணம் செய்து விடலாம். அதைப்பற்றி எங்களுக்கு அக்கறையில்லை. சோமசேக மேற்படிப்புக்குப் பிறகு திரும்பிவந்ததும், நல்ல உத்தியோகத்தி அமர்வார். பணம் அதிகம் இல்லாவிட்டாலும், நானும் அவரும் ஆனந்தமாக வாழ்வோம். அப்பாவைப் பற்றியும் பிறகு கவலைப்பட வேண்டியதில்லை. பண்ணையார் மகனை மணந்து கொண் விட்டால், அதற்குப் பிறகு என்ன சொல்லப் போகிறார் ஒன்றுமில்லை'' என்று மிகவும் உறுதியாகப் பேசினாள்.

''இவ்வளவு நிச்சயமாக உங்கள் மனத்தில் நம்பிக்கை இருக்கும்பொழுது இன்று பகல் அண்ணனுடன் பேசுகையில் நீங்க வேறுவிதமாக அல்லவா கூறினீர்கள்? உங்கள் ஆசை ஈடேறாத ஒரு கனவு என்றீர்களே?'' என்று திடீரென்று அந்த சம்பாஷணை நினைத்துக் கொண்டு அருணா கேட்டாள்.

''பண்ணையார் மகனை நான் முடிவில் மணந் கொண்டுவிடுவேன். ஆனால் தந்தையால் புறக்கணிக்கப்பட் சோமசேகர், பிறகு சாதாரண மனிதன்தானே! பெரிய மாடி வீடு, புத் புதிய கார், ஏவலுக்கு அடி பணிந்து நிற்கும் வேலைக்கார நினைத்ததையெல்லாம் வாங்கி மகிழத் தாராளமான பண இவையெல்லாம் எங்களுக்கு இருக்காதே? பணக்கார வாலிபனுக் வாழ்க்கைப்பட வேண்டுமென்று என் இளமனத்திலே உள்ள ஆவ ஈடேறாத ஒரு லக்ஷ்யம் என்று அதனால்தான் சொன்னேன்'' என்றா இந்திராணி.

அருணா துயரம் மேலிட்டு, நெடியதொரு பெருமூச்செறிந்தா ''அக்கா! என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. வயதி

இளையவள் அல்லவா? மூத்தவளான உங்களுக்கு யோசனை சொல்லவும் நா கூசுகிறது. எனக்கு என்னவோ இதையெல்லாம் கேட்க பயமாக இருக்கிறது'' என்றாள்.

''அருணா! வயதில் நீ சிறியவள். எனினும், தற்சமயம் எனக்கு நீ நம்முடைய தாயைப்போல். அம்மா உயிருடன் இருந்தால், என் உள்ளத்து போராட்டத்தை அவர்களிடம் கூறி ஆறுதல் பெறுவேன் அல்லவா? அதுபோல் உன்னிடம் கூறி ஆறுதல் பெறுகிறேன். கேள், அருணா! நான் கூறிய அனைத்தையும் நீ யாரிடமும் சொல்லாது ரகஸியமாக வைத்திருக்க வேண்டும். தவறிப்போய் அப்பாவிடமோ அண்ணாவிடமோ கூறிவிட்டால், பிறகு என் பிணத்தைத்தான் நீ நமது தோட்டத்துக் கிணற்றில் பார்க்க நேரிடும் என்று எச்சரிக்கிறேன் அருணா! இதை வெளியில் சொல்லாது, ரகஸியமாக உன்னுள் வைத்துக் கொள்ளவேண்டும். இந்த உதவியை நீ எனக்கு மறுக்கவே கூடாது.

''சோமசேகரின் மனைவியானதும், ஆரம்பத்தில் நாங்கள் சுகபோகத்தில் வாழ முடியாது என்றாலும் காலம் முழுவதும் அப்படியே போய்விடாது என்று ஒரு நம்பிக்கை இருக்கிறது. ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள், தந்தை மகனை மன்னிக்காது போய்விடமாட்டார். மன்னித்து என்னையும் மருமகளாக ஏற்றுக்கொண்டு விட்டால்... பிறகு என் வாழ்வு எவ்வளவு ஆனந்தமாக இருக்கும் தெரியுமா? அருணா, தயவு செய். என் நம்பிக்கையை நாசப்படுத்தி விடாதே. யாரிடமும் கூறமாட்டேன் என்று எனக்கு சத்தியம் செய்துகொடு. அருணா! என்னைக் காப்பாற்று!'' என்று உணர்ச்சிவசத்தில் இந்திராணி விக்கிவிக்கி அழத்தொடங்கினாள்.

''சத்தியமாக இதைப்பற்றி வெளியில் சொல்ல மாட்டேன் அக்கா! அழாதீங்க'' என்று கூறிய அருணா, தன் சகோதரியை அன்புடன் தழுவிக் கொண்டாள்.

உணர்ச்சிவசத்திலே அவள் தன் தமக்கைக்கு இவ்வாறு வாக்குக் கொடுத்து விட்டாள் எனினும் அவள் படித்த ஒரு கதையின் முடிவு அவளது நினைவில் அடிக்கடி தோன்றி அவளது மனக் கலக்கத்தை இன்னும் அதிகப்படுத்திய வண்ணம் இருந்தது. அந்தக் கதையில் வந்த

சுதாநாயகி, இந்திராணி போல் ஒரு ஏழைப் பெண். தன் அந்தஸ்துக்கு மீறிய இடத்திலே உதித்த ஒரு வாலிபன் மீது அவள் காதல் கொள்கிறாள். 'என்றும் பிரியேன்' என்று சபதம் செய்து கொடுத்து விடுகிறான் அந்த வாலிபன். ஆனால் பெற்றோர்களையும், அந்தஸ்தையும் உதறிவிட்டு அவளை மணந்து கொள்ள அவனுக்குத் திடசித்தம் இருக்கவில்லை. முடிவில் பணம், பதவி, அந்தஸ்து இவைகளுக்கு மயங்கி, தன் பெற்றோர்கள் நிச்சயித்த ஒரு பெரிய மனிதரின் மகளை மணந்து கொண்டு விடுகிறான்.

காதலன் தன்னை மறந்து விடும்படி கேட்டுக்கொண்டு கடைசியாக எழுதிய கடிதத்தைப் படித்ததும் ஏழைப் பெண், அவன் ஒரு காலத்தில் பரிசாக அளித்த வைர மோதிரத்தைப் பொடி செய்து விழுங்கித் தற்கொலை செய்து கொண்டுவிடுகிறாள். 'மரண மோதிரம்' என்ற பெயர் கொடுத்து சோக கட்டத்திலே கதையை முடித்திருந்த ஆசிரியர், ''திருமணத்தின் ஒப்பந்தமாக விளங்கிய அந்த அழகிய மோதிரம் அந்தப் பேதைப் பெண்ணிற்கு மரணத்திற்கு வழிகாட்டியாக அமைந்துவிட்டது!'' என்று பேனாமுனையினால் பெருமூச்சுவிட்டிருந்தார் தமது முடிவுரையில்.

அருணாவுக்கு ஏனோ இந்திராணியைப் பற்றி எண்ணும் பொழுதெல்லாம் 'மரண மோதிரம்' என்ற கதை நினைவுக்கு வந்தது! எவ்வளவு முயற்சித்தாலும் அவளது மனக் கலக்கம் நாளுக்கு நாள் குறையாது மிகவும் அதிகரித்துக் கொண்டே போயிற்று. தன் உள்ளப் போராட்டத்தை வெளியே சொல்லிக்கொள்ள முடியாது அவள் தவித்தாள், தத்தளித்தாள். வருத்தம் தாளாது சில சமயம் கண்ணீர் வடித்து அழுதாள்.

நாட்கள் சென்றன. அருணா கிராமத்திற்கு வந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகு, ஒரு நாள் தபாலில், அவள் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. விலாசத்திலிருந்த ஜெகதாவின் கையெழுத்தைக் கண்டு கொண்டு அவசரமாகப் பிரித்துப் படித்தாள்.

''அன்புள்ள அருணாவுக்கு, உன் பெரியம்மா ஜெகதா எழுதிக்கொண்டது. கிராமத்திற்குச் சென்றதும் உன் பெரியம்மாவைத்தான் அடியோடு மறந்து போனாய் என்றால்

உன் பிற்காலப் படிப்பைப் பற்றியுமல்லவா மறந்துபோய் விட்டிருக்கிறாய்! உன் நடத்தை எனக்கு ஆச்சரியத்தையும் அதிருப்தியையும் ஒருங்கே அளித்துள்ளது. பங்கஜத்தின் மகளான உன்னிடம் இதைத் தவிர வேறு என்னத்தை நான் எதிர்பார்க்க முடியும்?

நிற்க, நேற்று நளினி இங்கே வந்திருந்தாள். அவள் உதவியால், நீ பரீக்ஷையில் பாஸ் செய்துவிட்டாய் என்ற சங்கதியை பிரத்தியேகமாக நான் தெரிந்து கொண்டேன். நளினி, 'ஸெங்கரி' கலாசாலையில் சேர்ந்து படிக்க முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறாள். நீயும் அதே கலாசாலையில் சேர்ந்து படிக்க வேண்டும் என்பது லோகநாயகியின் விருப்பம். பாஸ் பண்ணுவதைவிட, கலாசாலையில் படிக்க இடம் கிடைப்பது மிகவும் கஷ்டமான காரியம் என்பது படித்த பெண்ணான உனக்கா தெரியாது! கிராமத்தில் நிம்மதியாக, உன் குடும்பத்துடன் கொட்டமடித்துக் கொண்டு கவலையற்று இருக்கிறாய். இங்கே நான் உனக்காக, காலேஜில் இடம் வாங்க, ஏறாதவர்கள் வீடெல்லாம் ஏறி கெஞ்சாதவர்களிடம் கெஞ்சிக் கொண்டிருக்கிறேன்.

இப்படியெல்லாம் கஷ்டப்பட்டு உன்னைப் படிக்க வைப்பதனால் எனக்கு என்ன லாபம் ஏற்பட்டுவிடப் போகிறது? எனக்கு ஒரு ஞாபகார்த்த சிலை எழுப்பிவைத்து கௌரவித்து விடப்போகிறாயா? இல்லை. செய்த உதவிக்காக ஒரு கிரீடம் வைத்துவிடப் போகிறாயா? இதெல்லாம் இல்லை. உனக்குச் செய்வதெல்லாம் விழலுக்கு இறைத்த நீர்போல் பாழ் என்பது எனக்குத் தெரியும். இருந்த போதிலும் என் குடும்ப கௌரவத்திற்காக, உன்னைக் கொஞ்சகாலம் வைத்துப் போஷிக்க வேண்டியிருக்கிறது. 'அருணா பாஸ் செய்துவிட்டாள். காலேஜில் படிக்க வைக்கவில்லையா!' என்று லோகநாயகி முதலானோர் பிடுங்கித் தின்பார்களே என்று அஞ்சி, அதற்காகவே உன்னைக் கலாசாலையில் சேர்க்கத் தீர்மானித்திருக்கிறேன். நாளை தபாலில் உன் பேருக்குப் பத்து ரூபாய் மணி ஆர்டர் அனுப்புகிறேன். அது கிடைத்தவுடன் தாமதம் செய்யாது ஊருக்குப் புறப்பட்டு வர வேண்டியது உன் கடமை.

ஜெகதா

இந்தக் கடிதத்தைப் படித்ததும் அருணாவிற்கு மகிழ்ச்சியடைவதா வருத்தப்படுவதா, அல்லது கோபந்தான் கொள்வதா என்றே விளங்கவில்லை.

21

அன்று இரவு வண்டியில் ஒரே கூட்டம். வண்டி புறப்பட இன்னும் சில நிமிஷங்கள்தான் இருந்தன. பெண்கள் பெட்டியில் நின்றுகொண்டுகூட பிரயாணம் செய்ய இடம் இல்லாததைக் கண்டதும், ஆனந்தன் அவசரமாகப் பெட்டி படுக்கையை அருகிலிருந்த மற்றொரு பெட்டிக்குள் திணித்தான். அருணா உள்ளே ஏறி உட்காருவதற்குள் இரண்டாவது மணி அடிக்கப் பெற்று வண்டி நகரத்தொடங்கிவிட்டது. ஜன்னல் அருகே ஓடிவந்து எட்டிப் பார்த்த அவள், அண்ணனிடம் போய் வருவதாகத் தலையை அசைத்து ஜாடை செய்து விடைபெற்றுக் கொண்டாள். வீட்டிலிருந்து புறப்படுமுன் அவள் அண்ணனிடம் எவ்வளவோ பேச வேண்டும் என்று எண்ணிக் கொண்டுதான் வந்திருந்தாள். குறித்த நேரத்திற்கு ஸ்டேஷனுக்கு வந்து வண்டியைப் பிடித்துவிட்டாலே போதும் என்று ஆனந்தன் பட்ட அவசரத்தில் அவளால் ஏதும் பேசவே முடியவில்லை.

ஜெகதா அனுப்பியிருந்த மணியார்டர் தொகை கிடைத்ததும் அருணாவின் மேற்படிப்பைப் பற்றி மெல்லத் தந்தையிடம் பிரஸ்தாபித்தான் ஆனந்தன். 'படித்த வரையில் போதும்' என்று எங்கே படிப்பிற்குத் தந்தை முற்றுப் புள்ளி வைத்துவிடுவாரோ என்று அண்ணனுக்கும் தங்கைக்கும் ஒரே பயம். அருணா பரீக்ஷையில் தேறியது பற்றியோ அவள் கலாசாலையில் சேர்ந்து படிக்கப் போவது பற்றியோ சந்தோஷமோ, சலிப்போ, ஏதும் தெரிவிக்காது சதாசிவம் வழக்கம் போல் அசட்டையாக இருந்துவிட்டான்.

ஜெகதாவினிடமிருந்து கடிதம் வந்து ஒருவார காலம் சென்றுவிட்டிருந்தது. பிரயாணச் செலவுக்குப் பணம் வந்தும் நான்கு தினங்கள் சென்று விட்டிருந்தன. 'என்றைய தினம் ஊருக்குக் கிளம்புவது?' என்று தந்தையிடம் கேட்டு உத்தரவு வாங்கத் தைரியமின்றி அண்ணனும் தங்கையும் நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தனர். அன்று மாலை மறுபடியும் ஜெகதாவிடமிருந்து ஒரு கடிதம் வந்துவிட்டது. பணம் அனுப்பியும் ஊருக்குப் புறப்படாது அங்கேயே பொழுதைக் கழித்துக் கொண்டு அருணா வாளா இருப்பதன் மர்மம் யாது என்றும் உடனே புறப்பட வேண்டும் என்றும் மிகவும் கோபித்துக் கொண்டு கடிதம் போட்டிருந்தாள் பெரியம்மா. இனிப் பொழுதைக் கழிப்பதில் லாபமில்லை என்று உணர்ந்த அருணா, தன் தைரியத்தை எல்லாம் ஒன்று திரட்டி, அன்று பகல் போஜனத்தின்போது தந்தையிடம் மெல்லத் தன் பிரயாணத்தைப் பற்றிய பேச்சைத் துவக்கினாள்.

முதன் முதலாக தந்தையிடம் மனம் விட்டு இரண்டு வார்த்தைகள் பேசி முடிப்பதற்குள் அவளது நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. பயத்தில் உடல் முழுவதும் வியர்த்துவிட்டது. "உம். இவ்விக்கே புறப்படு. உன்னை யார் இங்கே தடுக்கிறாங்க!" என்று சதாசிவம் இலையைப் பார்த்தவாறு முணுமுணுத்தான். ஊருக்குப் புறப்படும் தினம் தந்தைக்கும் மகளுக்கும் இடையே நிகழ்ந்த சம்பாஷணை இவ்வளவேதான்.

ஸ்டேஷனிலிருந்து வெளிப்பட்ட வண்டித் தொடர் 'ஓ' வென்று இரைச்சலிட்டவண்ணம் வேகமாக நகரத் தொடங்கியது. ஜன்னல் சட்டத்தின் மீது தலையைச் சாய்த்தபடி அமர்ந்திருந்த அருணா, துயரத்திலே மூழ்கிக் கிடந்தாள். கண்களால் ஊடுருவிக் காண முடியாது வெளியே கவிழ்ந்து நின்ற இருள், அவளது பிற்கால வாழ்வை நினைவூட்டிக் கொண்டிருந்தது. ஆமாம்! அவளது பிற்காலமும், முன்கூட்டி கற்பனை செய்துகாண முடியாத ஒரு பெரும் இருளாகத்தான் அவளுக்குத் தோன்றியது. இதுவரை அவள் சிந்தித்துப் பாராத பிரச்சினைகள் எல்லாம் திடீரென்று அன்றைய தினம் உள்ளத்திலே முளைத்து, அவள் மனத்தைத் துயரக் கடலில் தத்தளிக்கச் செய்துவிட்டன.

''கலாசாலைப் படிப்பிற்குப் பண உதவி அளிக்க பெரியம்மா தம் சொந்த விருப்பத்தினால் முன் வந்துள்ளார்களா? அல்லது கௌரவத்தின் நிமித்தம் அவளுக்குக் கல்வியளிக்க சம்மதித்துள்ளார்களா? அவ்வாறானால் நீடித்து பெரியம்மாவின் உதவிகளை அவள் பெற்றுக்கொண்டு கல்வி கற்பது முறையா? - பின் வேறு வழி? பெரியம்மா இதுவரை செய்த உதவிக்குப் பிரதியாக அவள் எப்பொழுது செய்ய இயலும்? பிறந்ததிலிருந்து அன்று வரை அவர்கள் வீட்டில் நிலவி நின்ற இல்லாமையை அகற்ற வழி என்ன? ஏழ்மையை அறியாது நிம்மதியாக வாழ அவளுடைய குடும்பத்தவர்களுக்கு வழியே கிடையாதா? வருஷங்கள் பல ஆகியும் வறுமையின் துயரம் ஏன் அவர்களை இன்னும் விட்ட பாடில்லை?'' எனப் பற்பல சிந்தனைகளில் உள்ளத்தை அலட்டிக் கொண்டிருந்த அருணாவின் நினைவு அவள் சிநேகிதி நளினிபால் சட்டெனத் திரும்பியது.

ஒரே வகுப்பில், ஒரே பள்ளியில் ஒன்றாகப் படித்த தங்கள் இருவர் வாழ்க்கையின் இடையே உள்ள வித்தியாசம்தான் எத்தனை? அன்பைச் சொரியும் தாய், கண்ணின் கருமணியென நேசிக்கும் தந்தை, நாளையைப் பற்றிய கவலையில்லாத செல்வம். அருணாவின் மனத்தை அலட்டும் பிரச்சனைகளில் ஒன்று என்றாவது நளினியின் மனத்தைக் குழப்பப்படுத்தியிருக்குமா? ஏறக்குறைய ஒரே வயதுடைய சிநேகிதிகள் இடையே வாழ்க்கைத் துறையில் ஏன் இந்த வித்தியாசம்? இதற்குக் காரணம் விதியா? கடவுளா? சமூகமா? சந்தர்ப்பங்களா?

தன்னைப் பற்றிய சிந்தனை தாள முடியாத துயரத்தில் ஆழ்ந்துவிடவே அருணாவிற்கு அழுகையே வந்துவிட்டது. அடுத்த ஸ்டேஷன் நெருங்குவதை உணர்ந்ததும், கண்களில் பொங்கும் கண்ணீரை ரகஸ்யமாகத் துடைத்துக் கொண்டு, ஜன்னல் வழியே வேடிக்கை பார்ப்பதுபோல் பாவனை செய்த வண்ணம், முகத்தை வெளியே திருப்பிக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள்.

அந்த ஸ்டேஷனில் வண்டி சில நிமிஷங்கள்தான் நின்றது. உள்ளே ஏறுகிறவர்களும், வெளியே இறங்கிச் செல்கிறவர்களும் செய்த சப்தமும், பழம் பலகாரம் விற்பவர்கள் எழுப்பிய ஓசையும்

பிளாட்பாரத்தில் அங்குமிங்கும் செல்பவர்கள் செய்த சந்தடியுமாக, எல்லாம் ஒரே இரைச்சல் மயமாக இருந்தது. சற்று தூரத்திலே அமைந்திருந்த குழாயில் நீர் பிடித்துக் கொண்டிருந்த வயோதிக மாது ஒருத்தியை வேடிக்கைப் பார்த்த வண்ணம் தன்னை மறந்திருந்த அருணா தன் பெயரைச் சொல்லி யாரோ அழைப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டு, மறுபக்கம் திரும்பினாள்.

ஜன்னல் கதவின்மீது சாய்ந்த வண்ணம் வெளியே நின்று கொண்டிருந்தான் அடுத்த வீட்டு சிதம்பரம். ''என்ன ஆச்சர்யம். நீயும் இதே வண்டியிலே பிரயாணம் செய்து கொண்டிருக்கிறாய்? நம் ஊர் ஸ்டேஷனில் ஏறும் பொழுது உன்னை நான் கவனிக்கவே யில்லையே!'' என்று கூறிய சிதம்பரம், அவள் பதிலளிக்கு முன், வண்டிக்குள் ஏறி கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு அவள் எதிரே அப்பொழுதுதான் காலியான இடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

''நீங்களும் இன்று ஊருக்குப் போகிறாப் போல் காண்கிறதே?'' என்று கூறிய அருணாவுக்கு என்ன பேசுவது என்றே விளங்கவில்லை. சிதம்பரத்தைக் கண்டதும் அவள் பெரும் குற்றவாளி போல், மிரட்சியுடன் விழித்தாள். அவர்கள் வீட்டிற்கும் அடுத்த வீட்டிற்கும் இடையே இடிந்து கிடந்த இடைச்சுவர் மீண்டும் புதுப்பிக்கப் பெற்ற பிறகு அருணா, அடுத்த வீட்டின் திக்குப் பக்கம் கூடத் திரும்பிப் பார்ப்பதை நிறுத்தி விட்டிருந்தாள். திடீரென்று எவ்வித முகாந்திரமுமின்றி தங்கள் வீட்டு நட்பைக் கத்தரித்துக் கொண்டு விட்டதைப் பற்றி, சிதம்பரமும் அவன் தாயாரும் என்னவெல்லாம் எண்ணிக் கொண்டார்களோ என்ற நினைவு அவளுக்கு அச்சத்தையும் சங்கோஜத்தையும் உண்டுபண்ணவே, எதிர்பாராத இந்தச் சந்திப்பு அவளுக்கு மிக்க கலவரத்தை உண்டு பண்ணியது.

''நானும் பட்டணத்திற்குத் தான் வருகிறேன். நாங்கள் ஆரம்பிக்கவிருக்கும் பால் பண்ணை சம்மந்தமாக அங்கே இரண்டொருவரை நான் சந்தித்து, கலந்து ஆலோசிக்க வேண்டி இருக்கிறது. பண்ணைக்குச் சில சாமான்களை வாங்க வேண்டியுள்ளது. இன்னும் பல அலுவல்கள் நிமித்தம் அவசரமாக இன்று சாயங்காலம் திடீரென்று நினைத்துக் கொண்டு கிளம்பினேன்'' என்று கூறி புன்முறுவல் செய்த சிதம்பரம், சிறிது நேரம் அவள்

கொண்டிருந்தான்.
முகத்தையே உற்றுப் பார்த்துக்
''அப்படியா? உங்களுடைய சாமான்கள் எல்லாம் வேறு
பெட்டியில் இருக்கிறது என்று சொல்லுங்கள். அவைகளை
அங்கேவிட்டு...'' என்று முடிக்காது நிறுத்தினாள் அருணா.

''என்னுடைய சாமான்கள் அனைத்தும் இந்தச் சிறு கைப்பையில்
அடங்கிக் கிடக்கின்றன. நான் பட்டணத்தில் அதிக நாட்கள் தங்கப்
போவதில்லை. காரியம் ஆனதும் நாளை இரவே மீண்டும் திரும்பி
விடுவேன். என்னைப் பற்றிய விஷயங்கள் இருக்கட்டும். மேலே
படிப்பதற்காக நீ பட்டணத்திற்குத் திரும்பப் போய்க்
கொண்டிருக்கிறாய் என்று ஊகிக்கிறேன். ஆமாம், நான் உன்னை
ஒன்று கேட்க விரும்புகிறேன். திடீரென்று என்னுடன் பேசுவதை நீ
ஏன் நிறுத்திக் கொண்டாய்? என் தாயாரிடம் கூடப் பேசுவதை ஏன்
நிறுத்திக் கொண்டுவிட்டாய்? அது போகட்டும். நீ பாஸ் செய்த
சந்தோஷ சங்கதியையாவது எங்களிடம் தெரிவிக்கக்கூடாதா?
ஊருக்குக்கூட சொல்லாமல் அல்லவா கிளம்பி விட்டிருக்கிறாய்?
எங்கள் நட்பைத் திடீரென்று புறக்கணித்துவிட நாங்கள் செய்த குற்றம்
என்ன? உன்னை வெளியே எங்கேயாவது பார்த்தால் இதைப் பற்றிக்
கேட்டு விடுவதென்று கொஞ்ச நாட்களாகத் துடித்துக்
கொண்டிருந்தேன்'' என்று கேட்டான் சிதம்பரம்.

தங்கள் சம்பாஷணையை பெட்டியில் உள்ள மற்ற
பிரயாணிகளில் யாரேனும் கவனிக்கிறார்களா என அச்சத்துடன்
அருணா, தன்னைச் சுற்றிலும் ஒரு முறை கவனித்துக் கொண்டாள்.
அவரவர்கள் முறையே தனித்தனியே தங்கள் நண்பர்கள்,
உறவினர்களுடன் மும்முரமாக சம்பாஷித்துக்கொண்டு இருந்ததைக்
கண்ணுற்று கவலை நீங்கியவளாக மெல்லிய குரலில், ''காரணம்
உங்களுக்கு விளங்கிவிட்டிருக்கும் என்று எண்ணுகிறேன்.
இடைச்சுவரையெழுப்பி இரண்டு வீட்டையும் பிரிக்க விரும்பிய என்
தந்தை, அடுத்த வீட்டவர்கள் சிநேகிதத்தை விரும்பவில்லை. அவர்
இச்சைக்கு எதிராக ஏதும் செய்ய நானும் ஆசைப்படவில்லை''
என்றாள்.

இந்த பதிலைக் கேட்ட சிதம்பரம் ஜன்னல் கதவுமீது சாய்ந்து

சிறிது நேரம் வெளிப் புறத்தை வேடிக்கை பார்த்தபடி வாளா
கொண்டு நீண்டதொரு
இருந்தான். பிறகு அவள் பக்கம் திரும்பி, நீண்டதொரு
பெருமூச்செறிந்துவிட்டு, ''உன் தந்தையுடன் சிநேகிதம் செய்து
கொள்ள எவ்வளவோ முறைகள் நான் பாடுபட்டேன். உன்
அண்ணனிடமும் ஒட்டிக் கொள்ள முயற்சித்தேன். ஏனோ என் நட்பை
அவர்கள் விரும்பவில்லை! என் மீது என்ன குற்றம் கண்டு அவர்கள்
என் தொடர்பைப் புறக்கணிக்கிறார்கள் என்றும் விளங்கவேயில்லை''
என்றான் மனத்தாங்கலாக.

''அடுத்த வீட்டில் வந்து வசிப்பதுடன், போட்டி
போடுவதுபோல், எங்களுக்கு எதிராகப் பால் வியாபாரம்
தொடங்குவது குற்றமாக இருக்கலாம்!'' என்று சிரித்தாள் அருணா
பரிகாசமாக.

''பால் பண்ணையைக் கூட்டு வியாபாரமாகத் தொடங்க
உத்தேசித்து உன் தந்தையையும் அதில் சேர்ந்து கொள்ள அழைத்தேன்.
ஒன்றுபட்டு உழைக்க அவர் மறுத்துவிட்டார். ஆனால் ஒன்று
உன்னிடம் கூற விரும்புகிறேன். இடைச் சுவரையெழுப்பி நம்
வீடுகளைப் பிரித்தாலும் சரி, என்னுடன் நீ முகம் கொடுத்துப் பேசாது
வருஷங்கள் பல சென்றாலும் சரி, உன்மீது எனக்கு ஏற்பட்ட அன்பு
என்றும் மாறப் போவதில்லை. இது முற்றிலும் உண்மை'' என்றான்.
உணர்ச்சி வசத்திலே அவனது குரல் தழுதழுத்தது.
இதைக்கேட்டு, மனவெழுச்சி மிக்க அடைந்து போன அருணா, பதில்
அளிக்குமுன், சிதம்பரம் இடத்தை விட்டு எழுந்திருந்தான்.
''மரியாதை யில்லாது, நானே முந்திக் கொண்டு வந்து பேச
முற்பட்டதற்கு மன்னிக்க வேண்டும். அடுத்த ஸ்டேஷன் நெருங்கிக்
கொண்டிருக்கிறது. நான் இறங்கி என் பெட்டிக்குத் திரும்பப்
போகிறேன். இங்கே உன்னுடன் இதே பெட்டியில் நான் பிரயாணம்
செய்து வீணாக பழிக்கோ, மனக்கவலைக்கோ உன்னை இலக்காக்க
விரும்பவில்லை. ஒன்று மட்டும் கடைசியாகக் கூற விரும்புகிறேன்.
எப்பொழுதாவது, என்றாவது, எந்த சமயமாவது உனக்கு என் உதவி
தேவையிருந்தால், கொஞ்சமும் தயங்காது அஞ்சாது நீ என்னிடம்
கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். எங்கேயிருந்தாலும், எந்த நிலையில்
நீ வாழ்ந்தாலும், உன் வாழ்வில் நல்லதை விரும்பும், ஒரு
உண்மையான சிநேகிதன் என்று என்னை நீ என்றும் மதித்தால்

அதைவிடச் சந்தோஷம் எனக்கு வேறு எதுவும் கிடையாது'' என்றான்.

அருணா பதில் கூற சற்று தாமதித்தபோது அடுத்த ஸ்டேஷனை நெருங்கிய வண்டித் தொடர், தடக்கென்று பெரும் குலுக்கலுடன் நின்றது. விரைவாகப் பெட்டியினின்று இறங்கிய சிதம்பரம், மின்னல் போன்ற வேகத்தில் ஜனத்திரளில் மறைந்து போய்விட்டான்.

மறுநாள் காலைப் பொழுது விடியும் தறுவாயில் வண்டி நகரத்தை அடைந்தது. பெட்டியினின்று இறங்கிய அருணா பிளாட்பாரத்திலே தனக்காகப் பெரியம்மா வந்து காத்திருக்கிறாளோ என்று சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு நின்றாள். ''ஹலோ அருணா!'' என்ற பழக்கமான கீச்சுக் குரலைக் கேட்டு, சப்தம் வந்த திக்கை நோக்கினாள். அவள் சிநேகிதி நளினி சுரேஷ்குமாரனுடன் அவளை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தாள்.

''ஊருக்குப் போகுமுன் என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் போனது ஒரு தப்பு. கடிதமே போடாது மௌனமாக இருந்தது இன்னொரு தப்பு. உன்னிடம் சண்டை போடத்தான் நானும் அண்ணனுமாகப் புறப்பட்டு உன்னை அழைத்துப்போக ஸ்டேஷனுக்கு வந்தோம். நீ இன்று வருவதாகப் பெரியம்மா சொன்னாங்க. பூபதியை ஸ்டேஷனுக்கு அனுப்பப் போவதாகவும் சொன்னாங்க. அவர்கள் அனுப்பு முன்பு, நாங்கள் இருவரும் வந்து உன்னை அழைத்துப் போவதென்று வந்திருக்கிறோம்'' என்றாள் நளினி. உரிமையாகக் கடிந்து கொண்டு அன்புடன் அருணாவின் கரத்தைப் பற்றி குலுக்கினாள்.

இரண்டு மாத காலம் உதகமண்டலத்தில் செய்த வாசத்தின் பயனாக, நளினியின் தங்க நிறக் கன்னங்கள் ரோஜாவைப் போல் சிவந்திருந்தன. நீலப் பட்டுப் பாவாடையும், பச்சை வர்ண ஜார்ஜெட் தாவணியும் அவளது அழகிற்கு அழகு செய்த வண்ணமிருந்தன. சுரேஷ்குமாரனும் வெள்ளை ஸூட்டும், சாம்பல் நிற ஷர்ட்டுமாக, மிகவும் நேர்த்தியாக அலங்கரித்துக் கொண்டிருந்தான். அவர்கள் எதிரே அழுக்காகிக் கசங்கி விட்டிருந்த ஆடையும், புரண்டு அலங்கிய கூந்தலும், கையில் புகைபட்டுக் கரியாகி விட்டிருந்த முகமுமாகத் தான் வந்து நிற்பது, அருணாவிற்கு மிகவும் வெட்கமாக இருந்தது.

''என்ன யோசிக்கிறாய்? எங்கே உன் பெட்டிகள்? அவைகளைப் போர்ட்டர் எடுத்து வரட்டும். நாம் போகலாம் வெளியே'' என்று நளினி அதட்டிக் கொண்டு கையைப் பற்றி இழுத்தாள்.

பழனியப்பக் கவுண்டர் மக்கள் ஒரு சமயம் ஸ்டேஷனுக்குப் போகக்கூடும். அங்கே அருணாவைச் சந்தித்து, வீட்டிற்கு அழைத்து வர முயற்சித்தாலும் முயற்சிக்கலாம் என்று தனக்குள்ளேயே முன் கூட்டியே எண்ணிக் கலவரமடைந்த ஜெகதா, தன்னுடைய காரில் வேகமாக ஸ்டேஷனை நோக்கி வந்து கொண்டிருந்தாள். காரினின்று அவள் இறங்கி வருவதற்குள் நளினியின் கையைப் பிடித்துக் கொண்டு அருணா, பழனியப்பக் கவுண்டர் வீட்டுப் பெரிய காரின் பக்கம் செல்வதைக் கவனித்தாள். அவ்வளவுதான். ஜெகதாவிற்குப் பகீர் என்று இருந்தது. அருணாவை முதல் வகுப்பில் பிரயாணம் செய்யும்படி எச்சரித்திருந்ததாக முதல் நாள்தான் லோகநாயகியிடம் கூறிய பொய்யை இந்த அசட்டு அருணா எங்கே உடைத்து விடுவாளோ என்ற அச்சத்திலே அவள் நெஞ்சம் பதறியது. 'அருணா! அருணா!' என்று கிறீச்சிட்டுக் கத்திக் கொண்டு ஓடிவந்து அவர்கள் இடையே புகுந்து அருணாவைக் கட்டிக்கொண்டு விட்டாள்.

''குழந்தை இப்பொழுதுதான் ஊரிலிருந்து வருகிறாள். பிறகு பங்களாவிற்கு அழைத்து வருகிறேன். அதுக்காகவே புறப்பட்டு வந்திருக்கிறேன். நீ கொஞ்சம் மன்னிச்சுக்கோ'' என்று படபடவென்று நளினியிடம் கூறிய ஜெகதா, நெட்டித் தள்ளாத குறையாக அருணாவைத் தங்கள் வண்டிப் பக்கம் நகர்த்திவிட்டுத் தானும் பின் தொடர்ந்து வண்டிக்குள் ஏறிக்கொண்டாள்.

''மட்டிப் பெண்ணே. சித்த பொறுத்து ஸ்டேஷனுக்கு வந்திருந்தால், என் மானம் கப்பலேறி விட்டிருக்கும். தலையும் சத்துமுமாக இப்படியா வந்து இறங்குவார்கள்? மூஞ்சியைத் தண்ணியை விட்டுக் கழுவிக் கொண்டு தலையை ஒதுக்கிக்கொண்டு வரமாட்டே? இது கூடவா சொல்லித் தரணும்?'' என்று கடுகடுத்தாள். இதுதான் ஜெகதாவிடமிருந்து ஊருக்குத் திரும்பிய அருணாவிற்குக் கிடைத்த முதல் வரவேற்பு.

22

''ஹோட்டல் வசந்தம்'' கட்டடத்தின் இரண்டாவது தளத்தின் பதினைந்தாம் நெம்பர் அறையில், மிருதுவான பஞ்சணை மீது மிஸ்டர் அசோகன் சோம்பலுடன் புரண்டு கொண்டிருந்தான். மேஜை மீதிருந்த டெலிபோன் மணி கிணுகிணுவென்று ஒலித்தது. தலையணை மீதினின்று தலையை நிமிர்த்தாது படுத்த நிலையில் இடது கரத்தால் டெலிபோன் ரிஸீவரைத் தூக்கி காதில் வைத்துக் கொண்டு ''எஸ்! அசோகன் ஸ்பீகிங்'' என்றான். பற்களில் பாவாது, நுனி நாக்கில் நர்த்தனம் செய்த பகட்டான உச்சரிப்பு நிறைந்த ஆங்கிலத்தில்.

''நான்தான் சோணாசலம் பேசறது. உங்களைப் பார்க்க வரலமா? ஓமே ஹோட்டல் வாசலிலிருந்து பேசிகிட்டு இருக்கேன்'' என்று பச்சைத் தமிழில் மறு பக்கத்தினின்று ஒலித்த குரலைக் கேட்டதும், அசோகனது அரைத் தூக்கம் நிறைந்த முகம் மலர்ச்சியுற்றது. ''ஓ யெஸ்! வரலாமே! நீங்கள் கேட்டுக் கொண்டா வரணும்? இவ்வளவு நெருங்கிப் பழகிய பிறகு 'டோண்ட் பி ஸில்லி' என்று பாதித் தமிழும் பாதி ஆங்கிலமும் கலந்த சரளமான பாஷையில் தேன் போன்று இனிக்க மொழிந்தான். ரிஸீவரை டெலிபோன்மீது வைத்துவிட்டு படுக்கையினின்று எழுந்து எதிரே பீரோவில் பதித்திருந்த நீண்ட பெரிய கண்ணாடியில் தன் முழு உருவத்தையும், ஒரு முறை உற்றுக் கவனித்துக் கொண்டான்.

வெள்ளைக்கார துரை போன்று அவன் அணிந்திருந்த நீண்ட படுக்கை அறை அங்கியும், படரக் கொம்பின்றி தவித்துச் சுருண்டு நிற்கும் கொடிகள் போல நெற்றி மீது கலைந்து விழுந்துகிடந்த அவனது சுருண்ட கேசமும், நடுநிசிவரை கண் விழித்துச் சீட்டாடிக் களித்ததன் பயனாக வீங்கி இடுக்கி லேசாகச் சிவந்து காணப்பெற்ற கண்களும் கொண்ட அவனது தோற்றம் அதுசமயம், சினிமாத் திரையில் சோக கட்டத்திலே காட்சியளிக்கும் கதாநாயகனை நினைவுறுத்திக் கொண்டிருந்தது. வழுவழுப்பான தனது முகவாயை

[...]ருக்காக இடது கர[...] [...] தடவிக் கொடுத்தபடி, முகவாய் நுனியில் மத்தியில் கறுப்புப் புள்ளிபோல் காணப்பட்ட சிறு மச்சத்தை கண்ணாடியில் சில நிமிஷங்கள் கூர்ந்து பார்த்துக் கொண்டான். அந்தக் கறுப்பு நிற மச்சம் அவனது பொன்னிற முகத்தின் கவர்ச்சியை மிகைப்படுத்தியது என்ற ரகஸ்யத்தை அவன் அறிவான். ஆகவினால் கவர்ச்சிமிக்க தன் பிரதிபிம்பத்தை மிகவும் கர்வத்துடன் கண்காணித்துவிட்டு, தனக்குள் லேசாகப் புன்முறுவல் செயது கொண்டான்.

சலவையினின்று வந்த துவாலையொன்றை பீரோவினின்றும் எடுத்து தோள்மீது போட்டுக் கொண்டான். மேஜை மீதிருந்த சோப்புப் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டதும் வாயிற் கதவை யாரோ லேசாகத் தட்டும் சப்தம் கேட்டது. ''கமின் பிளீஸ்'' என்று வரவேற்ற அசோகன் முன், ஸில்க் ஜிப்பாவும் காதவழி தூரம் ஸெண்ட் மணம் கமழும் எண்ணெய் வழிந்த கிராப்புத் தலையுமாக ஆசாமி ஒருவன் வந்து நின்றான்.

பகல் இரண்டு மணிக்கு, கையில் பற்பசையும் பிரஷ்ஷுமாக அரைத் தூக்கத்தில் காணப்பட்ட அசோகனைக் கண்டதும், ஸில்க் ஜிப்பாவுக்கு ஆச்சர்யமாக இருந்தது. தலையிலிருந்து வடிந்த எண்ணெயும் முகத்தில் துளிர்த்த வியர்வையும் ஒருங்கே ஆறாகக் கன்னங்கள் மீது வழிந்தோடுவதை உணர்ந்ததும், ஜிப்பா மீது அலங்காரமாக அணிந்து கொண்டிருந்த சரிகை அங்கவஸ்திரத்தால், முகத்தைத் துடைத்துக் கொண்டு, ''என்னங்க இன்னுமா தூங்கிட்டு இருந்தீங்க?'' என்று வியப்புடன் வினவிய வண்ணம், அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான் ஸில்க் ஜிப்பா ஆசாமி.

''மிஸ்டர் சோணாசலம்! நீங்கள் நேற்று கந்தய்யா கவுண்டர் வீட்டுக் கல்யாணத்திற்கு ஏன் வரவில்லை? இரவு டின்னரின் போது உங்களை அங்கே கூட்டத்தில் சுற்றிலும் தேடிப் பார்த்தேன். காணவில்லை. கந்தய்யா கவுண்டரை உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைத்தேன். அவரும் உங்களைப் போலவே உருளைக் கிழங்கு வியாபாரத்திலே ஈடுபட்டிருக்கிறவர்தான்'' என்றான் அசோகன் அலக்ஷியமான தோரணையில்.

வாயில் பற்பசையைக் குதப்பிக் கொண்டு அவன் பேசியதைக் காண சோணாசலத்திற்கு மிகவும் அருவருப்பாகத்தான் இருந்தது. எனினும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், ''அப்பாவுக்கு ஒரு சமயம் அவர் தெரிஞ்சவரோ என்னவோ, எனக்கு அறிமுகம் இல்லை. அதனாலே அந்தக் கல்யாணத்திற்கு என்னை அழைக்கவில்லை. மேலும் அவர்கள் எல்லாம் பெரிய மனிதர்கள். நம்மை லக்ஷியம் செய்வார்களா?'' என்று சூள் கொட்டினான்.

சோணாசலத்தின் கைகளின் பத்து விரல்களிலும் நீல ஒளி வீசிய வைர மோதிரங்களைக் கடைக் கண்ணால் ஆராய்ந்து கணக்கிட்டுக் கொண்டிருந்த அசோகன், அலட்சியமாகச் சிரித்தான். ''என்ன பெரிய மனிதர்கள்! கல்யாண மாப்பிள்ளை அமெரிக்காவில் என்னுடன் ஒரே கலாசாலையில் படித்தவன். அங்கே எனக்கு மிகவும் பழக்கமானவன். அந்த ஒரு துவந்தத்திற்காக, நான் நேற்று கல்யாண விருந்துக்குப் போக நேர்ந்தது. திரும்பி வரும்பொழுது இரவு மணி இரண்டாயிற்று. பணம் இருக்கிறதே தவிர கந்தய்யா கவுண்டருக்கு, அதை விமரிசையாகச் செலவழிக்கும் வகை தெரியவில்லை. விருந்து அப்படி ஒன்றும் பிரமாதமில்லை. ஒரே காட்டுமிராண்டிக் கூட்டம். சகிக்கலை. உங்களை விட அவர் ஒன்றும் அந்தஸ்தில் அப்படி உயர்ந்தவர் இல்லை. உங்களைப்போல அவரும் கிராமத்திலேயே பல நாட்கள் இருந்துவிட்டிருந்தால் அவரைப் பற்றி இங்கே பட்டணத்தில் யாருக்கும் தெரிந்திருக்காது. அது கிடக்கு, விட்டுத் தள்ளுங்கள்.

''நாளைக்கு நீங்கள் ஆரம்பிக்கப் போகும் பிஸினஸ் வெற்றியடைந்து விட்டால் இந்தப் பட்டணம் ஒன்று மட்டுமென்ன, இந்தப் பாரத கண்டம் முழுவதிலுமே உங்கள் பெயர் மூலைக்கு மூலை, சந்து சந்துக்கு அடிபடப் போகிறது. கந்தய்யா கவுண்டரைவிடப் பெரிய பிஸினஸ் புள்ளிகளை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் அனைவரையும் தூசிக்குச் சமமாக ஊதிவிட்டிருக்கிறேன்'' என்று அட்டகாசமான குரலில் பேசினான் அசோகன். பிறகு தாழ்ந்த குரலில், மிகவும் தணிவாக தொடர்ந்து கூறினான்.

''மிஸ்டர் சோணாசலம்! நீங்கள் முகராசி என்பதை நம்புகிறீர்களோ இல்லையோ, தெரியாது. எனக்கு அதில் ரொம்ப நம்பிக்கை உண்டு. உங்களை அன்றைய தினம் குதிரைப் பந்தய

மைதானத்தில் பார்த்தவுடனேயே, என்னையறியாது மனத்தில் ஒரு பற்றுதல் ஏற்பட்டு விட்டது. குழந்தை போன்ற உங்கள் பேச்சு, கள்ளங்கபடமற்ற தன்மை, நாணயம் எல்லாம் வெகுவாக அப்படியே கவர்ந்து விட்டன. உங்களது நாணயத் தன்மைக்காகவே உங்களை உடனேயே நான் ஆரம்பிக்கப் போகும் பாதரக்ஷை வியாபாரத்தில், ஒரு பாகஸ்தராகச் சேர்த்துக் கொள்ள சம்மதித்தேன்'' என்றான் பகட்டாக.

முகஸ்துதிகளைக் கேட்டதும், சோணாசலத்தின் முகத்தில் வியர்வைக்குப் பதில் இப்பொழுது அசடு வழிந்தோடியது. 'ஓரேயடியாக அப்படியே என்னைப் புகழ்ந்து பேசுறீங்க. உங்களையும் பரஸ்பரம் எனக்குப் பிடித்துப் போயிற்று. அதனால்தான் இவ்வளவு பெரிய தொகையை நம்பிக்கையோடு கையெழுத்துக் கூடப் பெறாமல் முன் பணமாகக் கொடுத்துவிட்டிருக்கிறேன்'' என்று கூறிவிட்டு, தனது முப்பத்திரண்டு பற்களையும் காட்டினான்.

''அப்படி ஒரு வார்த்தை சொல்லி விட்டீர்களே. நோ! நோ! நோ! நான் யாரிடமும், பிஸினஸ் விஷயத்தில் ஜரூராக நடந்து கொள்கிறவன். இதோ வந்துவிட்டேன்'' என்று கூறிவிட்டு அசோகன், அருகிலிருந்த குளிக்கும் அறைக்குள் மின்னலைப் போன்ற வேகத்தில் மறைந்தான்.

சில நிமிஷங்களில் அங்கிருந்து வெளிப்பட்ட அவனை, ஏற இறங்க கவனித்த சோணாசலத்தின் கண்கள் வியப்பினால் வெடித்து விடும்போல் விரிந்தன. நெற்றி மீது மேலே அழகாக மடித்து வாரப்பெற்ற சிகையும், மடிப்புக்கலையாத 'புல்ஸூட்'டும், ஸில்க் புஷ்கோட்டும் பளபளவென்று மின்னிய பாதரக்ஷைகளுமாக, மிகவும் நாகரீக புருஷனாக, கம்பீரமாக வந்து எதிரேயிருந்த சோபாவில் சொகுசாகச் சாய்ந்து கொண்டான் அசோகன்.

சோணாசலத்தின் ஆச்சர்யத்தைக் கவனியாதவன் போல், ''மிஸ்டர் சோணாசலம்! நாம் இருவரும் பிஸினஸ் ஆரம்பிக்கப் போகுமுன், சில வார்த்தைகள் என்னைப் பற்றி கூறிவிட வேண்டியது கடமையாகின்றது. முருகூர் ஜமீன் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள்.

முருகூர் ஜமீன்தாரின் இரண்டாவது புத்திரன் நான். அப்பா இறந்துபோன சமயம் நான் வெளிநாட்டில் இருந்துவிட்டேன். அவர் காலமான அடுத்த வருஷம்தான் நான் திரும்பி வந்தேன். இடையே நான் இல்லாத சமயம் பார்த்து ஜமீனுக்குச் சொந்தமான விலையுயர்ந்த ஆபரணங்கள், வைரங்கள், முத்து நகைகள் அனைத்தையும் விற்றுப் பணமாக்கி எடுத்துக் கொண்டு, அண்ணன் எனக்குத் துரோகம் செய்துவிட்டார். பாகப் பிரிவினையில் ஏற்பட்ட மனஸ்தாபத்தில் அண்ணன் மீது கோபித்துக் கொண்டு கட்டிய துணியுடன் வெளியில் புறப்பட்டவன், வருஷம் பத்து ஆகப்போகிறது, இன்னும் அவர் முகத்தில் விழிக்கவில்லை.

''தானே சிரமப்பட்டு பிஸினஸ் செய்து சொந்தமாக முன்னுக்கு வந்த மனிதன் நான். அதனால் எனக்கு நாணயம்தான் முக்கியமான குறிக்கோள்'' என்று ஒரு சிறு குட்டிப் பிரசங்கம் செய்தான்.

முருகூர் ஜமீனுக்கும் அசோகனுக்கும் ஸ்நானப் பிராப்தி கூடக் கிடையாது என்ற ரகஸ்யம் அசோகன் ஒருவனுக்குத்தான் தெரியும். அவன் கூறிய பச்சைப் பொய்யை முருகூர் ஜமீன்தாரின் ஆவி கேட்டிருக்குமாகில், கட்டாயம் கோபமடைந்து அன்றிரவே 'ஹோட்டல் வசந்த்'திற்கு ஒருமுறை விஜயம் செய்து அங்கிருந்தவர்களை ஒரு கலக்கு கலக்கிவிட்டிருக்கும். ஆவிகள் கூட பயமுறுத்த முடியாத அதிசயக்காரன் அசோகன். எனவே, அவன் சிறிதும் அச்சமின்றி தன் பூர்வோத்தரத்தைப் பற்றி, அலக்ஷியமாகக் கட்டுக் கதையொன்றை தாராளமாக அவிழ்த்து விட்டான்.

''உங்களைப் பார்த்தாலே பெரிய இடத்துப் பையன் என்று முகம் சொல்கிறதே!'' என்று பல்லைக் காட்டிய சோணாசலம், இடுப்பு 'பெல்டி'ல் பத்திரமாகப் பதுக்கி வைத்திருந்த பெரிய மணிபர்ஸைத் தேடி எடுத்தான். பர்ஸைத் திறந்து உள்ளே அடுக்காகத் திணிக்கப் பெற்றிருந்த ரூபாய் நோட்டுக் கத்தையை இழுத்து, பய பக்தியுடன் அசோகனிடம் நீட்டினான்.

மிகவும் அசட்டையாக அதை வாங்கி மேஜை மீது போட்டுவிட்டு, அருகிலிருந்த மின்சார மணியை அழுத்தினான் அசோகன். உடனே பணிவுடன் உள்ளே வந்து நின்ற ஹோட்டல்

பையனிடம், ''மூன்று பேர்களுக்கு காப்பியும் ரொட்டியும் கொண்டு வா. அத்துடன் ஐந்தாம் நம்பர் அறையில் உள்ள நண்பர் வடிவேலுவை நான் அழைத்ததாக வரச்சொல்'' என்று உத்தரவிட்டான்.

சோணாசலத்தைக் குதிரைப் பந்தய மைதானத்தில் எதேச்சையாகச் சில தினங்களுக்கு முன் சந்திக்காதிருந்தால், பையன் அசோகனது உத்தரவை ஹோட்டல் அலட்சியப்படுத்தியிருப்பான். நான்கு மாதங்களாக, அறைக்கும் வாடகை கொடுக்காது கடனில் சாப்பிட்டுக் கொண்டு காலங்கழித்த அவன் மீது ஹோட்டல் முதலாளிக்கு நம்பிக்கை குறைந்தது. அந்த வார முடிவிற்குள் ஹோட்டலுக்குச் சேர வேண்டிய பணத்தை அவன் கொடுக்காவிடில், அவனுக்குச் சாப்பாடு, காப்பி பலகாரம் முதலியவை பரிமாறப்படக் கூடாது என்று முதலாளி தமது சிப்பந்திகளுக்கு கடும் உத்தரவு போட்டிருந்தார்.

ஹோட்டலில் தனக்கு இருந்த செல்வாக்கு, பொருளாதார நெருக்கடியால் குறைந்து போனதை அசோகன் அறியாமலில்லை. இவ்வாறு நேர்வது அவனது வாழ்க்கையில் அது முதல் தடவையல்ல. தனது பொய்யான அந்தஸ்து அம்பலமாகி சலுகை குறைந்துவிடுமுன், அவன் பணத்திற்கு ஏதாவது ஒரு வழி செய்துவிடுவது வழக்கம். இம்முறை சிறிது அசட்டையாக இருந்ததில், கையில் பணம் இன்றி சில தினங்களில் ஹோட்டலினின்று வெளியேறும் பயங்கர நிலைமையை அடைந்து விட்டிருந்தான்.

ஆனால், அதைப்பற்றி எண்ணி அசோகன் மனம் கலங்கவில்லை. அவனது வியாபார வலையில், அடிக்கொரு முறை நல்ல பணமுள்ள புள்ளிகள் எதேச்சையாக சிக்கிவிடுவது வழக்கமாகி விட்டிருந்தது. கையிலிருந்த கடைசி பத்து ரூபாயுடன் அன்று காலை குதிரைப் பந்தய மைதானத்தில் நுழைந்தவுடன் அசோகனது கண்கள், சோணாசலத்தின் மீது வந்து லயித்தன. ஸில்க் ஜிப்பா, .எண்ணெய் வழிந்த முகம், எட்டுக்கல் வைரக் கடுக்கன், பத்து விரல்களிலும் மோதிரங்கள் இவைகளை ஒரே பார்வையில் கண்டு கொண்ட அவனுக்கு, சோணாசலத்தைப் பற்றிய விவரம் யாரிடமும் அறியத் தேவையிருக்கவில்லை.

'பாடுபட்டு நெற்றி வியர்வை நிலத்தில் விழ அப்பா சம்பாதித்துச் சேர்த்து வைத்திருக்கும் சொத்துக்களை அழிக்க அவதரித்திருக்கும் பத்தாம் பசலி சோணாசலம் என்பதை நொடியில் ஊகித்துக் கொண்ட அசோகன், மிகவும் பழகியவன் போல், அவனை நெருங்கி உறவு கொண்டாடத் தொடங்கினான்.

பந்தய மைதானத்தினின்று வெளிப்பட்ட சோணாசலம் அடுத்த இரண்டு தினங்கள் அசோகனின் 'ஸ்போர்ட்டு மாடல்' காரில் பட்டணத்தைச் சுற்றி பவனி வந்து கொண்டிருந்தான். பல நாட்கள் பழகிய நண்பர்கள் போல் இருவரும் சேர்ந்து சாப்பிட்டார்கள். சேர்ந்து சினிமாப் பார்த்தார்கள். சேர்ந்து ஊரைச் சுற்றி வந்தார்கள்.

சிநேகிதம் ஆரம்பித்த ஐந்தாவது தினத்தில் சோணாசலம், பத்தாயிரம் ரூபாய்களை முன்பின் யோசிக்காமல், நோட்டுகளாக எண்ணி அசோகன் கையில் கூட்டு வியாபாரத்திற்கு முன் பணமாகக் கொடுத்துவிட்டான். அந்தத் தொகை, அசோகனது கடன்களை அடைக்கவும், காரைப் பழுது பார்க்கவும் உபயோகப்படப் போகிறது என்பதை அவன் கனவில் கூட எதிர்பார்க்கவில்லை.

ஹோட்டல் பையன் கொண்டு வந்து வைத்த காபபியை எடுத்து, கோப்பைகளில் நிரப்பி, சோணாசலத்திடம் அவைகளில் ஒன்றை எடுத்து நீட்டி, 'சாப்பிடுங்கள் மிஸ்டர் சோணாசலம். உங்களைப் பார்த்தால் மிகவும் களைத்துப் போய் இருக்கிறாப்போல் காண்கிறது'' என்று உபசரித்துவிட்டு கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த மனிதனிடம், ''வாருங்கள் மிஸ்டர் வடிவேல்! இவர்தான் என் நண்பர் சோணாசலம்'' என்று அறிமுகப்படுத்தினான்.

வட இந்தியரைப்போல் முழங்கால் வரை தொங்கிய கோட்டும், கால் சராயும் தரித்திருந்த வடிவேல், தனது பச்சை நிற மூக்குக் கண்ணாடியைக் கழற்றாமலேயே, அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். மேஜை அறையில் முன்கூட்டியே தயாராக எழுதி வைத்திருந்த வியாபார ஒப்பந்த பத்திரத்தை எடுத்து, அசோகன் வடிவேலுவை சாக்ஷியாக அமைத்துக் கொண்டு கையெழுத்திட்டு, சோணாசலத்திடம் கொடுத்தான். ''மிஸ்டர் வடிவேல்! பேனா வியாபாரம் செய்கிறவர். நமக்கு நெருங்கிய நண்பர். அதனால் இந்த

ஒப்பந்தத்திற்கு அவரைச் சாக்ஷியாக அமைத்துக் கொண்டேன். என்னதான் நாம் நண்பர்கள் என்றாலும், பிஸினஸ் என்று ஆரம்பிக்கையில், அதற்குண்டான ஹோதாவுடன் ஆரம்பிக்க வேண்டுமல்லவா? அதற்காக, இந்த ஒப்பந்த தஸ்தாவேஜை நேற்றிரவு எனது வக்கீலை விட்டு தயாரிக்கச் செய்தேன். அதில் உள்ள ஷரத்துகள் உங்களுக்குச் சாதகமாகவே இருக்கின்றன. சந்தேகமிருந்தால் உங்கள் வக்கீலிடம் காட்டித் தெளிவு செய்து கொள்ளலாம்'' என்று மிகவும் பகட்டாகப் பேசினான்.

ஸ்டாம்பு பேப்பரில் எழுதப் பெற்றிருந்த அந்த தஸ்தாவேஜை இரண்டு முறை வாசித்து திருப்தியடைந்த சோணாசலம், அதைத் தன் மணிபர்ஸில் பத்திரப்படுத்திக் கொண்டு எழுந்திருந்து அசோகன், வடிவேல் இருவரது கரங்களையும் அன்புடன் பற்றிக் குலுக்கிவிட்டு, விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

சோணாசலத்தின் தலை, ஹோட்டல் தோட்டத்திற்குள் சென்று மறைந்ததும், அசோகன் எழுந்திருந்து, மேஜைமீது வைத்த ரூபாய் நோட்டை உருவி எடுத்து வடிவேலுவிடம் கொடுத்து, 'போய்வரலாம்' என்ற தோரணையில் தலையை அசைத்தான்.

சாக்ஷிக் கையெழுத்து இடுவதற்காக, சில மணி நேரம் ஐந்தாம் நம்பர் அறையில் வசிப்பவனாக நடித்த வடிவேல், தான் வந்த காரியத்தில் ஏற்பட்ட வெற்றியில் மகிழ்ச்சி எய்தியவனாக சினிமாப் பாட்டொன்றை சீட்டியடித்துக் கொண்டு உற்சாகமாக ஹோட்டலைவிட்டு வெளியேறி விட்டான்.

இந்தச் சம்பவங்கள் நடந்து பதினைந்து தினங்கள் சென்றன. அன்று மாலை பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்த மனோன்மணியின் கண்களை பின் கண்டதொரு விளம்பரம் ஆகர்ஷித்தது.

''மடில்டாவின் மேன்மையான பாதங்கள் பட்டதும் லில்லி மலர்கள், தமக்கு அந்த மென்மை இல்லேயே என்று வெட்கியது போல் சிவந்து ரோஜாவாகி விட்டன' என்கிறார் ஆங்கிலக் கவிஞர் ஒருவர், 'அசோக மரம் மலராது வறட்சியுற்றிருந்தபோது, பெண்கள் பாதங்களால் அதை உதைத்தால் மலருக்கிணைய பாதம் பட்டதும்

வெட்கி மரம் புஷ்பிக்கும் என்று நம்பிய கவிகள் அதைப் பற்றிப் புகழ் பாடியுள்ளார்கள். இப்போது அன்றும் இன்றும் கவிகளாலும், பாணர்களாலும் புகழ் பெற்ற பெண்களின், மலர் அனைய அடிகளுக்கு அழகு செய்து பாதுகாக்க 'அசோகா ஷூ மார்ட்' முன் வந்துள்ளது. சொக்கேசன் பஜாரில் உள்ள அசோகா ஷூ மார்ட்டிற்கு ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள். காஷ்மீரத்திலிருந்து கன்யாகுமரிவரை உள்ள பலவகைப்பட்ட பாதரக்ஷைகளை வகை வகையாக வாங்கி அணிந்து மகிழலாம். கல்யாண சீசனை முன்னிட்டு, சரஸமான விலையில் புதியவித பாத ரக்ஷைகள் விலைக்கு வைக்கப் பெற்றுள்ளன! வாங்க முந்துங்கள்!''

அன்று மாலை, பழனியப்ப கவுண்டரின் புத்தம் புதிய மாடல் காரில், நளினியும், சுரேஷ்குமாரனும் பின் தொடர, சொக்கேசன் பஜாரில் இருந்த அசோகா ஷூ மார்ட்டிற்கு மனோன்மணி விஜயம் செய்தாள்.

உள்ளே நுழைந்ததும் அவளுக்கு தான் பார்த்ததை எதையும் நம்பவே முடியவில்லை. கண்களைப் பறிக்கும் வர்ணக்குழல் விளக்குகளையும் பளபளவென்று கறுப்புக் கற்கள் பதித்த தரையையும், கண்ணாடி பீரோக்களில் அழகாக வரிசையாக அடுக்கப் பெற்றிருந்த நானாவிதவகை செருப்புக்களையும் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டு மலைத்துப்போய் நின்றாள். எதிர்ப்புற சுவரில் தொங்கிய இந்தியாவின் படத்தைப் பார்த்த நளினி, அருகில் சென்று உற்றுக் கவனித்தாள். பட முழுவதிலும் செருப்பு உருவம், ஆங்காங்கே வரையப் பெற்றிருந்ததைக் கண்ட நளினி, அதிசயத்துடன் ''இதென்ன மனோ அக்கா! இந்தப் படம் முழுவதும் செருப்பு மயமாகக் காணப்படுகிறதே!'' என்று கூறிவிட்டு களுக்கென்று நகைத்தாள்.

மாடியறையினின்று உல்லாசமாகப் படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்த அசோகன் கடையில் கூடியிருந்த பலரையும் கவனிக்காது நேராக நளினி நின்று கொண்டிருந்த இடத்திற்கு வந்தான். பெண்கள் அழகையும் புத்திசாலித்தனத்தையும் அணுவணுவாக அளந்து அறிந்து அனுபவப்பட்டிருந்த அவன், நளினியை ஏற இறங்க ஒரு முறை கவனித்துவிட்டு,

'பள்ளிக்கூடத்தைவிட்டு வெளியேறாத பச்சைக் குழந்தை' என்ற அலக்ஷிய பாவனையில் சூள் கொட்டிவிட்டு மனோன்மணியின் பக்கம் திரும்பினான்.

கண்களையும், வாயையும் சுற்றி லேசாகப் படிந்திருந்த சுருக்கங்களினின்று அவள் வயதை ஊகித்துக் கொண்ட அசோகன் திருப்தி அடைந்தவனாக மிகவும் உல்லாசமாக நகைத்துக் கொண்டு, ''அசோகா ஷூ மார்ட்டின் பிராஞ்சுகளைக் குறிக்கும் படம் இது. உங்களுக்கு என்ன தேவை? உங்களை இன்னும் யாரும் கவனிக்கவில்லையா? நான் மெத்த வருந்துகிறேன். அங்கே என்ன செய்கிறாய் பையா! வாடிக்கைகாரர்கள் வீணே எவ்வளவு நேரம் காத்திருப்பார்கள்?'' என்று அதட்டல் போட்டான்.

பிறகு மனோன்மணியருகில் திரும்பி மிகவும் கவர்ச்சிகரமானதொரு புன்முறுவல் பூத்து. ''மிஸ்... என்ன... என்ன உங்கள் பெயர்?'' என்று இழுத்தாற்போல் வினவினான்.

''மனோன்மணி'' என்று பதிலளித்த மனோன்மணியின் முகம் குப்பென்று சிவந்து போயிற்று.

''எத்தனை அழகான பெயர்! மிஸ் மனோன்மணி, இப்படி வாருங்கள். இங்கே வந்து அமருங்கள்! தேவையான பாதரக்ஷைகளை எடுத்து வரச் சொல்கிறேன். அங்கே போக வேண்டாம். அந்தக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்க சிரமமாக இருக்கும்'' என்றான் மிகவும் பரிவுடன்.

நளினியும் மனோன்மணியும், சுரேஷ்குமாரனை அங்கே வேடிக்கை பார்க்கச் சொல்லி நிற்க வைத்துவிட்டு, அசோகன் காட்டிய வழி சென்று, உள்ளே இருந்த ஆசனங்களில் அமர்ந்து கொண்டார்கள்.

''காப்பி அல்லது கூல் டிரிங்க் ஏதாவது கொண்டு வரச் சொல்லட்டுமா?'' என்று மிகவும் உபசாரமாக வினவினான் அசோகன்.

''வேண்டாம், வேண்டாம்'' என்று மறுத்த மனோன்மணி மிகவும் சங்கோஜத்துடன், ''தாங்கள் யார் என்று கூறவில்லையே?'' என்று வினவினாள்.

''அசோகா ஷூ மார்ட்டின் ப்ரோப்ரைட்டர் மிஸ்டர் அசோகன்

என்றுதான் என்னை அறிமுகப்படுத்திக் கொள்ளவேண்டும்'' என்று உல்லாசமாகச் சிரித்த அசோகன், ''உங்களை நான் எங்கேயோ பார்த்த நினைவு ஏற்படுகிறது. எங்கே என்று நினைவுக்கு வரவில்லை'' என்றான்.

பிறகு குனிந்து அவளது பாதங்களை உற்றுக் கவனித்துவிட்டு மிகவும் ஆச்சரியமான குரலில், ''மைகாட்! எவ்வளவு சிறிய பாதங்கள்! இவைகளுக்குச் சரியான பாதரக்ஷைகள் இங்கே கிடைக்குமா என்று சந்தேகிக்கிறேன்'' என்று கூவினான்.

இந்தப் புகழுரையைக் கேட்ட மனோன்மணியின் முகம் குங்குமமெனச் சிவந்து போயிற்று. ''மிகவும் விளையாட்டாகப் பேசுகிறீர்கள். எனக்கு இந்தப் பேச்சுக்கள் பிடிக்காது'' என்று பொய்யான கோபத்துடன் முகத்தைச் சுளுக்கினாள்.

''அப்படியானால் மன்னிக்கவும்'' என்று கூறிய அசோகன் எழுந்திருந்து வெளியே சென்று ''பையா சீக்கிரம் இங்கே வா, இவர்களைக் கவனி'' என்று அதட்டினான்.

தேவையான பாதரக்ஷைகளை வாங்கிக் கொண்டு புறப்பட்ட மனோன்மணி, கடையை விட்டுப் படிகளில் இறங்கினாள்.

''மிஸ் மனோன்மணி! இதை விட்டுவிட்டுப் போகிறீர்களே!'' என்று உல்லாசமாக வினவியபடி பின்னால் வந்து நின்ற அசோகன், ஆசனத்தின் மீது அவள் விட்டுச் சென்ற அழகுப் பையை அவளிடம் நீட்டினான்.

''வந்தனம்'' என்று கூறிவிட்டு பதட்டத்துடன் அதைப் பெற்றுக்கொண்ட மனோன்மணி, காரில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

அழகுப் பையை திரும்பப் பெற்றுக் கொண்டும் அது சமயம் அவளுக்கு அங்கே கடையில், தான் ஏதோ ஒன்றை விட்டுவிட்டுப் போவதைப் போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது.

ஆமாம், அந்த உணர்வில் உண்மை இருந்தது. மனோன்மணி, அசோகா ஷூ மார்ட்டின் அதிபன் அசோகனிடம் தன் உள்ளத்தை விட்டுச் சென்றிருந்தாள்!

23

காலை வேளையின் கடைசி வகுப்பு முடிந்து இடைவேளை ஆரம்பமாகிவிட்டது என்பதற்கு அறிகுறியாக, 'சிவசங்கரி கலாசாலை'யின் பெரிய மணி 'ஓம்! ஓம்!' என்று முழங்கி ஓய்ந்தது. வகுப்புகளினின்று திரளாக நாலாபுறமும் வராந்தாவில் ஒருவர் மேல் ஒருவர் மோதிக் கொண்டு, பரபரப்புடன் மாணவிகள் வெளிவந்த வண்ணம் இருந்தனர். மரத்தினால் ஆன மாடிப்படிகளில் மாணவிகள் இறங்கி ஓடும் பொழுது ஏற்பட்ட காலடி ஓசையும், களுக் களுக் கென்று இடையே எழும் சிரிப்பு ஓசையும், தோட்டத்திற்குள் வந்து கொண்டிருக்கும் வாகனங்கள் எழுப்பும் சப்தமுமாக கலாசாலை அது சமயம் ஒரே ஆரவாரமயமாக விளங்கியது.

இடது கை மடக்கின் மீது அடுக்குப் புத்தகங்களைச் சுமக்கமாட்டாது தூக்கிக்கொண்டு,வலது கரத்தால் தன் சிநேகிதி அருணாவை அணைத்தபடி, பழனியப்பக் கவுண்டரின் செல்வ மகள் நளினி, கலாசாலைப் படிகளில் மெல்ல இறங்கி வந்து கொண்டிருந்தாள். வாயிற்படியருகிலே கதவைத் திறந்தபடி காரை வைத்துக்கொண்டு காத்து நின்ற அவர்கள் வீட்டு டிரைவர் நளினியைக் கண்டதும், அவள் கையிலிருந்த புத்தகச்சுமையைச் சட்டென வாங்கிக் கொண்டான்.

''என்ன அருணா! எத்தனை நாள் வருந்திக் கூப்பிடுகிறேன்? ஒரு நாளைக்கு அப்படியென்றால் இன்றும் வரமாட்டாயா? என்னுடன் வந்து எங்கள் வீட்டில் சாப்பிடக் கூடாதா?'' என்று மனத்தாங்கலுடன் கேட்டாள் நளினி.

''பெரியம்மா அன்புடன் செய்து கொடுத்தனுப்பியிருக்கும் டிபன் வீணாகப் போய்விடுமே? மன்னித்துக்கொள் நளினி'' என்று அருணா, தினமும் அளிக்கும் பதிலை அன்றும் அளிக்கவே, பழனியப்ப கவுண்டரின் செல்வ மகள் பட்டுபாவாடை சலசலக்க காரில் வேகமாக ஏறி உட்கார்ந்து கொண்டாள். ''அருணா! எனக்கு உன்மேல் ரொம்பக் கோபம் ஏற்படுகிறது. ஊரிலிருந்து திரும்பி

வந்ததிலிருந்து நீ மிகவும் மாறிவிட்டிருக்கிறாய்!'' என்று கூறிவிட்டு முகத்தைக் குலுக்கினாள்.

''ஆமாம்! இப்பொழுது நான் கலாசாலை மாணவி. அதனால் கர்வம் ஏற்பட்டிருக்கிறது என்று வைத்துக்கொள். சரி, சரி நேரமாகிறது. போய்ச் சாப்பிட்டு விட்டுச் சீக்கிரம் வா, நேற்று லைப்ரரியிலிருந்து எடுத்த அந்தப் புத்தகத்தை இன்று படிக்க ஆரம்பிப்போம்.'' என்றாள் அருணா புன்முறுவலுடன். இதற்குள் நளினியின் கார் இடத்தைவிட்டு நகரத் தொடங்கவே அருணா தன் சிநேகிதிக்குக் கையை அசைத்து போய்வரும்படி ஜாடை செய்துவிட்டு தோட்டத்தின் மறுகோடியை நோக்கி நடந்தாள்.

வெளிப்புற மதில் சுவர் ஓரமாகப் பச்சைப் பாய் விரித்ததுபோல் செழுமையாக வளர்ந்திருந்த புல் தரை மீது சென்று அமர்ந்து கொண்ட அருணா, தன் கையில் சுமந்து கொண்டிருந்த சிறு தோல் பெட்டியைத் திறந்தாள். பெட்டியில் துணியில் பத்திரமாகச் சுற்றி வைக்கப்பட்டிருந்த சிறிய சீசா ஒன்றையும் அலுமினியத்தினால் ஆன சிறு டப்பா ஒன்றையும் வெளியே எடுத்தாள். சீசாவிலிருந்த நீரில் கையைக் கழுவிக் கொண்டு, சுவரின் மீது சாய்ந்து கொண்டு, தன்னைச் சுற்றிலும் நடக்கும் நிகழ்ச்சிகளை வேடிக்கை பார்த்தவண்ணம், அலுமினிய டப்பாவுக்குள் அடைக்கப்பட்டிருந்த தயிர் சாதத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துச் சாப்பிடலானாள். ஒரு வாய் சாதத்தை வாயில் போட்டுக் கொண்டதும், அதை விழுங்க சீசாவிலிருந்து ஒரு வாய்த் தண்ணீரை அவள் பருக வேண்டியிருந்தது.

தயிர் என்று பெயருக்கு ஒரு துளி சாதத்தின் மீது விட்டுப் பிசைந்து விட்டிருந்தாள், ஜெகதாவின் அருமைச் சமையற்காரி. அவசரத்தில் அன்றைய தினம் அவள் சாதத்திற்கு உப்புப் போடவும் மறந்து விட்டிருந்தாள். காய்ந்த களிமண்போல், விழுங்க சிரமமாகவும், சுவையற்றும் இருந்த அந்த தயிர் சாதத்தை ஒருவாறு சாப்பிட்டு முடித்த அருணா, சீசாவில் மீதமிருந்த தண்ணீரால் பாத்திரத்தையும் தன் கைகளையும் கழுவிக் கொண்டு, பாத்திரத்தைத் துணியில் சுற்றிப் பெட்டிக்குள் வைத்து மூடிவிட்டு, புத்தகம் ஒன்றை எடுத்துப் பிரித்து மடிமீது வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தாள்.

புத்தகத்தின் ஏடுகளை அவளது கரங்கள் புரட்டிக் கொண்டிருந்தன. ஆனால் அவள் மனம் படிப்பில் சிறிதும் நாட்டமுறாது பற்பல எண்ணி, சஞ்சலத்தில் மூழ்கிக் கிடந்தது. புத்தகத்திலின்று தலையை நிமிர்த்தி, தனக்கு முன் பரந்து கிடந்த கலாசாலையின் பெரிய தோட்டத்தைக் கவனித்த அருணா ஏக்கத்துடன் பெருமூச்செறிந்தாள். எதிர்புறமாக இருந்த கலாசாலையைச் சேர்ந்த ஹாஸ்டல் கட்டடத்தின் சாப்பாட்டு அறையின் வராந்தாவிலே, மாணவிகள் சிலர் நின்று கொண்டிருந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் வெளியூரிலிருந்து கல்வி கற்க வந்திருந்தார்கள். ஹாஸ்டலில் தங்கிப் படிக்க வெளியூரிலிருந்து வந்திருக்க வேண்டுமானால், அவர்களின் செல்வநிலை கட்டாயம் உயர்வாகத்தான் இருக்க வேண்டும். பணவசதி அற்ற பெற்றோர்களுக்கு வெளியூரிலுள்ள கலாசாலையில் பெண்களைப் படிக்க அனுப்ப பைத்தியமா பிடித்திருக்கிறது.

சாப்பாடு முடிந்ததும், கையைக் கழுவ வராந்தாவிலிருந்த குழாய்க்கு வந்த அந்த மாணவிகள் பேச்சும், சிரிப்பும் கட்டடமே அதிர்ந்து விடும்போல் ஒலித்துக் கொண்டிருந்தன. 'பணம் என்பதன் பிரச்னையே இல்லாதபோதுதான், அவ்வளவு உரக்கச் சிரித்து உற்சாகமாகப் பேசி ஆர்ப்பரிக்க முடியும்' என்று தனக்குள் எண்ணிய அருணா, விரல் நகங்களைக் கடித்தபடியே யோசனையுடன் தனது திருஷ்டியை வேறு பக்கம் திருப்பினாள்.

தோட்டத்தின் நடைபாதைமீது 'விர்' என்று வேகமாக ஒரு பெரிய கார் சப்தமிடாது வந்து நின்றது. காரின் கதவைத் திறந்து கொண்டு மிகவும் ஒயிலாக, கையில் சில புத்தகங்களுடன் இறங்கிய பெண்ணை உற்றுக் கவனித்தாள் அருணா. அவளுடைய வகுப்பிலே படிக்கும் மாணவிகளில் ஒருத்திதான் அந்தப் பெண். காலையில் வகுப்பிற்கு மஞ்சள் நிறப் பாவாடையும், சிவப்பு தாவணியும் அணிந்து வந்திருந்தாள். இடைவேளைக்கு சாப்பிட வீட்டிற்குச் சென்று வந்தவள், வெள்ளைப் பட்டுப் பாவாடையும் ரோஜா நிற தாவணியுமாக வேறு அலங்காரத்தில் திரும்பி வந்திருந்தாள்.

''சிவசங்கரி கலாசாலை'யில் அருணா சேர்ந்து இரண்டுவார

காலந்தான் சென்றிருந்தது. அதற்குள் அவளுக்குக் கலாசாலை வாழ்க்கையைப் பற்றிய பல புதிய அனுபவங்கள் ஏற்பட்டிருந்தன. நகரத்திலேயே 'சிவசங்கரி கலாசாலை' மிகவும் பிரசித்திப் பெற்றதாக இருந்தது. அதில் படிப்பதையே மிகவும் பெருமையாக எண்ணினார்கள் மாணவிகள். அதனாலேயே அந்தக் கலாசாலையில் மற்றக் கலாசாலைகளைவிட அனுமதி கிடைப்பதற்குப் போட்டியும் சிரமமும் அதிகம் ஏற்பட்டிருந்தன. கலாசாலையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவிகள், பல்வேறு வகுப்பிலும் படித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் அந்த நகரத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். சிலர் வெளியூரிலிருந்து வந்தவர்களாக இருந்தனர்.

அவர்களில் சிலர் கல்வியினால் வாழ்க்கைத் துறையில் முன்னேற எண்ணி படிக்க வந்திருந்தனர். சிலர் பெருமைக்காகப் படிக்க வந்தனர். சிலர் கலாசாலையே ஒரு பொழுது போக்கு ஸ்தாபனமென்று கருதி வந்து சேர்ந்திருந்தனர். ஒரு சிலர், எதற்காகப் படிக்கிறோம், என்னத்திற்காகப் படிக்கிறோம் என்ற ஒருவித கொள்கையுமின்றி, பந்தய மைதானத்திலே வெற்றி பெற்ற குதிரைகள் வரிசையில் இந்தக் குதிரையும் கூட ஓடியது என்ற நிலையில் உள்ள குதிரைபோல், 'கலாசாலையில் படித்தாள்' என்ற பெயருக்காகப் படிக்க வந்திருந்தார்கள். வேறு சிலர், தங்கள் வாழ்விலே குறிப்பாகக் கொண்டிருந்த சில லக்ஷியங்களுக்காகக் கல்வி கற்க ஆரம்பித்து, இட நெருக்கடியில், தாங்கள் விரும்பிய கல்வியைக் கற்க இயலாது, ஏதாவது ஒரு பாகத்தில் இடம் கிடைத்தால் போதும் என்று கலாசாலைக்குள் நுழைந்திருந்தார்கள். பெருமைக்கு, ஆசைக்கு, படிப்பிற்கு, வாழ்க்கையில் முன்னேறுவதற்கு என்று நாலாவித நோக்கங்களுடன் கல்வி கற்கக் கூடியிருந்த மாணவியர் இடையே கல்வியானது ஒற்றுமையுண்டாக்காது இருந்ததில் வியப்பே இல்லை.

கல்வி கற்பதன் நோக்கத்தில் உள்ள வேறுபாடுகள் வளரும் யுவதிகளின் மன நிலையிலே வேறுபாடுகளை உண்டாக்கி விட்டிருந்ததனால், கல்வியானது அனைவரையும், ஒன்றாகப் பிணைக்கச் சக்தியற்றிருந்தது. அதன் பயனாக, மாணவிகள் பாஷை, ஜாதி, வகுப்பு, ஒரு ஊரைச் சேர்ந்தவர்கள் என்று தங்கள் தங்களுக்குள்ளே பிரிந்து, மற்றவர்களுடன் ஒன்று கலந்து உறவாடாது ஒதுங்கிப் போய்க் கொண்டிருந்தனர். ஜாதியும், மதமும், ஊர்களும்

மாணவிகளைப் பிரிப்பது போதாதுபோல் சில சமயங்களில் அந்தஸ்தும் குறுக்கிட்டு அவர்களை ஒன்றுகூடி நண்பர்களாக்காது தடுத்தது என்றால் மிகையில்லை. காலையில் ஒரு உடையும் மாலையில் ஒரு அலங்காரமுமாக, விதவிதமான வாகனங்களில் வந்து கலாசாலைக்குள் இறங்கிய, நகரத்துச் செல்வச் சீமான்களின் அருமைப் புத்திரிகள், தங்கள் அந்தஸ்திற்குச் சமதையற்ற அருணா போன்ற பெண்களுடன் கூடிப் பேசி நட்பு பாராட்ட விரும்பாது, முகவாயை நிமிர்த்திக் கொண்டு புருவங்களை வளைத்து, ஆகாயத்தைப் பார்த்த வண்ணம் தனி உலகிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தனர்.

கலாசாலையில் வந்து சேர்ந்த சில தினங்களில் அருணாவிற்கு, மாணவிகளின் தராதரமும், அவர்களது மனப்போக்கும் நன்றாகப் புரிந்துவிட்டது. தன்னுடன் வலியவந்து பேசி நட்புரிமை பாராட்டிய சக மாணவிகளிடம் அவள் அன்பாகவே நடந்து கொண்டாள். தங்கள் அந்தஸ்தையும் அழகையும் எண்ணி கர்வப்பட்டு ஒதுங்கிச் சென்ற பெண்களிடம் அவள் வலியச் சென்று நட்புப் பாராட்ட விரும்பவில்லை. வகுப்புத் தோழிகளில் சிலருடன் அவள் கலந்து உறவாடிய போதிலும், நளினி ஒருத்தியைத்தான் அவள் தன் உயி[illegible] தோழியாக எண்ணி, அவள் சிநேகிதத்துக்குத் தான் மதிப்பு[illegible] கொடுத்துப் போற்றி வந்தாள்.

வேடிக்கை பார்ப்பதைவிட்டு, புத்தகத்தின் மீது அருணா தன் பார்வையைத் திருப்பினாள். வேகமாகத் திருப்பும் போது, புத்தகத்தினின்று ஏடுகள் சில அவள் கையில் கழன்று வந்துவிட்டன. பாடப்புத்தகங்களை புதியதாகக் கடைகளில் வாங்குவதைவிட முதல் வருடம் படித்தவர்களிடம் பாதி விலைக்கு வாங்கிப் படித்தால் போதும் என்று ஜெகதா உத்தரவிட்டிருந்ததன் பயனாக, அருணாவிடம் இருந்த புத்தகங்கள் அனைத்தும் ஏடும், இதழுமாகப் பிரிந்தும் அக்கு வேறு ஆணி வேறாகக் கிழிந்தும் கிடந்தன. 'கலாசாலையில்' சேர்ந்து படிக்க வேண்டும் என்று அருணாவை வற்புறுத்தி வரவேற்ற ஜெகதா, அதற்குப் பிறகு நடந்து கொண்ட முறை அருணாவின் மனத்தை மிக்க வருத்தத்தில் ஆழ்த்திவிட்டிருந்தது.

காலந்தான் சென்றிருந்தது. அதற்குள் அவளுக்குக் கலாசாலை வாழ்க்கையைப் பற்றிய பல புதிய அனுபவங்கள் ஏற்பட்டிருந்தன. நகரத்திலேயே 'சிவசங்கரி கலாசாலை' மிகவும் பிரசித்திப் பெற்றதாக இருந்தது. அதில் படிப்பதையே மிகவும் பெருமையாக எண்ணினார்கள் மாணவிகள். அதனாலேயே அந்தக் கலாசாலையில் மற்றக் கலாசாலைகளைவிட அனுமதி கிடைப்பதற்குப் போட்டியும் சிரமமும் அதிகம் ஏற்பட்டிருந்தன. கலாசாலையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவிகள், பல்வேறு வகுப்பிலும் படித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் அந்த நகரத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். சிலர் வெளியூரிலிருந்து வந்தவர்களாக இருந்தனர்.

அவர்களில் சிலர் கல்வியினால் வாழ்க்கைத் துறையில் முன்னேற எண்ணி படிக்க வந்திருந்தனர். சிலர் பெருமைக்காகப் படிக்க வந்தனர். சிலர் கலாசாலையே ஒரு பொழுது போக்கு ஸ்தாபனமென்று கருதி வந்து சேர்ந்திருந்தனர். ஒரு சிலர், எதற்காகப் படிக்கிறோம், என்னத்திற்காகப் படிக்கிறோம் என்ற ஒருவித கொள்கையுமின்றி, பந்தய மைதானத்திலே வெற்றி பெற்ற குதிரைகள் வரிசையில் இந்தக் குதிரையும் கூட ஓடியது என்ற நிலையில் உள்ள குதிரைபோல், 'கலாசாலையில் படித்தாள்' என்ற பெயருக்காகப் படிக்க வந்திருந்தார்கள். வேறு சிலர், தங்கள் வாழ்விலே குறிப்பாகக் கொண்டிருந்த சில லக்ஷியங்களுக்காகக் கல்வி கற்க ஆரம்பித்து, இட நெருக்கடியில், தாங்கள் விரும்பிய கல்வியைக் கற்க இயலாது, ஏதாவது ஒரு பாகத்தில் இடம் கிடைத்தால் போதும் என்று கலாசாலைக்குள் நுழைந்திருந்தார்கள். பெருமைக்கு, ஆசைக்கு, படிப்பிற்கு, வாழ்க்கையில் முன்னேறுவதற்கு என்று நாலாவித நோக்கங்களுடன் கல்வி கற்கக் கூடியிருந்த மாணவியர் இடையே கல்வியானது ஒற்றுமையுண்டாக்காது இருந்ததில் வியப்பே இல்லை.

கல்வி கற்பதன் நோக்கத்தில் உள்ள வேறுபாடுகள் வளரும் யுவதிகளின் மன நிலையிலே வேறுபாடுகளை உண்டாக்கி விட்டிருந்ததனால், கல்வியானது அனைவரையும், ஒன்றாகப் பிணைக்கச் சக்தியற்றிருந்தது. அதன் பயனாக, மாணவிகள் பாஷை, ஜாதி, வகுப்பு, ஒரு ஊரைச் சேர்ந்தவர்கள் என்று தங்கள் தங்களுக்குள்ளே பிரிந்து, மற்றவர்களுடன் ஒன்று கலந்து உறவாடாது ஒதுங்கிப் போய்க் கொண்டிருந்தனர். ஜாதியும், மதமும், ஊர்களும்

மாணவிகளைப் பிரிப்பது போதாதுபோல் சில சமயங்களில் அந்தஸ்தும் குறுக்கிட்டு அவர்களை ஒன்றுகூடி நண்பர்களாக்காது தடுத்தது என்றால் மிகையில்லை. காலையில் ஒரு உடையும் மாலையில் ஒரு அலங்காரமுமாக, விதவிதமான வாகனங்களில் வந்து கலாசாலைக்குள் இறங்கிய, நகரத்துச் செல்வச் சீமான்களின் அருமைப் புத்திரிகள், தங்கள் அந்தஸ்திற்குச் சமதையற்ற அருணா போன்ற பெண்களுடன் கூடிப் பேசி நட்பு பாராட்ட விரும்பாது, முகவாயை நிமிர்த்திக் கொண்டு புருவங்களை வளைத்து, ஆகாயத்தைப் பார்த்த வண்ணம் தனி உலகிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தனர்.

கலாசாலையில் வந்து சேர்ந்த சில தினங்களில் அருணாவிற்கு, மாணவிகளின் தராதரமும், அவர்களது மனப்போக்கும் நன்றாகப் புரிந்துவிட்டது. தன்னுடன் வலியவந்து பேசி நட்புரிமை பாராட்டிய சக மாணவிகளிடம் அவள் அன்பாகவே நடந்து கொண்டாள். தங்கள் அந்தஸ்தையும் அழகையும் எண்ணி கர்வப்பட்டு ஒதுங்கிச் சென்ற பெண்களிடம் அவள் வலியச் சென்று நட்புப் பாராட்ட விரும்பவில்லை. வகுப்புத் தோழிகளில் சிலருடன் அவள் கலந்து உறவாடிய போதிலும், நளினி ஒருத்தியைத்தான் அவள் தன் உயிர்த் தோழியாக எண்ணி, அவள் சிநேகிதத்துக்குத் தான் மதிப்புக் கொடுத்துப் போற்றி வந்தாள்.

வேடிக்கை பார்ப்பதைவிட்டு, புத்தகத்தின் மீது அருணா தன் பார்வையைத் திருப்பினாள். வேகமாகத் திருப்பும் போது, புத்தகத்தினின்று ஏடுகள் சில அவள் கையில் கழன்று வந்துவிட்டன. பாடப்புத்தகங்களை புதியதாகக் கடைகளில் வாங்குவதைவிட முதல் வருடம் படித்தவர்களிடம் பாதி விலைக்கு வாங்கிப் படித்தால் போதும் என்று ஜெகதா உத்தரவிட்டிருந்ததன் பயனாக, அருணாவிடம் இருந்த புத்தகங்கள் அனைத்தும் ஏடும், இதழுமாகப் பிரிந்தும் அக்கு வேறு ஆணி வேறாகக் கிழிந்தும் கிடந்தன. 'கலாசாலையில்' சேர்ந்து படிக்க வேண்டும் என்று அருணாவை வற்புறுத்தி வரவேற்ற ஜெகதா, அதற்குப் பிறகு நடந்து கொண்ட முறை அருணாவின் மனத்தை மிக்க வருத்தத்தில் ஆழ்த்திவிட்டிருந்தது.

பெருமைக்கு ஆசைப்பட்ட ஜெகதா, தன் அந்தஸ்திற்காக கௌரவம் பாராட்டி அருணாவைப் பழனியப்ப கவுண்டரின் மகளுக்குச் சமதையாக சிவசங்கரி கலாசாலையில் தானே முன்வந்து சேர்த்தாள். கலாசாலைக்குப் பணம் கட்டி, வேண்டிய ஆடைகள் தைத்து, தடபுடலாகத் தன் காரிலே தானே கொண்டு முதல் நாள் அருணாவைக் கலாசாலையில் சேர்த்துவிட்டு வீடு திரும்பிய ஜெகதா, வீட்டிற்கு வந்ததும், தன் கைப் பையைத் திறந்து துழாவியபோது தான் அவளுக்கு உண்மை விளங்கியது. முதல் நாள் பாங்கியிலிருந்து எடுத்து வந்த முன்னூறு ரூபாய்களும், அருணாவைக் கலாசாலையில் சேர்க்கும் வைபவத்தில் தண்ணீராய் கரைந்து மறைந்து விட்டிருந்தன.

பரபரப்புடன் மேஜையைத் திறந்து, ஒரு பென்சிலையும் பேப்பரையும், எடுத்துக் கொண்டு, கணக்குப் போட உட்கார்ந்தாள். கலாசாலைச் சம்பளம், புத்தகம், பேப்பர், பென்ஸில், நோட்டுப் புத்தகங்கள் வகையறா. எதேச்சையான செலவுகள் என்று அருணாவின் கல்விக்காக ஏற்படப் போகும் செலவுகளைப் போட்டு ஆராய்ந்து பார்த்ததில் அவளுக்கு மயக்கமே வந்து விட்டது! அருணாவை தொடர்ந்தாற் போல் படிக்க வைப்பதா? நிறுத்திவிடுவதா? நிறுத்திவிட்டால், லோகநாயகி என்ன நினைப்பாள்? பார்ப்பவர்களுக்கு கேவலமல்லவா! தொடர்ந்து படிக்க வைத்தால் செலவை எப்படிச் சமாளிப்பது!'' என்று இத்தியாதி விஷயங்களைப் பற்றி அவள் தன் மூளையைக் குழப்பிக் கொண்டு யோசித்து, கடைசியாக ஒரு தீர்மானத்திற்கு வந்தாள்.

ஜெகதாவின் தீர்மானம் அருணாவை மெத்த சங்கடத்தில் ஆழ்த்தியதுடன், அவள் உள்ளத்தை வெகுவாக நோகவும் செய்தது. பெரியம்மாவின் புதிய திட்டத்தின்படி அருணா, தினசரி, கலாசாலைக்கு பஸ்ஸில் போய் வர நேர்ந்தது. ஆனால் லோகநாயகியோ அல்லது மற்றவர்கள் கண்களிலோ அவள் பஸ்ஸில் போவது தென்பட்டுவிட்டால் வீட்டில் கார் ரிப்பேர் ஆகிவிட்டது என்றோ அல்லது டிரைவர் வரவில்லை என்றோ சாதுர்யமாகப் பொய் சொல்லி அந்தஸ்தைக் காப்பாற்ற வேண்டும் என்று அவள் பெரியம்மாவால் எச்சரிக்கப்பட்டிருந்தாள். இடைவேளை போஜனத்தைக் காலையில் தன்னுடன் கூடவே பெட்டியில் எடுத்துப்

போக வேண்டும். நளினி அது பற்றி ஏதாவது விசாரித்தால், சாப்பாடு ஆள்மூலம் வீட்டிலிருந்து வரும் என்று ஜம்பமாகப் பேசவேண்டும் என்று வற்புறுத்தப் பட்டிருந்தாள். அருணாவிற்கு பஸ்ஸிலே சென்று படிக்கவும், டிபனைச் சுமந்து கொண்டு கலாசாலை போகவும் கஷ்டமாகவோ வெட்கமாகவோ இருக்கவில்லை. அவளை விட மிகவும் எளிய நிலைமையில் உள்ள சில பெண்களும் அவளுடன் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்தார்கள்.

வீட்டில் காலையில் சமையல் செய்து மற்றவர்களுக்கு பரிமாறிவிட்டு, தாங்களும் சாப்பிட்டுவிட்டு, கையில் கொஞ்சம் டிபன் எடுத்துக் கொண்டு நடந்து வந்து கலாசாலையில் படித்துக் கொண்டிருந்தார்கள் அந்தச் சில மாணவிகள். அவர்களது விடாமுயற்சியும், மெய் சோராத தன்மையும் அருணாவிற்கு உற்சாகமூட்டின.

ஆனால், சிநேகிதியிடமும், மற்றவர்களிடமும் பெருமைக்காகப் பொய் சொல்லி கபடமாக வாழ பெரியம்மா வற்புறுத்தியதை அவள் மிகவும் வெறுத்தாள். அவ்வாறு வற்புறுத்தப்பட்ட போதெல்லாம் அவளுக்கு வருத்தமும், மனத்துயரமும் ஏற்பட்டது. 'பெரியம்மாவின் ஆதரவில் கல்வி கற்க வந்ததனால்தானே இந்த கட்டுப்பாடு? ஏழை என்று தலை நிமிர்ந்து உண்மையை ஒப்புக்கொள்ளக்கூடாது என்ற நிர்ப்பந்தம். பிறர் தயவை நாடுவதனால்தானே? - பெரியம்மாவின் ஆதரவின்றித் தானே படிக்க வசதிகள் ஏற்படுமாகில், வாழ்க்கை எவ்வளவு இனிமையாக இருக்கும்? அத்தகைய ஒரு சுதந்திரம் கிட்டுமா? அதற்கு வழி?' என்று பற்பல எண்ணி அவள் அடிக்கடி சஞ்சலத்தில் ஆழ்ந்து போவாள்.

அன்றைய தினம், விஞ்ஞான வகுப்பு ஆசிரியை அவர்கள் படிக்க வேண்டிய சில புத்தகங்களின் பெயரைச் சொல்லி அவைகளை வாங்கி வைத்துக் கொண்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று குறிப்பிட்டிருந்தாள். ஆசிரியை கூறிய அவ்வளவு புத்தகங்களையும் வாங்கி, அப்படியே படித்து, அறிவைப் பெருக்கிக் கொண்டு வகுப்பில் முதன்மையாகப் பிரகாசிக்க வேண்டும் என்று அருணாவுக்கு ஆசை பொங்கிக்கொண்டு எழுந்தது. புத்தகங்களின் விலையைக் கூட்டிப் பார்த்துவிட்டு, ஜெகதாவை நினைத்த பொழுது

அவளது உற்சாகம் சோடாபாட்டிலின் நுரைபோல் விர் என்று அடங்கிப் போயிற்று.

பெரியம்மாவின் தயவினால் வாழும் தனது அடிமை நிலைமை, தன் பிறந்த வீட்டின் மாறாத வறுமை, இரண்டையும் திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்த அருணாவிற்கு துக்கத்திலே நெஞ்சு பிளந்து விடும்போல் விம்மியது.

புத்தகத்தைப் படிக்க மனமின்றி மூடி, பெட்டிக்குள் போட்டுக் கொண்டு, அலுப்புடன் இடத்தைவிட்டு எழுந்து இடைவேளைப் பொழுதைக் கழிக்கும் நிமித்தம் கலாசாலையின் வாசக சாலைக்குள் நுழைந்தாள். அன்றைய தினசரிப் பத்திரிகை ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு ஜன்னல் ஓரமாக ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு படிக்க ஆரம்பித்தாள். எதேச்சையாகப் பத்திரிகையைப் புரட்டியபோது, ஒரு சிறு விளம்பரம் அவள் கண்களில் தென்பட்டது.

''தேவை. பாதிப் பொழுதிற்கு மட்டும் குமாஸ்தாவாகப் பணிசெய்ய, எஸ்.எஸ்.எல்.ஸி.வரை படித்துள்ள பெண் குமாஸ்தா வேண்டும். கையெழுத்து அழகாகவும், புரியும்படியும் இருப்பது அவசியம். முழு விவரத்திற்கு முப்பதாம் தேதிக்குள் தினசரி மாலை ஐந்து மணியிலிருந்து ஏழு மணிக்குள் ஸ்ரீமதி கௌரி, 'மாதர் திலகம்' ஆசிரியை அவர்களை, மேற்கு வீதி பதினெட்டாம் நெம்பர் என்ற விலாசத்தில் பேட்டி காணலாம்'' என்று இருந்தது.

அதைப் படித்ததும், அருணாவின் மனதில் சட்டென ஒரு யோசனை உதயமாயிற்று. அந்த யோசனை அவளுக்கு அதிக உற்சாகத்தை உண்டு பண்ணியது.

24

ஸ்ரீமதி கௌரி அம்மாளின் ஆபீஸ் அறைக்குள் காலை வைத்த அருணா, கிரீச்சிட்டு அலறிவிட்டாள். மேஜையடியில் சுருண்டு கிடந்த பெரிய வேட்டை நாய் ஒன்று அவளைக் கண்டதும் குபீரென்று பாய்ந்து வந்து உடலைச் சிலிர்த்துக் கொண்டு பயங்கரமாக குரைக்கத்

தொடங்கியது. அந்த வரவேற்பைக் கண்டதும் அருணாவின் உடல் வெடவெட என்று நடுங்கத் தொடங்கியது.

''சே ரஞ்சிதம்! 'ஷட் அப்!' போய் அங்கே படு!'' என்று பீரோ ஒன்றின் பின்னாலிருந்து ஒரு ஸ்திரீயின் அதட்டல் குரல் எழுந்தது. போன உயிரைத் திரும்பப் பெற்றவளாக அருணா நன்றியுடன் அந்தக் திக்கை நோக்கினாள். கூரை முகப்பைத் தொட்டுவிடும் போன்று அறையின் நடுவே கம்பீரமாக நின்று கொண்டிருந்த ஒரு பெரிய இரும்பு பீரோவின் பின்னாலிருந்து, காகிதங்கள் புரட்டப்படும் ஓசை மட்டும் கேட்டது. ஆளைக் காணவில்லை.

காதுகளை நிமிர்த்திய வண்ணம் பற்கள் வெளியே தெரியும் கோரப் பார்வையோடு அருணாவை அப்படியே கபளீகரம் செய்துவிடப் போவதுபோல், உக்கிரமாக வந்து நின்ற ரஞ்சிதம், வாலைக் குழைத்துக் கொண்டு 'ங்குங்கு!' என்று குழைவாகவும் கொஞ்சலாகவும் பீரோவைப் பார்த்து உறுமியது. ''சே! போய் படு. துஷ்டக் கழுதை'' என்று மீண்டும் ஒரு அதட்டல் பீரோவுக்குப் பின்னாலிருந்து எழவே, ரஞ்சிதம் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு மேஜையின் கீழ் சென்று உடலைச் சுருட்டிக் கொண்டது.

''நீதானே என்னைப் பார்க்கவேணும் என்று சற்று முன் சீட்டுக் கொடுத்து அனுப்பிய பெண்? உட்கார்.... வந்து விட்டேன்!'' என்று பீரோவுக்குப் பின்னாலிருந்து எழுந்த உத்தரவு தனக்குத்தான் என்பதை அறிந்து கொள்ள அருணாவுக்குச் சில வினாடிகள் பிடித்தன. கடைக்கண்ணால் ரஞ்சிதத்தின் நிலையை கவனித்தபடி, அருகிலிருந்த ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள்.

''விளம்பரத்தைப் பார்த்துவிட்டு நேரில் பேட்டியளிக்க வந்திருக்கிறாயா?'' என்று மீண்டும் பீரோவின் பின்னாலிருந்து அந்தக் குரல் எழுந்தது. கம்பீரமும், அதிகாரமுமாக தொனித்த அந்த 'அசரீரி' வாக்கு, ஸ்ரீமதி கௌரியம்மாளுடையதாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்ட அருணா, ''ஆமாம். அம்மா!'' என்றாள் பதிலுக்கு ஹீனஸ்வரத்தில்.

''சாப்பிட்டு பத்து நாளாகியதுபோல் பேசுகிறாயே? உம்!'' என்று

அதட்டலாகவும் பரிகாசமாகவும் கேட்ட வண்ணம், வரட்சியாக நகைத்துக் கொண்டு, பீரோவின் பின்னாலிருந்து வெளிப்பட்ட ஆறரையடி உருவத்தை வியப்புடன் கவனித்தாள் அருணா.

''உன் பெயர் அருணாவா? அழகான பெயர். எனக்கு மிகவும் பிடித்தமான பெயர்'' என்று பேசிய ஸ்ரீமதி கௌரி, தன் முகத்தை அலங்கரித்த ஒரு அங்குல கன பரிமாணமுள்ள கறுப்பு பிரேமிட்ட மூக்குக் கண்ணாடியை, இடது கரத்தில் கழற்றி எடுத்துக் கொண்டாள். கம்பளிப் பூச்சிகள் போன்று மிகவும் கட்டையாகத் தோன்றிய புருவங்களை, ஆச்சர்ய பாவத்தில் ஒரு முறை நெற்றிமீது உயர்த்திவிட்டு, மூக்குக் கண்ணாடியை மீண்டும் அணிந்து கொண்டாள்.

''உன்னுடைய கையெழுத்து மிகவும் அழகாக இருக்கிறது. எனக்கு அதைப் பார்த்ததுமே பிடித்துவிட்டது'' என்று தனது முடிவை ரத்னச் சுருக்கமாகத் தெரிவித்துவிட்டு, அருகிலிருந்த சுழல் நாற்காலியில் வந்து சாய்ந்து கொண்டாள். கால் மீது காலைப் போட்டுக் கொண்டு நாற்காலியை அருணா பக்கம் சுழற்றி, ''உன்னை வேலைக்கு எடுத்துக் கொள்ள எனக்குச் சம்மதம். மாதம் முப்பது ரூபாய்கள் தான் ஆரம்பத்தில் என்னால் கொடுக்க முடியும். வேலை திருப்தியாக இருந்தால் பிறகு அதிகம் கொடுப்பேன். வேலையை நாளையிலிருந்து ஆரம்பிக்க சம்மதமா, சொல்?'' என்று அதட்டிக் கேட்டாள்.

''சம்மதம்'' என்று அருணாவின் உதடுகள் மெல்ல அசைந்தன. அவளது கண்கள், கௌரியம்மாளின் தோற்றத்திலே லயித்துப்போய், வியப்பினால் வெடித்து விடும்போல் விழித்தன.

ஆபீஸ் அறைக்குள் நுழையுமுன்பு அருணா, ஸ்ரீமதி கௌரியம்மாளைப் பற்றித் தன் கற்பனையிலே ஒரு உருவம் சிருஷ்டித்து வைத்துக் கொண்டிருந்தாள். அதன்படி, 'மாதர் திலக'த்தின் ஆசிரியை ஒல்லியாக ஒடிந்த மேனியும், தாமரைப் பூ போல் வெளுத்த கூந்தலுமாக ஐம்பது வயதுக்கு மேற்பட்ட ஒரு பெண்மணியாக இருந்தாள். ஆனால் அவள் கற்பனை கௌரியம்மாளுக்கும், உண்மையில் எதிரில் வந்து அமர்ந்த

கௌரியம்மாளுக்கும் இருந்த வேற்றுமை அவளை அப்படியே ஆச்சர்யக் கடலில் ஆழ்த்தி விட்டிருந்தது.

ஆசிரியை கௌரியம்மாளுக்கு வயது சுமார் முப்பத்தைந்துதான் இருக்கும். ஆனால் அவளது அலங்காரமும் தோற்றமும் வயதை சிறிது அதிகமாகவே எடுத்துக் காட்டின. தனது ஆடை விஷயத்தில் ஸ்திரீகள் சாதாரணமாக எடுத்துக்கொள்ளும் கவனம் அந்தம்மாளிடம் காணப்படவில்லை. அதற்குப் பதில் வேண்டுமென்றே மேற்கொண்ட ஒரு அசட்டை மனோபாவம்தான் பிரதிபலித்தது. முழங்கைவரை தைத்த வெள்ளை ரவிக்கையும், பத்து வருடங்களுக்கு முன் நாகரிகமாகத் தெரிந்த லுங்கிக் கட்டமிட்ட பழுப்பு வர்ணச்சேலையும், அவள் உடுத்தியிருந்தாள். காதிலோ, மூக்கிலோ, கழுத்திலோ எந்தவிதமான ஆபரணமும் காணப்படவில்லை. இடது கரத்தில் மட்டும், ஆண்கள் அணிந்து கொள்ளும் கைக் கடிகாரம் ஒன்று காட்சியளித்தது. இழை இழையாக ஆங்காங்கே நரைத்து விட்டிருந்த தனது கூந்தலை வாரி, உச்சந் தலையில் அலக்ஷியமாக அந்தம்மாள் முடித்துக் கொண்டிருந்த விதம், ''நாகரிகத்தில் எனக்கு நம்பிக்கையில்லை'' என்று உரத்துக் கூவுகிறதைப் போலிருந்தது.

''பேயையோ பிசாசையோ கண்டது போல் பயப்படுகிறாயே?'' என்று வினவின கௌரியம்மாள் உரத்த குரலில் கடகடவென்று நகைத்தாள். 'எதுவரை படித்திருக்கிறாய்?' என்று தொண்டையைக் கனைத்துக் கொண்டு முடிவில் வினவினாள் அவள்.

''சிவசங்கரி கலாசாலையில் முதல் வகுப்பில் படிக்கிறேன், உபகாரச் சம்பளம் கிடைக்காததனால், ஒழிந்த வேளையில் வேலை செய்து மேலே படிக்க ஆசைப்பட்டு, உங்களைக் காண வந்தேன்'' என்று கூறினாள் அருணா.

கலாசாலை என்றதும் கௌரியம்மாள் ஆசனத்தில் நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்தாள். ''கலாசாலைப் படிப்பு, தற்கால கலாசாலைக் கல்வியைப் பற்றி என்னிடம் யார் பேசினாலும் எனக்குக் கோபந்தான் வருகிறது. தற்கால கலாசாலைகள் பெண்களுக்குக் கல்வியா அளிக்கின்றன?'' என்று கோபத்துடன் ஆரம்பித்தாள். பிறகு ஒரு மணி நேரம் மூச்சுவிடாது, தற்காலக் கல்வி, கலாசாலையில் பெண்கள்

இடம் கிடைக்காது தவிக்கும் பயங்கர நிலை, பெண்களுக்கு அளிக்கப்படும் கல்வியில் உள்ள குறைபாடுகள், அதனால் ஏற்படும் தீமைகள் என்று பல விஷயங்கள் பற்றித் தனது அபிப்பிராயங்களைக் காரசாரமான வார்த்தைகளால், கோடை மழைபோல் ஒரு நீண்டதொரு பிரசங்கமாகச் செய்தாள்.

''வீட்டிற்குப் போனால் பெரியம்மாவின் பிரசங்கம், கலாசாலையில் ஆசிரியர்களின் பிரசங்கம், வெளியே ஓரிடத்திற்கு வந்தால் அங்குமா ஒரு பிரசங்கம்!'' என்று தனக்குள்ளே தன் அவல நிலையை எண்ணி, மனம் வருந்திய போதிலும் அருணா, அழகானதொரு புன்னகையுடன், பொறுமையாக கௌரியம்மாள் பெண்கள் கல்வியைத் தாக்கிப் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

நெற்றி மீது விழுந்த வியர்வையை, முகம் துடைக்கும் துண்டு போன்றதொரு பெரிய கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டு கௌரி எழுந்து அருணா அருகில் வந்தாள். ''மற்ற பல பெண்களைப்போல் இன்றி நீ ஒரு காரணத்தோடேயே மேலே படிக்கக் கலாசாலைக்கு வந்திருப்பாய் என எண்ணுகிறேன். எனது ஊகம் சரிதானே?'' என்று அதட்டினாள்.

''ஆமாம் அம்மா! நான் டாக்டருக்குப் படிக்க விரும்பி அதற்குத் தேவையான விஞ்ஞானப் படிப்பிற்காக, கலாசாலையில் சேர்ந்திருக்கிறேன். பெரியம்மா தயவில் அவர்கள் வீட்டில் வசிக்கிறேன். அவர்களுக்கு பல காலம் பாரமாக இருப்பதை நான் விரும்பவில்லை. அதனால்தான் தங்கள் ஆபீஸில் காலியாக உள்ள வேலைக்கு மனுச் செய்திருந்தேன்'' என்றாள் அருணா!

''சபாஷ்! நல்ல யோசனை. நீ புத்திசாலிப் பெண். உன்னை எனக்குப் பிடிக்கிறது'' என்று உற்சாகத்துடன் கூறிய கௌரி, அருணாவின் முதுகை அன்போடு தடவிக் கொடுத்தாள். இரும்பை நிகர்த்த அந்தக் கரத்தின் வலிமையைத் தாளாது அருணா, வேதனையுடன் முகத்தைச் சுளித்ததை அவள் கவனிக்கவேயில்லை.

பிறகு கொஞ்ச நேரம் அருணாவின் பூர்வோத்திரங்களைப் பற்றி விசாரிப்பதில் முனைந்தாள் கௌரியம்மாள். முடிவில் மிகவும் திருப்தியடைந்தவளாக, ''அருணா, நாளையிலிருந்து நீ வேலையில்

ஆரம்பிக்கலாம். உன் கலாசாலையில் பொழுதுபோன மீதி ஓய்ந்த நேரத்தில் நீ இங்கு வந்து நான் எழுதிக் கொண்டிருக்கும் 'பெண்களும் கல்வியும்' என்ற புத்தகத்தின் கைப் பிரதிகளை, சுத்தமாக எழுதி முடிக்க வேண்டியது. பல வருஷங்கள் செய்த ஆராய்ச்சியின் பயனாக பெண்களுக்கு என்ன விதமான கல்வி போதிக்கப் படவேண்டும் என்று ஒரு தீர்மானமான முடிவுக்கு வந்திருக்கிறேன். இந்த முடிவுதான் பதினொரு பாகங்கள் கொண்ட 'பெண்களும் கல்வியும்' என்ற புத்தமாக அமையப்போகிறது. எனது கையெழுத்துப் பிரதிகளை அப்போதைக்கப்போது நகல் செய்து அழகாக எழுதிக் கொடுக்க வேண்டியதுதான் உனக்கு நான் தரப்போகும் வேலை'' என்றாள் கௌரியம்மாள்.

''அப்படியே செய்கிறேன்'' என்று பணிவுடன் பதிலளித்த அருணா, விடைபெற்றுக் கொண்டு மிகவும் உற்சாகத்துடன் வீடு திரும்பினாள்.

அருணா இவ்வாறு 'மாதர் திலகம்' ஆசிரியையிடம் குமாஸ்தா வேலை செய்வது பற்றி ஜெகதாவிற்கு ஆக்ஷேபனை இருக்கவில்லை. ஓய்ந்த வேளையில் வேலை செய்து பணம் சம்பாதிக்கும் விஷயம், லோகநாயகி வீட்டவர்கள் காதில் விழாதவரை அவள் அதைப்பற்றி கவலைப்படப் போவதில்லை. ஒரு விதத்தில் அருணா இவ்வாறு உத்தியோகம் செய்யப் புறப்பட்டது அவளுக்கு ஆறுதலாகவும் இருந்தது. கலாசாலையில் படிக்க வேண்டிய பணத்தைத் தானே வேலை செய்து அருணா சம்பாதித்துக் கொண்டால், ஜெகதாவிற்குச் செலவு இல்லாமலேயே தங்கை மகளைப் படிக்க வைக்கும் தியாகி என்ற பெயர் கிட்டுமல்லவா? ஆகவே, அவள் அருணா வேலை செய்து ஊதியம் பெறுவதைத் தடுக்கவில்லை.

'மாதர் திலகம்' பத்திரிகை ஆபீஸில் அருணா வேலைக்கு அமர்ந்து மாதங்கள் ஆறு ஓடிச் சென்றுவிட்டன. தன் சலியாத உழைப்பினாலும், சாமர்த்தியத்தினாலும் கௌரியின் நன்மதிப்பை விரைவில் பெற்றுவிட்டாள் அவள். தேக சிரமத்தைப் பாராது, உழைப்பினால் உயரவேண்டுமென்ற பிடிவாதத்துடன், ஓய்வு நேரத்திலும் வேலைசெய்ய முன்வந்துள்ள அச்சிறுமியின் விடாமுயற்சியும், துணிவும் கௌரியை மிகவும் கவர்ந்து விட்டன. அதனால் அவளுக்கு நாளடைவில் அருணா மீது தனிப்பட்டதொரு பாசம் ஏற்படத் தொடங்கியது.

அன்றைய தினம், ஆபீஸில் தனக்கு உண்டான வேலையைச் செய்து முடித்துவிட்டு அருணா வெளிக் கிளம்பும் பொழுது வழக்கத்திற்கு மீறி அதிக நேரம் ஆகிவிட்டது. வீட்டிற்குக் கிளம்பிக் கொண்டிருந்த கௌரி, "அருணா, இவ்வளவு நேரம் சென்ற பிறகு பஸ்ஸில் போவதென்றால் சிரமமாக இருக்கும். என் காரில் ஏறிக்கொள். உன்னை உன் வீட்டில் கொண்டு சேர்த்துவிட்டுப் போகிறேன்" என்று உபசரித்தாள்.

உடை விஷயத்திலே கௌரியம்மாளிடம் காணப்பட்ட அசட்டை மனப்போக்கு வாகன விஷயத்திலும் காணப்பட்டதை அருணா அன்றுதான் கவனிக்க நேர்ந்தது. கௌரியம்மாளுக்குப் பணவசதி அதிகம் இருந்தும் ஏனோ அவள் அந்தப் பழையமாடல் காரை மாற்றிக் கொள்ளவேயில்லை! 'படபட, லொடலொட' என்று கோர சப்தம் செய்து, தான் வருவதை ஒரு மைலுக்கப்பாலிருந்தபடியே அறிவித்த வண்ணம் நகர்ந்த அந்த வண்டியை கௌரியம்மாள் அனாவசியமாகச் செலுத்தினாள். அல்லிராணி சிம்மாசனத்தில் வீற்றிருப்பது போல் அமர்ந்து அவள் அலக்ஷியமாக வண்டியைச் செலுத்தியது பக்கத்திலிருந்து கவனிப்பதற்கு மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது.

சூரியன் அஸ்தமிக்கும் நேரம் நெருங்கி விட்டதனால் நகரத்தின் தெருவில் உள்ள மின்சார விளக்குள் அனைத்தும் எரியத் தொடங்கின. நகரத்தின் முக்கியமான, வனப்பு அதிகமுள்ள தெரு ஒன்றில், கௌரியம்மாள் தன் காரை வேகமாகத் திருப்ப எதிரே வந்து கொண்டிருந்த புத்தம் புதிய மாடல் ஒன்று, மோதி விடும்போல் எதிரே வந்து டக்கென்று நின்றது.

"டாமிட், நான்சென்ஸ்! இந்தப் பொம்பளைகள் வண்டி ஓட்டினாலே இப்படித்தான்" என்று கோபத்துடன் கூறியபடி, வண்டியின் எஜமான், கதவைத் திறந்து கொண்டு வெளியே குதித்தான். காரின் கதவின் மீது உல்லாசமாகக் கையைத் தாங்கிக் கொண்டு, சிறிதும் அஞ்சாது துணிவாக அமர்ந்திருந்த கௌரி, "அப்புறம்...? மேலே சொல்கிறதையும் சீக்கிரம் சொல்லிவிட்டால் தேவலை" என்றாள்.

அசோகன் தன் கண்களை மறைத்த பச்சைக் கண்ணாடியைக் கழற்றி கையில் எடுத்துக்கொண்டு, மிகவும் உல்லாசமாக எதிரே வந்த அந்தப் பெண் வண்டியோட்டியின் பக்கம் திரும்பினான். அவனது உதட்டிலே லேசாகப் பூத்த புன்னகை மறைந்தது. கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு, தனக்குள்ளே வெறுப்பாக மெல்லச் சிரித்த கௌரி, விர்ரென்று வேகமாகக் காரைப் பின்னோக்கிச் செலுத்தி, வேறு ஒரு தெருவிற்குள் புகுந்தாள்.

மௌனமாக எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அருணா, தன் ஆவலை அடக்கமாட்டாது, "எவ்வளவு துணிச்சலாகப் பேசுகிறான்? இந்த மனிதனை நான் எங்கேயோ பார்த்தது போல் இருக்கிறதே?" என்றாள் ஆச்சர்யத்துடன்.

"எங்கே பார்த்திருப்பாய்? ஒரு செருப்புக் கடையில் பார்த்திருப்பாய்!" என பதில் கூறி இகழ்ச்சியாக நகைத்தாள் கௌரி.

"ஆமாம். ஒரு சமயம் நளினியுடன் செருப்பு வாங்க அந்தக் கடைக்குச் சென்றேன். இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது. ஆமாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று வியப்புடன் கேட்டாள் அருணா.

"இந்தச் சாக்கடைக்கு வேறு போக்கிடம்?" என்று கௌரி சூள் கொட்டினாள் மிகவும் வெறுப்புடன்.

"கடையின் சொந்தக்காரர் இவர்தான் என்று நளினி எனக்கு இந்த மனிதனை அறிமுகப்படுத்தி வைத்தாள்" என்று விவரித்தாள் அருணா.

"இன்றைக்குச் செருப்புக் கடை, நாளைக்கு ஐஸ்கிரீம் கடை, அடுத்த நாள் புடவைக் கடை, என்று இப்படியாக அவரது முதலாளி ஸ்தானம் நாளடைவில் மாறிக்கொண்டே போகும். முதலாளியாம்! மூஞ்சியைப் பார்!" என்றாள் மிகவும் கோபமாக கௌரி.

கௌரியின் உணர்ச்சிப் போக்கு அருணாவிற்கு மிகவும் அதிசயமாகத் தோன்றியது. "அப்படியானால் இவரை உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா?" என்று அதிசயத்துடன் கேட்டாள்.

"இவனையா? எனக்கா? ஊஹூம்" என்று தலையை அசைத்த

கௌரி, மேலே பேச விரும்பாதவள்போல் மௌனமாகக் காரை துரிதமாகச் செலுத்தலானாள்.

25

மணி அடித்ததும், மாணவிகளிடம் வழக்கமாகக் காணப்படும் பரபரப்பு அன்று இருக்கவில்லை. வகுப்பினின்று வேகமாகக் கலைந்து வெளிவந்த அவர்கள், மாடிப்படிகளிலும் மரங்களின் அடியிலும் கும்பலாக நின்றுகொண்டு, போக மனமில்லாதவர்கள் போல் பேசிச் சிரித்து ஆரவாரித்துக் கொண்டிருந்தார்கள். கோடை விடுமுறைக்காக அன்றையதினம் கலாசாலை மூடப்பட்டது. கலாசாலைக்கு வருவது அன்றுதான் கடைசி தினம் என்பதை உணர்ந்த மாணவிகள் இடையே மூன்று மாத காலம் பிரிந்திருக்க வேண்டிய சிநேகிதிகளைச் சட்டெனப் பிரிந்து செல்ல மனமற்றவர்களாக, பல விஷயங்களைப் பற்றிப் பேசி சிரித்துக்கொண்டு கலாசாலை கட்டிடத்திற்குள்ளே வட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

தான் சுமந்து கொண்டிருந்த புத்தகங்களை, அழைத்துப் போகக் காத்திருந்த காருக்குள் வீசிப்போட்டாள் நளினி. சிநேகிதியின் கரத்திலிருந்த பெட்டியையும், புத்தகங்களையும் பிடுங்கி, காருக்குள்ளே வீசிவிட்டு, அவள் கரத்தைப் பற்றி இழுத்து, "இதோ பார் அருணா! தோட்டத்தில் உள்ள அந்த மேடைக்குப் போய் உட்கார்ந்து கொஞ்சம் பேசுவோம். இன்றும் நீ அவசரப்பட்டுக் கொண்டு கலாசாலையினின்று ஓடினால் நான் அனுமதிக்கமாட்டேன். பஸ் பிடிக்க நேரமாகும் என்ற சாக்கும் என்னிடம் செல்லாது. உன்னை எங்கள் காரில் கொண்டு வீட்டிலே சேர்த்து விடுகிறேன்" என்று உரிமையாக அதட்டினாள்.

'மாதர் திலகம்' ஆபீஸிற்கு அன்று விடுமுறை தினம். ஆதலால் ஆக்ஷேபனை ஏதும் கூறாது அருணா, சிநேகிதியுடன் கலாசாலை தோட்டத்தின் ஒரு மூலையிலிருந்த பெரிய சிமெண்ட் மேடையை நோக்கிச் சென்றாள்.

"உன் பரீக்ஷைகளை நீ நன்றாகச் செய்திருப்பாய் என நினைக்கிறேன். நீ எப்பொழுதுமே படிப்பிலே கெட்டிக்காரி" என்று ஆரம்பித்த நளினி, மேடைமீது அமர்ந்து கொண்டு, தன் சிநேகிதியைப் பற்றி இழுத்து அருகில் அமர்த்தினாள்.

"உங்களுக்கு இன்று பரிசோதனையின்போது, காப்பி தயாரிப்பது என்பது வந்ததாமே? நீ நன்றாகச் செய்து முடித்திருப்பாய் என எண்ணுகிறேன். காப்பி தயாரிப்பது மிகவும் சுலபமான பரிசோதனைதானே?" என்றாள் அருணா.

அதைக் கேட்டதும் நளினி, தன் அழகிய முகத்தை அசட்டையாக சுளுக்கினாள். "அம்மாவின் பேச்சைக் கேட்டுக் கொண்டு, நான் எதற்காகத்தான் இந்தக் குடும்ப நிர்வாகக் கலையைப் பாடமாக எடுத்துக் கொண்டேனோ தெரியவில்லை! சரித்திரம், விஞ்ஞானம் இதெல்லாம் வேண்டாம். குடும்ப நிர்வாகக் கலைதான் பெண்களுக்கு அவசியம் என்று அம்மா கலாசாலையில் சேரு முன்பு மிகவும் பிவாதித்தார்கள். மனோ அக்காவும் கூட தூபம்போடவே அம்மா ஒரே பிடிவாதமாக என்னை இந்தப் பகுதியிலே சேர்த்து விட்டார்கள். இப்பொழுது ஒரு வருஷப் படிப்பிற்குப் பிறகு எனக்கு, இயற்கையாகத் தெரிந்த கொஞ்ச நஞ்ச குடும்ப நிர்வாகமும் மறந்தே போய்விட்டது. அதுதான் கைமேல் கிடைத்த பலன்!" என்று பரிகாசமாகக் கூறிவிட்டு சூள் கொட்டினாள் நளினி.

அருணா அதற்குப் பதில் பேசாது களுக்கென்று சிரிப்பதைக் கண்டதும் நளினி, வியப்புடன் சிநேகிதியின் பக்கம் திரும்பினாள். "நான் படும் சங்கடம் உனக்கு வேடிக்கையாக இருக்கிறதுபோல் தோன்றுகிறது!" என்று பொய்யாகக் கோபித்துக் கொண்டாள்.

"இல்லை நளினி, குடும்ப நிர்வாகம் என்பதைப் பற்றி நீ கூறியதும் உடனே எனக்கு ஸ்ரீமதி கௌரி என்பவர்களின் ஞாபகம் வந்தது. நீ அவர்களைக் கட்டாயம் சந்தித்து பரிச்சயம் செய்து கொள்ள வேண்டும். தற்காலத்தில் பெண்களுக்குக் கலாசாலை அளிக்கும் கல்வி முறைமீது அந்தம்மாளுக்கு மிகவும் கோபம். இதைத் தாக்கி அவர்கள் ஒரு புத்தகமும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அது வெளி வந்தால் அவசியம் நீ வாங்கிப் படிக்க வேண்டும். அதில் குறிப்பாக, குடும்ப நிர்வாகக் கலையை அந்தம்மாள் பேனாவினின்று சீறியெழும்

வார்த்தைகளின் வேகத்தில் 'குடும்ப நிர்வாகக் கலை' தவிடு பொடியாகிவிடும் என்பது நிச்சயம். அடுத்த முறை தேர்தலில் அவர்கள் ஜயித்து கல்வி மந்திரியாக வந்துவிட்டால், பெண்களின் வாழ்வைச் சின்னாபின்னமாகச் சிதைக்கும் தற்காலக் கல்வித் திட்ட முறையை மாற்றி, புதிய புதிய போதனா முறையை ஆரம்பித்து விட்டுத்தான் மறு வேலை பார்ப்பார்கள்'' என்றாள்.

''நீ கூறுவதைப் பார்த்தால் இந்தக் கௌரியம்மாள் ஒரு பெரிய சர்வாதிகாரிபோல் தோன்றுகிறதே? யார் இந்தப் பிரகிருதி!'' என்று கேட்டுவிட்டு நளினி அடக்கமாட்டாது நகைத்தாள்.

''பேச்சிலும், எழுத்திலும்தான் வீரமும் இம்சையும் அதிகம் காணப்படும். சுபாவத்தில் கௌரியம்மாள் மிகவும் நல்ல பெண்மணி. நீ அவர்களை அறிமுகம் செய்து கொள்ள வேண்டும். 'மாதர் திலகம்' என்ற பத்திரிகையைப் பெண்கள் முன்னேற்றத்திற்காகவே நடத்துகிறார்கள்'' என்றாள் அருணா புன்னகையுடன்.

''எனக்கு இப்பொழுது ஞாபகத்திற்கு வருகின்றது. மனோ அக்கா, 'மாதர் திலகம்' பத்திரிகையைத் தவறாது வாங்கிப் படிப்பார்கள். அந்தப் பத்திரிகையின் அபிமானிகளில் மனோ அக்கா மிகவும் முக்கியமானவர். கௌரியம்மாள் எழுதுகிற புத்தகத்தை மனோ அக்கா வாங்கிப் படித்தால், உடனே 'மாதர் திலகம்' பத்திரிகை வாங்குவதை நிறுத்திக் கொண்டு விடுவார்கள். குடும்ப நிர்வாகக் கலைமீது மனோ அக்காவுக்கு உயிர். அதைப் பற்றி எதிர்த்துப் பேசுகிறவர்களை அவர்கள் உடனே விஷம்போல்தான் கருதுவார்கள்'' என்று கூறிவிட்டு நளினி சிரித்தாள்.

''அதெல்லாம் போகட்டும், உன் பரிசோதனை என்னவாயிற்று! அதைப் பற்றிச் சொல், கேட்க ஆவலாக இருக்கிறது'' என்று அருணா இடைமறித்து வினவினாள்.

''தலை தப்பியது என்றால் மிகையில்லை. அதையேன் கேட்கிறாய்! 'காப்பி தயாரிப்பது' என்பதை எங்களுக்குப் பரிசோதனையாகக் கொடுத்திருந்தார்கள். புஸ்தகத்தின் கணக்குப்படி, ஐந்து தேக்கரண்டி காப்பி பொடி, ஆறு தேக்கரண்டி சர்க்கரை, நான்கு அவுன்ஸ் பால் என்று இம்மிகூட கணக்குத் தவறாது, வேண்டிய சாமான்களைக் கலந்து மின்சாரத்தால் இயங்கும் காப்பி வடிகட்டியில்

போட்டேன். கணக்குப்படி மூன்று நிமிஷ நேர மின்சார விசையை ஓடவிட்டேன். முடிவில் பாத்திரத்திலே வந்து வடிந்த பாகத்தை எடுத்து கோப்பைகளில் நிரப்பியபோது, திடுக்கிட்டுப் போய்விட்டேன். என்ன காரணத்தினாலோ காப்பி பச்சை நிறமாக இருந்தது!'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள் நளினி.

''ஒரு சமயம், சைனா தேசத்து முறைப்படி காப்பி தயாரித்திருப்பாய். உங்களுக்குத்தான் காப்பி தயாரிப்பிலேயே பலநாட்டு முறைகள் சொல்லித் தருகிறார்களாமே!'' என்று கூறிவிட்டு அருணாவும் நகைத்தாள்.

''ஆயிரம் வகைகள் சொல்லித் தருகிறார்கள். ஆனால் இன்று எங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த பரிசோதனை இந்திய முறைப்படி காப்பி தயாரிப்பது என்பது. பரிசோதனை ஆசிரியை பச்சை நிறத்தைக் கண்டால், பரீக்ஷையில் மார்க்கைச் சுழித்து விடுவார்களே என்று என் நெஞ்சு படபடத்தது. கை கால்கள் பதறின. யாரும் பார்க்காதபோது, ஒரு கை விரலை கோப்பையில் மெல்ல நனைத்து, வாயில் வைத்து காப்பியை ருசி பார்த்தேன். நிறந்தான் பயங்கரமாக இருந்தது என்றால் அவ்வளவு சர்க்கரை போட்டும்கூட காப்பி எட்டிக்காய் போல் கசந்தது'' என்று சிரித்தாள் நளினி.

''பிறகு?'' என்று அருணா ஆவலுடன் வினவினாள்.

''பிறகு, ஆசிரியை வேறு ஒரு மாணவியைக் கவனித்துக் கொண்டிருக்கும் பொழுது, நான் தயாரித்த காப்பி அனைத்தையும் கை கழுவும் பீங்கானுக்குள் கொட்டிவிட்டு, அருகிலிருந்த மாணவியிடம் கொஞ்சம் காப்பிப் பொடி, இரவல் வாங்கினேன்! அதைப் போட்டு, நாம் வீட்டில் தயாரிப்பதுபோல், என் கைக்குட்டையை வடிகட்டும் துணியாக உபயோகித்து காப்பி தயாரித்தேன். அந்தக் காப்பியைக் கண்ட ஆசிரியை எனக்குத்தான் வகுப்பிலேயே பரிசோதனையில் அதிகம் மார்க் கொடுத்தார்கள். குடும்ப நிர்வாகக் கலைப்படி நான் தயாரித்த காப்பி மிகவும் அசுத்தமானது. கைக்குட்டையைப் போட்டா வடிகட்டுவது? ஆனால், நான்தான் இன்று வகுப்பில் முதல் மார்க் வாங்கிய பெண்'' என்றாள் நளினி.

''பரீக்ஷை என்பதில் இவ்வளவு சூதும், சூழ்ச்சிகளும் இருக்கின்றனவா? பரீக்ஷை உண்மையில் மாணவிகளின்

புத்திசாலித்தனத்தையோ முயற்சியையோ தீர்மானிப்பதில்லை என்றுதான் இதிலிருந்து நீதி ஏற்படுகிறது. நியாயப்படி நீ இன்று சோதனையில் தவறியிருக்க வேண்டியவள். முதல் மார்க் வாங்கி வெற்றியடைந்திருப்பது அக்கிரமம்'' என்று அருணா பரிகசித்தாள்.

அக்கிரமமோ, நியாயமோ, இந்த வருஷம் நாம் இருவரும் பாஸ் செய்து இரண்டாம் வகுப்பிற்கு அனுப்பப் பட்டுவிட்டோம். அதற்குச் சந்தோஷத்துடன் கைகுலுக்கிக் கொள்வோம்'' என்று உற்சாகமாய்ப் பேசிய நளினி சிநேகிதியின் கரத்தைக் குலுக்கினாள்.

''கலாசாலையில் படிப்பதனால் பெண்களுக்குச் சமைக்கத் தெரியவில்லை, வீட்டை நிர்வகிக்கத் தெரிவதில்லை என்று கலாசாலைப் பெண்களின் சமையல் ஞானத்தைப் பரிகசித்துப் பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். ஆனால், பெண்களில் சமையல் தெரியாத பெண்கள் ஆதிகாலத்திலிருந்தே இருந்திருக்கிறார்கள் என்கிற விஷயம் சமீபத்தில்தான் எனக்குத் தெரிந்தது'' என்றாள் அருணா.

''அப்படியா! அந்த விஷயத்தைச் சொல். குடும்ப நிர்வாகக் கலைப் பற்றி இனி மனோ அக்கா என்னுடன் விவாதித்தால், இந்தச் சங்கதியை எடுத்துச் சொல்லி அவள் வாயை அடக்க உதவியாக இருக்கும்'' என்றாள் நளினி.

''சில தினங்களுக்கு முன்பு, எங்களுக்குப் பாடமாக உள்ள சிலப்பதிகாரத்திலே, ஒரு பகுதியில், கண்ணகி தன் கணவனுக்குச் சமைக்கும் கட்டம் வந்தது. கலாசாலையில் படித்தவள் அல்ல கண்ணகி. இருந்த பொழுதிலும் நம்மைப் போலவே அவளும் சமைக்கத் தெரியாது திண்டாடுகிறாள்! 'கையறிமடைமையிற் காதலற்காக்கி' என்கிறார் இளங்கோஅடிகள். கையை அளவுகோலாக உபயோகித்துக் கொண்டு, கண்ணகி சிரமப்பட்டு சமைத்து முடித்ததாக அதில் கூறப்படுகிறது. ஒரு பெரிய காப்பியத்தின் தலைவியே சமைக்கத் தெரியாத பெண்ணாக இருக்கும்போது, பழனியப்பக் கவுண்டரின் மகளுக்குக் காப்பி போடத் தெரியாதிருப்பது ஒரு குற்றமாகுமா? நளினி, அதனால் உன்னை நான் பூரணமாக மன்னிக்கிறேன்!'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள் அருணா.

சிநேகிதியின் ஹாஸ்யத்திலே ஈடுபட்டு, தன்னை மறந்து

உற்சாகமாக அவளோடு கூடவே நகைத்துக் கொண்டிருந்த நளினி, ஏதோ நினைத்துக் கொண்டவள் போல் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். ஆனந்தத்தில் பூரித்துச் சிவந்திருந்த அவளது அழகிய வதனம் சட்டெனச் சாம்பிவிட்டது. யோசனையுடன் தலையைக் குனிந்துகொண்டு அவள் திடீரென மௌனமாகிவிட்டாள். சிநேகிதியிடம் காணப்பட்ட மாறுதல் அருணாவிற்கு மெத்த கலவரத்தை உண்டாக்கியது. ''என்ன நளினி! ஏன், கோபித்துக் கொண்டு விட்டாயா?'' என்று பரபரப்புடன் கேட்டாள்.

''இல்லை அருணா! இன்றைய தினம் உன்னிடம் முக்கியமாக ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசத்தான் உன்னை இங்கே அழைத்து வந்தேன். பேச்சு வாக்கிலே ஏதேதோ பேசி, பொழுதைக் கழித்துவிட்டேன். நீ என்னுடைய பிராண சிநேகிதி. மிகவும் புத்திசாலி என்றும், சாமர்த்தியக்காரி என்றும் உன்னை நான் கருதுவதால் உன்னிடம் கலந்து ஆலோசித்து உன் யோசனையைக் கேட்கலாம் என்று நினைத்தேன். ஆனால் அது என் சொந்த விஷயமல்ல. எங்கள் குடும்பத்தைப் பற்றிய சங்கதி. அதனால் அதைக் கூறலாமா கூடாதா என்று ஒரே தயக்கமாக இருக்கிறது'' என்றாள்.

''கூறக் கூடாது என்று உன் மனச்சாட்சி உறுத்தினால் அதை என்னிடம் சொல்ல வேண்டாம். இதற்காக வீணாக நீ ஏன் மனத்தை அலட்டிக் கொள்கிறாய்?'' என்று அருணா ஆறுதல் சொல்லவே, நளினி தன் தலையை அசைத்துவிட்டு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, குரலை மிகவும் தாழ்த்திக் கொண்டு பேசலுற்றாள்.

''உனக்கு ஞாபகம் இருக்கிறதா, அருணா? கலாசாலையில் சேர்ந்த புதிதில், ஒரு முறை உன்னை ஒரு செருப்புக் கடைக்கு அழைத்துச் சென்றேனே? அந்தக் கடையின் எஜமானர்...?'' என்று முடிக்குமுன் அருணா குறுக்கிட்டு, ''ஆமாம், அசோகன் என்று ஒரு மனிதனைச் சந்தித்தோம். அவருக்கு என்ன?'' என்று வினவினாள் ஆச்சர்யத்துடன்.

''அவருக்கு ஒன்றுமில்லை, அவரால் எங்கள் குடும்பத்திற்குதான் ஏதேனும் ஆபத்து ஏற்படுமோ என்று பயமாக இருக்கிறது. கூடகமாக நான் பேசினால் உனக்கு விளங்காது. விரிவாகச் சொல்கிறேன் கேள்.

''முதல் முதலாக ஸ்ரீமான் அசோகனை நாங்கள் 'அசோகா ஷூ மார்ட்' என்ற இடத்தில் சந்தித்தோம். அதற்குப் பிறகு மனோ அக்கா, என்னுடன் ஒரு முறையும், சுரேஷ்குமாரனுடன் நாலைந்து முறைகளும் அந்தக் கடைக்குச் சென்று வரத் தொடங்கினார்கள். சுரேஷின் அழைப்பிற்கு இணங்க ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு விருந்து சாப்பிட அசோகன் வந்தார். அதற்குப் பிறகு பலமுறைகள், பல காரணங்கள் கொண்டு வந்தார். இப்பொழுது நாள் தவறினாலும் தவறும், அவர் எங்கள் வீட்டிற்கு விஜயம் செய்வது தவறாது என்ற நிலையில் குடும்பத்துடன் நெருங்கிப் பழகிக் கொண்டிருக்கிறார்.''

''அசோகனை, முதலில் சுரேஷ்குமாரனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அசோகன் எங்கள் குடும்பத்தில் நெருங்கி உறவாட ஒரு வகையில் சுரேஷ்தான் காரணம் என்று கூடச் சொல்வேன். ஆனால் சுரேஷிற்கு சமீபகாலமாக அசோகனது நடவடிக்கை, போக்கு ஒன்றும் பிடிக்கவில்லையென்று அறிகிறேன்.

''சுரேஷ் தற்சமயம் ஊரில் இல்லை. அவன் கலாசாலை இன்னும் ஒரு வாரம் சென்ற பிறகுதான் மூடப்படும். 'கோடை லீவை நிம்மதியாகக் கழிக்க விரும்புகிறேன். அந்த மூட்டை பூச்சி அசோகனது தொல்லை இல்லாதிருந்தால் நலமாக இருக்கும்' என்று எனக்கு எழுதியிருந்தான் அண்ணன்.

''அதைப் படித்ததிலிருந்து எனக்கு ஒரே கவலையாகிவிட்டது. ஏனெனில், அசோகனை எங்கள் குடும்பத்தினின்று அப்புறப்படுத்துவது இனி சுலபமல்ல என்று நினைக்கிறேன். அவரைப் பற்றி ஏதாவது குறைவாகப் பேசினால் மனோ அக்கா என்னிடம் சண்டைக்கு வந்துவிடுகிறார்கள். மனோ அக்காவை எதிர்த்து என் கட்சியில் சேர அம்மாவுக்கு தைரியமில்லை. அசோகனை அப்பாவுக்கு முதலில் அறிமுகப்படுத்தி வைத்தோம். ஆனால் அவர் 'கறுப்பா, சிகப்பா' என்கிறது கூடத் தெரியாது. தொழில் விவகாரத்தில், வீட்டைப் பற்றி யோசிக்கக்கூட அவருக்கு நேரமில்லை'' என்று பெருமூச்செறிந்தாள் நளினி.

''அசோகனிடம் உனக்கு வெறுப்பு ஏற்பட ஏதேனும் காரணம் உண்டா நளினி?'' என்று அருணா கவலையுடன் வினவினாள்.

''முதலில் மனோ அக்காவின் முகதாட்சண்யத்திற்காக அசோகனிடம் நான் மரியாதையாகவும், அன்பாகவுமே நடந்து கொண்டேன். ஆனால் ஆரம்பத்திலிருந்து அவரது பேச்சு, நடையுடை பாவனை ஒன்றுமே எனக்குப் பிடிக்கவில்லை. அவர் மீது ஏன் வெறுப்பு ஏற்பட்டது என்று கேட்காதே! சில சமயம் எவ்விதக் காரணமுமின்றி நமக்குச் சிலரைப் பார்த்ததுமே பிடிப்பதில்லையல்லவா?'' என்றாள் நளினி மிகவும் வறட்சியாக.

''ஆமாம், நம்மையறியாது நமக்குள் ஏற்படும் ஒரு உள்ளுணர்வுதான் அதற்குக் காரணம் என்று படித்திருக்கிறேன். அசோகனைப் பார்த்ததுமே உனக்குப் பிடிக்காது போயிற்று. இதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லையே? இயற்கைதானே!'' என்றாள் அருணா.

''மனோ அக்காவின் முகத்திற்காக அஞ்சி, நான் வெறுப்பை வெளிப்படையாகக் காட்டாது, மரியாதையாகப் பழகி வந்தேன். ஆனால் சமீபத்தில் அவர் செய்த ஒரு காரியம் எனக்கு அவர்மீது கொஞ்சநஞ்சமிருந்த மதிப்பையும் போக்கிவிட்டது.

''சில தினங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை அசோகன் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். ஏதோ வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தவர், திடீரென்று தமது சட்டைப் பையினின்று ஒரு கசங்கிய கடிதத்தை எடுத்து என்னிடம் கொடுத்து படிக்கச் சொன்னார். என்னவென்று ஊகிக்க முடியாது நான் ஆவலுடன் அதை வாங்கிப் படித்தேன். பாதிக்குமேல் படிக்க முடியாது கோபத்துடன் கடிதத்தை அவரிடம் வீசிவிட்டு எழுந்துவிட்டேன்.

''அசோகனுக்கு சில நாட்களுக்கு முன்பு, ஒரு பெண்மணி எழுதிய காதல் கடிதம் அது. கொஞ்சமும் லஜ்ஜையின்றி அப்பெண்மணி, தனது காதலை அதில் வெளிப்படையாக எழுதியிருந்தாள். இதைப் பற்றி நான் மனோ அக்காவிடம் முறையிட்டுக் கொண்டேன். அசோகன் கள்ளங் கபடமற்றவர் என்றும், அதனால்தான் விளையாட்டாக அந்தக் கடிதத்தை என்னிடம் காட்டினார் என்றும் மனோ அக்கா விவாதித்தார்கள்.

''அன்றிலிருந்து எனக்கு அவர்மீது வெறுப்பு அதிகமாகிவிட்டது. ஒரு மனிதன் ஒரு பெண்ணிடம், வேறு ஒரு பெண் தனக்கு எழுதிய காதல் கடிதத்தைக் கொண்டு வந்து காட்டினால் அவனைப் பற்றி நீ

என்ன நினைப்பாய்?'' என்று கோபத்துடன் நளினி கேட்டாள்.

''மரியாதை தெரியாதவன், அயோக்கியன், பெண்களை மிகவு துச்சமாகக் கருதும் சுயவன் என்றுதான் அவனது குணத்தைப் பற்றி சொல்லுவேன்'' என்றாள் அருணா கோபத்துடன்.

''பெண்களை துச்சமாகக் கருதுவதனால்தான் மிகவு துணிவுடன் அந்தக் கடிதத்தை என்னிடம் கொண்டு வந்து காட்டின இந்த நடத்தையினின்று அவரைப் பற்றி மேலும் சில விஷயங்க என்னால் ஊகிக்க முடிகிறது.

''அவர் பேசுவது முழுவதும் பொய் என்றுதான் நினைக்கிறேன் முருகூர் ஜமீனின் இளைய வாரிசு என்று அவர் தம்ம அறிமுகப்படுத்திக் கொண்டார். 'அசோகா ஷூ மார்ட்' தமது சொந் முயற்சி என்றும், தினசரி ஆயிரம் ரூபாய்க்கு வியாபார கொழிக்கிறதென்றும் கூறிக்கொண்டார். அப்படியிருந்தும், சி மாதங்களுக்கு முன்பு, அண்ணன் சுரேஷிடம் கைமாற்றாக வாங்கி இருநூறு ரூபாய்களை இன்னமும் திருப்பிக் கொடுக்கவில்லை மறந்ததுபோல் அமுத்தலாக இருக்கிறார்'' என்றாள் நளி வெறுப்புடன்.

''நீயும் சுரேஷும் தைர்யமாக உங்கள் வெறுப்பை வெளிப்படையாகக் காட்டத் தொடங்கினால், தானே ஆசாமி புரிந் கொண்டு உங்கள் வீட்டின் பக்கம் வருவதை நிறுத்திக் கொள்கிறா இதற்கு ஏன் தயக்கம்?'' என்று அருணா கேட்டாள்.

''தற்சமயம் நிலைமை, எங்கள் கையிலிருந்து மிகவும் மீ விட்டதனால்தான் நான் மிகவும் கவலைப்படுகிறேன். அருணா, நா பிறர் கடிதங்களைப் படிக்கும் கெட்ட வழக்கம் கொண்டவளல் யதேச்சையாகக் கதைப் புத்தகம் ஒன்றில் கிடந்த இந்தக் கடிதத்த நேற்று மாலைதான் நான் எடுத்துப் படிக்க நேர்ந்தது. இதை நீயும் பட பிறகு எனக்கு ஏதாவது ஒரு ஆலோசனை சொல்'' என்று கூறிய நளின் தன் இடையில் செருகி வைத்திருந்த ஒரு கசங்கிய கடிதத்தை எடுத் தோழியிடம் நீட்டினாள்.

''அன்பே! நீ சிறிதும் மனம் கலங்க வேண்டாம். உ அத்தையவர்களும், அத்தை கணவரும் தடை சொன்னாலும் சிறிதும் மனம் தளர வேண்டாம். ஒவ்வொருவருக்கு

இவ்வுலகில் வாழ உரிமையுண்டு. சுயநலம் காரணமாக அவ்வுரிமையில் பிறர் தலையிடுவது நீதியல்ல. நீ உன் உறவினர்களுக்கோ சமூகத்திற்குகோ அஞ்ச வேண்டியதில்லை. உன் அத்தை சம்மதிக்காவிடில், உன்னுடைய சொத்து சுதந்திரங்களுடன் நீ வீட்டை விட்டுப் புறப்பட்டு விடலாம். நாமிருவரும் ரகசியமாகப் பதிவுத் திருமணம் செய்து கொண்டுவிடுவோம். நான் முன்பு கூறியபடி, உடனே வெளிநாட்டிற்குப் பிரயாணப்பட்டு விடுவோம். நமது கவலைகளும், தொல்லைகளும் தீர்ந்துவிடும்.

உன் அன்பன்,
அசோகன்

கடிதத்தைப் படித்த அருணா, ''இக்கடிதம் மனோன்மணிக்கு எழுதப்பட்டது என்று நினைக்கிறேன்'' என்றாள்.

''மனோ அக்காவுக்கு அசோகனிடம் மிகவும் பரிவு உண்டு என்று எனக்குத் தெரியும். ஆனால் இந்தப் பரிவு காதலாகப் பரிணமித்து ரகசிய பதிவுத் திருமணத்திற்கு வந்துவிடும் என்று நான் நினைக்கவேயில்லை. இத்துடன் இன்னொரு விஷயமும் நடந்திருக்கிறது. என் பெட்டியிலிருந்த என்னுடைய கை வளையல்களில் ஒன்றைக் காணவில்லை'' என்றாள் துயரத்துடன் நளினி.

''திருட்டுப் போய்விட்டதா! அசோகன் எடுத்திருப்பார் என்று நினைக்கிறாயா?'' என வியப்புடன் அருணா கேட்டாள்.

''அவசரப்படுகிறோயே? அசோகன் என்னுடைய அறைக்குள் எவ்வாறு வரமுடியும்? மனோ அக்கா என்னுடைய பெட்டியைத் திறந்து அதை எடுத்திருக்கலாம் என்று ஊகிக்கிறேன். எதற்காக எடுக்க வேண்டும் என்றுதான் காரணம் தெரியவில்லை. வைர வளையல் தொலைந்துபோன விஷயத்தை அப்பாவின் காதுகளுக்கு எட்டவிடக் கூடாதென்று அம்மா என்னை எச்சரித்து அடக்கி விட்டார்கள். மனோ அக்கா இவ்வாறு இழிவான ஒரு காரியம் செய்வார்கள் என்று நான் கனவிலும் கருதவில்லை.

''இந்தச் சங்கதி இத்துடன் நின்றால்கூட நான்

கவலைப்படமாட்டேன். மனோ அக்காதான் எங்கள் குடும்பத்தை நிர்வகிப்பவர். அவர்கள் கையில்தான் வீட்டுச் சாவிகள் அனைத்தும் இருக்கின்றன. இதுவரை அவர் எங்கள் குடும்பத்திற்கு துரோகம் நினைத்ததில்லை. ஆனால் இனி அவர்களை முன்போல் நம்பி எல்லாவற்றையும் ஒப்படைக்க முடியுமா என்பதுதான் எனக்கு கவலை.

''அம்மாவுக்கு மனோ அக்காவை அடக்க தைரியமே இல்லை. ஏதாவது நான் எடுத்துச் சொன்னால், 'நான் என்ன செய்வேன்?' என்று வெகுண்டு, கண்ணீர் உகுத்து அழுகிறார்.

''அருணா! எனக்கு ஏன் இளவயதிலே இப்பிரச்னை? பணம் இருக்கிறது. அழகு இருக்கிறது. படிக்க வசதிகள் இருக்கின்றன. ஆனால் என் உள்ளத்திலேதான் முடியாத துயரம் கு... கொண்டிருக்கிறது'' என்று கூறிவிட்டு, தலையைத் தாழ்த்திக் கொண்டாள் நளினி.

அவளது கண்களிலும் முத்துக்களைப்போல் கண்ணீர்த் திவலைகள் பொலபொலவென்று உதிர்ந்தன.

26

பேனாவைக் கீழே வைத்துவிட்டு, அருணா நாற்காலியில் சோர்வுடன் சாய்ந்து கொண்டாள். இங்கிப் புட்டிக்குள் தவறாக நுழைந்துவிட்ட ஈ தனது இறக்கையில் படிந்திருந்த மையை உதற சிரமப்பட்டுத் தத்தளிக்கும் பொழுது ஏற்படும் நானாவிதமான கிறுக்கல்களுக்கு உவமை கூறும் வண்ணம் அமைந்திருந்த கௌரியம்மாளின் கையெழுத்தை ஊன்றிப்படித்துப் படித்து அவளுக்கு அன்று தலைவலியே வந்துவிட்டிருந்தது.

சில இடங்களில் கோடுகளாகவும் சில இடங்களில் பட்டங்களாகவும் காட்சியளித்த வார்த்தைகள் எதைக் குறிக்கின்றன என்று அவளால் ஊகிக்கக்கூட முடியவில்லை.

கௌரியுடன் பழகியதிலிருந்து, ஓரளவு அவளது குணத்தை

அருணா உணர்ந்து கொண்டிருந்தாள். அதனால், இன்ன இடத்தில் இன்ன வார்த்தைகள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று ஒருவாறு தனக்குள்ளே ஊகித்து, அந்தக் கையெழுத்துப் பிரதிகளை அசல் நகல் செய்வது வழக்கம்.

கடந்த ஒரு வருஷமாக இவ்வாறு அவள் சுமார் ஏழாயிரம் பக்கங்கள் வரை எழுதிவிட்டிருந்தாள். இன்னும் எஞ்சிவிட்டிருந்த பாகத்தைப் பார்த்தால் கௌரியம்மாள் எண்ணியதுபோல், அந்தப் புத்தகம் பதினொரு அல்லது இருபது பாகங்களில் முடியக் கூடியதாகத் தோன்றவில்லை. தமிழ் கலைக் களஞ்சியத்தையும் தோற்கடித்துவிடும் வண்ணம், கௌரியம்மாளின் கல்வி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை புத்தக உருவில் நூறு பெரிய 'வால்யூம்'களாக முடியும்போல் பயமுறுத்திக் கொண்டிருந்தது.

இந்நிலையில் அருணாவிற்கு இன்னும் மூன்று வருஷ காலத்திற்கு உத்தியோகத்தைப் பற்றி கவலையேற்பட ஹேதுவில்லாதிருந்தது. நாற்காலியினின்று நிமிர்ந்து, மேஜைமேல் கிடந்த கடைசிப் பாகத்தை மறுமுறை ஊன்றி வாசித்தாள் அவள்.

''தற்காலத்துக் கல்வியானது பெண்களுக்கு தன்னம்பிக்கையைக் கூடக் கொடுப்பதில்லை. கலாசாலைகளில் படித்துப் பட்டம் பெற்று மேதையென புகழ்பெற்ற சில பெண்களுடன் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். பல வருஷங்கள் கல்வி கற்றும் இப்பெண்களுக்குத் தங்களுடைய சாமர்த்தியத்திலோ, அறிவிலோ நம்பிக்கை இல்லாதிருப்பதைக் கண்டு நான் ஆச்சர்யமுற்றிருக்கிறேன். கல்வி கற்கும் பெண்கள் தங்களை ஆண்களின்...'' என்றவரைக்கும் கைப் பிரதியை எழுதி முடித்திருந்தாள்.

அதற்குமேல் தென்பட்ட மெல்லிய கோடு என்ன வார்த்தையைக் குறிக்கிறது என்று அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. 'ஆண்களின் அடிமையா? ஆண்களின் கைப்பொம்மையா? ஆண்களின் வேலைக்காரியா...?' அடுத்த வார்த்தை என்னவாக இருக்கும் என்று தனக்குள்ளே பலவும் எண்ணி வெறுப்படைந்து, கண்களை மூடிக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தாள் அருணா.

அது சமயம் அடுத்த அறையில் இடி முழக்கம் போன்று கௌரியம்மாள் யாரையோ அதட்டும் சப்தம் கேட்டது. திடுக்கிட்டு

நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு அருணா இரு அறைகளையும் பிரித்த இடைச் சுவரை வெறித்துப் பார்த்தாள். கனமான அந்தப் பெரிய கற்சுவரை ஊடுருவிக் கொண்டு ஈட்டி வேகத்தில் பாய்ந்து வந்த கௌரியின் குரல் அருணா அமர்ந்திருந்த அறைக்குள் புகுந்து ரீங்காரம் செய்து எதிரொலி உண்டாக்கியது.

''என்ன சொன்னீர்கள், ஞானம்? மிஸஸ் சாம்பமூர்த்தியா அதுமாதிரி எல்லாம் இங்கே எழுதக் கூடாது என்று முன்பே கூறியிருக்கிறேனே?'' என்று அதட்டினாள் கௌரி. அவளது உரத்த குரலில் தொனித்த அதிகாரத் தன்மையினின்று அவள் தனது காரியதரிசினி அம்மாள் ஞானத்திடம் பேசிக் கொண்டிருக்கிறாள் என அருணா தன் அறையிலிருந்தவாறே ஊகித்துக் கொண்டாள்.

காரியதரிசினி அம்மாள் அதற்கு அளித்த பதில் அருணாவின் காதுகளில் விழவில்லை. கௌரியம்மாள் மேலே அதற்குத் தொடர்ந்தாற்போல் கூறிய உத்தரவு மட்டும் இடியோசை போல் மறுபடியும் அறைக்குள்ளேயே முழங்கியது. ''மிஸஸ் சாம்பமூர்த்தியா? அந்த அம்மாளுக்குச் சொந்தமாக ஒரு பெயர் கிடையாதா? அந்த அம்மாளை பிறந்ததும் தொட்டிலில் போட்டு ஆசையோடு அம்மாவும் பாட்டியுமாகச் சூட்டிய பெயர் ஒன்றும் கிடையாதா? தனக்கென்று ஒரு பெயர் இருந்தும், கணவன் பெயர் பின்னால் ஏன் இப்படி ஒளிந்து கொள்ள வேண்டும்? கதைகள், கட்டுரைகள் பல எழுதிப் புகழ் வாய்ந்த ஒரு எழுத்தாளருக்குத்தான் தன் சொந்தப் பெயரை வைத்துக் கொள்ள வெட்கமாக இருந்தால், புனை பெயர் ஒன்று கிடைக்காமலா போய்விட்டது? பெண்கள் தங்களுக்குப் பெற்றோர்கள் இட்ட அழகான பெயர்களை விட்டு,வாயில்லாத பூச்சி போல் இப்படி கணவனின் பெயரிலேயே ஒட்டிக் கொள்வதைக் கண்டாலே எனக்கு கட்டோடு பிடிப்பதில்லை. யார் அது. அந்த மிஸஸ் சாம்பமூர்த்தி? அந்தம்மாள் சொந்தப் பெயரில் எழுதினால் கதையைப் பிரசுரிப்போம். இல்லாவிட்டால் திருப்பி அனுப்பி விடுவோம். 'மாதர் திலகம்' பத்திரிகையில் இந்த மாதிரியான பயந்தாங்கொள்ளிப் பெண்களுக்கு இடமில்லை. தெரிந்ததா? பெண்கள் என்ன, இன்னுமா ஆண்களின் நிழலாக இருக்க வேண்டும்?'' என்று கூச்சல் போட்டுவிட்டு மேஜை மீது ஓங்கி கையால் ஒருமுறை குத்தினாள்.

கௌரியம்மாளின் பிரசங்கத்தை மறு அறையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த அருணா, சட்டென்று பேனாவைக் கையில் எடுத்துக் கொண்டாள். இவ்வளவு நேரம் அவள் மனதிற்குள்ளேயே தேடிச் சலித்துப்போன அந்த வார்த்தை அவளுக்கு இப்பொழுது பிடிபட்டு விட்டது. 'நிழல்' என்பதுதான் அந்த வார்த்தையாக இருக்க வேண்டும் என்று அருணாவின் உள்ளுணர்வு கூறியது. பேச்சுக்குப் பேச்சு கௌரியம்மாளின் வாயில் 'நிழல்' மிகவும் அடிபட்டு நொறுங்குவது வழக்கம். ஆகவே, அவள் ''பெண்கள் தங்களை ஆண்களின் நிழலாகப் பாவித்துக் கொண்டு வருவது பரிதாபமாக இருக்கிறது'' என்று வாக்யத்தைப் பூர்த்தி செய்தாள்.

சந்தோஷத்துடன் தான் எழுதி முடித்த காகிதங்களைச் சேகரித்து கட்டாகக் கட்டி எடுத்துச் சென்று கௌரியம்மாவின் மேஜை மீது வைத்துவிட்டு, விடைபெற்றுக் கொண்டு வீட்டிற்குக் கிளம்பினாள் அருணா.

அஸ்தமிக்க வெகு நேரம் இருந்தும் வானம் அன்று மிகவும் இருண்டு காணப்பட்டது. கையில் கட்டுச் சுமை காகிதத்துடன் மாடிப்படிகளில் இறங்கிய அருணா, வாயிலை அடைந்ததும் வானத்தைப் பார்த்துவிட்டுத் தயங்கினாள்.

அடிக்கொரு தடவை, அலைகளைப் போல் நெளிந்து சுருண்டு பளிச்சிட்ட மின்னலும் வானத்திலே கவிந்து நின்ற மேகத்திரைகளும், வரப்போகும் பெரு மழையை முன்கூட்டியே எச்சரித்துக் கொண்டிருந்தன. 'பஸ் நிற்கும் இடம் வரை போவதற்குள் மழை பலமாகப் பொழியத் தொடங்கினால் என்ன செய்வது? குடைகூட இல்லையே? கைப்பிரதிகள் முழுவதும் மழையில் தெப்பலாக நனைந்து விட்டால், பிறகு கௌரியம்மாளுக்கு என்ன பதில் கூற முடியும்!'' என்று தனக்குள் எண்ணி தயங்கிக் கொண்டு கடைசி படியில் நின்றாள் அருணா. அவளது சந்தேகங்களை ஊர்ஜிதம் செய்வது போல் வானத்தினின்று சிறு தூறல்களும் விழ ஆரம்பித்தன.

'மழை பலக்கத் துவங்குமுன் பஸ் நிற்குமிடத்திற்கு விரைவாகச் செல்ல முடியுமா? ' என்று யோசித்தவண்ணம் வானத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டு நின்ற அருணா ஒரு கணம் திடுக்கிட்டுப்

போய்விட்டாள். தெருவில் வேகமாக வந்து கொண்டிருந்த கார் ஒன்று அவள் நின்ற இடத்தை அடைந்ததும், 'கிரீச்'சென்ற சப்தத்துடன் நின்றது.

''அருண்! இந்த வேளையில் இங்கே வந்து ஏன் நின்று கொண்டிருக்கிறாய்?'' என்று வினவியவண்ணம், டிரைவர் ஆசனத்தினின்று எட்டிப் பார்த்தான் சுரேஷ்குமார்.

பல மாதங்களுக்குப் பிறகு, அவனைத் திடீரென்று இவ்வாறு சந்திக்க நேர்ந்ததில், ஏற்பட்ட இனிமையானதொரு அதிர்ச்சியில் அருணாவால் சட்டென்று பதில்கூற முடியவில்லை.

''சுரேஷ்குமாரா? நான் எதிர்பார்க்கவேயில்லை. ஊரிலிருந்து எப்பொழுது வந்தீர்கள்?'' என்று தடுமாற்றத்துடன் அவள் வினவினாள்.

''எதிர்பார்த்திருக்க மாட்டாய் என்பதை அறிவேன். நீ முன்னிருந்த அருணாவா? இப்பொழுது கலாசாலை மாணவி, அதனால் எங்களையெல்லாம் மறந்துவிட்டது நியாயந்தான், அதிருக்கட்டும்; மழை வரும் போலிருக்கிறதே! உங்கள் வீட்டுக் கார் எங்கே?'' என்று வினவினான் சுரேஷ்.

எதிர்பாராத சந்திப்பில் கலவரமடைந்து போன அருணாவுக்குச் சட்டென்று பொய் சொல்ல முடியவில்லை. ''வீட்டிற்குப் போகக் கிளம்பிக் கொண்டிருக்கிறேன். பஸ் நிற்குமிடம் போவதற்குள் மழை கொட்டிவிடும் போல் பயமுறுத்துகிறது'' என்றாள் புன்முறுவலுடன்.

''அவ்வளவுதானே? வண்டிக்குள் ஏறிக் கொள். உன்னைக் கொண்டு வீட்டில் விட்டுப் போகிறேன்'' என்றான் உல்லாசமாக சுரேஷ்குமார். அருணா அதற்கு சற்று தயங்குவதைக் கண்ணுற்றதும், அவனுக்கு கோபம் வந்தது. ''என்ன அருணா? ஏன் யோசிக்கிறாய். ஏறிக்கொள். மழை பலக்க ஆரம்பித்து விட்டது'' என்று அவன் உரிமையாக அதட்டினான். இடியும் மின்னலுமாக மழை 'சோ'வென்று கோஷத்துடன் பொழியத் துவங்கவே, அருணா சட்டென்று காரின் பின் கதவைத் திறந்துகொண்டு ஏறி உட்கார்ந்துகொண்டாள்.

''கோடை விடுமுறைக்காக ஊரிலிருந்து நேற்றைய தினம்தான் வந்தேன். நீ இப்பொழுதெல்லாம் எங்கள் பங்களாவிற்கே

வருவதில்லை என்று நளினி புகார் சொன்னாள். ஆமாம் அருண், எங்களை விட்டு இவ்வாறு நீ ஒதுங்கிப் போவதற்குக் காரணம்?'' என்று வினவினான் சுரேஷ்.

'சோ'வெனப் பொழிந்த மழை எழுப்பிய ஓசையில், அவனது குரல் கிணற்றினின்று ஒலிப்பது போல் மெல்லவேதான் கேட்டது.

''காரணம் ஒன்றுமில்லை. கலாசாலைப் படிப்பிற்கும் நான் தற்சமயம் செய்துகொண்டு வரும் உத்தியோகத்திற்கும் எனக்குப் பொழுதே போதவில்லை. அதனால்தான் பங்களாவிற்கு அடிக்கடி வர சந்தர்ப்பமில்லை'' என்றாள் அருணா பதிலுக்கு.

''உத்தியோகமா?'' என்று ஆச்சர்யத்துடன் கேட்ட சுரேஷ், சடக்கென்று ஒருமுறை பின்னால் திரும்பி அவளை அதிசயமாகப் பார்த்தான்.

''ஆமாம். சற்று முன்பு என்னைத் தாங்கள் ஒரு ஆபீஸ் வாயில் படியருகில் பார்த்தீர்கள் அல்லவா? 'மாதர் திலகம்' என்னும் பத்திரிகை ஆபீஸ் அது. அதன் ஆசிரியையாக உள்ள கௌரியம்மாள் என்பவரிடம் நான் ஓய்வுநேரத்தில் குமாஸ்தா வேலை பார்க்கிறேன்'' என்றாள் அருணா.

''படித்து முடிக்குமுன் உத்தியோகத்தின் மேல் ஏன் உனக்கு இந்த மோகம்? போயும் குமாஸ்தா உத்தியோகத்தின்மேல் உனக்கு ஆசை ஏற்பட வேண்டும்?'' என்று கேட்ட சுரேஷ் உரக்கச் சிரித்தான் பரிகாசமாக.

''உத்தியோகத்தின் மீது ஆசையில்லை. வாழ்க்கைக்கு உத்தியோகம் அவசியமாக இருந்ததனால் எடுத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றாள் அருணா. அதைக் கூறி முடிக்குமுன் அவளுக்கு மிகவும் லஜ்ஜையாக இருந்தது.

''அவசியமா? என்ன பேத்தல், அருணா? இதெல்லாம் என்ன பேச்சு! கலாசாலையில் சேர்ந்த பின்பு நீ முற்றிலும் மாறிவிட்டாய்'' என்று அதட்டினான் சுரேஷ்.

'சோ'வென்று பொழிந்து கொண்டிருந்த மழை திடீரென நின்று போயிற்று. சில்லென்று வீசிய காற்றிலே வானத்தில் கவிழ்ந்து நின்ற மேகக் கூட்டம் நாலாபுறமும் சிதறிவிடவே, வானம் வெளுத்துக் கொண்டது.

"பேத்தலும் அல்ல, பிதற்றலும் அல்ல. உண்மையைத்தான் சொல்கிறேன். என் படிப்பிற்கு இந்த உத்தியோகம் அவசியமாக இருந்தது.கல்விக்குப் பணம் செலவழிக்கப் பெரியம்மாவிற்குக் கட்டு வரவில்லை. உபகாரச் சம்பளம் கிடைக்கவும் வழியில்லை. அதனால் நானே இவ்வாறு ஒய்ந்த வேளையில் வேலை செய்து, பொருள் திரட்டிப் படிக்க வேண்டி வந்தது" என்று கூறிய அருணா பெருமூச்செறிந்தாள்.

"உன் தந்தைக்கு கடிதம் போட்டால் வேண்டிய பணம் அவர் அனுப்பி வைக்கிறார். உன் பேச்சை என்னால் நம்ப முடியவில்லையே?" என்று சூள் கொட்டினான் மிகவும் அசட்டையாக சுரேஷ்குமாரன்.

இதற்குள் வண்டி ஜெகதாவின் பங்களாவைச் சமீபித்துவிட்டது. அதை உணர்ந்த அருணா ஆசனத்தில் கிடந்த காகிதச் சுமையை வாரிக் கைகளில் எடுத்துக் கொண்டாள். தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டு, "சுரேஷ்! உங்களிடம் இதுவரை சொல்லாதிருந்த ஒரு உண்மையை இன்று கூறி விடுகிறேன். குழந்தைப் பருவத்தில் என் பெரியம்மாவின் பேச்சிற்குக் கட்டுப்பட்டு பயந்து, அவர்கள் கூறியதை ஆமோதிப்பது போல் நான் என் பிறந்த வீட்டைப் பற்றி ஏதும் பேசியதே இல்லை. ஆனால் இனி இவ்வளவு வயதிற்கு மேல், கல்வி கற்று பண்படைந்த பின்பு, முன்போல் பொய் பேசி, பொய்யான நிலையில் வாழ எனக்குப் பிரியமில்லை. என் தந்தை கிராமத்திலே பெரிய மிராசுதார் என்று இதுவரை நீங்கள் எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள், அல்லவா? அதுதான் இல்லை. அன்றாட சாப்பாட்டிற்கும் வழியில்லாது தரித்திரத்தில் உழலும், பரம ஏழையான ஒரு விவசாயி என் தந்தை" என்றாள். இதைக் கூறிமுடிப்பதற்குள் துக்கத்திலே வார்த்தைகள் திணறின. கண்களில் லேசாக நீர் துளிர்த்தது.

வாயிலில் கொண்டு காரை நிறுத்திய சுரேஷ்குமாரன் ஆச்சர்யத்துடன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"உன் மனத்தை வீணே நோகச் செய்துவிட்டேன் என்று நினைக்கிறேன். மன்னித்துக் கொள் அருண்" என்று பதிலளித்த

சுரேஷ், வண்டியினின்று இறங்கி காரின் கதவை அவளுக்காகத் திறந்து விட்டான்.

அருணா ஆசனத்தினின்று இறங்கி வெளியே வந்தாள். சில விநாடிகளில் தன்னைச் சமாளித்துக் கொண்டு விட்டதனால் மெல்லிய குரலில் நிதானமாக, "உங்கள் வீட்டிற்கு ஏன் வருவதில்லை என்று கேட்டீர்கள் அல்லவா? அதன் காரணத்தையும் இப்பொழுதே கூறி விடுகிறேன். நான் உங்களுடன் நட்புக் கொள்வதையோ நெருங்கிப் பழகுவதையோ உங்கள் மனோ அக்கா விரும்பவில்லை. உங்கள் வீட்டிலே சரிசமமாக நான் வந்து புகுவது தகாது என்று என்னிடம் ஒரு சமயம் நேரிடையாகக் கூறி எச்சரித்து விட்டார்கள். அவர்கள் கூறியபொழுது எனக்கு மிகவும் மனத்தாங்கலாக இருந்தது. ஆத்திரமாகக் கூட இருந்தது. நிதானமாக யோசிக்கும் பொழுது, அவர்கள் கூற்றில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. உங்களுடன் நெருங்கிப் பழகவோ, நட்புரிமை பாராட்டவோ எனக்கு என்ன அந்தஸ்து இருக்கிறது? 'மலைக்கும் மடுவுக்கும்' என்பார்களே, அதுபோல் நம் இருவரின் குடும்ப நிலையும் உள்ளது. என் உண்மை அந்தஸ்தை உணர்ந்து கொண்டதனால் நான் இவ்வாறு ஒதுங்கிப் போனேன். வேறு காரணம் ஏதும் இல்லை. சிரமத்தைப் பாரா என்னை வீட்டில் கொண்டு பத்திரமாகச் சேர்த்ததற்கு மெ வந்தனம்" என்று கூறிவிட்டு, அதற்குமேல் நின்று பேசத் தாளா அவசரமாக உள்ளே சென்றாள்.

மாடியறை ஒன்றில் ஜெகதா அது சமயம், வீட்டுக் கணக்குப் பிள்ளையிடம் மிகவும் கோபமாகப் பேசிக் கொண்டிருந்தாள். தனக்கு வர வேண்டிய வீட்டு வாடகைப் பணத்தைச் சரிவர வசூலிக்காது இருந்து கொண்டிருந்தான் என்று கணக்குப் பிள்ளை மீது அவளுக்கு அபார கோபம். "உங்களைச் சொல்லிக் குத்தமில்லை. என் பணம் போகிற வழி அது?" என்று ஒரு சொல் அம்பை வீசிவிட்டு, ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். தோட்டத்திலே வந்து நின்ற ஒரு பெரிய மோட்டாரினின்று அருணா இறங்குவதையும், யாரோ ஒரு யுவன் அவளுக்காகக் கதவைத் திறந்து விடுவதையும் கண்ணுற்றாள். அவ்வளவுதான். ஜெகதாவின் முகம் ரத்தம் போல் சிவந்தது. நெஞ்சு படபடக்கத் தொடங்கியது. வேகமாக அறையை விட்டுவெளியே

வந்து மாடிப்படிகளில் எதிர்ப்பட்ட அருணாவைக் கண்டதும் அவளது ஆத்திரம் உச்ச நிலையை அடைந்தது. "பஸ்ஸில் வருவதற்கென்ன கொள்ளை? அது எவன் கார்?" என்று அதட்டினாள்.

"இல்லை பெரியம்மா, ஆபீஸிலிருந்து புறப்படும் பொழுது பெருத்த மழை கொட்ட ஆரம்பித்தது. வந்து..." என்று அருணா திகிலுடன் கூறி முடிப்பதற்குள் பொறுமையில்லாத ஜெகதா கோபத்துடன் குறுக்கிட்டாள்.

"மழையாவது, வெய்யிலாவது! எவனாவது ஒரு பெரிய காரை வைத்துக் கொண்டு வந்து அருகில் நிறுத்தினால், அதில் டக்கென்று ஏறி உட்கார்ந்து கொள்வதா? உனக்கு என்ன தைரியம்? மழை பெய்தால் என்ன? சர்க்கரைக் கட்டியா நீ? மழையிலே கரைஞ்சி போயிடுவியா? ஏமாந்த பெண்கள் எங்கே கிடைப்பார்கள் என்று காரை வைத்துக் கொண்டு ஊரில் அயோக்யப் பசங்கள் திரிகிறார்கள். கண்ட காரிலே நீ ஏறிக் கொண்டு வருவதை லோகநாயகி பார்த்தால் என் கதி என்ன ஆவது? இப்படித் தப்புத் தவறான காரியம் ஏதாவது ஒரு பெண் செய்யப் போய், காலேஜில் படிக்கும் அத்தனை பெண்களும் கெட்டவர்கள் என்று வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று பேசி விடுகிறார்கள். அந்தக் கார் யாருடையது? அவன் யார்? முன்பின் தெரியாத ஒரு பெண்ணைத் தன் காரில் ஏற்றிக் கொண்டு வீட்டு வரைக்கும் வர அவனுக்கு எவ்வளவு தைரியம்?

"என்னை நீ என்னன்னு நினைத்துக் கொண்டிருக்கிறாய்? இன்னிக்கு நான் உன்னை சும்மா விடப் போவதில்லை. இப்படி ஆரம்பிச்ச நீ எங்கே போய் முடிவாயோ தெரியாது! முளையிலே கிள்ளாவிட்டால் கோடாலி கொண்டு பிளக்கத்தான் வேண்டும். எங்கே அவன்! அவனையும் நான் சும்மா விடப்போவதில்லை. ஒரு காரும், பொழுதும் இருந்தால், காலேஜ் எங்கே, ஆபீஸ் எங்கே என்று ஊரைக் கெடுக்க இப்படி வாலிபர்கள் திரிய வேணுமா?" என்று படபடவென்று கூச்சலிட்ட ஜெகதா, மூச்சுத்திணற அருணாவைத் தள்ளிக் கொண்டு ஆவேசம் வந்தவள் போல் வாசல் ஹாலுக்கு விரைந்தாள்.

எல்லாம் மின்னலைப் போல் ஒரே கணத்தில் நடந்தன. உர் என்று

கோபத்துடன் கூட்டினின்று பாய்ந்து வெளிப்படும் சர்க்கஸ் புலி, எஜமானனைக் கண்டதும் வாலைக் குழைத்துக் கொண்டு பணிவாக நிற்பது போல், ஹாலுக்குள் இருந்த ஆசனமொன்றில் அமர்ந்து கொண்டிருந்த சுரேஷ்குமாரனைக் கண்டதும், ஜெகதாவின் கோபமெல்லாம் பஞ்சாகப் பறந்தோடிவிட்டது.

"சுரேஷ் தம்பியா? அடடா! எப்ப வந்தது? ஊருக்கு வர இன்னும் ஒரு வாரத்துக்கு மேலாகும் என்று முந்தா நேத்து லோகா சொன்னாளே!" என்றாள் மிகவும் பரிவுடன்.

"நேற்றுத்தான் வந்தேன். கடைத்தெருப் பக்கம் யதேச்சையாக வந்து கொண்டிருந்தபோது, அருணா மழையில் நனைந்து கொண்டு வருவதைக் கண்டேன். வீட்டில் கொண்டு விட்டுப் போகிறேன் என்று வற்புறுத்தி என் காரில் ஏற்றிக் கொண்டு வந்தேன். சௌக்யம்தானே? பார்த்து ரொம்ப நாளாச்சு" என்றான் சுரேஷ்குமாரன்.

"நல்ல காரியம் செய்தாய். நீ வந்திருக்காவிடில் அருணா மழையில் நனைந்து கொண்டே வீட்டிற்கு வந்திருப்பாள். அடுத்த நாளே அவளுக்கு சளியும் ஜுரமும் ஏற்பட்டு விட்டிருக்கும். கார் ஒரு வாரமா ரிப்பேராகிக் கிடக்கிறது. எங்கும் போக வேண்டாம் என்றால் சொன்ன பேச்சைக் கேட்டால்தானே?" என்று படபடவென்று பேசிய ஜெகதா அதே மூச்சில், "அருணா! சுரேஷ் தம்பிக்கு ஒரு லோட்டா ஓவல் கலக்கிக் கொண்டு வா, சீக்கிரம் வாம்மா!" என்று பரிவுடன் உத்தரவிட்டாள்.

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் அம்மா. நான் இப்பொழுதுதான் டிபன் சாப்பிட்டுவிட்டு வீட்டிலிருந்து கிளம்பினேன்" என்று பிகுவுடன் எழுந்திருந்த சுரேஷ்குமாரன், சுற்றுமுற்றும் பார்த்தான். சஞ்சலத்துடன் ஒரு வெள்ளி டம்ளரில், பெரியம்மா உத்தரவிட்ட பானத்தை அவசரமாகத் தயாரித்துக் கொண்டு நுழைந்த அருணா அவமானத்தினால், சுரேஷ்குமாரனை நேருக்கு நேர் பார்க்க அஞ்சியவளாக, பாத்திரத்தை மேஜை மீது வைத்தாள்.

"உங்கள் பேச்சைத் தட்டவில்லை. அருணா சிரமப்பட்டுத் தயாரித்த ஓவல் எப்படித்தானிருக்கிறது என்று ருசி பார்க்க

ஆசைப்படுகிறேன். நளினி குடும்ப நிர்வாகக் கலை பயிலத் தொடங்கினாலும் தொடங்கினாள். விடுமுறை நாட்களில் அடிக்கடி ஏதாவது புது சுயம்பாகத்தில் இறங்கி விடுகிறாள். நெய்யும் சர்க்கரையும் வீணாவதைப் பற்றி வீட்டில் யாரும் கவலைப்படவில்லை. முடிவில் அவள் தயாரிக்கும் பக்ஷணங்களைக் கொடுத்துச் சாப்பிடச் சொல்லி இம்சிப்பாளே என்றுதான் எல்லோருக்கும் கவலை? நாளை என் பிறந்த நாளுக்கு அவள் ஒரு புது தினுசு பர்பி செய்யப் போகிறாளாம். வந்திருக்கும் விருந்தாளிகளை விரட்டியடிக்க இந்தச் சூழ்ச்சியா என்று கேட்டுவிட்டேன். நளினிக்குக் கோபம் மூக்கின்மேலே வந்துவிட்டது'' என்று கூறிவிட்டு, கடகடவென்று நகைத்தான்.

கூடவே சிரித்த ஜெகதா, ''சுரேஷ்! நீ ரொம்ப வேடிக்கையாகப் பேசுகிறாய் அப்பா! நளினி புத்திசாலி. அவள் சமையல் அப்படி ஒன்றும் மோசமாக இருப்பதாகத் தோன்றவில்லை. ஒரு மாதத்திற்கு முன்பு அவள் செய்ததாக பயத்தம் பருப்பு லட்டு ஒன்று கொண்டு வந்து லோகா கொடுத்தாள். சாப்பிட நன்றாகத்தான் இருந்தது.'' என்றாள் பகட்டாக.

''உங்கள் சிநேகிதியின் மகளை விட்டுக் கொடுத்துப் பேசுவீர்களா? உண்மையில் அந்த லட்டை நீங்கள் சாப்பிட்டிருக்க மாட்டீர்கள். ஜன்னல் வழியே தூக்கி எறிந்து விட்டிருப்பீர்கள்'' என்று கூறிய சுரேஷ் நகைத்துக் கொண்டே அருணா பக்கம் திரும்பினான்.

''உன்னுடைய ஆருயிர்த் தோழியைப் பற்றி நான் அசட்டையாகப் பேசுவதைக் கேட்க உனக்குக் கோபம் ஏற்படலாம். உண்மையைச் சொல்கிறேன். நீ தயாரித்துள்ள இந்த பானம் மிகவும் இனிமையாக இருக்கிறது'' என்று புன்னகை செய்தான். 'வந்தனம்' என்று பதிலளித்த அருணா, தன் முகத்தை மறுபடியும் திருப்பிக் கொண்டாள்.

''நாளைக் காலையில் நளினி நேரே வந்து என் பிறந்த நாளுக்காக உன்னை விருந்து சாப்பிட அழைக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். மழை பெய்தது ஒரு வழியில் நல்லதாயிற்று. உன்னை வீட்டில் கொண்டு சேர்த்தது போலாயிற்று. அத்துடன் பிறந்த நாள் விருந்துக்கு வரும்படி உன்னை நேரே அழைத்தது போலும்

போலும் ஆயிற்று. என்ன அருணா! நாளை பகல் என் பிறந்த நாள் விருந்திற்கு நீ கட்டாயம் சாப்பிட வரவேண்டும். என்னம்மா, நீங்களும் கூட வரவேண்டும். வராமல் இருந்து, பிறகு சாக்குப் போக்குகள் கூறினால் நான் மன்னிக்க மாட்டேன் என்று இப்பொழுதே எச்சரித்து விடுகிறேன்'' என்று உற்சாகமாகப் பேசினான் சுரேஷ்குமாரன்.

''ஒழிந்தால் வர முயற்சிக்கிறேன். மெத்த வந்தனம்'' என்று பதிலளித்த அருணா புன்முறுவல் செய்தாள்.

''கட்டாயம் வரவேண்டும்'' என்று உரிமையுடன் அதட்டிவிட்டு சுரேஷ்குமாரன், அவர்கள் இருவரிடமும் விடை பெற்றுக் கொண்டு வெளியே சென்று காரில் ஏறிக் கொண்டான்.

கார் வெளிச் சுவரைத் தாண்டி ரஸ்தாவில் மறையும்வரை, பார்த்துக்கொண்டு நின்ற ஜெகதா, சட்டென அருணா பக்கம் திரும்பி, ''ஏண்டி முட்டாள் பெண்ணே! உன்னை இங்கு கொண்டு வந்து விட்டது சுரேஷ்குமாரன்தான் என்று முந்தியே ஒரு வார்த்தை சொல்வதற்கென்ன கேடு? எந்த துஷ்ட வாலிபன் வண்டியில் ஏறிக்கொண்டு வந்துவிட்டாயோ என பயந்து போய் அப்படி அதட்டினேன். நல்ல வேளை. நான் பின் கட்டிலே பேசியது சுரேஷ் காதுகளில் விழவில்லை. சுரேஷ் எவ்வளவு அன்போடு உன்னை பிறந்த நாள் விருந்துக்கு கூப்பிடுகிறான்! 'வர முயற்சிக்கிறேன்' அப்படி இப்படின்னு ரொம்ப அழுத்தலாப் பேசுகிறாயே. அவர்கள் வீட்டுச் சிநேகிதம் கிடைக்கக் கூடியதா? அவனை யார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? இந்த நகரத்தில் ஈடு இணையில்லாத கோமஸ்வரனின் ஏக புத்திரன் என்ற ஞாபகம் இருக்கட்டும்'' என்று இரைந்து கத்தினாள்.

''பெரியம்மா, நாளைக்கு எனக்கு எழுத்து வேலைகள் அதிகம் இருக்கிறது. அதனால் சொன்னேன்'' என்று அருணா மென்று விழுங்கினாள்.

''இன்னிக்கு இல்லாவிட்டால் நாளைக்கு சேர்த்து எழுதிக் கொண்டால் போகிறது. சுரேஷுக்கு தினம் தினமுமா பிறந்த நாள் வரும்? உன்னுடைய கர்வத்தையும், பொல்லாத தனத்தையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு, நாளைக்குப் பேசாமல் பகல்

விருந்துக்கு அவர்கள் வீட்டுக்குப் போயிட்டு வா. போகும்போது நம் வீட்டுக் காரில் போகலாம். வெறுங் கையோட போய் வைக்காதே. அலமாரியிலே அத்தான் வாங்கி வச்ச திருக்குறள் புத்தகம் நாலைஞ்சு காப்பிகள் பத்திரமாயிருக்கு. அதிலே புதுசா, கிழிசல் இல்லாத நல்ல காப்பியா ஒன்றை எடுத்துக் கொண்டு போய் சுரேஷுக்குப் பிறந்த நாள் பரிசாகக் கொடுத்துவிட்டு வா.

''பெரிய மனிதர்களோடு எப்படிப் பழகுகிறது, பேசுகிறது என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? வீட்டிலே அடைஞ்சு கிடந்தா அதெல்லாம் தெரிஞ்சு விடுமா? மேலும் காலேஜ் படிப்பு முடிந்ததும் ஒரு கல்யாணம் கில்யாணம் ஆக வேண்டியதில்லையா? உங்கப்பன் இருக்கும் யோக்கியதைக்கு எந்த வரன் உன்னைத் தேடிக்கொண்டு வரப்போகிறான்? நல்ல ஒரு இடத்தில் நீயாகவேதான் பார்த்துத் தேடிக் கொள்ள வேணும். உன்னையொத்த காலேஜ் பெண்கள் எல்லாம் இந்தக் காலத்தில் எத்தனை சாமர்த்தியமாய் இருக்கிறார்கள். நீ என்னடான்னா சுத்த மக்குப் பிளாஸ்திரியாக இருக்கிறாய்'' என்று அதட்டினாள் ஜெகதா.

அவள் வார்த்தைகளில் பதிந்து நின்ற உட்கருத்தை உணர்ந்த அருணாவிற்கு அவமானத்தினால் முகம் குப்பென்று சிவந்து போயிற்று. என்ன பதில் கூறுவது என்றே விளங்காது அவள் மௌனமானாள்.

27

மறுநாள் காலை விடிவதற்குக் கூடக் காத்திருக்கப் பொறுமையற்றவர்களாக, பழனியப்பக் கவுண்டரின் செல்வமக்கள், அருணாவை அழைத்துப் போக வந்திருந்தனர். அவர்களைக் கண்டதும் ஏற்பட்ட ஆனந்த பரவசத்தில் ஜெகதாவிற்கு, தான் என்ன செய்கிறோம் என்ற நினைப்பே இருக்கவில்லை. ''உட்காரு தம்பி, சுரேஷ்! நளினி, இப்படி இரும்மா சும்மா'' என்று குழறியவளாக அவசரமாகப் பெருமூச்சு வாங்க விரைந்து, ஆசனங்களில் கிடந்த திண்டுகளை எடுத்து, தூசிபோகத் தட்டி சரிப்படுத்தினாள். தரையில்

விரித்திருந்த ரத்னக் கம்பளத்தில் இடறி விழுந்த வண்ணம் ஓடோடியும் சென்று மின்சார விசிறியைச் சுழல விட்டாள்.

''ஏ வள்ளி! இங்கே வா. உள்ளே போய் இரண்டு தட்டிலே இட்டிலியும் காப்பியும் எடுத்து வா. போ சீக்கிரம்'' என்று அரையும் காதுமாக ஒலித்த இரட்டைக் குரலில் கிரீச்சிட்டு அலறிவிட்டு, மூச்சு நின்று விடும்போல் திணறிக் கொண்டு ஆசனமொன்றில் அமர்ந்து கொண்டாள்.

பழனியப்பக் கவுண்டரின் செல்வ மக்களின் விஜயம், ஜெகதாவின் நெஞ்சு படபடப்பை அதிகரிக்கச் செய்தது. முகம் முழுவதும் செக்கர்வானமாகச் சிவந்து போயிற்று. நெற்றி மீது துளிர்த்த வியர்வை, நீர் வீழ்ச்சி போல் கன்னங்களில் வழிந்தோடியது. புஸ் புஸ் என மூச்சுவிட்ட வண்ணம் புடவைத் தலைப்பினால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். நளினியும் சுரேஷும் நேராகவே அழைத்துப்போக வரக்கூடும் என்பதை அறிந்தும் அருணா, வெளியே கிளம்பத் தயாராகாது, மாடியறையில் பாடப் புத்தகமொன்றில் ஆழ்ந்து கிடப்பதை எண்ணிய மாத்திரம் அவளுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

''தம்பி சுரேஷ்! கொஞ்சம் காப்பி சாப்பிடப்பா. நளினி! நீ கூடத்தான் கொஞ்சம் பலகாரம் எடுத்துக்கோ. உங்கள் ரெண்டு பேரையும் ஜோடியாகப் பார்த்து எத்தனையோ வருஷமாச்சு.'' என்று நாத்தடுமாற உளறிவிட்டு, அவசரமாகத் துள்ளி எழுந்த ஜெகதா, மாடிப் படிகளில் விழுந்தடித்துக் கொண்டு ஏறிச் சென்றாள். பேனாவும் கையுமாக, ஆலோசனையுடன் வீற்றிருந்த அருணாவைக் கண்டதும், அவளால் சினத்தை அடக்க முடியவில்லை.

''தூங்கி வழிந்து கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே அசட்டுப் பெண்ணே! கீழே அவர்கள் எல்லோரும் வந்து காத்திருக்கிறார்கள்!'' என்று ஒரு அதட்டல் போட்டாள்.

திடுக்கிட்ட அருணா, தலையை நிமிர்ந்து கனவினின்று எழுந்தவள் போல், விழித்தாள். ''எவர்கள்?'' என்று அவள் கேட்டவுடன் ஜெகதாவிற்கு கோபம் தாளவே முடியவில்லை.

''என் என்றால் எண்ணெயாய் நிற்கிறார்கள் ஒவ்வொரு

பெண்கள்! உனக்குச் சொந்தமாக சாமர்த்தியமும் கிடையாது. பிற சொல்வதும் காதில் ஏறுவதில்லை. விடிய விடியக் கதை கேட்டு 'சீதைக்கு ராமன் சித்தப்பன்' என்கிறாயே, முட்டாளே! நேற்று சாயங்காலம் நான் என்ன சொன்னேன்? ஞாபகம் இல்லை?'' என்று சீறினாள் ஜெகதா.

''ஆமாம் பெரியம்மா. நளினி வீட்டிற்கு விருந்து சாப்பிட போக வேண்டுமென்று சொன்னீர்கள். இப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது'' என்று மென்று விழுங்கினாள் அருணா.

''நல்ல வேளை! நினைவாவது வந்ததே! புஸ்தகத்தை எல்லாம் மூடி வைத்துவிட்டு, எழுந்திரு சீக்கிரம். அந்தக் குழந்தைகள் இரண்டும் உன்னை அழைத்துப்போக நேரிடையாகவே வந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் நம் போன்றவர்கள் வீட்டிற்கு வரக் கூடியவர்களா? அவர்கள் அந்தஸ்து என்ன ஆஸ்தியென்ன? செல்வாக்கு என்ன? அதையெல்லாம் தெரிஞ்சு சாமர்த்தியமா நடந்துகொள்ள வேண்டாமா? என்ன பொண்ணு நீ பங்கஜத்துக்கு என்று ஒரு மக்குப் பெண்ணா வந்து பிறக்கணும்? என் தலையெழுத்து, உம். சீக்கிரமா போய் டிரஸ் செய்துக்கோ. மசமசன்னு நிற்காதே!'' என்று படபடவென்று பொரிந்து கொட்டினாள்.

மூச்சு வாங்கச் சிறிது நிதானிப்பது போல் பேச்சை நிறுத்திக் கொண்டு, முகத்தை முந்தானையால் துடைத்துக் கொண்ட ஜெகதா, சட்டென அருணா பக்கம் திரும்பி, ''ஆமாம், என்ன கட்டிகிட்டு போகப் போறே? அந்த நீலப்பாவாடையும், மஞ்சள் டிஷ்யூ தாவணியும் போட்டுக்கோ, தெரிஞ்சிதா!'' என உத்தரவிட்டாள்.

''பாவாடையா பெரியம்மா! இனிமேலே பாவாடை உடுத்த எனக்கு வெட்கமாக இருக்கிறது'' என்று அருணா முகம் சிவக்க பதிலளித்ததைக் கேட்டதும் ஜெகதா கோபத்துடன் பற்களைக் கடித்தாள். ''வெட்கமென்னடி வெட்கம்? எம்.ஏ. படிக்கிற பெண்களும், பாவாடை தாவணி போட்டுக் கொள்கிறார்கள். நீ என்னடான்னா, அதற்குள் புடவை உடுத்த வேண்டும் என்கிறாய். நான் சொல்வதைக் கேள். புடவை உடுத்தினால் உன்னைப் பார்த்து யாரும் இருபது வயதிற்குமேல் மதிப்புப் போடுவார்கள். சின்னஞ்சிறு பெண்ணா லக்ஷணமாகப் பாவாடை உடுத்தினால்

அப்படியே மறந்து போகாமல், என் பீரோவின் மேல் தட்டில் வைத்திருக்கும் நகைப் பெட்டியிலிருந்து, சிகப்புக் கல் அட்டிகையையும் எடுத்துப் போட்டுக் கொள்.'' என்று அதட்டினாள்.

''வந்து பெரியம்மா...'' என்று அருணா பேசி முடிக்கு முன் குறுக்கிட்டாள் ஜெகதா... ''எல்லாம் எனக்குத் தெரியும். சிகப்புக் கல் அட்டிகைதான் இப்போது நாகரீகமாக முழங்குகிறது. முந்தாநேத்திகூட கிளப்பிலே டாக்டர் சங்கரம் பிள்ளை மனைவி, என் அட்டிகை மாதிரி ஒண்ணு போட்டுக் கொண்டு வந்தாள். லோகநாயகிகூட அதுபோல ஒண்ணு நளினிக்குச் செய்யப் போவதாகச் சொன்னாள். இந்த அட்டிகை போட்டுக்க உனக்கு கொடுத்து வைக்கணும்னு நினைச்சுக்கோ.

''அந்தக் காலத்திலே அத்தான் எனக்காக, பர்மாவிலிருந்து கல்லுகள் வரவழைச்சு செய்தாராக்கும். இந்த மாதிரி உயர்ந்த கல்லு, இந்த சீமையெல்லாம் தேடினாலும் கிடைக்காது. ஞாபகம் இருக்கட்டும்'' என்று மூச்சுத் திணறப் பேசினாள். ''உம் ஜல்தி ஆகட்டும்'' என்று உத்தரவு போட்டுவிட்டு, அவசரமாகத் திரும்பி மாடிப் படிகளில் வேகமாக இறங்கினாள்.

பாதி வழி சென்றதும் ஏதோ நினைத்துக் கொண்டவளாகத் திரும்பி, மீண்டும் படிகளில் ஏறி, வேகமாக அருணாவின் அறையை அடைந்தாள். அது சமயம் அருணா தன் கூந்தலைப் பின்னிக் கொண்டு கண்ணாடி முன் நின்று கொண்டிருந்தாள்.

''அருணா! நான் ஏன் இவ்வளவு பதட்டமடைகிறேன் என்பதையும் உனக்குச் சொல்லி விடுகிறேன். சுரேஷ்குமாருக்கும், நளினிக்கும் உன்மேல் ரொம்பப் பிரியம் விழுந்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் கை நழுவ விடக்கூடாது. இப்பொழுதெல்லாம் பெரிய இடங்களில் கல்யாணம் எப்படி நடக்கிறது? இது மாதிரி கூட படிக்கிற பெண்களும் பிள்ளைகளும், ஒருத்தர் மேல் ஒருத்தர் பிரியம் கொண்டு கல்யாணம் செய்துக்கிற வழக்கம் நாகரீகமா வந்துவிட்டது. சுரேஷ்குமாருக்குக் கல்யாண வயதாகி விட்டது. சீக்கிரம் கல்யாணம் செய்து, கூட பெண்ணையும் சேர்த்து சீமைக்குப் படிக்க அனுப்பணும்னு லோகா அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறாள். சுரேஷ் மனசுக்குத் தக்கபடி நீ நடந்து கொண்டால் உனக்கும் நன்மை,

எனக்கும் கௌரவம், தெரிஞ்சுதா? எப்படியாவது நீ விரைவி... பழனியப்பக் கவுண்டரின் மருமகளாகிவிட வேண்டும். நா... இதுகாறும் உனக்குப்பட்ட சிரமத்திற்கு நீ இந்த உபகாரம் செய்... எனக்குப் போதும்'' என்றாள் ஜெகதா மூச்சுத் திணறிக் கொண்டு.

அவமானத்தினால் அருணாவின் உடல் குன்றிப் போயிற்... வெட்கம் தாளாது அவள் முகம் செக்கச் செவேலென்று சிவ... போயிற்று. ''பெரியம்மா! சுரேஷிற்கும் எனக்கும்...'' என்... ஆக்ஷேபணை கூற வாயைத் திறந்தாள்.

ஆனால், பிடிவாதமே உருவான ஜெகதா அவளைப் பேசவி... விடவில்லை. ''பெரியவங்க பேச்சை எதிர்த்துப்பேசும் வழக்கத்... விட்டுடு! எனக்கு எல்லாம் தெரியும். பெரிய இடத்திலே வாழ்க்கை... பட வேணுமென்றால் நாமும் கொஞ்சம் சொந்தமாக முயற்சிதா... செய்தாகணும். உனக்கு இருக்கும் சந்தர்ப்பம் இன்னொ... பெண்ணுக்கு இருந்தால் இத்தனை நாழி சுரேஷின் மனைவியா... ஸ்விட்சர்லாந்துக்குப் புறப்பட்டிருப்பாள்.

''நீ சுரேஷைக் கட்டிக் கொள்ள வேண்டும் என்பது என் ஆசை... என் தீர்மானமும் கூட. நான் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை... தனியே என் வழியில் பிரயத்தனம் செய்யப்போகிறேன். நீ உன்னா... ஆனவரை முயற்சிகள் செய்து காரியத்தைச் சாதிக்க வேண்டியது. இ... உன்னுடைய கடமை என்றும் நீ நினைக்க வேணும். தெரிஞ்சு... லோகாவைப் பற்றி எனக்குத் துளியும் சந்தேகமில்லை. அந்... காட்டுப்பூனை, மனோன்மணி பாவிதான் இதற்குக் கொஞ்... குறுக்கே நிற்பாள். இருந்தாலும், நாம் முயற்சியிலே கொஞ்சமு... சோர்ந்துவிடக் கூடாது. ஆமாம்!'' என்று உபதேசித்தாள்.

தொடர்ந்தாப்போல், ''கொஞ்சம் மூஞ்சியிலே பவுட... கனமாக அப்பிக் கொள்ளேன். இதெல்லாமா ஒரு படி... பொண்ணுக்குச் சொல்லித் தரணும்? கரிக்கட்டை போல இரு... கொண்டு ஒவ்வொரு பெண்கள் இந்தக் காலத்திலே பவுடரை... ஸ்நோவையும் பூசிக்கொண்டு ரதிபோல வேஷம் போடுறெதுகள். ச... சரி, என்னை எதிர்த்து ஏதும் பேசாதே. உங்கம்மா என் பேச்சை... கேட்டு, நான் தேடித் தந்த வரனைக் கட்டிக் கொண்டிருந்தா...

...ட்டினியிலே அல்ப ஆயுசிலே செத்திருக்க மாட்டாள். நீயாவது என் ...பேச்சைக்கேள். சீக்கிரம் கிளம்பு. அவர்கள் இரண்டு பேரும் ரொம்ப ...நேரமாகக் காத்திருக்கிறார்கள்!'' என்று உத்தரவிட்டு விட்டுக் கீழே இறங்கி ஓடினாள்.

மாடியறைக்குப் போனவள், அங்கேயே மாயமாக மறைந்துவிட்டாளா என்ன? வெகு நேரமாகிறதே என்று வியப்புடன் யோசித்த வண்ணம் வீற்றிருந்த நளினி, சுரேஷ் இருவர் முன் பரபரப்பாக வந்து நின்றாள் ஜெகதா. ''மன்னிச்சுக் கொள்ளுங்கள். அருணா ஐந்து நிமிஷத்தில் வந்து விடுவாள்'' என்று குழறிவிட்டு ஆசனம் ஒன்றில் அமர்ந்து கொண்டாள்.

''அருணாவையும் கூட்டிக் கொண்டு, உங்களையும் அழைத்து வரும்படி அம்மா சொன்னாங்க'' என்றான் சுரேஷ்.

''என்னையுமா? நானா? நான் வந்து... வந்து... நான் எதற்கு?'' என்று உளறிய ஜெகதா, ஆசனத்திலே ஒரு முறை எழுந்து உட்கார்ந்தாள். 'தனியாக அருணாவை அனுப்புவதை விட, கூட அவளும் கண்காணிக்கச் சென்றால் ஒரு விதத்தில் நலன் பயக்கும்' என்று அவள் மனதிலே மின்னல்போல் ஒரு யோசனை பளிச்சிட்டு ஓடியது.

''குழந்தைகள் நீங்கள் எல்லோரும் தமாஷாக இருக்க வேண்டிய இடத்தில் என்னைப் போல பெரியவங்களுக்கு என்ன இடமிருக்கு? அதனாலே நான் வந்து எதுக்கு...?'' என்று கூறினாள்.

''நீங்கள் கட்டாயம் வர வேண்டும். இல்லாவிடில் அம்மா எங்களைக் கோபிப்பார்கள்'' என்று நளினி கொஞ்சம் பிடிவாதமாகவே சொன்னாள்.

மனமில்லாதவள் போல் தயங்கிக் கொண்டு, உடம்பை நெளித்துக் கொண்டு ஜெகதா எழுந்திருந்தாள். ''சரி, நீங்கள் இருவரும் வருந்தி அழைக்கும்போது நான் பிகு செய்வது சரியல்ல. வராவிட்டால் லோகா கோபித்துக் கொள்வாள். ஒரு நிமிஷம் பொறுங்கள். நானும் வந்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டு ஒரே பாய்ச்சலில் சமையலறைக்கு ஓடினாள்.

''சமையலை இத்தோட நிறுத்திக்கோ. அனாவசியமா சாம்பார்,

ரசம் ஒன்றும் தயாரிக்க வேணாம். நாங்கள் எல்லோரும் இன்னிக்கு விருந்து சாப்பிட வெளியே போகிறோம். உனக்குச் சாப்பிட நேத்து ராத்திரி மிஞ்சிய சாம்பாரும் பழைய சாதமும் இருக்கு'' என்று சமையற்காரியிடம் அவள் ஆரம்பிக்க இருந்த சமையலுக்கு தடை உத்தரவு பிறப்பித்தாள்.

நெய், பால், வெண்ணெய் போன்ற விலையுயர்ந்த பொருள்களை அவள் கைக்கு எட்டாது அலமாரியில் வைத்து பரபரப்புடன் பூட்டி சாவியை இடையில் செருகிக் கொண்டாள். பின் கட்டில் கொடியில் காய்ந்து கொண்டிருந்த பட்டுச் சேலை ஒன்றை இழுத்து,மிகவும் அவசரமாக உடுத்திக் கொண்டு, ஆணியில் மாட்டியிருந்த பூ வேலை செய்து தானே தயாரித்த அழகு பையை கையில் எடுத்துக் கொண்டு வெளியே செல்லக் கிளம்பினாள். ஹாலுக்குள் அவன் வருவதற்கும், அருணாவும் தயாராக அங்கு வந்து சேர்வதற்கும் சரியாக இருக்கவே, மேலே ஏதும் ஆர்ப்பாட்டம் செய்யாது பழனியப்பக் கவுண்டர் காரிலேயே அனைவரும் விருந்துக்கு புறப்பட்டனர்.

பங்களாவின் வாயிலில் வந்து நின்று கொண்டிருந்த லோகநாயகி, அவர்களை அன்புடன் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றாள். தாங்கள் இருவர் மட்டுமே தான் விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் என எண்ணி இறுமாப்புடன் அன்ன நடை போட்டு அசைந்தவாறு உள்ளே நுழைந்த ஜெகதா, அழகாக அலங்கரிக்கப் பெற்றிருந்த ஹாலில், நடுவே கிடந்த பெரிய சோபா ஒன்றில் உல்லாசமாகச் சாய்ந்தபடி, சிகரெட்டைப் புகைத்தவாறு வீற்றிருந்த சுந்தர புருஷன் ஒருவனைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள். அவளது அதிர்ச்சி அடங்கு முன்பு உள்ளிருந்து ஒரு வெள்ளித் தட்டில் மேல் கண்ணாடி டம்ளர்களில் குளிர்ந்த பானத்தை நிரப்பி எடுத்துக் கொண்டு, தளுக்கு நடை போட்டுக் கொண்டு வந்த மனோன்மணியின் அலங்காரம், அவளை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது. முழங்கால் வரை சரிகைக் கரை பின்னிய, மேகப்படலம் போன்ற மெல்லிய மஞ்சள் நிற ஜார்ஜெட் சேலையும், அதற்குத் தக்கபடி எடுப்பாக, அரக்கு நிற வெல்வெட் ரவிக்கையும் அணிந்து கொண்டிருந்த மனோன்மணி அந்த சமயம், கல்யாணப் பெண் போல், கூந்தலில் கட்டு மல்லிகை மலரும்

நெற்றியில் பளிச்சென்று மின்னிய குங்குமப் பொட்டுமாகக் காட்சியளித்தாள்.

அவள் கழுத்திலும், கைகளிலும் பளிச்சிட்டு ஒளி வீசிய வைர ஆபரணங்களைக் கடைக்கண்ணால் உற்று கவனித்த ஜெகதா அதிருப்தியுடன், உதட்டைக் கடித்துக் கொண்டாள். ''உட்கார் ஜெகதா! உட்கார். ஏன் நிற்கிறாய்?'' என்று லோகநாயகி இருமுறை வற்புறுத்தி உபசரித்த போதுதான் அவளுக்கு சுய உணர்வு வந்தது.

''எல்லோரும் உட்காரலாம், ஏன் நிற்க வேண்டும்?'' என்று பொதுவாகப் பேசிய மனோன்மணி, வெள்ளித் தட்டை மிடுக்குடன் எடுத்துக் கொண்டு எல்லோர் அருகிலும் ஒருமுறை ஹாலைச் சுற்றிப் பம்பரம் போல் வந்தாள். அவள் நீட்டிய தட்டைக்கூட தொட அருவருப்படைந்தவளாக முகத்தைச் சுளுக்கிய ஜெகதா, தனக்குக் குடிக்க நீர் தேவையில்லை என்று தலையை அசைத்துத் தெரிவித்து விட்டு லோகநாயகியின் அருகில் சென்று ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள். லோகநாயகி, ஜெகதா, அருணா யாரையும் கவனியாதவளாக மிகவும் அசட்டையாகவும் மிடுக்காகவும் நடந்து கொண்ட மனோன்மணி, முடிவில் தட்டை ஏந்திக் கொண்டு, ஹாலின் நடுவில் வீற்றிருந்த சுந்தரபுருஷன் அருகே நெருங்கினாள். பையைத் திறந்து, கைக்குட்டையை எடுத்து, முகத்தைத் துடைத்துக் கொண்டு மெல்லப் பெருமூச்செறிந்த ஜெகதா, ஜாடையாக அருணா பக்கம் மெல்லத் திரும்பினாள்.

ஹாலின் மறுகோடியில் போடப்பட்டிருந்த மேஜையடியில் உட்கார்ந்து அருணாவும் நளினியும் 'காரம்' ஆடிக் கொண்டிருந்தார்கள். அதை வேடிக்கை பார்த்தவனாக நின்று கொண்டிருந்தான் சுரேஷ். இந்தக் காட்சியைக் கண்டதும், ஜெகதாவின் உடல் பரவசத்தினால் புளகாங்கிதமடைந்தது. விளையாட்டு மும்முரத்தில் 'களுக்'கென்று சிரித்த அருணாவின் குரல் அன்று அவளுக்கு மிகவும் இனிமையாக ஒலித்தது. நிலைமை எதிர்பார்த்தபடி அபிவிருத்தியடைந்து கொண்டு போகிறதென அமைதியும் திருப்தியும் அடைந்தவளாக, அருகிலிருந்த லோகநாயகியிடம் பேசத் திரும்பினாள்.

ஹாலின் நடுவே வீற்றிருந்த சுந்தர புருஷன் பக்கம் ஏதேச்சையாக அவள் பார்வை லயித்தபோது ஏற்பட்ட பெரும் அதிர்ச்சியில், அவளுக்குச் சில வினாடிகள் பேசவே வரவில்லை. சோபாவிலே மிகவும் ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டிருந்த அந்த மனிதன் பக்கத்தில், மிகவும் அருகில் மனோன்மணி அமர்ந்திருந்தாள். வலது கரத்தில் விரல் இடுக்கிலே, புகையும் சிகரெட்டுடன் அமர்ந்திருந்த அவன், தனது இடது கரத்திலே மனோன்மணியின் இடது கரத்தைப் பிடித்துக் கொண்டிருந்தான். சிகரெட்டைக் கடைசியாக ஒரு முறை உறிஞ்சிக் குடித்துவிட்டு, கீழே போட்டு, தனது பாதரக்ஷையினால் மிதித்த அந்த உல்லாச புருஷன், மனோன்மணியின் உள்ளங்கையை உற்றுப் பார்த்துவிட்டு, ''இந்தக் கரம் பெரிய இலக்கிய மேதையுடைய கரம் என்று குருடன் கூட சுலபமாகச் சொல்லமுடியும். இதற்கு ரேகை சாஸ்திரமே தேவையில்லை'' என்று கம்பீரமாகச் சொன்னான்.

அப்பொழுதுதான் ஜெகதாவிற்கு, அவன் கை ரேகை பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற விஷயம் உதயமாகியது. எனினும் அந்தக் காட்சி அவளது பண்பிற்கும் அவளது கொள்கைக்கும் முரணாகப் பட்டதனால், தன் அருவருப்பை அடக்க முடியாது முகத்தைச் சுளித்தாள். 'அந்த மனிதன் யாராக இருக்கக் கூடும்? பழனியப்ப கவுண்டருக்குச் சொந்தமா? மனோன்மணிக்கு அவன் எவ்வகையில் உறவினன்?' என்ற பல கேள்விகள் ஒருங்கே அவள் மூளையில் எழவே, அவளால் ஆவலை அடக்க முடியவில்லை. தொண்டையைக் கனைத்துக் கொண்டு, துணிவை வரவழைத்துக் கொண்டு ''அது யார் லோகா? அந்த மனிதரை நான் இதுவரை இங்கே நம் வீட்டிலே பார்த்ததில்லையே? அவர் நம் உறவா?'' என்று கேட்டாள் ரகசியமாக.

''ஒரு வகையில் உறவு போலத்தான்'' என்று கூறிய லோகநாயகியின் வார்த்தைகள் ஏனோ தடுமாறின! அப்பொழுதுதான் முதல் முதலாக அவளதுமுகத்தை நன்றாக நிமிர்ந்து ஜெகதா கவனிக்க நேர்ந்தது. லோகநாயகியின் கண் இமைகள் இரண்டும் லேசாகத் தடித்து வீங்கியிருந்தன. வெகு நேரம் அழுது கொண்டிருந்தவள் போல் முகம் வீங்கி உப்பிக் காணப்பட்டது. வழக்கமாகக் காணப்படும் களை அவள் முகத்தில் சிறிதும் இருக்கவில்லை. எதற்காகவோ பயந்து நடுங்கிக் கொண்டிருப்பவள் போல் அவள் தென்பட்டாள்.

''என்ன, எப்படியோ இருக்கிறாயே? சுரேஷ் பிறந்த நாளும் அதுவுமாக நீ சோர்வாக இருப்பது அழகா? உடம்பிற்கு என்ன?'' என்று மிகவும் பரிவுடன் விசாரித்தாள் ஜெகதா.

லோகநாயகி பதிலுக்கு வரட்சியாக லேசாக நகைத்தாள். ''உடம்பிற்கு ஒன்றுமில்லை. மனத்திற்குத்தான் எல்லாச் சங்கடமும். நேற்று இரவு இவர் என்னிடம் கொண்டு வந்து சொந்தச் செலவிற்காகக் கொடுத்த இரண்டாயிரம் ரூபாய்களையும் அப்படியே பையோடு என் பீரோவில் வைத்திருந்தேன். காலையில் எழுந்து பார்த்தபோது காணவில்லை. யாரைச் சந்தேகிப்பது என்றே தெரியவில்லை'' என்றாள் வருத்தம் நிறைந்த மெல்லிய குரலில்.

''ஒரு ரூபாயா, இரண்டு ரூபாயா! இதென்ன அக்கிரமம்? வரவர வேலைக்காரர்கள் ரொம்பவும் கெட்டுப் போய்விட்டார்கள். வேலைக்காரர்களையே தான் நாம் யாரையும் நம்புவதற்கில்லை. வேலைக்காரர்களையே தான் நாம் எப்பொழுதும் முதலில் சட்டென சந்தேகிக்கிறோம். சில சமயம் இது மாதிரி திருட்டுக்களில் நம் கூடப் பழகும் நெருங்கிய உறவினர்கள் கூட சம்பந்தப்பட்டிருப்பது உண்டு. எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கும் என்று யார் கண்டார்கள்?'' என்று கூடமாக, தனக்கு மனோன்மணி மீது ஏற்பட்ட சந்தேகத்தை ஜாடையாகத் தெரிவித்தாள் ஜெகதா.

அவள் பேச்சின் தாத்பரியத்தை உணராதவள் போல் லோகநாயகி, தன் சம்பாஷணையை நாசூக்காக வேறு திக்கில் திருப்பி, ''இன்றைய தினம் சுரேஷ்குமாரனின் பிறந்த நாள் என்பதுடன், இன்னொரு விசேஷமும் சேர்ந்து கொண்டிருப்பதால், உன்னையும் சாப்பிட கையோடு அழைத்துவர நளினியிடம் சொன்னேன். அவர் பெயர் அசோகன் என்பது, கேள்விப்பட்டிருப்பாயோ என்னவோ? இங்கே 'அசோகா ஷூ மார்ட்' என்று பாதரக்ஷைக் கடை இருக்கிறதல்லவா? அதனுடைய சொந்தக்காரர் அசோகன்.

''மனோன்மணியை அவர் மணந்து கொள்ளப் பிரியப்படுகிறார். இருவரும் மனமொப்பிவிட்டதால் நான் அதற்கு மேல் குறுக்கிட விரும்பவில்லை. நேற்று இரவுதான் மனோன்மணி தன் தீர்மானத்தை

வெளிப்படையாக என்னிடம் சொன்னாள். நானும் கவுண்டரும் இதைப் பற்றிக் கலந்து ஆலோசிக்கக் கூடப் பொழுது இல்லை. மனோன்மணி மறுமணம் செய்து கொள்ளப் போகிற சுப செய்தி நாலு பேருக்குத் தெரிய வேண்டும் என்பதால் இன்று விருந்திற்கு உன்னையும், இன்னும் நமது இளப் சிநேகிதிகள் பலரையும் அழைத்தேன். அவர்களும் வந்த பின்பு, போஜனம் ஆனதும், எல்லோருக்கும் இதைத் தெரியப்படுத்தப் போகிறேன்'' என்றாள்.

''அப்படியா? கேட்க ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. பாவம் அறியாத வயசிலே மனோன்மணி ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டாள். இனியாவது குடியும் குடித்தனமுமாக இருக்க வேண்டியதுதான்'' என்று ஒப்புக்காக ஜெகதா பதிலளித்தாள்.

ஆனால், உண்மையில் விஷயத்தைக் கேள்விப்பட்டவுடன் அவள் உள்ளம் ஆத்திரத்தில் குமுறியது. ''மனோன்மணிக்குக் கல்யாணமா? நன்றாகத்தான் இருக்கிறது? 'ஏதோ நடந்தது நடந்து விட்டது. விதி செய்த சதி' என்று மன அமைதி அடைந்து, எஞ்சிய நாட்களை பொதுஜன சேவையிலும், கோயில் குளம் சுற்றிப் பார்ப்பதிலும் கழிப்பதை விட்டு, கல்யாணமாமே, கல்யாணம்! உலகம் வரவர மிகவும் கெட்டுவிட்டிருக்கிறது!'' என்று தனக்குள்ளே எண்ணி, வியப்பும் அருவருப்பும் அடைந்தாள்.

''இதுதான் முதன் முதலாக எங்கள் குடும்பத்தில் இப்படி நடக்கும் திருமணம். இதில் எவ்வளவு சிக்கல் இருக்கிறது என்பது உனக்குப் புரியும் என நினைக்கிறேன்'' என்று பட்டும் படாமலும் கூறினாள் லோகநாயகி.

''புரிகிறது, புரிகிறது, புரியாமல் என்ன? காலம் மாறிக் கொண்டு வரும் இந்நாட்களில், நாமெல்லாம் கட்டுப்பெட்டியாக இருக்க முடியுமா? கொஞ்சம் பரந்த மனத்தோடு நடந்து கொள்வது அவசியம்!'' என்று முகஸ்துதியாகப் பேசினாள் ஜெகதா.

உண்மையிலேயே அவளுக்கு மனோன்மணியின் திருமணம் கேட்க அருவருப்பான விஷயம்போல் பட்டாலும், அந்தஸ்திலும் செல்வாக்கிலும் உயர்ந்த லோகநாயகியை எதிர்த்துப் பேச தைரியமிருக்கவில்லை. ஆகவே, வேறு வழியின்றி அவளுடன் ஆமாம், ஆமாம் என்று ஒத்துப் பாடினாள்.

28

கொஞ்ச நேரத்தில் விருந்திற்கு அழைக்கப்பட்டிருந்த மற்றப் பெண்மணிகளும் ஒவ்வொருவராக விரைவில் வந்து சேர்ந்தனர். ஜெகதாவைத் தவிர அன்று அங்கு கூடியிருந்த மற்ற நான்கு பெண்களும் நான்கு விதத்தில் பிரசித்தி பெற்றவர்களாக இருந்தனர். ஜெகதாவுக்கு அடுத்தபடியாக, சிறிது பொழுதிலே பட்டுப்புடவை சலசலக்க, வைர நகைகள் டால்வீச, தலையில் சூட்டியிருந்த கதம்பச் சமை கம்மென்று வாசனை வீச, பற்கள் முப்பத்திரண்டையும் காட்டியபடி மகிழ்ச்சி பொங்க உல்லாசமாக உள்ளே வந்து அமர்ந்த பெண்மணி, சமீபத்திலே உத்தியோகத்தினின்று ஓய்வு எடுத்துக் கொண்ட நீதிபதி ஒருவரின் மனைவி.

அவளைப் பின் தொடர்ந்தவள் போல், புத்தம் புதிய காரில் வந்து இறங்கிய அலங்கார சுந்தரி, பிரபல சினிமா டைரக்டர் ஒருவரின் பாரியாள் ஆவாள். விருந்திற்குப் பத்து நிமிஷத்திற்கு முன்பு, சரியான நேரத்தில் டகாரென்று வந்து இறங்கிய நாகரீக ரமணி, நகரத்திலே மிகப்பிரபலமான ரண சிகிச்சை நிபுணர் டாக்டர் நஞ்சப்பாவின் தர்ம பத்தினி. கடைசியாக, விருந்திற்குக் கொஞ்சம் தாமதமாகவே வேர்க்க விறுவிறுக்க வந்து சேர்ந்த பெண்மணி பிரபல தினசரி பத்திரிகை ஒன்றின் ஆசிரியரின் சகதர்மிணி.

இவ்வாறு வெவ்வேறு துறையில் பிரசித்திப் பெற்ற பூமான்களின் சகதர்மிணிகளைத் தேர்ந்து எடுத்தது போல் லோகநாயகி விருந்திற்கு அழைத்திருந்ததில் மர்மம் இருக்கத்தானிருந்தது.

ஒரு விஷயம் ஒரு நபருக்கு மேல் தெரிந்திருந்தால் அது ரகசியமாக இருக்க முடியாது என்ற தத்துவத்தை அறிந்திருந்தாள் அவள். மனோன்மணியின் விவாகத்தை, இந்தப் பெண்மணிகள் மூலம் நகரத்தின் நான்கு திக்குகளிலும் அவள் விரைவில் பரப்ப விரும்பினாள். 'மனோன்மணிக்குக் கல்யாணமா?' என்று அதைக் கேட்பவர்கள் முதலில் திடுக்கிட்டு அதிர்ச்சியடைவார்கள். பழனியப்பக் கவுண்டரின் வீட்டைப் பற்றி வாய் ஓய வம்பு பேசி

மகிழ்வார்கள். அதிர்ச்சியும், வம்பும் பேசும் ஆர்வமும் சில தினங்களில் அடங்கி ஒடுங்கி, ஓய்ந்து போகும். மனோன்மணிக்குத் திருமணம் நடக்கும் பொழுது, அந்த விஷயம் மிகவும் பழையதாகிவிடுமாதலால், யாருக்கும் அதிர்ச்சியோ, ஆச்சர்யமோ ஏற்பட பிறகு வழியில்லை. மனோன்மணிக்கு இன்று திருமணமா, அதுதான் முன்பே தெரிந்த விஷயந்தானே! என்ன அதிசயம் இருக்கிறது!' என்று உறவினர்களும், நண்பர்களும் சூள்கொட்டி அதை அசட்டை செய்து விடுவார்கள்!

எல்லாக் கல்யாணமும் போல், மனோன்மணியின் மறு மணமும் சாதாரண ஒரு நிகழ்ச்சியாகக் கருதப்பட்டுவிடும். அதற்குப் பிறகு, லோகநாயகி கிளப்பிற்கும், பொது ஸ்தலங்களுக்கும், எவ்வித மனக் கிலேசமுமின்றி, தலையை நிமிர்த்திக் கொண்டு தைரியமாக, யாருடைய வாயிலும் விழுந்து புரளாது நிம்மதியாகப் போய்வர முடியும்.

இவ்வாறு தனக்குள் போட்ட ஒரு திட்டத்தினால், அன்றைய தினம் அவர்கள் அனைவரையும் விருந்து சாப்பிட அழைத்திருந்தாள்.

வந்திருந்த ஒவ்வொருவரையும், மற்றவருக்கு லோகநாயகி அறிமுகப்படுத்தி முடிந்ததும், விருந்து ஆரம்பமாயிற்று. எல்லோரும் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டு மிகவும் மகிழ்ச்சியுடன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது, இதுதான் சமயமென்று கருதியது போல் லோகநாயகி தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''உங்கள் எல்லோருக்கும் ஒரு மங்களகரமான செய்தியை அறிவிக்கப் போகிறேன். சுரேஷ்குமாரின் பிறந்த தினம் என்பதுடன், இந்தச் சுபச் செய்தியை என் சிநேகிதிகளுக்குச் சொல்லி அவர்களின் ஆசியைப் பெறவேதான் இன்றைய தினம் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது'' என்றாள்.

லட்டு உருண்டையை மெதுவாகப் பிட்டுக் கொறித்துக் கொண்டிருந்த சினிமா டைரக்டர் மனைவி, ஆவலுடன் சட்டெனத் திரும்பி, ''லோகா! புதிர் போட்டு பேசினால் எங்களுக்கெல்லாம் புரியாது. விளங்கச் சொல்'' என்று உரிமையுடன் கடிந்து கொண்டாள்.

''உங்களை வீணே ஆவலில் காக்க வைக்க விரும்பவில்லை.

இதோ இங்கு நம்முடன் விருந்தில் கலந்து கொண்டிருக்கும், முருகூர் ஜமீனின் இளைய மகன் திரு. அசோகனுக்கும், என் சகோதரன் மகள் மனோன்மணிக்கும் திருமணம் செய்வதாக நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சுப செய்தியை உங்கள் அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும் என்று நான் விரும்பியதனால், உங்களை மிகவும் வற்புறுத்தி இங்கு வரவழைத்தேன்'' என்றாள் லோகநாயகி.

மேலே சுழன்ற மின்சார விசிறி எழுப்பிய மெல்லிய ஓசையைத் தவிர, சில வினாடிகள் எங்கும் ஒரே நிசப்தமாக இருந்தது. சிலைபோல் ஸ்தம்பித்துப் போயிருந்த பத்திரிகை ஆசிரியர் மனைவிதான் முதல் முதலாக உணர்வு பெற்று பேசத் தொடங்கினாள். பாதாம்கீர் டம்ளரைக் கீழே வைத்துவிட்டு, ''அப்படியா! ரொம்ப சந்தோஷம்! கல்யாணம் எப்பொழுது நடக்க இருக்கிறது?'' என்று வினவினாள் மெல்லிய குரலில் அவள்.

''அவருடைய தொழில் விவகாரத்தினால் கல்யாணம் தை மாதத்திலேதான் நடத்த முடியும். கல்யாணம் முடிந்ததும் இருவரும் ஒரு வருஷ காலம் வெளிநாடுகளைச் சுற்றிப் பார்த்து வரத் தீர்மானித்திருக்கிறார்கள்'' என்றாள் லோகநாயகி பெருமையாக.

ஐஸ்கிரீமைச் சுவைத்துக் கொண்டிருந்த டாக்டர் மனைவி, அசோகனது கம்பீரத் தோற்றத்தையும், வசீகரமான முகத்தையும் கடைக்கண்ணால் ஆராய்ந்தாள். ''பிடித்தாலும் புளியங் கொம்பையல்லவா பிடித்திருக்கிறாள்! வரதக்ஷிணையும் சீமைப் படிப்பிற்கு வசதியும், பங்களாவும், காரும் தருவதாக விளம்பரப்படுத்திக் கொண்டு, நம் அருமை மகளுக்கு வரனுக்காக அலைந்து சலித்துப் போய்விட்டது. அந்தஸ்தோ, அருகதையோ, யௌவனமோ, ஏதும் இல்லாத மனோன்மணிக்கு அடித்திருக்கும் அதிர்ஷ்டத்தைப் பாரேன்!'' என்று தனக்குள்ளே எண்ணிப் பொறாமை அடைந்தவளாக வாளா வீற்றிருந்தாள்.

லோகநாயகி பேசி முடித்ததும், திடுக்கிட்டு விழித்துக் கொண்டவள் போல், ''கங்கிராஜுலேஷன்ஸ் மனோ! எங்களுக்கெல்லாம் கேட்க இனியதொரு அதிர்ச்சியாக இருக்கிறது. வெளிநாடு போகுமுன், எங்கள் வீட்டிற்கு ஒருமுறை வந்து போங்கள்.

நம் டாக்டருக்கு இங்கிலாந்திலும், அயர்லாந்திலும் அநேக நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அறிமுகக் கடிதங்கள் எழுதிக் கொடுப்பார். உங்களுக்கு அங்கே பிரயாணம் செய்ய அந்த அறிமுகக் கடிதங்கள் மிகவும் உதவி செய்யும்'' என்று பகட்டாகப் பேசினாள் டாக்டரின் மனைவி.

மாம்பழத் துண்டங்களை விழுங்கிக் கொண்டிருந்த சினிமா டைரக்டர் மனைவியின் மனத்திலே அதே சமயம் ஒரு சிந்தனை கொடிபோல் ஓடிக் கொண்டிருந்தது. ''நல்ல முகவெட்டும், கம்பீரத் தோற்றமும் உள்ள இவன், மனோன்மணியைக் கல்யாணம் செய்து கொள்வதைவிட, 'இவர்' எடுக்கும் படத்திலே கதாநாயகனாகத் தோன்றினால், பட உலகை ஒரு கலக்கிக் கலக்கி விடுவானே! பணத்தையும் மலையாகக் குவித்து விடுவான். ஏமாந்துபோய், விவாக வலையிலே வந்து அகப்பட்டுக் கொண்டிருக்கிறான். பாவம்! என்று எண்ணி, பச்சாதாபத்துடன் பெருமூச்செறிந்தாள். லோகநாயகி புன்முறுவலுடன் தன் பக்கம் திரும்புவதை அறிந்ததும் திடுக்கிட்டு, ''கேட்க மிகவும் ஆனந்தமாக இருக்கிறது லோகா! நீங்கள் எப்பொழுதும் முற்போக்கான சிந்தனையாளர். சிந்தனையோடு அல்லாமல் செயலிலும் உங்கள் முற்போக்கைக் காண்பிப்பது மிகவும் பாராட்டக் கூடியது'' என்று உளறினாள்.

நீதிபதியின் மனைவியினால் சட்டென்று பேசவே முடியவில்லை. ''வர வரக் காலம் கெட்டு விட்டது. யார் கல்யாணம் செய்து கொள்வது, யார் தனிமையில் வாழ்வது என்ற முறையெல்லாம் போய்விட்டது. பணம், அந்தஸ்து இரண்டும் இருந்துவிட்டால் எந்தக் காரியத்தையும் அஞ்சாது செய்துவிட்டு, அதைப் பற்றி பெருமையாக வேறு பேசிக் கொள்ள முன் வந்து விடுகிறார்கள். மனோன்மணியின் கல்யாணமாக இல்லாது, இந்தமறுமணம் கவுண்டர் வீட்டுச் சமையல் காரியின் விதவை மகளுடைய திருமணமாக இருந்திருந்தால், லோகநாயகியின் பேச்சே வேறு விதமாகவல்லவா இருக்கும்? தங்களுக்கு ஒரு நீதி, பிறருக்கு ஒரு நீதி என்றுதான் பணம் படைத்தவர்கள் எண்ணுகிறார்கள். வரவர உலகிலே அக்கிரமம் தான் அதிகமாகிவிட்டது.

''இந்தத் தடியன் வாட்ட சாட்டமாகவும், பார்க்க

லக்ஷணமாகவும் இருக்கிறானே? ஜமீன்தார் பிள்ளையாம்! இவனுக்கு ஏற்ற ஒரு கன்னிப்பெண் ஊரிலே கிடைக்காமலா போய்விட்டாள்? இடறி விழுந்த இடமெல்லாம், பி.ஏ.யும், எம்.ஏ.யும் படித்துவிட்டு, தங்க விக்ரகம் போலவும், சுவர்ணப் பதுமை போலவும் லக்ஷக்கணக்கான கன்னியர் கல்யாணத்திற்காகக் காத்திருக்கும் பொழுது, மறுமணம் செய்து கொள்கிறவர்களுக்குத்தான் இக்காலத்தில் முதலில் திருமணம் நடக்கிறது. அக்கிரமம், அநியாயம்! உலகத்திலே பாபம் அதிகரித்துக் கொண்டு போகிறது. யார் கண்டார்கள், இந்த அசோகன், வெறும் இன்ஸால்வென்ட் பேர்வழியோ, என்னவோ? ஜமீன்தார்களை இக்காலத்தில் யார் சட்டை பண்ணுகிறார்கள்? மனோன்மணிக்கு சொத்து ஏதாவது கிடைக்கும் என்ற ஆசையுடன் கல்யாணம் செய்து கொள்ள முன் வந்திருக்கிறானோ, என்னவோ? சம்பாதிக்கவோ, சிரமப்படவோ இஷ்டமில்லாது மனைவியின் வருவாயிலே ஜீவனம் செய்து கொண்டு வாழத்துணிந்த புருஷர்கள் அதிகமாகிவிட்டார்கள். முன்போல் இல்லை, கலி முற்றிவிட்டது! வெகு சீக்கிரத்தில் பகவான் அவதரித்து அணுகுண்டைப் போட்டு உலகை சம்ஹாரிக்கப் போகிறார். நேற்று காலக்ஷேபத்திலே ராமாயண சாஸ்திரிகள் கூட அப்படிதான் சொன்னார்'' என்று தனக்குள்ளே சிந்தனை செய்த வண்ணமிருந்தாள்.

''என்ன, உங்கள் தீர்ப்பு'' என்று லோகநாயகி விளையாட்டாகக் கேட்ட பொழுதுதான் நீதிபதியின் மனைவி, நிஜ உலகிற்கு வந்தாள். ''என்ன தீர்ப்பா? வேடிக்கைதான் போங்கள். கல்யாணம் என்பது சொந்த விஷயம். அதில் பிறர் தலையிடுவது தப்பான காரியம். எல்லாம் நடக்கிற காலத்திலே கிரமப்படி நடக்க வேண்டியது. நான் பழங்காலத்து மனுஷி. என்னைப்போய் அபிப்பிராயம் கேட்டால் நான் என்ன சொல்ல முடியும்? மனோ சின்னக் குழந்தை பாவம், க்ஷேமமாக இருக்கணும்'' என்று மென்று விழுங்கினாள்.

பக்கத்திலே அமர்ந்து போஜனம் செய்து கொண்டிருந்த நளினி, தன் சிநேகிதி அருணாவின் முகத்தை அர்த்த பாவத்துடன் உற்றுப் பார்த்தாள். ''நான் முன்பே கூறினேன் அல்லவா? விஷயம் வெகுவாக முன்னேறிவிட்டிருக்கிறது, பார்?'' என்று அவளது பார்வை சொல்லாமலே சொல்லிற்று.

எண்ணிக்கையில் அதிகமான பெண்கள் கூட்டத்திலே, தான்

நம் டாக்டருக்கு இங்கிலாந்திலும், அயர்லாந்திலும் அநேக நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அறிமுகக் கடிதங்கள் எழுதிக் கொடுப்பார். உங்களுக்கு அங்கே பிரயாணம் செய்ய அந்த அறிமுகக் கடிதங்கள் மிகவும் உதவி செய்யும்'' என்று பகட்டாகப் பேசினாள் டாக்டரின் மனைவி.

மாம்பழத் துண்டங்களை விழுங்கிக் கொண்டிருந்த சினிமா டைரக்டர் மனைவியின் மனத்திலே அதே சமயம் ஒரு சிந்தனை கொடிபோல் ஓடிக் கொண்டிருந்தது. ''நல்ல முகவெட்டும், கம்பீரத் தோற்றமும் உள்ள இவன், மனோன்மணியைக் கல்யாணம் செய்து கொள்வதைவிட, 'இவர்' எடுக்கும் படத்திலே கதாநாயகனாகத் தோன்றினால், பட உலகை ஒரு கலக்கிக் கலக்கி விடுவானே! பணத்தையும் மலையாகக் குவித்து விடுவான். ஏமாந்துபோய், விவாக வலையிலே வந்து அகப்பட்டுக் கொண்டிருக்கிறான். பாவம்! என்று எண்ணி, பச்சாதாபத்துடன் பெருமூச்செறிந்தாள். லோகநாயகி புன்முறுவலுடன் தன் பக்கம் திரும்புவதை அறிந்ததும் திடுக்கிட்டு, ''கேட்க மிகவும் ஆனந்தமாக இருக்கிறது லோகா! நீங்கள் எப்பொழுதும் முற்போக்கான சிந்தனையாளர். சிந்தனையோடு அல்லாமல் செயலிலும் உங்கள் முற்போக்கைக் காண்பிப்பது மிகவும் பாராட்டக் கூடியது'' என்று உளறினாள்.

நீதிபதியின் மனைவியினால் சட்டென்று பேசவே முடியவில்லை. ''வர வரக் காலம் கெட்டு விட்டது. யார் கல்யாணம் செய்து கொள்வது, யார் தனிமையில் வாழ்வது என்ற முறையெல்லாம் போய்விட்டது. பணம், அந்தஸ்து இரண்டும் இருந்துவிட்டால் எந்தக் காரியத்தையும் அஞ்சாது செய்துவிட்டு, அதைப் பற்றி பெருமையாக வேறு பேசிக் கொள்ள முன் வந்து விடுகிறார்கள். மனோன்மணியின் கல்யாணமாக இல்லாது, இந்தமறுமணம் கவுண்டர் வீட்டுச் சமையல் காரியின் விதவை மகளுடைய திருமணமாக இருந்திருந்தால், லோகநாயகியின் பேச்சே வேறு விதமாகவல்லவா இருக்கும்? தங்களுக்கு ஒரு நீதி, பிறருக்கு ஒரு நீதி என்றுதான் பணம் படைத்தவர்கள் எண்ணுகிறார்கள். வரவர உலகிலே அக்கிரமம் தான் அதிகமாகிவிட்டது.

''இந்தத் தடியன் வாட்ட சாட்டமாகவும், பார்க்க

லக்ஷணமாகவும் இருக்கிறானே? ஜமீன்தார் பிள்ளையாம்! இவனுக்கு ஏற்ற ஒரு கன்னிப்பெண் ஊரிலே கிடைக்காமலா போய்விட்டாள்? இடறி விழுந்த இடமெல்லாம், பி.ஏ.யும், எம்.ஏ.யும் படித்துவிட்டு, தங்க விக்ரகம் போலவும், சுவர்ணப் பதுமை போலவும் லக்ஷக்கணக்கான கன்னியர் கல்யாணத்திற்காகக் காத்திருக்கும் பொழுது, மறுமணம் செய்து கொள்கிறவர்களுக்குத்தான் இக்காலத்தில் முதலில் திருமணம் நடக்கிறது. அக்கிரமம், அநியாயம்! உலகத்திலே பாபம் அதிகரித்துக் கொண்டு போகிறது. யார் கண்டார்கள், இந்த அசோகன், வெறும் இன்ஸால்வென்ட் பேர்வழியோ, என்னவோ? ஜமீன்தார்களை இக்காலத்தில் யார் சட்டை பண்ணுகிறார்கள்? மனோன்மணிக்கு சொத்து ஏதாவது கிடைக்கும் என்ற ஆசையுடன் கல்யாணம் செய்து கொள்ள முன் வந்திருக்கிறானோ, என்னவோ? சம்பாதிக்கவோ, சிரமப்படவோ இஷ்டமில்லாது மனைவியின் வருவாயிலே ஜீவனம் செய்து கொண்டு வாழத்துணிந்த புருஷர்கள் அதிகமாகிவிட்டார்கள். முன்போல் இல்லை, கலி முற்றிவிட்டது! வெகு சீக்கிரத்தில் பகவான் அவதரித்து அணுகுண்டைப் போட்டு உலகை சம்ஹரிக்கப் போகிறார். நேற்று காலக்ஷேபத்திலே ராமாயண சாஸ்திரிகள் கூட அப்படிதான் சொன்னார்'' என்று தனக்குள்ளே சிந்தனை செய்த வண்ணமிருந்தாள்.

''என்ன, உங்கள் தீர்ப்பு'' என்று லோகநாயகி விளையாட்டாகக் கேட்ட பொழுதுதான் நீதிபதியின் மனைவி, நிஜ உலகிற்கு வந்தாள். ''என்ன தீர்ப்பா? வேடிக்கைதான் போங்கள். கல்யாணம் என்பது சொந்த விஷயம். அதில் பிறர் தலையிடுவது தப்பான காரியம். எல்லாம் நடக்கிற காலத்திலே கிரமப்படி நடக்க வேண்டியது. நான் பழங்காலத்து மனுஷி. என்னைப்போய் அபிப்பிராயம் கேட்டால் நான் என்ன சொல்ல முடியும்? மனோ சின்னக் குழந்தை பாவம், க்ஷேமமாக இருக்கணும்'' என்று மென்று விழுங்கினாள்.

பக்கத்திலே அமர்ந்து போஜனம் செய்து கொண்டிருந்த நளினி, தன் சிநேகிதி அருணாவின் முகத்தை அர்த்த பாவத்துடன் உற்றுப் பார்த்தாள். ''நான் முன்பே கூறினேன் அல்லவா? விஷயம் வெகுவாக முன்னேறிவிட்டிருக்கிறது, பார்?'' என்று அவளது பார்வை சொல்லாமலே சொல்லிற்று.

எண்ணிக்கையில் அதிகமான பெண்கள் கூட்டத்திலே, தான்

வந்து அகப்பட்டுக் கொண்டதை எண்ணி சங்கோஜமடைந்தவனாகத் தன் தலையைக் குனிந்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்த சுரேஷ்குமாரன், இந்த சங்கதியைக் கேள்விப் பட்டதும் வெட்கமுற்றவனாக, இன்னும் சற்றுத் தலையைத் தாழ்த்திக் கொண்டான். ஏற்கெனவே விஷயத்தை முன்கூட்டி அறிந்துவிட்டிருந்ததனால் ஜெகதா மிகவும் நிதானமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். லோகநாயகியின் பரந்த மனப்பான்மையைத் தானும் பகிர்ந்து கொள்ளும் பாவத்திலே, ''சந்தோஷமாக இருக்கிறது கேட்பதற்கு. தம்பதிக்கு நம்முடைய ஆசிகள்'' என்று கூறிவிட்டு, தன் தங்கப் பற்களைக் காட்டி சிரித்தாள்.

இவ்வளவிற்கும் காரணபூதர்களாக விளங்கிய அசோகனும் மனோன்மணியும் தங்களைச் சுற்றியிருந்தவர்களின் மனநிலையில் ஏற்பட்ட அதிர்ச்சியையோ, சிந்தனையையோ பற்றிச் சிறிதும் கவலை கொள்ளவில்லை. கண்ணோடு கண் நோக்குவதும் புன்முறுவலிப்பதுமாக, அவர்களிருவரும், நயன பாஷையிலேயே பேசிக் கொண்டு, வேறு ஒரு உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர்.

விருந்து முடிந்ததும், பெரியவர்கள் அனைவரும் ஹாலில் சென்று அமர்ந்து கொண்டு வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். அது சமயம் அருணாவை மெல்லக் கையைப் பற்றி அழைத்த நளினி, தோட்டத்திற்கு அழைத்துச் சென்றாள். ''எனக்கு என்ன சொல்வதென்றே விளங்கவில்லை. இந்தக் கல்யாணம் ஏதோ ஆபத்தில் வந்து முடியும் போல் தோன்றுகிறது. மனோ அக்கா மிகவும் சாமர்த்தியமாகத் தனது சூழ்ச்சிகளில் அம்மாவையும் ஈடுபடச் செய்து விட்டார்கள் போலிருக்கிறது'' என்றாள் கவலையுடன்.

''எனக்கு மிகவும் குழப்பமாக இருக்கிறது என்ன ஆறுதல் கூறுவதென்றே தெரியவில்லை'' என்று பதிலளித்த அருணா சிறிது நேரம் வாளாவிருந்தாள். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவளாக, 'நளினி, நீ வருந்தாதே! எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மாதிரி மனிதர்களையெல்லாம் நன்கு தெரியும். அசோகன் உண்மையிலேயே முருகூர் இளைய ஜமீன்தாரா என்று விசாரித்து வந்து கூறுகிறேன்'' என்றாள்.

அன்று மாலை, தனது எழுத்து வேலையை முடித்துக் கொண்டதும் அருணா, கௌரியம்மாளின் அறைக்குள் தயங்கிக்கொண்டு வந்தாள். இடது கையைக் கன்னத்தில் ஊன்றியபடி மேஜை மீது சாய்ந்து கொண்டு, வீற்றிருந்த கௌரியம்மாள், தான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடிவிட்டு, ''என்ன வேணும்?'' என்ற பாவனையில் நிமிர்ந்து பார்த்தாள்.

அருணாவின் நெஞ்சு படபடவென்று பயத்திலே துடித்துக் கொண்டது. நாவறண்டு போயிற்று. ''உங்களிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன். தயவு செய்து உதவி செய்ய வேண்டும்'' என்று இறைஞினாள்.

கௌரியம்மாள் ஆச்சர்யத்துடன் தன் முன் நின்ற அந்தப் பெண்ணை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''உட்கார். ஏன் இப்படிக் குளிரில் அடிபட்ட கோழிபோல் நடுங்குகிறாய்? என்னிடம் இத்தனை பழகியும் உனக்கு இன்னும் தன்னம்பிக்கையும் துணிவும் ஏற்படவில்லையே! என்ன சமாச்சாரம், நிதானமாகச் சொல்'' என்று அதட்டினாள்.

நாற்காலியில் அமர்ந்து கொண்ட அருணா மெல்லிய குரலில், ''நீங்கள் கோபிக்கக்கூடாது. என்னைத் தப்பாக எண்ணிக் கொண்டு அதிருப்தியடையக் கூடாது. சில நாட்கள் முன்பு, காரில் செல்லும்போது எதிரே நம் காரில் மோதிக்கொள்ள இருந்த அசோகன் என்னும் மனிதனைப் பற்றித் தாங்கள் ஏதாவது அறிவீர்களா? உங்களுக்குத் தெரியாவிட்டாலும் விசாரித்துக் கூறினால் மிகவும் புண்ணியமாக இருக்கும். ஒரு பெண்ணின் கண்ணியமும் வாழ்க்கையும் பெரும் ஆபத்திலே சிக்கிக் கொண்டிருக்கின்றன'' என்றாள் தடுமாற்றமாக.

கௌரியம்மாள் கலகலவென்று சிரித்தாள். ''சினிமா கதாநாயகி சம்பாஷணையை ஒப்பிவிப்பதுபோல் சொல்கிறாயே? இதெல்லாம் என்ன? விவரமாகச் சொன்னால்தானே தெரியும்'' என்று மீண்டும் உரத்த குரலில் சிரித்தாள்.

அருணாவிற்குப் பேச முடியவில்லை. உணர்ச்சி வசத்திலே நாதடுமாறியது. கண்களில் நீர் திரையிட்டது. இதைக் கண்டதும்

கௌரியம்மாள் ஆசனத்தினின்று எழுந்தாள். ''அசட்டுப் பெண்ணே! என்ன இதெல்லாம்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! அந்த அயோக்யன் அசோகன், உன்னிடம் ஏதாவது முறையற்ற தன்மையில் நடந்து கொண்டானா?'' என்று கேட்டுவிட்டு, அருகில் வந்து, மெல்லிய குரலில், ''அசட்டுத்தனமாக நீ அவன் காதல் வலையில் விழுந்துவிட்டாயா, என்ன? அவன் பெரிய மோசக்காரன் ஆயிற்றே! நடந்ததை விரைவில் சொல்!'' என்றாள் ஆத்திரத்துடன்.

கண்களைத் துடைத்துக்கொண்ட அருணா சங்கோஜத்துடன் புன்னகை செய்தாள். ''என்னைப் பற்றிய சங்கதி ஒன்றும் இல்லை. வேறு ஒரு பெண்ணைப் பற்றிய விஷயம். உங்களுக்கு அசோகனைப் பற்றி ஏதும் தெரியுமா?'' என்றாள் அருணா விடாப்பிடியாக.

''அவனைப் பற்றித் தெரிந்து கொள்வது கஷ்டமான காரியமல்ல. ஏதோ கொஞ்சம் தெரியும். மீதி விஷயத்தை விசாரித்து விரைவில் சொல்லிவிடுவேன். அது கிடக்கட்டும்! முதலில் விஷயத்தைச் சொல்'' என்றாள் மிகவும் பொறுமையற்ற குரலில் கோபமாக.

அசோகனுக்கும் மனோன்மணிக்கும் நடந்த காதலைப் பற்றிச் சுருக்கமாகக் கூறிவிட்டு, ''அவர்கள் இருவருக்கும் விவாகம் நடக்கப் போவதாக இன்று தினம் நிச்சயிக்கப்பட்டது. அதனால் அவரைப் பற்றிய விவரம் கட்டாயம் தெரிய வேணும் என்று என் சிநேகிதி மிகவும் துடிக்கிறாள்'' என்று முடித்தாள் அருணா.

கௌரியம்மாள் தன் ஆசனத்தில் போய் அமர்ந்து கொண்டாள். மெல்லத் தனக்குள் லேசாகச் சிரித்துக் கொண்டு தன் தோள்களைக் குலுக்கினாள். பிறகு சூள் கொட்டினாள். ஒரு முறை பெருமூச்செறிந்தாள்.

''ஆண்கள் அத்தனை பேரும் அயோக்கியர்கள், நம்ப முடியாதவர்கள் என்ற என் அபிப்பிராயம் நாளுக்கு நாள் உறுதியடைந்து கொண்டே போகிறது. ஒரு விதவைப் பெண்ணை கைகொடுத்து ஆதரித்து, மனைவியாகக் கொண்டு அவள் வாழ்விலே புதிய ஒளியை உண்டாக்க முன் வந்திருக்கிறானாக்கும். இந்த அசோகன்! ஆஹா! என்ன தியாகம்! என்ன வீரம்! இப்படிப்பட்ட தியாக புருஷர்களுக்கு பெண் குலம் நிதியொன்று திரட்டி, ஞாபகச் சிலையொன்று எழுப்பி

வைக்க வேண்டியது மிகவும் அவசியம்'' என்று கூறிவிட்டுக் கைகொட்டிச் சிரித்தாள்.

''நீங்கள் பேசுவது புரியவில்லையே!'' என்று அருணா மென்று விழுங்குவதைக் கேட்ட கௌரியம்மாள், ''புரியும்படி சொல்கிறேன் கேள். இந்த அசோகன், உங்கள் மனோன்மணியை விவாகம் செய்துகொள்ள மாட்டான். உதறிவிட்டு, முடிவில் நழுவி விடுவான். இது நிச்சயம்'' என்றாள் உறுதியாக.

'ஏன்' என்று அருணா கேட்பதற்குள் தொடர்ந்தாப்போல் கௌரி பேசினாள்: ''அவனைச் சொல்லிக் குற்றமில்லை; பாவம், சட்டம் முன்போல் இப்பொழுது இடம் கொடுப்பதில்லை. முன்னைய காலமாக இருந்தால் இந்த அசோகன், சுமார் ஆயிரம் பெண்களை அலக்ஷியமாக நாளைக்கொருவர் விகிதத்திலே மணம் செய்து கொண்டு போயிருப்பான். கல்யாணம் என்பது அவன் வரையில், ஒரு கப் காப்பியை மடக்கென்று குடிப்பது போன்ற சுலபமானதொரு காரியமாகும். ஆனால், தற்சமயம் அவனது சுதந்திரத்தின் முன்னால் ஒரு பெரும் முட்டுக்கட்டை தடுத்து நிற்கிறது. அவன் விரும்பினாலும் மனோன்மணியைத் திருமணம் செய்து கொள்ள முடியாது.

''நீ போய் உன் சிநேகிதியிடம் இதைச் சொல். அசோகனின் முதல் மனைவி உயிருடன் கல்லுப் பிள்ளையார் போல திடகாத்திரமாக இருக்கிறாள். ஆகவே அவன் மறுமணம் செய்து கொள்ள இயலாது என்று சொல்'' என்றாள் மிகவும் அலக்ஷியமாக.

''அப்படியா'' என்று கேட்ட அருணாவின் நெஞ்சு திகிலில் பக்பக் என்று அடித்துக் கொண்டது.

29

மறுநாள் மாலை, பழனியப்ப கவுண்டரின் கிரகத்திற்கு லோகநாயகியின் வேண்டுகோளைத் தட்ட மனமின்றி ஜெகதாவும், அருணாவும் பொழுது போக்காகச் சிறிது நேரம் பேசிக் களிக்கச் சென்றிருந்தார்கள். அது சமயம் மனோன்மணி கொண்டு வந்து அளித்த

சூடான காப்பியை அருந்தி விட்டு, சுரேஷ்குமாரனுடன் சீட்டு விளையாட உட்கார்ந்து விட்டான் அசோகன். அவர்கள் விளையாட்டை மேற்பார்வையிட்டவளாக மனோன்மணி, அசோகன் அருகில் சென்று உட்கார்ந்து கொண்டாள். லோகநாயகிக்கு 'லேடீஸ் கிளப்'பில் கிளம்பியிருந்தத சில புதிய வம்புகளை அலசிப் பேச வேண்டியிருந்ததனால், ஜெகதாவை ஹாலுக்கு வெளியேயிருந்த வராந்தாவில் ஒதுக்குப் புறமாக அழைத்துச் சென்று, பேச உட்கார்ந்து விட்டாள். இதுதான் தகுந்த தருணம் என்று உணர்ந்து கொண்ட அருணாவும் நளினியும் மெல்ல தோட்டத்தின் பக்கம் சென்று மறைந்தனர். யாரும் காணமுடியாத ஓரிடத்தில் புல் தரை மீது அமர்ந்து கொண்டு இருவரும் ரகசிய ஆலோசனை செய்ய ஆரம்பித்தார்கள்.

அருணாவிற்கு மிகவும் பயமாக இருந்தது. மனோன்மணியின் விவாக விஷயத்தில் தலையிட்டுக் குழப்பம் உண்டாக்க ஒருவித உரிமையும் தனக்கில்லை என்று அவள் மனச்சாக்ஷி மிகவும் உறுத்திற்று. அதனாலேயே அவள், தான் அறிந்து வந்த சமாச்சாரத்தை மிகவும் தயக்கத்துடன் கூறிமுடித்து விட்டு, சிநேகிதியின் முகத்தைத் திகிலுடன் பார்த்தாள்.

ஆனால் அவள் எதிர்பார்த்தபடி நளினி பயத்தினால் பதறி விடவில்லை. அவளது அழகிய முகம் அச்சத்தினால் வெளுத்து விடவில்லை. பழனியப்ப கவுண்டரின் செல்வ மகள் துணிச்சலிலும் பகுத்தறிவிலும் தந்தையை ஒத்திருந்தாள். ஆகவே அவள் சங்கதி முழுவதையும் ஊன்றிக் கேட்டு விட்டு, யோசனையுடன் தன் கை விரல் நகத்தை சுவாரஸ்யமாகக் கொஞ்ச நேரம் கடித்துக் கொண்டு மௌனமாக இருந்தாள்.

''ஆமாம் அருணா! இவ்வளவையும் உண்மையென்று சட்டென எப்படி நம்பிவிட முடியும்! ஒரு சமயம் அந்த கௌரியம்மாளுக்கு அசோகனிடம் ஏதேனும் விரோதம் இருக்கலாம். மனஸ்தாபம் காரணமாக அந்த அம்மாள் இல்லாததும் பொல்லாததும் கூறி வீணான குழப்பத்தை உண்டாக்கலாம் அல்லவா?'' என்று குறுக்குக் கேள்வியொன்று போட்டாள் அவள் முடிவில்.

அருணா யோசனையுடன் தலையைச் சொறிந்து கொண்டாள். அப்படியும் இருக்கலாம் என்று ஒரு எண்ணம் ஏற்படவே,

''கௌரியம்மாளுக்கு அசோகன்மீது மகத்தானதொரு வெறுப்பு என்பதை அவர்கள் பேச்சிலிருந்தே அறிந்து கொள்ள முடிகிறது. ஆனால் கௌரியம்மாள் வேண்டுமென்று பொய் சொல்லுவார்களா? அசோகனது விவாகத்தைத் தடுக்கப் பொய் சொல்லி குழப்பம் உண்டாக்குவதனால் அவர்களுக்கு லாபம் என்ன என்று விளங்கவில்லை. இவைகளைப் பற்றி நாமே பேசி மண்டையைக் கலக்கிக் கொள்வதைவிட, அம்மாவிடம் சொல்லி யோசனை கேட்பது எவ்வளவோ மேல் அல்லவா?'' என்றாள் பதிலுக்கு.

''ஊரில் நம்மைப் பற்றி வேண்டாதவர்கள் பேசும் பொய்யையெல்லாம் ஆராய்ந்தறியாது அம்மாவிடம்போய் சொன்னால் பெரிய குழப்பமும், குடும்பத்திலே வீண் கலகமும்தான் ஏற்படும். நாம் துப்புத் துலக்கிய விஷயம் மனோ அக்காவிற்குத் தெரிந்துவிட்டதானால் பிறகு உனக்கு, எனக்கு, அம்மாவிற்கு, எல்லோருக்குமே நிம்மதி இருக்காது. அவ்வளவு பெரிய ரகளை வீட்டில் நடந்துவிடும். ஆதலால், நாம் இது விஷயமாகத் தீர விசாரித்துத்தான் எதுவும் செய்ய வேண்டும். அவசரப்படக் கூடாது.'' என்று நிதானமாகப் பேசிய நளினி, சிறிது நேரம் தனக்கு முன் பரந்து கிடந்த புல் தரையை சிந்தனையுடன் வெறித்துப் பார்த்தாள்.

திடீரென அவள் முகம் பிரகாசமடைந்தது. கண்கள் மகிழ்ச்சியினால் மலர்ந்தன. ''எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அதன்படி செய்வோம்'' என்று கூறிவிட்டு, சிநேகிதியின் அருகில் மிகவும் நெருங்கி உட்கார்ந்து கொண்டாள். சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு, ''அருணா! இன்று நாம் அசோகனிடம் வலியச் சென்று பேச்சுக் கொடுப்போம். அப்பொழுது எதேச்சையாக, கௌரியம்மாளைப் பற்றி நான் பிரஸ்தாபிக்கிறேன். அப்பெயரைக் கேட்டு, அவர் முகத்திலே ஏதேனும் மாறுதலோ, பேச்சிலே ஏதேனும் மாறுதலோ, பேச்சில் ஏதேனும் தயக்கமோ ஏற்படுகிறதா என்று மிகவும் ஊன்றி, கவனமாகப் பார்ப்போம். அசோகன் குற்றமுள்ளவராக இருந்தால், கட்டாயம் அவரது முகம் மன நிலையைக் காட்டிவிடும். எனக்கென்னவோ அசோகன் நீ கூறும் அளவிற்குக் கயவராக இருப்பார் என்று தோன்றவில்லை. அவரது அந்தஸ்து, ஆஸ்தி முதலியவற்றில் கற்பனை அதிகம்

கலந்திருக்கலாம். கல்யாணமான மனைவி உயிருடன் இருக்கையில் தனக்கு மறுமணம் செய்து கொள்ள உரிமையில்லாதபோது, ஒரு மனிதன் துணிவுடன் ஒரு பெண்ணை மணக்க முன் வருவானா? அதுவும் யார் வீட்டில்? நான் பெருமையாகப் பேசிக் கொள்வதாக நினைக்காதே! என் தந்தையின் கௌரவம் எவ்வளவு? அந்தஸ்து எவ்வளவு? அவரது அதிகாரம் எத்தனை? அவர் குடும்பத்தை அகௌரவப்படுத்த ஒரு மனிதனுக்கு தைர்யம் மிக அதிகம் வேண்டும். அசோகன் அப்படி என்ன இரும்புத் தலை படைத்த அஞ்சா நெஞ்சனா? அதையும் ஆராய்ந்து கண்டுவிடுவோமே?'' என்று சவால் விடுத்தான்.

சிநேகிதிகள் இருவரும் தாங்கள் போட்ட திட்டப்படி தோட்டத்தினின்று திரும்பி வந்ததும் மெல்ல அசோகனிடம் நெருங்கிப் பேச்சுக் கொடுக்கலானார்கள். கடைக்கண்ணால் தன் தோழியை எச்சரித்துவிட்டு, நளினி புன்முறுவலுடன் அசோகன் பக்கம் திரும்பி, ''என் சிநேகிதிக்குத் தெரிந்த அம்மாள் ஒருத்தி இருக்கிறார்கள். அவர்களுக்குப் புதிய தினுசு பாதரக்ஷைகள் வெளியூருக்கு வாங்கி அனுப்ப வேண்டுமாம். தங்கள் கடையில் அவை அகப்படுமா என்று என் சிநேகிதி கேட்கிறாள்'' என்றாள்.

பூனைக் குட்டியை ஏற இறங்க கவனிப்பது போல், துச்சமாக அருணாவை நோக்கிய அசோகன், ''நான் என்ன பேயா பிசாசா? நீ பேசா மடந்தையா? உனக்கு நளினி வக்காலத்து வாங்கிப் பேச வேண்டுமா? வெளியூருக்கென்ன வெளிதேசத்திற்குக்கூட வேண்டிய 'ஆர்டர்'கள் அனுப்பிக் கொடுக்க என்னால் முடியும். நாளை ஒழிந்த நேரத்தில் கடைப் பக்கம் உனக்கு தெரிந்த அந்த அம்மாளை பயப்படாமல் அழைத்துவா'' என்று கூறிவிட்டு, அவனுக்கே உரித்தான அந்த பயங்கரமான சிரிப்பைச் சிரித்தான்.

''மனோன்மணி ஆசையுடன் ரகஸியமாகப் பரிசாக அளித்திருந்த தங்க மெருகிட்ட சிகரெட் டப்பாவை 'ஸில்க் ஷர்ட்' பையினின்று வெளியே இழுத்து சிகரெட் ஒன்றை எடுத்துக் கொண்டான். ''ஏன் இரண்டு பேரும் நிற்கிறீர்கள்? உட்காருங்கள் இப்படி!'' என்று உபசரித்து விட்டு சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

அதே சமயம் வெள்ளித் தட்டில், கண்ணாடி டம்ளர்களில் ஐஸ் ஷர்பத்தை நிரப்பி எடுத்துக் கொண்டு வந்த மனோன்மணி, தட்டை மேஜைமீது வைத்துவிட்டு, ஒரு டம்ளரை அசோகனிடம் நீட்டிவிட்டு, இன்னொரு டம்ளரை எடுத்துத் தன் கையில் வைத்துக் கொண்டு ஒரு வாய்ப் பானத்தைச் சாப்பிட்டு விட்டு, உதட்டைக் குவித்துக் கொண்டு மிகவும் மோகனமாக அவன் பக்கம் திரும்பி, ''என்ன இங்கே பெரிய மீட்டிங் நடக்கிறதே? நானும் கலந்து கொள்ளலாம் அல்லவா?'' என்று வினவினாள்.

''விஷயம் ஒன்றுமில்லை. அருணாவின் சிநேகிதி யாரோ ஒரு அம்மாளுக்கு சில புது தினுசு பாதரக்ஷைகள் தேவையாம். அதைப் பற்றி விசாரிக்க வந்திருக்கிறார்கள் இருவரும்'' என்று கூறிவிட்டு, உரத்த குரலில் நகைத்தான் அசோகன்.

பொறாமை நிறைந்த கண்களால் அருணாவை எரித்து விடுகிறவள் போல் ஒரு கணம் நோக்கினாள் மனோன்மணி. பிறகு முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டு, ''உங்களுக்கு இவைகளை எல்லாம் கவனிக்க இப்பொழுது அவகாசம் எங்கே இருக்கிறது? தொழில் விவகாரமாக, நாளை பம்பாய் போக வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே?'' என்று பகட்டாகக் கேட்டாள்.

சிகரெட் முனையில் நின்ற சாம்பலை, ரத்தனகம்பளத்தின் மீது தட்டிவிட்ட அசோகன், சிகரெட்டை வாயில் வைத்து உறிஞ்சி, சுற்றிலும் லேசான புகை மண்டலத்தை எழுப்பினான். ''ஆமாம் நல்ல சமயத்திற்கு ஞாபகப்படுத்தினாய். மெத்த வந்தனம்... இன்னும் நான் என்னுடைய விமான டிக்கெட்டை முன்கூட்டி வாங்கி வர ஏற்பாடு செய்யவில்லை'' என்று கூறிவிட்டு, மனோன்மணியை அன்பு கனிந்தோடிய கண்களால் ஆர்வமாய்ப் பார்த்தான்.

சம்பாஷணை வேறு திக்கிலே செல்வதை அறிந்த நளினி சட்டென்று, ''அதனால் என்ன? நீங்கள் ஊரில் இல்லாவிட்டாலும் உங்கள் மானேஜரிடம் சொல்லி, அருணா தனக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம் அல்லவா? அருணா இவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ள காரணம் இருக்கிறது. அந்தப் பெண்மணி நடத்தும் பத்திரிகைக்கு அருணாவும் கொஞ்சம் ஒழிந்த வேளையில் எழுத்துத் துறையில் சேவை செய்கிறாள்'' என்றாள்.

கேள்வி கேட்கும் பாவத்தில் மனோன்மணியின் புருவங்கள் இரண்டும் நெற்றி மீது உயர்ந்தன. அவள் வாயைத் திறக்கு முன் நளினி முந்திக்கொண்டு, ''உங்களுக்குக்கூட அந்தப் பத்திரிகை ரொம்பவும் பிடிக்குமே, மனோ அக்கா? 'மாதர் திலக'த்தின் பெரிய அபிமானியாயிற்றே நீங்கள்! 'மாதர் திலக'த்தின் ஆசிரியை கௌரியம்மாளுக்காகத்தான் அருணா விசாரிக்கிறாள்'' என்றாள்.

''அப்படியா? கௌரியம்மாளை உனக்குத் தெரியுமா?'' என்று உற்சாகத்துடன் கத்திய மனோன்மணி தன் வெறுப்பை மறந்து மிகவும் சகஜமாக அருணாவைப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள். ''கௌரியம்மாளின் எழுத்து வன்மையைப் புகழாத பெண்களே கிடையாது. என்ன எழுதுகிறார்கள்! ஆஹாஹா! பேனாவின் இங்கியைத் தோய்த்தா எழுதுகிறார்கள்? சோகம், தீரம், தாபம், கோபம் என்று நவரஸங்களையும் அல்லவா தோய்த்துக் கொண்டு எழுதுகிறார்கள்? ரொம்ப நாளாக அந்த அம்மாளை நான் நேரில் காண வேண்டும் என்று ஆசை கொண்டிருந்தேன். ஏன் அருணா ஒரு நாளைக்கு இங்கே நம் வீட்டிற்கு டீ சாப்பிட அவர்களை அழைத்தால் வருவார்களா? எனக்கு அவர்களை அறிமுகம் செய்து வைக்கிறாயா?'' என்று மிகவும் உற்சாகத்துடன் பேசினாள் மூச்சுவிடாமல்.

''கூப்பிட்டால் கட்டாயம் வருவார்கள். அவர்களுக்கு கொஞ்சங்கூட கர்வமே கிடையாது'' என்று கூறிய அருணா மிகவும் ஆவலுடன் அசோகன் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

மனோன்மணி பேசியதைக் காதில் வாங்கிக்கொள்ளாது நளினி கண்கொட்டாது அசோகனையே உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தாள். இரு சிநேகிதிகளும் எதிர்பார்த்த எவ்விதமான மாறுதலும் அவனது முகத்தில் ஏற்படவேயில்லை. ஆடாது, அசங்காது அமர்ந்திருந்த அசோகன் நிம்மதியாக, சிகரெட்டை மேலும் மேலும் ரஸித்துப் புகைத்துக் கொண்டிருந்தான்.

''நீங்கள்கூட கட்டாயம் அந்த கௌரியம்மாளைச் சந்திக்க வேண்டும். அவர்களை இங்கே அழைக்கும் பொழுது உங்களையும் அழைக்கப் போகிறோம்'' என்று மனோன்மணி கொஞ்சலாக அசோகனிடம் சொன்னாள்.

சிகரெட் துண்டைத் தூர வீசி எறிந்துவிட்டு கையை

கைக்குட்டையால் துடைத்துக்கொண்ட அசோகன் உல்லாசமாகச் சிரித்தான். ''என்னையா? பேஷாக அந்த அம்மாளுக்கு அறிமுகம் செய்துவை. ஆனால் ஒன்று: இந்த எழுத்தாளர்கள் எப்பொழுதுமே பிறரிடமிருந்து கொஞ்சம் முகஸ்துதியை எதிர்பார்க்கிறவர்கள். இந்த கௌரியம்மாளால் எழுதப்படுவதாகச் சொல்லும் எந்தவிதமான கட்டுரையையோ காவியத்தையோ நான் கண்ணால்கூட கண்டதில்லை. உண்மையிலே தமிழ்க் கதைகள், கட்டுரைகள் எதையுமே நான் வாசிப்பதில்லை. கோபித்துக் கொள்ளாதே மனோ! தமிழில் என் போன்றவர்கள் படிக்கக் கூடிய கதையோ, காவியமோ இருப்பதாக நான் நினைக்கவேயில்லை'' என்று கூறிவிட்டு கோர நகை செய்தான்.

வெளியே செல்ல ஆடம்பரமாக அலங்கரித்துக்கொண்டு மாடியினின்று இறங்கி வந்த சுரேஷ்குமாரன் அதை அரைகுறையாகக் கேட்டுவிட்டு, ''ஏன், மீதியையும் முடித்து விடுங்கள். அதுவும் பெண்கள் எழுதிய கதையை நான் படிப்பதேயில்லை என்று உண்மையைச் சொல்லிவிடுங்கள்'' என்று பரிகாசமாகக் கூறிவிட்டு, ''அருணா ஏதாவது எழுத ஆரம்பித்திருக்கிறாளா? கதை, கட்டுரை எழுதுவதாக இருந்தால் என்னிடம் சொல்லிவிட்டு எழுத ஆரம்பி. நானும் இதுவரை தமிழ்க் கதைகளைப் படித்துப் பழக்கமில்லை. நீ எழுதியிருக்கிறாய் என்றால் சிரமப்பட்டு படிக்க முயற்சிக்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சிரித்தான்.

முகம் சிவந்து போன அருணா வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

மற்றவர்கள் போகும்வரை காத்திருந்த அசோகன் மனோன்மணியிடம் விடை பெற்றுக் கொள்ளுமுன் தாழ்ந்த குரலில் மிகவும் ரகஸியமாக, ''உன்னிடம் ஒரு முக்கிய விஷயம் சொல்ல விரும்புகிறேன். கூடியவரை நீ அந்த கௌரியம்மாளுடன் எவ்வித தொடர்பும் வைத்துக் கொள்ளாதே!'' என்றான்.

''ஏன்?'' என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள் மனோன்மணி. ''உன் போன்ற தூய மனம் படைத்த பெண்ணின் சிநேகிதத்திற்கு கௌரியம்மாள் லாயக்கற்றவள். குழந்தை நளினி முன்பு, இதெல்லாம் பேச வேண்டாம் என்று நான் தெரியாதவன்போல்

இருந்துவிட்டேன். கௌரியம்மாள் பலே ஆசாமி! சிறுவயதிலே தான் மணந்து கொண்ட கணவனைத் தவிக்க விட்டுவிட்டு, ஓடி வந்து, பத்திரிகை நடத்தி பெண்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதாக நடிக்கிறாள். கொஞ்சமும் லஜ்ஜையின்றிப் பல ஆடவர்களுடன் நெருங்கி நட்புக் கொண்டு பழகுகிறாள். இத்துடன் இன்னொன்றும் சொல்லி வைக்கிறேன். அந்தப் பெண் அருணா, கௌரியம்மாளுடன் சிநேகிதம் என்றவுடனேயே என் மனத்தில் சுருக்கென்று பட்டுவிட்டது. கௌரியம்மாளுடன் சிநேகிதம் உள்ள பெண்கள் யாரும் நேர்மையான நடத்தையுடன் இருக்க முடியாது. ஆகவே, நளினி இந்தத் தறுதலை அருணாவுடன் நெருங்கிப் பழகி, தப்பு மார்க்கத்தில் இறங்காது பாதுகாக்க வேண்டியது நமது கடமை. அருணாவைக் கொஞ்சம் ஜாக்கிரதையாகக் கண்காணித்துக் கொள்'' என்றான்.

அசோகன் மீது காதலால் கனிந்து உருகிக் கொண்டிருந்த மனோன்மணிக்கு அவனது வாக்கு தெய்வ வாக்கு போல் தென்பட்டது. இந்நாள் வரை அவள் கௌரியம்மாள் மீது கொண்டிருந்த அபிமானம் அனைத்தும், சூரியன் முன் பனிபோல்கண நேரத்தில் பறந்தோடி விட்டது. அதற்குப் பதில் விபரீதமான ஒரு வெறுப்பும் அசூயையும் மேலோங்கின. ஏற்கனவே அருணா மீதிருந்த பகை உணர்ச்சி, கௌரியம்மாள் மேல் ஏற்பட்ட வெறுப்பில் இன்னும் அதிகமாயிற்று. கால தாமதமின்றி அருணாவைப் பற்றிக் கூறி நளினியையும், சுரேஷ்குமாரனையும் எச்சரித்து வைப்பது உசிதம் என்று பெரிதும் நம்பினாள்.

அன்று இரவு போஜனத்தின்போது மனோன்மணி, அதுதான் தக்க சந்தர்ப்பம் என்று எண்ணி மிகவும் உரிமையான குரலில், ''நளினி, உனக்கு சிறு புத்திமதியை கூற விரும்புகிறேன். நீ கோபித்துக் கொள்ளாதே! உன் நன்மைக்குத்தான் சொல்கிறேன்'' என்று ஆரம்பித்தாள்.

சாம்பார் சாதத்தை ருசி பார்த்துக் கொண்டிருந்த நளினி, தலையை நிமிர்த்தி, மெல்லியதாக புன்முறுவல் பூத்தாள். ''நீங்கள் கூறும் புத்திமதியை நான் என்றுமே வரவேற்பேன். தாராளமாகச் சொல்லுங்கள். பச்சைக் குழந்தையா என்ன அர்த்தமில்லாமல் கோபிக்க?'' என்றாள் பரிகாசமாக.

மனோன்மணி நேரிடையாக அவளுக்குப் பதில் சொல்லாமல், லோகநாயகி பக்கம் திரும்பி, ''அத்தை! அந்த பெண் அருணாவை நீங்கள் நம் வீட்டில் மிகவும் நெருங்கிப் பழக அனுமதிப்பது எனக்கு கொஞ்சமும் பிடிக்கவேயில்லை. அற்ப சகவாசம் முடிவில் பெரும் சங்கடமாகத்தான் முடியும். எல்லோரையும் வைக்கும் இடத்தில்தான் வைக்க வேண்டும்'' என்றாள்.

அவள் மேலே பேசி முடிக்கும் முன், சுரேஷ்குமாரன் மிகவும் ஆத்திரமாக, ''அருணா என்ன குற்றம் செய்து விட்டாள்? நம்முடன் அவள் நெருங்கிப் பழகுவதில் தவறு என்ன?'' என்று இரைந்து கேட்டான். அவனது முகமும் கண்களும் கோபத்திலே சிவந்து போயிருந்தன.

''சுரேஷ் தம்பி'' என்று லோகநாயகி, கிலியுடன் இடைமறித்தாள்.

சாப்பாட்டு வேளையில் இதென்ன சண்டையென்று அவள் மனம் கலங்கியது. மேலும் கண்ணுக்கு இனிமையான தன் ஒரே மகன், கோபமடைவதையோ, அல்லது மனம் வருந்துவதையோ அவளால் காணச் சகிக்கவே இல்லை.

''மனோ அக்கா! நீங்கள் உங்கள் காரியங்களைக் கவனித்துக் கொண்டு போங்கள். எங்கள் விஷயங்களில் தலையிட வேண்டாம். நான் என்ன சிறு குழந்தையா? யாருடன் பழக வேண்டும். யாருடன் பழகக்கூடாது என்று நீங்கள் எடுத்து போதிக்க? மேலும் நீங்கள் அருணாவைத் துச்சமாகப் பேசுவதை இனியும் நான் கேட்டுக் கொண்டிருக்க மாட்டேன்'' என்றான் சுரேஷ் கோபத்துடன்.

மனோன்மணியின் கண்கள் கோபத்தில் விரிந்தன. ''அருணாமீது உனக்கு அவ்வளவு கரிசனம் என்ன?'' என்று குரோதமாகக் கேட்டாள்.

''கரிசனம் ஒன்றுமில்லை. அருணாமீது எனக்குக் காதல். அவளை நான் மணந்து கொள்வதாகத் தீர்மானித்திருக்கிறேன். உலகத்தில் உள்ள எந்த சக்தியும் என் மனத்தை மாற்ற முடியாது. இனி அவளைப் பற்றி யாரும் ஒரு வார்த்தைக் கூட என்னிடம் அவமரியாதையாகப் பேசக்கூடாது'' என்று கூறி இலையை விட்டு எழுந்திருந்தான் கோபத்துடன்.

''கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாயா?'' என்று

இகழ்ச்சியாகக் கேட்ட மனோன்மணி, ஏளனம் பொங்க நகைத்தாள்.

கையை கழுவுவதற்கு விரைந்து கொண்டிருந்த சுரேஷ்குமார், அடியுண்ட வேங்கை போல் சீறிக்கொண்டு திரும்பினான். "என்ன அதில் தவறு என்ன இருக்கிறது? இஷ்டப்பட்ட புருஷனை மணந்து கொள்ள ஒரு விதவைப் பெண்ணுக்கு உரிமை இருக்கையில், விரும்பிய பெண்ணை மணந்து கொள்ள ஒரு ஆண்மகனுக்கு உரிமையில்லையா? வாயை மூடுங்கள் அக்கா!" என்று கத்தினான் உக்கிரமான குரலில்.

"சுரேஷ்!" என்று லோகநாயகி கிலியுடன் கத்தி முடிப்பதற்குள், "அய்யோ அத்தை! உங்கள் மகன் என்னை என்ன சொல்கிறான் பாருங்கள்! இன்னமும் எனக்கு இந்த இடிச் சொல்தானா!" என்று அலறிய மனோன்மணி, சாப்பிட்டுக் கொண்டிருந்த இலைமீது குப்புற விழுந்து குலுங்கக் குலுங்க அழத் தொடங்கினாள்.

30

மாடிப் படிகளை மின்னல் வேகத்தில் தாண்டிக் கொண்டு அறைக்குள் பிரவேசித்த ஜெகதா, நிற்கமுடியாது கால்கள் தடுமாற, ஆசனமொன்றில் பொத்தென விழுந்தாள். கௌரியம்மாளின் கையெழுத்தை ஊன்றிப் படிப்பதில் லயித்து தன்னை மறந்து விட்டிருந்த அருணா திடுக்கிட்டு நிமிர்ந்தாள். செக்கர் வானம்போல் சிவந்திருந்த பெரியம்மாவின் முகத்தையும், நெற்றிமீது துளிர்த்து நின்ற வியர்வையையும் கண்டதும் அவளுக்கு மெத்த கலவரம் ஏற்பட்டது.

"பெரியம்மா! என்ன சங்கதி! என்ன நடந்தது?" என்று கவலையுடன் கேட்டுக் கொண்டு எழுந்து அருகில் வந்தாள்.

இடது கையினால், "சற்றுப் பொறு" என்ற பொருள்பட ஜாடை செய்த ஜெகதா ஆசுவாசப்படுத்திக் கொண்டு, "எனக்கு இது இப்படியாகும் என்று முன்பே தெரியும்" என்றாள் படபடப்பாக.

விஷயத்தை ஊகிக்க முடியாத அருணா, கலவரத்துடன்

விழித்தாள். "பெரியம்மா? உங்கள் மனது நோக ஏதேனும் செய்துவிட்டேனா?" என்று மிகவும் பதட்டத்துடன் கேட்டாள்.

"அடி அசட்டுப் பெண்ணே! இப்படி வந்து அருகில் உட்கார். எவ்வளவு காலந்தான் இப்படி உலகமே தெரியாத மக்குப் பெண்ணாக இருக்கப் போகிறாய்? ஏதோ இதுவரை நான் கூட இருந்து, ஒரு வழியாகக் காரியத்தை முடித்து விட்டிருக்கிறேன். ஆனால் காலம் முழுவதும் உன்னுடன் கூட இருக்க முடியுமா? சாத்தியப்படுமா? இனி வரப்போகும் அந்தஸ்துக்குத் தக்கபடி நடந்து கொள்ள இப்பொழுதிருந்தே நீ பழகிக் கொள்ள வேண்டும்" என்றாள் பெரியம்மா, மகிழ்ச்சியும் பதட்டமும் கலந்த மெல்லிய குரலில்.

அருகில் வந்து அமர்ந்த அருணாவுக்கு இன்னமும் விஷயம் ஒன்றுமே விளங்கவில்லை. 'பெரியம்மா' என்று வாயைத் திறக்குமுன் குறுக்கிட்ட ஜெகதா, "எனக்கு அன்றே தெரியும். மேலே போர்த்துக்கக்கூட ஒரு கிழிந்த துணி இல்லாது, மரக்கட்டை போல், மண் தரையில் நீ உருண்டு கிடந்தாயே, அன்று உள்ளே வந்ததும், உன் முகத்தைப் பார்த்தேன். ஒரே விநாடியில் பளிச்சென்று எனக்கு ஒரு பெரும் வித்தியாசம் புலப்பட்டுவிட்டது. மண் தரையை மெழுகிக் கொண்டு, சாணிச் சுருணையும் கையுமாக காலங் கழிக்க நீ பிறக்கவில்லை. மிகவும் அந்தஸ்தாக நாலுபேர் முன்னால் கௌரவமாக வாழப்பிறந்தவள் என்ற அடையாளம் உன் முகக்குறியிலேயே தெரிந்தது. அத்தான் எப்பவுமே என்னை இது விஷயமாகப் புகழ்ந்து பேசுவார். 'ஜெகதா! நடக்கப் போறதெல்லாம் உனக்கு எப்படி முன்கூட்டியே தெரிஞ்சுடுது'ன்னு என்னை அவர் வாய் ஓயாது புகழ்வது வழக்கம்! பாவம், அவர் இப்பொழுது இருந்தால்..." என்று கூறிவிட்டு, புடவைத் தலைப்பால் கண்களை மெல்லத் துடைத்துக் கொண்டாள்.

அவளே எல்லாவற்றையும் பேசிமுடிக்கட்டும். வீணாகக் குறுக்கிட்டுக் கேள்வி போடுவதில் பயனில்லை என்று உணர்ந்த அருணா, மௌனமாக பெரியம்மாவின் முகத்தை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"காலையில் விடிஞ்சதும் விடியாததுமாக லோகா எனக்கு போன் பேசினாள். கவுண்டருக்கு இந்த விஷயம் தெரிந்ததில் ஏற்பட்ட

திருப்தி, தன் மனத்திற்கு ஏற்பட்ட மகிழ்ச்சி, எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் ஒரு மணி நேரத்துக்கு மேலே போனிலே பேசினாள். என்னவோ நானும் லோகாவுடன் பலவருஷங்களாக சிநேகிதமாகப் பழகினதற்கு முடிவிலே ஒரு நல்ல பலன் கைமேல் கிடைத்தது. லோகா வீட்டவர்களுடன் நன்றாக ஜாக்கிரதையாகப் பழகவேண்டும் என்று அடிக்கடி நான் சொல்லிக் கொண்டிருந்தது வீண் வார்த்தையல்ல என்று நீ புரிந்து கொள்வாய்'' என்று மூச்சுவிடாது வேகமாய்ப் பேசிவிட்டு ஜெகதா, தொண்டையைக் கனைத்து ஒருமுறை இருமினாள். பிறகு மிகவும் பெருமையாகத் தலையை நிமிர்த்தி அருணாவைப் பார்த்து, ''சுரேஷ் தம்பிக்கு உன்னைக் கட்டிக் கொள்ள மிகவும் பிரியமாக இருக்கிறதாம். இதைக் கேள்விப்பட்டதும் கவுண்டர், தமக்கு திருப்தி என்று ஒரே வார்த்தையிலே சம்மதம் தெரிவித்து விட்டாராம். சுரேஷ் இப்போது, இது சமயம் உன்னிடம் நேரே பேச இங்கே வரப் போகுதாம். எனக்கு இதெல்லாம் கேட்டதும் சந்தோஷத்திலே பூலோகமா சுவர்க்கமான்னு பிரமிப்பாய் போயிடுத்து!'' என்று முடித்தாள்.

•

இதைக் கேட்டதும் அருணாவின் நெஞ்சு உணர்ச்சி வசத்திலே படபடவென்று துடித்துக் கொண்டது. ''பெரியம்மா, வந்து...'' என்று வெட்கத்துடன் பேச முடியாது அவள் தடுமாறினாள்.

ஜெகதா வெடுக்கென்று ஆசனத்தினின்று துள்ளி எழுந்தாள். ''அசட்டுப் பெண்ணே! வந்து என்றும் போயி என்றும் ஏதேதோ உளறிக் கொண்டிருக்காதே! கனவினால்கூட நினைக்க முடியாத சம்பந்தம் இது. வலுவில் சீதேவி உன்னை நெருங்கி வந்து கொண்டிருக்கிறாள். படித்ததற்கு புத்திசாலியாக நடந்துகொள். நடந்து கொள்ளத் தெரியாவில்லை என்றால் சொன்ன பேச்சையாவது கேள். போ! சட்டென்று, முகத்தைத் துடைத்துக் கொஞ்சம் பவுடர் பூசிக் கொண்டு, பீரோ மேல் தட்டில் இருக்கும் பச்சை வர்ணத் தாவணியை எடுத்துப் போட்டுக் கொள். சுரேஷ் தம்பி ஏதேனும் கேட்டால் தத்துப்பித்தென்று உளறாதே! வயசாச்சுதே! இதெல்லாம் ஒரு பெண்ணுக்கு சொல்லியா தரணும்?'' என்றாள்.

ஜன்னல் அருகே பாய்ந்து சென்று வெளித்தோட்டத்தை எட்டிப் பார்த்துவிட்டு, ''என்னவோ அருணா, உன்னை எடுத்து வளர்த்தேன்.

அந்தஸ்தான இடத்திலே உன்னைக் கட்டிக் கொடுத்தும் விடப் போகிறேன். கல்யாணத்தை விமரிசையாகக் கவுண்டரே நடத்திய போதிலும், நாமும் ஏதாவது செய்து அனுப்பினால்தானே நமது கௌரவம் நிலைக்கும்? அதனாலே, டவுனிலே இருக்கும் சின்ன வீட்டை விற்றாகிலும், செலவைச் சமாளித்துக் கொள்வதுன்னு தீர்மானிச்சுவிட்டேன். மனோன்மணி கல்யாணம் முடிஞ்சதும் நளினிக்கு தக்க இடமாகப் பார்த்து அவள் விவாகத்தை முடிச்சுவிடப் போகிறார்களாம். அதற்குப் பிறகுதான் இந்தக் கல்யாணம் நடக்கணும். அதுவரை, நாம் ஒருவர் வீட்டில் ஒருவர் சம்பந்தம் கொள்ள பிரியப்பட்டு நிச்சயம் செய்திருப்பது கொஞ்சம் ரகசியமாகவே இருக்கட்டும் என்று லோகா கேட்டுக் கொண்டாள். அதனால் இதைப் பத்தி நீ ஜாக்கிரதையாக இரு. உன் காலேஜுப் பெண்கள் நாலு பேரிடம் ஏதாவது உளறி வைக்காதே! சுரேஷ் தம்பியிடம் மரியாதையாகவும், பிரியமாகவும், பேசு. லோகநாயகியிடம் மிகவும் கௌரவமாகவும், அன்பாகவும் நடந்து கொள். தெரிஞ்சுதா?'' என்று அதட்டினாள்.

''பெரியம்மா, எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ஒரே பயமாகவும், கலக்கமாகவும் இருக்கிறது. நமது அந்தஸ்திற்கும், அவர்கள் வீட்டு அந்தஸ்திற்கும்...'' என்று அருணா கூறி முடிப்பதற்குள், ஜெகதா கோபத்துடன் இடைமறித்தாள்.

''உன் பிறந்த வீட்டைப்பற்றி சிந்தித்தால்தானே கவலை? எப்பொழுது உன்னை இங்கே கொண்டு வந்து வளர்த்தேனோ, அப்பொழுதே உன் அந்தஸ்து மாறிவிட்டது. என்னதான் காதல் கீதல் என்றாலும் மறந்து போயும் உன் பிறந்த வீட்டின் லக்ஷணத்தை சுரேஷிடம் கூறிவிடாதே!'' என்று கண்டிப்பாகப் பேசினாள்.

''இன்றைக்கு மறைத்தால், நாளைக்கு விஷயம் தெரியாமல் போய்விடுமா பெரியம்மா? அவர்களுக்கு நமது உண்மை நிலையைத் தெரிவிப்பதுதான் நல்லது என்று நான் எண்ணுகிறேன்'' என்று அருணா மெல்லிய குரலில் பதில் அளித்தாள்.

ஜெகதாவின் கண்கள் சிவந்தன. பற்களை ஆத்திரத்துடன் ஒரு முறை கடித்தாள். ''அடி மக்குப் பெண்ணே! இவ்வளவு நாழி தொண்டை வரண்டு போக உனக்கு நான் செய்த

உபதேசத்தையெல்லாம் பாழடித்துவிடுவாய் போலிருக்கிறதே. உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. உன் அப்பனின் சோம்பேறி ரத்தம் உன் உடலிலும் ஓடிக் கொண்டிருக்கிறது. உங்கள் குலத்திற்கே வாழ்க்கையில் பிழைப்பது எப்படி என்ற ரகஸியம் கடுகளவுகூடத் தெரியாது. ஆயிரம் பொய் சொல்லி ஒரு தாலியைக் கட்டு என்று சாஸ்திரத்திலேகூடச் சொல்லியிருக்கிறது. கல்யாணம் என்பதிலே, இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும், கொஞ்சம் பொய் கலந்துதான் இருக்கும். இதோ பார்! வீணாக விவாதிக்கிறதைவிட்டு நான் சொன்னபடி செய். போய் முகத்தை கழுவிக்கொள். நேரமாகிறது'' என்று இரைந்தாள்.

அவள் பேசி முடிக்குமுன், தோட்டத்திற்குள் கார் பிரவேசிக்கும் சப்தம் கேட்டது. ஒரே பாய்ச்சலில் ஜன்னலுக்கு விரைந்தாள். அவளது முகம் மகிழ்ச்சியில் மலர்ந்தது. ''அருணா! போ சீக்கிரம். சுரேஷ் வந்துவிட்டது!'' என்று எச்சரித்துவிட்டு, மிகவும் பரபரப்புடன் அறையை விட்டுப் பாய்ந்து வெளியே ஓடினாள்.

''உட்கார் தம்பி சுரேஷ்!'' என்று கனிவுடன் உபசரித்துவிட்டு, சமையலறைக்குப் பாய்ந்து சென்றாள் ஜெகதா. ''காப்பி பலகாரம் எடுத்துக் கொண்டு ஹாலில் வை'' என சமையற்காரிக்கு உத்தரவிட்டு விட்டு, ஒரே வேகத்தில் மாடிக்கு விரைந்தோடினாள்.

இவ்வாறு மாடிக்கும், கீழுக்கும், தோட்டத்திற்குமாகக் கல்யாணம் முடிவதற்குள் பலமுறை ஓடியாடவேண்டியிருந்தும் ஜெகதாவிற்கு இந்த சிறு அலைச்சலே தாளமுடியாததாக இருந்தது. அருணா தான் கூறியபடி அலங்கரித்துக் கொண்டு அறையைவிட்டு வெளிப்படுவதைக் கண்டதும் அவள் நிதானமாக மூச்சுவிட்டாள். ''இதோ பார் அருணா! தம்பி சுரேஷ் வந்து ஹாலில் உட்கார்ந்திருக்கு. தன்னைக் கட்டிக்கொள்ளச் சம்மதமான்னு கேட்க நேரில் வந்திருக்கு. இப்படியெல்லாம் நம் நாட்டிலே, நம் வீட்டிலே நடப்பது அபூர்வம். லோகா வீட்டவர்கள் பழக்க வழக்கத்தில் வெள்ளைக்காரர்களைப் போன்றவர்கள். அதனால் சுரேஷ் நேரிடையாக கேட்டறிந்து போக வந்திருக்கு. 'சரி சம்மதம்' என்று சுருக்கமாகச் சொல்லிவிடு. வீணாகத் தத்துப்பித்தென்று ஏதும் பேசாதே! புருஷர்களுடன் பேசும் பொழுது பெண்கள் எப்பொழுதும், நறுக்குத் தெறித்தாற்போல் ரத்னச்

சுருக்கமாகத்தான் பேச வேண்டும். அப்பொழுதுதான் மதிப்பு ஏற்படும். தெரிஞ்சுதா?'' என்று ரகசியமாக உபதேசித்தாள்.

'சரி' என்பதற்கு அடையாளமாக அவள் தலையை அசைக்கவே, ஜெகதாவின் உள்ளத்தில் திருப்தி நிலவியது. சுரேஷ்குமாரனுக்கும் அருணாவிற்கும் நடக்கப் போகும் விவாகத்தினால் தன் அந்தஸ்து மலைபோல் எவ்வளவு தூரம் உயர்ந்து போகும் எனத் தன் மனக் கண்ணால் தன் பிற்கால நிலையை எண்ணி மகிழ்ச்சியால் பொங்கிப் பூரித்துப்போனாள். ''இன்னிக்கே ஒரு கடுதாசி எழுதி உன் அண்ணனுக்குப் போடப்போகிறேன். இந்திராணியைச் சட்டுபுட்டுனு எங்கேயாவது தக்க இடத்திலே கட்டிக் கொடுத்துவிட ஏற்பாடு பண்ண வேணும். அவள் கல்யாணத்தாலே உன் கல்யாணம் வீணாக தாமதப்படக்கூடாது'' என்றாள். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவள் போல, ''சரி! சரி! கீழே சீக்கிரம் போய் சுரேஷ்குமாரனுடன் பேசிக் கொண்டிரு. நான் வந்து விடுகிறேன்'' என்றாள்.

அருணா மிகவும் சங்கோஜத்துடன் ஹாலுக்குள் தயங்கிக் கொண்டு வந்தாள். நாணத்தினால் அவள் கன்னங்கள் இரண்டும் லேசாகச் சிவந்து போயிருந்தன. சுரேஷ் என்னவெல்லாம் பேசப் போகிறானோ என்று பீதியும், பரபரப்பும் அடைந்ததனால், அவள் நெஞ்சம் படபடத்தது. மெல்லத் தயங்கிக் கொண்டு, எதிரே சற்று தூரத்தில் போடப்பட்டிருந்த ஆசனமொன்றில் வந்து அமர்ந்து கொண்டாள்.

சுரேஷ்குமாரனும், அருணாவும் ஒருவரையொருவர் சிறுவயதிலிருந்தே அறிவார்கள். சங்கோஜம் இன்றிப் பேசிப் பழகிய நல்ல நண்பர்கள். எனினும், காதல் என்ற உணர்ச்சி குறுக்கிட்டுத் தோன்றிய பின்பு, அவர்கள் இருவரிடையே ஏனோ, விவரிக்கவே இயலாத ஒரு புதிய அச்சம் குடி கொண்டுவிட்டது! என்ன வெல்லாம் பேசவேண்டும் என்று முன் கூட்டியே தீர்மானித்து, நிச்சயம் செய்து கொண்டு புறப்பட்டிருந்த சுரேஷ்குமாரனுக்கு அருணாவைக் கண்டதும், அவ்வளவு வார்த்தைகளும் மறந்து போயின! சங்கோஜத்துடன் தன் கால் பாதரக்ஷைகளையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டு வாளா இருந்தாள் அருணா.

கையில் பிடித்திருந்த கைக்குட்டையை மடக்கிச் சுருட் ஒரிந்து, பிறகு பிரித்துக் கொண்டிருந்த அருணாவுக்கு, நிமிஷ யுகம்போல் நீடித்துக் காணப்பட்டது. இன்பமும், பயமும் ஒருங் எய்தியவளாக, நெஞ்சு படபடக்க அவனை நிமிர்ந்து பார்க்க தைரியமின்றி உட்கார்ந்திருந்தாள்.

ஹால் கடிகாரம் டணார் என்று ஒரு முறை மணியடித்த கனவினின்று திடுக்கிட்டு எழுந்தவன்போல் தன் உணர்வு பெற் எழுந்திருந்தான் சுரேஷ்குமாரன். தொண்டையைக் கனைத் கொண்டான். முகத்தில் அரும்பிய வியர்வை கைக்குட்டையினால் துடைத்துக் கொண்டான். த துணிவையெல்லாம் ஒருங்கே திரட்டிக் கொண்டு மிகவு தீர்மானமான குரலில், ''அருணா! நான் உன்னை மனமா நேசிக்கிறேன். என்னைக் கல்யாணம் செய்து கொள்வாயா?'' என் தடுமாறினான்.

அருணா பதில் கூறவில்லை. அவளது கண்கள் இரண்டு கலங்கத் தொடங்கின. கொந்தளித்த உணர்ச்சி போராட்டத்தைத் தா முடியாது அவள் நெஞ்சு வெடித்துவிடும் போல் 'படீர் படீர்' என் அடித்துக் கொண்டது.

''சுரேஷ்! எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை உங்களை மணக்கப் பூரண சம்மதம். அதற்கு மேல் என்னால் பே முடியவில்லை, மன்னிக்கவும்'' என்று கூறிய அருணா, அதற்கு மே தாங்க முடியாது மாடியறைக்குள் வேகமாக ஓடினாள்.

ஆசனம் ஒன்றில் போய் பொத்தெனச் சாய்ந்து கொண்ட அவ ஆனந்த மிகுதியினால் விக்கி அழுதாள். அன்று இரவு அவள் த சகோதரிக்கு ஒரு கடிதம் எழுதினாள்.

''அன்புள்ள இந்திராணி,

உனக்கு ஒரு சந்தோஷ சமாசாரம் சொல்லப் போகிறே சுரேஷ்குமாரனுக்கும் எனக்கும் விவாகம் நிச்சயிக் பட்டிருக்கிறது. அதுபற்றி விவரமாக பெரியம் அண்ணாவுக்குக் கடிதம் எழுதுவார்கள். அன்புள்ள அக் உங்கள் வார்த்தை எனக்கு இப்பொழுது, நன்றாக நினைவு வருகின்றது. காதல் என்பது எப்படிப்பட்ட உணர்ச்சி என்ப

இப்பொழுதுதான் உணர்கிறேன். இந்த அன்புச் சுமையைத் தாள முடியாது ஆனந்தத்திலே, என் இருதயம் இரண்டாகப் பிளந்துவிடும்போல் தோன்றுகிறது. அக்கா! விரைவில் நீங்களும், நானும், நமது மனத்திற்கு உகந்த கணவர்களை மணந்து, சுகமாக வாழ்வோம் என்று எதிர்பார்க்கிறேன். மற்றவை பிறகு.

தங்கள் அன்புள்ள,

அருணா''

கடிதத்தை உறையிலிட்டு மூடிவிட்டு, எழுந்து ஜன்னல் அருகே வந்து நின்று கொண்டு வான வீதியை வெறித்துப் பார்த்தாள். மேகப் படலத்திலே மறைந்தவாறு லேசாக ஒளிவிட்டு வீசிய வளர்மதி, என்றுமில்லாத ஒரு தனி அழகுடன் அன்று காட்சியளித்தான். குளுமையாக, மெல்ல உள்ளே வீசிக் கொண்டிருந்த தென்றலில் அன்று பன்னீரின் மணம் கமழ்ந்தது.

31

ஒரு வார காலம் சென்றது. அன்று தினம் வழக்கம்போல் தன் எழுத்துத் தொழிலை முடித்துக் கொண்டு, வீட்டிற்குப் போகக் கிளம்பிய அருணா, கௌரியம்மாள் அறைக்குள் வந்தாள். எழுதி முடித்த கைப் பிரதிகளை மேஜைமீது வைத்துவிட்டு அவள் வெளியே செல்லத் திரும்பும்பொழுது, ''அருணா, உன்னிடம் ஒன்று பேசவேண்டும்'' என்று இடிமுழக்கம் செய்தவண்ணம், இரும்பு பீரோ மறைவில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்த கௌரியம்மாள் வெளிப்பட்டாள். ''உனக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? ஏன் அப்படிப் பரக்க விழிக்கிறாய்? உட்கார் சாவதானமாகக் கேட்க வேண்டிய சங்கதி!'' என்று புன்முறுவல் செய்த கௌரியம்மாள் சுழல் நாற்காலியில், கால்மேல் காலைப் போட்டுக் கொண்டு அதிகார தோரணையில் அமர்ந்தாள்.

''உனக்கு வெகு விரைவில் கல்யாணம் நடக்கப் போவதாகக்

கேள்விப்பட்டேன். அதுவும் பெரிய இடத்து சம்பந்தமாயே பழனியப்ப கவுண்டரின் ஒரே மகன் சுரேஷ் குமாரன் என்பவனை உனக்கு நிச்சயம் செய்திருக்கிறார்களாமே? இந்த ஏற்பாடு ரகஸ்யமாக இருப்பதாக நேற்று என் ஸ்நேகிதி ஒருத்தி என்னிடம் ரகஸியமாக சொன்னாள்'' என்று கூறிவிட்டு கௌரியம்மாள், தன் முப்பத்திரண்டு பற்களும் தெரிய வாய்விட்டு நகைத்தாள்.

அருணா பதில் பேசாது மௌனமாக இருப்பதைக் கண்ணுற்றதும் அவள், ''என்ன? மிகவும் ரகஸ்யமான விஷயம் அம்பலத்திற்கு வந்துவிட்டதே என்று பார்க்கிறாயா? லேடீஸ் கிளப்பு மூலம் இச்செய்தி மெல்ல ஊரில் பரவத் தொடங்கியிருக்கிறது. எனக்குத் தெரிய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். இந்தச் செய்தி உண்மையானதா? ஏன் என்றால், அடிக்கடி இந்த ஊரில் வேலையற்ற சிலர், காரண காரியமின்றி சில வதந்திகளைக் கட்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதுண்டு. அதனால் கேட்கிறேன்.'' என்றாள்.

வெட்கத்தினால் சிவந்த முகத்தை சிறிது நிமிர்த்தி, கௌரியம்மாளை ஒரு முறை உற்றுப் பார்த்தாள் அருணா. பிறகு 'ஆமாம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை மெல்ல அசைத்தாள்.

''அப்படியா, உண்மையா? சந்தோஷம். ஆனால் இன்னொன்று கேட்க விரும்புகிறேன். இந்தக் கல்யாணம் பெரியவர்களின் ஏற்பாடா, அல்லது காதலின் விளைவா'' என்று கேட்டுவிட்டு மீண்டும் நகைத்தாள் அந்த அம்மாள்.

அருணாவின் முகம் இன்னும் அதிகமாகச் சிவந்து போயிற்று. மௌனமாக அவள் விரல் நகத்தைக் கடிப்பதைக் கண்ட கௌரியம்மாள், ''காதலின் விளைவு என்று நீ சொல்லாமலேயே என்னால் ஊகிக்க முடிகிறது. ஆனால் என் மனத்தில் இது சமயம் தோன்றும் அபிப்பிராயத்தை வெளியிடாமல் அடக்கி வைத்துக் கொள்ள நான் விரும்பவில்லை. ஆமாம், அருணா! உனக்கு எவ்வளவு வயதாகிறது? பதினேழுகூட இன்னும் பூர்த்தியாகவில்லை என்று நம்புகிறேன். இந்தச் சின்னஞ்சிறு வயதிலே, காதல் என்பதைப் பற்றி நீ என்ன அறிவாய்? கல்யாணம் என்பதைப் பற்றித்தான் என்ன உனக்குப் புரியப் போகிறது! ஏன் இந்த அவசரம்? நன்றாகப் படித்து

அறிவு முதிர்ந்த பிறகு ஆலோசனை செய்து, இஷ்டப்பட்ட ஒரு புருஷனை மணந்து கொள்ளக் கூடாதா?'' என்றாள்.

மேலும் தொடர்ந்து பேசினாள். ''பணத்தையும் அந்தஸ்தையும் கண்டு ஏற்பட்டுள்ள பிரமிப்பை காதல் என்று நினைத்தாயா? அல்லது, முதல் முதலாக ஒரு ஆடவனைக் கண்டு ஏற்பட்ட கவர்ச்சியை, காதல் என எண்ணிக் கொண்டு விட்டாயா? உன்னைவிட வயதிலும், அனுபவத்திலும் பெரியவர்கள் கூட, முதல் முதலாக ஏற்படும் இனக் கவர்ச்சியைக் காதல் என்று நினைத்து, மனம் தடுமாறி, கல்யாணம் செய்து கொண்டு பிறகு வாழ்விலே மிகவும் வருத்தம் அடைந்திருக்கிறார்கள். கல்யாணம் என்பது குளிர்ந்த நிலவு வீசும் பூஞ்சோலையல்ல. தோல்வியும் துயரமுமே அதிகம் நிறைந்ததொரு போட்டியாகும். எல்லாரும் போட்டியில் வெற்றி பெற்று விடுவார்களா? ஏதோ ஒரு சிலருக்குத்தான் கல்யாணம் அமைதியையும், ஆனந்தத்தையும் கொடுக்கிறது. பெரும்பாலோருக்கு, மணவாழ்க்கை சிறை வாழ்க்கையாகத்தான் இருக்கிறது. ஒரு சிலர் அச்சிறையினின்று, தைரியமாக வெளிவருகிறார்கள். மீண்டும் தனிமையை ஏற்று வாழ்க்கையைப் புதிதாக வாழ முயலுகிறார்கள். மீதிப் பேர்கள், தைரியமின்றி முணுமுணுத்துக் கொண்டு அதிலேயே உழல்கிறார்கள்.

''என்னை ஆலோசனை கேட்டால், நான் ஒரு புத்திமதி கூற விரும்புகிறேன். ஆனாலும் நீ இவ்வளவு சிறிய வயதிலே காதல், கல்யாணம் முதலிய விவகாரங்களில் இறங்கியிருக்கக் கூடாது. பதினெழு வயதில் காதல், பதினெட்டில் கல்யாணம், பத்தொன்பதில் தாய்மை, இருபதாவது வயதில் சம்சாரத்திலே கசப்புற்று சந்நியாசம் மேற்கொள்ள நினைக்கும் விரக்தி மனப்பான்மை! சே! சே! இது என்ன அக்கிரமம்! அருணா! உன் விவாகச் செய்தி எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லையம்மா! நீ புத்திசாலிப் பெண். உனது அறிவைக் கல்வியில் செலுத்தி நீ பெரிய மேதையாக வரவேண்டியவள். அறிவை வளர்க்க வேண்டிய பருவத்தில் குடும்ப பாரத்தில் ஈடுபட நினைக்கிறாய். என்னவோ நான் சொல்ல வேண்டியதைச் சொன்னேன். பிறகு உன் இஷ்டம்'' என்று முடித்துவிட்டு எழுந்தாள்.

அருணாவிற்கு, ஆத்திரமும் துக்கமும் ஒருங்கே நெஞ்சை

அமுக்கின. ''கௌரியம்மாளுக்குக் காதல் என்பதைப் பற்றி என்ன தெரியும்? சதா சர்வகாலமும் ஆடவர்களைத் தனது சொற்களிலும், எழுத்துக்கள் மூலமும் தாக்கிக் கொண்டு, குற்றம் கண்டு பிடிப்பதே தொழிலாகப் பழக்கப் பட்டிருப்பதால், அவளது மனத்தில் இரக்கம், தயை, அருள் ஒன்றுக்குமே இடமில்லாதிருக்கிறது. சுரேஷ்குமாரனை நான் எவ்வளவு தூரம் நேசிக்கிறேன்! எனது அன்பு எவ்வளவு பரிசுத்தமானது! சுரேஷ்குமாரனும் தனது அந்தஸ்தையோ, படிப்பையோ கருதாமல், ஏழைப்பெண் என்று அறிந்தும் என்னை மனமாற நேசிக்கவில்லையா! அவரது அன்பு எவ்வளவு உயர்ந்தது என்பதைத்தான் கௌரியம்மாள் அறிவாளா? காதல் என்பது காலம் நீராம்! கல்யாணம் என்பது ஒரு போட்டியாம்! எவ்வளவோ அழகாக எழுத வன்மை பெற்றிருந்தும், இதயப் பண்பில்லாது இருக்கும் இந்த அம்மாளை இதுவரை பெரிய மேதை என்று எண்ணி, பயபக்தியுடன் நடந்து கொண்டேனே, என்ன முட்டாள்தனம்!'' என்று அவளது இளம் உள்ளத்திலே உணர்ச்சிகள் ஆவேசமாகப் பெருகி ஆத்திரத்தில் கொந்தளித்தன.

''தன் கீழ் வேலை செய்யும் ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் என்ற சுபச் செய்தியைக் கேட்டதும், ஆசீர்வாதம் செய்து மகிழ்ச்சி தெரிவிப்பதைவிட்டு, மனம் நோகவல்லவா பேசுகிறார்கள். இவர்கள் வாய் வார்த்தை பலிக்காது இருக்க வேண்டும். வாழ்விலே, இள வயதிலே தாயை இழந்து வறுமையிலே கொடுமைப்பட்டு, துன்பம் பலவும் அனுபவித்தாகிவிட்டது. இனியாவது சுகமாக இருப்போம் என்று எண்ணி ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கையில் அபசகுனம் போல் இந்த அம்மாள் இப்படியா பேச வேண்டும்?'' என்று எண்ணி, துயரத்திலே அவள் மனம் துடித்தது. கண்களில் பொங்கிய நீரைச் சமாளித்துக் கொண்டு முடிவில் எழுந்திருந்தாள்.

தொண்டையை லேசாகக் கனைத்துக் கொண்டு சிரமப்பட்டு தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''அம்மா, இதுவரை தாங்கள் எனக்குச் செய்த உதவிக்கு மெத்த வந்தனம். இனிமேல், நான் தினசரி இங்கு வந்து எழுத்து வேலை செய்ய முடியாது என்று நினைக்கிறேன். ஆகவே, இன்றுடன் இவ்வேலையினின்றும் விலகிக்கொள்ள எனக்கு அனுமதி அளிக்க வேண்டும்.'' என்றாள்.

அதைப்பேசி முடிக்குமுன், அவளது மூச்சு திணறியது. வார்த்தைகள் தடுமாறின.

கௌரியம்மாள் அருணாவை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ஒரு நிமிஷ நேரம் ஏதும் பேசாது சிலைபோல் நின்றாள். பிறகு லேசாகத் தனக்குள் மெல்லச் சிரித்துக் கொண்டு தோள்களைக் குலுக்கினாள். ''அருணா, நீ இங்கே வேலை செய்ய மனம் உவந்து தானாக வந்தாய். உன்னை ஏற்றுக்கொண்டேன். இப்பொழுது பிடித்தம் இல்லாது போக விரும்புகிறாய். தாராளமாகப் போகலாம். நீ வேலை செய்து தான் ஆக வேண்டும் என்று நான் வற்புறுத்தப் போவதில்லை. உனக்கு இன்றுடன் தரவேண்டிய சம்பள பாக்கியை இருந்து காரியதரிசியிடம் கணக்கிட்டு வாங்கிக் கொண்டு போகலாம்'' என்றாள்.

''சரி'' என்று சிறிது கர்வமாகத் தலையை அசைத்த அருணா, அதிக நேரம் நிற்க விரும்பாதவளாக, விறுக்கென்று அறையைவிட்டு வெளியே வந்தாள்.

கௌரியம்மாள், மேஜைமீது பிரித்து வைத்திருந்த புத்தகத்தைப் படார் என்று ஓசையுடன் மூடினாள். இடையில் செருகியிருந்த பெரிய கைக்குட்டையை உருவி எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டாள். அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக உலாவினாள். பிறகு ஏதோ யோசனை தோன்றியவளாக, அறையிலிருந்து வராந்தாவிற்கு வந்து வெளியே எட்டிப் பார்த்தாள். மாடிப்படிகளில் நிதானமாக இறங்கிப் போய்க் கொண்டிருந்த அருணாவைக் கண்டதும், ஏனோ அவள் மனம் வேதனையில் மூழ்கியது! வராந்தா கைப்பிடிச் சுவரில் சாய்ந்துகொண்டு, ''அருணா!'' என்று கூப்பிட்டாள். திடுக்கிட்ட அருணா, படியில் நின்றபடி நிமிர்ந்து பார்த்தாள்.

''இங்கே வா. ஒரு விஷயம் மறந்துவிட்டேன்'' என்று கௌரியம்மாள் அழைத்தாள். அவளைப் பார்க்கவோ, மீண்டும் அவளிடம் பேசவோ அருணாவிற்கு இது சமயம் கொஞ்சமும் விருப்பம் இருக்கவில்லை. எனினும் மரியாதைக்குக் கட்டுப்பட்டவளாக அவள் திரும்ப அறைக்குள் வந்தாள்.

இரும்பு பீரோவைத் திறந்து மேல் தட்டில் சிறிது நேரம் துழாவிவிட்டு, அவசரமாக ஒரு சிறு தந்தப் பெட்டியை எடுத்தாள் கௌரியம்மாள். பெட்டியைத் தட்டி, கைக்குட்டையால்

துடைத்துவிட்டு அருணா அருகில் வந்து ''இந்தா, நான் ஒரு மு மைசூருக்குச் சென்ற பொழுது இப்பெட்டியை வாங்கி வந் இந்த மாதிரியான சித்திர வேலைப்பாடுகள் கொண்ட பெட்டிகள் என் போன்றவர்களுக்கு ஏதும் பிரயோசனம் கிடையாது. உனக்கு பயன்படலாம். என் ஞாபகமாக இதை வைத்துக்கொள். கல்யாணத்தின்போது நான் வரமுடியாது. எனக்கு பெரிய மனிதர் உறவே பிடிப்பதில்லை. ஆகவே நீ வருந்தி அழைத்தாலு வரமாட்டேன். அதனால் முன்கூட்டியே உனக்கு என் மணப் பரி இதைக் கொடுக்கிறேன், ஏற்றுக்கொள்'' என்று கூறிவிட்டு பெட்டி அவளிடம் நீட்டினாள்.

அதை வாங்கிக் கொண்ட அருணா மெல்லிய குர ''வந்தனம்'' என்றாள். ''எப்பொழுதாவது என் உதவி தே என்றால் நீ மீண்டும் சிறிதும் சங்கோஜமோ ஆயாசமோ கொள்ளா இங்கே வரலாம். உன் போன்ற நல்ல அறிவுள்ள பெண்களுக் என்னால் ஆன உதவியை எப்பொழுதும் செய்யச் சித்தமா இருப்பேன். அதுவே என் கடமை என்று கூட நான் கருதுகிறே என்று முடித்த கௌரியம்மாள், தன் முகத்தை அப்பால் திருப் கொண்டாள்.

''நான் வருகிறேன். உங்கள் அன்பிற்கு மெத்த வந்தனம்'' என் கூறிய அருணா, மிகவும் வேகமாகப் படிகளில் இறங்கி, 'மா திலகம்' ஆபீஸை விட்டு வெளியே வந்தாள். கோபம், வருத் இரக்கம் என்ற பல்வேறு உணர்ச்சிகளும் அவள் உள்ளத் போராடின.

அன்று சாயங்காலம், அவள் தன் வீட்டையடைந்த பொழு வாயிலில் பழனியப்ப கவுண்டரின் கார் காத்து நிற்பதைக் கண்டா ஹாலிலிருந்தபடியே, ஒரு கண்ணால் வெளித் தோட்டத்தை கண்குத்திப் பாம்பு போல் கவனித்துக் கொண்டிருந்த ஜெகதா தோட்டத்திற்குள் அருணா நுழைந்ததும், ஒரே பாய்ச்சலில் அவளை அணுகினாள். ''அருணா! உனக்கு நான் எச்சரிக் வேண்டுமென்றிருந்தேன். அதற்குள்ளாகவே ஆபீஸிற்கு புறப்பட்டுப் போய்விட்டாய். தம்பி சுரேஷ் வந்து உன்னைப் பார்த்து போக, ரொம்ப' நேரமாகக் காத்துக்கிட்டிருக்கு. நேத்தே

சொன்னேனே? 'இனிமேலே அந்த எழுத்து வேலை வேண்டாம். அதற்கு ஒரு முழுக்குப் போட்டு விடு' என்றேனே? நீ இப்படி ஒழிச்ச வேளைக்கு குமாஸ்தா உத்தியோகம் செய்கிறது தம்பிக்கு தெரிஞ்சால் நன்றாகவே இருக்காது. நீ எங்கேயோ சிநேகிதி வீட்டிற்குப் போயிருப்பதாகச் சொல்லி பேச்சுக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். அதனாலே நீயும் அப்படியே சொல்லிவிடு. என் குட்டை உடைத்துவிடாதே!'' என்று அரைக் குரலில் ரகசியமாக எச்சரித்துவிட்டு ஹாலுக்குள் கேட்கும் வண்ணம் குரலை உயர்த்திக் கொண்டு, ''நல்ல பெண்ணு நீ! இப்படியா ஒரு சிநேகிதி வீட்டில் போய் மணிக் கணக்காய் உட்கார்ந்திருப்பாய்? தம்பி வந்து வெகு நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறது!'' என்றாள்.

ஹாலுக்குள் பிரவேசித்த அருணா, அங்கே சோபா ஒன்றில் சாய்ந்து கொண்டிருந்த சுரேஷ்குமாரனைக் கண்டு சங்கோஜத்துடன் புன்முறுவல் செய்தாள். பின்னால் நிழல் போல வந்த ஜெகதா, அருணாவின் களைப்பு நிறைந்த முகத்தைக் கலக்கத்துடன் பார்த்துவிட்டு ஜாடையாக, ''நீ போய்க் காப்பியைக் கலக்கி எடுத்துக் கொண்டுவா. அதுவரை நான் தம்பியோடு பேசிக் கொண்டிருக்கிறேன்'' என்று கூறினாள். அதே சமயம், ''போய் மூஞ்சியைக் கழுவி கொஞ்சம் பவுடர் அப்பிக் கொண்டு வா!'' என்று சுரேஷ் காணாத சமயம், இடது கையால் அபிநயம் செய்து அருணாவிற்கு ஜாடை காட்டினாள்.

பெரியம்மா உத்தரவுப்படியே தன்னை அலங்கரித்துக் கொண்டு தட்டில் காப்பி டம்பளருடன் உள்ளே பிரவேசித்த அருணா, ஹாலில் சுரேஷ்குமாரன் மட்டும் தனியே உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். மேஜைமீது அவள் வைத்துப் போயிருந்த தந்தப் பெட்டியை அவன் கையில் வைத்துப் பரிசோதித்துக் கொண்டிருந்தான்.

''மிகவும் அழகான பெட்டி, இதை இன்று வாங்கினாயா என்ன?'' என்று வினவியபடியே அவன் புன்முறுவல் செய்தான்.

''இல்லை. நான் வேலை செய்து வந்த பத்திரிகை ஆசிரியை கௌரியம்மாள் இதை எனக்குப் பரிசாகக் கொடுத்தார்கள்'' என்று கூறிய அருணா, வெட்கத்துடன் முகம் சிவக்கத் தடுமாறினாள்.

''பரிசா! எதற்கு? உன்னுடைய கட்டுரைகள் எதற்கேனும் பரிசு

துடைத்துவிட்டு அருணா அருகில் வந்து ''இந்தா, நான் ஒரு முறை
மைசூருக்குச் சென்ற பொழுது இப்பெட்டியை வாங்கி வந்தேன்
இந்த மாதிரியான சித்திர வேலைப்பாடுகள் கொண்ட பெட்டிகளா
என் போன்றவர்களுக்கு ஏதும் பிரயோசனம் கிடையாது. உனக்கு இ
பயன்படலாம். என் ஞாபகமாக இதை வைத்துக்கொள். உ
கல்யாணத்தின்போது நான் வரமுடியாது. எனக்கு பெரிய மனிதர்க
உறவே பிடிப்பதில்லை. ஆகவே நீ வருந்தி அழைத்தாலு
வரமாட்டேன். அதனால் முன்கூட்டியே உனக்கு என் மணப் பரிசா
இதைக் கொடுக்கிறேன், ஏற்றுக்கொள்'' என்று கூறிவிட்டு பெட்டியை
அவளிடம் நீட்டினாள்.

அதை வாங்கிக் கொண்ட அருணா மெல்லிய குரலி
''வந்தனம்'' என்றாள். ''எப்பொழுதாவது என் உதவி தேவை
என்றால் நீ மீண்டும் சிறிதும் சங்கோஜமோ ஆயாசமோ கொள்ளாம
இங்கே வரலாம். உன் போன்ற நல்ல அறிவுள்ள பெண்களுக்
என்னால் ஆன உதவியை எப்பொழுதும் செய்யச் சித்தமா
இருப்பேன். அதுவே என் கடமை என்று கூட நான் கருதுகிறேன்''
என்று முடித்த கௌரியம்மாள், தன் முகத்தை அப்பால் திருப்பி
கொண்டாள்.

''நான் வருகிறேன். உங்கள் அன்பிற்கு மெத்த வந்தனம்'' என்
கூறிய அருணா, மிகவும் வேகமாகப் படிகளில் இறங்கி, 'மா
திலகம்' ஆபீஸை விட்டு வெளியே வந்தாள். கோபம், வருத்த
இரக்கம் என்ற பல்வேறு உணர்ச்சிகளும் அவள் உள்ளத்தி
போராடின.

அன்று சாயங்காலம், அவள் தன் வீட்டையடைந்த பொழு
வாயிலில் பழனியப்ப கவுண்டரின் கார் காத்து நிற்பதைக் கண்டா
ஹாலிலிருந்தபடியே, ஒரு கண்ணால் வெளித் தோட்டத்தை
கண்குத்திப் பாம்பு போல் கவனித்துக் கொண்டிருந்த ஜெகதா
தோட்டத்திற்குள் அருணா நுழைந்ததும், ஒரே பாய்ச்சலில் அவளை
அணுகினாள். ''அருணா! உனக்கு நான் எச்சரிக்
வேண்டுமென்றிருந்தேன். அதற்குள்ளாகவே ஆபீஸிற்கு
புறப்பட்டுப் போய்விட்டாய். தம்பி சுரேஷ் வந்து உன்னைப் பார்த்து
போக, ரொம்ப' நேரமாகக் காத்துக்கிட்டிருக்கு. நேத்

சொன்னேனே? 'இனிமேலே அந்த எழுத்து வேலை வேண்டாம்.
அதற்கு ஒரு முழுக்குப் போட்டு விடு' என்றேனே? நீ இப்படி ஒழிச்ச
வேளைக்கு குமாஸ்தா உத்தியோகம் செய்கிறது தம்பிக்கு தெரிஞ்சால்
நன்றாகவே இருக்காது. நீ எங்கேயோ சிநேகிதி வீட்டிற்குப்
போயிருப்பதாகச் சொல்லி பேச்சுக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்.
அதனாலே நீயும் அப்படியே சொல்லிவிடு. என் குட்டை
உடைத்துவிடாதே!'' என்று அரைக் குரலில் ரகசியமாக
எச்சரித்துவிட்டு ஹாலுக்குள் கேட்கும் வண்ணம் குரலை உயர்த்திக்
கொண்டு, ''நல்ல பெண்ணு நீ! இப்படியா ஒரு சிநேகிதி வீட்டில்
போய் மணிக் கணக்காய் உட்கார்ந்திருப்பாய்? தம்பி வந்து வெகு
நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறது!'' என்றாள்.

ஹாலுக்குள் பிரவேசித்த அருணா, அங்கே சோபா ஒன்றில்
சாய்ந்து கொண்டிருந்த சுரேஷ்குமாரனைக் கண்டு சங்கோஜத்துடன்
புன்முறுவல் செய்தாள். பின்னால் நிழல் போல வந்த ஜெகதா,
அருணாவின் களைப்பு நிறைந்த முகத்தைக் கலக்கத்துடன்
பார்துவிட்டு ஜாடையாக, ''நீ போய்க் காப்பியைக் கலக்கி எடுத்துக்
கொண்டுவா. அதுவரை நான் தம்பியோடு பேசிக்
கொண்டிருக்கிறேன்'' என்று கூறினாள். அதே சமயம், ''போய்
மூஞ்சியைக் கழுவி கொஞ்சம் பவுடர் அப்பிக் கொண்டு வா!'' என்று
சுரேஷ் காணாத சமயம், இடது கையால் அபிநயம் செய்து
அருணாவிற்கு ஜாடை காட்டினாள்.

பெரியம்மா உத்தரவுப்படியே தன்னை அலங்கரித்துக் கொண்டு
தட்டில் காப்பி டம்ளருடன் உள்ளே பிரவேசித்த அருணா, ஹாலில்
சுரேஷ்குமாரன் மட்டும் தனியே உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.
மேஜைமீது அவள் வைத்துப் போயிருந்த தந்தப் பெட்டியை அவன்
கையில் வைத்துப் பரிசோதித்துக் கொண்டிருந்தான்.

''மிகவும் அழகான பெட்டி. இதை இன்று வாங்கினாயா
என்ன?'' என்று வினவியபடியே அவன் புன்முறுவல் செய்தான்.

''இல்லை. நான் வேலை செய்து வந்த பத்திரிகை ஆசிரியை
கௌரியம்மாள் இதை எனக்குப் பரிசாகக் கொடுத்தார்கள்'' என்று
கூறிய அருணா, வெட்கத்துடன் முகம் சிவக்கத் தடுமாறினாள்.

''பரிசா! எதற்கு? உன்னுடைய கட்டுரைகள் எதற்கேனும் பரிசு

கிடைத்ததா?'' என்று வியப்புடன் கேட்ட சுரேஷ்குமாரன் அவள் கொண்டு வந்து வைத்த காப்பி டம்ளர்களில் ஒன்றை எடுத்துக் கொண்டு பருகத் துவங்கினான்.

''இல்லை'' என்று தயங்கிய அருணா, ''எனக்கு மணப்பரிசாக அவர்கள் இந்தப் பெட்டியைக் கொடுத்தார்கள். நடக்கப் போகும் நமது விவாகம் ரகசியமாக இருப்பதாக நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம் அல்லவா? எப்படியோ அது கௌரியம்மாள் ...தில் வந்து விழுந்துவிட்டிருக்கிறது. அவர்கள் அதைப்பற்றி என்னை ...சாரித்தார்கள்'' என்றாள் மிகவும் சங்கோஜத்துடன்.

''நானும் உன்னிடம் இதைப் பற்றித்தான் சொல்ல இருந்தேன். ...ன்று தினம் நான் சந்தித்த என் நண்பர்கள் எல்லோரும் என் கல்யாணத்தைப்பற்றி விசாரித்தார்கள். நாம் தீர்மானித்து ஒரு வார காலம்கூட ஆகவில்லை. அதற்குள் ஊர் முழுவதும் விஷயம் புயல் போல் பரவிவிட்டிருக்கிறது'' என்று கூறிவிட்டுச் சிரித்தான். லஜ்ஜையுடன் கீழே தலையைக் குனிந்து கொண்டு மௌனமாக இருந்தாள் அருணா.

சுரேஷ்குமாரன் தானே தொடர்ந்து பேச ஆரம்பித்தான். ''அருணா! நம் விவாகத்தைப்பற்றி அம்மாவுக்குப் பூரண திருப்தி என்று கூற முடியாது. அவர்கள் மனநிலையை நான் நன்றாக அறிவேன். வேறு எவ்வளவோ பெரிய இடத்தில் பெண் கிடைக்க சந்தர்ப்பம் இருந்தும் காதல் என்று நான் பிடிவாதம் செய்து உன்னை மணக்க நிச்சயித்துக் கொண்டுவிட்டதாக அவர்களுக்கு கொஞ்சம் வருத்தமாக இருக்கிறது. ஆனால் நாளடைவில் அது சரியாகிவிடும். நான் நாளை இரவு வண்டிக்கு பட்டிணத்திற்குப் போகிறேன். இந்த ஒரு வருஷம் படித்து முடித்த பின்புதான் நாம் திருமணம் செய்து கொள்ளலாம் என்பது அப்பாவின் அபிப்பிராயம். அவருக்கு நம் திருமணத்தில் சிறிதும் ஆக்ஷேபணை இல்லை. ஆகவே, அவர் இஷ்டப்படி நடப்பதுதான் சிறந்தது. எனக்கு இந்த ஒரு வருஷ காலம் எப்படித்தான் கழியுமோ என்று மிகவும் சுமையாகத் தெரிகின்றது. லீவுக்கு ஒவ்வொரு முறையும் நான் வருவேன் என்றாலும் இடையே நான் போடும் கடிதங்களுக்கு நீ பதில் எழுதிக் கொண்டிருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு சட்டைப் பையில் சொருகி வைத்திருந்த ஒரு அழகிய பேனாவை எடுத்தான். ''கடிதம் எழுத வேண்டும் என்று உன்னை

மறக்காது ஞாபகப்படுத்த நான் அளிக்கும் பரிசு இது'' என்று கூறி அந்தப் பெட்டியைத் திறந்து அதற்குள் அந்தப் பேனாவை வைத்து, அவளிடம் கொடுத்தான்.

தோட்டத்தினின்று வந்த ஜெகதா ஏதோ நினைத்துக் கொண்டவள்போல், ''அருணா! இன்னிக்கு தபாலில் உன் அண்ணன் கடிதம் எழுதியிருக்கு. மீதி லீவு நாட்களுக்காவது ஒரு முறை நீ ஊர் வந்து போகவேண்டும் என்றும் உன்னை அனுப்பி வைத்தால் நல்லது என்றும் எழுதியிருக்கு. உன் பெயருக்கும் ஒரு கடிதம் போட்டிருக்கு. அதோ அந்த அலமாரித் தட்டில் மேல் பக்கத்தில் வைத்திருக்கிறேன். எடுத்துப் படிச்சுக்கோ!'' என்று கூறிவிட்டு அருகிலிருந்த ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள். 'என்னதான் காதல் என்றாலும் கல்யாணம் முடியும்வரை, கொஞ்சம் இருவரையும் தன் கண்காணிப்பில் கவனித்துக் கொள்வதுதான் முறையாகும்' என்று எண்ணிய ஜெகதா, ஹாலுக்குள் சிறிது நேரம் இருப்பதும், பிறகு சிறிது நேரம் வெளியே சென்று அவர்கள் தனியாகப் பேச சந்தர்ப்பம் கொடுப்பதும் பிறகு அதிக நேரம் வெளியே தாமதிக்காது தனது கட்டுக்காவலை மேற்கொள்வதுமாகக் கல்யாணத்தில் இடையிலிருந்து நடத்தி வைப்பவர் செய்ய வேண்டிய சாகஸங்கள் பலவற்றையும் திறம்படச் செய்து கொண்டிருந்தாள்.

அருணா தன் பெயருக்கு வந்த கடிதத்தைப் பிரித்துப் படித்தாள்.

''அன்புள்ள அருணாவுக்கு அண்ணன் எழுதிக் கொண்டது.

உன் திருமணச் செய்தியைப் பெரியம்மா அவர்கள் எழுதியிருந்தார்கள். கேட்டு எல்லோரும் மிகவும் ஆனந்தமும் பெருமையும் அடைகிறோம். பெரிய மனிதர் வீட்டு மருமகளாகப் போன பின்பு உன்னை அடிக்கடி இந்தக் குக்கிராமத்திற்கு அழைக்க முடியுமோ என்னவோ? ஆகவே, இந்த வருஷம் கலாசாலை திறக்குமுன்பு, பாக்கியிருக்கும் கொஞ்ச விடுமுறை நாட்களை எங்களுடன் கிராமத்தில் கழிக்க வேண்டும் என்று நானும் இந்திராணியும் ஒருமுகமாக அபிப்பிரர்யப்படுகிறோம். நீ வருவாய் என்று எதிர்பார்த்து இந்திராணி அவசரமாக உனக்குப் பிடித்த பலகாரங்களைத்

தயார் செய்து கொண்டிருக்கிறாள். அப்பாவும் உன் வருகையை எதிர்பார்க்கிறார். மற்றவை நேரில். எங்கள் வேண்டுகோளை நிறைவேற்றுவாய் என்று நம்புகிறோம்.

உன் அன்புள்ள அண்ணன்,
ஆனந்தன்.

கடிதத்தைப் படித்து முடித்ததும் அதை சுரேஷ்குமாரனிடம் கொடுத்தாள். அதைப் படித்த அவன், "சரி, இனி உன் கிராமத்திலும் நம் விவாக விஷயம் பரவிவிடும். சில விஷயங்கள் எவ்வளவுதான் நாம் தடுத்தாலும், நம்மையறியாமலே, பிரபல்யம் அடைந்துவிடுகின்றன" என்று கூறிவிட்டு நகைத்தான். கடிதத்தைத் திருப்பி அவளிடம் கொடுத்துவிட்டு, "எனக்கு இது ஒரு நல்ல யோசனையாகவே தோன்றுகிறது. நாளை இரவு நான் ஊருக்குக் கிளம்பியதும், நீயும் இங்கிருந்து உன் கிராமத்திற்குப் புறப்பட்டுப் போய்விடு. சிலநாட்கள் நாம் இருவரும் வெளியூர்களில் இருப்பது இது சமயம் மிகவும் நல்லது" என்றான்.

"அதுதான் தம்பி நானும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஒரு மாசம் கிராமத்தில் போய் அருணா தங்கியிருக்கட்டும் என்பது என்னுடைய நோக்கம். ஒரு கண் போல ஒரு கண் இருக்காது. கல்யாண விஷயம் நாலு பேர்கள் காதில் பட்டால், நாலு பேர் நாலும் பேசுவார்கள். திருஷ்டி பட்டுவிட்டால் பிறகு பெரிய கஷ்டமல்லவா வந்து சேரும்?" என்று பிரசங்கம் செய்தாள் ஜெகதா. கொஞ்சநேரம் பொது விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, சுரேஷ்குமாரன் பிரியா விடை பெற்றுக்கொண்டு சென்றான்.

அன்று இரவு போஜனத்திற்குப் பிறகு தன் அறையில் மேஜையருகே வந்து உட்கார்ந்த அருணா, அண்ணனுக்கு கடிதம் எழுத நினைத்தாள். காகிதத்தை எடுத்து வைத்துக் கொண்டு, மேஜை மீதிருந்த தந்தப் பெட்டியைத் திறந்து அந்தப் பேனாவை எடுத்தாள். முதல் முதலாக அந்த அழகிய பேனாவில் அண்ணனுக்கு எழுத வேண்டுமென்ற ஆவலுடன் மூடியைத் திறந்து இங்கியை உதறிவிட்டுக் கையில் எடுத்தாள். எதிர்பாராது திடீரென கையிலிருந்து வழுக்கிக்கொண்டு அது தரையில் பொத்தென்ற சப்தத்துடன்

விழுந்துவிட்டது. நெஞ்சம் துணுக்குற்ற அருணா, பதற்றத்துடன் எழுந்து குனிந்து, தரையில் கிடந்த பேனாவை எடுத்து வெளிச்சத்தில் உற்று நோக்கினாள். சுரேஷ்குமாரன் அன்புக் காணிக்கையாக அளித்திருந்த அந்தப் பேனாவின் முனை இரண்டாகப் பிளந்து ஒடிந்து வீணாகிவிட்டிருந்தது.

பேனாவை மேஜைமீது வைத்துவிட்டு, தலையை தன் கைகளால் தாங்கிக் கொண்டு, நாற்காலியில் அமர்ந்த அருணாவினால் துயரத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவள் வாழ்விலே வரவிருந்த பெருத்த அபாயத்தை அந்தச் சிறு விபத்து எச்சரிப்பது போல் அவளுக்குத் தோன்றவே அவள், கட்டுப்படுத்த முடியாது, பச்சிளங் குழந்தை போல தேம்பித்தேம்பி அழுதாள்.

32

ஒரு வருஷ காலத்திற்குப் பின்னர் அன்று காலை மீண்டும் அருணா காரிகுளத்து ஸ்டேஷனில் இறங்கினாள். தன் வரவிற்காக பிளாட்பாரத்தில் அண்ணன் ஆனந்தன் தயாராகக் காத்திருப்பதைக் கண்டாள். உண்மையிலேயே கடந்த முறை அவள் பிறந்த ஊருக்குத் திரும்பி வந்ததற்கும் இம்முறை வருவதற்கும் இடையே மிகுந்த வித்தியாசம் இருந்தது.

முதல் தடவை அவள் பெரியம்மா தயவிலே வாழ்ந்து வந்த ஏழை அனாதைப் பெண்ணாக வந்திருந்தாள். இப்பொழுதோ, பழனியப்பக் கவுண்டரின் வருங்கால மருமகள் என்ற ஹோதாவிலே அவளது அந்தஸ்து மிகவும் அபாரமாக உயர்ந்து விட்டிருந்தது.

ஜெகதா முன்போல் அசட்டையாக இராமல், அருணாவின் வரவை முன்கூட்டியே அவள் அண்ணனுக்குத் தெரிவித்து, ஸ்டேஷனுக்கு வந்து அழைத்துப்போக, தந்தி கொடுத்திருந்தாள். மூன்றாம் வகுப்பிலே பிரயாணம் செய்வது இனி கொஞ்சமும் நன்றாக இராது என யோசித்து செலவையும் பாராமல், இரண்டாம் வகுப்பிலே அவளை ஊருக்கு அனுப்பியிருந்தாள். அத்துடன்

நிற்காது, அவளது விலை உயர்ந்த ஆடை ஆபரணங்களையும், அருணா கிராமத்தில் தங்கி இருக்கும் நாட்களில் உபயோகித்துக் கொள்ள மனம் உவந்து கொடுத்தனுப்பியிருந்தாள்.

ஆகவே, கையில் ஒரு சிறு பெட்டியுடன், கிழிந்த பாவாடையும், அழுக்குத் தாவணியுமாக வண்டியினின்று இறங்காது அருணா புதுப் பட்டுப் புடவை சலசலக்க, பெரிய பண்ணையார் வீட்டுப் பெண்களை மிஞ்சும் தோரணையில் வெள்ளிக் கூஜா, படுக்கை பெட்டிகள் சகிதம் உயர்ந்த வகுப்புப் பெட்டியினின்று இறங்கியது ஆனந்தனுக்கு வியப்பையே அளித்தது.

''அருணா! ஒரு வருஷத்திற்குள் அடையாளம் தெரியாதபடி மாறிவிட்டிருக்கிறாயே! பெரிய மனிதர்வீட்டு மருமகப் பெண்ணல்லவா?'' என்று பரிகாசமாக வினவியவண்ணம், அருகில் விரைந்து சென்று தங்கை கையில் பிடித்திருந்த வெள்ளிக் கூஜாவை வாங்கிக் கொண்டான் ஆனந்தன். பெட்டி படுக்கையை ஆள் சுமந்துவர, அண்ணனும் தங்கையும் ஸ்டேஷனுக்கு வெளியே வந்தனர். அங்கே தயாராக காத்து நின்ற வில் வண்டிக்குள் சாமான்களை ஏற்றிவிட்டுக் கூட வந்த ஆள் வண்டியோட்டி ஆசனத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

''வண்டி நம்முடையதா? புதிதாக இருக்கிறதே?'' என்று வினவிய அருணா, வண்டிக்குள் ஏறத் திரும்பினாள். அவள் கேள்விக்குப் பதிலளிக்க வாயைத் திறந்த ஆனந்தன் தன் பெயரைச் சொல்லி யாரோ உரத்துக் கூவியழைப்பதைக் கேட்டு, சப்தம் வந்த திசையை நோக்கினான்.

அது சமயம் ஸ்டேஷனை நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு பெரிய வில் வண்டி அவர்களது அருகே வந்து நின்றது. ''எங்கேயோ பராக்குப் பார்க்கிறாயே? நான்தான் கூப்பிட்டேன். ஆமாம், இன்னமும் ஆறரை மணி 'பாசஞ்சர்' போய்விடவில்லையே? இந்தப் பாழாய்ப்போன கெடிகாரம் திடீரென்று நின்றுவிட்டது. இதை நம்பி நான் இன்று காலை அதிக நேரம் தூங்கிவிட்டேன். அவசரமாக எனக்குக் கருத்திட்டான்குடி வரை போய் வரவேண்டியிருக்கிறது'' என்று உரத்த குரலில் பேசிய வண்ணம் வண்டியினின்று இறங்கினான் ஒரு ஆடவன்.

அவனைக் கண்டதும் அருணா ஒருகணம் திடுக்கிட்டுப் போனாள். ஒரு வருஷ காலத்தில் சிதம்பரம் இன்னமும் உயரமாகவும் பருமனாகவும் வளர்ந்து, தோற்றத்திலே மிகவும் மாறிவிட்டிருந்தான்.

''நீ எங்கே காலை வேளையில் இந்த பக்கம் வந்தாயாம்?'' என்று வினவிய சிதம்பரம், வண்டியின் மறுபக்கத்தில் மறைவிலே நின்று கொண்டிருந்த அருணாவைக் கண்டதும், ஆச்சரியத்தில் மௌனமாகிவிட்டான். வியப்பும், மகிழ்ச்சியும் அவன் முகத்திலே ஒருங்கே பிரதிபலித்தன. சில விநாடிகள் பொறுத்து ''ஆனந்தா! உன் சகோதரி ஊரிலிருந்து வரப்போகும் விஷயத்தை நீ எனக்குத் தெரிவிக்கவே இல்லையே?'' என்று மனத்தாங்கலுடன் கேட்டான்.

''உனக்கு மிகவும் ஆச்சரியத்தை உண்டாக்க வேண்டும் என்றுதான் தெரிவிக்கவில்லை. நீ மிகவும் வியப்படையக் கூடிய வேறு ஒரு முக்கிய விஷயம்கூட உனக்கு நான் சொல்லப் போகிறேன். இப்போது நாம் பேசிக்கொண்டு நின்றோமானால் ஆறரைமணி 'பாஸஞ்ரை' நீ தவறவிட்டு விடுவாய். வண்டி வர இன்னும் நான்கு நிமிஷங்கள்கூட இல்லை. போய்விட்டு மாலையில் வீட்டிற்கு வா. பிறகு சாவகாசமாகப் பேசிக் கொள்வோம்'' என்று கூறிவிட்டுப் புன்முறுவல் செய்தான்.

அருணாவை வைத்த விழி வாங்காது, வியப்புடன் கவனித்துக் கொண்டு மெய்மறந்து நின்ற சிதம்பரம் துணுக்குற்று, தன் உணர்வு எய்தியவனாக ஆனந்தன் பக்கம் திரும்பினான். ''சரி, சாயங்காலம் பேசிக் கொள்வோம்'' என்று விடை பெற்றுக் கொண்டான்! ''அருணா! சுகந்தானேயம்மா! என்னை நினைவிருக்கிறதல்லவா?'' என்று விளையாட்டாகக் கேட்டு விட்டு, ஸ்டேஷனை நோக்கி விரைந்து சென்று விட்டான்.

வண்டி பாதி வழி செல்லும்மட்டும் அண்ணனும் தங்கை மௌனமாக இருந்தார்கள். வெகுநேரம் அருணாவிற்குத் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ''அண்ணா! அடுத்தவீட்டு சிதம்பரமும் நீங்களும் நெருங்கிய நண்பர்களாகி விட்டீர்கள் போலிருக்கிறதே?'' என்று வியப்புடன் வினவினாள்.

அவளுக்கு நேரிடையாகச் சட்டென ஆனந்தன் பதில் அளிக்கவில்லை. ''அருணா! இந்த ஒரு வருஷ காலத்தில் நம் அனைவர் வாழ்க்கையிலும் நினைத்துப் பார்க்க முடியாத பலவித விசித்திர சம்பவங்கள் நடந்து விட்டிருக்கின்றன. பழனியப்ப கவுண்டரின் மகனை மணந்து, விரைவில் அவர்கள் வீட்டு மருமகளாகும் பெரும் பாக்கியம் உன்னைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறது. அதைப்போல் இங்கே எங்களுக்கும் சுபிக்ஷம் என்பது வலுவிலே அடுத்த வீட்டு சிதம்பரம் மூலம், தானே நட்புரிமை பாராட்டிக் கொண்டு வந்துவிட்டிருக்கிறது. அப்பாவின் குணம் உனக்குத் தெரிந்ததுதானே. ஆரம்பத்திலே, அவர் சிதம்பரத்திடம் கடுமையான பகைமை பாராட்டி, நம் இரு வீடுகளையும் பிரித்து இடிந்த சுவரைப் புதுப்பிக்கச் செய்தார். 'சிதம்பரத்துடன் பேசக் கூடாது, அவனைப் பார்க்கக்கூடாது' என்றெல்லாம் எனக்குக் கடும் உத்தரவுகள் போட்டார். ஆனால் அப்பாவின் கடுமையான போக்கு தெய்வத்திற்கு கூடப் பொறுக்கவில்லை போலிருக்கிறது. நீ ஊருக்குப் போன அடுத்த மாதம் இங்கே ஒரு பெருமழை பெய்தது. அதில் அப்பா சிரமப்பட்டு எழுப்பிய இடைச்சுவர் பொத்தெனச் சரிந்து விழுந்து விட்டது'' என்றான்.

''இடைச்சுவர் இடிந்ததும் இரு வீடுகளுக்கும் இடையே சிநேகிதம் பரஸ்பரம் ஒன்று கலந்தது போலிருக்கிறது!'' என்று கண்களைச் சிமிட்டிவிட்டு அருணா சிரித்தாள்.

''சிதம்பரம், கூட்டுறவிலே பெரும் பால் பண்ணை ஒன்றை ஆரம்பித்தான். வாக்கு சாதுர்யத்தினாலும், சாமர்த்தியத்தினாலும் ஊரில் பலரைத் தன் பால் பண்ணையில் பாகஸ்தர்களாகச் சேர்த்து ஆடம்பரமாகப் பால் பண்ணை ஆரம்பித்து விட்டான். முதலில் அவன் வந்து கேட்ட பொழுது அப்பா அதில் சேர மறுத்து, மிகவும் கடுமையாக அவனைப் பேசி அனுப்பிவிட்டார். பால் பண்ணை மிகவும் அமோகமாக நடக்க ஆரம்பித்தது. சந்திரனுக்கு முன் மின்மினிபோல், கூட்டுறவு பால் பண்ணையுடன் நம் பால் வியாபாரம் போட்டியிட முடியவில்லை. வியாபாரம் படுத்து விடவே, நிலமை மிகவும் பயங்கரமாக மாறிவிட்டது. அப்பா சில மாதங்களில் தானே வழிக்கு வந்துவிட்டார். தானே சிதம்பரத்திடம் வலுவில் சென்று தன்னையும் 'பால் பண்ணை கூட்டுறவு சங்க'த்தில் சேர்த்துக்

கொள்ளும்படி கேட்டார்'' என்று ஆனந்தன் விவரிக்குமுன், அருணா உற்சாகத்துடன் குறுக்கிட்டாள்.

''அப்படியென்றால் என் ஊகம் சரியானதுதான். அடுத்த வீட்டிற்கும் நமக்கும் இப்பொழுது ஒற்றுமை நிலவியிருக்கிறது. சிதம்பரம் பேசிய தோரணையிலேயே நீங்கள் நெருங்கிய நண்பர்களாகிவிட்டீர்கள் என்று நான் உணர்ந்து கொண்டேன். இந்தச் சங்கதியைக் கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது அண்ணா; வாழ்க்கையில் நாம் அண்டை அயலாருடன் ஒத்துப்போய் சிநேகித பாவத்திலே வாழ முயற்சிப்பதுதான் முறையாகும். இனி நான் பயமின்றி அடுத்த வீட்டு அம்மாவிடம் சென்று பேசி வரலாம் அல்லவா?'' என்று கேட்டுவிட்டு அருணா மெல்ல நகைத்தாள்.

''நீ போக வேண்டிய அவசியமே கிடையாது. பொழுது விடியாமல் இருந்தாலும் இருக்கும். அந்தம்மாள் நம் வீட்டிற்கு தினமும் ஒரு முறை வந்து போவது தவறாது. இதில் ஒரு சிறு ரகஸ்யம் உனக்குச் சொல்ல விரும்புகிறேன். சிதம்பரத்தின் தாயாருக்கு இந்திராணி மீது தனியானதொரு அபிமானம் ஏற்பட்டிருக்கிறது. தனக்குத் தெரிந்த சமையல், தையல் எல்லாம் அவளுக்கு சதா போதித்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்று பெருமையாகக் கூறிய ஆனந்தன், திடீரென்று குரலைத் தாழ்த்தி தங்கையின் அருகில் நெருங்கி, ''நான் நினைக்கிறேன் சிதம்பரத்திற்கு இந்திராணியைக் கட்டிக்கொள்ள அந்தம்மாவுக்கு மெத்த விருப்பம் இருக்கிறதுபோல் காண்கிறது. அப்பா சம்மதிப்பாரா என்று கொஞ்சம் தயங்கினார்கள் போலிருக்கிறது. என்னைக் கேட்டால், நான் அந்த சம்பந்தம் கிடைக்கக்கூடாத பெரிய அதிர்ஷ்டம் என்றுதான் சொல்வேன். சிதம்பரம் பார்வைக்கு நிறத்தில் சற்றுக் கறுப்பு. ஆனால் குணத்தில் தங்கக் கம்பி. இந்திராணியைக் கட்டிக் கொள்ள ஆசைப்படுவதாக அவன் ஒரு வார்த்தை கேட்கட்டும் என்று காத்திருக்கிறேன். கேட்டால், எப்படியோ அப்பாவிடம் பேசி சமாதானம் செய்து ஒப்புக்கொள்ளச் செய்து விடுவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது. சிதம்பரம் இந்திராணிக்கு மிகவும் பொருத்தமான கணவன் என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?'' என்று வினவினான் .

அருணாவின் முகம் திடீரென களை இழந்து வெளிறடைந்தது.

சொல்ல முடியாத பெருந் திகிலில் அவள் நெஞ்சு படைத்தது.

''சிதம்பரத்திற்கு அக்காவைக் கட்டிக் கொள்ள விருப்பம் இருக்கலாம். ஆனால் அக்காவுக்கும் விருப்பம் இருக்க வேண்டாமா? அப்பாவும் நீங்களும் நிச்சயித்து விட்டால் போதுமா? அக்காவின் சம்மதமும் வேண்டாமா?'' என்று சாதுர்யமாகக் கேட்டாள் மெல்லிய குரலில்.

''ஏன்? இந்திராணி சிதம்பரத்தைக் கட்டிக் கொள்ள மறுப்பாள் என நினைக்கிறாயா? உன்னைப்போல் அவள் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்தால் ஒரு சமயம் அவள் மறுக்க சந்தர்ப்பம் இருக்கலாம். நான் கூறுவது உனக்கு விளங்குகிறதென நினைக்கிறேன். கலாசாலை மாணவியாக இருந்தால் தன்னுடன் படித்தவரிடமோ, அல்லது நெருங்கிப் பழகும் நண்பர் வீட்டில் உள்ள எவர் மீதேனுமோ உன் போல் அன்பு கொள்ளக்கூடும். இந்திராணி கிராமத்திலே வளர்ந்த பட்டிக்காட்டுப் பெண். அதனால் அப்பாவும் அண்ணனும் பார்த்து முடிக்கும் மணமகனை விருப்பமுடன் ஏற்றுக் கொள்வாள் என்று நினைக்கிறேன். அடுத்த வீட்டுடன் நமக்கு ஏற்பட்டிருக்கும் நட்பு நீடித்திருக்க இந்த விவாகம் உதவும் என நான் பூரணமாக நம்புகிறேன்'' என்றான் ஆனந்தன் பிடிவாதமாக.

''விவாகத்தினால் நட்பு நீடிக்கும் என்பதைக் கேட்க எனக்குச் சிரிப்பு வருகிறது. அண்ணா, உண்மையைச் சொல்லப் போனால் நண்பர்கள் உறவினர்கள் இடையே விவாக பந்தம்தான் பெரிய பிளவை உண்டாக்குகிறது என்று நான் நினைக்கிறேன். மேலும், அண்ணா! உங்கள் விவாதம் தவறு. காதல் என்பது ஏற்படாவிட்டாலும், ஒரு பெண்ணுக்குத் தனக்கு வரப்போகும் கணவன் இப்படிப் பட்டவனாக இருக்க வேண்டும் என்ற லட்சியம் ஒன்று இல்லாமலா போய்விடும்? இந்திராணி மனத்தில் தன் கணவரைப் பற்றி எந்தவிதமான லட்சியங்கள் கொண்டிருக்கிறாளோ, யார் கண்டது?'' என்றாள்.

''இந்திராணி மனத்திலே இதுபற்றி ஏதேனும் லட்சியங்கள் இருந்தால், அதற்கெல்லாம் பொருத்தமானவன் சிதம்பரம்தான் என்று நான் உறுதியாகக் கூறுவேன். ஏனெனில் சிதம்பரத்தைப் போன்ற ஒரு லட்சிய மனிதன் இந்தப் பாரத கண்ட முழுவதும் சல்லடை போட்டுத்

தேடினாலும் கிடைக்கக்கூடியவன் அல்ல. படிப்பு, அடக்கம், பதவி, வாக்குவன்மை என்று பல நற்குணங்களும் ஒருங்கே பெற்றவன்!'' என்று மிகவும் உணர்ச்சிவசத்தில் ஆனந்தன் பேசிக்கொண்டே போனான்.

''நீங்கள் புகழும் தோரணையைப் பார்த்தால், ஏதேது நீங்கள் ஒரு பெண்ணாக இருந்தால் 'சிதம்பரத்தைத்தான் மணந்து கொள்வேன்' என்று ஒற்றைக் காலால் தவம் செய்வீர்கள்போல் தோன்றுகிறதே?'' என்று கூறிவிட்டுக் கேலியாக நகைத்த அருணா, ''அண்ணா வீடு வந்துவிட்டது போலிருக்கிறது. நம் விவாதம் இத்துடன் நிற்க வேண்டியதுதான்'' என்றாள்.

வண்டியினின்று இறங்கிய அருணா சற்றுத் தயக்கத்துடன் கூடத்திற்குள் மெல்ல நுழைந்தாள். முற்றத்து ஓரத்தில் கிடந்த பெஞ்சிமீது உட்கார்ந்திருந்த சதாசிவத்தைக் கண்டதும், பயத்தினால் அவளது கால்கள் தள்ளாடின. 'என்ன சொல்வாரோ?' என்ற அச்சத்துடன் கூஜாவை கீழே வைத்துவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டு நின்றாள்.

''வெள்ளிக் கூஜாவா? பணக்கார வீட்டு மருமகள் அல்லவா? அதற்கேற்ற ஆடம்பரமெல்லாம் இருக்க வேண்டாமா?'' என்று தனக்குள்ளே பேசுகிறவன்போல் தாழ்ந்த குரலில் கூறிய சதாசிவம், ஏளனமாக நகைத்தான். கொல் கொல் என்று நாலைந்து முறை இருமிவிட்டு, ''பெரியம்மா வீட்டில் படிக்கப் போனதற்குப் பெரிய மனிதர் வீட்டு மருமகளாகும் பாக்கியம் கிட்டியது. அதுவரை நான் பெரும் அதிர்ஷ்டக்காரன்தான். அதிர்ஷ்டம் இனி யாருக்கு வந்தென்ன, வராவிட்டால் என்ன? என் காலம் முக்காலும் ஓடிவிட்டது. எப்படியோ நீங்கள் ஒவ்வொருவரும் குடும்பத்தைவிட்டு வெளியேறினால் சரி'' என்றான் விரக்தியாக.

வீட்டிற்குள் நுழைந்ததும், தந்தை அளித்த இவ்வரவேற்பு, அருணாவிற்கு மிக்க வருத்தத்தைக் கொடுத்தது. கூடத்திலே அதிக நேரம் நிற்க மனம் கூசியவளாக, சமையலறையை நோக்கி விரைந்தாள். காலை சமையலுக்கு காய்கறி நறுக்கிக் கொண்டிருந்த இந்திராணி தங்கையைக் கண்டதும் பாய்ந்தோடி வந்து தழுவிக்

கொண்டாள். தங்கையின் கண்களில் கசிந்த கண்ணீரைக் கண்ட அக்கா, ''பைத்தியம்! அப்பாவின் சுபாவம் தெரிந்த கதைதானே? அ... பேசியது அனைத்தும் என் காதில் விழுந்தது. விட்டுத் தள்ளு. வ... ஆகியும் மனிதருக்கு விவேகம் என்பதே இல்லை. ... சந்தோஷப்பட்டாலும், சந்தோஷப்படா விட்டாலும், உன் வி... விஷயத்தைக் கேட்டதும் நான் ஆனந்தத்தில் பூரித்துப் போய்விட்டேன்'' என்று கூறிய இந்திராணி, சகோதரியை அன்புடன் அணைத்துக் கொண்டாள்.

சமையலறையைச் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு மிகவும் ஆச்சரியத்துடன், ''அக்கா! முன்பெல்லாம் இருள் அடைந்து கிடக்கும் இந்த அறை இப்பொழுது மிகவும் வெளிச்சமாகக் காண்கிறதே'' என்றாள் அருணா.

''இந்த அறை மட்டும் என்ன, வீடு முழுவதுமே முன்னை வி... இப்பொழுது பிரகாசமாக மாறிவிட்டிருக்கிறது. அதற்குக் காரணம் அடுத்த வீட்டு அம்மாதான். அடுப்புக்கு மேலே ஒரு ஜன்னல் கட்டாயம் வைக்கவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தியதில் அண்ணா இந்த ஜன்னலை வைத்துக் கொடுத்தார். இந்த யோசனை முன்னாலேயே இல்லாததனால் இவ்வளவு நாட்களாகப் புகையிலும் இருட்டிலும் இங்கே தடுமாறிக் கொண்டிருந்தேன். சௌந்தரம்மாள் சிநேகிதத்தினால், நான் பல நன்மைகளை அடைந்திருக்கிறேன் அருணா! அந்தம்மா எவ்வளவு சுவையாகச் சமைக்கிறார்கள் தெரியுமா? இன்று சாயங்காலம் ஒரு புதுதினுசு வடை சுட எனக்குச் சொல்லிக் கொடுக்க இங்கே வரப் போகிறார்கள். நேற்று தினம் உனக்காக அவர்கள் இங்கே வந்து, முறுக்குச் செய்ய எனக்கு உதவினார்கள். சரி, பல் விளக்கி விட்டுவா. காப்பி, பலகாரம் தயாராக வைத்திருக்கிறேன்'' என்றாள் இந்திராணி.

''அக்கா! ஒன்று கேட்கிறேன். கோபித்துக் கொள்ளாதீர்கள். ஒரு சமயம் நான் அடுத்த வீட்டிற்குச் சென்றபொழுது என்னை அதற்காகக் கடிந்து கொண்டீர்களே, ஞாபகம் இருக்கிறதா?'' என்று அருணா பரிகாசமாகக் கேட்டாள்.

''ஞாபகம் இல்லாமல் என்ன? அப்பொழுது நான் மிகவும்

குறுகிய மனப்பான்மையுடைய அறிவற்ற பெண்ணாக இருந்தேன். சௌந்தரம்மாளிடம் நெருங்கிப் பழகிய பின்புதான் அவர்கள் குணம் எனக்குத் தெரிய வந்தது. என் அறிவு விசாலம் அடைந்தது. மனப்பான்மை பெருகிற்று. அவர்கள் நிலைமையில் உள்ள தாழ்மை இப்பொழுது என் கண்களுக்குப் படவேயில்லை. நான் மட்டும் என்ன? இந்த ஊரில் உள்ள பெண்கள் அனைவரும் சௌந்தரம்மாள் மீது உயிராக இருக்கிறார்கள். எங்கே போனாலும் அவர்களுக்கு உபசாரம் நடக்கிறது. 'எங்கள் வீட்டிற்கு வாருங்கள்' என்று ஒவ்வொருவரும் அவர்களை வருந்தி அழைக்கிறார்கள். அந்தம்மாளிடம் அவ்வளவு நல்ல குணம் இருக்கிறது'' என்று இந்திராணி முடித்தாள்.

''அண்ணனும் தங்கையுமாக அடுத்த வீட்டவர்களுக்கு நற்சாக்ஷிப் பத்திரம் வழங்கி விட்டீர்கள். பேஷ்!'' என்று கூறிச் சிரித்த அருணா. மேலே வேலைகளைக் கவனிக்கத் தோட்டத்திற்குச் சென்றாள்.

சூரியன் அஸ்தமிக்கத் தொடங்கியதை உணர்ந்த இந்திராணி, ஹரிக்கேன் விளக்கைப் பொருத்திக் கொண்டு வந்து கூடத்துத் தரைமீது வைத்தாள். அவளுக்கு உதவியாக யந்திரத்தில் உளுத்தம் பருப்பைப் போட்டு அரைத்துக் கொண்டிருந்தாள், சௌந்தரம்மாள். முற்றத்தில் கட்டியிருந்த கன்றுக் குட்டியைச் சீண்டி விளையாடிக் கொண்டிருந்த அருணா, ரேழியில் காலடி ஓசை கேட்பதை உணர்ந்து திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''ஆனந்தா, நீ சொன்னது சரிதானப்பா. அம்மா இங்கேதான் இருக்கிறார்கள்'' என்று உற்சாகத்துடன் பேசியபடி சிதம்பரம் உள்ளே நுழைந்தான். பாதரக்ஷையைக் கழற்றி முற்றத்து ஓரத்தில் விட்டுவிட்டு, மிகவும் சுவாதீனமாக நடந்து கூடத்து பெஞ்சியில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

''அருணா, குடிக்கக் கொஞ்சம் குளிர்ந்த நீர் எடுத்துக் கொண்டு வா'' என்று உத்தரவிட்ட ஆனந்தன், சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டிவிட்டு, மேல் துண்டை எடுத்துப் போர்த்திக் கொண்டு நண்பனின் பக்கத்தில் வந்து அமர்ந்தான்.

மாவை அள்ளிப் பாத்திரத்தில் நிரப்பிவிட்டு, கையை உதறிக்கொண்டு எழுந்திருந்த சௌந்தரம்மாள், "சிதம்பரம், தம்பி ஆனந்தன் உனக்குக் குடிக்க வெறும் பச்சைத் தண்ணியைக் கொடுத்து ஏமாற்றிவிட அனுமதிக்காதே! பெரிய விசேஷம் நடக்கப் போகிறது. பால் பாயஸம் வைத்து நம் எல்லோருக்கும் ஆனந்தன் இப்போது விருந்து செய்தாக வேண்டும்" என்று கூறிவிட்டுச் சிரித்தாள்.

இந்திராணி புடவைத் தலைப்பால் வாயை மூடிக்கொண்டு, தாழ்வாரத்தில் படிந்து நின்ற இருளில் சங்கோஜத்துடன் மறைந்து கொண்டாள்.

"அம்மா, நீங்க புதிர் போடுவதுபோல் பேசுகிறீர்கள். விளக்கமாகச் சொன்னால்தானே புரியும்?" என்று கேட்ட சிதம்பரம் அருணா கொண்டுவந்த தண்ணீர்ப் பாத்திரத்தை வாங்க, கையை நீட்டிக் கொண்டு எழுந்திருந்தான்.

"பாக்குத்தூள் வியாபாரி பழனியப்பக் கவுண்டரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாய் அல்லவா? அவர் மகன் சுரேஷ்குமாரனுக்கு அருணாவைக் கட்டிக் கொடுக்க நிச்சயமாகியிருக்கிறது. அருணாவுக்குக் கல்யாணம் கூடிவிட்டது!" என்றாள் சௌந்தரம்மாள் மகிழ்ச்சியுடன்.

"உண்மையாகவா?" என்று கேட்ட சிதம்பரம், திடுக்கிட்டுக் கையை இழுத்துக் கொண்டான்.

மறுகணம் அருணா அளித்த தண்ணீர்ப் பாத்திரம் தொப்பென கூடத்துத் தரையின் நடுவே ஹரிக்கேன் விளக்குமீது விழுந்தது. கலீர் என்ற ஓசையுடன் விளக்கின் கண்ணாடி உடைந்து நாலாபுறமும் சிதறியது. 'சுந்' என்ற ஓசையுடன் விளக்கும் அணைந்தது.

33

இந்திராணி தங்கைக்கு எவ்வளவோ ஆறுதல் மொழிகள் சொல்லிப் பார்த்தாள். ஆனாலும் பயன் இருக்கவில்லை. முதலில் சுரேஷ்குமாரன் அன்புடன் அளித்த பேனா கை நழுவி விழுந்து

உடைந்தது. இரண்டாவதாக, கல்யாணச் செய்தி பிரஸ்தாபிக்கப்பட்டபொழுது விளக்கு அணைந்தது. இந்த இரு சம்பவங்களும் தன் வாழ்வில் வரப்போகும் பெரும் அபாயத்தின் முன் எச்சரிக்கைகள் என்று அருணா பெரிதும் நம்பினாள். சுரேஷ்குமாரனுக்கும் தனக்கும் இடையே, தளிர்த்தோங்கி வரும் காதலுக்கும், பற்பலவாறு மனத்திலே புனைந்து கொண்டிருக்கும் பிற்கால இல்வாழ்விற்கும் பெரும் பங்கம் ஏற்பட்டுவிட்டால் — என எண்ணிய மாத்திரம் அவள் உள்ளம் துயரத்தினால் வெடித்தது. இந்திராணி, எவ்வளவு எடுத்துக் கூறியும், சமாதானப்படுத்தியும் அவள் ஆறுதலடையாது, இரவு முழுவதும் அழுது கொண்டிருந்தாள்.

மறுநாள் காலை வெகுநேரம் சென்ற பின்னரே படுக்கையினின்று எழுந்தாள். பற்களைத் துலக்கிவிட்டு முகத்தைக் கழுவிக்கொண்டு, திண்ணைக் கைப்பிடிச் சுவர்மீது சோர்வுடன் சாய்ந்து கொண்டாள். அதிகம் அழுததனால் சிவந்து விட்டிருந்த கண்கள், காலை இளம் வெயிலைக் காணக் கூசி, தாமாகவே மூடிக்கொண்டன. சரியான நித்திரை இன்மையினால் ஏற்பட்ட அலுப்பு தலைநோவாக மாறிவிட்டிருந்தது. உடல் உபாதையைவிட அது சமயம் அவள் மனத்திலே தாங்கொணாத பெரும் வேதனை குமுறிக் கொண்டிருந்தது.

'அருணா!' என்று யாரோ மெல்ல அழைப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்து பார்த்தாள். தோட்டத்தின் இடையே இடிந்து கிடந்த இடைச் சுவருக்கு அப்பால் சிதம்பரம் நின்று கொண்டிருந்தான். அவன் முகம் மிகவும் வாட்டமடைந்திருந்தது.

"நேற்று தினம் நடந்த அந்த சம்பவத்திற்காக என்னை மன்னிக்க வேண்டும். உனக்கு அதனால் வீணான மன அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டது என்று நினைக்கிறேன்" என்றான் அவன்.

அருணா பதில் பேசவில்லை. கோபத்துடன் அவனை ஒருமுறை வெறித்துப் பார்த்துவிட்டு, தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"கை தவறுதலாக நேர்ந்த ஒரு சிறு விபத்தை நீ பெரிய விஷயமாக எடுத்துக் கொண்டு மனத்தை அலட்டிக் கொண்டிருக்கிறாய். சகுனங்கள், நிமித்தங்கள் இவைமீது நீ அவ்வளவு நம்பிக்கையா வைத்திருக்கிறாய்? எனக்கு அவைகள்மீது நம்பிக்கை

கிடையாது'' என்றான் அவன், வர்ட்சியான குரலில்.

ஆறுதல் கொடுப்பதற்குப் பதில் இந்த வார்த்தைகள் அருணாவிற்கு ஆத்திரத்தையும் துக்கத்தையும்தான் கொடுத்தன. அவளுக்கு சிதம்பரத்தை அது சமயம் பார்க்கவோ, அவனிடம் பேசிக் கொண்டிருக்கவோ பிடிக்கவில்லை.

''உங்களுக்கு நம்பிக்கை இல்லாதிருக்கலாம். அதைப்பற்றி இப்பொழுது நான் அறிய விரும்பவில்லை'' என்று வெடுக்கென்று பதிலளித்த அருணா, குரோதமாக அவனை உறுத்துப் பார்த்தாள். கட்டுப்படுத்த இயலாத துயரத்தினால் அவளது கண்கள் கலங்கின.

''அருணா! உனக்கு என்மீது கோபம் ஏற்பட்டிருப்பது போல் தோன்றுகிறது. நான் தவறு செய்திருந்தால் மன்னித்துக் கொள்'' என்று கூறிய சிதம்பரம், அவளை இரக்கமாகப் பார்த்துக் கொண்டு நின்றான்.

கண்களில் பெருக்கெடுத்த கண்ணீர் முத்துக்களைப் போல் அருணாவின் கன்னங்களில் உருண்டோடியது. பேச முடியாது துயரத்தினால் அவள் உதடுகள் துடித்தன. நெஞ்சினின்று குமுறி எழுந்த விம்மல் ஒலியைக் கட்டுப்படுத்தும் நிமித்தம் அவள், வெடுக்கென்று திரும்பி உள்ளே வந்து விட்டாள்.

ஒரு மாத காலம் விரைவில் ஓடிச் சென்றது. இந்த சம்பவம் நடந்த பின்பு சிதம்பரம், அவளிடம் சகஜமாகப் பேசுவதையே நிறுத்திக் கொண்டு விட்டிருந்தான். அருணாவும் அதைப்பற்றி அக்கறைப் படவில்லை. வெளியூருக்குப் போயிருந்த சுரேஷ்குமாரன் தான் கொடுத்த வாக்கை மறக்காது, அவளுக்கு வாரந்தோறும் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தான். அவைகளைப் படிப்பதிலும், பதில் எழுதுவதிலும் அவளது பொழுது இன்பமாகக் கழிந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் மாலை இந்திராணி ஆற்றுக்குத் தண்ணீர் எடுக்கப் போனவள் மிகவும் மலர்ந்த முகத்துடன் திரும்பி வந்தாள். ''அருணா! ஒரு சந்தோஷமான சங்கதி!'' உற்சாகத்துடன் கூவிக்கொண்டு குடத்தைக் கீழே இறக்கி வைத்தாள். ஆனந்தனும் சதாசிவமும் போஜனத்திற்குப் பிறகு வெளியே சென்று விட்டிருந்தார்களாதலினால், சகோதரிகள் இருவரும் மனம் விட்டுப்

பேச சந்தர்ப்பம் அனுகூலமாக இருந்தது.

''சீமைக்குச் சென்றிருந்த சோமசேகர், அடுத்த வாரம் திரும்பி வந்து விடுகிறாராம். பண்ணையாருக்கு உடம்பு சுகமில்லாது இருப்பதனால் அவர் அவசரமாகத் திரும்பி வர நேர்ந்து விட்டதாம். வருகிற வெள்ளிக்கிழமை புறப்பட்டு, ஆகாய விமானத்திலே வருவதாகத் தந்தி கொடுத்திருக்கிறாராம்'' என்றாள். அவளது குரலில் சந்தோஷம் உச்ச நிலையிலே ரீங்காரம் செய்தது. அவளது அழகிய முகம், மனத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியின் பயனாக இன்னமும் அழகு பெற்று விளங்கியது.

''இந்த சங்கதி உனக்கு எப்படித் தெரியும்? அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாரா?'' என்று அருணா வினவினாள்.

கடிதம் என்றதுமே, இந்திராணியின் முகம் சட்டென வாடிப் போயிற்று. ''சீமைக்குச் சென்ற புதிதில் அவர் அடிக்கடி கடிதங்கள் போட்டுக் கொண்டிருந்தார். ஆறு மாதங்களுக்கு முன்பு கடைசியாக எழுதிய ஒரு கடிதத்தில் இனி எனக்கு அடிக்கடி கடிதம் போட இயலாது என்றும் விரைவில் ஊருக்குத் திரும்பிவிடப் போவதாகவும், அப்பொழுது நேரில் பேசிக் கொள்ளலாம் என்றும் எழுதியிருந்தார். அதற்குப்பின் அவரிடமிருந்து கடிதங்கள் ஏதும் வந்ததேயில்லை'' என்றாள் இந்திராணி, கொஞ்சம் மனத்தாங்கலுடன்.

இதைக் கேட்டதும் அருணா திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். ''கடிதம் போடாததன் காரணம் என்னவாம்?'' கவலையுடன் விசாரித்தாள்.

''காரணம் எளிது. நேரிடையாக என் விலாசத்திற்குக் கடிதங்கள் அனுப்புவதில் பல சங்கடங்கள் இருந்தன. தவறிப்போய் அப்பா, அண்ணா கண்களில் பட்டுவிட்டால் பெரும் ஆபத்தாகிவிடலாம். பின்னால் ஊரில் யாருக்கேனும் இது விஷயம் தெரியவந்தால் சொல்லவே சாத்தியப்படாத ஏற்படப் போகும் விளைவுகளைச் நிறுத்திக் அதனால் அவர் கடிதங்கள் எழுதுவதையே கொண்டுவிட்டார்'' என்று விளக்கமாகச் சொன்னாள் இந்திராணி.

''இம்மாதிரி பல சங்கடங்கள் எழக்கூடும் என்று அவர் தமது கடிதத்தில் விளக்கியிருந்தாரா?'' என்று அருணா குறுக்குக் கேள்வி கேட்டாள்.

''இல்லை. இதெல்லாம் எனது அனுமானம்?'' என்று பதில் அளித்த இந்திராணி, மெல்லப் புன்முறுவல் செய்தாள்.

அருணாவிற்கு இந்தப் பதில் திருப்தியளிக்கவில்லை. சோமசேகர் திடீரென்று கடிதங்கள் எழுதுவதை நிறுத்திக் கொண்டதில் ஏதோ சூது இருக்கிறது என்றுதான் அவள் நினைக்கலானாள். இந்திராணியின் கள்ளங்கபடற்ற அழகிய முகத்தை உற்றுப் பார்த்தபொழுது, அவளுக்கு மெத்தவும் மனச் சங்கடம் ஏற்பட்டது. ''சீமையிலிருந்து திரும்பி வந்ததும், சோமசேகர் முற்றிலும் மாறிவிட்டிருந்தால், இந்திராணியை நிராகரித்து விட்டால்...'' என்று தனக்குள்ளே எண்ணி அருணா மிகவும் மயக்கமடைந்தாள்.

தன் மனவெழுச்சியை வெளியே காட்டிக் கொள்ளாமல் ''அப்படியா? மிகவும் சந்தோஷம். சோமசேகர் விரைவில் ஊருக்குத் திரும்பி விடுவார் என்பதைக் கேட்க மிகவும் ஆறுதலாக இருக்கிறது'' என்றாள்.

அதற்குப் பின்னர் அக்காவும் தங்கையும் தங்கள் பிற்காலத்தைப் பற்றி, வாய் இனிக்க, மனம் குளிர வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

நாலைந்து தினங்கள் சென்றன. நகரத்திற்குத் திரும்பி வரும்படி, ஜெகதா கடிதம் ஒன்று அருணாவுக்குப் போட்டிருந்தாள். அத்துடன், வழிச் செலவிற்குத் தேவையான பணமும் அனுப்பியிருந்தாள். பெரியம்மா உத்தரவு போட்ட பின்னர் அதிக நாட்கள் கிராமத்திலே தங்குவது தகாது என்று எண்ணிய அருணா, ஊருக்குக் கிளம்ப ஆயத்தம் செய்யலானாள்.

அன்று இரவு வண்டிக்கு அவள் பிரயாணமாவதாகத் தீர்மானிக்கப்பட்டது. சதாசிவத்திற்கு விஷயம் தெரிவிக்கப்பட்டது. வழக்கம்போல் அவன் அசட்டையாக இருந்து விட்டான். ஆனந்தன், தங்கையை வண்டியில் ஏற்ற முஸ்தீபுகள் செய்து கொண்டிருந்தான். ஊருக்குப் புறப்படும் சகோதரிக்கு கையில் கொடுத்தனுப்ப பல விதமான பலகாரங்கள் தயாரிப்பதில் இந்திராணி ஈடுபட்டிருந்தாள்.

அன்று மாலை ஆனந்தன் கடைத்தெருவுக்கு சாமான்கள் வாங்கி வரச் சென்றிருந்தான். சதாசிவம், வயல்வெளிகளைக் கவனிக்கச் சென்றுவிட்டிருந்தான். கூடத்தில் அருணா, ஊருக்குப் புறப்பட பெட்டியில் சாமான்களை அடுக்கித் தயார் செய்து கொண்டிருந்தாள். சமையலறையிலிருந்து அடுப்பில் நெய் காயும் இனிய மணம் வீசிக் கொண்டிருந்தது. பலகாரம் தயார் செய்வதில் ஈடுபட்டிருந்த சௌந்தரம்மாளும், இந்திராணியும் ஏதோ பேசிச் சிரிக்கும் சப்தம், அடிக்கடி அந்த அறையிலிருந்து எழுந்து கொண்டிருந்தது.

சௌந்தரம்மாளுக்கு இந்திராணி மீது ஏற்பட்டுள்ள பாசம், இந்திராணியின் காதல் இவைகள் அனைத்தையும் பற்றி தன்னுள் சிந்தித்தவளாக அருணா, தனது ஆடைகளை மடித்துப் பெட்டிக்குள்ளே அடுக்கிய வண்ணமிருந்தாள்.

ரேழிக் கதவு கிரீச்சென்று சப்தித்தது. அதைத் தொடர்ந்து பாதரக்ஷைகள் ஓசைகேட்கவே, அருணா ஆவலுடன் வேலையினின்று திரும்பிப் பார்த்தாள். உள்ளே வந்த சிதம்பரம் நடையிலேயே தயக்கத்துடன் நின்றான். 'பேசலாமா? வேண்டாமா?' என்று யோசிக்கிறவன் போல் ஒரு கணம் அருணாவைத் தடுமாற்றத்துடன் பார்த்துவிட்டு ''அம்மா உள்ளே இருக்கிறார்களா?'' என்று வினவினான்.

ஊருக்குப் புறப்படுமுன் யாரிடமும் கடுமையாகப் பேச அருணா விரும்பவில்லை. ''உள்ளே இருக்கிறார்கள். உட்காருங்கள். அண்ணன் கூட இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவார்கள்'' என்று உபசரித்தாள்.

''யாரது சிதம்பரமா? ஆச்சு; எல்லாம் முடிஞ்சு போச்சு. இதோ நொடிப்பொழுதிலே வந்துடறேன். நீ வெளியிலே போகனும்னா, வீட்டைப் பூட்டி சாவியை இங்கே கொண்டு வந்து கொடுத்திட்டுப் போ'' என்று சௌந்தரம்மாள் சமையலறையிலிருந்தபடியே குரல் கொடுத்தாள்.

''நான் வெளியில் போவதாகச் சொல்லத்தான் வந்தேன். வாயிலைப் பூட்டிவிட்டேன். சாவியை இந்த பெஞ்சிமீது வைத்துவிட்டுப் போகவா?'' என்று பதிலுக்கு உரத்த குரலில் கேட்டான் சிதம்பரம்.

''சரிப்பா! வச்சுட்டுப் போ'' என்று சௌந்தரம் பதில் கொடுக்கவே, சட்டைப் பையினின்று சாவிக் கொத்தை எடுத்து முற்றத்தில் கிடந்த பெஞ்சிமீது வைத்தான். வெளியே அவன் போகத் திரும்புவதைக் கண்ணுற்ற அருணா அவசரமாக எழுந்திருந்தாள். ''கொஞ்சம் உட்காருங்கள். அம்மா தயாரித்திருக்கும் பலகாரத்தை சாப்பிட்டுவிட்டுப் போகலாம்'' என்று கூறிவிட்டு உள்ளே ஓடினாள்.

''நான் இன்று இரவு ஊருக்குப் போகிறேன். பிறகு மறுபடியும் இங்கே எப்பொழுது வருவேனோ தெரியாது. நீங்கள் வெளியிலிருந்து வருவதற்குள் நான் கிளம்பவேண்டியிருந்தால் இப்போதே விடைபெற்றுக் கொள்கிறேன்'' என்று விநயமாகப் பேசிய அருணா, ஒரு தட்டில் வடையும் ஒரு டம்ளரில் குடிக்க நீரும் கொண்டு வந்து பெஞ்சிமீது வைத்தாள்.

''மிக்க வந்தனம்'' என்று பதிலளித்த சிதம்பரம் உட்கார்ந்து கொண்டு வடையைச் சிறிது பிட்டு வாயில் போட்டுக் கொண்டான். பிறகு ஒரு வாய் தண்ணீரைப் பருகினான். ''நான் வெளியிலிருந்து திரும்பி வர இரவு அதிக நேரமாகும். அதனால் நானும் இப்பொழுதே விடைபெற்றுக் கொள்கிறேன்'' என்று கூறிவிட்டு எழுந்திருந்தான்.

''அண்ணா வந்துவிடுவார். உங்களுக்கு அவசரமாக இருந்தால்...'' என்று இழுத்துவிட்டு அருணா முடிக்காது நிறுத்தினாள்.

சிதம்பரம் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். சுற்று முற்றும் பார்த்துவிட்டு மிகவும் தாழ்வான குரலில், ''கல்யாணம் நிச்சயிக்கப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். எப்பொழுது நடக்கப்போகிறது என்பதை நான் அறியலாமா?'' என்று வினவினான்.

சங்கோஜத்தினால் அருணாவின் முகம் சிவந்து போயிற்று. ''எப்பொழுது என்று தீர்மானிக்கப்படவில்லை'' என்று பதில் அளித்துவிட்டு, தன் சங்கோஜத்தை மறைக்க, பெட்டிக்குள் ஏதோ தேடி எடுப்பதுபோல் அபிநயித்தாள்.

''உன் சொந்த விஷயத்தில் நான் குறுக்கிட்டுப் பேசுவதாக எண்ணாதே! ஆமாம், இந்த விவாகம் நிச்சயிக்கப்பட்டிருக்கும்

விஷயம் எல்லோருக்கும் தெரியுமா? உன் அண்ணன் என்னிடம் நேற்றுதான் சொன்னான் விவாக விஷயம் சில காரியங்களை ஒட்டி மிகவும் ரகசியமாக இருக்கிறதென்று. இது உண்மையா?'' என்று கேட்டான்.

''ஆமாம்'' என்று தலையை அசைத்த அருணா, அவனைச் சற்று அதிருப்தியுடன் உறுத்துப் பார்த்தாள். அண்டை வீட்டு மனிதன் என்ற உறவுடன் நிறுத்திக் கொள்ளாது மிகவும் உரிமையுடன் அவளது சொந்த விஷயங்களில் அவன் தலையிட்டுப் பேசுவது அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவேயில்லை. 'இத்தனை கேள்விகள் கேட்க இந்த மனிதன் யார்?' என்றுகூட அவளுக்குக் கோபம் ஏற்பட்டது.

அவளது மனவெழுச்சிகளைக் கவனியாதவன்போல் சிதம்பரம் தொடர்ந்து, ''விவாகம் செய்து கொள்வது என்று தீர்மானிக்கப்பட்ட பின்பு அதை ரகஸ்யமாக மூடி வைப்பானேன்? இதைக் கேள்விப்பட்டதிலிருந்து என் மனம் சமாதானப்படவேயில்லை. இதில் ஏதோ தந்திரம் இருக்கிறது'' என்றான்.

அடியுண்ட புலிபோல், அருணா, கோபத்துடன் துள்ளி எழுந்தாள். சிதம்பரத்தின் சொற்கள் அவள் மனத்தை மிகவும் வேதனை செய்துவிட்டன. ''போதும் நிறுத்துங்கள். உங்களது அபிப்பிராயத்தை நான் விரும்பிக் கேட்கவில்லை. ஊருக்குப் பயணமாகிக் கொண்டிருக்கும் என்னிடம் மனம் புண்பட இவ்வாறு பேச உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? அண்டை வீட்டில் வசிக்கிறீர்கள். தற்சமயம் என் அண்ணனுக்கும் அப்பாவுக்கும் நண்பராயிருக்கிறீர்கள் என்பதைத் தவிர, உங்களுக்கும் எனக்கும் என்ன உறவு இருக்கிறது? ஏன் இந்த விஷமமான பேச்சு? நான் சந்தோஷமாக வாழ்வதைக் கேட்கக்கூட உங்களுக்குப் பொறாமை போலிருக்கிறது'' என்றாள் ஆத்திரத்துடன் படபடப்பாக.

''நீ சொல்வது வாஸ்தவமாக இருக்கலாம். குற்றம் குறை ஏதும் இல்லாத சத்புருஷன் என்று என்னை நான் கூறிக்கொள்ளவில்லை'' என்று பதில் அளித்த சிதம்பரம் வறட்சியாக நகைத்தான்.

''ஐயா! போதும் உமது ஆராய்ச்சிகளும் அபிப்பிராயங்களும்! நான் என் சொந்த விஷயங்களைப்பற்றி உங்களுடன் அலசிப்பேச

தயாராக இல்லை. அடுத்த வீட்டில் வசிக்கிறார். படித்தவராகவும் இருக்கிறார். நல்ல பண்புடையவராகக் காணப்படுகிறார் என்று இவ்வளவு நாளும் எண்ணி நட்புரிமை பாராட்டி வந்தேன். இன்று உங்களது உண்மையான குணம் தெளிவாகப் புரிந்துவிட்டது. இன்றிலிருந்து..." என்று கோபத்துடன் வேகமாகப் பேசிய அருணா திணறினாள்.

"... நாம் விரோதிகள், அவ்வளவுதானே? சந்தோஷம்!" என்று கூறிவிட்டுச் சிரித்தான் சிதம்பரம். அருணா அதற்கு ஆத்திரமாக பதில் [illegible]சுமுன், மின்னலைப்போல் தாழ்வாரத்தைத் தாண்டிக்கொண்டு [illegible]வெளியே சென்றுவிட்டான்.

பின்னால் வேகமாக ஓடிய அருணா, தன் வெறுப்பை [illegible]டக்கமாட்டாதவளாக வாயிற்கதவைப் படீர் என்று சாத்தித் தாளிட்டுக் கொண்டு, கதவின்மீது சாய்ந்து கொண்டாள். உள்ளத்தில் கொந்தளித்த சினத்தைத் தாள முடியாது அவளது உடல் வெட வெடவென்று நடுங்கியது.

34

பெரிய இடத்து சம்பந்தம் கிட்டிவிட்டது என்ற பெருமையில், ஜெகதா பழனியப்பக் கவுண்டரின் வீட்டு ஹோதாவுடன் போட்டியிடத் தொடங்கினாள். நகரத்தின் தனக்கு எஞ்சியிருந்த இரு வீடுகளையும் வந்த விலைக்கு விற்று, அப்பணத்தில், அருணாவுக்கு ஒரு வைர அட்டிகையும், வைர வளையல் ஒரு ஜோடியும் செய்து வைத்தாள். விலையுயர்ந்த ஆடைகள், கல்யாணச் சீருக்காக வெள்ளிப் பாத்திரங்கள், இரும்பு பீரோக்கள், என பல சாமான்களையும் வாங்கி, முன்கூட்டியே வீட்டில் சேகரித்து வைத்து விட்டாள்.

தன்னைப்பற்றி லோகநாயகி தாழ்வாக எண்ணிவிடக் கூடாது என்ற கொள்கைக்காக அவளுக்குச் சமமாக இருக்க வேண்டி, தன் பழைய மாடல் காரை விற்றுவிட்டு, புத்தம் புதியதொரு பெரிய காரை

அலட்சியமாக வாங்கிவிட்டாள்.

புதிய மாடல் கார், பார்வைக்குக் கம்பீரமாக ஆகாயக் கப்பல் போல், தார் வீதிகளில் உடல் அலுங்காமல் நாசூக்காக நகர்ந்த போதிலும், பெட்ரோலைத் தண்ணீர் என எண்ணியதுபோல் வாரி வாரிக் குடித்துக் கொண்டிருந்தது. புதிய வேலைக்காரர்கள், செய்து முடிக்க அதிக வேலைகள் ஒன்றும் இல்லாததனால், வேலைக்கு வீட்டில் கிடைத்ததை சாப்பிட்டு விட்டு, தோட்டத்தைச் சுற்றி வளைய வந்து கொண்டிருந்தனர்.

எலும்பும் தோலுமாக இருந்த அவர்கள் இருவரும், ஜெகதா வீட்டிற்கு வந்த இரண்டாவது மாதத்திலேயே, சமையற்காரியை தாஜா செய்துகொண்டு, வீட்டில் எஞ்சியதையெல்லாம் கண்டும், காணாமலும் எடுத்துத் தின்று விட்டு சதைப் பிடிப்புடன் கொழுத்துக் காணப்பட்டனர். நிற்காது செய்து கொண்டிருக்க வேலைகளும் அதிகம் இல்லாததால், சாப்பிட்ட நேரமும், கொஞ்சம் வேலை செய்த நேரமும் போக மீதிப் பொழுதில், ஆளுக்கொரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டு, தோட்டத்து மரநிழலில், டிரைவர் பூபதியுடன் கூடிக் கொண்டு யஜமானியைப் பற்றி வம்பு பேசி மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

பெட்ரோலை பாதம்கீர்போல் பருகிக் கொண்டிருந்த காரையும் கோயில் பெருச்சாளிகள் போல் வயிறார உண்டு சோம்பேறிகளாகத் திரிந்து கொண்டிருந்த வேலையாட்களையும் பார்க்கும்பொழுது சில சமயங்களில் ஜெகதாவின் வயிறு பற்றி எரியத்தான் செய்தது. வீடுகளை விற்று பாங்கியில் போட்டிருந்த பணம் கரைந்து வருவதை எண்ணிய பொழுதெல்லாம் அவளுக்குத் திகிலாகத்தான் இருந்தது. ஆனாலும் வரப்போகும் மகத்தானதொரு பாக்கியத்தையும் அந்தஸ்தையும் அடிக்கடி எண்ணிப் பார்த்துத் தன்னைத் [illegible] சமாதானம் செய்து கொண்டாள்.

முன் போட்டு பின்னால் புரட்டிக் கொள்ள முடியும் [illegible] எண்ணத்தோடு வீடுகளை விற்றுப் பெரியம்மா தனக்குக் கல்யா[illegible] செய்வது அருணாவிற்குத் தெரியாமலா இருக்கும்? 'கவுண்ட[illegible] மருமகள் ஆனபின்பு அதிகாரம் கைக்கு வந்ததும் ஒட்டிக்கு ரெட்டியாகப் பெரியம்மா செலவழித்த பணத்தைத் திருப்பித்

தந்துவிடப் போகிறாள். அவ்வாறு அவள் மறந்தாலும் அவளை யார் விடப்போகிறார்கள்?' என்று ஜெகதாவின் அடிமனம் அடிக்கடி அவளுக்கு ஆறுதல் கூறிக் கொண்ட வண்ணமிருந்தது. அதனாலேயே அவள் 'கருமமே கண்ணாயினார்' என்ற முறையில் பணத்தைக் கணக்குப் பாராது தாராளமாகச் செலவழித்துக் கொண்டு அந்தஸ்து ஒன்றன் மீதே கருத்தாக இருந்தாள்.

நகரத்திற்குத் திரும்பிவந்த அருணா அன்று நடந்த சம்பவத்தை அறவே மறந்து போனாள். கிராமத்திலிருந்த தன் சகோதரியையோ, அல்லது அன்னையையோ மற்ற எவரையோ பற்றி நினைக்கவும் பொழுது இல்லாமல், அவளது வாழ்க்கை பல புதிய அனுபவங்களால் நிரம்பப் பெற்று வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

கலாசாலை மறுபடியும் விடுமுறைக்குப் பிறகு திறக்கப் பட்டது. ஆனால் அருணா தொடர்ந்து படிக்காது பெரியம்மாவின் பேச்சுக்கு இணங்கி நின்று விட்டாள். ஜெகதாவிற்குப் பெண்கள் கல்வியைப்பற்றி விசேஷ அபிப்பிராயம் ஏதும் கிடையாது. நளினி கலாசாலையில் படிக்கிறாள் என்பதற்காக, லோகநாயகியுடன் போட்டியிட்டுக் கொண்டு அருணாவைக் கலாசாலையில் சேர்த்தாள். நளினிக்கு கல்யாண வயது நெருங்கிக் கொண்டு வருவதை உத்தேசித்து படித்தது போதும் என்று பாதியிலேயே, லோகநாயகி மகளின் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள்.

அதையறிந்ததும் ஜெகதாவும் அந்த வருஷத்துடன் படித்தது போதுமென அருணாவையும் நிறுத்திவிடும்படி உத்தரவிட்டு விட்டாள்.

ஜெகதாவிற்குக் கல்விமீது அப்படி தனியாக விசேஷ அபிமானம் ஏதும் கிடயாது. அந்தஸ்து நிமித்தம், நாலு ஆங்கில வார்த்தைகள் சேர்ந்தாப்போல் பேசவும் எழுதவும் பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்று கருதினாள். அருணாவிற்குத் தெரிந்த ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு உலக முழுவதும் சுற்றி வர முடியும் என அவள் எண்ணியதாலேயே மேலே படிப்பு அவசியமில்லை என்று தீர்மானித்து விட்டாள்.

முன் போலிருந்தால் அருணா தன் கல்வியைப் பற்றி மிகவும் கவலைப் பட்டிருப்பாள். பெரியம்மாவை எதிர்த்துப் புரட்சி செய்து மேலே படிக்கப் போவதாகப் பிடிவாதமும் செய்திருப்பாள். சுரேஷ்குமாரனின் காதல் அவள் மனத்தை மிகவும் மாற்றிவிட்டிருந்தது.

பழனியப்பக் கவுண்டரின் மருமகளாகப் போகிறோம். பெரிய அந்தஸ்திலே, செல்வ சுகத்தில் மேன்மையாக வாழப் போகிறோம் என்ற கர்வம் தலைக்கேறி விட்டிருந்ததனால் அவள் கல்வியைப் பற்றி மிகவும் அசட்டையாக எண்ணினாள். கலாசாலைக்குப் போவது என்ற தொல்லை தீர்ந்ததும் 'அப்பாடா' என்று மிகவும் விச்ராந்தியாக இருந்தாள். பெரியம்மா வாங்கி அளித்த நானாவிதமான ஆடைகளை அணிந்து விலையுயர்ந்த ஆபரணங்களைப் பூண்டு பெரியம்மாவுடன் லேடீஸ் கிளப், சினிமா, நாட்டியக் கச்சேரிகள் என்று பல இடங்களிலும் சென்று பொழுதை மிகவும் ரம்யமாகக் கழித்துக் கொண்டிருந்தாள்.

மனத்திலே ஏற்பட்ட மாறுதல்கள் அருணாவின் தோற்றத்திலும் குடியேறின. முகத்தில் பவுடர் பூச்சும், உதடுகளில் சாயமும், கை நகங்களில் வர்ணக் குழம்புமாக, நளினியைப் போலவே மிகவும் நாகரிக ரமணியாக மாறிப்போனாள்.

அருணா நகரத்திற்கு திரும்பி வந்து மூன்று மாத காலம் சென்று விட்டிருந்தது. ஒரு நாள் தங்கள் வீட்டுப் புதிய காரில் கடைத் தெருவில் பவனி வந்து கொண்டிருந்த ஜெகதா துணிக்கடையொன்றில் நுழைந்தாள். கூடவே நிழல்போல் அலைந்து கொண்டிருந்த அருணாவும் கடைக்குள் பெரியம்மாவின் பின்னால் தொடர்ந்து பிரவேசித்தாள். புதியதாக, நகரத்தில் வந்து குவிந்திருந்த புது மோஸ்தர் ஆடைகளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டு நின்ற அரு[illegible] தன் அருகே செருப்பு சப்தம் செய்ய யாரோ நடந்து வருவதைக் கே[illegible] ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

''என்னம்மா அருணா! ஒரேயடியாக மாறி விட்டிருக்கிறா[illegible] இதென்ன வேஷம்? இதெல்லாம்...'' என்று அதட்டலாக வினவிய வண்ணம், கம்பீரமாக வந்து, அருகில் நின்றாள் கௌரியம்மாள்.

''இந்த வருஷம் பரீக்ஷை எழுதப் போகிறாய் அல்லவா? உங்க கலாசாலை எப்படியிருக்கிறது'' என்று தொடர்ந்தாற்போல் கேட் அவள், தான் சுமந்து வந்த கைப்பையைத் திறந்து பெரி கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

மைசூர் பட்டுச் சேலைகளை ஆராய்ந்து பார்ப்பதில் மெ மறந்திருந்த ஜெகதா, அதட்டலாக யாரோ ஒரு பெண்மணி பேசுவதைக் கேட்டதும், புடவைக் குவியலினின்று தலையை நீட்டி தங்க பிரேம் மூக்குக் கண்ணாடியைச் சரிப்படுத்திக் கொண்டு கடைக்குள் வந்த அந்தப் புதிய ஸ்திரீயை உற்றுப் பார்த்தாள். அப்போதுதான் ''நான் காலேஜை விட்டு விட்டேன்!'' என்று அருணா பதில் அளித்து விட்டு வெட்கத்துடன் முகத்தைச் சிணுக்கினாள்.

''காலேஜ் படிப்பை விட்டு விட்டாயா? ஓஹோ, கல்யாணம் ஆகப் போகிறதென்பதால் படிப்பு போதும் என்று விட்டு விட்டாயாக்கும்? ஏனம்மா அருணா! கல்யாணத்திற்கும் கல்விக்கும் என்ன சம்பந்தம்? கல்யாணம் பண்ணிக் கொள்கிறவர்கள் கல்வி கற்று பட்டங்கள் பெறக் கூடாதா? கொஞ்சம் அதிகக் கல்வி அறிவு ஏற்பட்டால், அது உடம்புக்கு ஒத்துக் கொள்ளாதா என்ன! பி.ஏ. பட்டம் கிடைத்தால் வாந்தியா எடுத்து விடும்? சுத்த அசட்டுப் பெண்ணாக இருக்கிறாயே?'' என்று உரத்த குரலில் கேட்டுவிட்டு இடி இடியென்று நகைத்தாள்.

ஜெகதாவின் நெஞ்சு படபடத்தது. முகம் ஜிவ்வெனச் சிவந்தது. ஆத்திரத்தில் தன் தங்கப் பற்களை வேகமாகக் கடித்தாள். 'இவள் யார் இந்த அதிகப் பிரசங்கி?'' என்று தனக்குள் எண்ணிச் சினமடைந்து, ''அருணா இங்கே வந்து இந்த புடவைகளைப் பார். உனக்கு ஏதாவது பிடித்தால் வாங்கிக் கொண்டு சீக்கிரம் வீட்டுக்குப் போகலாம்'' என்று எரிச்சலுடன் கூறினாள்.

''வருகிறேன். பெரியம்மா!'' என்று பதிலளித்த அருணா, ''பெரியம்மா, இவர்கள்தான் கௌரியம்மாள் என்பவர். நான் இவரிடந்தான் கடந்த வருஷம் உத்யோகம் செய்து கொண்டிருந்தேன்'' என்று கௌரியம்மாளை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

''ஓகோ! இவர்தான் உன் பெரியம்மாவா?'' என்று கூறிய

கௌரியம்மாள் ஜெகதாவின் பக்கம் திரும்பி, மிகவும் அதிகாரமாக, 'ஏனம்மா? உங்கள் பெண்ணை மேலே படிக்க வைக்காது ஏன் நிறுத்திவிட்டீர்கள்? இந்தக் காலத்தில் பெண்கள் படிக்காமல் இருக்கலாமோ? கல்யாணம் ஆன பின்பு வாழ்க்கையில் ஏதோ அசம்பாவிதம் நடந்து விட்டால் பெண்களுக்கு படிப்பு ஒன்றுதானே பெரிய ஆஸ்தியாக உதவ முடியும்? அருணா தன் படிப்பைத் திடீரென நிறுத்தியது எனக்கென்னவோ பிடிக்கவேயில்லை!'' என்று படபடவெனப் பொறிந்து தள்ளிவிட்டு, தன் கைக்கடிகாரத்தை உற்றுப் பார்த்தாள்.

''மணி ஆகிவிட்டது. இந்தக் கடையில்கூட நான் தேடி வந்த ஜமக்காளத்தைக் காணவில்லை. ஆபீஸிற்கு நேரமாகிவிட்டது'' எனத் தனக்குள் பேசிக்கொண்டு, அருணாவிற்கு ஒரு புன்முறுவலை வீசிவிட்டு, புயல்போல் வேகத்துடன் கடையினின்று வெளியேறித் தன் காரில் ஏறிக் கொண்டு போய் விட்டாள்.

''சரி, நாமும் போகலாம்'' என்று அருணாவை அழைத்துக் கொண்டு கிளம்பிய ஜெகதா, கோபத்திலே கொதித்துக் கொண்டிருந்தாள். கௌரியம்மாளின் வார்த்தைகள் அவள் நெஞ்சை உறுத்திக் கொண்டிருந்தன. எனவே, அவளால் வெகுநேரம் பேசாது இருக்க முடியவில்லை. காருக்குள் ஏறி உட்கார்ந்ததும், ''என்ன பெண்மணி அவள்? நல்ல பெண்மணி! ரேஸ் குதிரைபோல் நடையும், இடியோசைப் பேச்சும் ஆண் பிள்ளைக்குப் பெண் வேஷம் போட்டது போல் புடவையும், தலையும், சத்தமும் சகிக்கவேயில்லை. இவளிடமா நீ வேலை செய்து கொண்டிருந்தாய்? நான் இவளைப் போன வருஷமே பார்த்திருந்தால், 'நீ வேலை செய்தது போதும்' என்று நிறுத்தியிருப்பேன்'' என்று ஒரு மூச்சு இரைந்து கூப்பாடு போட்டாள்.

அருணாவிற்கும் அது சமயம் கௌரியம்மாளின் மீது மிகவும் கோபம் ஏற்பட்டிருந்ததனால், அவளைத் தன் பெரியம்மா வசைமாரி பொழிவதைக் கேட்டுக்கொண்டு வாளா இருந்துவிட்டாள்.

இந்தச் சம்பவம் நடந்து சில தினங்கள் சென்றன. ஒரு நாள் மாலை, நளினி தன் தோழியை, தங்கள் பங்களாவிற்கு வரச்சொல்லி

டெலிபோனில் உத்தரவிட்டிருந்தாள். உடனே போய் வரும்படி ஜெகதா ஏவி விடவே, அருணா, தன்னை மிகவும் அழகாக அலங்கரித்துக் கொண்டு, தங்கள் இல்லத்துப் புதிய காரில் தன் வருங்கால மாமனாரின் கிரகத்திற்கு மிகவும் உரிமையுடன் சென்றாள்.

சிநேகிதியைக் கண்டதும் நளினி ஓடிவந்து ஆசையுடன் வரவேற்று, "உனக்குச் சில சந்தோஷ சமாச்சாரங்கள் சொல்லப் போகிறேன். அதற்காகத்தான் உன்னை அவசரமாகக் கூப்பிட்டு அனுப்பினேன்" என்றாள். "இன்னும் கொஞ்ச நேரத்தில் ஊரிலிருந்து சுரேஷ்குமார் வரப்போகிறான்" என்று கூறிவிட்டு, பரிகாசமாகச் சிரித்த நளினி சிநேகிதியின் முகத்தைக் குறும்புத்தனமாகப் பார்த்தாள்.

சுரேஷ் என்ற பெயரைக் கேட்டதுமே, ஆனந்த பாவத்திலே அருணாவின் மெய் சிலிர்த்தது.

"அப்படியா! சந்தோஷ சமாச்சாரங்கள் எனப் பன்மை போட்டுப் பேசினாயே...? பிறகு?" என்று கேட்டாள், தன் மகிழ்ச்சி முழுமையும் வெளியே காட்டிக் கொள்ளாமல்.

"என் அறைக்கு வா!" என்று மிகவும் அன்புடன் அழைத்த நளினி, அருணாவை மாடிக்கு அழைத்துச் சென்றாள். கதவைத் தாளிட்டுவிட்டு பீரோவைத் திறந்து, புடவை ஒன்றின் மடிப்பிலே ஒளித்து வைத்திருந்த ஒரு புகைப் படத்தை எடுத்துக்கொண்டு வந்தாள். பிறகு அருணாவின் அருகில் வந்து அந்தப் புகைப்படத்தை அவள் முன்னால் நீட்டி, "பார்! இவர் எப்படியிருக்கிறார் என்று சொல்லு!" என்று புன்முறுவல் செய்தாள்.

அருணா அந்தப் புகைப்படத்தை வாங்கி, மிகவும் உற்றுக் கவனித்தாள். இருபத்தைந்து வயதிற்குட்பட்டவன்போல் தோன்றிய ஒரு வாலிபனின் படம் அது. முகக் குறியினின்றும் அவனது ஆடை அலங்காரத்தினின்றும் அவன் பணம் படைத்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டுமென்று அவள் ஊகித்துக் கொண்டாள்.

"மிகவும் லக்ஷணமாக இருக்கிறார். ஆமாம், இவர் யார்?" என்று ஆவலுடன் வினவினாள்.

"இவருக்கு என்னைக் கட்டிக் கொடுக்க அப்பா தீர்மானித்து இருக்கிறார். இரு குடும்பத்திடையேயும் விவாகப் பேச்சு

வார்த்தைகள் முடிந்து, கல்யாணம் அநேகமாக நிச்சயமாகிவிட்டது. அவர் என்னை இங்கே எங்கேயோ ஒரு கல்யாண வீட்டில் சில தினங்களுக்கு முன்பு பார்த்து விட்டாராம். அவருக்கு என்னைக் கட்டிக்கொள்ளப் பிரியமாம். நான் அவரை இன்னும் நேரடியாகப் பார்க்கவில்லை. அதற்காக அப்பா சுரேஷுக்கு எழுதி அவரை இங்கே எதேச்சையாக விருந்து சாப்பிட அழைத்து வருவதுபோல் அழைத்து வர ஏற்பாடு செய்திருக்கிறார்.

"இன்னும் கொஞ்சம் பொழுதிலே அண்ணனும் அவரும் வருவார்கள். அவரை நீயும் எனக்காக ஒரு முறை பார்த்து அபிப்பிராயம் சொல்ல வேண்டும். அதற்காகத்தான் உன்னை அவசரமாகக் கூப்பிட்டு அனுப்பினேன். இன்று நீ இங்கேயே அவர்களோடு சாப்பிட வேண்டும். உன்னை இங்கே கண்டால் சுரேஷுக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும். அதனால் நீ மறுக்கக் கூடாது" என்றாள்.

தன் அன்பனைச் சந்திக்கப் போவதில் அருணாவுக்கு மிகவும் ஆனந்தமாக இருந்தது. எனினும் அவள், "கொல்லன் உலையில் ஈக்கு என்ன வேலை? அதுபோல இந்த விருந்தில் எனக்கு என்ன சம்பந்தம்? எனினும் உனக்காக நான் இன்று இங்கே சாப்பிட ஒப்புக் கொள்கிறேன். அது கிடக்கட்டும். அவர் பெயர் என்ன? என்ன உத்தியோகம்?" என்று கேட்டாள்.

"உத்தியோகம் ஒன்றுமில்லை. அப்பாவுக்கு இருக்கும் சொத்துக்களை மேற்பார்வை செய்கிறார். அவ்வளவுதான். சீமைக்குச் சென்று படித்து, பட்டம் பெற்றவராம். பேரை நான் சொல்ல மாட்டேன். புருஷனாக வரப்போகிறவர் பெயரைச் சொல்லலாமா?" என்று கேட்டு விட்டு, கண்களைச் சிமிட்டிக் கொண்டு நளினி பரிகாசமாகச் சிரித்தாள்.

இதற்குள் வாசலில் கார் ஒன்று வந்து நிற்கும் சப்தம் கேட்கவே சிநேகிதிகள் இருவரும் பரபரப்பாக ஓடி ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தனர்.

காரினின்று சுரேஷ்குமாரன் பின்னால் இறங்கிய ஆடவனை வைத்த கண் வாங்காது அருணா பார்த்துக் கொண்டிருந்தாள். நல்ல

உயரமாகவும், சிவந்த நிறமாகவும் பார்க்க அவன் மிகவும் அழகாகவே இருந்தான். ''நளினி, உன் கணவன் கண்ணுக்கு அழகான புருஷன்தான். நீ நல்ல அதிர்ஷ்டசாலிதான்'' என்று அருணா புகழ்ந்தே நளினியின் முகம் லஜ்ஜையினால் லேசாக சிவந்தது.

''வெறும் போட்டோ அழகனோ என்று பயந்து கொண்டிருந்தேன். அப்பாடி! பயம் விட்டது இப்பொழுது'' என்று பரிசாகமாகக் கூறிவிட்டு, ''வா. கீழே போவோம்'' என்று சினேகிதியை அழைத்தாள். மாடிப் படிகளில் அவர்கள் ஏறிவரும் ஓசையைக் கேட்டதும், சினேகிதிகள் இருவரும் தயக்கத்துடன் மாடி அறை வராந்தாவிலேயே நின்றார்கள்.

அருணாவை நேருக்கு நேர் சந்தித்த சுரேஷ்குமாரன் முகம் பிரகாசமடைந்தது. ஆச்சர்யத்துடன் அவளை உற்றுப் பார்த்துவிட்டு, தான் அழைத்து வந்த ஆடவனிடம் திரும்பி, ''மிஸ் அருணா! என் தங்கையின் பிராண சினேகிதி'' என்று கூறிவிட்டு, புன்முறுவல் செய்தான். பிறகு, அருணாவின் பக்கம் திரும்பி, ''இவர்தான் என் நண்பர் திரு.சோமசேகர். அயலூர்ப் பண்ணையார் புத்திரன். இப்பொழுதுதான் திரும்பி சீமையிலிருந்து வந்திருக்கிறார்'' என்று அறிமுகம் செய்வித்தான்.

அருணாவுக்குக் கையைக் குவித்து நமஸ்காரம் செய்த சோமசேகர், கடைக் கண்ணால் நளினியைப் பார்த்து மனம் திருப்தி அடைந்தவனாக நின்று கொண்டிருந்தான்.

''சரி, பிறகு விருந்தின் போது சந்திப்போம்'' என்று கூறிய சுரேஷ் அவனது கரத்தைப் பற்றித் தன் அறைப் பக்கமாக அழைத்துச் சென்றுவிட்டான்.

அவர்கள் சென்று மறைந்ததும் நளினி, மிகவும் மகிழ்ச்சியுடன் அருணாவின் அருகில் வந்து, ''அருணா! உண்மையிலேயே அவர் பார்ப்பதற்கு மிகவும் லக்ஷணமாகத்தான் இருக்கிறார்'' என்று கொஞ்சலாகப் பேசியவள் தோழியின் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டு, ''என்ன அருணா! உடம்புக்கு என்ன? எப்படியோ இருக்கிறாயே?'' என்று பதட்டமாகக் கேட்டாள்.

''ஒன்றுமில்லை, மயக்கமாக இருக்கிறது. கொஞ்சம் குடிக்கத்

தண்ணீர் கொண்டு வா!'' என்று திணறிய அருணா, தன் கண்களில் பொங்கிய கண்ணீரை மறைக்கும் நிமித்தம் நளினியின் அறைக்குள் விரைந்தோடி, சோபா மீதில் சாய்ந்து கொண்டு, முகத்தைக் கரங்களால் மூடிக் கொண்டாள்.

''இதோ கொண்டு வரச் செய்கிறேன்?'' என்று பதறிய நளினி வேலைக்காரனை அழைக்க அப்பால் ஓடினாள்.

உண்மையிலேயே அருணாவுக்கு தலையைச் சுற்றிக் கொண்டுதான் வந்தது. 'அக்கா இந்திராணி காதலிக்கும் அயலூர்ப் பண்ணையார் மகன் சோமசேகரும், நளினி கல்யாணம் செய்து கொள்ளப்போகும் சோமசேகரும் ஒரே மனிதரா? அப்படியானால் இந்திராணியின் கதி...' என்று நினைக்கும் பொழுது அவளது நெஞ்சு துயரத்தில் குமுறியது. உலகமே கண்முன் 'கிர்' எனச் சுழல்வதுபோல் அருணாவிற்கு பிரமிப்பு ஏற்பட்டது.

35

நெற்றிமீது புரண்ட கேசத்தைத் தடவிக் கொண்டு அசோகன் ஹாலை ஒருமுறை யாகச் சுற்றுமுற்றும் நன்றாகக் கவனித்தான். அந்தப் பெரிய ஹாலில் அது சமயம் யாரும் இருக்கவில்லை. சோமசேகரின் வருகையை முன்னிட்டு ஏற்பாடாகியிருந்த சிறு விருந்தில் அசோகனும் கலந்து கொள்ள வேண்டியது நியாயம் என மனோன்மணி நினைத்து அவனை டெலிபோன் மூலம் அழைத்திருந்தாள். அதற்கிணங்கியே அவன் தாமதம் இன்றி பழனியப்பக் கவுண்டர் பங்களாவிற்கு வந்திருந்தான். ஒரு நிமிஷம்கூட காலதாமதம் செய்யாது அவன் ஓடோடியும் வந்ததற்கு வேறு ஒரு முக்கிய காரணமும் இருந்தது.

சமீப காலத்திலே அவன் நடத்தி வந்த படாடோப வாழ்க்கையின் பயனாக, அன்று காலை அவனது சட்டைப் பையில் மிஞ்சியிருந்தது ஐந்தே ரூபாய்கள்தான். 'அசோகா ஷோமார்ட்'டின் உண்மையான சொந்தக்காரன் சோணாசலம் நாளடைவில் அசோகனது உண்மைக்

குணத்தைக் கண்டு கொண்டுவிட்டான். ''ஏமாந்தவரை போதும் இனி ஜாக்கிரதையாக இருப்போம்'' என்று அவன் வியாபார விஷயத்தில் மிகவும் கண்டிப்பாக இருந்து கணக்கு விவகாரங்களை பூதக் கண்ணாடி போட்டு ஆராய ஆரம்பிக்கவே, அசோகனது பணப் புழக்கத்தில் திடீரென மந்தம் ஏற்பட்டுவிட்டது. அவன் மனோன்மணியிடம் பொய்கள் பல கூறி வாங்கிக் கொண்டிருந்த பணம் அனைத்தும் கூட விரைவில் தீர்ந்து போயிற்று.

''நாளைச் செலவுக்கு என்ன செய்வோம்?'' என்று யோசிக்கும் பயங்கரமான நிலையில் அவன் இருந்தான்.

ஆனாலும் அசோகனா இதற்கெல்லாம் மனம் சோர்ந்து போகிறவன்? இது மாதிரி பயங்கர நிலைமைகளை எவ்வளவு முறை அவன் தன் வாழ்விலே இதுவரை பார்த்திருப்பான்? மனோன்மணி விருந்துக்கு அழைத்தவுடன் அவனது மூளை விறுவிறுத்தது. ''பாஸ்போர்ட் கிடைக்க சிரமமாக இருக்கிறது. ஆயிரம் ரூபாய்களை வைத்து, அந்த அதிகாரிகளுக்கு அழுத்தினால் காரியம் சுலபமாகிவிடும்'' என்று ஒரு கதை திரித்து, அவளிடமிருந்து ஒரு ஆயிரம் ரூபாய்களாவது வாங்கிட வேணும் என்ற யோசனை தோன்றவே, தாமதம் செய்யாது கிளம்பினான்.

விருந்திற்காகத் தன்னைப் பிரத்யேகமாக அலங்கரித்துக் கொண்டு, மிகவும் உல்லாசமாக மயில்போல் மாடியினின்று இறங்கி வந்த மனோன்மணி தன் அன்பனைக் கண்டதும், அளவிலா மகிழ்ச்சி எய்தி, ''ஐந்து நிமிஷத்திலே பறந்து வந்து விட்டீர்களே! உட்காருங்கள்! அவர்கள் எல்லோரும் பின்கட்டில் இருக்கிறார்கள். அழைத்துவருகிறேன்'' என்று வரவேற்று உபசரித்தாள்.

''அவர்கள் வரட்டும், எனக்கென்ன அவசரம்!'' என்று கூறிய அசோகன், புன்முறுவல் செய்தான்.

மனோன்மணிக்கு அன்று ஒரே பரபரப்பு. என்ன செய்கிறோம் ஏது செய்கிறோம் என்ற நினைவு இன்றி அவள் இங்குமங்கும் ஓடிக் கொண்டிருந்தாள். சாப்பாட்டு அறையில் இலை போடச் சொல்ல வேண்டும் என்ற அவசரத்தில், அவள் தன் கையில் பிடித்திருந்த அழகுப் பையை ஹாலிலிருந்த பெரிய அலமாரி ஒன்றின் மேல்

தட்டின் மீது வைத்துவிட்டு, விரைந்து பின்கட்டிற்குச் சென்று விட்டாள்.

புஸ்தகங்களை எடுத்துப் பார்ப்பவன் போல், அலமாரியருகில் நெருங்கிச் சென்று, அசோகன், புத்தகங்களைச் சிறிது பொழுது புரட்டினான். மனோன்மணியின் சிவப்பு நிறக் கைப் பை மிகவும் உப்பிக் காணப்பட்டதும் அவனது ஆவல் அதிகமாயிற்று. சுற்றுமுற்றும் கவனித்துவிட்டு அதை எடுத்து மெல்லத் திறந்தான். பத்து ரூபாய் நோட்டுக்களாக மூன்று பெரிய கத்தைகள் அதற்குள் திணிக்கப் பெற்றிருப்பதைக் கண்டதும், அசோகனின் இருதயம் படபடவென்று துடிக்க ஆரம்பித்தது.

முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு, சுற்றிலும் நன்றாகக் கண்களால் ஆராய்ந்தான். மாடியில் சுரேஷ்குமாரன் முதலியோர் ஏதோ பேசிச் சிரிக்கும் சப்தம் கேட்டது. பின் கட்டில், வேலைக்காரர்களுடன் மனோன்மணி கூச்சலிட்டு உத்தரவு போடுவது கேட்டது. அவனைத் தவிர அந்தச் சமயம் அந்த ஹாலில் யாரும் காணவில்லை. பையில் கையைவிட்டு, சட்டென்று ரூபாய் நோட்டுக் கத்தைகள் மூன்றையும் எடுத்து தன் நிஜார் பையில் செருகிக் கொண்டான்.

பையைப் பத்திரமாக மூடி இருந்த இடத்தில் வைத்துவிட்டு வெளியே வந்தான். வாயிலில் நிறுத்தியிருந்த தனது காரின் ஆசனத்தின் அடியில், ரூபாய் நோட்டுக்களை மறைவாக வைத்துவிட்டு, காரின் கண்ணாடிக் கதவுகளைச் சாத்தி காரைப் பூட்டி, சாவியைப் பையில் போட்டுக் கொண்டான். அப்பொழுதுதான் அவனுக்கு நிம்மதி ஏற்பட்டது.

''மிஸ்டர் அசோகன், இங்கேயே இருக்கிறீர்களே? சா[illegible] இலை போட்டாயிற்று வாருங்கள்'' என்று அழைத்துக் கொ[illegible] சுரேஷ்குமாரன் வந்தபொழுது அசோகன் காரின் முன்பாக[illegible] திறந்து ஏதோ பழுது பார்க்கிறவன் போல் அபி[illegible] கொண்டிருந்தான்.

''நேற்றுத்தான் கம்பெனிக்குப் போய்விட்டு வந்தது. அதற்குள் இடக்கு செய்ய ஆரம்பித்துவிட்டது. ஆனால் அப்படி ஒன்றும்

பிரமாதமான கோளாறு இல்லை'' என்று தன் முப்பத்திரண்டு பற்களையும் காட்டி, வாய்விட்டு உரத்துச் சிரித்த அசோகன், ''என்னால் நீங்கள் காத்திருக்க நேர்ந்ததே... மன்னிக்கவும்!'' என்று பணிவாகக் கூறிவிட்டுப் பின் தொடர்ந்தான்.

''இவர்தான் சோமசேகர், அயலூர் பண்ணையாரின் மகன். இவர் நமது நண்பராகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது'' என்று சுரேஷ்குமாரன், தங்கள் வீட்டு வருங்கால மருமகனை, அசோகனுக்கு அறிமுகப்படுத்தினான்.

''அயலூர் பண்ணையார் மகன், 'மைகாட்' ஆச்சர்யம், எங்களுக்கு இவர்கள் எல்லாம் உறவினர்களாயிற்றே? பண்ணையாரின் அத்தை மகளைத்தான் எங்கள் சிற்றப்பாவின் பேரனுக்குக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அடடா!'' என்று அட்டகாசமாகப் பொய்களை அள்ளி வீசிய அசோகன் சோமசேகரன் அருகில் பாய்ந்து சென்று அவனது கரத்தைப் பற்றி ஆர்ப்பாட்டமாகக் குலுக்கினான். ''இந்த வீட்டிற்கு நீங்கள் உறவினராகுமுன் நாம் உறவினர்களாகி விட்டோம், ஹ்ஹா! ஹகஹா!'' என்று கூறிவிட்டு ராட்ஸசச் சிரிப்புச் சிரித்தான்.

எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தனர். மனோன்மணி, அருணா, நளினி மூவரும் ஒரு வரிசையில் அமர்ந்தனர். எதிர்புறமாக, சோமசேகர், சுரேஷ்குமாரன், அசோகன் மூவரும் உட்கார்ந்து கொண்டனர். பழனியப்பக் கவுண்டர் ஆண்களுக்குச் சற்றுத் தொலைவில் உட்கார்ந்தார். லோகநாயகி, உணவு பரிமாறுவதை மேற்பார்வையிட்டுக் கொண்டு, இடையே தன் வருங்கால மருமகன் லக்ஷணத்தை ஆராய்ந்து மனம் மகிழ்வதில் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தாள்.

அசோகன், கொஞ்சமும் அஞ்சாது மிகவும் துணிவாக, இலையில் பரிமாறப் பெற்ற சுவை மிகுந்த நாலாவித பலகாரங்களையும் ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தான். கைச்செலவிற்கு வேண்டிய பணத்திற்கு ஒரு வகையாக வழி பண்ணிவிட்டோம் என்ற திருப்தியில் அவனுக்கு நன்றாகப் பசித்தது. உணவை ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

சோமசேகர் என்னதான் பெரிய பண்ணையாரது மகன்

என்றாலும், பட்டிக்காட்டிலே வாழ்ந்து வழக்கப்பட்டவன். பட்டிக்காட்டுப் பணக்காரர்கள் வாழும் தோரணைக்கும் பட்டணத்துப் பணக்காரர்கள் வாழும் விதத்திற்கும் அதிக வித்தியாசம் இருப்பதை அப்பொழுதுதான் அறிந்து கொண்டான். பழனியப்பக் கவுண்டரின் பங்களா, அது அலங்கரிக்கப் பெற்றிருந்த விதம், அந்த வீட்டு மனிதர்கள், அவர்கள் சிநேக பாவத்திலே ஆண், பெண் என்று அதிக பேதமின்றி கலந்து கொண்ட முறை. அதே சமயம் அத்துமீறாது வரம்புடன் நடந்து கொண்ட விதம் எல்லாம் அவனுக்கு ஒரே பிரமிப்பை உண்டாக்கின. ஆணும், பெண்ணும் சரி சமமாக வாழும் மேனாட்டிலிருந்து திரும்பி வந்திருந்தான் என்றாலும், இந்தியப் பண்பாட்டை ஒட்டியும் ஒட்டாமலும் மேனாட்டு நாகரிக முறைகளை கலந்தும், கலக்காததும் போல் அனுசரித்த பழனியப்பக் கவுண்டர் வீட்டு நாகரிகம் அவனுக்கு மிகவும் பிடித்து விட்டிருந்தது. அசட்டுச் சிரிப்புச் சிரித்தபடி அவன், என்ன சாப்பிடுகிறோம் என்ற நினைவேயின்றி, விருந்தைப் புசித்துக் கொண்டிருந்தான்.

சுரேஷ்குமாரனுக்குச் சாப்பிடவே பிடிக்கவில்லை. அவனது கண்ணும் கருத்தும், அருணாவின் பக்கம் லயித்திருந்தன. அவளது முகம் வாட்டமாகக் காணப்படுவதைக் கவனித்த அவன் உள்ளூரக் கலங்கிக் கொண்டிருந்தான்.

சோமசேகரையும் நளினியையும் மாறிமாறிக் கவனித்துக் கொண்டிருந்த அருணாவின் இருதயம் துயரத்திலே, வெடித்து விடும்போல் இருந்தது. சிரமப்பட்டு வாயில் திணித்துக் கொண்ட உணவுப் பொருள்கள் தொண்டையின் கீழ் இறங்க மறுக்கவே, அவள் இலையில் போட்ட உணவைக் கொறித்துக் கொண்டிருந்தாள்.

மனோன்மணிக்கு ஒரே சந்தோஷம். நளினியின் விவாகத்தை நடத்தியவுடன் அவளது விவாகத்தை நடத்திவிடப் போவ[illegible] லோகநாயகி கூறிவிட்டிருந்தாள். அதனால் அவள் நளினி[illegible] பார்ப்பதும் சோமசேகரை ஒருமுறை உற்றுக் கவனிப்பதும், [illegible] எதிரே தெரிந்த நிலைக் கண்ணாடியில் பிரதிபலித்த தனது [illegible] எழிலை ஒரு முறை கவனித்துக் கொள்வதும், கடைசியாக ஒரு வாய் உணவை உட்கொள்ளுவதுமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தாள்.

டொமாடோ ரஸத்தை ஒரு வாய் குடித்துவிட்டு, 'ஹாவ்' என்று ஏப்பமிட்ட கவுண்டர் தமது வருங்கால மருமகனின் புத்திசாலித்தனத்தைப்பற்றி கணக்கிட்டுக் கொண்டிருந்தார். தமது பாக்குத்தூள் வியாபாரத்திலே, அவனுக்குக் கொஞ்சமாவது ஆர்வம் இருக்குமா, அல்லது சுரேஷ்குமாரன்போல் வியாபாரத்தின் மீது இச்சையின்றி பட்டம் பதவியென்று கிளம்பிவிடுவானா என்பதையெல்லாம் பற்றி ஆராய்ந்தவாறு மௌனமாக மற்றவர்கள் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

மொத்தத்தில் கவுண்டருக்குப் பண்ணையார் மகனைப் பிடித்திருந்தது. அவனது படிப்பு, செல்வம், அந்தஸ்து, அழகான தாற்றம் எல்லாமே நளினிக்கு மிகவும் பொருத்தமானவையாகக் ணப்பட்டதனால், கவுண்டரைப் பொறுத்தவரை கல்யாணத்திற்குத் தி வைக்க வேண்டியதுதான் பாக்கியாக இருந்தது.

சிநேகிதியை ஒரு முறை கடைக்கண்ணால் பார்ப்பதும் பிறகு சங்கோஜத்துடன் சோமசேகர் பக்கம் ஒரு முறை பார்ப்பதுமாக காலத்தை ஓட்டினாள் நளினி. அந்தஸ்து, அழகு, படிப்பு, அனைத்தும் ஒருங்கே படைத்த சோமசேகரை அவளுக்கு மிகவும் பிடித்து விட்டது. அவனைத் தனக்கு மணாளனாகத் தனது பெற்றோர்கள் தேடிப் பிடித்ததைக் குறித்து எல்லையில்லா மகிழ்ச்சியில் அவள் உள்ளம் பூரித்தது. அந்த ஆனந்தம் அவளது அழகிய முகத்தை இன்னும் அழகுறச் செய்தது.

விருந்து முடிந்ததும், தனக்கு உடம்பு சுகமில்லை என அருணா விடை பெற்றுக் கொண்டு வீட்டிற்கு விரைந்து சென்றுவிட்டாள். அவள் போன பின்பு கொஞ்ச நேரம் எல்லோரும் மகிழ்ச்சியுடன் பற்பல விஷயங்களைப் பற்றிப்பேசிக் கொண்டு பொழுதை உல்லாசமாகக் கழித்தனர்.

சிறிது நேரம் சென்றதும், சோமசேகர் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினான். அவனைக் கொண்டு விட்டுவர சுரேஷ்குமாரனும் சென்றுவிடவே அசோகனும் மனோன்மணியும் மட்டுமே தனியாக வார்த்தையாடிக் கொண்டு அமர்ந்திருந்தனர். பேச்சு சுவாரஸ்யத்தில் பணத்தைப்பற்றி மனோன்மணி மறந்திருக்கும் சமயம், தான்

அங்கிருந்து நழுவிவிட வேணும் என்று தீர்மானித்து அசோகன், வீட்டிற்குக் கிளம்ப எழுந்திருந்தான்.

''நம் கம்பெனியின் 'பாம்பே ஏஜெண்ட்' என்னைப் பார்க்க வருவதாக தந்தி கொடுத்திருந்தான். இன்னும் பல வேலைகள் எனக்காக காத்துக் கிடப்பதால் நானும் விடை பெற்றுக் கொள்ள வேண்டியதுதான்'' என்று இழுத்தாற்போல் கூறிவிட்டு அசோகன், தளுக்கு நடைபோட்டுக்கொண்டு ஹாலை விட்டு வெளியேறினான்.

''இருங்கள். ஒரு நிமிஷம்'' என்று கை அமர்த்திய மனோன்மணி, சிட்டுக்குருவி போல் உள்ளே ஹாலுக்குள் விரைந்தாள். அலமாரியைத் திறந்து அவசரமாகக் கைப்பையை எடுத்தாள். அதைத் திறந்ததும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது! ''ஐயோ என்ன அநியாயம்!'' என்று வாய்விட்டு அலறினாள் திகைப்புடன்.

வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு, வயிறாரச் சாப்பிட்ட திருப்தியுடன் ஹாலுக்குள் நுழைந்த லோகநாயகி மிகவும் வியப்புடன், ''என்ன, மனோ! என்ன விஷயம்?'' என்று கேட்டாள்.

ஒரு மாத காலமாக, வீட்டு சாமான்கள் வாங்கும் பணத்திலே, சுரண்டல் செய்து இரண்டாயிரம் ரூபாய்கள்வரை சேமித்து வைத்திருந்தாள் மனோன்மணி. அப்போதைக்கப்போது கையில் இப்படிச் சேருகின்ற பணத்தை தன் காதலனிடம் கொடுத்துப் பத்திரப்படுத்தி வைத்தால், பிற்கால வாழ்க்கைக்கு இப்பணம் உதவும் என அவள் நம்பினாள். சிரமப்பட்டுச் சேகரித்த பணம் அனைத்தும் மாயமாக மறைந்து விட்டிருப்பது கண்டு அவளுக்குப் பகீர் என்றிருந்தது.

இரண்டாயிரம் ரூபாய்கள் களவு போய்விட்டது என்றால், அத்தையம்மாள் ''இவ்வளவு பணம் உனக்கு ஏது?'' என் கேட்டாலும் கேட்டு விடுவாள் என அஞ்சிய மனோன்ம துக்கத்தைத் தாளாமல், ''அத்தை, நீங்கள் கைச் செலவிற்காக எ கொடுத்திருந்த இருநூறு ரூபாய்களையும் இந்தப் பை வைத்திருந்தேன். காணவில்லை'' என்று தேம்பினாள். அவள கண்களில் நீர் பொங்கியது.

வாயிற்படியிலே தயக்கமாக நின்ற அசோகன், திரும்பி உள்ளே

வந்தான், ''டோண்ட் பி ஸில்லி. பணம் போனால் போகட்டும். அதற்கு ஏன் வருத்தப்பட வேண்டும்? போலீஸிற்கு தெரியப்படுத்தினால் கள்வனைக் கண்டுபிடித்து விடலாம்'' என்றான் அமுத்தலாக.

''இருநூறு ரூபாய்களுக்காக, போலீஸ், கேஸ் இந்த தடபுடல் ஏன்? போகட்டும்... கண்ட இடத்தில் பணத்தை அஜாக்கிரதையாகப் போட்டதற்கு இது ஒரு பாடம்னு எடுத்துக்கோ, ஏன் வீணாக வருத்தப்படுகிறே?'' என்றாள் லோகநாயகி, மிகவும் நிதானமாக.

''உங்களுக்கு இங்குள்ள வேலையாட்கள் எவர் மீதும் சந்தேகம் உண்டோ?'' என்று துப்பறிபவன் ஹோதாவில் கேட்டான் அசோகன்.

''ஐயா, எங்கள் வீட்டு வேலைக்காரர்கள் அனைவரும் நாணயமானவர்கள். இதுவரை எந்தப் பொருளையும் கை நீட்டி எடுத்தவர் இல்லை'' என்று எரிச்சலுடன் பதில் அளித்த லோகநாயகி அதிருப்தியுடன் அவனை வெறித்துப் பார்த்தாள்.

''அப்படியானால் விருந்தாளிகளில் எவரேனும் எடுத்திருக்க வேண்டும். விருந்துக்கு வந்தவர்களில் அந்நியர்கள் அருணா, நான், சோமசேகர் மூவர்தான். சோமசேகர் முதல் முதலாக வந்த இடத்தில் இவ்வாறு நடந்து கொள்ள நியாயமில்லை. ஆகவே அவரை நீக்கிவிடலாம். மீதமுள்ளவர்கள் நாங்கள் இரண்டு பேர்கள். எனக்கும் அருணாவுக்கும் இந்த வீட்டில் நல்ல பழக்கம் உண்டு. ஓரளவு உண்டு. எங்கள் இருவரில் யாரேனும் ஒருவர் இந்தப் பணத்தை எடுத்திருக்கக் கூடாதா?... என்ன?'' என்று கேட்டுவிட்டு கோர நகைசெய்தான்.

''உங்கள் விளையாட்டுப் பேச்சு மற்றவர் காதில் பட்டால், மிகவும் தவறாகப் போய்விடும். யார் எடுத்தார்களோ பகவானுக்குத்தான் தெரியும். அதை விட்டுத் தள்ளிவிட்டு இனிமேல் ஜாக்கிரதையாக இருக்கவேணும்'' என்றாள் லோகநாயகி.

அசோகன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு தாழ்வான குரலில் ''நான் சொல்கிறேன் என்று கோபித்துக்கொள்ளக்கூடாது. அருணா விருந்தின்போது ஒரு மாதிரியாக இருந்தாள்'' என்று ஆரம்பித்தான்.

''சரி விட்டுத் தள்ளுவோம்'' என்று சுருக்கமாகப் பதிலளித்த லோகநாயகி அப்பால் சென்றுவிட்டாள்.

''நீ ஒரு சமயம் என் மேல் சந்தேகப்படுகிறாயோ என்னவோ? இந்த விருந்துக்கு ஏன் வந்தோம் என்று என் மனம் வேதனையாகிவிட்டிருக்கிறது'' என்று மனோன்மணியிடம் கூறிவிட்டு, மீண்டும் உரத்த குரலில் சிரித்தான் அசோகன்.

''இல்லை'' எனத் தலையை ஆட்டிய மனோன்மணி பேச முடியாது துக்கத்துடன் திணறினாள். ''அத்தை எதிரில் இருநூறு ரூபாய்கள் என்று பொய் சொன்னேன். உங்களிடம் கொடுப்பதற்காக என் பாங்கியிலிருந்து எடுத்து இரண்டாயிரம் ரூபாய்கள் தனியாகப் பையில் வைத்திருந்தேன்'' என்று கூறிவிட்டுக் கண்ணீர்விட்டு விம்மினாள்.

''த்ஸ்ஸோ! த்ஸ்ஸோ! என்ன கஷ்டம். இருநூறு ரூபாய்கள் என்று நான் கூட அசட்டையாக அல்லவா இருந்துவிட்டேன்? இது பெரிய தொகை அல்லவா. களவாடியவர்களைச் சும்மாவா விடுவது?'' என்று கையை ஓங்கி, ஜன்னல் கட்டைமீது குத்திய அசோகன் மிகவும் கவலை மேலோங்கிய குரலில், ''மனோ! நீ எப்படியாவது உன் அத்தையிடம் அருணாவின் குணத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். நடத்தையில் மோசம் என்பதுடன் இந்தப் பெண், பெரிய திருடியாகவும் இருக்கிறாள். இப்படிப்பட்ட ஒரு பெண் இந்த வீட்டு மருமகளாக வருவது உங்கள் அனைவருக்கும் பிடித்தமாகவா இருக்கிறது? சேச்சே! கேட்டதிலிருந்து வெட்கத்தினால் நாக்கைப் பிடுங்கிக் கொள்ள வேணும்போல் எனக்கு பெருத்த அவமானமாக இருக்கிறது'' என்று மிகவும் கோபமாகப் பேசிய அசோகன், மனோன்மணி பக்கம் திரும்பி, மிகவும் ரகசியமாக ''ஆமாம் மனோ! நாமிருவரும் கொஞ்சம் முயற்சித்தால், இந்த விவாகத்தை நிறுத்திவிட முடியாதா?'' என்று கேட்டான்.

''சின்னஞ்சிறு வயதிலேயே இத்தனை திருட்டுத்தனமா இவளுக்கு? இருக்கட்டும். இவள் இந்த வீட்டிற்குள் காலடி எடுத்து வைக்காதபடி செய்து விடுகிறேனா, இல்லையா பாருங்கள்!'' என்று பற்களைக் கடித்துக் கொண்டு ஆத்திரத்துடன் சபதம் செய்தாள் மனோன்மணி.

''சபாஷ்!'' என்று கூறிய அசோகன், ஒரு ராட்சஸச் சிரிப்பு சிரித்துவிட்டு, காரில் ஏறிக்கொண்டு இரண்டாயிரம் ரூபாய்களுடன் சிட்டாகப் பறந்து போய்விட்டான்.

36

பழனியப்பக் கவுண்டர் செல்வ மகளின் விவாக காரியங்கள் துரிதமாக நடைபெறலாயின. நளினிக்கு சோமசேகரை மிகவும் பிடித்துவிட்டிருந்தது. பழனியப்பக் கவுண்டர் வீட்டு சம்பந்தம் சேகருக்கும் திருப்தியாக இருந்தது. பிள்ளைக்கும் பெண்ணுக்கும் இவ்விவாகத்தில் பூரண திருப்தி என்பதை அறிந்த பெற்றோர்கள் ஒன்று கூடிப்பேசி, தீர்மானம் செய்து விவாக தேதியையும் குறிப்பிட்டு விட்டார்கள். விருந்திலிருந்து திரும்பி வந்ததிலிருந்து அருணா சஞ்சலத்தில் நெருப்பிலிட்ட புழுவாகத் துடித்துக் கொண்டிருந்தாள். நளினிக்கு விவாகத் தேதி நிச்சயிக்கப்பட்டு விட்டதென்ற செய்தியைக் கேட்டதும் அவள் மனம் பட்ட வேதனையை விவரிக்கவே சாத்தியமாகாது.

சோமசேகர் திடீரென இவ்வாறு தன் மனத்தை மாற்றிக் கொண்டதை இந்திராணி அறிவாளா? அறிந்திருந்தால் தன் துயரத்தை அருணாவிடம் இதுவரை தெரிவிக்காமலா இருப்பாள்? பாவம்; இந்திராணி கள்ளங்கபடமற்ற பெண். தான் ஏமாற்றப்படுவதை அறியாது, வீணாகப் பற்பல பகல் கனவுகள் கண்டு கொண்டு, சோமசேகரை இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறாள். அக்காவுக்கு உண்மையை அறிவிக்க வேண்டியது அருணாவின் கடமையல்லவா? இதை எவ்வாறு தெரிவிப்பது? உண்மையை அறிந்தால் இந்திராணி மனம் உடைந்து போவாளே?

சோமசேகர் என்ன மனிதன்! இரண்டு வருஷ காலமாக இந்திராணியைக் காதலிப்பதாக ஆசை காட்டி கடைசியில் இப்படிக் கைவிடுவது முறையா? இந்த அநீதியை யாரிடம் முறையிட முடியும்? நளினியிடம் உண்மையைச் சொன்னால் நளினி நம்ப மறுத்தாலும் மறுக்கலாம் - என பலவாறு தனக்குள்ளே எண்ணி, இரவும் பகலும்

தன் மனத்தைக் குழப்பிக் கொண்டு வேதனையில் ஆழ்ந்து கிடந்தாள் அருணா.

கவுண்டர் வீட்டு விருந்திலிருந்து வந்த பிறகு அருணா மிகவும் முகவாட்டத்துடன் காணப்படுவதைக் கண்ட ஜெகதாவிற்குக் கோபம் பற்றிக் கொண்டுதான் வந்தது. 'சாப்பாடு போட்டு, நல்ல துணிமணிகள் வாங்கிக் கொடுத்து பெரிய இடத்திலே வாழ்க்கைப்பட வசதிகளும் செய்து கொடுத்த பிறகும் கூட இந்தப் பெண்ணுக்கு திருப்தியே இல்லை. நன்றி கெட்ட பெண்' என்று தனக்குள்ளே வெகுண்டாள்.

தன் மனத்தில் ஏற்பட்ட சந்தேகத்தை, நீண்ட காலம் ஒளித்து வைக்க விருப்பமில்லாமல் ஒரு நாள் அவளிடம் கேட்டும் விட்டாள். ''ஏண்டி அருணா! ஏன் இப்படி எதையோ பறிகொடுத்தவள்போல் மூஞ்சியைத் தூக்கிக் கொண்டு நடக்கறே? நேத்திக்குக்கூட கவனிச்சேன் லோகநாயகி தன் பெண்ணுக்கு வாங்கி வச்சிருக்கிற சீர் பாத்திரங்களைக் காட்டியபோது, உன் மூஞ்சி ஒரேயடியாக மாறிப் போச்சு. லோகா அதைக் கவனிச்சிட்டு இருந்தால் என்ன நினைப்பாள்? நளினியைப் பார்த்து நீ பொறாமைப் படுவதாகத்தான் எண்ணிக் சொல்வாள். எனக்குக்கூட அப்படித்தான் தோணுது. அவளைப் பார்த்து நீ காய்ந்தா சாத்தியப்படுமா? அவள் கோடீஸ்வரனின் மகள், அயலூர் முழுதுமே இந்த சீர்வரிசைகளைப் பார்த்து மூக்குமேலே கை வைக்கணும்னு லோகா பணத்தைப் பணமென்று பாராமல் ஜோடிக்கிறாள். என்ன பீரோ அது! ஆஹாஹா! அது ஒண்ணே பந்தலுக்கு அழகு செய்யப் போதுமே. நகைகளில்தான் எத்தனை விதம்? என்ன நினுசுகள்? பாத்திரங்களில் எத்தனை ரகம்! கவுண்டர் மகள் கல்யாணம் என்றால் அதற்குத் தகுந்த ஹோதாவோடுதான் நடக்கும்! அதைப் பார்த்து நீ வயிறெரிந்தால் கட்டுப்படியாகுமா?

''ஏழைக்குத் தகுந்த எள்ளுருண்டை என்ற பிரகாரம், நானும் என்னால் ஆனவரை கடன் உடன் என்று பாராது எவ்வளவோ உன் கல்யாணத்திற்காக, சீர் வாங்கிச் சேர்த்து வைத்திருக்கிறேன். உங்கப்பன் ஏதாச்சும் ஒரு செப்பு தம்பிடி செலவழித்திருப்பானா? சொல்லு, ஏதோ இது மட்டும் பெரியம்மா நமக்கு எல்லாம் செய்து

மரியாதையாகக் கல்யாணத்தை நடத்தி வைக்க முன்வந்திருந்திருக்கிறாங்களே என்று நன்றி கொஞ்சம் கூட இல்லாம முகத்தைச் சுளுக்கிக் கொண்டு நீ நடப்பது கொஞ்சமும் நன்றாகவேயில்லை. இதுமாதிரி லோகா, மத்தவங்க எதிரே மூஞ்சியை இனிமே கடுத்துக் கொண்டியோ, நான் ரொம்ப பொல்லாதவளாகி விடுவேன்! ஆமாம் சொல்லி விட்டேன்!'' என்று கோபமாகப் பேசினாள்.

பெரியம்மாவின் பிரசங்கம் அருணாவின் மனத்தை மெத்தவும் நோகச் செய்தது. தன் மனத் துயரத்தின் ரகசியத்தை வெளியே சொல்ல முடியாது அவள், ''பெரியம்மா! நளினியின் விவாகத்தைக் கண்டு எனக்குப் பொறாமையுமல்ல, வயிற்றெரிச்சலும் இல்லை. ஒரு வாரகாலமாக என் மனத்திலே ஏதோ சொல்ல முடியாத ஒரு கவலை தானாகவே ஏற்பட்டிருக்கிறது. எதற்கு என்று எனக்கே தெரியாததனால், நான் உங்களிடம் அதைப்பற்றி எவ்வாறு விவரிக்க முடியும்? நீங்கள் எனக்கு இதுவரை செய்திருக்கும் உபகாரம் அநேகம். அனைத்திற்கும் நான் உயிர் உள்ளவரை மிகவும் கடமைப்பட்டவள். ஒரு நாளும் உங்கள் உதவிகளை நான் மறக்கவே மாட்டேன் பெரியம்மா!'' என்று மிகவும் கெஞ்சிய குரலில் பதிலளித்தாள். துக்கம் தாள முடியாது முடிவில் வாய்விட்டு அழத் தொடங்கிவிட்டாள்.

''நான் என்ன சொல்லிவிட்டேன். அதுக்கு நீ இப்போ அழறே சரி, சரி, கண்ணைத் துடைச்சுக்கோ! நளினி கல்யாணம் முடிந்தவுடன் அந்த பீடை மனோன்மணியின் கல்யாணத்தையும் லோகா முடிக்க போகிறாளாம். அதற்குப் பிறகு உங்கள் கல்யாணத்தை முடிக்க உத்தேசித்திருக்கிறாளாம். நளினி கல்யாணம் தை மாசம் நடக்கப் போகிறது. இன்னும் இரண்டு மாசம் காத்திருக்கணும்னு நினைச்சாலும் எனக்கு அலுப்பா இருக்கு. நிச்சயம் பண்ணினதும் சட்புட்னு 'கல்யாணத்தை முடிச்சுபுட்டால்தான் தேவலை. என்னவோ எல்லாம் என் கையிலா இருக்கிறது? லோகாவின் மனசுப்படி நடக்க வேண்டியிருப்பதாலே நாம் பொறுத்துப் போக வேண்டித்தான் இருக்கு. என்னவோ அருணா, கல்யாணம் ஆகிறவரை லோகாகிட்டே நீ மட்டும் மரியாதையாக, அடங்கி ஒடுங்கி இரு. அவ்வளவுதான் எனக்குச் சொல்லத் தெரியும்'' என்று கூறிவிட்டு

விரக்தியாக நீண்டதொரு பெருமூச்செறிந்தாள் ஜெகதா.

இந்த சம்பாஷணை நடந்த அடுத்த தினம் காலை வாயிலில், ''ஜெகதா அம்மாள்! தந்தி'' என்று கூவிக்கொண்டு தந்திச் சேவகன் வந்து நின்றான். கணக்குப் புத்தகத்தை ஆராய்ந்து கொண்டிருந்த ஜெகதா இதைக் கேட்டதும் வெலவெலத்து நடுங்கிப் போனாள்.

தந்தி என்றாலே அவளுக்கு மெத்த பயம். மூக்குக் கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக்கொண்டு, கை கால்கள் பதற, நெஞ்சு படபடக்க, வாயிலுக்கு விரைந்தாள். கையெழுத்திட்டு உறையைக் கிழிப்பதற்குள் அவளுக்கு உயிரே போய்விடும் போலிருந்தது. ஜெகதாவிற்கு அரைகுறையாக ஆங்கிலம் படிக்கத் தெரியும் என்றாலும், தந்திக் காகிதத்தில் கிறுக்கப்பட்டிருந்த ஆங்கிலத்தை அவளால் கூட்டிப் படிக்க முடியவில்லை.

''அருணா! எங்கே போய்விட்டே? இங்கே வந்து தொலை சீக்கிரம்! தந்தி வந்திருக்கிறது'' என்று உரத்த குரலில் கத்திக் கொண்டு ஆவேசம் பிடித்தவள்போல் ஹாலுக்குள் ஓடி வந்தாள்.

''இதைப் படிச்சுச் சொல்லு. என்னை என்னவோ பண்ணுகிறது'' என்று கூச்சலிட்ட ஜெகதா காகிதத்தை அருணாவிடம் வீசி எறிந்துவிட்டு, தொப்பென ஒரு சோபாவில் உட்கார்ந்து கொண்டாள். ''ஏ வள்ளி, குடிக்க ஒரு லோட்டா தண்ணியைக் கொண்டா. தாகம் நாக்கைப் பிடுங்குது!'' என்று உச்ச ஸ்தாயியில் இரைந்து கத்திவிட்டு, ஆசனத்தில் சாய்ந்து கொண்டாள். தந்தியில் என்ன பயங்கரமான சங்கதி வந்திருக்கிறதோ என்ற திகிலில் அவள் உடல் முழுவதும் வியர்வையாக வழிந்தோடியது.

தந்திக் காகிதத்தைப் பிடித்திருந்த அருணாவின் கைகள் நடுங்கின. படித்து முடித்ததும் அவள் முகம் வெளிரடைந்தது. கண்கள் பயத்தினால் விரிந்தன. ''பெரியம்மா, எங்க அப்பாவுக்கு உடம்பு அதிகமாக இருக்கிறதாம். என்னை உடனே புறப்பட்டு வரும்படி அண்ணா தந்தி கொடுத்திருக்கிறார்!'' என்றாள்.

இதைக் கூறி முடிக்குமுன் துக்கம் அவள் தொண்டையை அடைத்துக் கொண்டது. முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு, விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

''எனக்கு அப்பவே தெரியும், ஏதோ ஒரு கெட்ட சமாசா கேட்கப் போகிறோம் என்று எனக்குப் புரிந்துவிட்டது. ஒரு வாரமா மூஞ்சியைத் தூக்கிக்கொண்டு நீ நடந்ததன் விபரீதம் இது போலிருக்கு. அட பாவி சமயத்துக்குச் சதாசிவம் நம் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டுவிடுவான் போலிருக்கே! என்ன உடம்பு ஏதுன்னு விவரமா ஒரு கடிதம் போடக்கூடாதா? இது வேறே ஒரு செலவு பாக்கியா?'' என்று அங்கலாய்த்தாள் ஜெகதா.

தேவையான கொஞ்ச சாமான்களுடன் அருணா அன்று இர வண்டிக்குக் கிராமத்திற்குப் புறப்பட்டாள். அவசரத்தில் அவளுக்கு நவினியிடம் நேரில் சென்று விடை பெற்றுக் கொள்ள முடியவில்லை டெலிபோனில் தோழிக்குச் செய்தியைச் சொல்லிவிட்டு, கிராம செல்லும் காரணத்தை விளக்கி ஒரு கடிதம் சுரேஷ்குமாருக்கு எழுதிவிட்டு கிளம்பினாள்.

சதாசிவம். பத்து தினங்களாகக் கப ஜுரத்தில் வேதனைப்பட்டு கொண்டிருந்தான். வயோதிகமும், நலிந்த உடலும் அவன் நோயை மும்முரமாக்கிவிட்டிருந்தன. போதாததற்குத் தன் பிடிவாதத்தினால் வைத்தியம் செய்து கொள்ள மறுத்து மருந்துகளும் சாப்பிட மறுத்து வியாதியை இன்னும் அதிகரிக்க விட்டிருந்தான்.

அருணாவின் வரவை முன்கூட்டியே எதிர்பார்த்து ஸ்டேஷனிலிருந்து அழைத்துப்போக அண்ணன் வந்திருந்தான் தந்தையின் உடல்நிலை கொஞ்சம் பரவாயில்லை என்பதை அவனிடமிருந்து அறிந்ததும் அருணா சிறிது மனச் சமாதான மடைந்தாள். வீட்டிற்குள் அவள் நுழையும் பொழுது, சதாசிவம் கூடத்து கட்டிலில் சாய்ந்தபடி எழுந்து உட்கார்ந்திருந்தான். தன் சிறிய மகளைக் கண்டதும் அவனது முகத்தில் ஏளன நகை அரும்பியது ''இது ஆனந்தன் வேலையா? தந்தி கொடுத்து உன்னை வரவழைத்திருக்கிறான். மடையன். பெரிய மனிதர் வீட்டு மருமகளான உனக்கு இந்த ஏழைத் தகப்பனின் ஞாபகம் கூட இன்னும் இருக்கிறதே! என் மக்கள் எல்லோரும் வந்தாகிவிட்டது. இனிமேல் நான் சாக வேண்டியதுதான் பாக்கி'' என்று கூறிவிட்டு நகைத்தான் சிரிப்பின் இடையே, பயங்கரமான இருமல் ஏற்படவே, 'கொல் கொல்' என்று உயிரே போய்விடும் போல் கோரமாக இருமத் தொடங்கினான்.

நரைத்த அவனது தாடியையும், நலிந்த உடலையும் பரிதாபமாகப் பார்த்தாள் அருணா. தந்தையின் மனத் துயரத்தை ஒரு பொழுதும் அகற்றமுடியாத துர்பாக்கியக் குழந்தைகளாக தாங்கள் அமைந்ததை எண்ணி, அவள் மனம் துயர வசப்பட்டது.

''அப்பா, உங்கள் உடல் நிலை இப்பொழுது சிறிது தேவலை என்பதை அறிய மனம் நிம்மதியாக இருக்கிறது'' என்று மெல்லிய குரலில் முனகினாள்.

''நான் சாகாது உயிருடன் இருப்பது உனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறதா?'' என்று கேட்ட சதாசிவம் மீண்டும் வறட்சியாக ஏளன நகை செய்தான்.

கூடத்துத் தூண் மறைவில் நின்று கொண்டிருந்த இந்திராணி, தன் அருகில் வரும்படி தங்கைக்கு ஜாடை செய்தாள். ''நல்ல நாளையிலேயே அப்பாவுக்கு முரட்டுக் குணம். இப்பொழுது சீக்குவேறேயா, அதனால், அவர் மூளை கலங்கிக் கிடக்கிறது. சதா வீட்டில் கூச்சல் போட்டு, கோபித்துக் கொண்டு ரொம்ப லூட்டி செய்கிறார். நீ ஒன்றும் அவருடன் அதிகம் பேச வேண்டாம்'' என்று ரகசியமாகச் சொன்னாள்.

முன்போல் இம்முறை அக்காவிடம் மனம் விட்டுப் பேச தங்கையால் முடியவில்லை. சோமசேகர் பற்றிய ரகசியம் அவள் மனத்தை உறுத்திக் கொண்டிருந்தது. ஆனால் வீடு இருந்த நிலையில் அருமை அக்காவிடம் அதுபற்றி வாயைத் திறக்கவும் விரும்பவில்லை.

சதா இருமிக் கொண்டு, எல்லோரையும் கடிந்த வண்ணம் இருந்த நோயாளித் தந்தையுடன் நாட்கள் மிகவும் மெல்ல நகருவதுபோல் அருணாவுக்குத் தோன்றியது.

அன்று மாலை, இந்திராணி குடத்துடன் தண்ணீர் எடுக்க ஆற்றுக்குப்போனவள், விளக்கு வைக்கும் நேரமாகியும் வீடு திரும்பவில்லை. ஹரிக்கன் விளக்கைத் துடைத்து எண்ணெயிட்டு, கொளுத்தி கூடத்தில் வைத்துவிட்டு, அருணா திகிலுடன் வாயிற்புறத்தைத் எட்டிப் பார்த்தாள். வானத்திலே கருமேகங்கள்

கவிந்து கொண்டு பெரும் மழைக்கு அடிகோலிக் கொண்டிருந்த

கொல் கொல் என்று இருமியபடி எழுந்து கட்டிலில் உட்கார்ந்த சதாசிவம் ''அருணா!'' என்று கோபத்துடன் இரைந்து கூப்பிட்டான்.

''என்னப்பா? என்ன வேணும்?'' என்று கேட்டு அருணா பதட்டமாக அருகில் ஓடிவந்தாள்.

''இந்திராணி இன்னும் வரவில்லையா? எப்போ தண்ணி எடுக்கப் போனவள்?... ம்!'' என்று உறுமிய சதாசிவம், அருணாவை மிகவும் ஆக்ரோஷமாக உற்றுப் பார்த்தான்.

''துணிகளைத் துவைத்து வர நேரமாகிறது போலிருக்கிறது'' என்று மென்று விழுங்கினாள் அருணா. உண்மையிலேயே அக்கா திரும்பிவர தாமதம் ஏற்பட்டது அவள் மனத்தையும் உறுத்திக் கொண்டுதான் இருந்தது.

''வேலிக்கு ஓணான் சாக்ஷியா? அக்காவுக்கு ஏற்ற தங்கைதான்! நீங்கள் இரண்டு பேரும் என்னை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்!'' என்று ஆத்திரத்துடன் அவன் கூச்சலிட்டு இரைந்து பேசியதனால் அவனுக்கு மூச்சுத் திணறியது.

அருணாவுக்குப் பயத்தில் நா வரண்டு போயிற்று. அவளால் பேசமுடியவில்லை. ''எங்கே போகிறாள் என்பதை உன்னிடம் சொல்லவில்லையா?'' என்று அதட்டிக் கேட்டான் சதாசிவம் தொடர்ந்தாற் போல்.

இல்லை என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டிய அருணா பயத்துடன், தாழ்வாரத்தில் ஒதுங்கியபடி நின்று கொண்டாள்.

''மானங்கெட்ட குடும்பம். தரித்திரம் பிடித்த பெண்கள்'' என்ற சதாசிவம் பற்களைக் கடித்துக்கொண்டு, தன் அருகிலிருந்த முக்காலியைக் கோபத்துடன் காலால் உதைத்துத் தள்ளினான். நோயாளிக்கு ஆகாரமாக இந்திராணி கொண்டு வந்து வைத்திருந்த கஞ்சிப் பாத்திரம் தரைமீது விழுந்து உருண்டோடியது. அதிலிருந்த கஞ்சி நாலா பக்கமும் சிதறிப் பரவியது.

கருமையாகிக் கொண்டு வந்த வானத்திலிருந்து சிறு தூறல்கள்

போட ஆரம்பித்தன. இதுதான் சமயமென எண்ணியவளாக அருணா, முற்றத்தில் கிடந்த விறகுக் குச்சிகளைப் பொறுக்கி அடுக்குவதில் முனைந்தாள். மழைத்துளிகள் பெருக ஆரம்பித்தன. மின்னலும் இடியுமாக வானம் சோவென்று மழையைக் கொட்ட ஆரம்பித்தது. மழையில் நனைந்து தொப்பலாகிவிட்ட இந்திராணி, உள்ளே வந்ததும், குடத்தை இறக்கி, கீழே வைத்துவிட்டு நனைந்து போயிருந்த தனது புடவையைக் கையால் பிழிந்து கொண்டு நின்றாள்.

''இவ்வளவு நேரம் தண்ணியெடுக்கவா போயிருந்தாய்? வெட்கம் கெட்ட பெண்ணே? உன் மானங்கெட்ட நடத்தையை நான் அறிவேன்'' என்று கத்திக் கொண்டு சதாசிவம் படுக்கையினின்று எழுந்து நின்றான்.

திடுக்கிட்ட இந்திராணி, தலையை நிமிர்த்தி அவனை ஆச்சர்யத்துடன் வெறித்துப் பார்த்தாள்.

''தண்ணியெடுக்கப் போவதாகப் போக்குக் காட்டி, அந்தப் பண்ணையார் மகனுடன் காதல் நாடகமா போடுகிறாய்? வெட்கங்கெட்ட நாயே!'' என்று சீறிய சதாசிவம், ஒரே பாய்ச்சலில், தாழ்வாரத்திற்கு ஓடி விறகுக் கட்டையைக் கையில் எடுத்துக் கொண்டான்.

தந்தை தனது வழக்கமான ஆயுதத்தைக் கையில் எடுத்துக்கொண்டதைக் கண்டதும் அருணா பயத்துடன் ''அப்பா! அப்பா!'' என்று கிரீச்சிட்டுக் கத்தினாள்.

''வாயை மூடு நீ! உன்னையும் இதனால் ஒரே போடு போட்டு விடுவேன்.'' என்று தன் சிறிய மகளைப் பார்த்து ஒரு அதட்டல் போட்ட சதாசிவம், தான் நோயாளி என்பதையும் மறந்து இந்திராணியை அடிக்க ஓங்கினான்.

இதுவரை மௌனமாக நின்ற இந்திராணி வெறிபிடித்தவள்போல் ஒரு துள்ளலில் நகர்ந்து கைக்கு எட்டாது நின்றாள். ''நிறுத்துங்க அப்பா! அடிப்பீங்களோ! அடிக்கிறதை நான் பார்த்துடறேன்! இன்னும் நான் பச்சைக் குழந்தைன்னு நினைச்சுக்கிட்டிருக்கீங்களோ'' என்று கோபமாகக் கத்தினாள்.

''எதிர்த்தா பேசுகிறாய் நாயே! உன் மண்டையை நொறுக்கி விடுகிறேன்'' என்று கூச்சலிட்ட சதாசிவம், பாய்ந்து முன்வான்

கவிந்து கொண்டு பெரும் மழைக்கு அடிகோலிக் கொண்டிருந்தது.

கொல் கொல் என்று இருமியபடி எழுந்து கட்டிலில் உட்கார்ந்த சதாசிவம் ''அருணா!'' என்று கோபத்துடன் இரைந்து கூப்பிட்டான்.

''என்னப்பா? என்ன வேணும்?'' என்று கேட்டு அருணா பதட்டமாக அருகில் ஓடிவந்தாள்.

''இந்திராணி இன்னும் வரவில்லையா? எப்போ தண்ணி எடுக்கப் போனவள்?... ம்!'' என்று உறுமிய சதாசிவம், அருணாவை மிகவும் ஆக்ரோஷமாக உற்றுப் பார்த்தான்.

''துணிகளைத் துவைத்து வர நேரமாகிறது போலிருக்கிறது'' என்று மென்று விழுங்கினாள் அருணா. உண்மையிலேயே அக்கா திரும்பிவர தாமதம் ஏற்பட்டது அவள் மனத்தையும் உறுத்திக் கொண்டுதான் இருந்தது.

''வேலிக்கு ஓணான் சாக்ஷியா? அக்காவுக்கு ஏற்ற தங்கைதான் நீ! நீங்கள் இரண்டு பேரும் என்னை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்!'' என்று ஆத்திரத்துடன் அவன் கூச்சலிட்டான். இரைந்து பேசியதனால் அவனுக்கு மூச்சுத் திணறியது.

அருணாவுக்குப் பயத்தில் நா வரண்டு போயிற்று. அவளால் பேசமுடியவில்லை. ''எங்கே போகிறாள் என்பதை உன்னிடம் சொல்லவில்லையா?'' என்று அதட்டிக் கேட்டான் சதாசிவம் தொடர்ந்தாற் போல்.

இல்லை என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டிய அருணா பயத்துடன், தாழ்வாரத்தில் ஒதுங்கியபடி நின்று கொண்டாள்.

''மானங்கெட்ட குடும்பம். தரித்திரம் பிடித்த பெண்கள்'' என்று சதாசிவம் பற்களைக் கடித்துக்கொண்டு, தன் அருகிலிருந்த முக்காலியைக் கோபத்துடன் காலால் உதைத்துத் தள்ளினான். நோயாளிக்கு ஆகாரமாக இந்திராணி கொண்டு வந்து வைத்திருந்த கஞ்சிப் பாத்திரம் தரைமீது விழுந்து உருண்டோடியது. அதிலிருந்த கஞ்சி நாலா பக்கமும் சிதறிப் பரவியது.

கருமையாகிக் கொண்டு வந்த வானத்திலிருந்து சிறு தூறல்கள்

போட ஆரம்பித்தன. இதுதான் சமயமென எண்ணியவளாக அருணா, முற்றத்தில் கிடந்த விறகுக் குச்சிகளைப் பொறுக்கி அடுக்குவதில் முனைந்தாள். மழைத்துளிகள் பெருக ஆரம்பித்தன. மின்னலும் இடியுமாக வானம் சோவென்று மழையைக் கொட்ட ஆரம்பித்தது. மழையில் நனைந்து தொப்பலாகிவிட்ட இந்திராணி, உள்ளே வந்ததும், குடத்தை இறக்கி, கீழே வைத்துவிட்டு நனைந்து போயிருந்த தனது புடவையைக் கையால் பிழிந்து கொண்டு நின்றாள்.

''இவ்வளவு நேரம் தண்ணியெடுக்கவா போயிருந்தாய்? வெட்கம் கெட்ட பெண்ணே? உன் மானங்கெட்ட நடத்தையை நான் அறிவேன்'' என்று கத்திக் கொண்டு சதாசிவம் படுக்கையினின்று எழுந்து நின்றான்.

திடுக்கிட்ட இந்திராணி, தலையை நிமிர்த்தி அவனை ஆச்சர்யத்துடன் வெறித்துப் பார்த்தாள்.

''தண்ணியெடுக்கப் போவதாகப் போக்குக் காட்டி, அந்தப் பண்ணையார் மகனுடன் காதல் நாடகமா போடுகிறாய்? வெட்கங்கெட்ட நாயே!'' என்று சீறிய சதாசிவம், ஒரே பாய்ச்சலில், தாழ்வாரத்திற்கு ஓடி விறகுக் கட்டையைக் கையில் எடுத்துக் கொண்டான்.

தந்தை தனது வழக்கமான ஆயுதத்தைக் கையில் எடுத்துக்கொண்டதைக் கண்டதும் அருணா பயத்துடன் ''அப்பா! அப்பா!'' என்று கிரீச்சிட்டுக் கத்தினாள்.

''வாயை மூடு நீ! உன்னையும் இதனால் ஒரே போடு போட்டு விடுவேன்.'' என்று தன் சிறிய மகளைப் பார்த்து ஒரு அதட்டல் போட்ட சதாசிவம், தான் நோயாளி என்பதையும் மறந்து இந்திராணியை அடிக்க ஓங்கினான்.

இதுவரை மௌனமாக நின்ற இந்திராணி வெறிபிடித்தவள்போல் ஒரு துள்ளலில் நகர்ந்து கைக்கு எட்டாது நின்றாள். ''நிறுத்துங்க அப்பா! அடிப்பீங்களோ! அடிக்கிறதை நான் பார்த்துடறேன்! இன்னும் நான் பச்சைக் குழந்தைன்னு நினைச்சுக்கிட்டிருக்கீங்களோ'' என்று கோபமாகக் கத்தினாள்.

''எதிர்த்தா பேசுகிறாய் நாயே! உன் மண்டையை நொறுக்கி விடுகிறேன்'' என்று கூச்சலிட்ட சதாசிவம், பாய்ந்து முன்னால்

வந்தான். சோர்வினால் அவனுக்கு மூச்சு வாங்கியது.

''என்னைக் கை தொட்டு அடிக்க உங்களுக்கு உரிமை கிடையாது! பெற்றுவிட்ட தந்தை என்ற ஹோதாவில் நீங்கள் கொலை செய்தாலும் கேட்பாரில்லை என்ற எண்ணமோ? வயதாகியும் புத்தியில்லாத மனிதன்!'' என்று ஆக்ரோஷமாகக் கூவினாள் இந்திராணி.

''அக்கா!'' என்று அருணா இடையே தன்னை எச்சரித்ததைக் கேட்ட இந்திராணி மிகவும் மிடுக்காக, அருணா பக்கம் திரும்பி ''அடிநாவில் பட்ட அடியும் உதையும் போதாதுன்னு, இப்ப வேற அடிபட வேணுமா? போதும் எனக்கு இந்த வீடு, இந்த உறவு, இந்த பந்தம், இந்தத் தொல்லை எல்லாம். அப்பா, உங்கள் கண் முன்னாடி இந்த வீட்டைவிட்டு இதோ நான் போகிறேன். நீங்கள் யாரும் என்னைத் தடுக்க முடியாது. இந்த அடிமை வாழ்விலிருந்து எனக்கு விடுதலை வேண்டும். ஆனந்தமான வாழ்க்கை எனக்காகக் காத்திருக்கிறது'' என்று ஆத்திரமாகப் பேசிவிட்டு, வேகமாகத் திரும்பி வாயிலுக்குச் சென்று, கொட்டும் மழையில் ஓடி மறைந்து போனாள்.

''வீட்டை விட்டு ஓடவா பார்க்கிறாய்? அயோக்கியக் கழுதை'' என்று கத்திய சதாசிவம் அவளைத் தொடர வேகமாக தாழ்வாரத்தில் நடந்தான். தரைமீது வழிந்து ஓடிக் கொண்டிருந்த கஞ்சியில் கால் வைத்ததும் வழுக்கி, தடார் என்று அடியற்ற மரம்போல் விழுந்து மூர்ச்சையானான்.

37

அயலூர் பண்ணையார், ஒரு முறை கனைத்துவிட்டு படுக்கையில் சாய்ந்தபடி பெரிய ஜாபிதா ஒன்றை ஊன்றிப் படித்துக் கொண்டிருந்தார். வெளியே சென்றிருந்த மகன், தமது சொற்படி உடனே திரும்பிவிட்ட சந்தோஷத்திலேயே அவரது நோய் பாதி குணமாகிவிட்டிருந்தது. எஞ்சியிருந்த பாதியும் பெரிய இடத்துப்

பெண்ணை மகனுக்கு முடித்துவிட்ட குதூகலத்தில் ஓடி மறைந்துவிட்டிருந்தது. நோயாளியெனப் படுத்த படுக்கையாகக் கிடந்த அவர், கல்யாணத் தேதி நிச்சயிக்கப்பட்டதிலிருந்து எழுந்து நடமாடத் தொடங்கிவிட்டார். பண்ணையைச் சேர்ந்த எல்லோரும், வீட்டிற்குப் புதிதாக வரப்போகிற மருமகளின் யோக ஜாதகமேதான் இதற்குக் காரணம் எனப் பேசிக் கொண்டனர்.

ஜாபிதாவைப் படித்துவிட்டு பண்ணையார் மகிழ்ச்சியுடன் அருகில் நின்ற மனைவியின் முகத்தைப் பார்த்தார்.

''நீ உன் மருமகளைப்போல காலேஜ் வாசற்படியை மிதிச்சிருந்தா — ஏதேது உலகத்தையே வைக்கமாட்டே போலிருக்கே! உன் யோசனைகளும், திட்டங்களும் பிரமாதமாகத்தானிருக்கு. என் மனசுக்கு அந்த அயிட்டங்கள் அனைத்தும் ரொம்பப் பிடிச்சிருக்கு'' என்று கூறிவிட்டு லேசாகச் சிரித்தார்.

பண்ணையார் மனைவி சங்கோஜத்துடன் முகத்தைக் குலுக்கினாள். வண்டிச்சங்கரங்கள்போல் அவளது இரு காதுகளையும் வியாபித்துக் கொண்டிருந்த வைர ஓலைகள், பளிச்சென எரிந்துகொண்டிருந்த மின்சார விளக்கொளியில் நீலக் கதிர்களை வாரி அறைமுழுதும் வீசின.

''தம்பி மனசுப்படியே, அவன் சிநேகிதர்களுக்கெல்லாம் ஒரு டீ பார்ட்டி கொடுத்து விடறதுன்னு திட்டம் போட்டு விட்டேன். இன்னும் உங்க யோசனை ஏதாச்சும் இருந்தால் அதையும் சொல்லிவிட்டால் தேவலை. இந்தக் கல்யாணத்தினால் பணம் என்ன செலவானாலும் அக்கறையில்லை. உங்க மனசிற்கும் தம்பி மனசிற்கும் சந்தோஷம் ஏற்பட்டா அதுவே எனக்குப் போதும்'' என்று பெருமையாகக் கூறிவிட்டு, அந்தம்மாள் ஜன்னல் அருகே நின்று கொண்டிருந்த தனது மகனின் முகத்தை ஆவலுடன் பார்த்தாள்.

தாயின் வார்த்தைகளை ஆமோதிப்பவன்போல், புன்முறுவல் செய்த சோமசேகர், மழைக்காக அதுவரை அடைத்துக் கிடந்த ஜன்னல் கதவைத் திறந்தான்.

சோவென்று அதுவரை பொழிந்து கொண்டிருந்த மழை நின்று, வானத்தினின்று லேசாகத் தூறல் போட்டுக் கொண்டிருந்

தோட்டக்காரன் கந்தய்யன் வீட்டு வாயிற்துணில் கட்டியிருந்த கருப்பன், உடலைச் சிலிர்த்துக் கொண்டு, உரத்த குரலில் குரைக்கத் தொடங்கியது.

''யாரம்மா நீ! இந்த வேளையில் பிச்சை கேட்க வந்திருக்கிறாய்? ...ல நேரம் பார்த்தாய்!'' என்று கந்தய்யன் உரத்தகுரலில் யாரையோ ...ட்டுவது தொடர்ந்து கேட்டது.

''காலணா பெறாத சொறி நாய்! அது குரைக்கிற ஜோரைப் பார்!'' என்று கவுண்டர் கலகலவென்று நகைத்தார்.

''இந்தப் பீடையை ஏன் கந்தய்யன் கட்டிக்கொண்டு சாவுறானோ தெரியலை. நல்லா தூங்கும்போது திடீர்னு இப்படி பலமா குரைக்கத் தொடங்குது. அதுக்கப்பால் தூக்கம் வரதே கிடையாது'' என்று அலுத்துக்கொண்ட கவுண்டர் மனைவி, ஜன்னல் அருகே வந்தாள்.

எதேச்சையாகத் தோட்டத்தை எட்டிப் பார்த்த சோமசேகர் திடுக்கிட்டுப் போனான். அது சமயம் ஏற்பட்ட பயத்திலே அவனது உடல் பதறியது. அலங்காரத்திற்காக, பொருத்தப்பட்டிருந்த முட்டை வடிவம் கொண்ட பெரிய மின்சார விளக்கின் ஒளி தோட்டத்து நடைபாதை முழுவதும் வீசிக் கொண்டிருந்தது. அந்த ஒளியில், மழையில் நனைந்து ஈரம் சொட்டும் உடையுடன் நின்று கொண்டிருந்த ஒரு பெண் உருவத்தைக் கண்டதும், திகிலுடன் தன்னையுமறியாது அவசரமாக ஜன்னல் கதவைச் சாத்தி மூடினான். ''ஈரக்காத்து பலமா வீசுது. அப்பால் போங்க! உங்க உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது!'' என்று தாயைப் பார்த்து உளறிய மகன், ''எனக்குக்கூட இந்த நாய் குரைப்பது தலைவேதனையாக இருக்கு. ஏன் இப்படிக் கத்தவிடறான்னு அவனை ஒரு அதட்டல் போட்டுவிட்டு வருகிறேன்'' என்று மின்னல் வேகத்தில் அறையினின்று வெளிப்பட்டு மாடிப்படிகளில் இறங்கி ஓடினான்.

ஒரே பாய்ச்சலாக தோட்டத்திற்கு ஓடிய சோமசேகருக்கு மூச்சுத் திணறியது. ''யாரது! இந்திராணியா?'' என்றான் திகைப்புடன், மிகவும் துணிவாக வாயிலை நோக்கி வந்து கொண்டிருந்த பெண்ணிடம்.

''ஆமாம், நான்தான்! இந்த அகால வேளையில் துணிச்சலுடன்

இவ்வாறு நான் வெளிக் கிளம்பிவிட்டது பற்றித் தாங்கள் கோபிக்கக்கூடாது. மன்னிக்கவேண்டும்'' என்றாள் இந்திராணி துயரத்தால் நடுங்கிய மெல்லிய குரலில்.

சோமசேகர் திகிலுடன் சுற்றுமுற்றும் கவனித்தான். சற்றுத் தொலைவில் நின்று கொண்டிருந்த தோட்டக்காரனைக் கண்டதும் அவனது முகம் அவமானத்தினால் சிவந்து போயிற்று. நெஞ்சு பக்பக்கென்று அடித்துக் கொண்டது. ''கந்தய்யா, நான் கூட்டி வரச்சொன்னேன் என்று அவசரமாக, கணக்குப்பிள்ளை வீராசாமியைக் கூட்டிக்கொண்டுவா!'' என்று உத்திரவிட்டுவிட்டு, அவன் அப்பால் சென்றதும் ''இந்திராணி, இதென்ன செய்கை? அகால வேளையில் தனிமையில் நீ இவ்வாறு இங்கு வந்தது என் பெற்றோருக்கோ மற்ற யாருக்கோ தெரிந்தால் எவ்வளவு விபரீதம் ஆகும், தெரியுமா!'' என்று கோபமாகக் கடிந்து கொண்டான்.

''நான் யோசித்தேன். வேறு வழியில்லாததனால் இங்கே நேரிடையாக வந்துவிட்டேன். தங்களை தினசரி ஆற்றங்கரையிலே சந்தித்துப்பேசும் விஷயம், என் தந்தைக்குத் தெரிந்துவிட்டது. அதனால் அவர் இன்று தினம் ஆற்றிலிருந்து நான் வீட்டுக்குத் திரும்பியபோது, ஆத்திரத்துடன், என்னை அடிக்க வந்துவிட்டார். சேகர்! நீங்கள் சொல்லுங்கள். வயது வந்த பெண். என்னை அடித்துத் துன்புறுத்த இனி அவருக்கு என்ன உரிமை இருக்கிறது? யாருக்காக இனி நான் பயப்பட வேண்டும்? தங்கள் அன்பும் ஆதரவும் இருக்கையில் இந்த பயங்கரமான அடிமை வாழ்வு எதற்கு? இப்படி மனக் கசப்பு ஏற்பட்டதும் என்ன செய்கிறோம் என்ற நினைவின்றி வீட்டை விட்டு ஓடிவந்து விட்டேன்!'' என்று ஆத்திரமும் துயரமும் கலந்த மெல்லிய குரலில் கூறிவிட்டு, விம்மியழுதாள் இந்திராணி.

''நீ செய்த காரியம் மிகவும் பிசகு. ஐந்து மைல் தூரம் தன்னந் தனியாக இருட்டில் கொட்டும் மழையில் வந்தது பெரிய தவறாகும். மேலும் நீ இங்கே என்னைத் தேடிக் கொண்டு வந்தது ரொம்பப் பிசகு. எனக்கு இது சமயம் என்ன செய்வதென்றே தெரியவில்லை!'' என்று கோபத்துடன் கடிந்து கொண்ட சோமசேகர், ''சரி, இப்படி மறைவாக இந்தத் தூண் அருகில் வந்து நில். உன்னை, அம்மா பார்த்துவிடப் போகிறார்கள். பிறகு பெரிய ஆபத்தாகிவிடும்'' என்று எரிச்சலுடன் எச்சரித்தான்.

தோட்டக்காரன் கந்தய்யன் வீட்டு வாயிற்றுணில் கட்டியிருந்த கருப்பன், உடலைச் சிலிர்த்துக் கொண்டு, உரத்த குரலில் குரைக்கத் தொடங்கியது.

''யாரம்மா நீ! இந்த வேளையில் பிச்சை கேட்க வந்திருக்கிறாய்? ...ல நேரம் பார்த்தாய்!'' என்று கந்தய்யன் உரத்தகுரலில் யாரையோ ...ட்டுவது தொடர்ந்து கேட்டது.

''காலணா பெறாத சொரி நாய்! அது குரைக்கிற ஜோரைப் பார்!'' என்று கவுண்டர் கலகலவென்று நகைத்தார்.

''இந்தப் பீடையை ஏன் கந்தய்யன் கட்டிக்கொண்டு சாவுறானோ தெரியலை. நல்லா தூங்கும்போது திடீர்னு இப்படி பலமா குரைக்கத் தொடங்குது. அதுக்கப்பால் தூக்கம் வரதே கிடையாது'' என்று அலுத்துக்கொண்ட கவுண்டர் மனைவி, ஜன்னல் அருகே வந்தாள்.

எதேச்சையாகத் தோட்டத்தை எட்டிப் பார்த்த சோமசேகர் திடுக்கிட்டுப் போனான். அது சமயம் ஏற்பட்ட பயத்திலே அவனது உடல் பதறியது. அலங்காரத்திற்காக, பொருத்தப்பட்டிருந்த முட்டை வடிவம் கொண்ட பெரிய மின்சார விளக்கின் ஒளி தோட்டத்து நடைபாதை முழுவதும் வீசிக் கொண்டிருந்தது. அந்த ஒளியில், மழையில் நனைந்து ஈரம் சொட்டும் உடையுடன் நின்று கொண்டிருந்த ஒரு பெண் உருவத்தைக் கண்டதும், திகிலுடன் தன்னையுமறியாது அவசரமாக ஜன்னல் கதவைச் சாத்தி மூடினான். ''ஈரக்காத்து பலமா வீசுது. அப்பால் போங்க! உங்க உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது!'' என்று தாயைப் பார்த்து உளறிய மகன், ''எனக்குக்கூட இந்த நாய் குரைப்பது தலைவேதனையாக இருக்கு. ஏன் இப்படிக் கத்தவிடறான்னு அவனை ஒரு அதட்டல் போட்டுவிட்டு வருகிறேன்'' என்று மின்னல் வேகத்தில் அறையினின்று வெளிப்பட்டு மாடிப்படிகளில் இறங்கி ஓடினான்.

ஒரே பாய்ச்சலாக தோட்டத்திற்கு ஓடிய சோமசேகருக்கு மூச்சுத் திணறியது. ''யாரது! இந்திராணியா?'' என்றான் திகைப்புடன், மிகவும் துணிவாக வாயிலை நோக்கி வந்து கொண்டிருந்த பெண்ணிடம்.

''ஆமாம், நான்தான்! இந்த அகால வேளையில் துணிச்சலுடன்

இவ்வாறு நான் வெளிக் கிளம்பிவிட்டது பற்றித் தாங்கள் கோபிக்கக்கூடாது. மன்னிக்கவேண்டும்'' என்றாள் இந்திராணி துயரத்தால் நடுங்கிய மெல்லிய குரலில்.

சோமசேகர் திகிலுடன் சுற்றுமுற்றும் கவனித்தான். சற்றுத் தொலைவில் நின்று கொண்டிருந்த தோட்டக்காரனைக் கண்டதும் அவனது முகம் அவமானத்தினால் சிவந்து போயிற்று. நெஞ்சு பக்பக்கென்று அடித்துக் கொண்டது. ''கந்தய்யா, நான் கூட்டி வரச்சொன்னேன் என்று அவசரமாக, கணக்குப்பிள்ளை வீராசாமியைக் கூட்டிக்கொண்டுவா!'' என்று உத்திரவிட்டுவிட்டு, அவன் அப்பால் சென்றதும் ''இந்திராணி, இதென்ன செய்கை? அகால வேளையில் தனிமையில் நீ இவ்வாறு இங்கு வந்தது என் பெற்றோருக்கோ மற்ற யாருக்கோ தெரிந்தால் எவ்வளவு விபரீதம் ஆகும், தெரியுமா!'' என்று கோபமாகக் கடிந்து கொண்டான்.

''நான் யோசித்தேன். வேறு வழியில்லாததனால் இங்கே நேரிடையாக வந்துவிட்டேன். தங்களை தினசரி ஆற்றங்கரையிலே சந்தித்துப்பேசும் விஷயம், என் தந்தைக்குத் தெரிந்துவிட்டது. அதனால் அவர் இன்று தினம் ஆற்றிலிருந்து நான் வீட்டுக்குத் திரும்பியபோது, ஆத்திரத்துடன், என்னை அடிக்க வந்துவிட்டார். சேகர்! நீங்கள் சொல்லுங்கள். வயது வந்த பெண். என்னை அடித்துத் துன்புறுத்த இனி அவருக்கு என்ன உரிமை இருக்கிறது? யாருக்காக இனி நான் பயப்பட வேண்டும்? தங்கள் அன்பும் ஆதரவும் இருக்கையில் இந்த பயங்கரமான அடிமை வாழ்வு எதற்கு? இப்படி மனக் கசப்பு ஏற்பட்டதும் என்ன செய்கிறோம் என்ற நினைவின்றி வீட்டை விட்டு ஓடிவந்து விட்டேன்!'' என்று ஆத்திரமும் துயரமும் கலந்த மெல்லிய குரலில் கூறிவிட்டு, விம்மியழுதாள் இந்திராணி.

''நீ செய்த காரியம் மிகவும் பிசகு. ஐந்து மைல் தூரம் தன்னந் தனியாக இருட்டில் கொட்டும் மழையில் வந்தது பெரிய தவறாகும். மேலும் நீ இங்கே என்னைத் தேடிக் கொண்டு வந்தது ரொம்பப் பிசகு. எனக்கு இது சமயம் என்ன செய்வதென்றே தெரியவில்லை!'' என்று கோபத்துடன் கடிந்து கொண்ட சோமசேகர், ''சரி, இப்படி மறைவாக இந்தத் தூண் அருகில் வந்து நில். உன்னை, அம்மா பார்த்துவிடப் போகிறார்கள். பிறகு பெரிய ஆபத்தாகிவிடும்'' என்று எரிச்சலுடன் எச்சரித்தான்.

வாயிற் தூண் மறைவில் வந்து ஒதுங்கியபடி நின்ற இந்திராணிக்கு துக்கம் நெஞ்சைப் பிளந்தது. சோமசேகர் அளித்த வரவேற்பு அவளுக்குச் சந்தேகத்தையும், சஞ்சலத்தையும் உண்டு பண்ணியது. ''சேகர்! நீங்கள் என்னிடம் இது சமயம் கோபித்துக் கொள்வது தர்மமா! உங்களைத் தவிர யாரும் எனக்குக் கதியே இல்லை. உங்களையே உறுதியாக நம்பி, தந்தையை விரோதித்துக் கொண்டு [illegible]ப்பட்டு வந்திருக்கிறேன். என் நிலையை அறிந்து பேசுங்கள்'' என்று கூறிவிட்டு, துக்கம் தாளாது விம்மி அழத் தொடங்கினாள்.

சோமசேகரின் பாடு மிகவும் அவஸ்தைக் கிடமாகிவிட்டது. யாரோ ஒரு பெண்ணுடன் தான் விவாதித்துக் கொண்டிருப்பது அம்மாவின் காதுகளில் விழுந்து அவர்கள் வந்துவிடப் போகிறார்களே என அவன் பெரிதும் அஞ்சினான். அது சமயம், தோட்டத்துக் கதவைத் திறந்து கொண்டு பண்ணைக் கணக்குப்பிள்ளை வீராசாமி வந்ததைக் காண அவனுக்குக் கொஞ்சம் மனச் சமாதானம் ஏற்பட்டது.

''இந்திராணி, தயவு செய்து ஓலமிடாதே. நான் சொல்கிறபடி கேள். எல்லாம் சரியாகிவிடும்'' என்று இந்திராணியைச் சமாதானப் படுத்திவிட்டு, வீராசாமியை அழைத்துக் கொண்டு, தோட்டத்தின் மறு மூலையை நோக்கிச் சென்றான்.

கொஞ்ச நேரம் பொறுத்து அவர்கள் இருவரும், இந்திராணி நின்று கொண்டிருந்த இடத்திற்கு வந்தனர். சோமசேகர் இந்திராணி அருகில் வந்து சமாதானம் செய்யும் தோரணையில், ''சரி, நடந்ததைப்பற்றி யோசிப்பதில் இனி பயன் இல்லை. இந்த மனிதர் பண்ணை கணக்குப்பிள்ளை. எனக்கு உதவி செய்யும் நண்பர். இப்பொழுது நீ அதிக நேரம் இங்கே நின்று கொண்டிருக்கக் கூடாது. ஆதலால் இவருடன் இவர் வீட்டில் போய்த் தங்கியிரு. வீட்டில் இவருடைய தாயார் உன்னைக் கவனித்துக் கொள்வார்கள். பயப்படவேண்டாம். காலை விடியும் தருவாயில் உன்னை நான் சந்திக்கிறேன்'' என்றான்.

''சீக்கிரம் புறப்படு அம்மா, இங்கே பேசிக் கொண்டிருப்பது ரொம்ப ஆபத்து'' என்று வீராசாமியும் எச்சரித்தான்.

''சேகர்! எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. என் கௌரவம் தங்கள் கையில் இருக்கிறது. ஆதலால், தாமதமின்றி விரைவில் தாங்கள் அங்கே வந்து என்னை அழைத்துக் கொள்ள வேண்டும்'' என்று இறைஞ்சிய இந்திராணி சிறிது நேரம் தயங்கி நின்றாள். பிறகு துணிச்சலை வரவழைத்துக் கொண்டு ''தங்கள் வாக்கில் நம்பிக்கை எனக்கு உண்டு. விரைவில் தாங்கள் வந்து அழைத்துப்போகும் வரை என் மனம் நிம்மதியடையாது'' என்று கூறிவிட்டு, வீராசாமியைத் தொடர்ந்து, பண்ணையாரின் தோட்டத்தைவிட்டு வெளியே சென்றாள்.

கூடத்திற்குள் நுழைந்த மகனைக் கண்ட தாயார், ''என்னப்பா தம்பி! யாரது, யாரோ பெண் குரல் கேட்டதே! என்ன விஷயம்'' என்று கவலையுடன் விசாரித்தாள்.

நெற்றிமீது துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு சோமசேகர் மெல்லியதாகப் புன்முறுவல் செய்தான். யாரோ ஒரு பெண். கணக்குப் பிள்ளைக்குச் சொந்தமாம். அவரைத் தேடிக்கொண்டு வந்தாள். இரவு வேளைகளில் கணக்குப்பிள்ளை இங்கே இருக்க மாட்டார் என்று சொல்லி, தோட்டக்காரனை விட்டு அவரை அழைத்துவரச் சொல்லி, அந்தப் பெண்ணை அவர் வசம் ஒப்புவித்து அனுப்பினேன்.''

''வீராசாமி ஒத்தைக் கட்டை. கல்யாணமின்றி சுத்திக் கொண்டு திரிகிறவன். அவனைத் தேடிக் கொண்டு ஒரு இளம் பெண் வந்தால் அதில் ஏதோ சூது இருக்கவேணும். தம்பி காலம் வரவரக் கெட்டுப் போச்சு!'' என்று முணுமுணுத்த பண்ணையார் மனைவி, அலுப்புடன் சூள் கொட்டினாள். ''அது கிடக்கு. சாப்பிட நேரமாச்சு, நீ வா உள்ளே!'' என்று மைந்தனை உபசரித்து அழைத்துவிட்டு சமையற்கட்டிற்கு ஏகினாள்.

கணக்குப் பிள்ளை வீராசாமியின் தாயார், இந்திராணியிடம் மிகவும் அன்பாக நடந்து கொண்டாள். கட்டியிருந்த ஈர ஆடையைக் கழற்றி விட்டு, உடுத்திக்கொள்ள, பெட்டியினின்று புதிதாக வைத்திருந்த தனது சேலைகளில் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள்.

''பட்டினியாக விடியும்வரை காத்திருக்க முடியாதம்மா! இதைச் சாப்பிடு!'' என்று மிகவும் வற்புறுத்தி, சூடாக ஒரு லோட்டா நிறைய பாலைக் கொண்டு வந்து கொடுத்தாள். இந்திராணியை தங்கள் வீட்டில் கொண்டு வந்து தாயாரிடம் ஒப்புவித்துவிட்டு வீராசாமி எங்கேயோ வெளியில் போனவன் நடு இரவாகியும் ஆளைக் காணவில்லை. பொழுது விடியும் சமயம், வாடகை மோட்டார் வண்டி ஒன்றுடன் வீராசாமி வந்து சேர்ந்தான். ''சீக்கிரம் கிளம்பு அம்மா! இந்த வண்டியில் நேரே நீங்க பட்டணம் போய் ஆகவேணும். எஜமான் உத்தரவு'' என்று கூறிவிட்டு கசங்கிப் போன கடிதம் ஒன்றை அவளிடம் நீட்டினான்.

''அன்புள்ள இந்திராணி,

உன் வழிச்செலவிற்கு வேண்டிய பணம் இத்துடன் அனுப்பியிருக்கிறேன். என் தோழன் துணையுடன், நீ விரைவாக அடுத்த நகரத்திற்குச் சென்று, அங்கே ஒரு ஹோட்டலில் தங்கியிரு. உன்னை அங்கு வந்து சந்தித்து மற்ற விஷயங்களுக்கு ஏற்பாடு செய்கிறேன்.

இப்படிக்கு உன் அன்பன்,

சோமசேகர்.''

இந்தக் கடிதத்தைப் படித்ததும், இந்திராணி அதிகம் யோசிக்கவில்லை. வாடகை மோட்டார் வண்டி எங்கே செல்கிறது என்று கவலைப்படவுமில்லை. தன் வற்றாத அன்பிற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமான சோமசேகரின் ஆணையைத் தட்டாது வண்டியில் ஏறிக் கொண்டாள்.

மறுநாள் காலை, பிற்பகல் பொழுதுக்கு, அவர்கள் பிரயாணம் செய்த வாடகை மோட்டார் வண்டி, நகரத்தின் மிகவும் நெருக்கமான ஒரு தெருவிற்குள் நுழைந்து, மிகவும் குறுகிய வாயிலைக் கொண்ட ஒரு வீட்டின் முன் வந்து நின்றது. ''இறங்கு அம்மா'' என்று உத்தரவிட்ட வீராசாமி, பாய்ந்து முன்னால் இறங்கி, அவளுக்காக காரின் கதவைத் திறந்து வழி விட்டான்.

'சோமசேகர் தங்கியிருக்கச் சொன்னது ஒரு ஹோட்டல் அல்லவா? இது வீடுபோல் தோன்றுகிறதே?' என்று தனக்குள் எண்ணி

கலக்கமடைந்த இந்திராணி, அவனைப் பார்த்து சஞ்சலத்துடன் விழித்தாள்.

மோட்டார் வண்டிக்கு வாடகையை எண்ணிக் கொடுத்து விட்டுத் திரும்பிய வீராசாமி, இந்திராணியின் முகபாவத்தினின்று அவள் மனநிலையை ஊகித்துக் கொண்டு, ''ஹோட்டலில் இடம் இருக்கிறதா இல்லையா என்று முதலில் பார்த்து விட்டுத்தான் உங்களை அங்கே அழைத்துப் போக வேண்டும். இது என்னுடைய சித்தப்பார் பேத்தி வீடு. அதுவரை இங்கேயே தங்கி விட்டுப் போகலாம். கவலைப்படாதீங்க!'' என்று சிரித்தான்.

அவனுடைய பேச்சு, அவன் பார்த்த பார்வை, அவனது சிரிப்பு அனைத்தும் இந்திராணிக்கு மிக்க கலக்கத்தை உண்டாக்கின.

அவள் யோசித்து ஏதும் பேசுமுன், வீட்டின் வாசற் கதவு திறக்கப்பட்டது. ''யாரது?'' என்று அதட்டியபடி அத்தர் மணம் கம்மென்று வீச நடுத்தர வயது கொண்ட பெண்மணி ஒருத்தி, வாயிற்படி முழுவதையும் வியாபித்த வண்ணம் வந்து கம்பீரமாக நின்றாள். கடைக் கண்ணால் எதிரே நின்று கொண்டிருந்த அழகிய பெண்ணின் முகத்தை ஆராய்ந்து விட்டு மிகவும் உற்சாகமாக, ''அயலூர் அத்தானா! வாங்க, ஏது, ஏது, அத்திபூத்தாப் போல இருக்கு, தங்கள் தரிசனம்! இது நம்ப சம்சாரமா? உள்ளே வாங்க! நிற்கிறீங்களே?'' என்று வெற்றிலைக் காவி படிந்த பற்களைக் காட்டி வரவேற்றாள்.

''இது அயலூர் பண்ணையாருக்கு சொந்தக்காரப் பொண்ணு. நமக்கு ஒரு முறையிலே தங்கச்சி உறவு வேணும்'' என்று கூறிவிட்டு, கடகடவென்று சிரித்த வீராசாமி, அந்தப் பெண்மணியைப் பார்த்து பரிகாசமாகக் கண்களைச் சிமிட்டினான்.

அவனது வார்த்தைகளைக் குறிப்பாகப் புரிந்து கொண்ட வீட்டு எஜமானி, ''மல்லிகா! இங்கே வா'' என்று குரல் கொடுத்துவிட்டு, ''அம்மா குழந்தை, உன் பேரு கூட எனக்குத் தெரியலையே? சரி, நீ போய் மல்லிகாவுடன் மாடி அறையிலே இரு. பின்னாடி சாப்பாடு தயார் ஆனதும் கூப்பிடச் சொல்கிறேன். பசிபோல் இருக்கு, மூஞ்சி வாடிக் கிடக்கு'' என்று கூறிவிட்டு, ''அடி மல்லிகா! சீக்கிரம் வா,

எருமைமாடு. காது செவிடாப் போயிட்டதோ? பாவிபெண்ணே!'' என்று ஆத்திரத்துடன் கத்தினாள்.

''பார்வதி கோபம், பாவம், சண்டாளம்னு, சொல்லுவாங்க பெரியவங்க. சின்ன விஷயத்துக்கெல்லாம் உனக்கு இன்னும் கோபம் வருகிறது'' என்று கூறிவிட்டு உல்லாசமாகச் சிரித்த வீராசாமி அவளை ஜாடை செய்து ரேழிப்பக்கம் அழைத்துச் சென்றான்.

''என்ன இது! எந்த ஊர் இந்தப் பொண்ணு. உனக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம். உன் சாமாசாரங்களிலே எனக்கு இப்போதெல்லாம் நம்பிக்கையே கிடையாது. போனவாட்டி உன்னால் நான் போலீஸ்வரை போய் மாட்டிக் கொள்ள இருந்தேன். வம்பு வர்ர விஷயம்னா இப்பவே கையோட கூட்டிக்கொண்டு போயிடு. இங்கே வேணாம்'' என்றாள் கண்டிப்பாக வீட்டின் எஜமானி பார்வதி.

''இதனாலே வம்பு தும்பு ஒண்ணும் நேராது, கவலைப் [illegible]வேண்டாம். இது பெரிய இடத்து விஷயம். அயலூர் பண்ணையார் [illegible]க்கு வேண்டிய பொண்ணு இது. அவருக்குக் கல்யாணம் [illegible]ிட்டதனால், இதை மெதுவாக யார் தலையிலாவது சுமத்தப் [illegible]த்தார். இதை அழைச்சிக்கிட்டுப் போய் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லி எனக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து தாஜா செய்தார். பார்வதி, உனக்குத் தெரியுமே என்னைப்பற்றி? எனக்கு கல்யாணத்திலே நம்பிக்கையில்லை. அதனாலே ஆகட்டும்னு அவரிடம் சொல்லிவிட்டு இங்கே கூட்டி வந்தேன். ஒரு ஐம்பது ரூபாய் கொடுத்திடு. நான் இதை உன் பொறுப்பில் விட்டுவிட்டுப் போய் விடுகிறேன்'' என்றான் ரகசியமாக.

சுவரில் மாட்டியிருந்த படங்கள், கூடத்திலே போட்டிருந்த சோபா நாற்காலிகள், இவைகளை மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நின்ற இந்திராணிக்கு அந்த சூழ்நிலையைப் பற்றி மிகவும் சந்தேகம் ஏற்படத் தொடங்கியது. ''வாம்மா மாடிக்கு! அங்கே போய் உட்கார்ந்திருப்போம்'' என்று உபசரித்த வண்ணம் உள்ளிருந்து வந்த ஒரு இளம் பெண்ணைப் பார்த்ததும் அவளது சந்தேகம் ஊர்ஜிதமாகிவிட்டது. 'தான் வந்து தங்கியிருப்பது, கணக்குப்பிள்ளையின் சித்தப்பார் பேத்தி வீடு அல்ல. அபாயகரமான

ஒரு இடம்' என்பதை கணப் பொழுதிலே அவள் ஊகித்துக் கொண்டு விட்டாள்.

பயத்தில் இந்திராணியின் நெஞ்சு காய்ந்து விட்டது. என்ன ஆபத்து ஏற்படுமோ என்று அச்சத்தினால் அவளால் நடக்கக்கூட முடியவில்லை. ''ஆனந்தன் அண்ணா! என்னைக் காப்பாற்றுங்க'' என்று கூச்சலிட்டு அலற வேண்டும் போல் இருந்தது. ஆனால் துக்கம் அவளது தொண்டையை அடைத்துக் கொண்டது.

38

தன் அலங்காரத்தை ஒருமுறை கண்ணாடியில் பார்த்துக் கொண்டு திருப்தியடைந்த ஜெகதா, கல்யாண வீட்டிற்குக் கிளம்ப மாடியினின்று கீழே இறங்கி வந்தாள். 'குயில் மார்க் இங்க்' வியாபாரி குமரேசன் செட்டியார் மூத்த மகன் திருவேங்கடத்தின் திருமணத்திற்கு அவளுக்கு அழைப்பிதழ் வந்திருந்தது. குமரேசன் செட்டியார் அந்தஸ்தில் பழனியப்பக் கவுண்டருக்கு ஒப்பானவர். அவர்கள் வீட்டுத் திருமண கோலாகலத்தில் கலந்து கொள்வது மிகவும் பெருமைப்படக் கூடிய காரியந்தான். மேலும், ஸ்ரீமதி குமரேசன் அவர்களே நேரில் வந்து ஜெகதாவை அழைத்துவிட்டுப் போயிருந்தார்கள். கிளப்பிலே இரண்டு தடவைகள் சந்தித்தார்கள். ஒரு சினிமாவில் ஒரு முறை பார்த்து லேசாக சிரித்துக் கொண்டார்கள் என்பதைத் தவிர ஸ்ரீமதி குமரேசன் அப்படியொன்றும் ஜெகதாவிற்கு நெருங்கிய சிநேகிதி அல்ல எனினும், பெரிய மனிதர் வீட்டுப் பெண்மணி, வீடு தேடி வந்து அழைத்திருக்கும் பொழுது போகாமல் இருப்பது அழகல்ல என எண்ணிய ஜெகதா, அத்திருமண வைபவத்தைக் கண்டுகளிக்கப் புறப்பட்டாள்.

'கல்யாண வீட்டிற்கு வெறுங்கையுடனா போவது?'' என அவளது மனசாக்ஷி உறுத்தியது. அதிக பழக்கமில்லாத நபர்களுக்கு திருமணப் பரிசாக ஏதும் அளிக்க அவளுக்கு மனமும் வரவில்லை. 'பரிசு எடுத்துப் போவதா, அல்லது வெறுங்கையை வீசிக் கொண்டு சென்று, மணமக்களைப் பார்த்துப் பல்லைக் காட்டி பகட்டாகச்

23

சிரித்து ஒரு கும்பிடு போட்டுவிட்டு வந்து விடுவதா?' என்று வெகு நேரம் யோசித்தாள்.

லோகநாயகி போன்ற, கௌரவம் மிக்க குடும்பத்துப் பெண்கள் பலரும், பலவித பரிசுகளுடன் அங்கே வந்திருப்பார்கள். அப்பொழுது வெறுங்கையுடன் போய் நின்றால் மிகவும் வெட்கக் கேடாகிவிடும் என அஞ்சி, பீரோவைத் திறந்து, அருணாவிற்குக் கல்யாணச் சீராக வாங்கி வைத்திருந்த வெள்ளிப் பாத்திரங்களில் மிகவும் எடை குறைவானதொரு வெள்ளிக் கோப்பையை எடுத்துக் காகிதத்தில் சுற்றிக் கொண்டு, தனது புதிய காரில் வந்து அமர்ந்தாள்.

அது சமயம் வேலைக்காரி வள்ளி ஓடிவந்து, "அம்மா தபாலில் இப்பொழுதுதான் வந்தது" என்று ஒரு கடிதத்தைக் கொடுத்தாள்.

எழுத்திலிருந்து அருணாவிடமிருந்து வந்த கடிதம் என்பதை [illegible]ணித்துக் கொண்ட ஜெகதா, "சரி, புறப்படு நேரமாகிறது" என்று [illegible]டிரைவருக்கு உத்தரவிட்டு, உறையைப் பிரித்து மிகவும் நிதானமாக வாசித்தாள். ஈரத்தரையில் வழுக்கி விழுந்துவிட்டதன் பயனாக மூர்ச்சையாகிக் கிடந்த சதாசிவத்தின் உடல் நிலை கடந்த பத்து [illegible]ங்களாக மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக அருணா [illegible]ழுதியிருந்தாள். "ஆமாம்! இந்த சதாசிவம் சமயத்திற்குத் தலையில் [illegible]ல்லைத் தூக்கிப் போடப்போகிறான். அது தெரிந்த கதைதான்" [illegible]ன்று தனக்குள் முணு முணுத்தபடி ஜெகதா, கடிதத்தை அலட்சியமாக காரின் ஆசனத்தின்மீது வீசிப் போட்டுவிட்டு, திண்டில் சாய்ந்து கொண்டு, வெளியிலிருந்து 'விர்' என இடை வழியே வீசிய குளிர்ந்த காற்றை ரசித்த வண்ணமிருந்தாள்.

குமரேசன் செட்டியார் வீட்டுக் கல்யாணம் மிகவும் பெரிய தோரணையில் நடந்து கொண்டிருந்ததனால் வந்திருந்த விருந்தினர் அனைவரும், கல்யாணப் பந்தலுக்கு, ஒரு பர்லாங்கு தூரத்திலேயே காரை விட்டு இறங்கி நடந்து செல்ல நேர்ந்தது.

நாலாவித வர்ணத் தோரணங்களும், சித்திரங்களும், திரைச் சீலைகளுமாக அலங்கரிக்கப்பெற்று வானளாவி நின்ற மணப்பந்தலைப் பிரம்மிப்புடன் பார்த்தாள் ஜெகதா. இதுவரை அவள் இவ்வளவு பெரியதொரு கல்யாணத்தைக் கண்களால்

கண்டதேயில்லை. தேர் திருவிழாவிற்கு வந்திருந்ததுபோல, பந்தலுக்கு உள்ளேயும் வெளியேயும் நின்ற பிரம்மாண்டமான கூட்டத்திற்குள் புகுந்து ஒரு வழியாக பெண்கள் பகுதியை அடைவதற்குள் அவளது மூச்சு திணறியது. கருத்துடன் அழகு பார்த்துக் கட்டியிருந்த மைசூர் பட்டுப்புடவையின் மடிப்பெல்லாம் சரிந்து நசுங்கிக் குலைந்து போயிற்று.

பந்தலின் மறுகோடியில், ஆகாய விமானம்போல் புஷ்பங்களால் சிங்காரிக்கப்பட்டிருந்த ஒரு விதானத்தின் மீது மணமக்கள் அமர்ந்திருந்தனர். நேரே சென்று அவர்களைப் பாராட்டி, தாங்கள் கொண்டுவந்த பரிசுகளைக் கையில் கொடுத்து வரும் உத்தேசத்துடன் வந்து கொண்டிருந்த சிநேகிதர்கள் ரயில் வண்டித் தொடர்போல் க்யூ வரிசையில் நின்றுகொண்டிருந்தனர். அந்த வரிசை நீண்டு வளைந்து பந்தலுக்குள் பல திக்கிலும் சென்று, வாசல் கேட்வரை வழிந்தோடியதைக் கண்ட ஜெகதா நிராசையாகப் பெருமூச்செறிந்தாள். இவ்வளவு பேர்களும் சென்ற பிறகு கடைசியாகத் தானும் சென்று, மணமக்களை நேரில் ஆசீர்வதிப்பதற்குள் பொழுது போய், மறுநாள் விடிந்துவிடும் என எண்ணிய அவள் கழுத்தை நீட்டி தெரிந்த மனிதர்கள் யாரேனும் இருக்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தாள்.

மணமக்களைத் தரிசிக்கக்கூட முடியாது கூட்டத்தில் திணறிய பலர், அங்கங்கே, தனித்தனியே பிரிந்து சிறு பேச்சு மகாநாடுகள் நடத்திக் கொண்டிருந்தனர். ஜெகதாவைப் போலவே கொண்டு வந்த பரிசைக் கொடுக்க முடியாது திண்டாடிய வயோதிக அம்மாள் ஒருத்தி, ஜெகதாவைக் கண்டதும் பல்லைக்காட்டி, "நேரே இதை நாம் கொண்டு அவர்களிடம் கொடுக்க முடியாது. இங்கே அதற்காக ஒரு குமாஸ்தா இருக்கிறார். அவரிடம் கொடுத்து பெயரைச் சொல்லிவிட்டு ரசீது வாங்கிக் கொள்ளுங்கள்" என்று யோசனை சொன்னாள்.

இடது கரத்தால் பரிசுகளை வாங்கி, அருகில் குவித்துக் கொண்டு, வலது கரத்தால் ஒரு ரசீதைக் கிழித்து வீசிய வண்ணம், பந்தலின் ஒரு மூலையில் அமர்ந்திருந்த குமாஸ்தாவிடம் ஜெகதா தான் கொண்டு வந்த பரிசைக் கொடுத்து விட்டுத் திரும்பினாள். அப்போது அருகில் நின்று கொண்டிருந்த இரு கலாசாலை மாணவிகள் பேசிக்

கொண்டிருந்தது அவள் காதுகளில் பட்டது.

''ரமா! இதெல்லாம் என்ன 'நான்ஸென்ஸ்?' இது கல்யாணமா? அறுபத்து மூவர் திருவிழா போலல்லவா இருக்கிறது! இப்படிக் கல்யாணம் செய்துகொள்ள செளம்மியா எப்படித்தான் ஒப்பினாளோ! நானாக இருந்தால், காதுங் காதும் வைத்தாற்போல் ரிஜிஸ்டர் ஆபிஸில் ஒரு நிமிஷத்தில் கல்யாணத்தை முடித்துக் கொண்டிருப்பேன். இதென்ன கூட்டம்! என்ன ஆர்ப்பாட்டம்! 'நான்ஸென்ஸ்!'' என்று கூறிவிட்டு களுக்கெனச் சிரித்தாள், கொசுவலை போன்ற மெல்லிய சேலையுடுத்தி ஒடிந்து விழும்போல் தோற்றமளித்த நாகரிக யுவதி.

''ரிஜிஸ்டர் விவாகம் செய்து கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தமில்லை. வைதிக முறைப்படி, குடும்ப சம்பிரதாயத்தை ஒட்டி பேஷாக விவாகம் செய்து கொள்ளட்டும். ஆனால், பணத்தை இப்படி வாரி இறைப்பதைவிட்டு, மிகவும் எளிய முறையில் செய்துவிட்டு, செலவழிக்க உத்தேசித்த பணத்தைக் கொண்டு ஒரு …சாலை கட்டுவித்தாலும் பிரயோசனம் உண்டு'' என்றாள், …ளுக்கு அருகில் நின்று கொண்டிருந்த இன்னொரு யுவதி, …லுக்கு.

ஜெகதாவிற்கு இந்த அதிகப் பிரசங்கிகளின் அபிப்பிராயம் எரிச்சலை உண்டாக்கியது.

'அந்தஸ்து, கெளரவம், குடும்ப யோக்யதை என்பதையெல்லாம் பற்றி இதுகளுக்கு என்ன தெரியும்? கலாசாலைப் படிகளை மிதித்துவிட்ட அகம்பாவத்திலே ஏதேதோ தத்துப் பித்தென்று உளறுகிறதுகள். பணத்தைச் சம்பாதித்த ஒருவனுக்கு அதை இஷ்டப்படி செலவழிக்க உரிமையில்லையா என்ன? தர்மம் செய்வதில் இப்படி தர்மம் செய்ய வேண்டும் என்று வலுக்கட்டாயம் செய்ய முடியுமா? கல்யாணம் என்பது ஒருவருடைய சொந்த விஷயம். அதை விமரிசையாகக் கொண்டாடுவதோ எளிய முறையில் செய்து கொள்வதோ அவரவர்கள் பிரியம். கலாசாலை கட்டி வைக்க வேண்டுமாம்! ஏன்! இன்னும் இதுபோல் அரட்டைக் கள்விகள் பல அதிலிருந்து உற்பத்தியாகி, இப்படி அர்த்தமில்லாமல் பேசிக் கொண்டு திரியச் - செய்யவா? அசட்டுப் பெண்கள்!' என்று

கோபத்துடன் அவர்களைப் பற்றித் தனக்குள் எண்ணி வெகுண்ட ஜெகதா, முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டு கொஞ்சம் நகர்ந்து நின்றாள்.

அங்கே ஒரு வயதான பெண்மணி, நடுத்தர வயதுடைய இன்னொரு பெண்மணியுடன் தொண்டை கிழியப் பேசிக் கொண்டிருந்தாள். ''ராமநாதன் செட்டியார் பெண்ணைத்தான் முதலில் பேசினார்கள். பண விஷயத்தினாலே கல்யாணம் நின்று விட்டதாம்'' என்றாள் வயோதிக மாது.

''என்னவோ படிச்சும், பதவி படைச்சும் மனுஷங்களுக்கு விவேகம் வரவேயில்லை. வரவர உலகம் பணத்தைத்தான் மதிக்கிறது. ராமநாதன் செட்டியார் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆனால் அவர் கிட்ட பணம் அதிகம் கிடையாது. என்னவோ அம்மா, இந்தக் காலத்திலே மனுஷங்க மனுஷங்களை மதிச்சா கல்யாணம் நடத்துறாங்க? பணம் பணத்தைத்தான் கட்டிக் கொள்கிறது. வரதட்சணை சீர் இந்தத் தொல்லையெல்லாம் முன்னாளில் சில பேர்கிட்டத்தான் பரவியிருந்தது. இப்போ என்னடான்னா, எல்லா ஜனங்களிடமும் பரவி விட்டிருக்கிறது. எங்க காலத்திலே இதெல்லாம் நாங்க கேட்டறிந்ததில்லை. மருமகனுக்குப் பெண்ணோட அப்பா இருபதினாயிரம் ரொக்கம் கொடுத்து ஒரு பங்களா சீராகக் கொடுத்தாராம். என்னவோ இதெல்லாம் எனக்குப் பிடிக்கல்லே'' என்று அலுத்துக் கொண்டாள் இன்னொரு பெண்மணி.

ஜெகதாவிற்கு இந்தச் சம்பாஷணையும் கேட்கப் பிடிக்கவில்லை. பணக்காரர்கள் அனைவரையும் ஒரே தராசில் போட்டு எடையிட்டுக் கொண்டிருந்த அந்தப் பெண்களின் அருகே நிற்கவும் பிடிக்காது இன்னும் சற்று தூரத்தில் நகர்ந்து நின்று, கழுத்தை நீட்டி சுற்றும் முற்றும் பார்த்தாள். ஸ்ரீமதி குமரேசன் அம்மாளைப் பார்த்து, பற்கள் முப்பத்திரண்டும் தெரிய நகை செய்த வண்ணம், லோக ஆடம்பரமாகப் பந்தலுக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்த நாயகியைக் கண்டாள். 'அப்பாடா!' என்று பெருமையுடன் கூட்டத்தை இடித்துக் கொண்டு, தன் சிநேகிதியைப் பந்தலில் சந்தித்து அளவளாவ விரைந்து ஓடினாள்.

''லோகா!'' என்று உரத்த குரலில் கூவிய ஜெகதாவைத் திரும்பிப் லோகநாயகி ஒருமுறை பார்த்தாள். ஆனால் என்ன ஆச்சர்யம்! முன்பின் தெரியாத புதிய மனிதர்களை முதன்முதலாகக் காணுகையில் ஏற்படும் ஒரு திகைப்புத்தான் அவளது முக பாவத்தில் நிரம்பியிருந்தது.

ஜெகதா திடுக்கிட்டுப் போனாள். அவளால் இதை நம்பவே முடியவில்லை. லோகநாயகிக்கு ஏன் திடீரென இந்தப் பாராமுகம்? அவள் யோசிக்குமுன், பழனியப்பக் கவுண்டரின் தர்மபத்தினி, சரேலென்று வேறு ஒரு திக்கில் திரும்பி, கூட்டத்தில் மறைந்து விட்டாள்.

ஜெகதாவிற்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. 'நேற்றுவரை இணை பிரியாத தோழியாகப் பழகி வந்த லோகநாயகி, இன்று இவ்வளவு மாறுதலை அடைந்திருப்பதன் மர்மம் என்ன? ஒரு சமயம் அவள் ஜெகதாவை சரியாகக் கவனிக்கவில்லையோ என்னவோ! அவள் மனம் மாறிவிடும்படி ஜெகதா குற்றம் ஏதும் செய்யவில்லையே? நாலைந்து நாட்களுக்கு முன்புகூட அருணாவின் அப்பாருக்கு உடம்பு எப்படி இருக்கிறதென்று கேட்டு டெலிபோன் பேசினாளே?' — என்று பலவாறு எண்ணிக் கலங்கிப் போனாள் [illegible]தா. சுபாவத்திலே மிகவும் சோர்வு இயல்புடைய அவளால் இந்த [illegible]ர்ச்சியைத் தாள முடியவில்லை. கண்களில் பெருகிய நீரை [illegible]வித்துக் கொள்ள முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள்.

அது சமயம் அருகில் வந்து நின்ற பாட்டி அம்மாள் ஒருத்தி, ''கல்யாணம் என்றாலும், சில பழைய நினைவுகள் வந்து விட்டால் நமக்கு அழுகையே வந்து விடுகிறது. இல்லையா? இதோ பாருங்க, இந்தப் பெண்ணுக்கு, ஒண்ணு விட்ட மாமா பெண்சாதி நான். இந்தக் குழந்தை மணப் பந்தலிலே இருக்கும் கோலத்தைக் காண, அவ கொடுத்து வைக்கலையேன்னு நினைச்சேன். எனக்கு அழுகை குமுறிக் கொண்டு வந்துவிட்டது'' என்று விவரித்துவிட்டு தன் கண்களைத் துடைத்துக் கொண்டு, ''நீங்க மருமகப் பிள்ளைக்கு உறவுக்காரங்க போல காணுது?'' என்றாள்.

''ஆமாம்'' என்று தலையை அசைத்துவிட்டு ஜெகதா அங்கு இருக்கப் பிடிக்காது விரைவாக கூட்டத்தைக் கடந்து வெளியே

வந்தாள். கல்யாண வீட்டிற்கு விஜயம் செய்ததற்காக, வெற்றிலை பாக்குப் பையைக்கூட வாங்கிக் கொள்ளாது அவள் வேகமாகக் காரையடைந்து, ''சீக்கிரம்! வீட்டிற்கு விடு'' என்றாள். வீடு சேர்ந்தால் போதுமென்றிருந்தது அவள் மனநிலை.

பிறகு அன்று முழுவதும் அவளுக்கு நிம்மதியே ஏற்படவில்லை. சாப்பிடப் பிடிக்கவில்லை. தூக்கம்கூட வரவில்லை. பலவாறு தனக்குள்ளே எண்ணிக் குழம்பிய அவளுக்கு தீர விசாரித்து சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ளாவிடில் மண்டை வெடித்துவிடும் போலிருந்தது. ஆகவே, மறுநாள் மாலை அவசரமாக உடுத்திக் கொண்டு, லோகநாயகியை நேரில் பார்த்துப் பேசப் புறப்பட்டாள்.

கவுண்டர் வீட்டு ஹாலுக்குள் ஜெகதா நுழையும் முன்பு அங்கே பேச்சும் சிரிப்புமாக ஒரே ஆரவாரமாகக் காணப்பட்டது. ஹாலின் நடுவே கிடந்த பெரிய சோபாவில் மிகவும் சொகுசாக சாய்ந்து கொண்டிருந்த அசோகன் இடை இடையே சிகரெட்டை புகைத்த வண்ணம் கைகளை ஆட்டி உரத்த குரலில் கதை அளந்து கொண்டிருந்தான். அதைக் கேட்டுவிட்டு, தாங்க முடியாது கைகளைக் கொட்டி வயிறு குலுங்க நகைத்துக் கொண்டிருந்தார்கள் நளினியும் மனோன்மணியும்.

ஹாலுக்குள் ஜெகதா நுழைந்ததைக் கவனித்ததும், அவர்களின் பேச்சும் சிரிப்பும் மின்சார அதிர்ச்சியுற்றது போல் டக்கென்று நின்றுவிட்டன. பிசாசு ஒன்றை நேரிடையே சந்தித்துவிட்டது போல் மிகவும் பிரமிப்புடன் அந்த மூவரும் அவளை வெறித்துப் பார்த்தனர்.

தன் வரவினால் ஏற்பட்ட திடீர் மௌனம் ஜெகதாவிற்கு மிகவும் விசித்திரமாகத் தோன்றியது. அவள் முகத்தில் அசட்டுக் களை பரவி ஓடியது. ''லோகா வீட்டில்தானே இருக்கிறாள்?'' என்று மென்று விழுங்கிவிட்டுப் புன்னகை செய்ய முயற்சித்தாள்.

அது சமயம், மாடிப்படியில் இறங்கி வந்து கொண்டிருந்த லோகநாயகி, ''ஓ ஜெகதாவா! என்ன சௌக்கியந்தானே?'' என்று கேட்டுவிட்டு, மெல்ல ஹாலுக்குள் வந்தாள். ஜெகதா மேலே பேச எத்தனிக்கும் முன் லோகநாயகி அர்த்தம் ததும்ப, மனோன்மணி

பக்கம் ஒரு முறை பார்த்துவிட்டு, ''உட்காருங்க. நான் அவசரமாக வெளியே போய்க் கொண்டிருக்கிறேன்'' என்றாள்.

அவளது அசட்டையும் அலக்ஷியமும் ஜெகதாவிற்கு மிக்க திகைப்பை உண்டாக்கின. எனினும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், ''நான் உன்னிடம் முக்கியமாக ஒரு காரியம் பேச வந்திருக்கிறேன்'' என்றாள் மெல்லிய குரலில்.

''என்னிடமா? அதைப் பற்றிப் பேசுவதில் இனி லாபமென்ன? நடந்தது நடந்து விட்டது. நளினி கல்யாண காரியத்திலே நான் ரொம்ப அலுவலாக இருக்கிறேன். எனக்கு முக்கியமாக சில வேலைகள் இருப்பதால் நான் வெளியே போய் ஆக வேண்டும்'' என்றாள் அசட்டையாக லோகநாயகி.

''அப்படியானால் நான் நாளைக்கு வருகிறேன். மிகவும் முக்கியமாக உன்னிடம் பேச வேண்டும்'' என்று குழப்பத்துடன் இழுத்தாள் ஜெகதா.

''நாளைக்குக் கூட முடியாது. ஏன், இன்னும் ஒரு பதினைந்து நாளைக்கு எனக்கு யாரிடமும் பேசப் பொழுதேயில்லை'' என்று லோகநாயகி மிடுக்காகப் பேசி முடிக்கு முன், ''அத்தை, நீங்கள் வெளியில் போங்கள். நான் ஜெகதாவுடன் பேசிக்கொண்டிருக்கிறேன்'' என்று கூறிவிட்டு மனோன்மணி குறும்புத்தனமாகக் கண்களைச் சிமிட்டினாள்.

''மன்னித்துக் கொள் ஜெகதா'' என்று கூறிவிட்டு, விர் என்று விரைவாகச் சென்று வாசலில் வந்து நின்ற காரில் ஏறி மறைந்து விட்டாள்.

''உட்காருங்கள், நிற்கிறீர்களே?'' என்று அசோகன் உரிமை நிறைந்த குரலில் ஜெகதாவை உபசரித்தான்.

''உட்காருங்கள், பிறகு என்னவாயிற்று? இந்திராணியைப் பற்றிய விவரம் ஒன்னும் கிடைக்கவில்லையா? பாவம், பெண் வீட்டைவிட்டு ஓடியதைக்கேட்டு அதிர்ச்சியாகி, அப்படியே சதாசிவம் மூர்ச்சையாகி விட்டாராமே! அவருக்கு உடம்பு தேவலையா? பாவம்!'' என்று சூள் கொட்டினாள் மனோன்மணி.

உட்கார நினைத்து, குனிந்த ஜெகதா திடுக்கிட்டுத் துள்ளி நிமிர்ந்து நின்றாள். ''என்ன சொல்கிறாய்! இந்திராணி ஓடிவிட்டாளா?'' என்று ஆச்சர்யமும் கோபமும் தாளாது உரத்துக் கூவினாள்.

''உங்களுக்கு விஷயம் தெரியாதுபோல் பேசுகிறீர்களே? தற்சமயம் அதைப் பற்றிப் பேசத்தானே இங்கே லோகநாயகி அவர்களைப் பார்க்க வந்திருக்கிறீர்கள்? அருணாவின் அக்கா இந்திராணி, அயலூர் பண்ணை வேலையாள் ஒருத்தனுடன் வீட்டைவிட்டு ஓடிவிட்டாள் என்று காரிகுளம் கிராமமே இரண்டுபடுகிறதே? ஓடின பெண்ணை இன்னும் கண்டு பிடித்தாகவில்லையாம். காரிகுளத்திலிருக்கும் என் உறவினர் ஒருவர் நேற்று இங்கே வந்திருந்தார். அவர் இன்னும் பல விவரங்கள் சொன்னார். அதைப் பற்றிப் பேசினால் உங்களுக்கு மன வருத்தமாக இருக்கும்'' என்றான் அசோகன் அமுத்தலாக.

''நீங்கள் சொல்வது பெரிய அபாண்டமான பழியாக இருக்கிறதே? இன்றுகூட அருணா எனக்குக் கடிதம் போட்டிருந்தாள். இப்படி இருந்தால் எழுதாமல் இருந்திருப்பாளா?'' என்று கோபத்துடன் கேட்டாள் ஜெகதா. ஆத்திரத்தில் அவளது வார்த்தைகள் தடுமாறின.

''உங்களுக்கு இன்னும் அவர் தெரிவிக்கவில்லையோ? இந்த சங்கதி காசியிலிருந்து கன்னியாகுமரிவரை தீபோலப் பரவி இருக்கிறது. நேற்று கல்யாண வீட்டில்கூட அருணாவைத் தெரிந்த சில பெண்கள் இதைப் பற்றிப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். எனக்குக் கேட்க மிகவும் அவமானமாக இருந்தது. உங்களுக்குத் தெரிவிக்கவில்லை என்றால் ஆச்சரியமாக இருக்கிறது. ஆமாம் அருணா மனம் சங்கடப் பட்டுக்கொண்டுதான் எழுதவில்லை போலும்! இந்திராணியின் பேரில் நான் குறை சொல்ல மாட்டேன். கல்யாணமாகு முன் அவள் தாயாகி விட்டாள். பாவம், மானத்திற்கு அஞ்சி அந்த மனிதனுடன் ஓடி விட்டாள்!'' என்றாள் மனோன்மணி.

•

ஜெகதாவிற்கு ஆத்திரமும் துக்கமும் குமுறிக் கொண்டு வந்தன. அவளால் பேசவே முடியவில்லை. ''இதில் ஏதோ தவறு இருக்கிறது. நான் விசாரித்த பிறகு இதைப் பற்றிப் பேசுவோம்'' என்று

கோபத்துடன் சொல்லிவிட்டு வேகமாக அங்கிருந்து வெளியேறினாள். வீட்டை அடைந்ததும் நேரே மாடியறைக்குப் போய், தன் சினத்தையெல்லாம் கொட்டி நீண்டதொரு கடிதத்தை அருணாவிற்கு எழுதி முடித்தாள்.

நகரத்தில் விஷயங்கள் இவ்வாறு துரிதமாக நடந்து கொண்டிருக்கையில் அதே சமயம், காரிகுளத்தில் சதாசிவத்தின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாகிக் கொண்டு வந்தது. மூர்ச்சித்து விழுந்ததிலிருந்து அவனுக்கு விடாது காய்ச்சல் வீசிக்கொண்டிருந்தது. ஜன்னி வேகத்தில் அவன் பலவாறு பிதற்றிக் கொண்டிருந்தான்.

அன்று தினம் அவனை வந்து கவனித்த வைத்தியர், 'பிழைப்பது துர்லபம்' என்று கைவிரித்து விட்டுப் போய்விட்டார். இரவு பகலாகத் தந்தைக்கு பணிவிடை செய்த அருணா, சில தினங்களில் துரும்பாக இளைத்து உருமாறிப் போய்விட்டாள். தந்தைக்காகவும், வீட்டை விட்டு ஓடிவிட்ட தமக்கைக்காகவும் அழுதழுது அவளது கண்கள் சோர்ந்து போய்விட்டன. தங்கையைத் தேடி ஆனந்தனும் சலித்துப் போய்விட்டான். ஊரார் பேசிய பழிச் சொல்லைக் காது கொடுத்து அவனால் கேட்க முடியவில்லை. வம்பர்களின் வசை மொழியைக் [illegible]ட்க அஞ்சி அருணா வீட்டிலேயே அடைந்து கிடந்தாள். [illegible]போதைக்கப்போது சிதம்பரமும் அவனது தாயாரும் அங்கு வந்து [illegible]தல் பல கூறினர்.

ஆனந்தன் மருந்து வாங்கிவரச் சென்றிருந்தான். தந்தை அருகிலே அருணா உட்கார்ந்து விசிறிக் கொண்டிருந்தாள். தந்தையின் உடல் நிலை பற்றி விவரமாக எழுதி, ''மருந்துச் செலவிற்குப் பணம் தேவை. உதவ வேண்டும்' என்று பெரியம்மாளுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள். தமக்கை செய்த காரியத்தைப் பற்றியும், தந்தையின் உடல் நிலையைப் பற்றியும் விவரமாக சுரேஷ்குமாரனுக்கும் ஒரு கடிதம் எழுதியிருந்தாள். அன்று பகல் வரை இரு கடிதங்களுக்கும் பதில் ஏதும் வரவேயில்லை.

''இந்திராணி கொஞ்சம் தண்ணி கொண்டா!'' என்று ஜுரவேகத்தில் சதாசிவம் பிதற்றியபடி கட்டிலில் புரண்டான்.

''தூங்குங்க, அதிகம் பேசக்கூடாது'' என்று குழந்தையை

மிரட்டுவது போல் அருணா அவனைச் சமாதானப்படுத்தி விட்டுப் பெருமூச்செறிந்தாள். வறுமையுடன் போராடிய நலிந்த உடல் இப்பொழுது மரணத்துடன் போராடிக் கொண்டு கிடப்பதைக் காண அவளுக்கு மிக்க துன்பமாக இருந்தது. ''பாவம் அப்பா! இந்தப் புவியில் அவதரித்து என்ன பயனைக் கண்டார்! வறுமை அவரைப் பல கொடுமைக்கு ஆளாக்கி விட்டது. வறுமை மட்டும் வந்து குறுக்கிடாவிடில் அவர் வேறுவிதமான மனிதராக இருந்திருப்பார்'' என்று தனக்குள் எண்ணிய மாத்திரம், அவளது கண்கள் நீரைக் கக்கின.

அவளது முகத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த சதாசிவம், ''இந்திராணி, ஏன் அழுகிறாய்? நீ செய்த காரியம் தவறு இல்லையா? நாம் ஏழை என்றாலும், குடும்ப கௌரவம் இல்லையா! அயலூர் பண்ணையார் மகன் உன்னைக் கட்டிக் கொள்வானா? அவனை நீ நம்பி குல மதிப்பைக் கைவிட முடியுமா, சொல்லு'' என்று கேட்டான்.

அருணா விக்கி விக்கி அழுதாள். ''கூடாது அப்பா! நான் இனி நல்ல பெண்ணாக நடந்து கொள்கிறேன். என்னை இம்முறை மன்னிக்கவும்'' என்றாள் தழுதழுத்த குரலில்.

''நான் பார்வைக்கு முரடனாகத் தோன்றலாம். ஆனால், நான் பெற்ற குழந்தைகளிடம் எனக்குப் பாசம் இல்லையா? அடி நாவிலிருந்து எனக்கு என்னவோ பகட்டாகவே பேசத் தெரிவதில்லை'' என்று கூறிச் சிரித்தான்.

தன்னைத் தந்தை இந்திராணி என்று தவறாக நினைத்துப் பேசுவதை எண்ணி மனம் கசிந்து போய், ''சரி, சரி, அப்பா தூங்குங்கள்!'' என்று சமாதானப்படுத்தி விட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டாள் அருணா.

அது சமயம் வாசலில் 'போஸ்ட்' என்ற குரல் கேட்டது. திடுக்கிட்டுத் துள்ளி எழுந்து வாசலுக்குச் சென்று தபால்காரன் நீட்டிய கடிதத்தை ஆவலுடன் பெற்றுக் கொண்டாள். கடித உறைமீது காணப்பட்ட சுரேஷ்குமாரனின் கையெழுத்து அவளது உள்ளத்திலே நம்பிக்கையையும் ஆனந்தத்தையும் உண்டாக்கின. ஆவல் தாளாது அவசரமாக நடுங்கும் கரத்தால் கடித உறையைக் கிழித்து கடிதத்தை எடுத்துப் படித்தாள்.

''அன்புள்ள அருணா,

உன்னுடைய கடிதம் கிடைத்தது. விவரம் அறிந்து வருந்துகிறேன். முந்தாநாள் என் தாயாரிடமிருந்து அவசரமாக வீட்டிற்கு வரச்சொல்லிச் செய்தி ஒன்று வந்தது. அதற்காக நான் கலாசாலையிலிருந்து ஊருக்குப் போயிருந்தேன். நமது விவாகத்தைப் பற்றி என் தாயார் தந்தை இருவரும் நீண்ட நேரம் என்னிடம் பேசினார்கள். அவர்கள் கூற்றில் சில உண்மைகள் இருந்தன. உன் சகோதரி வீட்டை விட்டு ஓடி, மீளாத ஒரு பழியை உண்டாக்கி விட்டது, நமது வாழ்வை மிகவும் பாதிக்கின்றது. என் தாயார் நீ ஏழை என்பதைப் பற்றிக்கூடக் கவலைப்படவில்லை. இந்திராணியின் நடத்தை, எங்கள் குடும்ப கௌரவத்தை மிகவும் பாதிக்கும் என்றே அஞ்சுகிறார்கள். அன்புள்ள அருணா! நீ என்னை மிகவும் மன்னிக்க வேண்டும். இந்நிலையில், நான் உன்னை மணந்து கொள்ள இயலாது. ஆகவே, நாம் ஒருவரை ஒருவர் மறந்து விடுவதுதான் சாலச் சிறந்தது. இந்த பயங்கரமான கடிதத்தை எழுதும் பொழுது என் இருதயம் படும்பாட்டை விவரிக்கவே முடியாது. மன்னிக்கவும்.

இப்படிக்கு,
சுரேஷ்,

கடிதம் அருணாவின் கரத்தினின்று நழுவி, காற்றில் பறந்து திண்ணைக்கு அப்பால் போய் விழுந்தது. அதை ஓடிச்சென்று எடுக்கக் கூட, அவளுக்கு உடலில் வலிமை இருக்கவில்லை. தன்னைச் சுற்றியுள்ள பொருள்கள் அனைத்தும் சுழல்வது போன்ற ஒரு பிரமிப்பு ஏற்படவே அருணா, தூணைப் பிடித்துக் கொண்டு சாய்ந்தபடி நின்றாள். மறுகணம் எங்குமே இருள் மயமாக அவளுக்குத் தென்பட்டது.

39

வேறு வகையின்றி, மல்லிகாவைப் பின் தொடர்ந்து மாடிக்குச் சென்றாள் இந்திராணி. முன் பகுதியிலிருந்து விஸ்தாரமானதொரு அறைக்குள்ளிருந்து, காதைப் பிளந்து விடும் போல் சதங்கை நாதமும், திம், தக, திம், திம் என்ற சப்தமும் கேட்டுக் கொண்டிருந்தன.

''தாராளமாக நீ உள்ளே வரலாம். இனிமேல் நீ எங்களில் ஒருத்திதானே?'' என்று மிகவும் உரிமையாகப் பேசிய மல்லிகா, அவளது கரத்தைப் பற்றி உள்ளே இழுத்துச் சென்று, ஜன்னல் அருகே கிடந்த பிரம்பு நாற்காலி ஒன்றில் உட்கார வைத்தாள். இந்திராணியின் எதிர்பாராத வரவு அங்கு நடந்து கொண்டிருந்த நடனப் பயிற்சிக்கு திடீரென்று முற்றுப்புள்ளி வைத்தது. நரைத்த கூந்தலும், குழி விழுந்த கண்களும், எலும்பும் தோலும் கொண்ட தோற்றத்துடன் தரைமீது அமர்ந்து, நட்டுவாங்கம் செய்து கொண்டிருந்த பெண்மணி, தன் கையில் பிடித்திருந்த கோலைத் தரைமீது வைத்துவிட்டு மிகவும் ஆச்சர்யத்துடன் இந்திராணியை விரைத்துப் பார்த்தாள். அவளது வியப்பை நீடித்து நிற்க வொட்டாது, பயங்கரமானதொரு இருமல் குறுக்கிட்டது. உடலை வளைத்துக் கொண்டு, வாய் ஓயாது, பெரும் சப்தத்துடன் பரிதாபகரமாக இருமிய அவள், பக்கத்திலே தயாராக இருந்த பித்தளைப் பாத்திரம் ஒன்றைக் கையிலெடுத்து, வாயில் நிறைத்து வெளிப்பட்ட கோழையைக் காறி உமிழ்ந்தாள். இந்தக் காட்சி இந்திராணியின் குடலைப் புரட்டியது. வேதனையும் அருவருப்பும் தாளாது அவள் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

அப்பொழுது, தன் எதிரே வியப்பே உருவாக இரண்டு பெண்கள், இடுப்பிலே கையை வைத்த வண்ணம், அபிநய பாணியிலே நின்று கொண்டிருப்பதைக் கண்டாள். அந்த இரு பெண்களும் வயதில் ஏறக்குறைய இந்திராணியை ஒத்தவர்களாக

இருந்தனர். ஒருத்தி சற்று ஒல்லியாகவும், மாநிறமாகவும் இருந்தாள், மற்றொருத்தி நல்ல சிவந்த நிறமாகவும், சதைப்பிடிப்பு நிறைந்த தோற்றமுள்ள வளாகவும் இருந்தாள். ஏறக்குறைய ஒரே உயரமாக இருந்த அவர்கள் இருவரும் ஒரே விதமாகவும் அலங்கரித்துக் கொண்டு பிறவி இரட்டையர்கள் போல் காணப்பட்டனர். மேகவர்ண நார்ப்பட்டையும், மஞ்சள் நிறத் தாவணியும் பாதி முதுகு தெரிய, உடலோடு ஒட்டினாற்போல் தைத்திருந்த ஊதா வர்ணச் சோளியும் அணிந்திருந்தனர். கூந்தலை நெற்றியின் மத்தியில் வகிடு பிளந்து, நீண்ட பின்னலாகப் பின்னித் தொங்கவிட்டுக் கொண்டிருந்தனர்.

பின்னலின் முடிவிலே தொங்கிக் கொண்டிருந்த குஞ்சலங்கள், அவர்கள் ஆடுவதை நிறுத்திக் கொஞ்ச நேரமாகியும் இப்படியும், அப்படியுமாக ஊசலாடிக் கொண்டிருந்தன. வியர்வையினால் கலைந்தது போக எஞ்சிய பவுடர் பூச்சு சிறு திட்டுகளாக, கன்னம், நெற்றி இவைமீது லேசாகத் தெரிந்தது. கண்களில் பூசியிருந்த மை வழிந்து கன்னம் மீது பரவி, கண்ணின் வட்டத்தை மிகைப்படுத்திக் கொண்டிருந்தது. கூந்தலை அலங்கரித்துக் கொண்டிருந்த ஜாதி மல்லிகை மலர்ச்செண்டு, வாடிப்போய், தனது மெல்லிய அழகிய வெண்ணிறத்தை இழந்து புளியம் பூவின் தன்மையைப் பெற்றிருந்தது. அந்த இரு பெண்களையும் எங்கேயோ முன்பு சந்தித்திருந்தது போல் இந்திராணிக்குத் திகைப்பு ஏற்படவே, அவள் அவர்களைச் சிறிது ஆச்சர்யத்துடன் உற்றுப் பார்த்தாள்.

''இவர்கள் இருவரையும் பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய், இவர்கள்தான் சித்தநேரி நாட்டிய சகோதரிகள். 'நாசம்' என்கிற படத்தில் கூட நாட்டியமாடியிருப்பவர்கள். இன்னும் 'புஷ்பராகம்', 'கோதை கோயில்' என்கிற படங்களில், வேஷம் போட்டு நடிக்கப் போகிறார்கள்', என்று மல்லிகா, அவர்களை அவளுக்கு அறிமுகப்படுத்திவிட்டு, இருமிக் கொண்டு தரைமீது உட்கார்ந்திருந்த எலும்பு உருவத்தின் பக்கம் திரும்பி, ''கோமதி அக்கா! இவள் பெயர் இந்திராணி. நாட்டியம் கற்றுக் கொள்ளவும் படத்தில் நடிக்கவும் ஆசைப்பட்டுக் கொண்டு வந்து சேர்ந்திருக்கா. நம்ம அம்மாவுக்குச் சித்தப்பாரோட அத்தை பேத்தி இவள்'' என்று கொஞ்சமும் அஞ்சாது ஒரு பொய்யை அவிழ்த்து விட்டாள்.

எலும்புருவம், முகத்தைச் சுளித்து, அழகு காட்டி ''போடி

பொழப்பத்தவளே! இங்கே இருக்கிற அத்தனை பொண்ணுகளும் உங்க அம்மாளுடைய உறவுப் பொண்ணுகள்தான்'' என்று உறுமிவிட்டு, கோழையை இழுத்துப் பாத்திரத்தில் மீண்டும் காறி உமிழ்ந்தாள்.

''சரிதான், உன் வாயால் நீ கெட்டுப் போகிறாய். நீ பேசுகிற பேச்செல்லாம் அம்மாகிட்ட எடுத்துச் சொன்னா, எலும்புக் கூட்டிலே மன்றாடிக்கொண்டு நிற்கும் உன் உயிர் எமலோகம் போய்ச் சேர்ந்திடும். கொஞ்சம் நாக்கை அடக்கிப் பேசு'' என்று மல்லிகா கோபத்துடன் எச்சரித்தாள் பதிலுக்கு. கோமதி அதைக் காதில்கூட வாங்கிக் கொள்ளவில்லை.

''அம்மாவாம், அம்மா! உனக்கு ஒருத்திக்குத்தான் அம்மாவா? இதோ இங்கே வந்து ஏமாந்து அகப்பட்டுக் கொண்டிருக்கிறாளே இந்தப் பொண்ணு, இவளுக்குக் கூட இன்னும் சில நாளிலே பார்வதி அம்மாவாயிடுவா, போய்ச் சொல்லிக்கோ. எனக்கு ஒண்ணும் பயமில்லை. இந்த அக்கிரமத்திற்கு ஒருநாள் இல்லாட்டி ஒருநாள் போலீஸ் கையிலே உன் அம்மாவும், நீங்கள் எல்லோரும் படப்போகிற போதுதான் உங்கள் எல்லோருக்கும் புத்தி வரப்போகுது'' என்று ஆத்திரமாகப் பேசிய கோமதி, இன்னும் ஒருமுறை காறி உமிழ்ந்துவிட்டு, கீழே வீசிய கோலை எடுத்துக் கொண்டு, ''அது கிடக்கு. உங்க வேலையைப் பாருங்க'' என்று தன் முன் நின்ற இரு பெண்களையும் ஒரு அதட்டல் போட்டாள்.

மல்லிகா மேலே பேசவில்லை. இந்த இரு நாட்டிய சுந்தரிகளின் திக்கில் திரும்பி, ''குந்தளா, மஞ்சுளா, நீங்க ரெண்டு பேரும், உங்க டான்ஸ் பாடம் முடிஞ்சதும் இந்திராணிக்கு ஸ்நான அறையைக் காட்டிக் கொடுத்து உதவி செய்யுங்கள். மாற்று கட்டிக்கொள்ள அவள் சேலை கொண்டு வரவில்லை. அதனால், உங்கள் சேலைகளில் ஒன்றை எடுத்து தற்போதைக்குக் கொடுங்க. பிறகு, அம்மா கடையில் அவளுக்குத் தேவையானது வாங்கிக் கொடுப்பாங்க'' என்று கூறிவிட்டு, கீழே இறங்கிச் சென்று விட்டாள்.

மல்லிகா சென்ற பிறகு சில நிமிஷங்களே, கோமதியினால் நட்டுவாங்கம் செய்ய முடிந்தது. அவளது மெல்லிய உடலை வாட்டிய

அந்த பயங்கரமான இருமல் ஆரம்பித்து விடவே அவள் சலிப்புடன் கையிலிருந்த கோலை தரைமீது வீசி எறிந்துவிட்டு, ''போங்கடி பெண்களா! இந்த நோய் என் உயிரைப் பாதி தின்னுவிட்டது. மிச்சம் பாதியை நீங்க ரெண்டு பேரும் தின்னுவிடுவீங்க போல இருக்குது! உங்க அப்பா அளக்கிற சம்பளத்துக்கு இன்னிக்கு இத்தோட போதும்!'' என்று இருமலிடையே திணறினாள்.

நடனப் பயிற்சியை விரைவாக முடித்துக் கொண்ட மகிழ்ச்சியில் அப்பெண்கள் இருவரும், இந்திராணி அருகே வந்து அமர்ந்து உறவு கொண்டாடத் தொடங்கினார்கள். அவர்கள் பேச்சு, உபசாரம், அவர்கள் சகவாசம் ஒன்றுமே இந்திராணிக்குப் பிடிக்கவில்லை. தன் பயங்கர நிலையை யெண்ணி திக்பிரமையடைந்து போயிருந்த இந்திராணி, அவர்கள் இருவரும் எவ்வளவு உபசரித்தும், குளிக்கவோ, வேறு ஆடைகள் ஆபரணங்கள் அணிந்து கொள்ளவோ, சாப்பிடவோ மறுத்து விட்டாள். சிறிது நேரம் நயமாகவும் கொஞ்சலாகவும் பேசியும் பயன் இல்லாதது கண்டு சகோதரிகள் இருவரும் சலிப்படைந்தனர். ''எங்கள் பேச்சைக் கேட்காவிட்டால் போ. அனாவசியமாக சாப்பிடவும் குளிக்கவும் பிடிவாதம் செய்தா அம்மாகிட்ட நல்ல பூசை வாங்கிக் கொள்வாய்'' என்று பயமுறுத்தி விட்டு அப்பால் சென்று விட்டனர்.

தனியே உட்கார்ந்திருந்த இந்திராணியின் சிந்தனையில் பற்பல எண்ணங்கள் கொடியிட்டு ஓடின. தன் தங்கை அருணா, தமையன் அனந்தன், அப்பா, அடுத்த வீட்டு சௌந்தரம்மாள் அனைவரையும் நினைத்துக் கொண்டாள். அப்பாவின் உடல்நிலை எவ்வாறு இருக்கிறதோ! அக்கா வீட்டைவிட்டு ஓடிவிட்டாள் என்ற அவமானத்தினால் அருணா எப்படியெல்லாம் துன்பப்படுகிறாளோ! சௌந்தரம்மாள், தாயாருக்கு மேல் எவ்வளவு அன்பாக இருந்தார்கள். அவர்களிடமாவது உண்மையைச் சொல்லி யோசனை கேட்டிருந்தால் இந்த அவமான நிலை வந்திருக்குமா? இவ்வளவு நாள் எத்தனையோ கஷ்டத்திற்கும், வறுமைக்கும் இடையே, ஒழுங்காக பெற்றவருக்கு அடங்கிய பெண்ணாக வாழ்ந்துவிட்டு, ஒரு நிமிஷம் பதட்டமடைந்து போய் வெளியே ஓடி வந்தது எவ்வளவு விபரீதமான செய்கை! காரிகுளம் கிராமம் முழுவதும் இவ்வளவு நேரம் என்னவெல்லாம் பேசிச் சிரிக்கிறார்களோ!

''சோமசேகர் எவ்வளவு கொடுமையான மனிதன்! காதலிப்பதாக இரண்டு வருஷ காலம் இனிய வார்த்தைகள் பேசி ஏமாற்றியதோடு அல்லாமல், ஒரு கயவன் கையில் அல்லவா சிக்கும்படி செய்துவிட்டார்! என்ன இரக்கமற்ற மனிதன்! நான் நாசமடைந்து போனாலும், உலகிலே நீதி, சத்யம் என்று ஒன்று உண்மையாக இருந்தால் அது அவரை கட்டாயம் தண்டிக்கும். ஐயோ, இந்தப் பார்வதி என்ன செய்வாள்? அடுத்தபடி இந்தப் பயங்கரமான இடத்தில் என்ன ஆபத்து நடக்கும்?' என்று தனக்குள் எண்ணிக் கலங்கிய இந்திராணி துக்கம் தாள முடியாது விம்மி அழத் தொடங்கினாள்.

வெற்றிலைச் சருகின் மீது சுண்ணாம்பு பூசிக்கொண்டு தலையைக் குனிந்தபடி உட்கார்ந்திருந்த கோமதி, ஒரு முறை இருமிவிட்டு, அவள் பக்கம் திரும்பினாள். ''முதலில் இப்படித்தான் அழுகை வரும். உடலில் உணர்ச்சியும் மனதில் நம்பிக்கையும் நாசமாகிவிட்ட பின்பு அழுகைகூட வராது. என்னைப் பார்! எத்தனை முயற்சித்தாலும் என்னால் அழவே முடிவதில்லை'' என்று கூறிவிட்டு குள்கொட்டினாள்.

இந்திராணியின் நெஞ்சு, படீர் என வெடித்துவிடும் போல் துயரத்திலே குமுறியது. ''புத்திகெட்ட பெண் நான். வீட்டை விட்டுக் கொட்டும் மழையில், துணிவாகப் புறப்பட்டேனே. இத்தனை பெரிய பயங்கரம் காத்திருக்கிறது என்பதை அப்போது அறியவில்லையே!'' என்று திணறிக் கொண்டு விக்கி அழுதாள்.

''இளம் வயதுப் பெண் ஒருத்தி, வீட்டின் கட்டுக் காவலில் உள்ளே இருக்கும்வரை தான் மரியாதை. அதை மீறிக்கொண்டு தான் தோன்றிபோல் புறப்பட்டால், இந்த கதிதான் நேரும். ஏன் பொண்ணே அழறே! உன் வீட்டை விட்டு ஓடிவரும்போது இதெல்லாம் பத்தி ஒரு நிமிஷம் யோசனை பண்ணிப் பாத்தியா? உன்னைச் சொல்லிக் குற்றம் இல்லை. உன்னைப் போல இள வயசிலே, நானும் இப்படித்தான் ஒரு தவறு செய்தேன். அப்போ இப்படியா இருந்தேன்? மண்ணில் பிடுங்கி எடுத்த வள்ளிக் கிழங்கு போல செவப்பா அழகா இருந்தேன்...

''நான் கிராமத்துப் பெண். உலக விஷயம் தெரியாத மக்கு என்று கண்டுகொண்ட ஒரு பாவிப் பயல், காதல் கீதல் என்று சொல்லி ஏமாற்றி, தன்னுடன் ஓடிவந்து விடும்படி தூபம் போட்டான். அப்பா, அம்மா, அண்ணன், தம்பிமார் எல்லோரையும் விட்டு, அவனை கதின்னு கிளம்பி வந்தேன். இந்த பார்வதியுடைய அம்மா, ஒரு பத்தினி இருந்தாள். அவள் இப்போது செத்து விட்டாள். அவள் கையில் ஒப்படைத்துவிட்டு, அந்தப்பாவி* சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விட்டான். அதுக்குப் பின்னாடி நடந்தது பற்றி விவரிக்க வேண்டாம். ஏன் என்றால் விரைவில் நீ அனுபவத்தில் உணர்ந்து கொள்ளப் போகிறாய்.''

''நடனம், நாடகம், சங்கீதம் என்று வெளிப்பார்வைக்கு ஒரு கலைப் போர்வை! உள்ளே ஆபாசமான வாழ்க்கை. பார்வதியின் தாயாருக்கு என்னால் எவ்வளவோ லாபம் ஏற்பட்டது. எனக்கு, இந்த பயங்கரமான கொடிய ரோகம்தான் மிச்சப்பட்டது. இதோ, இப்போ சற்று முன்னாடி ஆடினார்களே ரெண்டு மினுக்கு சகோதரிகள் இவர்கள் கதியும் பின்னால் என் போலத்தான் முடியும். ஏமாந்து போய் இங்கே வந்து சிக்கிக் கொண்டிருக்கிறாயே. உன் கதியும் இப்படித்தான் முடியப் போகுது'' மூச்சு விடாது பேசிவிட்டு, 'கொல், கொல்' என்று இருமி, கோழையைத் துப்பினாள்.

இந்திராணியின் பீதி எல்லை கடந்து போயிற்று. ''அம்மா! நான் செய்த பிசகுக்கு இதுவரை நான் அனுபவிக்கும் பீதியே போதுமான தண்டனை. இதை விட்டு வெளியேறிவிட்டால், எனக்குப் போதும்'' என்று கூறிவிட்டுக் கண்ணீர் உகுத்தாள்.

கோமதி லேசாகச் சிரித்தாள். ''மிகவும் சுலபமாகச் சொல்லி விட்டாயே! பார்வதி அவள் தாயை நல்லவளாக்கிவிடக் கூடிய யோக்கியதைப் பெற்றவள். மரணம் ஒன்றுதான் இங்கிருந்து உனக்கு விடுதலை அளிக்க முடியும்.''

''உன் பெத்த தாய் தேடிக் கொண்டு வந்தாலும், நீ அவளுடைய பெண் அல்ல. தான் பெற்ற மகள் என்று ஏழு கோர்ட்டு ஏறி சத்தியம் செய்து நிரூபிப்பாள் பார்வதி. பெண்ணே! உனக்கு நான் என்ன சொல்ல முடியும்? ஏமாந்து போய்விட்டாயே என்று உன்னோடு கூடச் சேர்ந்து வருத்தப்பட முடியும். அவ்வளவுதான்'' என்று கூறிவிட்டு இருமத் தொடங்கினாள்.

''பெற்ற தாய் என்ற ஒரு பாக்கியம் எனக்கு இருக்கவில்லை. என்னைப் பெற்ற தாய் உயிருடன் இருந்திருந்தால் எனக்கு இந்தப் பயங்கர நிலை ஏற்பட்டிருக்கவே ஏற்பட்டிருக்காது. அம்மா! அவ்வளவு பாக்கியம் நான் செய்யவில்லையே!'' என்று கூறிவிட்டுத் துயரமும், பயமும் தாளாது வாய்விட்டு ஓவென்று அழுதாள் இந்திராணி.

அது சமயம் மாடிப்படிகளில் காலடி ஓசை கேட்டது. பார்வதி, கண்களில் தீப்பொறி பறக்கக் கோபாவேசமாக உள்ளே வந்து நின்றாள். ''குளிச்சு, உடை உடுத்தி சாப்பிட வா என்று வருந்தி அழைத்தால் ஒப்பாரிவைக்கிறாயே! இதென்ன நீலிக் கண்ணீர்! இந்த ஜாலமெல்லாம் இங்கே ஒன்னும் பலிக்காது; எழுந்திரு!'' என்று இரைந்து அதட்டினாள்.

இந்திராணி பதில் பேசாது விக்கி அழுவதைக் கண்ட அவள் ஆத்திரமடைந்து, ஒரே பாய்ச்சலில் அவளை அணுகி அவள் கரத்தைப் பற்றி, முரட்டுத்தனமாக இழுத்துச் சென்று பின் கட்டில் மிகவும் இருளாகக் காணப்பட்ட ஒரு அறையில் தள்ளி, கதவைத் தாளிட்டு வெளியே பூட்டிக் கொண்டு திரும்பினாள்.

ஓட்டை, உடைசல் பாத்திரங்கள் தாறுமாறாகக் குவிக்கப் பெற்றிருந்த அந்த அறையில் கைதியாகக் கிடந்த இந்திராணிக்கு, வெளியே என்ன நடக்கிறதென்றே ஒன்றும் தெரியவில்லை. பயத்திலே நடுங்கிக் கொண்டு, அழுது சோர்ந்து போய், அவள் தன்னையும் அறியாது தூங்கி விட்டாள். திடுக்கிட்டு விழித்துக்கொண்ட பொழுது தாழ்வாரத்தில் யாரோ வேகமாக நடந்துவரும் ஓசை கேட்டது.

அறையில் பரவி நின்ற இருளில், அவளால் நேரத்தை கணிக்க முடியவில்லை. காலடி அறையின் கதவைச் சமீபித்ததும் நின்றது. சாவிகள் குலுங்கும் சப்தமும், தொடர்ந்து பூட்டு திறக்கப்படும் ஒலியும் கேட்கவே, இந்திராணி உடலைச் சிலிர்த்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

''என்ன பண்ணிக்கிட்டு இருக்கிறே? ஒரு வேளை போட்ட பட்டினியில் புத்தி வந்துதான்னு பார்க்க வந்தேன்'' என அதட்டிய

பார்வதி, தாழ்வாரத்துச் சுவரிலிருந்த மின்சார விளக்கை ஏற்றிவ
கதவு ஓரமாக ஒடுங்கிக் கொண்டு நின்ற இந்திராணியைக் கண்டது
பற்களைக் கடித்துக் கொண்டு ஆத்திரத்துடன், ''வந்ததும் வராதது
வம்பு கொடுக்கிறாயே, சனியனே! அழுகிறதை இனியாகி
விட்டுவிட்டு, போய் சோத்தைத் தின்னு தொலை'' என்றாள்.

இந்திராணி மௌனமாக நிற்பதைக் கண்டதும் அவளது கோப
பன்மடங்காகியது. ''அடி சனியனே! உன்னைத்தான் சொல்கிறே
காது உனக்குச் செவிடா?'' என்று இரைந்து கத்தினாள்.

இந்திராணியினால் அழ முடியவில்லை. ஆனால், முன்பிருந்
திகில் இப்பொழுது அவளிடம் இருக்கவில்லை. ஆகவே சற்று
துணிவாக, ''அம்மா! முன் பின் தெரியாத என்னை ஒரு கைதிபோ
அறையில் அடைத்து வைத்து இம்சிக்கிறீர்களே, இது நியாயமா
என்று கேட்டாள்.

பார்வதி பற்களை இன்னும் அதிக வேகமாகக் கடித்தா
''நியாயம் அநியாயம்! கிராமத்துப் பெண் என்றாலே வீராசா
பேச்சை பார் பேச்சை!'' என்று உறுமினாள் அகங்காரமாக.

''நான் ஒன்றும் அனாதையல்ல. எனக்கு அண்ணன், தங்
அப்பா எல்லோரும் இருக்கிறார்கள். இதுவரை என்னை
தேடிக்கொண்டு இங்கே சமீபத்தில் வந்திருந்தாலும் வந்திருப்பார்க
என்னை இம்சை செய்தால் வீணாகப் போலீசார் வசம் நீங்
அகப்பட்டுக் கொள்வீர்கள். அதனால் மரியாதையாக என்னை எ
ஊருக்கு அனுப்பி விடுங்கள்'' என்றாள் இந்திராணி மிகவு
துணிவாக.

இதைக் கேட்ட பார்வதி ஆவேசம் வந்தவள் போல் ஒரே எட்டி
அப்பெண்ணை நெருங்கி, ''போலீசாம் போலீஸ்! நேற்றுப் பிற
பெண் நீ! என்னை மிரட்டுகிறாயா?'' என்று ஆத்திரத்துடன் கை
ஓங்கி ஒரு அறை வைத்தாள்.

பெற்றெடுத்து, வளர்த்த தந்தை கை நீட்டி அடிக்க
புறப்பட்டதை பொறுக்க முடியாது புரட்சி செய்து வெளிப்பட்டு ஓ
வந்த இந்திராணியினால் இதைச் சகிக்க முடியவில்லை. 'சேவல
மிருக வாழ்வு வாழும் ஒரு ஸ்திரீ தன்னைக் கைதொட்டு அடிப்பத
என்று எண்ணிய மாத்திரம் அவளது ரத்தம் கொதித்தது. கொ
நெஞ்சமிருந்த பயம் அனைத்தும் ஒரே கணத்தில் பறந்தோடி விட

சட்டென்று குனிந்து, மூலையில் கிடந்த விறகு கட்டைகளில் ஒன்றை
கையில் எடுத்துக் கொண்டாள். பார்வதிமேலே பேசுமுன்,
கையிலிருந்த அந்த ஆயுதத்தினால் ஓங்கி ஒருமுறை அவள்
மண்டையில் போட்டாள்.

ஓச்சென்று கூவிய பார்வதி, வெட்டிச் சாய்ந்த மரம் போல் கீழே
விழுந்து விட்டாள். அவள் நெற்றியிலிருந்து பீறிட்டுக் கொண்டு
தரைமீது வழிந்தோடிய ரத்த வெள்ளத்தைக் கண்டதும்,
இந்திராணியின் உடல் பயத்திலே நடுங்கத் தொடங்கியது.
அசைவற்றுக் கிடந்த பார்வதியை திகிலுடன் ஒருமுறை
பார்த்துவிட்டு, விறகுக் கட்டையை பிடித்தபடி அறையை விட்டு
வெளியே வந்தாள்.

பார்வதி போட்ட சப்தத்தைக் கேட்டு, மாடியிலிருந்த பெண்கள்
உதவிக்கு ஓடி வந்தால் ஆளுக்கொன்று தலையில் போட்டுவிடுவது
என்று தீர்மானித்தபடி, நெஞ்சு பதற இருட்டில் தடுமாறிக் கொண்டு
கூடத்திற்கு வந்தாள்.

என்ன ஆச்சரியம்! வீட்டில் யாரையும் காணவில்லை. மனித
அரவம் இன்றி வீடு ஒரே நிசப்தமாக இருந்தது. வாயில் அறையில்
எரிந்த விளக்கு ஒளியின் உதவியால் மெல்ல நடந்து வாசல் கதவு
பக்கம் சென்றாள்.

மேலே என்ன செய்வது என்று யோசிக்கும் முன்
மாடியறையிலிருந்து இருமும் சப்தம் கேட்கத் தொடங்கியது. அதைத்
தொடர்ந்து யாரோ கீழே இறங்கி வரும் ஓசை கேட்கவே, இந்திராணி
திகிலுடன் திரும்பினாள். இருமிக் கொண்டு கீழே இறங்கி வந்த
கோமதி, ''யார் அது'' என்று இருமலுக்கிடையே அதட்டுமுன்,
இந்திராணி தாழ்ப்பாளைத் திறந்துகொண்டு மான்குட்டிபோல்
பாய்ந்து வெளியே பரவிக் கிடந்த இருளில் ஓடினாள்.

பயம், சந்தோஷம் என்ற இரு உணர்ச்சிகளும், ஒருங்கே
உள்ளத்திலே அலைமோத கால்சென்ற போக்கிலே சந்துகளிலும்,
தெருக்களிலும் திரும்பித் திரும்பி, தலை தெறிக்க இந்திராணி
ஓடினாள். பயத்தில் அவளது இருதயம் வெடித்துவிட எந்த நிமிஷமும்
தயாராக இருந்தது. ரோந்து சென்று கொண்டிருந்த போலீஸ் சேவகன்

ஒருவன் ''யார் அது'' என்று அதட்டிய குரல் அவனை நடுங்கச் செய்துவிடவே, ஒரு தெருவின் முகப்பிலிருந்து இருளில் பாய்ந்து இன்னொரு தெருவிற்குள் பாய்ந்தான்.

அது சமயம், சாமான்களை ஏற்றிக்கொண்டு வெளியூர் சென்று கொண்டிருந்த லாரி ஒன்று வேகமாக அந்தத் தெருவிற்குள் திரும்பியது. பளிச்சென்று வீசிய விளக்கு ஒளியில், இந்திராணியின் கண்கள் பார்வையை இழந்தன. வேகமாகத் தன்மீது ஏதோ மோதுவதைப் போன்ற ஓர் உணர்ச்சிதான் அவளுக்குத் தெரியும். அதற்குப் பின் எல்லாம் ஒரே சூன்யமாக இருந்தது.

40

அஸ்தமிக்கக் கொஞ்ச நேரமேதான் இருந்தது. வரப்பின் மீது வேகமாக நடந்து வந்து கொண்டிருந்த ஆனந்தன் காரிகுளம் வாய்க்காலை சமீபித்ததும் நின்றான். மூட்டையை இறக்கித் துணி துவைக்கும் கல்லின் மீது வைத்துவிட்டு நீரில் இறங்கினான். முகத்தைக் கழுவிக் கொண்டு, ஓடும் நீரை அள்ளி இரண்டு வாய் பருகினான். காலையில் வீட்டை விட்டுக் கிளம்பியவன் அதுவரை பச்சைத் தண்ணீரைக் கூடக் கண்ணால் காணவில்லை.

முதல் நாள் மாலை வந்து சதாசிவத்தைப் பார்த்துப்போன வைத்தியர் எழுதிக் கொடுத்திருந்த மருந்து, உள்ளூர்க் கடைகளில் கிடைக்கவில்லை. அதை வாங்கி வரவும், இந்திராணி சம்பந்தமாகச் சில தகவல்களை அறியவும் அவன் காலையில் எழுந்ததும், சாப்பிடாது வீட்டை விட்டுக் கிளம்பியிருந்தான். அடுத்த ஊர்க் கடைத் தெருவில் மருந்திற்காக அலைந்து எஞ்சிய நேரத்தில் தங்கையைத் தேடிப்பிடிக்க, தக்க உண்மையான தகவல்களைக் கொடுக்கக் கூடிய ஆசாமிகளை நாடித் தெருத் தெருவாக அலைந்து சோர்ந்து போயிருந்தான். பசி கண்களைச் சுழற்ற, கால்கள் தள்ளாட எரிந்த வெய்யிலையும் பொருட்படுத்தாது அவன் அலைந்ததுதான் மீதமாக இருந்தது. இந்திராணியைப் பற்றிய விவரம் ஏதும் அறியவே முடியவில்லை.

தன்னைச் சுற்றிலும் லேசாகப் படர்ந்து கொண்டிருந்த அந்தி இருளை வெறித்த வண்ணம் ஆனந்தன் துவைக்கும் கல் மீது வந்து அமர்ந்தான். வீட்டிற்குப் போய்ச் சாப்பிடும் வரை அவனால் பசியைத் தாள முடியாது போல் இருந்தது. மூட்டையினின்று வெளியே தலை நீட்டிக் கொண்டிருந்த வெள்ளரிப் பிஞ்சுகளில் ஒன்றைக் கையில் எடுத்தான். பெல்ட் வளையத்துடன் இறுக்கமாகச் செருகி வைத்திருந்த வாழை இலை நறுக்கும் நீண்ட கத்தியை உருவி எடுத்து, நிதானமாக வெள்ளரிப் பிஞ்சைத் தோல் சீவி, நறுக்கி சுவைத்துத் தின்னத் தொடங்கினான்.

பசி என்பது எவ்வளவு கொடுமையானதொரு உபத்திரவம்? மரணத்துடன் ஒவ்வொரு நிமிஷமும் ஊசலாடிக் கொண்டு நோய்வாய்ப்பட்டுக் கிடந்த தந்தை ஒருபுறம், வீட்டை விட்டு ஓடிய தங்கையின் கதி என்ன ஆனதோ என்று அறிய முடியாத பயங்கர நிலை இன்னொரு புறம். ஏழைகள் எதிர்த்துப்பேசவோ, நியாயங் கோரவோ, வாயில்லாதவர்கள் என்ற காரணம் பற்றி, மணந்து கொள்வதாக வாக்களித்துவிட்டு, கணப்பொழுதிலே வேண்டாம் என்று உதறியெறியப்பட்ட அருணாவின் அவலமான நிலை மற்றொருபுறம். இவைகள் போதாதென்று கையில் செப்பு நம்பிகூட இல்லாத ஒரு சூழ்நிலையிலும் மனிதனை இயற்கையின் தாபம் சும்மா விடுகின்றதா?

இந்திராணி திரும்பி வரட்டும் என்று காத்திருக்க முடிந்ததா? அப்பாவின் உடல் நிலை சரியாகட்டும் என்று தயங்கத்தான் முடிந்ததா? ஆனந்தனுக்கு வயிறு பசித்தது. அந்தப் பசியில் இவ்வளவு கஷ்டங்களையும் மறந்து, காயை ருசி பார்த்துச் சுவைத்துக் கூடத் தின்ன முடிந்தது!

இவ்வாறு சிந்தனை வசப்பட்ட ஆனந்தன், தன் நிலையை எண்ணி திடுக்கிட்டு அருவருப்படைந்து, கையிலிருந்த காயை, வெறுப்புடன் ஓடும் நீரில் வீசியெறிந்தான். ''சீ! சீ! என்ன ஜன்மம்!'' எனத் தனக்குள் முணுமுணுத்த வண்ணம், பாதி மென்று கொண்டிருந்ததை காறித் துப்பி விட்டு வாயைக் கழுவிக் கொண்டான். கத்தியை நீரில் கழுவி தன் வேஷ்டியிலே துடைத்துக் கொண்டு இடுப்பிலே செருகிக் கொண்டான். இடத்தை விட்டு எழுந்து மூட்டையைத் தூக்கித் தலையில் வைத்துக் கொள்ளக் கையை

நீட்டினான். வாய்க்காலின் எதிர்கரை மீது, மோட்டார் சைக்கிள் ஒன்று வேகமாகச் செல்லும் சப்தம் கேட்கவே திடுக்கிட்டுப் போய் நின்று விட்டான்.

அந்த வாகனத்தின் மீது சென்று கொண்டிருந்த வாலிபனின் முகத்தை எதேச்சையாகப் பார்த்துவிட்ட ஆனந்தனின் கரங்கள் நடுங்கின. உடல் முழுவதும் அனல் பற்றி எரிவது போன்று ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. வாய்க்கால் கரையின் உயரமான பாகத்திற்கு விரைந்து சென்று, அங்கிருந்தவண்ணம் மோட்டார் சைக்கிள் சென்ற திக்கை வெறித்துப் பார்த்தான்.

சற்றுத் தொலைவில் தெரிந்த களத்து மேட்டை சமீபித்ததும் அந்த வாகனம் நின்றது. அதனின்று இறங்கிய வாலிபன் ஓடி வந்து முன்னால் நின்ற இரண்டு பண்ணையாட்களிடம் ஏதோ கூறினான். அவர்கள் இருவரும், வயல்களிலே குறுக்காக இறங்கி, வேகமாக எங்கேயோ விரைந்தோடினார்கள்.

ஆனந்தனுக்கு இதற்குமேல் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கப் பொறுமை இருக்கவில்லை. அவனது உடலும் உள்ளமும் ஆத்திரத்திலே துடித்தன. ஆவேசம் வந்தவன் போல், முன்பின் யோசியாமல் வாய்க்காலில் இறங்கி தண்ணீரைக் கடந்து மறு ரையை அடைந்தான். நெஞ்சம் பதைபதைக்க, பெருமூச்சு வாங்க, த்து மேட்டை நோக்கி விரைந்து சென்றான்.

கண்களை மறைத்த கறுப்புக் கண்ணாடியைக் கழற்றி விட்டு களத்து மேட்டின் புளிய மரத்தடியில் போட்டிருந்த கயிற்றுக் கட்டிலின் மீது சோமசேகர் அமர்ந்தான். பின்னாலிருந்த பெரிய வைக்கோல் போரின் அருகிலிருந்து யாரோ நடந்து வரும் காலடி ஓசையைக் கேட்டதும் அவன் திடுக்கிட்டு பயந்து போய்விட்டான்.

நனைந்த உடையும், அலங்கோலமான சிகையும், களைப்பு நிறைந்த முகமுமாக வந்து நின்ற அந்த அந்நிய மனிதனை அவன் முன்பின் பார்த்ததேயில்லை. எனினும், அந்த முகத்தின் சாயல் அவனுக்கு மிகவும் பழக்கமான யாரோ ஒருவரை நினைவுறுத்தவே, அவன் உடல் சிலிர்த்தது. எனினும் மிகவும் அதட்டலாக, ''யாரது? என்ன வேணும்?'' என்று கடுமையாகக் கேட்டான்.

ஆனந்தன் பதிலுக்கு ஏளனமாகப் புன்முறுவல் செய்தான். ''என்னை உங்களுக்குத் தெரியாது, ஐயா! ஆனால், உங்களை நான் நன்கு அறிவேன். உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும். பண்ணை ஆட்கள் யாரும் அருகில் இல்லாது, நீங்கள் தனிமையில் இந்த அந்தி வேளையில் இங்கு இருப்பது எனக்கு மிகவும் சாதகமாக இருப்பதால் ஓடி வந்தேன்'' என்றான்.

அந்தி மயங்கும் இருளில், தன் முன் வந்து நின்ற வாலிபனின் கோபம் கொதித்த முகத்தையும், அவனது கட்டுமஸ்தான தோற்றத்தையும் ஏறிட்டுப் பார்த்த சோமசேகரின் உடல் பயத்திலே வெலவெலத்துப் போயிற்று. எனினும் பரம்பரையாகப் பணத்திலே பிறந்து வளர்ந்து வாழ்ந்த துடுக்கு அவன் இரத்தத்திலே ஓடிக் கொண்டிருந்ததனால், அவன் தன் கோழைத்தனத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல், ''என்னை நீ அறிந்தவனாக இருக்கலாம். அதனால் என்ன? உனக்கு என்னிடம் என்ன ஆக வேண்டும்?'' என்று கோபத்துடன் கேட்டான்.

அவன் கட்டிலினின்று எழுந்திருக்க முயற்சிப்பதைக் கண்ணுற்ற ஆனந்தன், ஒரே எட்டில் தாவி அவன் அருகில் நெருங்கி வந்து நின்று கொண்டு, மிகவும் உக்கிரமான குரலில், ''பண்ணையார் செல்வமே, உட்காரும்! எழுந்து விட முயற்சிக்க வேண்டாம். என்னுடன் கட்டாயம் பேசி ஆக வேண்டும். இல்லையேல் உம்மைச் சும்மாவிட மாட்டேன்!'' என்றான் ஆத்திரத்துடன்.

சோமசேகரின் தேகம் முழுவதும் வியர்த்துப் போயிற்று. பயத்திலே நாவறண்டும் போயிற்று. வெகு தொலைவிலே சென்று விட்டிருந்த தன் பண்ணையாட்களை ஏக்கத்துடன் உற்றுப் பார்த்தான்.

ஆனந்தன் பேய் போன்று உரத்துச் சிரித்தான். ''பண்ணையார் ரத்தினமே! இருட்டும் இந்த வேளையில் ஆட்படைக் காவலின்றி நின்னந் தனியனாகத் தாங்கள் என்னிடம் சிக்கிக் கொண்டது என் அதிர்ஷ்டமே.''

''இரண்டு முறை, தங்களை நான் பண்ணையில் காண முயற்சித்தேன். அந்த இருமுறையும் தங்கள் அருமை சமூகம் அனுமதி தர மறுத்துவிட்டீர்கள். இப்பொழுது என்னைத் தாங்கள் போ என்று உதாசீனம் செய்தாலும் நான் போகப்போவதில்லை. நான் கேட்க

வேண்டியதை கேட்டு விட்டுத்தான் போவேன். யானைக்கு ஒரு காலம் என்றால் பூனைக்கும் ஒரு காலம் வரும் அல்லவா?'' என்று ஏளனமாகப் பேசிவிட்டு ஆக்ரோஷத்துடன் பற்களைக் கடித்தான்.

அவனது முகத்தில் படிந்து நின்ற கோபத்தைக் கண்டு,சோமசேகர் நடுநடுங்கிப் போய்விட்டான். எனினும் சாமர்த்தியமாகக் குரலில் தைர்யத்தை வரவழைத்துக் கொண்டு, ''அட அற்ப நாயே! என்னை யாரென்று நினைத்துக் கொண்டு மிரட்டுகிறாய்!'' என்று கையை வீசிக் கொண்டு எழுந்தான்.

இரும்பை நிகர்த்த ஆனந்தனின் கரங்கள் அவனை எழுந்திருக்க வொட்டாமல் இருத்தி மீண்டும் கட்டிலிலே அமரச் செய்தன. ''பொறுங்கள், சோமசேகர்! எனக்குச் சொல்ல வேண்டியதைக் கூறிவிட்டு, இங்கிருந்து தப்பி ஓட முயற்சியுங்கள். என்னை இன்னும் யாரென்று உங்களுக்குத் · தெரியவில்லையா? நான்தான் இந்திராணியின் அண்ணன் ஆனந்தன்'' என்றான் உக்கிரமாக.

தொண்டையைக் கனமாக வந்து அடைத்துக் கொண்ட பயங்கர உணர்ச்சியை விழுங்கிவிட முயற்சித்த சோமசேகர் அவனை ஆச்சர்யத்துடன் ஒரு கணம் வெறித்துப் பார்த்தான். அவனது நெஞ்சு திக்கென அடித்துக் கொண்டது. ''இந்திராணியா?'' என்று ஒன்றும் [illegible]ரியாதவன் போல் தடுமாற்றமாகக் கேட்டான்.

''இப்படி நடித்தால் விட்டுவிடுவேன் என எண்ண வேண்டாம்! [illegible]ரண்டு வருஷ காலம் என் தங்கையைக் காதலிப்பதாக ஏமாற்றி நீ [illegible]ழுதிய காதல் கடிதங்கள் அனைத்தும் என் வசம் கிடைத்துவிட்டன. கொட்டும் மழையிலே, உன்னை நம்பி ஓடி வந்த அபலைப் பெண்ணை எவ்வளவு கேவலமாக நீ நடத்தினாய் என்ற விஷயமும் உன் தோட்டக்காரன் மூலம் அறிந்து கொண்டுவிட்டேன். உண்மையைச் சொல்லிவிடு! என் தங்கை இந்திராணி எங்கே?'' என ஆவேசம் பொங்கக் கத்தினான் ஆனந்தன்.

தன் நிலைமை மிகவும் அபாயகரமாகி விட்டதை உணர்ந்து கொண்ட சோமசேகர், சுற்றுமுற்றும் பார்த்தான். இளநீர் கொண்டு வர ஏவிய பண்ணையாட்களைக் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எங்கும்

காணவில்லை. அக்கம் பக்கத்திலும் மனித சஞ்சாரமே இருக்கவில்லை. அவன் பேசுமுன் ஆனந்தன் ஆத்திரத்துடன் குறுக்கிட்டு, ''தப்பியோடி விடலாம் என்று முயற்சிக்காதே! உன்னை நான் விடமாட்டேன். உன் காதலையும், வார்த்தைகளையும் நம்பி ஏமாந்து உதவியை நாடி ஓடி வந்த பெண்ணை எவ்வளவு கேவலமாக நடத்தினாய்? முன்பின் தெரியாத ஒரு மனிதனுடன் கூட்டியனுப்ப உனக்கு என்ன தைர்யம்? உன்னைக் காதலித்தாள் என்ற குற்றத்திற்காக என் தங்கையை, கடைத்தெருவில் விலைக்கு வாங்கிவிட்ட சாமானைப்போல், இஷ்டப்படி அலக்ஷியமாக மற்றொருவர் வசம் ஒப்படைத்தாய் அல்லவா?''

''என் தங்கை எங்கே? உன் கணக்குப்பிள்ளை கொண்டுவிட்டு வந்த இடத்தில் அவளைக் காணவில்லை. அவளுக்கு என்ன நேர்ந்தது? அவளது மானத்திற்குப் பங்கம் ஏற்பட்டு விட்டதா? அவமானம் தாளாது அவள் தற்கொலை செய்து கொண்டாளா? அல்லது, உன் பண்ணை ஆட்கள் அவளது மென்னியைத் திருகி, குழியில் புதைத்து விட்டார்களா? சண்டாளா? வாயைத் திறந்து பதில் சொல். இரண்டு வருஷ காலமாக நீ நடத்திய கள்ளக் காதல் நாடகத்தை அம்பலத்தில் கொண்டு வந்து விடுகிறேன். அதற்குப் பிறகு உனக்கு அந்தப் பெரிய இடத்துப் பெண் மாலையிடுவதைப் பார்த்து விடுகிறேன். பழிகாரப் பாவி!'' என்று ஆக்ரோஷமாகக் கூச்சலிட்டு அவனை மேலும் நெருங்கினான்.

துள்ளி எழுந்து நின்ற சோமசேகர், தன் உயிருக்கு நேரக்கூடிய அபாயத்தை நொடியில் உணர்ந்து கொண்டு, ''எட்டி நில். அயோக்கியப் பதரே! என் மேல் கை வைத்தால் உன் முதுகுப் பிளந்துவிடும். என்னை பயமுறுத்துகிறான் எனப் போலீசில் பிராது கொடுத்தால் உன் கதி என்ன ஆகும் தெரியுமா?'' என்று பதிலுக்குத் துணிச்சலுடன் இரைந்தான்.

''போலீஸ்! அவர்கள் உனக்கு மட்டும்தான் சொந்தமோ? அவ்வளவு தூரம் எதற்கு சிரமம் என்று இப்போது நான் சட்டத்தை என் கையிலே எடுத்துக் கொண்டு விட்டேன். என் தங்கையை அவமானம் செய்ததற்கு உன்னைப் பழிக்குப் பழி வாங்கப் போகிறேன். துணிந்தவனுக்குத் துக்கமில்லை. எனக்குப் போலீசைப்பற்றி பயமில்லை. இப்போது பயப்பட வேண்டியவன்

நீதான். உன் உயிருக்குப் பயப்படுகிறாய் சண்டாளா, பாவி!

"அப்பொழுது ஒரு நிமிஷம் என் சகோதரியின் கௌரவத்தைப்பற்றி யோசித்தாயா? ஏழைப்பெண், துச்சமாக நடத்தினால் கேள்விமுறை இல்லை என்றுதானே எண்ணிக்கொண்டாய்? பணத்தில் ஏழையென்றாலும் ஆண்மையில் நான் ஏழையல்ல" என்று கூச்சலிட்டு பற்களைக் கடித்த ஆனந்தன், இடையில் செருகியிருந்த கத்தியை உருவினான். சோமசேகர் கையை உயரத் தூக்குமுன், அக்கூரிய ஆயுதத்தை பலங் கொண்டவரை பலமுறை அவனது உடலில் பாய்ச்சிவிட்டான்.

கீழே சுருண்டு விழுந்த உருவத்திலின்று தெறித்த இரத்தம் தன் தோல் மீது சுடுவதை உணர்ந்த ஆனந்தன் திடுக்கிட்டுப் போனான்.

அதே சமயம் சற்றுத் தொலைவில் ஆட்களின் பேச்சுக்குரல் காற்றின் ஊடே மிதந்து வருவதைக் கேட்டதும், அவன் ஒரே பாய்ச்சலில் குதித்து, கல்மீது வைத்திருந்த மூட்டையை எடுத்துக்கொண்டு வீட்டை நோக்கி வாயு வேகத்தில் ஓடினான்.

சதாசிவம் சிரமப்பட்டு மூச்சு விட்டுக் கொண்டிருந்தார். மாலையிலிருந்து அவனது உடல் நிலை மிகவும் மோசமாகிக் கொண்டு வருவதை அறிந்த அருணா கவலையில் மூழ்கிவிட்டிருந்தாள். விளக்கை பொருத்திக் கூடத்தில் மாட்டிவிட்டு, அப்பாவின் அருகில் உட்கார்ந்தவள் வாயிற் கதவு தடதடவென்று அவசரமாக இடிக்கப்படுவதைக் கேட்டுத் திடுக்கிட்டு ஓடிச் சென்று கதவைத் திறந்தாள். அவளைத் தள்ளி விடுபவன் போல் உள்ளே பாய்ந்து வந்த ஆனந்தனுடைய பதட்டத்தின் காரணம் விளங்காத அருணா கதவைத் தாளிட்டுக் கொண்டு பின் தொடர்ந்து கூடத்திற்கு வந்தாள். அப்பொழுதுதான் விளக்கொளியில் அண்ணனை அவளால் நன்கு கவனிக்க முடிந்தது. "ரத்தம்! என்ன அண்ணா? காயம் பட்டதா?" என்று பதட்டமாகக் கேட்டாள் அருணா.

சுமந்து கொண்டிருந்த மூட்டையை அவிழ்த்து, சாமான்களைத் தரையில் உருட்டிவிட்டு, "இல்லை, அருணா! நான் இங்கே அதிக நேரம் நிற்க முடியாது. ஓடிவிடவேண்டும். சோமசேகரைக் குத்திக் கொன்றுவிட்டேன்! இந்திராணியின் அவமானத்தை இந்த ரத்தத்திலே

துடைத்துவிட்டேன்!" என்று படபடவென்று பேசினான்.

"அண்ணா!" என்று அருணா கிரீச்சிட்டு அலறினாள்.

41

காலை படுக்கையினின்று எழுந்ததும் ஜெகதாவிற்கு சாவோலை ஒன்று காத்துக் கொண்டிருந்தது. வீட்டுக் கணக்குப்பிள்ளை கொண்டு வந்து கொடுத்த தந்தியைக் கையால் வாங்கியபோது ஒரு கணம் அவள் நெஞ்சு துணுக்குற்றது. அதனுள் அடங்கியிருந்த விஷயத்தை அவள் முன்னதாகவே ஊகித்துக்கொண்டு விட்டாள். எனினும், அதைப் பிரித்து கணக்குப் பிள்ளையிடமே கொடுத்து வாசிக்கும்படி உத்தரவிட்டாள்.

"சதாசிவம் இரவு பத்துமணிக்கு மரணமடைந்து விட்டார். குடும்பத்தில் பல தொல்லைகள் ஏற்பட்டுள்ளன. உடனே வரவும். அருணா...." என்றிருந்த வாக்கியத்தைத் தமிழ்ப்படுத்தி விளக்கமாகத் தெரிவித்தார் கணக்குப் பிள்ளை.

ஒவ்வொரு நிமிஷமும், தன் தங்கை புருஷனின் மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த ஜெகதா, துக்கச் செய்தியைக் கேட்டு சிறிதும் வருத்தமடையவேயில்லை. அதற்குப் பதில் 'உடனே வரவும்' என்ற அருணாவின் வேண்டுகோள் அவளுக்குத் தாங்க முடியாத சினத்தை உண்டாக்கியது.

'எந்த மூஞ்சியை வைத்துக்கொண்டு வெட்கமில்லாமல் என்னை வரச்சொல்லி தந்தி கொடுத்திருக்கிறாள்? ஊர் சிரிக்கும் காரியத்தை அக்கா செய்து விட்டிருக்கும்போது எனக்குச் சொல்லாமல் மறைத்து வைத்து அவமானமடையச் செய்தது போதாதென்று, அப்பன் செத்ததற்குத் துக்கம் கொண்டாட அழைப்பு வேறு? பேஷ்! பேஷ்!' என்று தனக்குள் எண்ணி வெகுண்ட அவள் "சரி, நீங்கள் போய் மேலே உங்கள் காரியங்களைக் கவனியுங்கள். காலங்கார்த்தாலே எனக்கு சாவுச் செய்தி கேட்கணும்னு தலையெழுத்து!" என்று கணக்குப்பிள்ளை மீது எரிந்து விழுந்தாள்.

பிறகு ஸ்நானம் செய்துவிட்டு ஈரக் கூந்தலை ஆற்றிக்கொண்டு ஜெகதா தோட்டத்திலே உலாவிக் கொண்டிருந்தாள். சற்றுத் தொலைவில், தோட்டத்தில் திறந்த வெளியில் நின்று கொண்டிருந்த தனது புதுக்காரை அவள் கண்ணுற்ற பொழுது அவள் மனம் பகீர் என்றது. வாங்கிய சில மாதங்களிலேயே, டிரைவர் பூபதியின் கையில் சிக்குண்டு தனது புதுமைத் தோற்றத்தை முற்றிலும் அது இழந்து விட்டிருந்தது. 'பண்டத்தின் அருமை தெரியாத ராக்ஷஸன்' பூபதியின் கையில் இன்னும் கொஞ்ச காலம் இருந்தால், பிறகு அந்தக் காரை, பேரீச்சம்பழம் விற்பவனிடந்தான் பண்டமாற்று செய்து கொள்ள நேரும் என எண்ணிய மாத்திரம், அவள் உடல் பீதியினால் நடுங்கியது.

அது சமயம் தோட்டத்தின் நடைபாதை மீது சரக்சரக்கென்று செருப்பு சப்திக்க, மிகவும் வேகமாக, ஓடிவராத குறையாக, பாத்திரக்கடை பங்காரு செட்டியார் சகதர்மினி சந்திரவதனி வந்துகொண்டிருந்ததைக் கண்டாள். ஜெகதாவும் சந்திரவதனியும் அப்படி நெருங்கிய சிநேகிதிகள் அல்ல. காலை வேளையில் தன்னிடம் அவளுக்கு என்ன அவசர காரியம் இருக்கக்கூடும் என்று ஜெகதாவினால் நிச்சயிக்கவே முடியவில்லை. எனினும் அவள், ''வாங்கோம்மா! ஏது இப்படிக் காலை வேளையிலே, அத்தி பூத்தாப்பலே!'' என்று வரவேற்றாள்.

சந்திரவதனியின் நடையிலும், தோற்றத்திலும் முகபாவத்திலும் ஏக பரபரப்பு. அதே சமயம், அந்த அமைதியின்மையிலே ஒரு அசாதாரணமான சந்தோஷமும் குடிகொண்டிருந்தது. ''ஒரு ரகஸியம் சொல்ல வேண்டுமென்று ஓடோடி வந்தேன். நம்ப லோகா இருக்கிறாள் அல்லவா? அவள் பெண்ணுக்கு நிச்சயம் செய்யப்பட்டிருந்த கல்யாணம் நின்று விடும் போலிருக்கிறது'' என்று அவசரத்தில் வார்த்தைகளுக்காகத் திணறினாள் சந்திரவதனி.

லோகநாயகியின் பெயரைக் கேட்டதுமே ஜெகதாவின் முகம் சாம்பிப் போயிற்று. ''அப்படியா!'' என்றாள் ஆவலை விட்டுக் கொடுக்காமல்.

சந்திரவதனி தொண்டையை கனைத்துக் கொண்டாள். ''எனக்கு இந்த சங்கதி இரண்டு தினங்களுக்கு முன்பே தெரியும். என்

கணவருக்கு நெருங்கிய நண்பர் ஒருவர் பழனியப்பக் கவுண்டர் வீட்டுக்கு உறவினர். அவர் விபத்து நேர்ந்த உடனேயே என் கணவரிடம் ஓடி வந்து சங்கதியை ரகசியமாகச் சொல்லி விட்டார். அயலூர் பண்ணையார் மகனை யாரோ விரோதி, கத்தியால் குத்தி விட்டான் என்றும் படுகாயமடைந்து, அவன் குத்துயிராய் ஆஸ்பத்திரியில் கிடக்கிறான் என்றும், சங்கதியை கேள்விப்பட்டதும் பழனியப்பக் கவுண்டர் வீடு அல்லோலகல்லோலப்பட்டது என்றும், கல்யாணத்தை நிறுத்தி விடவேண்டும் என்றும் பேசிக் கொண்டார்கள் என்றும் அந்த நண்பர் சொன்னார். எனக்கு முதலில் கொஞ்சமும் நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனால் இன்று காலையில் இந்த தினசரிப் பத்திரிகையைப் படித்ததும் அவர் சொன்னது முழுவதும் உண்மையென்று பட்டவர்த்தனமாக விளங்கிவிட்டது. நான் இன்னும் காப்பி கூடச் சாப்பிடவில்லை. உங்களைப் பார்த்து இது விஷயம் சொல்லிப்போக ஓடிவந்தேன்'' என்றாள் மூச்சு விடாமல்.

தன்னை அவமானப்படுத்திய லோகநாயகியை, தெய்வம் இவ்வகையாக வேறு வழியில் பழிக்குப் பழி வாங்கிக் கொண்டது என்று எண்ணி ஒரு வகையில் திருப்தியடைந்த ஜெகதா, ''வாங்க உள்ளே. நம்ப வீட்டில் காப்பி சாப்பிட்டால் போச்சு. விவரமாகப் பேசுவோம்.'' என்று உபசரித்தாள்.

ஹாலுக்குள் சென்று அமர்ந்து கொண்டதும், ''வள்ளி அம்மாவுக்கும் எனக்கும் சூடாக ரெண்டு லோட்டா காப்பி கொண்டு வரச் சொல்!'' என உத்தரவிட்டு விட்டு, ''என்னமோ, எனக்கு இதெல்லாம் கேட்க அதிசயமாக, இருக்கு. இந்தக் கல்யாணம் கூடின பிறகே லோகா ஒரு தினுசாக மாறிப் போயிருந்தாள். சீமையிலிருந்து வந்த மருமகன் என்று அவளுக்குக் கொஞ்சம் கர்வம் ஏற்பட்டிருந்தது'' என்று பெருமூச்செறிந்தாள்.

''கொஞ்சமா! அப்பப்பா! கர்வம் தலைக்குமேல் அல்லவா போயிருந்தது! என்னைக் கண்டால் முன்போல் குழைந்து பேசுவதே கிடையாது. நான் அப்பொழுதே நினைத்துக் கொண்டேன். இது நல்லதுக்கு இல்லை என்று'' எனப் பகர்ந்தாள் பாத்திரக் கடைக்காரரின் பார்யாள் மனத்தாங்கலாக.

''உங்களைக் கண்டு கூடவா அசட்டை செய்தாள் அவள்? உங்கள்மேல் என்ன குற்றமாம்?'' என்று கவலையுடன் ஜெகதா விசாரித்துவிட்டு, லோகநாயகியின் அசட்டைக்குத் தான் ஒருத்தி மட்டும் இலக்காகவில்லை என்று அறிந்து கொண்டதில் ஏற்பட்ட திருப்தியில் புன் முறுவல் செய்தாள். பிறகு, ''அது கிடக்கிறது காப்பியைச் சாப்பிடுங்கள்'' எனக் காப்பிப் பாத்திரத்தை எடுத்து நீட்டினாள்.

காப்பியைப் பருகிவிட்டு, கையில் தினசரிப் பத்திரிகையை எடுத்து சந்திரவதனி புரட்டினாள். ''படிக்கிறேன் கேளுங்கள்'' என்று படிக்கத் தொடங்கினாள். ''இருபதாம் தேதி அன்று அஸ்தமிக்கும் சமயம், அயலூர் பண்ணையார் களத்துமேட்டில், மேற்பார்வையிட வந்திருந்த அவரது மகன் சோமசேகரைப் பழைய விரோதம் காரணமாக, ஒரு மனிதன் குத்திக் காயப்படுத்திவிட்டான். அவர் நிலைமை மிகவும் ஆபத்தாகவே, பக்கத்து நகர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற விஷயம் ஏற்கெனவே பிரசுரமாகியிருக்கிறது. அதைத் தொடர்ந்து இன்று இன்னும் சில விவரங்கள் கிடைத்துள்ளன.

''அயலூருக்கு இரண்டு மைலுக்கப்பாலுள்ள ஒரு சத்திரத்தில், இரத்தக்கறை படிந்த ஆடையுடன் ஒளிந்து கொண்டிருந்த ஒரு வாலிபனைப் போலீஸார் இது சம்பந்தமாக சந்தேகித்து கைது செய்திருக்கிறார்கள். அவன் கூறிய விவரங்களிலிருந்து அவனுக்கும் பண்ணையார் மகனுக்கும் ஒரு பெண் விஷயமாக விரோதம் இருந்ததாகத் தெரிகிறது. இது சம்பந்தமாகப் போலீஸ்காரர்கள் இன்னும் மேற்கொண்டு புலன் விசாரித்து வருகின்றனர்.''

''அப்படிச் சொல்லுங்க விஷயத்தை! கொலை செய்யுமளவு துணிய ஒரு மனிதனுக்கு ஏதாவது முகாந்திர மில்லாமே இருக்குமான்னு நான் அப்பவே நினைச்சேன்'' என்று பற்களைக் காட்டி மகிழ்ச்சியுடன் சிரித்த ஜெகதா, தன்னுள்ளே, ''வேண்டும், லோகநாயகிக்கு. இந்த அவமானம் நன்றாக வேண்டும்'' என்று ஆத்திரத்துடன் கூறிக்கொண்டாள்.

சம்பாஷணையை அரைகுறையாகக் கேட்டுக் கொண்டிருந்த

வேலைக்கார வள்ளி தலையை நீட்டி, தன் பற்கள் அனைத்தையும் காட்டி, ''அம்மா! பூபதி ஒரு பத்திரிகை வச்சுப் படிக்குது, அதிலே இந்தக் கொலை பத்தி விவரமாகப் போட்டிருக்கு'' என்று அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசினாள்.

ஜெகதா கோபத்துடன் அவளை அதட்டுமுன், வம்பிற்காக அலைந்து கொண்டிருந்த சந்திரவதனி, ''எங்கே, அதைக் கொண்டா பார்க்கலாம்!'' என்று உற்சாகத்துடன் கூவினாள்.

வள்ளி மேல் மூச்சு வாங்க அந்தப் பத்திரிகையை எடுத்துக்கொண்டு வந்து எஜமானியிடம் கொடுத்தாள். அதைப் பரக்கெனப் பிரித்த சந்திரவதனி ஆத்திரமாகப் பத்திரிகையில் கொட்டை எழுத்துகளில், ''அயலூர் பண்ணையார் மகனுக்குக் கத்திக் குத்து'' என்று தலைப்பிடப்பட்டிருந்த செய்தியை உரத்து வாசித்தாள்.

''அயலூர் பண்ணையார் மகனை யாரோ முன்பின் தெரியாத ஒரு வாலிபன் கத்தியால் குத்தி விட்டதாகச் செய்தி வந்திருந்தது. அந்த வாலிபனைப் பற்றிய விவரங்கள் சிலவற்றை நமது பிரத்தியேக நிருபர் அறிந்து கொண்டு வந்து பின்வருமாறு எழுதுகிறார்'' என்றிருந்த வாசகத்தை உரத்து வாசித்துவிட்டு, தொண்டையைக் கனைத்துக் கொண்டு மேலே படிக்கலுற்றாள்.

''பண்ணையார் மகன் சோமசேகர், வெகு நாளாக ஒரு பெண்ணைக் காதலித்து வந்தார் என்றும், கல்யாணம் செய்து கொள்ளுவதாகக் கூறி, அப்பெண்ணை வீட்டை விட்டு ஓடி வரச் செய்துவிட்டு, கடைசியில் கைவிட்டு விட்டார் என்றும், அதனால் ஆத்திரமடைந்த அப்பெண்ணின் சகோதரன், பழிக்குப் பழி வாங்கும் எண்ணத்துடன் கத்தியால் அவரைக் குத்தி விட்டதாகவும் விவரம் தெரிகிறது. இது சம்பந்தமாக போலீஸார், இரத்தக் கறையுள்ள ஆடைகளுடன், சத்திரம் ஒன்றில் ஒளிந்து கொண்டிருந்த ஆனந்தன் என்ற வாலிபனைக் கைது செய்திருக்கிறார்கள். ஆனந்தன், அருகில் உள்ள காரிகுளம் எனும் கிராமத்தைச் சேர்ந்தவன். வயது இருபத்திரண்டு என்றும், சதாசிவம் என்பவரின் மகன் என்றும் தெரிகிறது'' என்று படித்து முடித்துவிட்டு, பெருமிதமாக தலையை ஆட்டினாள்.

ஜெகதாவின் முகத்திலே காணப்பெற்ற மாறுதலைக் கவனித்த

சந்திரவதனி பயந்து போய் பத்திரிகையைக் கீழே போட்டுவிட்டு "என்னம்மா உங்களுக்கு?" என்று பதறிக் கேட்டாள். அவள் பேசுமுன், ஜெகதா உண்மையாகவே மூர்ச்சித்து, ஆசனத்தினின்று தடாலெனத் தரை மீது விழுந்துவிட்டாள்.

இதே சமயம், பழனியப்பக் கவுண்டர் வீட்டு முன்புற ஹாலில் அமர்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்த அசோகன், லோகநாயகி மனோன்மணி இம்மூவரிடையேயும் இதே விஷயம் தர்க்கத்திலிருந்தது. "என்ன சொன்னாலும் கேட்கமாட்டேங்கிறாள் அழுதழுது முகம் வீங்கிப் போச்சு" என்று லோகநாயகி அலுத்துக் கொண்டாள்.

தட்டில் தயாராகக் கொண்டு வந்து பரிசாரகன் பரிமாறிய இட்டிலியைப் பிட்டு வாயில் போட்டுக் கொண்டு "நான்சென்ஸ் நளினியைக் கூப்பிடுங்க. நான் புத்தி சொல்கிறேன். எதுக்காக அழணும், வெட்கப்படணும்? இப்போ என்ன நேர்ந்துவிட்டது? கல்யாணம் நிச்சயம் செய்தோம், நடக்கிறதுக்கு முன்னாடி ஒரு விபத்து நேர்ந்தது. அதனாலே கல்யாணம் நின்றுவிட்டது என்றால் அழுவானேன்?" என்று அதட்டினான் அசோகன்.

"இந்த வரன் இல்லாவிட்டால் இன்னொன்று என்று போயிருப்பார்கள்" என்று சூள் கொட்டினாள் மனோன்மணி மிகவும் அசட்டையாக.

"அவர்கள் வீட்டில், இது பெண் ஜாதகத்தின் கோளாறு என்று நளினியை நிந்திப்பார்களே என்று எனக்குக் கொஞ்சம் மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது. இந்தக் கல்யாணம் நின்றுவிட்டது என்று கொஞ்சமும் வருத்தமேயில்லை. கவுண்டர், நளினிக்கு வேறிடத்தில் நிச்சயம் செய்யப் போவதாக நேற்றே சொல்லிவிட்டார். குறித்த தேதியிலே எப்படியும் கல்யாணத்தை முடிச்சுவிட வேணும் என்று அவர் எண்ணம். நானும் சரி என்று சொல்லிவிட்டேன்" என்றாள் விசாரமான குரலில் லோகநாயகி.

"நளினியின் ஜாதகம் மிகவும் யோக ஜாதகம் என்பதற்கு இந்த விபத்து ஒன்றே பெரிய அறிகுறி. கல்யாணம் நடக்கும் முன்னாடியே, அவள் பெரிய சங்கடத்திலிருந்து தப்பிக்கொண்டு விட்டாள்

அல்லவா? கல்யாணம் நடந்த பிறகு இது நேர்ந்திருந்தால்....!" என்று கண்களை வியப்புடன் அகல விரித்தாள் மனோன்மணி.

"அப்படி நடந்திருந்தால்தான் என்னவாம்? நடக்கப் போவது என்று தீர்மானிப்பதெல்லாம் கல்யாணமாகி விடுமா? கல்யாணம் நடந்த பிறகுதான் எல்லாத் திருமணங்களும் உண்மையிலே திருமணங்களாகி விடுகின்றனவா? கல்யாணத்திற்குப் பிறகு ஒரு விபத்து நேர்ந்து விட்டதென்றால் அதற்குப் பிறகு அந்த ஆத்மாவுக்கு, உலகில் வாழ வழியோ, திரும்ப இல்லற வாழ்க்கை வாழ வகையோ கிடையாதா?" என்று கூறிவிட்டு, மனோன்மணியை மிகவும் ஆதரவாக அர்த்தபாவத்துடன் பார்த்துப் புன்முறுவலித்தான் அசோகன்.

"என்னவோ நீங்க ரெண்டு பேரும்தான் நளினிக்கு ஆறுதல் சொல்லி அவள் மனத்தை மாற்ற வேணும், கவுண்டர் அவளுக்கு, காகித வியாபாரி ருத்திர கவுண்டர் மூத்த மகனை நிச்சயிக்கப் போகிறாராம்" என்று கூறிவிட்டு எழுந்து சென்றாள்.

"அப்படியே செய்கிறோம். அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம்" என்று கூறிவிட்டு அசோகன், மனோன்மணி பக்கம் திரும்பி, "மனோ! இந்த நளினி கல்யாணம் முடிந்ததும் நம்முடைய கல்யாணத்தை முடிக்க வேண்டும். வெளிநாடு செல்ல ஆயத்தங்கள் இப்பொழுதே செய்தாக வேண்டும்" என்றான். பிறகு சிறிது நேரம் உல்லாசமாகச் சம்பாஷித்திருந்துவிட்டு, விடை பெற்றுக் கொண்டு சென்றுவிட்டான்.

அன்று இரவு, நளினிக்கு மன ஆறுதலைக் கொடுக்க வேண்டி, அவளை அழைத்துக்கொண்டு மனோன்மணி நகரத்திலே ஓடிக்கொண்டிருந்த மிகவும் பிரபலமான ஒரு வண்ணப்படக் காட்சிக்குச் சென்றிருந்தாள். படத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நளினி துயரத்திலே ஆழ்ந்து இருந்தாளாதலினால் அவள் தன்னைச் சுற்றிலும் யாரையும் கவனிக்கவேயில்லை.

படத்தை ஒரு கணம் பார்ப்பதும், தன் அலங்காரத்திலே ஒரு கணம் லயிப்பதும், தன்னைச் சுற்றிலும் ஒரு கணம் பார்த்துக் கொள்வதுமாக, வண்டுபோல சஞ்சலத்துடன் சுழன்ற

மனோன்மணியின் கண்கள், தனக்கு முன்னிருந்த வரிசையில் ஒரு கோடியில் உட்கார்ந்திருந்த ஒரு அழகிய பெண்ணின் பக்கம் சென்று முடிவாக லயித்தன. மின்சார அதிர்ச்சி பெற்றவள்போல் கொட்டகையில் படிந்திருந்த இருளை ஊடுருவிக் கொண்டு, அவள் அருகில் அமர்ந்திருந்த ஆடவனைக் கூர்ந்து கவனித்தாள் மனோ. அவளது இருதயம் வெடித்துவிடும்போல் வேகமாக அடித்துக் கொண்டது. ஆத்திரத்தில் உடல் முழுவதும் அனலாகப் பற்றி எரிந்தது. இடைவேளையின்போது பளிச்சென்று எரிந்த விளக்கொன்று அவளது கொஞ்ச நஞ்ச ஐயத்தையும் தெளிவுபடுத்திவிட்டது.

முகத்திலே பவுடரும், உதடு நிறைந்த சாயமுமாய், மிகவும் அலங்கார சுந்தரியாக அமர்ந்திருந்த அணங்கு ஒருத்தியை அருகில் ஆசனத்தின் மீது கையை நீட்டி அணைத்தவண்ணம் அசோகன் உட்கார்ந்திருந்தான்.

42

சதாசிவத்தின் குடும்பத்திலே தொடர்ந்து ஏற்பட்ட பல துன்ப சம்பவங்களைக் கண்டு, அன்டை வீட்டவர்களான சிதம்பரமும், சௌந்தரம்மாளும் தங்கள் கடமையைப் புரிய முன் வந்தனர். அவர்கள் எவ்வளவு வற்புறுத்தியும் அருணா, தங்கள் வீட்டைவிட்டு அவர்களுடன் சென்று வசிக்கப் பிடிவாதமாக மறுத்துவிட்டாள். ஆனால் தாயன்பு மிக்க சௌந்தரம்மாளால் அச்சிறுமியின் துயர நிலையைக்கண்டு வாளா இருக்க முடியவில்லை. ஆனந்தன்மீது தொடரப்பட்ட வழக்கில், நல்ல வக்கீல் வைத்து கேஸ் நடத்தும் பொறுப்பைத் தானே வலிய ஏற்றுக்கொண்டு, கிராமத்திற்கும், நகரத்திற்குமாக சிதம்பரம் அலைந்து கொண்டிருந்தான். தன்னந்தனியளாக, துயரமே உருவாகி உள்ளம் வெடித்து துன்பத்திலே உழன்று கொண்டிருந்த அண்டை வீட்டுப் பெண்ணுக்குத் தன்னாலான உதவியை செய்து விடுவது என்று சௌந்தரம்மாள் திடமாகத் தீர்மானித்து விட்டிருந்தாள். தான் சமைத்த உணவை, தங்கள் வீட்டிலிருந்து எடுத்து வந்து அருணாவிற்குப் பரிமாறி, வற்புறுத்திச் சாப்பிடச் செய்தாள்.

சிதம்பரம் வெளியே சென்று விட்டதும் தங்கள் வீட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டு அருணாவிற்குத் துணையாக அங்கே வந்து விடுவாள். இரவு வேளைகளில் அச்சிறுமி பயமின்றித் தூங்கும் பொருட்டு கூடத்துணையாக வந்து அங்கே நித்திரை செய்தாள். இவைகளைத் தவிர, அப்போதைக்கப்போது நல்ல வார்த்தைகளால் அருணாவின் மனத் துயரத்திற்கு ஆறுதல் கூற முயற்சித்தாள்.

சதாசிவம் மரணமடைந்து பதினைந்து தினங்களுக்கு மேல் ஓடிச் சென்றுவிட்டன. இந்தச் சில நாட்களில் அருணா, தோற்றத்திலே வெகுவாக மாறி விட்டிருந்தாள். சௌந்தரம்மாளின் போஷிப்பையும், ஆறுதல் மொழிகளையும் மீறி அவளது உடல் நலிந்து, பாதியாக இளைத்துக் கறுத்துவிட்டிருந்தது.

அன்று தினம் காலை, ஆனந்தனின் வழக்கு சம்பந்தமாக சில தகவல்கள் விசாரிக்க சிதம்பரம், தன் சொந்த அலுவல்களையும் விட்டுவிட்டு பக்கத்து நகரத்திற்குச் சென்றிருந்தான். தங்கள் வீட்டுக் காரியங்களைக் கவனிக்க, சௌந்தரம்மாள் சென்றிருந்தாள். தன்னந்தனிய க இருந்த அருணா, பல நாட்களாக கவனிப்பின்றிக் கிடந்த கூடத்து அறையைப் பெருக்கி, தூசி படிந்து கிடந்த பெட்டிகளைத் துடைத்து அடுக்கி வைப்பதில் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தாள். எல்லாவற்றிற்கும் அடியில் இருந்த பெரியதொரு பெட்டியைக் கண்டதும் அவளது சிந்தனை அலைபாயத் தொடங்கியது 'சதாசிவம்' என்று பெட்டி மீது பொறிக்கப்பெற்ற வெள்ளை எழுத்துக்கள் உருமாறிக் குலைந்து, இங்குமங்கும் அழிந்து காணப்பட்டன. அந்தப் பெட்டியின் மூடியைத் திறந்து உள்ளே கையைவிட்டுத் துழாவினாள்.

சதாசிவம் தன் வாழ்நாள் முழுவதையும் வறுமையிலேயே கழித்து விட்டிருந்தான். ஆதலால், பெட்டிக்குள் அதிசயமான விலையுயர்ந்த வஸ்துகள் ஏதும் இருக்கவில்லை. அபூர்வமாக, எப்பொழுதாவது அவன் அணிந்து கொள்ளும் சரிகை அங்கவஸ்திரம் ஒன்றும், சலவை செய்த இரண்டு வேஷ்டிகளும், சில பழைய சட்டைகளும் மட்டுமே அதில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. சரிகை அங்கவஸ்திரம் சதாசிவத்தின் கல்யாணத்தின் போது எடுக்கப்பட்டது

என்பதை அவள், அவன் கூற ஒரு முறை கேட்டிருந்தாள்.

தங்கள் பிறப்பிற்கு ஞாபகச் சின்னமாக விளங்கிய அந்த ஆடையைக் கையில் எடுத்து மிகவும் சிரத்தையாக உற்றுப் பார்த்தாள் அருணா. சரிகைக்கரை பிரிந்து, உடலினின்று பிய்ந்துவிடும் நிலையில் பழையதாகி, அந்த ஆடை நலிந்து மக்கிக் கிடந்தது. மிகவும் ஜாக்கிரதையாக அதைத் தன் கையில் எடுத்து மடிமீது வைத்துக் கொண்டாள் அருணா. மரணத்துடன் போராடும் கடைசி நேரத்திலே தந்தையின் சிரத்தை மடிமீது வைத்துக் கொண்டு ஆறுதல் மொழி பேசியபோது ஏற்பட்ட தாங்கொணாத் துயரம் அதுசமயம் அவளுக்கு ஏற்படவே, அவள் கண்கள் கலங்கின.

''அப்பா! உங்கள் மீது எனக்கு ஒரு பொழுதும் கோபமேயில்லை. நாம் ஒருவரையொருவர் அறிந்து அன்புடன் கொஞ்ச நாட்களாவது வாழ முடியாது, மரணம் கொடுமை செய்து விட்டதே என்ற துக்கம் ஒன்றுதான் எனக்கு. இந்தப் பரந்த உலகில் எத்தனையோ பேர், நம்மை விடக் கொடிய வறுமையிலே உழன்று வாழ்கிறார்கள். ஆனால், நாம் மட்டும் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள முடியாது, சந்தர்ப்பங்களால் பிரித்து வைக்கப்பட்டோம். இதன் காரணம் என்ன? என்ன? இது எனக்கு ஒரு நாளும் விளங்கப் போவதில்லை. அப்பா! என் துயரக் குரல் உங்களுக்கு இனிக் கேட்குமா? என் கண்ணீரை உங்களால் இனிக் காண முடியுமா?'' என்று தனக்குள் பேசியபடி விக்கி விக்கி அழுதாள்.

சிறிது நேரம் இவ்வாறு துயரமான சிந்தனையிலே தன்னை மறந்து ஈடுபட்டிருந்த அருணா, முடிவில் கண்களைத் துடைத்துக்கொண்டு, பெட்டியிலிருந்த ஆடைகளை ஒவ்வொன்றாக வெளியே எடுத்துத் தட்டி அடுக்கி வைத்தாள். பெட்டியின் அடியில் கிடந்த பழைய பத்திரிகைத் தாளை வெளியே எடுத்தாள். அதனுடன் கனமான ஒரு காகித உறை கூடவே வந்து வெளியில் விழுந்தது. ஆச்சர்யத்துடன் அதைக் கையில் எடுத்து மடிப்பாக உள்ளே பொதிக்கப் பெற்றிருந்த ஒரு காகிதச் சுருளை எடுத்துப் பிரித்தாள். வியப்பிலும், துயரத்திலும் அவள் அப்படியே ஸ்தம்பித்துப் போய் விட்டாள்! அந்தப் பத்திரத்தின்படி, சதாசிவத்தின் வீடு, ஒரு வருஷத்துக்கு முன்பு அவன் அவசரமாக வாங்கியிருந்த ஆயிரம் ரூபாய் கடனுக்காக, அண்டை வீட்டுச் சிதம்பரத்திற்கு ஈடாகி விட்டிருந்தது.

இந்த உண்மையை அறிந்ததும் அருணாவுக்கு துக்கம் தாள முடியவில்லை.

ஆனந்தன் சம்பந்தப்பட்ட வழக்கை நடத்தி, அவனைத் தொல்லையிலிருந்து மீட்கவும், பிற்காலத்தை அவர்கள் திட்டமிட்டுத் தீர்மானிக்கும் வரையில் குடும்பத்தை நடத்தவும் வேண்டிய பணத்திற்கு, அந்த வீடு ஒன்றை மட்டுமே அவள் அதுவரை நம்பிக் கொண்டிருந்தாள். அந்த வீடும், அவர்களுக்கு இனி சொந்தமில்லை என்ற ரகசியம் தெரிந்ததும், அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை விவரிக்கவே முடியாது.

பெட்டியை மூடிவிட்டு, கவலையுடன் கூடத்திற்கு வந்தாள். வாயிற் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்கவே சென்று திறந்தாள். கோடி வீட்டுக் குப்பம்மாள் பெருமூச்சு வாங்க, தடுமாறிக் கொண்டு உள்ளே வந்தாள். 'கதவைத் தாளிடு' எனக் கைகளால் ஜாடை செய்துவிட்டு, மிகவும் ஜாக்கிரதையாக கூடத்து பெஞ்சுமீது உட்கார்ந்து கொண்டாள். ''அருணா! நீ சிறு குழந்தை, உலக விவகாரம் தெரியாதவள். உன் நன்மையை உத்தேசித்து ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போக வந்தேன்'' என்று மூச்சுத் தடுமாறினாள் அந்தக் கிழவி.

அருணாவிற்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆகவே அவள், ''பாட்டி! நீங்க எல்லோரும் என்னிடம் இது சமயம் ரொம்ப அன்பாக நடந்துக்கிறீங்க. உங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். என்ன விசேஷம் சொல்லுங்க?'' என்று விநயமாகக் கேட்டுவிட்டு, அருகில் தரை மீது வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''சதாசிவம் ஏழையானாலும் மானமாக வாழ்ந்தவன். அந்தப் பாவிப் பொண்ணு குடும்பத்தைக் கெடுக்க வந்த கோடாலியாக வந்து முளைச்சு, ஊர் சிரிக்கச் செய்துவிட்டு போய்விட்டாள். அது போதாதுன்னு இந்தப் பயல் ஆனந்தனும், பெரிய இடத்து வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டு ஜெயிலில் கிடக்கிறான். இந்த சமயத்திலே, நீ இங்கே இருப்பது சரியேயில்லை. குழந்தை, உனக்கு உலகம் தெரியாது'' என்று சூள் கொட்டினாள் குப்பம்மாள்.

அருணா மௌனமாக இருப்பதைக் கண்ணுற்ற கிழவி,

பெருமூச்செறிந்துவிட்டு, "இப்போ நடந்தது என்னவோ நடந்துவிட்டது. அதனாலே உன் வாழ்வும் இத்தோட பாழாகிப் போயிடணுமா? ஊரிலே என்ன பேசிக்கிறாங்கன்னு உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

திடுக்கிட்டுப் போன அருணா, "என்ன பாட்டி சொல்கிறாங்க?" என்று ஆவலுடன் வினவினாள்.

"வாயால் சொல்லவும் நா கூசுது. என் கண்ணுக்கு நீ சின்னக்குழந்தை. ஆனா உலகத்துக் கண்ணுக்கு வயது வந்த பெண் இல்லையா? அப்பன் செத்துப் போய் அண்ணனும் இல்லாதபோது, தன்னந்தனியா இந்தப் பெண் ஏன் இந்த வீட்டிலே தங்கியிருக்கணும்? காரணத்தைக் கண்ணாடி போட்டா பார்க்கணும்? 'அந்த அண்டை வீட்டுப் பையன் இந்த வீட்டில் வரதும் போறதுமாக இருக்கிறான். சரித்தான் அக்கா எவனையோ இழுத்துக் கொண்டு ஓடிவிட்டாள். அப்பன் செத்து ஒழிந்தான். அண்ணா வம்பு வழக்கில் மாட்டிக் கொண்டான். இனி நம்மைக் கேட்பாரில்லை என்று இந்தப் பெண் பக்கத்து வீட்டுப் பையனோடே சிநேகிதம் பிடிச்சுக் கொண்டுவிட்டா. சதாசிவத்தின் குடும்பத்தின் மானம் கப்பலேறிடுச்சி' என்று பேசிக் கொள்கிறார்கள். ஆமாம் குழந்தை, நான் தாய்போலக் கேட்கிறேன், அந்த சிதம்பரத்திற்கு இந்த வீட்டிலே என்ன வேலை? நீ தனியா இருக்கையிலே இங்கே வரதும் போறதும் நல்லாவா இருக்கு?" என்று முடித்தாள் குப்பம்மாள்.

அவமானத்தினால் அருணாவின் உடல் கூசிக் குறுகிப் போயிற்று. ஒரு பாவமும் அறியாத தன்னை கிராமத்தவர்கள் தூற்றுகிறார்களே என எண்ணிய மாத்திரம் அவள் நெஞ்சு ஆத்திரத்தில் கொதித்தது. "பாட்டி! இந்த ஊரார் இரக்கமற்றவர்கள். எனக்கு என்ன சொல்வது என்றே விளங்கவில்லை. இப்படியா அவதூறு பேசுகிறார்கள்? கிராதகர்கள்!" என்று கோபத்துடன் படபடப்பாகக் கேட்டாள்.

கிழவி பதிலுக்கு சூள் கொட்டினாள். "இன்னும் ஏதேதோ பேசிக்கொள்வதுகூட காதிலே விழுந்துக்கிட்டுதான் இருக்கு. அதெல்லாம் சொல்ல எனக்குப் பிடிக்கலை, ஒரே ஒரு வார்த்தை, புத்தி சொல்லத்தான் உலையிலே அரிசியைப் போட்டுவிட்டு

ஓடியாந்தேன். நீ இங்கே அதிகநாள் தனியாக இருக்காதே, பட்டணத்திலே யாரோ உனக்குச் சொந்தம் இருக்குறாங்க பாரு, அவங்க வீட்டுக்குப் போய் இரு. அதுதான் நியாயம்" என்று உபதேசித்தாள்.

அருணா பதில் சொல்லாவிட்டாலும், தான் வந்த காரியம் ஜயமாகிவிட்டது என்று உள்ளூர உணர்ந்து கொண்ட குப்பம்மாள் எழுந்து சென்று தானே கதவைத் திறந்து கொண்டு, வெளியேறிவிட்டாள்.

அருணா வெகுநேரம் அப்படியே செயலற்று உட்கார்ந்திருந்தாள். தெருவில் உள்ள ஆடவரும், பெண்களும் ஒருங்கே கூடித் தன்னைச் சுட்டிக்காட்டி ஏதேதோ பேசி, சிரித்து மகிழ்வதுபோல் அவளுக்கு ஒரு பிரமை ஏற்பட்டது. கிழவி குப்பம்மாள் கூறிய கொடுமொழிகள் அவள் காதுகளிலே ஓயாது ரீங்காரம் செய்த வண்ணமிருந்தன. யோசித்து யோசித்து அவளுக்கு தலைசுற்றிக் கொண்டு வந்தது. 'அன்பு, அக்காவை வீட்டைவிட்டு விரட்டியது! ஆத்திரம், அண்ணனை வீட்டைவிட்டு ஓடச் செய்தது. மரணம் அப்பாவை அழைத்துக் கொண்டது. எஞ்சியிருந்த என்னையும் இங்கிருந்து அகற்ற இப்பொழுது அவதூறு புறப்பட்டிருக்கிறது போலும்! சே! என்ன உலகம். என்ன வாழ்க்கை' என தனக்குள் எண்ணி மனம் கசந்துபோய், வெகுநேரம் தன்னை மறந்து சிந்தனையில் மூழ்கியிருந்தாள்.

அன்று சாயங்காலம், பக்கத்து நகரத்திலிருந்து திரும்பி வந்த சிதம்பரம், அருணாவைக் கண்டு ஆனந்தன் சம்பந்தமாக சில தகவல்கள் தெரிவிக்க, அவர்கள் வீட்டுக்குள் வந்தான். ஊருக்குப் புறப்படுகிறவள்போல், அருணா பெட்டி படுக்கை முதலியவற்றை சித்தம் செய்துகொண்டு இருப்பதைக் காண அவனுக்கு மிக்க ஆச்சர்யமாக இருந்தது.

"என்ன அருணா இது? என்ன விசேஷம்!" என்று வியப்புடன் கேட்டான் சிதம்பரம்.

"நீங்கள் எப்பொழுது வருவீர்கள் என்று ஆவலுடன் காத்திருந்தேன். எதிர்பார்த்ததற்கு முன்னாடியே வந்தது நல்லதாகப் போயிற்று. இன்று இரவு வண்டிக்கு நான் ,பட்டணம் போகத்

தீர்மானித்துவிட்டேன். வழிச் செலவிற்குப் பணம் தேவையாக இருக்கிறது. அதனால் இதை ஈடாக எடுத்துக் கொண்டு, எனக்குக் கொஞ்சம் பணம் தரும்படி வேண்டிக் கொள்கிறேன்'' என்று தரையைப் பார்த்த வண்ணம் பேசிய அருணா, தன் கரத்திலிருந்த தங்க வளையல் ஒன்றைக் கழற்றிக் கீழே வைத்தாள்.

அவளது செய்கை, வார்த்தை இரண்டும் சிதம்பரத்தின் மென்மையான மனத்தை நோகச் செய்தன. ''பெரியம்மா புறப்பட்டு வரும்படி கடிதம் போட்டிருக்கிறார்களா என்ன?'' என்று சாந்தமாக அவன் வினவினான்.

''பெரியம்மா கடிதம் போடவில்லை. என்னுடைய பல கடிதங்களுக்கும் தந்திக்கும் பதில் ஏதும் எழுதாததிலிருந்து அவர்கள் என்மீது மிகவும் மனத்தாங்கலாக இருக்கிறார்கள் என்று உணர்கிறேன். இங்கே தனியாக இருக்கவும் எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதனால் புறப்பட்டு விட்டேன்'' என்றாள் அருணா.

ஏதோ மனதிலே ஒரு எண்ணங்கொண்டு அவள் இப்படிப் பேசுகிறாள் என்பதை விரைவில் உணர்ந்து கொண்ட சிதம்பரம், ''இங்கே தனியாக இருக்கக் கஷ்டமாக இருந்தால், எங்கள் வீட்டில் வந்து நீ அதை உன் வீடுபோல் எண்ணித் தங்கியிருக்கலாம். ஆரம்பத்திலிருந்து அம்மாவும் நானும் இந்த விஷயமாக ஒரு முகமாக உன்னை வற்புறுத்தி அழைத்துக் கொண்டிருக்கிறோம். நீ தான் றுத்து, இங்கே தனியே இருக்க ஒப்புக் கொண்டாய். இதற்காக ருக்குப் புறப்படுவானேன்?'' என்று கேட்டான்.

''பெரியம்மாவை நேரில் கண்டு, அவர் வீணாகக் கோபம் காண்டிருந்தால், நடந்த விஷயங்களை எடுத்துக் கூறி அவர்கள் மனத்தைச் சமாதானப்படுத்த வேண்டும். அது என் முக்கியக் கடமை. தயவு செய்து தடை ஒன்றும் சொல்லாதீர்கள். எங்கள் குடும்பத்திற்கு நீங்கள் செய்துவரும் உதவிகளை நான் ஒருபோதும் மறக்கவே மாட்டேன். என் உயிர் உள்ளவரை அதற்குக் கடமைப்பட்டவளாக இருப்பேன்'' என்றாள் துயரம் பொங்கிய குரலில்.

''அருணா! உன் சொந்த விஷயங்களில் அதிகம் பிரவேசித்துப் பேசவோ, யோசனை சொல்லவோ எனக்கு உரிமை கிடையாது.

எனினும், நண்பன் என்ற ஹோதாவில் என்னால் பேசாதும் இருக்க முடியவில்லை. ஆனந்தன் வழக்கு நடக்கும் சமயத்தில் நீ அருகில் இருப்பது நலம் அல்லவா? யோசித்துப் பார்!'' என்றான் துணிவாக, சிதம்பரம்.

''யோசித்துப் பார்த்துத்தான் இந்த முடிவுக்கு வந்தேன். ஆனந்தன் அண்ணனுக்கு அருகில் நான் இருப்பதும் ஒன்றுதான், இல்லாததும் ஒன்றுதான். மேலும் சிரத்தையுடன் காரியங்களைக் கவனிக்க நண்பன் என்ற முறையில் நீங்கள் இருக்கும்போது நான் அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை, இல்லையா?'' என்று கேட்டாள் அருணா.

அவளது கண்களில் துளிர்த்த நீர்படலத்தையும், முகத்திலே படிந்திருந்த சோகத்தையும் கண்டு சிதம்பரம், நெஞ்சுருகிப் போய்விட்டான். 'அருணா! நீ என் உயிருக்கினியவள். உன் கண்ணீர் என் மனத்தை எவ்வளவு வேதனை செய்கிறது தெரியுமா?' என்று வாய்விட்டுக் கத்த வேண்டும்போல் அவன் மனம் பதைத்தது.

தன்னை மீறி எழுந்த உணர்ச்சி வேகத்தை கட்டுப்படுத்திக் கொண்டு, ''சரி! உன் தீர்மானத்தை நான் தடுப்பது நியாயமல்ல. இரவு வண்டியில் உன்னை ஏற்றிவிட ஏற்பாடு செய்கிறேன்'' என்று கூறிவிட்டு, சரேலென அவ்விடமிருந்து சென்றுவிட்டான்.

அன்று இரவு, அருணா தன் மூட்டைகளுடன், பெரியம்மா வீட்டிற்கு வலியத் தானாகவே பிரயாணப்பட்டாள். வாயிலில் வண்டியைக் கொண்டு வந்து நிறுத்தினான் சிதம்பரம். தானே பெட்டி படுக்கைகளையும் தூக்கி வந்து வண்டிக்குள் ஏற்றிவிட்டு, சௌந்தரம்மாளிடம் விடை பெற்றுக் கொண்டு ஏறி உட்கார்ந்தாள் அருணா. சிதம்பரம்தான் வண்டியை ஸ்டேஷனுக்கு ஓட்டிச் சென்றான். வழி நெடுகிலும், அவர்கள் இருவரும் ஒரு வார்த்தைகூட பேசிக் கொள்ளவேயில்லை.

ரயில் வண்டியின் வரவிற்காக, பிளாட்பாரத்திலே காத்து நின்ற சில வினாடிகளில் அருணா, கடைசியாகத் தான் கூறவேண்டியதைச் சொல்லிவிடத் துடித்தாள். வெகுதொலைவில் எஞ்சின் ஊதும் புகையைக் கேட்டதும் அவள் திடுக்கிட்டு சிதம்பரம் பக்கம் திரும்பி, ''உண்மையை நான் இப்பொழுது சொல்லிவைக்கிறேன். நீங்கள்

களங்கமில்லாத அன்புடன் எங்கள் குடும்பத்திற்குச் செய்யும் உதவிகளைச் சில பாவிகள் தவறாக எண்ணி, அவதூறுகள் பல பரப்பி விட்டிருக்கிறார்கள். அதனால்...' என்று கூறமுடியாது நிறுத்தினாள்.

''அதைக் கேட்டு பயந்து கொண்டு ஊரைவிட்டு ஓடிவிடத் தீர்மானித்தாய் இல்லையா? இதைச் சுத்த முட்டாள்தனம் என்று அழைக்காமல் வேறு என்ன சொல்வதென்று விளங்கவில்லை. ஊரைவிட்டு ஓடி விடுவதனால் ஊரார் பரப்பிவிட்ட வீண்பழி உடனே அழிந்துவிடப் போவதில்லை. அதற்கு மாறாக இன்னும் பல ரூபத்திலே திரிந்து பல கதைகளாகப் பரவப்போகின்றது. இதை நீ யோசிக்கவேயில்லை போலும்'' என்றான்.

''வீணாக உங்கள் பெயருக்கு அபக்கியாதி ஏற்படுவதைக் காண எனக்கு சகிக்கவில்லை. மேலும், பெரியம்மாவை நேரில் கண்டு விஷயத்தை எடுத்துச் சொன்னால் அவர்கள், அண்ணன் சம்பந்தமாக கோர்ட் வழக்கு செலவிற்கு உதவுவார்கள் என்ற ஒரு நம்பிக்கை'' என்றாள் அருணா. அதற்குள் வண்டி ஓவென்று இரைச்சலுடன் பிளாட்பாரத்திலே ஓடி வந்து நின்றது. அவசரமாக சாமான்களைத் தூக்கி, பெண்கள் பெட்டியில் ஏற்றிவிட்டு, சிதம்பரம் ஜன்னல் அருகே வந்து நின்று கொண்டான்.

''போய்வருகிறேன். தாங்கள் இதுவரை எங்கள் குடும்பத்திற்குச் செய்துள்ள பல உதவிகளுக்கும் மனமார்ந்த நன்றி'' என்று கூறி, அருணா விடை பெற்றுக் கொண்டாள்.

வண்டி நகரத் தொடங்கியதைக் கண்ணுற்ற சிதம்பரம், ''அருணா! உனக்கு உலகில் யாரும் துணை இல்லை என்ற நினைப்பே வேண்டாம்! கஷ்டம் நேரிட்டு உதவி அவசியமானால் உன் உற்ற நண்பன் சிதம்பரத்தை மறக்காது, ஒரு கடிதம் போடு, போதும்'' என்றான். அதற்கு மேல் பேசமுடியாது அவன் நெஞ்சைத் துயரம் பற்றிக் கொள்ளவே அவன் கையை அசைத்து, போய் வர அவளுக்கு விடை கொடுத்துவிட்டு, பிளாட்பாரத்தினின்று வெளியே வந்தான்.

சில நாட்களாக உடம்பு சுகமில்லாது படுக்கையிலேயே இருந்த ஜெகதா அன்று காலைதான் முதன் முதலாக தலைக்குத் தண்ணீர் வார்த்துக் கொண்டு, பத்தியமாகக் கொஞ்சம் சுக்குக் கஷாயத்தை

அருந்திவிட்டு, ஓரமாக, ஹாலிலிருந்த சோபா ஒன்றில் வந்து மெல்லச் சாய்ந்து கொண்டாள். தன் பெயருக்கு வந்த தபால்களை ஆராய்ந்த வண்ணமிருந்த அவளது கண்களில் ஆடம்பரமானதொரு பெரிய திருமண அழைப்பிதழ் சட்டெனத் தென்பட்டது. அதை எடுத்துப் பிரித்துப் படித்த ஜெகதா கோபத்துடன் அதை வீசிக் கீழே போட்டு விட்டுப் பெருமூச்சுடன் சோபாவில் சாய்ந்து கொண்டாள். ''இரத்த அழுத்தம் மேலோங்கியிருக்கிறது. வீணான மன அதிர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது' என்று சமீபத்தில் அவளைக் கவனித்து வந்த டாக்டர் கடும் உத்தரவு போட்டிருந்தார். அதனால் அவள் படபடவென்று அடித்துக் கொண்ட தன் மார்பின் மீது கரத்தை வைத்து தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

பழனியப்பக் கவுண்டரின் செல்வ மக்கள் நளினி, சுரேஷ்குமாரன் இருவருக்கும், ஒரே சமயத்தில், ஒரே பந்தலில் ஜோடியாக நடக்கவிருந்த திருமணத்தின் அழைப்பிதழ் அது. தன் மகளுக்கும், அதே சமயம் தன் மகனுக்கும் வேறு இடங்களில் வாழ்க்கைத் துணைவர்களை நிச்சயம் செய்துவிட்டதைக் குறிப்பாக ஜெகதாவிற்கு அறிவிக்கும் பொருட்டேதான் லோகநாயகி அந்தத் திருமணப் பத்திரிகையை அனுப்பியிருந்தாள். அதைக் காண ஜெகதாவின் வயிறு பற்றி எரிந்ததில் வியப்பே இல்லை. லோகநாயகி வீட்டின் சம்பந்தத்தை எண்ணி, பல ஆயிரக்கணக்கான பணத்தை வாரி வீணாகச் செலவழித்திருந்த அவளது மனம் அது சமயம் துடியாகத் துடித்ததும் இயற்கையே!

வாயிற் கதவு அசையும் சப்தமும் தொடர்ந்து மெல்லியதாக காலடி ஓசையும் கேட்கவே, ஜெகதா நிமிர்ந்து வாயிலை நோக்கினாள். பெட்டி ஒரு கையிலும், படுக்கை இன்னொரு கையிலுமாக எடுத்துக் கொண்டு, பிரயாணக் களைப்பு நிறைந்த முகத்துடன் உள்ளே வந்த அருணாவைக் கண்டதும் அவளது ஆத்திரம், விர் என்று உச்ச நிலையை மீண்டும் எட்டிப் பிடித்துக் கொண்டது. ''வாடியம்மா! வா! நீ வரவில்லையே என்றுதான் காத்துக் கொண்டிருந்தேன்'' என்று பற்களைக் கடித்துக் கொண்டு எழுந்திருந்தாள்.

''பெரியம்மா...!'' என்று அருணா வாயைத் திறக்குமுன்

அடியுண்ட வேங்கைபோல் சீறிக்கொண்டு அருகில் வந்த ஜெகதா, ''பெரியம்மா என்ற உறவு இன்னும் வைத்துக் கிடக்கிறதா? பாவிப் பெண்ணே! போ வெளியே. என் வீட்டிற்குள் வர உனக்கு எத்தனை தைர்யம்? எந்த முகத்தைக் கொண்டு இங்கே வந்தாய்?'' என்று கத்தினாள்.

''பெரியம்மா!'' என்று குமுறிய அருணாவிற்கு நெஞ்சை துக்கம் அடைத்துக் கொண்டது.

''போதுமடி இந்த உறவு! உன்னை எந்த வேளையில் என் வீட்டில் கொண்டு வந்தேனோ, அன்றிலிருந்து எனக்கு ஒரு பெரிய சனியன் பிடித்துக் கொண்டது. என் அந்தஸ்து, கௌரவம், பணம் எல்லாம் உன்னாலே நாசமாகிவிட்டன. என் உயிர் ஒண்ணுதான் பாக்கி. அதையும் உறிஞ்சிக் குடிக்கப் புறப்பட்டு வந்தியோ? பிசாசே, போ வெளியே! ஏன் நிற்கிறாய்? உள்ளே காலை வைத்தாயோ, உங்கப்பன் உன் கையை ஒடிச்சதுபோல உன் காலை ஒடிச்சுப் போட்டு விடுவேன்'' என்று உரக்கக் கூக்குரலிட்டாள்.

திக்பிரமையடைந்து போன அருணா, வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்ட ஜெகதாவிற்குக் கோபம் தாள முடியவில்லை. ஒரே எட்டில் பாய்ந்து அருணாவின் கரத்தைப்பற்றி வலிய அவளை இழுத்து வாயிலுக்கு வெளியே கொண்டு நிறுத்தினாள். ''பங்கஜம் அன்று செத்துப் போனாள். இன்று எனக்கு நீ செத்துவிட்டாய். தெரிந்துகொள். உனக்கும் எனக்கும் இனி யாதும் சம்பந்தமில்லை'' என்று கூறிவிட்டு, படீர் என்று கதவைச் சாத்திவிட்டு மின்னலைப்போல் ஹாலுக்குத் திரும்பினாள்.

43

வலது கையைக் கன்னத்தில் ஊன்றியபடி, தன் சுழல் நாற்காலியில் கௌரியம்மாள் அமர்ந்திருந்தாள். கம்பளிப் பூச்சிகள்போல் அடர்ந்த இரு புருவங்களின் கீழ் மினுக்கிட்ட பெரிய கண்கள் இரண்டிலும் கடுமையானதொரு பாவம் குடி

கொண்டிருந்தது. வெளிப் பார்வைக்கு அவைகள் அவ்வாறு தென்பட்டனவே ஒழிய, அது சமயம் அவள் உள்ளம் இரக்க வசப்பட்டுப் பாகாய் நெகிழ்ந்து விட்டிருந்தது என்ற ரகஸியத்தை, பகுத்தறிவற்ற மிருகமானாலும், ரஞ்சிதம் புரிந்து கொண்டுவிட்டது. ஆகவே, இடது கரத்தினால் தன் முதுகை மெல்ல வருடிய தன் எஜமானியை நன்றிப்பெருக்கோடு பார்த்து, தன் அன்பை, 'ங்கு!' 'ங்கு!' என்ற ஈனத் தொனியில் முனகித் தெரிவித்துக் கொண்டிருந்தது.

எதிரே மேஜை மீது தலையைத் தாழ்த்திக் கொண்டு, கண்ணீரைத் தாரை தாரையாகப் பெருக்கியபடி விக்கி அழுது கொண்டிருந்த அருணாவை, வெகு நேரம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் கௌரியம்மாள். திடீரென்று கனவினின்று விழித்துக் கொண்டவள் போல் அவள் உணர்வு பெற்று, கீழே குனிந்து, ''சீ ரஞ்சிதம், சத்தம் போடாதே! சும்மாயிரு'' என்று அதட்டினாள். அதே வேகத்தில் அருணாவின் பக்கம் திரும்பி, ''போதும் அழுதது, கண்களைத் துடைத்துக்கொள். ஆரம்பத்திலிருந்து நான் எதிர்பார்த்ததுதான் நடந்துவிட்டிருக்கிறது. நான் இந்த நிகழ்ச்சிகளைக் கண்டு ஆச்சர்யப்படவேயில்லை. ஆனால்...'' என்று கொஞ்சம் அதட்டலாகக் கூறிவிட்டு, மேஜை மீதிருந்த மணியை அடித்தாள்.

சுழல் கதவுகளை வேகமாகத் தள்ளித் திறந்துகொண்டு ஒரு வேலைக்காரப் பெண் ஓடோடியும் வந்து நின்றாள். ''பீரோவை திறந்து அந்த பிளாஸ்கையும், கண்ணாடி டம்ளரையும், அப்படியே மருந்து பாட்டிலையும் எடுத்துவா'' என்று உத்தரவிட்டாள். கணப்பொழுதிலே, அவள் கேட்ட பல சாமான்களையும் அந்தப் பெண் கொண்டு வந்து மேஜைமீது வைத்துவிட்டுப் போனாள்.

''ஒன்றே ஒன்றுதான் எனக்குக் கொஞ்சம் ஆச்சர்யமாக இருக்கிறது. அதாவது, அக்காவும் தங்கையும் பேசி வைத்துக் கொண்டதுபோல், பணக்கார வாலிபர்களாகப் பார்த்துக் காதலிக்கத் தொடங்கினீர்களே, அதுதான் வேடிக்கையாக இருக்கிறது. அதன் விளைவு எனக்குப் பிரமிப்பை உண்டாக்கவில்லை. எதிர்பார்த்ததுதான். அசட்டுப்பெண்ணே, நன்றாக யோசித்துப்பார்! உன் பழனியப்பக் கவுண்டர் செல்ல மகனின் அந்தஸ்தெங்கே? உன் குடும்பத்து அந்தஸ்தெங்கே? நொண்டிக் கழுதைக்கு சறுக்கினது

சாக்கு என்பார்கள். அதுபோல், இந்திராணி வீட்டைவிட்டு ஓடினதை வைத்துக் கொண்டு, இந்த விவாகத்தை நிறுத்திவிட்டாள் லோகநாயகி அம்மாள். இல்லாவிட்டாலும், உன்னை ஒரு காலும் அந்த சுரேஷ்குமாரன் மணந்து கொண்டிருக்க மாட்டான்.

''பல வருடங்கள் உலகத்திலே பல கோணங்களில் அனுபவித்த பல கஷ்டங்கள் எனக்குத் தனிப்பட்டதொரு உதவியைச் செய்துவிட்டிருக்கின்றன. ஒரு புருஷனை ஒரு முறை பார்த்தால் எனக்குப் போதும். அவன் எப்படிப்பட்ட குணமுடையவன் என்பதை அக்கு வேறு, ஆணி வேறாக அலசிப் பார்த்து, அப்படியே படம் பிடித்தாற்போல் மனத்தில் உணர்ந்து கொண்டுவிடுவேன். பழனியப்பக் கவுண்டரின் செல்வக் குமாரனை, ஒரு முறை நான் ஒரு கூட்டத்திலே நிமிஷ நேரம் அசைப்பில் கவனிக்க நேர்ந்தது. முதுகு எலும்பு இல்லாத, தன் மதிப்பு இல்லாத, எடுப்பார் கைப்பிள்ளை, சுத்தக் கோழை அவன் என்பதை ஒரே பார்வையில் அறிந்து கொண்டுவிட்டேன்.''

''அந்த அம்மாள் லோகநாயகியுடன் எனக்குப் பழக்கம் ஒன்றுமில்லாவிடினும், அவள் அழுத்தமான பேர்வழி என்பதை அறிவேன். ஆகவே, இவையெல்லாம், வீட்டில் எழ இருந்த பெரிய யுத்தத்தைத் தடுக்க உதவிய தற்காலிகமான ஒரு ஏற்பாடு என்பதைப் புரிந்து கொண்டேன். எதிர்பார்த்தது நடந்துவிட்டது! அது கிடக்கட்டும், எதற்காக நீ இப்படி அழ வேண்டும்?'' என்று அதட்டிக் கேட்டாள் கௌரி.

''என் இருதயம் சுக்கல் சுக்கலாக உடைந்துவிட்டதே! இனி நான் எவ்வாறு வாழ்வேன்?'' என்று அருணா துயரத்துடன் அரற்றினாள்.

கௌரியம்மாள் லேசாகச் சிரித்தாள். ''அசட்டுப் பெண்ணே, இதென்ன பேத்தல்! இருதயம் கண்ணாடியாலா, செய்யப்பட்டிருக்கிறது, சுக்கல் சுக்கலாக உடைவதற்கு? கஷ்டங்களுக்கு கவிதை ஆடை போர்த்தி, பகட்டாகக் கண்ணீர் வடிப்பதைவிட்டு, கண்ணைத் துடைத்துக்கொள். இந்தத் தலைவலி மருந்தையும் சூடான காப்பியையும் சாப்பிடு.

''அப்பா, பெரியம்மா, அக்கா, அண்ணன், சுரேஷ்குமாரன் இத்தனை பேருக்கும் சேர்த்து நீ இப்பொழுது அழுதுவிட்டிருக்கிறாய்.

கட்டாயம் உனக்கு இதனால் இன்னும் சிறிது பொழுதில் தலைவலி ஏற்படும். காப்பியைச் சாப்பிட்டுவிட்டு யோசித்துப் பார். அதனால் உன் அப்பா திரும்பி வந்துவிடப் போகிறாரா? ஓடிச் சென்று மறைந்த அக்காவைக் கண்ணீர் கண்டு பிடித்து விடுமா? உன் பெரியம்மாவின் புத்திதான் உடனே திருந்திவிடப் போகிறதா? ஆனந்தனைத்தான் சட்டம் மன்னித்துவிடப் போகிறதா? எல்லாவற்றையும்விட, இவ்வளவு நேரம் மணப்பந்தலை அடைந்துவிட்டிருக்கப் போகும் சுரேஷ்குமாரன், உன் கண்ணீரைக் கண்டு, மாலையைத் தூக்கிக் கொண்டு உன்னை மணக்க ஓடி வந்து விடப்போகிறானா? இவை ஒன்றும் நடக்கப் போவதில்லை. பின் வீணாக எதற்காக அழ வேண்டும்?

வேண்டாம் என்று நினைத்த மாத்திரம் அன்பை உதறி விட்டுவிட சுரேஷ்குமாரன் ஒருவனுக்குத்தான் உரிமை உண்டா? இவனை வேண்டாம் என்று கணப்பொழுதில் உதறியெறிய உனக்கு உரிமை உண்டு. பிறர் உணர்ச்சிகளை மதிக்காத எந்த ஒருவனுக்காகவும் நாம் நமது அரிய, விலை மதிப்பற்ற கண்ணீரைச் சிந்துவது தகவே தகாது. பாத்திரம் அறிந்துதான் பிச்சையிட வேண்டும் என்று கூறுகிறார்கள் அல்லவா? அதைப்போல் நமது உள்ளம் உருகி, நைந்து, கண்ணீர் வடிப்பதற்குக் கூட, நமது அன்புக்குப் பாத்திரமான ஆசாமி தகுதியுடையவராக இருக்க வேண்டும். அன்பானது விலை மதிப்பற்ற உணர்ச்சி. கண்மூடித் தனமாகத் தகுதியற்ற மனிதர்கள் மீது அதை வர்ஷிப்பது தவறு. அது ஒரு பாவம் என்று கூடச் சொல்வேன்.

''ஆகவே, அருணா, கண்ணீரைத் துடைத்துக் கொள். சுரேஷ்குமாரன் காதலை உதறி எறி. உன் இருதயம் கண்ணாடிபோல் பலஹீனமாக இருந்தால் அதைக் கல்போல் கடினமாக்கிக் கொள். உன்னைப் பார்த்து யாரும் சிரிப்பார்கள், பழிப்பார்கள் என்ற அச்சம் இருந்தால் முகத்தை நிமிர்த்தி, உலகத்தை தைர்யமாகப் பார்! கடந்ததை எல்லாம் ஒரே மூச்சில் மறந்துவிடு. இனி நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை மட்டும் தீவிரமாகச் சிந்தித்து தக்க முடிவுக்கு வா! 'ஆனந்தனை மீட்க வழி என்ன? அக்காவைக் கண்டுபிடிக்க என்ன முயற்சி செய்தல் வேண்டும்? இனி வாழ்வது எப்படி?' என்று உன்னைப்பற்றித் தீர்மானி. அதைவிட்டுக் கோழைகளான உன் பெரியம்மாவையும், சுரேஷ்குமாரனையும் ...

நினைத்து வருந்த வேண்டும்?'' என்று பேசிக்கொண்டே போனாள்.

கண்களைத் துடைத்துக்கொண்ட அருணா, அவளை நன்றியுடன் நிமிர்ந்து பார்த்தாள். ''உங்க வார்த்தைகள் மிக்க ஆறுதலைக் கொடுக்கின்றன. வீட்டிற்குள் நுழையக்கூடாதென்று பெரியம்மா கழுத்தைப் பிடித்துத் தள்ளிய பின்பு, இவ்வளவு பெரிய பட்டணத்தில் நீங்கள் மட்டும் இல்லாதிருந்தால் நான் என்ன கதியாகி இருப்பேனோ தெரியாது'' என்று பெருமூச்செறிந்தாள்.

''அதுதான் தவறு. நீ அப்படி நினைக்கக் கூடாது. நான் இல்லாவிட்டால் இன்னும் யாராவது உனக்கு உதவி செய்யத் தயாராக முன் வந்திருப்பார்கள். தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் மட்டும் இருந்துவிட்டால் நமக்கு உலகத்திலே தெரிந்தவர்கள், நண்பர்கள், உறவினர்கள் என்று யாருமே தேவையில்லை. இந்த இரு குணங்களும் நாம் சென்ற இடமெல்லாம் வரவேற்பைத் தானே வலுவில் ஏற்படுத்திக் கொடுக்கும். இவ்வுலகில் வாழ்ந்துதான் தீருவேன் என்ற தன்னம்பிக்கை உடைய எந்த ஒருவனையும் எவ்விதமான கொடுமைகளும் அழிக்க முடியாது. தன்னம்பிக்கை அதிகம் உடைய பெண் நீ. உன்னை ஒருவிதக் கஷ்டமும் அழிக்க முடியாது. பொய்யான போக வாழ்வில் சில நாட்கள் உனது உண்மை திறமையை மறந்துவிட்டிருந்தாய். அவ்வளவுதான்! சரி நேரமாகிறது எழுந்திரு'' என்றாள்.

ஆச்சர்யத்துடன் அருணா அவளை உறுத்துப் பார்த்தாள். ''உன்னை என்னுடைய வீட்டிற்கு அழைத்துப் போகப் போகிறேன். நீ என்னுடன் இந்தப் பட்டணத்திலேயே வசிக்கப் போகிறாய். ஆனால், உன்னை நான் என் வீட்டிலே பாரமாக வைத்துக் கொள்ளப் போவதில்லை. நீ என்னுடன் தங்கி காலம் கழிப்பதற்கு ஈடாக, எனது கைப் பிரதிகளை மீண்டும் எழுதவும், என் பத்திரிகை 'மாதர் திலக'த்தின் 'புரூப்'களைத் திருத்தவும் உன்னை அமர்த்தப் போகிறேன். கடைசியாக இன்னொன்றும் சொல்லிவிடுகிறேன். உன் தன்னம்பிக்கை ஜீவனுடன் வளர்ச்சி பெற்று இருக்க வேண்டுமானால் நீ யாரிடமும் எதையும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளக்கூடாது. யாசகம் என்பது தன்னம்பிக்கையைப் கொன்றுவிடும்'' என்று கூறிவிட்டு, ''உன் மூட்டைகளைத் தூக்கு சீக்கிரம்'' என்று கட்டளையிட்டாள்.

அருணா தன் பெட்டிப் படுக்கையைச் சுமந்து கொண்டு வந்து, கௌரியம்மாளின் பழைய மாடல் காரின் பழைய பின் ஆசனத்தில் வைத்தாள். புயல் போன்று வேகமாக மாடிப்படிகளை ஒரே தாவலில் கடந்து, பாய்ந்து வந்த ரஞ்சிதம், அருணாவின் தோள்மீது உராய்ந்தவண்ணம் குபீரென்று பாய்ந்து காரின் பின் ஆசனத்தில் ஏறித் தயாராக உட்கார்ந்து கொண்டது. அருணாவைத் தன் அருகில் அமர்த்திக் கொண்டு கௌரியம்மாள் சாரத்தியம் செய்யத் தொடங்கினாள். தெருவிலிருந்த குண்டு குழிகளிலும் அனாயாசமாக வண்டியைச் செலுத்தியபடி கௌரியம்மாள் பேசிக் கொண்டிருந்தாள்.

''அடுத்தபடியாக நீ செய்யப்போவது, வருஷ லீவு முடிந்ததும் சிவசங்கரி கலாசாலையில் சேர்ந்து, தொடர்ந்து உன் படிப்பை முடிப்பதாகும். கலாசாலைப் படிப்பிற்குப் பணம் வேண்டுமே என்று கவலைப்படாதே. ஏழைப் பெண்களுக்கு என்று பல உபகாரச் சம்பளங்கள் இருக்கின்றன. நீ முயற்சி செய்தால் அவைகளில் ஒன்று கட்டாயம் உனக்குக் கிடைக்கும். நானும் உன்னைப்போல் ஒரு காலத்தில் படிப்பு எதற்கு என அலக்ஷியமாக இருந்தவள்தான். நல்ல வேளை, பிறகு புத்தி வந்து படித்தேன். 'மாதர் திலகம்' பத்திரிகையை வெற்றியுடன் இன்று நான் நடத்த முடிவது, எனது கல்வியின் உதவியால்தான்'' என்றாள். சடக்கென்று கார் ஒரு சிறு குலுங்கலுடன் நகரத்தின் மறு கோடியிலிருந்த ஒரு தோட்டத்திற்குள் தெரிந்த சிறிய வீட்டின் முன்பு நின்றது.

''இதுதான் நான் வசிக்கும் வீடு. இதுவரை நீ பார்த்ததில்லை. இங்கே என்னையும், எனது புதிய சமையற்காரியையும் தவிர யாரும் கிடையாது'' என்று கூறிவிட்டு கௌரியம்மாள் இறங்கினாள். இடையிலிருந்த சாவியினால், வாயிலின் இடது புறம் பூட்டப்பட்டிருந்த அறையைத் திறந்து, ''இது எனது ஆபீஸ் அறையாக உபயோகிக்கப்பட்டது. இதை நீ இனி உன்னுடையதாக உபயோகிக்கலாம்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்று ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். புஸ்தகங்களும் பத்திரிகைகளும் நெருக்கமாக அடுக்கப்பட்டிருந்த அந்தச் சிறிய அறைக்குள் அருணா

தன் சாமான்களைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டாள்.

''பின்புறம் உள்ள ஸ்நான அறையில் சென்று, சீக்கிரம் குளித்து, ஆடைகள் மாற்றிக் கொண்டு வா. சாப்பிடுவோம் எனக்கு ஒரே பசி'' என்று கௌரியம்மாள் கூறிவிட்டு எழுந்து உள்ளே சென்றுவிட்டாள்.

போஜனத்தை விரைவில் முடித்துக் கொண்டு இருவரும் முன்புறமிருந்த சிறிய ஹாலுக்குள் வந்து உட்கார்ந்து கொண்டார்கள். வாசனைப் பாக்கை மெல்லச் சுவைத்தபடி யோசனையில் ஆழ்ந்து போயிருந்த கௌரியம்மாள் திடீரென அருணா பக்கம் திரும்பி, ''உன்னைப் பார்த்ததும் நான் செய்யவேண்டிய ஒரு காரியம் ஞாபகத்திற்கு வந்தது. சே! சே! என்று மதியீனம். நான் இதுவரை மறந்தே போனேன்!'' என்று கூறிவிட்டு ஆவேசம் வந்தவள் போல் குதித்து எழுந்தாள். ஹாலின் மூலையிலே கிடந்த ஒரு மேஜையருகே ஒரு நாற்காலியைப் பரக்கென வேகமாக இழுத்துப் போட்டுக் கொண்டு, தன் சட்டையில் செருகியிருந்த பேனாவை உருவி எடுத்துக்கொண்டு எழுத ஆரம்பித்தாள்.

''திருமதி நடனமணி ரமாதேவி அவர்களுக்கு,

வணக்கம். உங்கள் பல்லாயிரக்கணக்கான அபிமானிகளில் நானும் ஒருத்தியென அறிமுகப் படுத்திக் கொள்ள விரும்புகிறேன். உங்கள் கலைத்திறனை வியந்து, பெருமிதம் கொள்ளும் அபிமானி என்ற ஹோதாவில், தங்களுக்கு வரவிருக்கும் ஒரு பெரிய ஆபத்தை முன்கூட்டி எச்சரிப்பது என் கடமை என நினைக்கிறேன். சமீப காலமாகத் தங்கள் பங்களாவுக்கு ஸ்ரீமான் அசோகன் என்பவர் அடிக்கடி விஜயம் செய்து கொண்டிருக்கிறார் என்பதை அறிகிறேன். அவர் ஒரு பட முதலாளி என்றும், உங்களைக் கதாநாயகியாக வைத்து ஹாலிவுட்டிலிருந்து வந்த ஒரு வெள்ளைக்கார துரையுடன் கூட்டாக, உலகமே பிரமிக்கப் போகிற ஒரு வர்ண நாட்டியப் படத்தை எடுக்கப் போவதாகவும் பல வதந்திகள் உலவுகின்றன. இவை உண்மையானால், வெகு சீக்கிரத்தில் நீங்கள் இந்த வஞ்சக உலகின் போக்கைக் கண்டு பிரமிக்க நேரும்!

''ஸ்ரீமான் அசோகனின் சொந்தப் பெயர் அசோகன் அல்ல. அவர் தம்முடையதாக பாவித்து நடத்தும் செருப்புக் கடை கூட அவருடைய சொந்தக் கடை அல்ல. ஹாலிவுட் எங்கிருக்கிறது என்ற பூகோள அறிவுகூட அவருக்குச் சொந்தமில்லை!

''மூச்சுத் திணற, உடல்நோக, கால் எலும்பு உடைய, மணிக் கணக்காக நர்த்தனம் செய்து, பணத்தைச் சேமித்து வைத்திருக்கிறீர்கள். நெற்றி வியர்வை நிலத்தில்படிய கஷ்டப்பட்டு சேர்த்த இந்தப் பணத்தை, வர்ணப்படம், புகழ், என்ற பெரும் வாய்ப் பந்தல்களைக் கண்டு மயங்கி விரயம் செய்து விடாதீர்கள்.

''தன் உடல் வசீகரத்தாலும், சாமர்த்தியமான பேச்சினாலும், பெண்களை ஏமாற்றி, அவர்களிடமிருந்த பொருளைப் பறித்துக் கொண்டு கடைசியில் அவர்களைக் கைவிட்டு விடும் கயவர்கள் கோஷ்டியின் சேனாதிபதி, இந்த அசோகன்! அவனை நம்பாதீர்கள்! நிலைமை மோசமாகிவிடும் என்று தெரிந்தால், இந்த ஸ்ரீமான் அசோகன் தங்களை மணந்து கொள்வதாகச் சட்டென தியாக உணர்வுடன் முன்வருவார். அதையும் நம்பி மோசம் போகாதீர்கள். அசோகன் இந்த உலகில் எந்தப் பெண்ணையும் மணந்து கொள்ள முடியாது. இதுபற்றி சந்தேகங்கள் ஏதும் எழுந்தால், 'மாதர் திலகம்' பத்திரிகை ஆபீஸிற்கு நேரிடையாக வந்து விசாரித்துப் போகலாம்.

இப்படிக்கு,

கௌரியம்மாள்.''

இதை முடித்ததும், இன்னொரு கடிதத்தை எடுத்து, தொடர்ந்தாற்போல் பின்வருமாறு எழுத ஆரம்பித்தாள்.

''அன்புள்ள மனோன்மணிக்கு,

வந்தனம். உங்களுக்கு என்னைத் தெரிந்திருக்க சந்தர்ப்பமில்லை. ஆனால் உங்களை நான் சில காலமாக, அருணா என்ற பெண் மூலமாக அறிவேன். முன் பின் அறிமுகமில்லாத உங்களுக்கு நான் இந்தக் கடிதம் எழுதத் துணிவது ஒரு வழியில் தவறாக எண்ணப்படலாம். ஆனால், வாழ்வின் ஒன்றே பெண்குலத்திற்கு சேவை செய்வது

லக்ஷ்யமாகக் கொண்டுள்ள நான், இது சமயம் உங்களை எச்சரிக்காது வாளா இருப்பது தர்மமில்லை. ஆகவே, துணிந்து இக்கடிதத்தை எழுதலுற்றேன். இதனால் தங்கள் மனதிற்கு ஆயாசம் ஏற்பட்டால் மன்னிக்க வேண்டுகிறேன்.

''பழனியப்ப கவுண்டர் மக்களின் விவாகம் முடிந்தவுடன், தொடர்ந்து தங்கள் திருமணமும் நடக்க இருப்பதாக ஒரு வதந்தி உலவுகின்றது. இந்த வதந்தி உண்மையென்றால் உங்களுக்காக நான் மெத்த பச்சாதாபப்படுகின்றேன். ஏனெனில், தாங்கள் ஆராயாது திருமணம் புரிந்து கொண்டு விட்டால், பலதார விவாகச் சட்டத்தின்கீழ் குற்றவாளியாகி பல தொல்லைகள் அனுபவிக்கநேரும். இதை விளக்கமாகக் கூறிவிடுகிறேன்.

''பூர்வாசிரமத்தில் அசோகனது நாமம் ராமசாமி என்பது. செருப்புக் கடை வைக்குமுன் இவர் துணிக்கடை ஒன்றில் குமாஸ்தாவாக வேலை பார்த்துக் கொண்டிருந்தார். பழக்கடை, பூக்கடை, செருப்புக்கடை என்று இவர் தொழில் நிமிஷத்திற்கு நிமிஷம் சந்தர்ப்பம்போல் மாறும் தன்மையுடையது. பிறர் பொருள்களைக் கவர்ந்து, பிறர் வாழ்க்கையில் புல்லுருவியாக வாழ்வதும், இளம் பெண்களை ஏமாற்றி இன்புறுவதும் அசோகனின் தனிச் சிறப்பாகும். உங்களைப் போன்ற மிகவும் கௌரவமான குடும்பத்திற்குள் இந்தப் புல்லுருவி நுழைந்துவிட்டதே என்று எனக்கு ஏற்பட்ட வருத்தம் கொஞ்ச நஞ்சமல்ல.

''அசோகன் என்ற பெயரே உண்மைப் பெயரல்ல. அதேபோல் அவரது குடும்ப வரலாறும் பொய். முருகூர் ஜமீன்தாரின் முதுகைக்கூட இவர் கண்டவரல்ல. அசோகன் பேசுவது, செய்வது அனைத்தும் பொய். விளங்கச் சொன்னால் பொய்யே உருவாக உள்ள மனிதன் இந்த அசோகன்.

''இந்தப் பரந்த உலகில் இந்த அசோகனைவிடப் பொய் பேசுகிறவர்களும், சூதாடித் திரியும் மோசக்காரர்களும் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். அப்படி இருக்கையில் நான் இந்த ஒரு ஜீவனைக் கண்டு மனத்துயரப்படுவானேன் என்று தாங்கள் கேட்கலாம். இந்த அசோகன், தனது வாழ்க்கைக்காக,

மற்ற மனிதர்களிடம் பொய் பேசி வஞ்சகம் செய்து வாழ்ந்தால் நான் கவலைப்பட்டிருக்கவே மாட்டேன். ஆனால், இவர் தனது ஜாலங்களுக்கும் மோசங்களுக்கும் உலகம் அறியாத யௌவனப் பெண்களையே பலியாகக் கொண்டு வாழ்வதைக் காண என் உள்ளம் கொதிக்கின்றது. அதைத் தடுக்கவே, பெண்குலத்திற்கு இவ்வகையில் சேவை செய்யவே இக்கடிதம் எழுதினேன்.

''ஸ்ரீமான் அசோகன் உங்களை ஒருகாலும் மணக்கமுடியாது. அவருக்கு ஏற்கனவே ஒரு மனைவி உயிருடன் இருக்கிறாள். இந்த உண்மையை ஒருகாலும் மறுக்க முடியாது. திடுக்கிடும் இந்தச் செய்தியைத் தங்களுக்குத் தெரியப்படுத்துவதுபற்றி மெத்த வருத்தமடைகிறேன். மன்னிக்கவும்.

தங்கள் உண்மையுள்ள,
கௌரியம்மாள்.''

இரு கடிதங்களையும் தனித்தனியே கடித உறையில் இட்டு விலாசமிட்டு அவைகளைப் பத்திரமாக ஒட்டி மூடினாள். அவைகளைக் கையில் எடுத்துக்கொண்டு அருணா அருகில் வந்து, ''இந்த இரு கடிதங்களும், ஒரு அயோக்கியனது லீலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் போகின்றன பார்!'' என்று பெருமையாகப் பேசிவிட்டு, அவைகளைத் தபாலில் சேர்க்கும்படி சமையற்காரியிடம் கொடுத்தனுப்பினாள்.

இரண்டு தினங்கள் சென்றன. ஆபீஸ் அறையில் கௌரியம்மாளும் அருணாவும் எழுத்து வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்த சமயம், கொஞ்சமும் மரியாதையின்றி சுழல் கதவை வேகமாகத் தள்ளித் திறந்து கொண்டு பெருமூச்சு வாங்க மனோன்மணி வந்து நின்றாள். சிவந்த அவள் முகத்தையும் கண்களில் பொங்கி நின்ற கோபத்தையும் கண்ட கௌரியம்மாள், அருணாவிற்கு ஜாடை செய்து அப்பால் செல்லும்படி கட்டளையிட்டுவிட்டு, ''உட்காருங்கள். தாங்கள்தானே பழனியப்பக் கவுண்டர் வீட்டைச்

சேர்ந்த மனோன்மணி என்பவர்கள்?'' என்று வினவினாள்.

நெற்றிமீது அரும்பிய வியர்வையைக் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டு ஆங்காரத்துடன் பெருமூச்செறிந்த மனோன்மணி, ''ஆமாம். தாங்கள் தான் கௌரியம்மாள் என நினைக்கிறேன். ஆமாம் இந்தக் கடிதத்திற்கு என்ன அர்த்தம்? வீணாக மனத்தைக் குழப்பி என்னை பயமுறுத்தியிருப்பதற்காக உங்கள்மீது நான் வழக்காட நேரிடும்'' என்று கோபத்துடன் கூச்சலிட்டாள்.

அவளை அலக்ஷியமாக ஏற இறங்க உற்றுக் கவனித்த கௌரியம்மாள் பதிலுக்கு நகைத்தாள். ''உங்களை வீணாக பயமுறுத்துவதால் எனக்கு எவ்வித லாபமும் இல்லை. உண்மையைக் கூறி உங்களை ஆபத்தினின்று எச்சரித்தேன். அதற்குத் தாங்கள் எனக்கு நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறீர்கள்'' என்றாள்.

''அசோகன் ஏற்கெனவே விவாகமானவர் என்று இதில் எழுதியிருக்கிறீர்களே! அது உண்மை என்று உங்களால் நிரூபிக்க முடியுமா? அவர் மனைவி உயிருடன் இருக்கிறார் என்று கூறுகிறீர்கள். அவளை எனக்குக் காட்ட முடியுமா?'' என்று கோபத்துடன் கேட்டுவிட்டு, தனது வலது கையால் மேஜையை ஆத்திரமாகத் தட்டினாள் மனோன்மணி.

''அசோகன் ஏற்கனவே விவாகமானவர் என்பதை நிரூபிக்க முடியும். அவர் மனைவி உயிருடன் இருப்பதோடு அல்லாமல், அசோகனின் துஷ்ட லீலைகளுக்கு ஒரு பெரும் முட்டுக்கட்டையாகவும் இருக்கிறாள் என்பதையும் நிரூபிக்க முடியும். அவள் மட்டும் பயமுறுத்தலுக்கும், கெஞ்சலுக்கும் பயந்து அசோகனுக்கு விவாகரத்து கொடுத்து விடுவதை அளித்திருந்தால், இதுவரை அவர் ஒரு அர்ஜுனனாக மாறி விட்டிருப்பார். கள்ளங்கபடமற்ற பெண்களை இவரது மோச வலையினின்று காப்பாற்றும் ஒரே நோக்கத்துடன் அவர் மனைவி அவருக்கு விவாகரத்து அளிக்க மறுத்து விட்டிருக்கிறாள்'' என்று கூறி முடித்த கௌரி சாவதானமாக இரும்பு பீரோவை அணுகி, அதைத் திறந்து தட்டுகளில் கொஞ்ச நேரம் ஏதோ ஆராய்ந்தாள்.

கடிதங்களின் கமைகளுக்கு அடியில் கிடந்த ஒரு படத்தை இழுத்து எடுத்து, மனோன்மணி அருகே வந்து அதை நீட்டி, ''இதைப்

பாருங்கள். பிறகு உங்கள் சந்தேகம் தீரலாம்'' என்றாள்.

மணக்கோலத்தில் நின்று கொண்டிருந்த அந்த தம்பதியின் படத்தை வியப்புடன் உற்றுக் கவனித்தாள் மனோன்மணி. அவளது நெஞ்சு பதைபதைத்தது. உடல் நடுங்கியது. ''உண்மையா? இது உண்மையா?'' என்று நாக்குழற வினவினாள். அவளது தொண்டையைத் துக்கம் இரும்புக்கரம் போல் அழுத்திக்கொண்டு விட்டது.

''கசப்பான உண்மைதான். ஸ்ரீமான் அசோகன் என் கணவர்!'' கூறிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டு ஜன்னல் அருகேபோய் நின்றாள் கௌரியம்மாள். மனோன்மணியின் கண்ணீரைக் காண அவளுக்கு மெத்த சங்கடமாக இருந்தது.

44

பழனியப்பக் கவுண்டர் வீட்டுத் திருமணம் முடிந்து ஒரு வார காலந்தான் சென்றுவிட்டிருந்தது. விவாகத்தைத் தொடர்ந்து மணமக்கள் நால்வரும், வெளியூர்களுக்கு உல்லாசப் பிரயாணம் சென்றிருந்தார்கள். திருமணத்திற்கு வராது தவறிவிட்ட அன்பர்களும், நண்பர்களும் கல்யாணம் விசாரிக்க, ஆற அமர வந்தபொழுது, மணமக்களைக் காணாது ஏமாந்து போய்விடாதிருக்க, அவர்களுக்கு வந்த திருமணப் பரிசுகளையாவது கண்டுகளித்துவிட்டுப் போகட்டும் என்ற நோக்கத்துடன் மனோன்மணி, அவைகளை பங்களாவின் முன் ஹாலில், கொலு பொம்மைகள் போல் தட்டுகளில் அலங்கரித்துப் பரப்பி வைத்திருந்தாள். விலையுயர்ந்த ஆபரணங்களும், தங்க வெள்ளிப்பாத்திரங்களும் அவைகளில் அதிகம் கலந்திருந்ததனால் பத்திரமாகப் பாதுகாத்துக்கொள்ள, ஹாலின் இரு பக்கங்களிலும் துவார பாலகர்களைப் போல், இடையில் கூரிய கத்தி செருகிக்கொண்டு, கடுமையான முகபாவத்துடனிருந்த இரு கூர்க்கா சேவகர்களைக் காவல் வைத்திருந்தாள்.

அன்று காலைப் பொழுது நன்றாக விடிவதற்குள் அசோகன்

தன்னுடைய பச்சை நிற புதிய மாடல் காரைக் கொண்டு வந்து கவுண்டர் பங்களாவின் வாயிலில் கம்பீரமாக நிறுத்திவிட்டு அதனின்று புது மாப்பிள்ளை போல் உல்லாசமாக இறங்கி வந்தான். சில நாட்களாக தன்னுடைய முகஸ்துதிகளாலும் சாகாஸம் நிறைந்த பேச்சுக்களாலும் கவுண்டர் அவர்களின் நன்மதிப்பை அவன் பெரிதும் கவர்ந்திருந்தான். ஆதலின், அவனுக்கு பங்களாவில் செல்வாக்கு அதிகரித்திருந்தது. இந்த நல்ல சமயத்திலே கவுண்டர் மக்களுக்குத் திருமணம் வந்து சேர்ந்து கொண்டது அவனது அதிர்ஷ்டமும் எனலாம். வந்த விருந்தினர்களை உபசரிப்பது, விருந்துகளுக்கு சாமான் வாங்கிப் போடுவது போன்ற பல வேறு அலுவல்களுக்குத் தன்னை கவுண்டர் தேர்ந்தெடுக்கும்படி அவரிடம் மிகவும் குழைவாக நடந்து கொண்டிருந்தான். அதன் பயனாக அவனது பொருளாதார நிலைமை திடீரென ஒரு நாளில் அபாரமாக உயர்ந்து வளர்ந்து விட்டிருந்தது!

சம்பந்தி அவர்களுக்கு விருந்திற்கு புடலங்காய் வாங்கிய கணக்கில் பத்தாயிரம் ரூபாய்கள், இளநீர் வாங்கிய கணக்கில் ஏழாயிரம், வந்த விருந்தினர்களைத் திருப்பி காரில் கொண்டு வீடுகளில் சேர்ப்பிக்க பெட்ரோல் செலவு எழுபதாயிரம் என்று பொய்க் கணக்குகளை மடக்கி மடக்கி எழுதி, கவுண்டரின் காஷியரிடம் சமர்ப்பித்து, ஒவ்வொரு 'அயிட்ட'த்திலும் நூற்றுக்கு எழுத்தைந்து சதவீதத்திலே சொந்தக் கணக்கில் லாபம் சேர்த்துக் குவித்துக் கொண்டிருந்தான். தனது புதிய நாட்டிய சிநேகிதியைக் கதாநாயகியாக வைத்து, கலர்ப்படம் தயாரிப்பது என்றும், அதை உலக முழுவதும் விநியோகித்து, ஒரே நாளில் சினிமா உலகிலே குபேரனாகிவிடுவது என்றும் அவன் பெரியதொரு 'எவரஸ்ட் திட்ட'மொன்றை மனத்திற்குள்ளே போட்டிருந்தான். மேனி அலுங்காது, நெற்றி வியர்வை நிலத்திலே படியாது, கவுண்டர் பணத்தை வாரி இறைத்துக் கொண்டிருந்ததனால் அவன் உள்ளத்திலே துணிவும், பேச்சிலே உற்சாகமும் அபரிதமாகப் பெருகிப் போயிருந்தன.

மனோன்மணியை நல்லவள் என்று பெயரெடுக்கும்படி பங்களா வேலைக்காரர்களை அதட்டி, மிரட்டி, வெருட்டி வேலை வாங்கிக்

கொண்டிருந்தான். அவனைத் தொலை தூரத்திலே கண்டமாத்திரம், ''எமதூதன் வந்துவிட்டான்'' என்ற அளவிற்கு வேலை ஆட்கள் அஞ்சும்படி அவனது செல்வாக்கு ஓங்கிவிட்டிருந்தது. ஒரு சில வேலைக்காரர்களுக்கு மட்டும், 'இவன் யார்? இவனுக்குக் கவுண்டர் வீட்டில் இவ்வளவு சலுகை ஏன்?' என்று இடை இடையே சந்தேகங்கள் எழுந்து கொண்டிருந்தது வாஸ்தவம்.

ஆனால் அவர்கள் தங்கள் மனக் கசப்பை வார்த்தைகளால் வெளியிட முடியவில்லை. கவுண்டரும், அவரது சகதர்மிணியும் அசோகனுக்கு அவ்வளவு அதிகாரம் கொடுத்திருக்கையில் ஏழை வேலைக்காரர்கள் அவனை எவ்வாறு எதிர்த்துப் பேச இயலும்?

வலது கை விரலிடுக்கில் புகைந்து கொண்டிருந்த சிகரெட்டை லாவகமாகப் பிடித்துக்கொண்டு, இடது கையை நிஜார்ப் பையில் நுழைத்தவண்ணம், உல்லாசமாக, வாயில் முன்னால் போட்டிருந்த கொட்டாரப் பந்தல் அருகே வந்து நின்றான் அசோகன். பந்தலைப் பிரித்துக் கொண்டிருந்த ஆட்களை ஒருமுறை உறுத்துப்பார்த்துவிட்டு, ''கொஞ்சம் நிதானமாகக் காரியம் நடக்கட்டும். தாறுமாறாகக் கீற்றுக்களைக் கிழித்துப் போடுகிறீர்களே. உங்களுக்கென்ன! உங்கள் பாட்டன் வீட்டு துட்டா பாழாகுது?'' என்று அதட்டிவிட்டு, மிடுக்காக உள்ளே சென்றான்.

மாடியறையில் கண்ணாடி முன்பு லோகநாயகி அம்மாள் அமர்ந்திருந்தாள். தன் ஆசை மக்களுக்கு தக்க இடங்களில் இனிதாக விவாகம் நடந்தேறிவிட்டதில் அவள் முகத்திலே திருப்தியும், மகிழ்ச்சியும் பொங்கிக் கொண்டிருந்தன. காலை பலகாரம் அருந்திவிட்டு, வெளியே போகச் சித்தம் செய்து கொண்டவராகப் பழனியப்பக் கவுண்டர் உள்ளே வந்தார். ''லோகா! நான் வரட்டுமா? நீ என்ன சொன்னே? எனக்கு அதற்குள் மறந்துவிட்டது!'' என்று மிகவும் அன்புடன் வினவியபடி, அவர் தமது வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டார்.

கண்ணாடியினின்று திரும்பிய லோகநாயகி, தன் கணவரை அன்றுதான் முதல் முதலாகப் பார்க்கும் புதிய மணப்பெண்போல், நாணிக்கொண்டு லேசாகச் சிரித்தபடி, ''கைக் குட்டையிலே முடி போட்டுக்குங்க! மறக்காது வழியிலே, உங்க சின்ன மைத்துனர்

வீட்டிலே இறங்கி, இன்று இங்கே விருந்து சாப்பிட நாம் அழைத்ததை ஞாபகப்படுத்துங்க என்றேன். உங்களுக்கும் உடனே மறந்து போச்சு'' என்றாள் பரிகாசமாக.

''இப்போ ஞாபகம் வந்துவிட்டது. சரி, நான் வரட்டுமா! விருந்தின்போது நான் வர தாமதமானாலும், நீ அவர்களுக்குச் சீக்கிரம் இலையைப் போட்டுவிடு'' என்று அன்பாக ஒரு கட்டளை இட்டுவிட்டு, அவர் புன்முறுவல் செய்த வண்ணம், தமது அங்கவஸ்திரத்தை உதறித் தோள்மேல் போட்டுக்கொண்டு வெளியேறினார்.

இந்தக் காட்சியைக் கண்ட மனோன்மணியின் வயிறு அனலாய்ப் பற்றி எரிந்தது! 'அத்தையம்மாவுக்கு எத்தனை அதிர்ஷ்டம்! கையிலும், கழுத்திலும், காதுகளிலும் மின்னும் வைரங்கள் போதாதென்று, இத்தனை வயதிலும் அன்பு குறையாத கணவன்! புருஷனைக் கண்டதும், வயதைக் கூட மறந்து புதுப்பெண் போல், மினுக்கிக் குலுக்கியல்லவா பேசுகிறார்கள், அத்தையம்மாள்!' என்று தனக்குள் எண்ணிய மனோன்மணிக்கு அது சமயம் தன் நிலைமையைப் பற்றிய நினைப்பு எழுந்தது இயற்கையே.

கௌரியம்மாளைச் சந்தித்து விஷயங்களை அறிந்தவுடன் ஏற்பட்ட பதட்டத்திலே உடனே அசோகனின் உண்மையை விசாரித்தறிய வேணும் என்று அவளுக்கு ஆத்திரமும், பதட்டமும் ஏற்பட்டிருந்தன. ஆனால், அவ்வாறு தன் சந்தேகத்தை உடனுக்குடன் தெளிந்து கொள்ள அவளுக்கு சந்தர்ப்பங்களேயில்லை. வரப்போகும் திருமணத்திலே கவுண்டர் பங்களா அப்பொழுது இரண்டு பட்டுக் கொண்டிருந்தது. புடவைக் கடைக்கும், பாத்திரக் கடைக்கும் பறந்து கொண்டிருந்த லோகநாயகி, அவளைச் சற்று நின்று மூச்சுவாங்கக்கூட அனுமதிக்காது, ஓட ஓட வேலை ஏவிக் கொண்டிருந்தாள். மேலும், கல்யாண சந்தடியில், அசோகனும் அவள் கண்களுக்குத் தென்படாமல் வீட்டைச் சுற்றி வளைய வந்து கொண்டிருந்தான். எதேச்சையாக நேருக்கு நேர் பார்க்க நேர்ந்தபொழுது ஒரு அசட்டுப் புன்முறுவலை அள்ளி வீசி விட்டு, பேசப்பொழுதில்லாதவனாகத் தன் காரியங்களில் கருத்துடன் மின்னல்போல் தோன்றுவதும் மறைவதுமாக இருந்தான். ஒருவழியாகத் தன் கூந்தல் அலங்காரத்தை முடித்துக் கொண்ட

லோகநாயகி, அவள் பக்கம் திரும்பி, ''மனோ! உனக்கு செய்து கொடுத்திருந்தேனே சிவப்புக் கல் அட்டிகை, அதை எடு; அதுபோல நம்ப சம்பந்தி வீட்டுப் பெண்களுக்கு அட்டிகை வேண்டுமாம். நகைக் கடைக்கு மாதிரி காட்ட எடுத்துக் கொடு'' என்றாள்.

இதைக் கேட்டதும் மனோன்மணி திடுக்கிட்டுப் போய் விட்டாள். அத்தையம்மாவிடம் உண்மையைச் சொல்ல அவளுக்குப் பயமாக இருந்தது. அதே சமயம் 'ஐயோ ஏமாந்து விட்டோமே' என்று அவள் மனம் துடியாகத் துடித்துக் கொண்டது. மனோன்மணி சுபாவத்திலே மிகவும் கெட்டிக்காரிதான். எனினும் அசோகனது அழகிலும் சாகசமான பேச்சுக்களிலும் மயங்கித் தன் புத்தியைப் பறி கொடுத்து விட்டிருந்தாள். அவன் மீது கொண்டிருந்த காதல் மயக்கத்தில் அவனை முழுவதும் நம்பி, அத்தையம்மாள் அதுவரை தனக்குச் செய்து போட்ட ஆபரணங்கள், தான் தெரிந்தும் தெரியாமலும் திருடியும் சேர்த்திருந்த பணம், மற்ற விலையுயர்ந்த பொருள்கள் அனைத்தையும் அவன் வசம் ஒப்படைத்து விட்டிருந்தாள். நகைகள் அனைத்தையும் பணமாக்கிக் கையில் வைத்துக்கொள்வதுதான் நலம். அப்பொழுதுதான் சுலபமாக வெளிநாடு செல்ல முடியும் என்று கூறி அசோகன் அவைகளை அப்போதைக்கப்போது கொண்டு கடைகளில் விற்றுத் தொலைத்திருந்தான். கல்யாணம் செய்துகொள்ளப் போகிற மனிதனிடம் அவநம்பிக்கை காட்டக்கூடாது என்று எண்ணி சிரமப்பட்டு, இடையே சில சமயம் தோன்றிய சந்தேகங்களைத் தானே சமாதானம் செய்து கொண்டிருந்தாள்.

ஆனால் கௌரியம்மாளைச் சந்தித்த பிறகு, அவள் பஞ்சப் பிராணனும் ஒடுங்கிவிட்டிருந்தது. உண்மையில் அசோகன் கௌரியம்மாளின் கணவனாக இருந்தால் மனோன்மணியை அவன் ஒருகாலும் மணந்து கொள்ள முடியாது. அப்படியானால் அவள் பணத்தின் கதி!

தனக்குள் பலவும் எண்ணிக் கலங்கிப் போன மனோன்மணி, ''அந்த அட்டிகையை நளினி கல்யாணத்தின் போது அவள் பெட்டியில் வைத்ததாக ஞாபகம். இப்போது அது எங்கிருக்கிறதோ, தேடியாகவேண்டும்'' என்று உளறிக் கொட்டினாள்.

தன் கூந்தல் சிங்காரத்தைக் கண்ணாடியில் பலமுறை பார்த்துத் தனக்குள் பூரித்துப் போன லோகநாயகி, அவளுடைய தடுமாற்றத்தைக் கவனிக்கவில்லை. ''என்னவோ மனோ! உனக்கும் வரவர ஞாபகமறதி அதிகரிச்சுக் கொண்டுபோகுது. எனக்கும் வயசு ஆகிவிட்டது. உம்...'' என்று சூள் கொட்டிவிட்டு எழுந்து கீழே இறங்கிச் சென்று விட்டாள்.

பீரோ கதவை மூடிவிட்டு, ஜன்னல் அருகே வந்துநின்ற மனோன்மணி தோட்டத்தை எட்டிப் பார்த்தாள். பங்களாவின் பின்பக்கத்திலிருந்து அசோகன் உல்லாச நடையுடன் பங்களா ஹாலுக்குள் நுழைவதைக் கண்டாள். வெறுப்பு, விருப்பு என்று விவரிக்க முடியாத ஒரு புதிய உணர்ச்சியினால் அவள் உடல் முழுதும் கிடுகிடுவென்று நடுங்கியது. 'எப்படியும் இன்று உண்மையைத் தெரிந்துகொண்டு விடுவது' என்று தனக்குள் ஆத்திரத்துடன் முனகிக் கொண்டு மாடிப்படிகளைத் தாவிக் கடந்து கீழே ஓடிவந்தாள்.

முன் ஹாலில், வாயிலில் இருபக்கத்திலும் நின்று கொண்டிருந்த கூர்க்கா சேவகர்களை மிகவும் அலக்ஷியமாக நோக்கினான் அசோகன். ஹாலுக்குள் அது சமயம் யாரும் இருக்கவில்லை. ''காலையில் பல்கூட விளக்காமல் ஏன் தீவட்டி தடியர்களாக நிற்கிறீர்கள்? போங்கள், முகத்தைக் கழுவி பலகாரம் சாப்பிட்டுவிட்டு வாருங்கள். அதுவரை இங்கே வேறுயாரையாவது காவல் போட்டுக் கொள்கிறேன்'' என்று கடுமையான குரலில் அதட்டினான். அந்த இரு சேவகர்களும், தயக்கமாக அங்கிருந்து அப்பால் சென்றனர். சட்டையின் கழுத்து மடிப்பைச் சரிப்படுத்திக் கொள்கிறவன்போல், கண்களால் நாலாபுறமும் ஆராய்ந்துவிட்டு அவசரமாக ஹாலுக்குள் நுழைந்து, பரிசுகள் வைத்திருந்த மேல் தட்டில் ஜகஜ்ஜோதியாக மின்னிய வைர மாலையை எடுத்து டபக்கெனத் தன் நிஜார்பைக்குள் திணித்துக் கொண்டான். நாலைந்து தினங்களாக அந்த மாலை அவனது கண்களை உறுத்திக் கொண்டிருந்தது. பரிசுப் பொருள்களில் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது அது ஒன்றுதான். மாலையிலிருந்த ஒவ்வொரு கல்லும் . சுண்டைக்காய் பரிமாணம் இருந்தது. வடக்கேயிருந்து கல்யாணத்துக்கு வந்த ஜமீன்தார் ஒருவர் தமது நண்பர் கவுண்டர் மகளுக்கு தங்கள் குடும்பத்திலே பல காலமாக இருந்த அந்த விலை மதிப்பற்ற வைர மாலையைப் பரிசாக

அளித்திருந்தார். அதை எப்படியும் கவர்ந்து கொண்டு விடுவது என்று நாலைந்து நாட்களாகவே அசோகன் திட்டமிட்டு வீட்டை வட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

யாரும் காணாத சமயம், தனக்காகக் காரியத்தை நிறைவேற்றி விட்டோம் என்ற மகிழ்ச்சியில், உடலை நெளித்துக் கொண்டு வாயைத் திறந்து ஹாவென்று இரைச்சலிட்டு கொட்டாவி விட்டுக் கொண்டு நின்ற அவன் வாய் டபார் என்று அதிர்ச்சியுடன் மூடிக் கொண்டது. சப்தமிடாது, பூனைபோல் நடந்து வந்த மனோன்மணி அவன் எதிரே நின்று கொண்டிருந்தாள்! ''அப்பப்பா! நீ ஊரில் இருக்கிறாயா என்றுகூட எனக்குச் சந்தேகமாக இருக்கிறதே!'' என்று பகட்டாகப் பேசிவிட்டு மோகனப் புன்னகை செய்தான்.

கையும் களவுமாக அவனது திருட்டு நடத்தையைக் கண்டுவிட்ட அதிர்ச்சியில் மனோன்மணியின் உள்ளம் சில்லிட்டுப் போயிருந்தது. ''அதை இப்படிக் கொடுங்கள். உங்கள் நிஜார்ப் பைக்கு ஏன் இந்த சிரமம்!'' என்று குரோதமாகக் கேட்டுவிட்டுக் கையை நீட்டினாள்.

ஒரு கணம் அசோகன் அரண்டு போய் விட்டான். எனினும், தன் நிலைமையை உடனுக்குடன் சமாளித்துக் கொண்டு, உரத்துக் கடகடவென நகைத்தான்.

''நீ மாடியிலிருந்து இறங்கி வருவதைக் கவனித்தேன். நீ எவ்வளவு தூரம் இந்தப் பரிசுகளைக் கட்டி காவல் செய்கிறாய் என்பதைப் பரிசோதனை செய்யவே சட்டென இந்த மாலையை எடுத்துப் பைக்குள் போட்டுக் கொண்டேன். நீ எனக்குமேல் கண்குத்திப் பாம்பாகக் காவல் செய்கிறாயே!'' என்று கூறிவிட்டு தனக்கே உரித்தான ராக்ஷஸச் சிரிப்பு ஒன்றைச் சிரித்தான். ''இந்தா, பத்திரமாக நீயே அதை மீண்டும் இருந்த இடத்தில் வைத்து விடு'' என்று கூறிவிட்டு நிஜார்ப் பையில் ஒளிந்து கிடந்த மாலையை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

அவனது சிரிப்பையோ, பேச்சையோ, மனோன்மணி லக்ஷியம் செய்யவில்லை. மாலையை வாங்கி, இருந்த இடத்தில் வைத்துவிட்டு, ''இது மாதிரி நீங்கள் இந்த வீட்டில் இரண்டாவது முறையாக விளையாடுகிறீர்கள், இல்லையா?'' என்று விஷமமாக

ஆக்கிரத்துடன் கேட்டாள்.

கிராப்புத் தலையை நாசூக்காகத் தடவிக் கொண்டு நின்ற அசோகன் அவளைத் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். காதலும், கனிவும் பொங்கி நிற்கும் அவளது கண்களில் கடுமை நிறைந்திருப்பதைக் கண்டதும் அவனுக்குச் சிறிது அச்சமாகத்தானிருந்தது. ''மனோ! நீ ஏதோ கோபமாக இருப்பதுபோல் காண்கிறது. நீ சொல்வது விளங்கவேயில்லை'' என்று வியப்புற்றவன்போல் சொன்னான்.

''உங்களுக்கு விளங்காவிட்டால் எடுத்துச் சொல்கிறேன். சில மாதங்களுக்கு முன் ஒரு முறை என் கைப்பையிலிருந்து இரண்டாயிரம் ரூபாய் காணாமல் போயிற்றே ஞாபகம் இருக்கிறதா? அதை அருணா எடுத்துக் கொண்டுவிட்டதாக அவள் மீது பழி சுமத்தினீர்கள், அதை யார் எடுத்துக் கொண்டார்கள் என இப்போது எனக்கு நன்கு தெரிகிறது. பட்டப்பகலில் கொஞ்சமும் அஞ்சாது எல்லோர் கண்களிலும் மிளகாய்ப் பொடி தூவிவிட்டு பணத்தையும், ஆபரணங்களையும் சடக்கென்று திருடிக் கொள்ளும் தனிப்பட்ட திறமை தங்கள் ஒருவருக்குத்தான் உரித்தானது என்பதை இன்று கண்கூடாக கண்டறிந்து கொண்டேன். பாவம், அந்தப் பெண் அருணா! வீணாக அவள் மீது நானும் பழி சுமத்தினேன்'' என்றாள் வெறுப்பு நிறைந்த குரலில் மனோன்மணி.

''திடீரென்று உனக்கு அருணாமீது அனுதாபம் பொங்கி வழிகிறதே. அடாடா! 'அருணா திருடி. அவள் அப்பன் ஏழை. அவள் அக்கா வீட்டைவிட்டுப் புறப்பட்டுவிட்டாள்' என்று பல அவதூறுகளைச் சொல்லி உன் அத்தை மனத்தைக் கலைத்து, சுரேஷ் மனத்தைக் கலவரப்படுத்தி, நடக்க இருந்த அவர்கள் கல்யாணத்தை நிறுத்திவித்து அதில் குதூகலமும் அடைந்தாயே! இப்பொழுது திடீரென்று ஏன் இந்த அனுதாபம்'' என்று இகழ்ச்சியாகவும் கடுமையாகவும் திருப்பிக் கேட்டான் அசோகன்.

மனோன்மணியின் முகம் ரத்தமெனச் சிவந்து போயிற்று. அவளது நெஞ்சு படபடத்தது. மனிதர்களில் கடைப்பட்ட ஒரு கயவன் மீது கரை காணாத காதலை இதுவரை வீணாக்கி விட்டோமே என

எண்ணி வெகுண்ட அவள், ''போதும். உங்களிடம் இது சமயம் நான் வேறுயாரைப் பற்றியும் பேச விரும்பவில்லை. நீங்கள் எப்படிப் பட்டவர் என்பதை நானறிவேன்'' என்றாள் ஆவேசமாக.

அசோகன் அலக்ஷியமாகச் சிரித்தான். ''கொள்ளையடிக்கும் கலை உன்னிடமிருந்துதான் எனக்கு நோய்போல் தொத்திக் கொண்டிருக்க வேண்டும். வீட்டுக்குள் உற்ற பெண்ணாக உலவிக் கொண்டு நீ திருடிச் சேர்த்த நகைகள், பணம், பொருள்கள் இதைப்பற்றி நான் யாரிடம் முறையிட முடியும் சொல்?'' என்று ஏளனமாகக் கேட்டான்.

''எங்கள் வீட்டுக்குள் ஆயிரம் அட்டூழியங்கள் நடக்கலாம். அதைப் பற்றிக் கேட்க நீர் யார்?'' என்று அதட்டினாள் அவள் பதிலுக்கு.

''நான் உன் காதலன். அதனா...'' என்று அவன் உரிமையாகப் பேசி முடிக்கும் முன், ''சீ! அந்த வார்த்தையை இனி வாயாலும் உச்சரிக்க வேண்டியதில்லை. கேட்க நாராசமாக ஒலிக்கிறது'' என்று வெறுப்புடன் பகர்ந்துவிட்டு, தன் காதுகளைக் கைகளால் அருவருப்பாகப் பொத்திக் கொண்டாள். அசோகன் அவளைக் குரோதமாக உற்றுப் பார்த்துவிட்டு சிகரெட் ஒன்றை மௌனமாகப் பற்ற வைத்து உறிஞ்சிக் குடிக்கத் தொடங்கினான்.

''மிஸ்டர் அசோகன்! உங்கள் உண்மைப் பெயர் என்ன என்பதை நான் அறிவேன். உங்கள் மனைவி கௌரியம்மாள் என்னிடம் எல்லாம் விவரமாகக் கூறிவிட்டாள். கல்யாணமாகாத பிரம்மச்சாரி என்றும், முருகூர் ஜமீனின் வாரிசு என்றும் எவ்வளவு பொய்களை என்னிடம் கூறினீர்கள்?'' என்று ஆக்கிரத்துடன் பற்களைக் கடித்த மனோன்மணி பேசி முடிக்குமுன் குறுக்கிட்ட அசோகன், ''அதனால் இப்பொழுது குடி என்ன முழுகிவிட்டது? நீ மட்டும் என்னிடம் எத்தனைப் பொய் சொன்னாய்! உனக்கு வயது இருபத்தெட்டு என்று ஒரேயடியாகப் புளுகினாய். பவுடருக்குப் பின்னால் மறைந்திருக்கும் உன் முகச்சுருக்கங்களும், கருப்பு பூச்சில் நெளிந்து கொண்டிருக்கும் நரைத்த கூந்தலும் உனக்கு முப்பத்தெட்டு வயதாகிறதை எனக்கு எப்பொழுதோ அறிவித்துவிட்டன. பொய் பேசுவது பெண்களின் ஏகபோக உரிமையோ?'' என்று இகழ்ச்சியாகக் கேட்டான்.

மனோன்மணிக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. கண்களில் நீர் மல்கியது. ''ஐயா அசோகன்! நீங்கள் விரும்பினாலும் சட்டம்இடம் கொடுக்காது என்பது ஒருபுறமிருக்க, உங்கள் உண்மைக் குணம் தெரிந்ததும் என்னால் இனி ஒரு க்ஷணம்கூட உம் அன்பை ஏற்கவே முடியாது. ஆகவே நான் உங்களை மறந்துவிடத் தீர்மானித்துவிட்டேன். தயவு செய்து இதுவரை தங்களிடம் கொடுத்துள்ள பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள். அவ்வளவுதான் நான் தங்களிடம் பேச விரும்பியது'' என்றாள் திணறிக்கொண்டு.

பங்களாவே இடிந்து விடும்போல் கடகடவென்று கோரமாக நகைத்தான் அசோகன்.

''பணமா! பணம் ஏது? யாருடையது? ஒன்றுமே விளங்கவில்லையே'' என்று ஆர்ப்பரித்தான்.

மனோன்மணிக்குச் சினத்தைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. கண்கள் இரண்டும் கோபத்தில் சிவக்க அவனை எரித்துவிடுகிறவள் போல் உறுத்து விழித்து ''விளையாட்டு வேண்டாம், இதுவரை நான் கொடுத்த பணத்தை தயவு செய்து திருப்பிக் கொடுத்துவிடுங்கள். இல்லையென்றால்...'' என்று பயமுறுத்தலுடன் நிறுத்தினாள்.

''ஏதோ கொஞ்சம் பணம் அப்போதைக்கப்போது உன்னிடமிருந்து பெற்றுக் கொண்டது வாஸ்தவம். ஆனால் அதை நான் திருப்பிக் கொடுக்க வேண்டியது அவசியமல்ல'' என்று ஆத்திரத்துடன் அசோகன் அழுத்தலாகப் பேசினான்.

''ஏன்?'' என்று திக்பிரமையுடன் மனோன்மணி கேட்டாள்.

''ஏனா? இதுவரை உனது தொண தொணப்பைச் சகித்துக் கொண்டு, உன்னிடம் காதல் புரிவதற்கு நீ கொடுத்த பணம் சரியாகிவிட்டது. இதுவரை தெரிந்து கொள்ளாவிடில் இன்றாவது 'செருப்புகள் விற்பதில் கை தேர்ந்த அசோகன் அன்பையும் விலைக்கு விற்பதில் சாமர்த்தியக்காரன்' என்று தெரிந்துகொள். பணம் என்று ஒரு தூண்டில் இல்லாதிருந்தால், வறண்ட பாலைவனம் போன்ற உன் முகத்தை முழுமதி என்றும், மயில் போன்ற குரலை குயில் என்றும், நடுவயது அடைந்துவிட்டிருக்கும் கிழவியான உன்னை, காதல்

ண்மணியே என்றும் வாயால் கூப்பிட ஒப்பியிருப்பேனோ? நீ கொடுத்த பணம் நான் கூறிய அன்பு மொழிகளுக்குச்சரியாகிவிட்டது. என்னை நீயோ, உன் அத்தையோ, கவுண்டரோ யாரும் ஏதும் செய்ய முடியாது. அசோகனை யாரென்று நினைத்துக் கொண்டு ஆட்டங் காட்டுகிறாய்? ஜாக்கிரதை!'' என்று வெறுப்புடன் அவமதிப்பாகப் பேசி முடித்த அசோகன், விர் என்று திரும்பி, வெளியே சென்று தனது காரில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

தோட்டத்திலின்று புறப்பட்டுச் சென்ற காரின் ஓசையைக்கேட்ட லோகநாயகி, வியப்புடன் ஹாலுக்குள் வந்து, ''மனோ! அசோகன் வந்தார் போலிருக்கிறது. அதற்குள் போய்விட்டாரா என்ன?'' என்று வினவினாள்.

மனோன்மணி அதற்கு நேரிடையாகப் பதில் சொல்லவில்லை; லோகநாயகியை ஓடிவந்து ஆவேசம் பிடித்தவள் போல் கட்டிக்கொண்டு, ''அத்தை! நான் மோசம் போனேன். ஐயோ அத்தை! அவமானம் தாங்கலையே!'' என்று குமுறி அழுதாள்.

45

மிக வேகமாகத் தெருக்களைக் கடந்து ஓடிய அசோகனது கார் அவன் வசித்து வந்த ஹோட்டலின் வாயில் முன்னால் வந்து நின்றது. கதவைத் திறந்துகொண்டு இறங்கிய அவன் வராந்தாவில் அமர்ந்திருந்த ஹோட்டல் நண்பர்களுக்கு ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு, வழக்கமான மிடுக்குடன், பாதரக்ஷை ஒலிக்க உள்ளே சென்றான்.

சற்றுமுன் பழனியப்பக் கவுண்டர் பங்களாவில் நடந்த சிறு காட்சியைக் காண நேரிட்ட யாரும், அவன்தான் அசோகன் என்று ஒருகாலும் ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். மனோன்மணியுடன் ஏற்பட்ட விரோதத்தினால் மனக் கசப்போ, அவமானமோ, பதட்டமோ ஏதுமின்றி அபாரமானதொரு உற்சாகத்துடன் காணப்பட்டான் அவன். அதற்குக் காரணமும் இருந்தது. தன்

பொருளாதார நிலை உயர உதவியாக மனோன்மணியிடம் நட்புக் கொண்டு ஒரு வழியாக, பழனியப்பக் கவுண்டர் வீட்டுக் கல்யாணத்தில் தன் காரியத்தைச் சாதித்துக்கொண்டு விட்டான். அதற்குமேல் அவனுக்கு அவளது சிநேகம் கற்பாறைபோல் பெரும் சுமையாகவே தோன்றியது. மேலும் சமீபகாலத்தில் நடனமணி ரமாதேவியின் நட்பு கிடைத்ததிலிருந்து அவன் மனம், வேறு ஒரு பெரிய திட்டத்தை மானசீகமாக முக்கால் பாகம் நிறைவேற்றியிருந்தது. அந்தத் திட்டம் உண்மையில் பூர்த்தியானால், அவன் தன் பிற்காலத்தில் பொருளாதார நெருக்கடி என்பதே இல்லாமல் மிகவும் சந்தோஷமாக வாழ இயலும். அப்படிப்பட்ட மகோன்னதமான திட்டத்திற்கு மனோன்மணி பெரும் முட்டுக்கட்டையாக இருந்தாள்.

அவளை எப்படியாகிலும் உதறிவிட்டு, முன்போல் சுதந்திர புருஷனாகிவிட வேண்டும் என்று அவன் சில தினங்களாகத் துடியாகத் துடித்துக் கொண்டிருந்தான். வலுவில் ஏற்பட்ட இந்த விவாதம் அவர்கள் சிநேகிதத்திற்குத் தானே முற்றுப்புள்ளி வைத்து அவன்வரைக்கும் பருத்தி புடவையாகக் காய்த்த கதையாகிவிடவே, அவன் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை.

'விட்டது சனியன்! இந்த வயதில் இவளுக்குக் கல்யாணம் ஒன்றுதான் பாக்கியாக இருந்தது. ஆசையைப் பார் ஆசையை!' என்று தனக்குள் மனோன்மணியை மிகவும் இகழ்ச்சியாகப் பேசி மகிழ்ந்த வண்ணம் மாடிப்படிகளை மின்னல் வேகத்தில் கடந்து தன் அறைக்கு முன் வந்தான்.

ஹோட்டலில் தங்கியிருந்த வேறு மனிதர்களுக்கு, காலைப் பலகாரமும், காப்பியும், தட்டுகளில் சுமந்து கொண்டு, வேகமாக வராந்தாவில் சென்று கொண்டிருந்த ஹோட்டல் பையன்களில் ஒருவன் அவனைக் கண்டதும் நின்று, ''ஸலாம் ஸார்! இதை ஐயா உங்களிடம் கொடுக்கச் சொன்னார்!'' என்று ஒரு காகித உறையை நீட்டினான். மூன்று மாத ஹோட்டல் வாடகையும், சாப்பாட்டுச் செலவும் சேர்ந்து முன்னூறு ரூபாய்க்கு முதலாளி ஒரு பில் அனுப்பி இருந்தார்.

''அக்கிரமம்! ஒரு நாள் கூட இந்த ஹோட்டலில் நான் கை நனைத்ததே இல்லை'' என்று உரத்துக் கூறிய அசோகன், தன் வெள்ளைப் பற்கள் தெரிய அலட்சியமாக நகைத்துவிட்டு, ''பையா! ஓடிப்போய் சூடாக ஒரு கப் காப்பி கொண்டு வா. பில் பணத்தை வசூலிக்க உங்கள் காஷியரை இப்படி வரச்சொல். எனக்கு வேலை கிடக்கிறது'' என்றான்.

அறை வழக்கம் போல் தாறுமாறாகக் கிடந்தது. சோபாவின் மீதும், படுக்கை மீதும் அவ்வப்பொழுது கழற்றி எறிந்துவிட்டுச் சென்றிருந்த கோட்டுகளும், நிஜார்களும், மலைபோல் குவிந்து கிடந்தன. பாதி எரிந்து அணைந்த சிகரெட் துண்டுகள் தரை முழுவதும் அலங்கரித்துக் கொண்டு, அறையை மேலும் அசுத்தப்படுத்திக் கொண்டிருந்தன.

தன் ஆடைகளை மடிக்கப் பொழுது இன்றி, அப்படியே கீரையைப் போல் அள்ளி, கட்டிலுக்கடியிலிருந்த பெரிய பெட்டிக்குள் திணித்தான். சுவர் ஆணியில் தொங்கிய படங்கள், டைகள் இவைகளை வேகமாகப் பொறுக்கி பெட்டிக்குள் சேர்த்துக் கொள்வதைக் கண்ணுற்ற காஷியருக்கு, அதை அவன் விட்டுச் செல்கிறான் என்பது விளங்கிவிட்டது. பையன் கொண்டு வந்த காப்பியை வலது கையால் எடுத்து உறிஞ்சிக் கொண்டு இடது கையை நிஜார் பைக்குள் விட்டுத் துழாவி, மூன்று நூறு ரூபாய் நோட்டுகளை இழுத்தான் அசோகன். ''இந்தாரும், என் கணக்கைத் தீர்த்துவிடுங்கள். நான் இப்பொழுதே அறையைக் காலி செய்து விடுவேன்'' என்றான் மிகவும் அமுத்தலாக.

அவன் அளித்த அதே அலக்ஷிய தோரணையில் காஷியரும் அப்பணத்தைப் பெற்றுக் கொண்டு, ''இது கடந்த மாதங்களுக்கு உண்டான பில் தொகை. இப்பொழுது மாதம் பிறந்து ஆறு தேதியாகின்றதே! அதற்குப் பிறகு எக்ஸ்ட்ரா காப்பி, பால், பலகாரம் சாப்பிட்ட பில் முப்பது ரூபாய்க்கு...'' என்று இழுத்தான்.

''பீடா, சிகரெட், சோடா, அந்த பில் வேறு...'' என்று பையன் ஜாடையாக சமயத்திற்கு ஞாபகப் படுத்தினான்.

''சரி, எல்லாவற்றிற்கும் எடுத்துக் கொண்டு சீக்கிரம் ரசீதை அனுப்பி வையுங்கள்'' என்று இன்னொரு நூறு ரூபாய் நோட்டைப்

பையினின்று இழுத்து அவன் முகத்தில் எறியாத குறையாக அசோகன் கொடுத்துவிட்டு, வாசனை எண்ணெயைத் தடவி தன் சிகையைக் கண்ணாடி முன் அலங்கரித்துக் கொள்ளத் தொடங்கினான்.

'பெட்டி மற்ற சாமான்கள் அனைத்தையும் கொண்டு ரமாவின் பங்களாவில் போட்டுவிட்டு, சாயங்காலம் ஆறு மணிக்கு பட்டணம் செல்லும் வண்டியில் புறப்பட்டு...' என்று தனக்குள் முணுமுணுத்த அவன், தன் வருங்கால வாழ்க்கையை எண்ணி ஆனந்த பரவசமடைந்து தனக்குள் புன்முறுவல் செய்து கொண்டான்.

அவனது வருங்காலத் திட்டம், அவனது ஏழு தலைமுறைக்குப் போதுமானதான ஒரு பிரம்மாண்டமான ஏற்பாடாகும்.

நாட்டியமணி ரமாதேவிக்கு உண்மையிலேயே பத்தொன்பது வயதுதான் ஆகிக் கொண்டிருந்தது. செழுமையான அழகிய தோற்றம், நல்ல முகவெட்டு, இத்துடன் நன்றாகவும் ஆடத் தெரிந்திருந்தது. அவளோடு தக்க பக்க வாத்தியங்களுடன் மேல் நாடுகளுக்கு ஒரு நாட்டிய யாத்திரை செய்துவிட்டால் பணத்தை மலைபோல் குவித்துவிட முடியும். அத்துடன் அப்படியே, ஹாலிவுட் முதலாளி ஒருவரை மடக்கிப் போட்டு ஒரு வர்ணப் படமும் தயாரித்து விட்டால் பிறகு பண வருவாயைக் கேட்க வேண்டியதில்லை.

இவ்வளவிற்கும் ரமாதேவியின் தாயார் என்று சொல்லப்பட்ட ஒரு கிழக்கோட்டான் எதிரியாக வந்து முளைத்து, சில தினங்களாக மகளுக்கு அசோகன் மீது நம்பிக்கை குறைய பல சூழ்ச்சிகள் செய்து கொண்டிருந்தாள். இந்த முறை அசோகன், அந்தக் கிழவியை ஜெயித்து விட வேறு ஒரு வித ஏற்பாடும் செய்திருந்தான்.

அவனது திட்டப்படி ரமாதேவி அன்றிரவு ஒருவருக்கும் தெரியாது அவனுடன் புறப்பட்டு பம்பாய் சென்றுவிடுவது. அங்கே அவன் அவளைத் திருமணம் செய்துகொண்டுவிடுவது. திருமணத்திற்கு மதம் தடங்கல் செய்யும் எனத் தோன்றினால், வேண்டாத அந்த மதத்தை கணப்பொழுதில் உதறி எறிந்து விடுவது என்பதுதான் அந்தத் திட்டம். அசோகனது அழகில் மயங்கி, அவனது பேச்சுக்களில் சொக்கி, தன் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டிருந்த ரமாதேவி, தன் விலையுயர்ந்த நகைகளுடனும், கொஞ்சம் ரொக்கப்

பணத்துடனும் அவனுக்காகக் காத்திருப்பதாக வாக்களித்திருந்தாள்.

ரமாதேவியிடம் நட்புக் கொள்ள தொடங்கியதிலிருந்து அசோகனுக்கு, காலை, மாலை இரு வேளைகளிலும் அவள் வீட்டில்தான் சாப்பாடு, ஸ்நானம், எல்லாம் நடைபெற்றன. ஆதலினால் ஹோட்டலைக் காலி செய்துவிட்டு நேரே, புதுமாப்பிள்ளைபோல, ஜம்மென அவள் வீட்டில் போய்த் தங்க அவனுக்கு எவ்விதத் தடங்கலும் இருக்கவில்லை.

விரைவாகத் தன் அலங்காரத்தை முடித்துக்கொண்டு அசோகன், தன் சாமான்களுடன் ஹோட்டலை விட்டுப் புறப்பட்டான். அடுத்தபடியாக அவன் செய்ய வேண்டிய ஒரு முக்கிய வேலை இருந்ததனால், நேரே தன்னுடைய காரை 'அசோகா ஷூ மார்ட்'டிற்குச் செலுத்தினான். வண்டியினின்று இறங்கி அவன் உள்ளே வந்தபொழுது, காலையில் கடை திறந்து கொஞ்ச நேரமேதான் சென்றிருந்ததனால் வாடிக்கையாளர்கள் யாரையும் அங்கே காணவில்லை. முதலாளி ஆசனத்திலே அமர்ந்திருந்த சோணாசலம் அசோகனைப் பாராதவன்போல் மிகவும் அசட்டையாக இருந்தான்.

நகரத்திலே வந்து கைப்பொருளைக் கண்டபடி செலவிட்டு, ஆண்டியாகும் நிலைமை சமீபித்துவிட்டிருந்த சோணாசலம், சரிகை அங்கவஸ்திரத்தை விட்டெறிந்துவிட்டு, அசோகன் போல் புஷ்கோர்ட், கறுப்புக் கண்ணாடி, நிஜார் இவைகள் அணியக் கற்றுக் கொண்டதுடன், அசோகனைப் போலவே அதட்டலாகப் பேசவும், மிரட்டவும் கூட கற்றுக் கொண்டு விட்டிருந்தான். சோணாசலம் விழிப்படைந்து விட்டான் என்பதைப் பல நாட்களுக்கு முன்பே உணர்ந்து கொண்டு விட்டிருந்த அசோகன், அவனது அசட்டையைப் பாராட்டாமல் அதே சமயம் தன் கௌரவத்தையும் விட்டுக் கொடுத்துக் கொள்ளாமல் தனுக்காக அவன் அருகே சென்று,

''மிஸ்டர் சோணாசலம்! உங்களிடம் ஒரு வார்த்தை பேசவேண்டும்'' என்று ஆரம்பித்தான்.

அதற்கு முன்பே தயாராக இருந்தவன் போல் சோணாசலம்

தலையை வெடுக்கெனத் திருப்பி, ''மிஸ்டர் அசோகன், உங்கள் வேலை கம்பெனிக்கு லாபமோ, முதலாளிக்கு திருப்தியோ அளிக்காததனால் உங்களை நீடித்து இங்கே வைத்துக் கொள்ள விருப்பமில்லை. அதனால், உங்களை இந்த மாத இறுதியிலேயே நீக்கிவிடத் தீர்மானித்தாகிவிட்டது'' என்றான் சிறிதும் தயவின்றி.

இதைக் கேட்ட அசோகனது இரத்தம் கொதித்தது. புஸ்ஸென வெளியே ஊதிக்கொண்டு நின்ற புஷ்கோர்ட்டிற்குள் கொத்தவரைக்காய் போல் காய்ந்து கிடந்த சோணாசலத்தின் உடலை ஒரே பிடியில் பிடித்து நொறுக்க வேண்டும்போல் சினம் பொங்கிக் கொண்டுவந்தது. இவ்வளவு பிரபலமாக அசோகா ஷூ மார்ட் ஆவதற்குக் காரணபூதமாக இருந்த தன்னை அவன் 'டிஸ்மிஸ்' செய்வதா என எண்ணிப் பற்களைக் கடித்துக் கொண்டான்.

''இறுதிவரை பார்ப்பானேன்; இன்றே, இப்பொழுதே நீக்கி விடுங்கள். ஆனாலும் சோணாசலம், உங்களுக்கு நன்றி என்பது கடுகளவும் இல்லை என்பதை மட்டும் நான் சொல்லாமல் போக முடியவில்லை'' என்று கோபமாகப் பேசினான் அசோகன்.

''நன்றி கின்றி என்று பெரிய வார்த்தைகள் போட வேண்டாம். அந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்பதே தெரியாத பிரகஸ்பதி நீ. மரியாதையாக சீக்கிரம் இங்கேயிருந்து போய்விடு'' என்று கூறிவிட்டு மேஜை மீதிருந்த மணியை சோணாசலம் ஓங்கி அடித்தான்.

காக்கி சட்டையும் இடையில் பளபளப்பான உறையில் கத்தியும் அணிந்த இரு கூர்க்கா சேவகர்கள், சலாம் அடித்துக் கொண்டு வந்தனர். அவர்கள் தன்னைக் கழுத்தைப் பிடித்து தள்ளுமுன் பேசாது போய் விடுவதுதான் கௌரவம் என கணப்பொழுதில் உணர்ந்துகொண்ட அசோகன், சோணாசலத்தை எரித்து விடுகிறவன்போல் விரைந்துவிட்டு, வேகமாக வெளியே ஓடித் தன் காரில் ஏறிக் கொண்டான்.

சோணாசலம் செய்த அவமானத்தை மறக்க, சில மணி நேரம் காரில் ஊரைச் சுற்றிப் பவனி வந்தான் அசோகன். பிறகு தன் பம்பாய் பயணத்திற்கு வேண்டிய சில சாமான்களைக் கடைகளில் வாங்கி, காரில் ஏற்றிக் கொண்டான். ஒரு சிறு தோல் பெட்டியில் ரொக்கப்

பணம், மனோன்மணியிடம் அபகரித்த நகைகள் இவைகளை எடுத்துக் தனியே அடக்கம் செய்து, அதைப் பத்திரமாகக் காரின் பின் புறத்திலே வைத்துப் பூட்டிவிட்டு, நேரே வண்டியை ரமாதேவி பங்களாவிற்குச் செலுத்தினான்.

'லொள், லொள்' என தன்னைப் பார்த்துக் குரைத்து வரவேற்ற குச்சு நாயைத் தடவிக் கொடுத்துச் சமாதானப் படுத்திவிட்டு உள்ளே பிரவேசித்தான். ஹாலுக்குள் விரித்துக் கிடந்த ரத்ன கம்பளத்தின் மேல் பகல் போஜனத்திற்குப் பிறகு, அலங்கோலமாக உருண்டு கொண்டு கிடந்தாள் ரமாதேவியின் தாயார். வழக்கம்போல் அசோகனைக் கண்டதும் அவள் தன் பொக்கை வாயைக் காட்டி புன்முறுவல் செய்யவில்லை. உதட்டைக் குவித்து சலிப்புடன் சூள் கொட்டிவிட்டு, அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டு தூங்குவது போல பாவனை செய்தாள்.

அசோகன் அவளை லக்ஷியம் செய்யவில்லை. நேரே உள்ளே மிடுக்காகச் சென்றான். ஸ்நான அறைக்குச் சென்று குழாயைத் திருப்பிவிட்டு நன்றாக ஸ்நானம் செய்தான். மாடியறையிலே சென்று பீரோவைத் திறந்து தான் வைத்துவிட்டுப்போன ஆடைகளில் சிலவற்றை எடுத்து உடுத்திக் கொண்டான். சமயலறைக்குச் சென்று ''இலை போடு'' என்று வேலையாளை அதட்டி பரிமாறச் செய்து சாப்பிட்டான். ''காப்பியை எடுத்துக் கொண்டு வந்து எழுப்பினால் போதும்'' என்று உத்தரவிட்டு விட்டு மாடியறைக்குச் சென்று கட்டிலில் படுத்துக் கொண்டு தூங்க ஆரம்பித்தான்.

எவ்வளவு நேரம் நித்திரா தேவியின் வசம் அவன் இருந்தானோ அவனுக்கே தெரியாது. ஏதோ பேச்சுக் குரல் கேட்டு விழித்துக் கொண்ட பொழுது, நன்றாக இருட்டிவிட்டது என்பதை உணர்ந்தான். 'ரயிலுக்கு நேரமாகி விட்டதா என்ன?' என திடுக்கிட்டு எழுந்து விளக்கை ஏற்ற கையை நீட்டினான். அப்போது வெளியே வராந்தாவில் ரமாதேவியின் தாயார் யாருடனோ சிறு குரலில் பேசுவது நன்றாகக் கேட்டது.

''வீட்டு மாப்பிள்ளை என்ற நினைப்பு தடியனுக்கு. திறந்த ஓட்டலிலே நாய் நுழையறாப்பலேயல்லவா நுழைகிறான்? எவ்வளவு

அந்தக் குட்டி கொடுத்த இடம்'' என்று அலுத்துக் கொண்டாள்.

''அதுக்கு அவர் மேலே ஆசை விழுந்துடுச்சு. நம்ப பேச்சை இனிகேட்குமா?'' என்று யாரோ ஒரு மனிதன் பதில் சொல்வதும் கேட்டது.

அசோகனுக்கு இந்தக் கட்டத்தில் பலமாக இருமல் வந்துவிடவே, தாயாரின் பேச்சு பட்டென நின்று விட்டது. விளக்கை ஏற்றினான் அசோகன். மணி இரவு எட்டு என்பதைக் கண்டதும் திடுக்கிட்டு அவசரமாக வெளியே வந்தான். ''ரயிலுக்குப் புறப்பட நேரமாயிற்றே. இந்த அசட்டுப் பெண் ஏன் இன்னும் ஒரு தகவலும் அனுப்பி வைக்கவில்லை!'' என்று அவனுக்கு ஒரே பரபரப்பு.

ஹாலில் பிரகாசமாக ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதற்குமேல் ரமாதேவியின் தாயின் முகத்திலே பிரகாசமானதொரு புன்னகை மலர்ந்திருந்தது.

''தம்பிக்கு நல்லதூக்கம். காப்பியை எடுத்துக் கொண்டு போய் எழுப்பவாணாம்னு நான்தான் உத்தரவுபோட்டேன். காப்பியை கலக்கி கொண்டாரச் சொல்லவா? பாருங்க தம்பி! இந்த ரமா இன்னும் வீடு திரும்பவில்லை. பகல்லே யாரோ சிநேகிதியைப் பார்க்கப் போறேன்னு காரை எடுத்துக்கிட்டு கிளம்பினவ, இன்னும் வீடு திரும்பலை. நாளைக்கு ஒரு பெரிய 'ஸ்டாரா' போகிற இந்தப் பொண்ணு, இப்படி நமக்குச் சமமில்லாதவங்க வீட்டுக்கு ஏறி இறங்கிட்டிருக்கலாமா? நீங்கதான் அவளுக்கு புத்தி சொல்லணும். அவ சொன்ன பேச்சு கேக்கிறதில்லையினு எனக்கு மத்தியானம் ஒரே விசனம். அதனாலே நீங்க வந்ததைக் கூட நான் பார்க்கலை'' என்று மடமடவெனப் பேசித் தள்ளினாள். அவிழ்ந்து தொங்கிய தன் நரைத்த கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டு, ''அடே பையா! ஐயாவுக்கு காப்பி கொண்டா!'' என்று உத்தரவிட்டாள்.

மேலும் தொடர்ந்து, ''காப்பியை சாப்பிட்டுவிட்டு நீங்க நம்ம காளிமுத்துவை கூட்டிகிட்டு காரிலே போய் நட்டுவனார் பாம்பாடம் பிள்ளை வீட்டிலே இருந்து ரமாவைக் கூட்டிக்கிட்டு வாங்க. அவங்க வீட்டிலே இல்லாட்டி அந்தப் பொண்ணு ஜெயந்திபாய் வூட்டிலே இருப்பா. அங்கே இல்லாட்டா, நம்ப ரேடியோ சுந்தரத்தண்ணா வூட்டிலே இருப்பா. எங்கேயிருந்தாலும் நீங்க போய் கூட்டி வந்து

நல்லா ஒரு டோஸ் கொடுங்க. பெத்த பெண்ணு இப்படிச் சொன்ன பேச்சைக் கேட்காம இருக்கிறதைப் பார்த்து எனக்கு வயிறு பத்திகிட்டுவருது. என்னவோ நீங்கதான் அதுக்கு ஒரு வழி பண்ணனும்...'' என்று கூறிவிட்டு, புடவைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு அழத் தொடங்கினாள்.

வேலைக்காரப் பையன் கொண்டு வந்த காப்பியை அவசரமாக வாங்கிப் பருகினான் அசோகன், ''வருத்தப் படாதீங்க! இதோ போய் ரமாவைக் கூட்டி வரேன்'' என்று சமாதானப்படுத்திவிட்டுக் கிளம்பினான்.

கண்களைத் துடைத்துக் கொண்ட கிழவி, பின்னால் ஓடி வந்து, ''அடே காளிமுத்து! ஐயாவோட கூடப் போ. சீக்கிரம்! வண்டியை நீ ஓட்டு, ஐயா களைப்பாக இருக்கிறார்'' என்று உபசாரம் செய்தாள்.

வண்டி வேகமாக சந்துகளிலும், தெருக்களிலும் ஓடியது. அசோகனுக்கு ஏனோ தூக்கம் கண்களைச் சுழற்றியது. எவ்வளவு முயற்சித்தும் அவனால் விழித்துக் கொண்டு இருக்க முடியவில்லை. பங்களாவினின்று புறப்பட்ட சில வினாடிகளில் அவன் குறட்டை விட்டுக் கொண்டு தூங்க ஆரம்பித்தான்.

இடி இடித்தது போன்ற பயங்கரமான சப்தத்தைக் கேட்டு திடுக்கிட்டு விழித்துக் கொண்டு பார்த்தபொழுது அசோகனுக்கு தூக்கிவாரிப் போட்டது. அப்பொழுது இரவு ஒரு ஜாமப் பொழுது இருக்கும். நகரத்திற்கு வெகு தொலைவில் வந்து விட்டோம் என்று நொடிப் பொழுதில் உணர்ந்து கொண்டு, ஆசனத்தினின்றும் நிமிர்ந்து உட்கார்ந்தான். ''இன்னும் தூக்கம் என்ன? இறங்கு?'' என்று அதட்டிய குரலைக் கேட்டு மெய் சிலிர்த்துப் போனான். தன்னையும் காளிமுத்துவையும் தவிர யாருமில்லாத அந்த வண்டியில், எங்கிருந்து நாலைந்து தடியர்கள் வந்து முளைத்தார்கள் என அவனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது.

''ஐயாவை கைலாகு கொடுத்து இறக்கு அப்பா!'' என ஏளனமாகப் பேசிய மீசைக்கார ஆசாமி, உடும்பை நிகர்த்த தன் கரத்தை அசோகனது பாடுபட்டறியாத மென்மையான தோள்மீது ஓங்கி வைத்தான்.

'கனவல்ல, எல்லாம் நிஜம்தான்' என்று உடம்பில் ஏற்பட்ட வலியினால் உணர்ந்து கொண்ட அசோகன், வண்டியை விட்டுக் கீழே இறங்கினான். ''காளிமுத்து! என்ன இதெல்லாம்?'' என்று ஒன்றும் புரியாதவன் போல் அதட்டிக் கேட்டான்.

''காளிமுத்து உன் மச்சானா? அமுத்தல் பேச்சைப் பார்!'' என்று கேலியாகப் பேசிய ஒரு முரடன், ஓங்கி ஒரு குத்து அவன் முதுகில் விட்டான்.

''ஐயோ! அட பாவிகளா? நீங்கள் எல்லோரும் சதி செய்து என்னைக் கூட்டி வந்து...'' என்று அசோகன் நோவு தாங்காது அலறி முடிக்குமுன்... ''அதிகமாகப் பேசாதே, பின்னாடி வருத்தப்படுவே. கட்டி சுட்டுவிடுகிற சூரப்புலியைப் பார்! பொம்பளைகளை ஏமாத்திக்கிட்டு தின்னாப்பலே எங்களை நினைச்சுக்கிட்டியா? போட்டேனா மண்டையிலே, மூளை சிதறிவிடும்'' என்று பயங்கரமாக கர்ஜித்த முரடன் ஒருவன் அவனை ஒரு நெட்டாக நெட்டி, அருகிலிருந்த ஒரு மரத்திற்கு இழுத்துச் சென்றான்.

''ஐயோ! உதவி செய்யுங்கோ, திருடன் திருடன்!'' என்று அசோகன் திடீரென கூச்சலிடுவதைக் கண்ட அவர்கள் அனைவரும் பாய்ந்தோடி வந்து ஆளுக்கு ஒன்றாக ஒரு அறை வைக்கவே, வலி தாள முடியாது அசோகன் கடைசியில் மூர்ச்சித்துப் போனான்.

நினைவு வந்து கண்களை விழித்துப் பார்த்தபொழுது சூரியன் உதயமாகி, சுள் என வெயில் வீசிக் கொண்டிருப்பதை அசோகன் கண்டான். ஆடு மேய்க்கச் சென்று கொண்டிருந்த இடையன் ஒருவன், புளிமரத்தில் கட்டுண்டு, வாயில் துணி திணிக்கப்பெற்று மூர்ச்சையாகிக் கிடந்த மனிதன் மீது இரக்கம் கொண்டு, கட்டை அவிழ்த்து விட்டு, தான் கையில் கொண்டு சென்ற கலயத்திலிருந்து மோரைப் பருகக் கொடுத்து உதவினான்.

கொழுக்கட்டை போல் சிவந்து வீங்கியிருந்த உடல் காயங்களைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்ட அசோகன் தன் சூழ்நிலையை ஆராய்ந்தான். நகரத்திற்கு வெகு தொலைவிலிருந்த ஒரு கிராமத்தின் மயான பூமி அது. கடிகாரம், மோதிரம், பணம், அனைத்தையும் திருடிக் கொண்டுவிட்ட அம்முரடர்கள், காரை என்ன

செய்தார்கள் என்று கலவரத்துடன் சுற்றுமுற்றும் பார்த்த அவன் திடுக்கிட்டுப் போய்விட்டான்.

எல்லாவற்றையும் அபகரித்துக் கொண்டு சென்ற அந்த முரட்டுப்பாவிகள், காரை ஒரு மேட்டின்மீது தள்ளி நெருப்பை வைத்துவிட்டுப் போயிருந்தார்கள். அக்னிபகவான் பசியைத் தணித்தது போக, எஞ்சி நின்ற சக்கர வளையங்களையும், தகர தட்டங்களையும் கண்ட அசோகனின் இருதயமே வெடித்துவிடும்போல் இருந்தது.

''என்ன சாமி!'' இரக்கமாக துக்கம் விசாரித்த இடையனின் குரல் அவன் காதுகளில் விழவேயில்லை.

கலிங்கத்துக்குப் போருக்குப் பிறகு போர்க்களத்திலே வந்து நின்ற அசோக சக்கரவர்த்திக்கு, ஞானோதயம் ஏற்பட்டது என சரித்திரக்காரர்கள் விவரிக்கின்றனர். உடல் நோக உதை வாங்கி, கைப்பொருள் அனைத்தையும் இழந்து மிகவும் பரிதாபகரமாக இருந்த நம் நவீன அசோகனுக்கு அந்த மயான பூமியில் ஒரு ஞானோதயம் பிறந்தது! எல்லோரையும் சில காலம் ஏமாற்றலாம். சிலரை எப்பொழுதும் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எப்பொழுதும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது'' என்பதுதான் அவனது அறிவில் உதயமான உண்மை. நாராகக் கிழிந்து போயிருந்த நிஜார்ப் பையில் கையை விட்டுத் துழாவினான். முரடர்கள் விட்டுப் போயிருந்த காலணா நாணயம் மட்டும் அதில் கிடந்தது! ''ஊரை ஏமாற்றும் பிழைப்பை இத்துடன் விட்டு, ஏதாவது நாணயமான தொழிலில் ஈடுபட்டால்தான் இனி பிழைக்க முடியும்'' என்று தனக்குள் எண்ணியவனாய் எழுந்து, அவன் வேகமாக கால் சென்ற திசையில் நடக்கலுற்றான்.

'அசோகன் மனத்தில் தோன்றிய இந்த வைராக்கியம் நீடித்து நிற்குமா? வாழ்நாளில் பெரும்பகுதியை பெண்களை ஏமாற்றிப் பிழைப்பதிலேயே கழித்துவிட்டிருந்த அவன், திடீரெனத் திருந்தி யோக்கியமாகிவிடுவானா?' என்றெல்லாம் அவனை அறிந்தவர்கள் ஆச்சரியப்படலாம், பிரமிக்கலாம். எனினும் உண்மையாக அப்பொழுது உடலில் ஏற்பட்ட வேதனையும், மனத்தில் உண்டாகியிருந்த ஏமாற்றமும், அவனை அந்த வைராக்கியத்தை

மேற்கொள்ளச் செய்தன. மயான பூமியிலே மேற்கொண்ட வைராக்கியம் மயான வைராக்கியமாக முடிந்து போனால், அந்த அசோகன் விஷயத்தில் யாரும் ஆச்சரியப் படவே தேவையில்லை.

46

அயலூர் பண்ணையார் மகனை, கடந்த ஜனவரி மாதம், களத்து மேட்டு அருகில் கத்தியால் குத்திக் காயப்படுத்தியதாக, ஆனந்தன் என்னும் வாலிபன் மீது தொடரப்பெற்ற வழக்கில் அன்று தீர்ப்புக்கூறப்பட்டது. ''குற்றவாளியின் வயது, குற்றம் நிகழ அமைந்த சூழ்நிலை, இவைகளை மனத்தில் கொண்டு, ஜட்ஜ் அவர்கள், ஆனந்தனுக்கு ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனை மட்டும் விதித்துள்ளார்.''

இந்தச் செய்தியைப் பத்திரிகையிலே படித்து முடித்ததும், இந்திராணியின் கண்களில் நீர் பொல பொலவென உதிர்ந்தது. பத்திரிகையைக் கீழே போட்டுவிட்டு, புகைந்து கொண்டிருந்த அடுப்பை ஊதிவிட அவசரமாக எழுந்திருந்தாள்.

''அம்மா இந்திராணி!'' என்று மெல்லியதாக அழைத்த வண்ணம் வாயிற்படியில் வந்து எட்டிப் பார்த்த பங்காரு அம்மாள், இந்திராணியை மேலும் கீழும் ஆராய்ச்சி நோக்குடன் ஒரு முறை உற்றுக் கவனித்துவிட்டு லேசாகப் பெரு மூச்செறிந்து கொண்டாள். கண்களைச் சட்டெனத் துடைத்துக் கொண்ட இந்திராணி, ''அம்மா! கூப்பிட்டீர்களா!'' எனப் பணிவுடன் வினவினாள்.

''ஆமாம் இந்திராணி, நேற்று இரவே சொல்வதற்கு மறந்து போனேன். இன்று இரவு, நம் வீட்டில் சாப்பிட நாலைந்து நண்பர்களை அழைத்திருக்கிறேன். போன தடவை நம் வீட்டிற்கு வந்திருந்த விருந்தாளிகள் நீ வைத்திருந்த புதிய மாதிரி மசாலா குழம்பைப் பெரிதும் ரஸித்தார்கள். இன்றிரவு விருந்திற்கும் நீ அதையே செய்துவிடு. வேண்டிய காய்கறி மற்ற சாமான்களை, வேலையாளிடம் எழுதிக் கொடுத்தனுப்பு. செலவுக்குத் தேவையான

பணத்தை என்னிடம் கேட்டு அவனை வாங்கிக் கொள்ளச் சொல். விருந்திற்கு என்னவெல்லாம் தயாரிப்பது என்று உனக்குத் தெரிந்திருப்பதால் நான் எதுவும் சொல்லத் தேவையில்லை'' என்று மடமடவென்று பேசிய அந்த மூதாட்டி சற்று நிறுத்திவிட்டு, அவளது முகத்தை அன்பாகப் பார்த்து புன்முறுவல் செய்தாள்.

பிறகு தொடர்ந்து, ''இந்திராணி! நீ எவ்வளவு நன்றாகச் சமைக்கிறாய் , தெரியுமா? நீ எனக்குக் கிடைத்தது பெரிய அதிர்ஷ்டமெனக் கருதுகிறேன். சமையலுடன் வீட்டையும் அழகாக வைத்துக் கொள்ள உனக்குத் தெரிந்திருக்கிறதே. இவ்வளவு திறமையுள்ள உன்னை மணந்து கொள்ளப் போகிறவன் பெரும் பாக்கியசாலிதான்! யாருக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ?'' என்று கூறி விட்டு பதிலுக்குக் காத்திராமல் அங்கிருந்து சென்று விட்டாள்.

எரியும் அடுப்பில் விறகுக் குச்சிகளை வைத்துக் கொண்டிருந்த இந்திராணியின் கைகள் நடுங்கின. கண்களில் பிரவாகமாகப் பெருகிய கண்ணீர், கன்னங்கள் மீது வழிந்து நெஞ்சைச் சுட்டது. ''அண்ணா! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். பாவி என்னால் உங்களுக்கு அவமானமும் சிறை தண்டனையும் அல்லவா கிட்டியிருக்கின்றன, அண்ணா!'' என்று தனக்குள்ளே துயர மிகுதியினால் இந்திராணி விக்கி அழுதாள்.

ஆனந்தன் வழக்கு சம்பந்தமான செய்திகளை, விடாது ஆவலுடன் கடந்த சில நாட்களாகப் படித்துக் கொண்டு வந்தாள் அவள். அன்று காலை வந்த செய்தியைப் படித்த பின்பு அவளுக்கு 'லாரி மோதியும் மரணமடையாது இன்னும் ஏன் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம்? எதற்காக இந்த பயங்கர துன்ப வாழ்க்கை?' என்று மனம் கசந்து போய்விட்டது.

ஆமாம். லாரி மோதுண்டு, தன் நினைவு இன்றி மயக்கமடைந்து போன இந்திராணி இறந்து போகவில்லை. இயற்கை அவளிடம் கருணை கொண்டு அவளது வாழ்க்கையை ஏனோ நீடிக்கச் செய்தது. அன்று மாலை கண்களை விழித்துக் கொண்டு பார்த்தபொழுது, இந்திராணி, தான் ஒரு ஆஸ்பத்திரி கட்டிலில், நெற்றியிலும், கையிலும் கட்டுகளுடன் படுத்திருப்பதை உணர்ந்தாள்.

நடுத்தெருவில் காயங்களுடன், நினைவின்றிக் கிடந்த அனாதைப் பெண்ணைக் கண்டு யாரோ சில வழிப்போக்கர்கள் இரக்கமுற்று வந்து, அருகிலிருந்த ஆஸ்பத்திரியில் அனுமதித்து விட்டுச் சென்று விட்டிருந்தனர்.

பலத்த காயங்கள் இல்லாததனால், ஆஸ்பத்திரியில், சில தினங்களே அவளை இருக்க அனுமதித்தனர். லாரி விபத்து ஏற்பட்ட பத்தாவது நாள், ஆஸ்பத்திரி வார்டில் இருந்த நர்ஸ், அவளை அன்று தினம் வீட்டிற்கு அனுப்ப உத்தேசித்து விட்டதாகச் சொன்னாள். ஆஸ்பத்திரியினின்று வெளியே செல்ல வேண்டும் என்ற விஷயத்தை அறிந்ததும் இந்திராணிக்கு மேலே என்ன செய்வதென்று விளங்கவில்லை. ''வீட்டை விட்டு ஓடி விட்டாள்'' என்ற அவச்சொல்லுக்கு இலக்காகிய பின்பு திரும்ப வீட்டிற்குச் செல்ல அவளுக்குத் தைரியமிருக்கவில்லை. தன்னந்தனியளாக முன்பின் தெரியாத அந்தப் புதிய ஊரில் அவள் எங்கே யாரிடம் சென்று அடைக்கலமடைய முடியும்?

எவ்வளவோ இடையூறுகளுக்கு நடுவில் வாழ்க்கையில் அவ்வப்போது சில நல்ல மனிதர்களையும் சந்திக்க முடியும் என்னும் உண்மையை இந்திராணி அப்பொழுதுதான் உணர்ந்து கொண்டாள். அவள் தங்கியிருந்த வார்டில் வேலைபார்த்து வந்த நர்ஸ் அவளிடம் விசேஷ அனுதாபமும் பிரியமும் காட்டி வந்தாள். ஆஸ்பத்திரியை விட்டுவெளியே போய்த்தான் ஆக வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்ட பொழுது இந்திராணி, தன் விருத்தாந்தம் முழுவதையும் அந்த நர்ஸிடம் கூறி, தனக்குப் போய்த் தங்க எங்கும் இடமில்லையென்றும், ஏதாவது உதவி செய்தால் மிகவும் கடமைப்பட்டவளாக இருப்பேன் என்றும் உருக்கமாக வேண்டிக் கொண்டாள்.

தன் பிழைப்பிற்காக, நர்ஸ் உத்தியோகம் செய்து வாழ முற்பட்டிருக்கும் அவளால் இந்திராணிக்கு அதிகமாகப் பண உதவி ஏதும் செய்ய முடியவில்லை. ஆனால், அவள் இந்திராணிக்கு எங்கேயாவது ஒரு நல்ல இடத்தில் சமையல் வேலை தேடிக்கொடுப்பதாக வாக்களித்திருந்தாள். ஆஸ்பத்திரி நர்ஸின் சிபாரிசின் பேரில் அவளது தூர பந்துவான பங்காரு அம்மாள் வீட்டு சமையற்காரி வேலை அதி விரைவில் இந்திராணிக்குக் கிட்டிவிட்டது.

பங்காரு அம்மாள் கலாசாலை ஒன்றில் பல காலம் ஆசிரியையாக இருந்து சமீப காலமாக ஓய்வாக வாழ்கின்ற பெண்மணி. கொஞ்ச நாட்களுக்கு முன்புதான் அவளது கணவர் இறந்து போனார். முதுமையும், உடல் நலிவும், கணவரைப் பிரிந்த துயரமும் அவளை நோயாளியாக்கி விடவே, படுத்த படுக்கையாகி விட்டிருந்தாள். அந்நிலையில் வீட்டைக் கவனிக்கவும், தனக்குப் பணிவிடைகள் செய்யவும், சமைக்கவும், நல்ல நடத்தையும், புத்திசாலித்தனமும் நிரம்பிய ஒரு வேலைக்காரப் பெண் அவளுக்குத் தேவையாகஇருந்தது. இந்திராணிக்காக, நர்ஸ் வேலை தேடிய சமயமும் பங்காரு அம்மாள் அவளுக்காக அலைந்து கொண்டிருந்த சந்தர்ப்பமும் ஒத்துக் கொள்ளவே, இந்திராணியை மிகவும் சந்தோஷத்துடன் அவள் ஏற்றுக் கொண்டு விட்டாள்.

இந்திராணியை பங்காரு அம்மாளுக்கு விரைவில் மிகவும் பிடித்துப் போய்விட்டது. அவள் வீட்டில் வேலைக்கு வந்த சில மாதங்களில், படுக்கையாகிக் கிடந்த அம்மூதாட்டி எழுந்துநடக்க ஆரம்பித்தாள். இந்திராணிக்கும் தன் எஜமானியை மிகவும் பிடித்துவிட்டிருந்தது. அனாவசியமான குறுக்குக் கேள்விகள், அதட்டல் ஏதும் இன்றி, சொந்த மகளைப் போல் தன்னிடம் அம்மூதாட்டி பிரியமாக நடந்து கொள்வதைக் காணக் காண நாளடைவில் அவளுக்கு அந்தம்மாள் மேல் தனியானதொரு பாசம் ஏற்படத் தொடங்கியது.

வேலையில்லாத ஓய்வான சமயங்களில், தினசரி பத்திரி கைளை விடாது படித்துவந்தாள் இந்திராணி. பத்திரிகை மூலம் அறிந்து கொண்ட விஷயங்களை, ஒன்றோடு ஒன்று பிணைத்து, தான் ஓடி வந்த பின் தன் குடும்பத்தில் ஏற்பட்ட பல நிகழ்ச்சிகளை ஊகித்துக் கொண்டு விட்டாள். தன்னால் தன் குடும்பத்திற்கு மீளா அவச்சொல்லும், கஷ்டங்களும் ஏற்பட்டிருப்பதை நினைத்த பொழுதெல்லாம் அவள் மனம் வேதனையில் துடித்தது. தந்தையின் கடைசி காலத்தில் தான் செய்த தவறை எண்ணி அவள் பச்சாதாபத்துடன் உருகிக் கண்ணீர் வடிக்காத நாளே இல்லையெனலாம்.

அன்று காலைப் பத்திரிகையில் வந்த செய்தி அவளது

துயரத்தைப் பன்மடங்காக்கி விட்டது. எங்குத் திரும்பினாலும் ஓங்கி, உயரமாக வளர்ந்திருந்த அண்ணன் ஆனந்தனின் மெலிந்த உருவம் கண்முன் வந்து நின்று, 'பழிகாரி! பழிகாரி' என்று கைநீட்டி சுட்டிக்காட்டிக் கத்துவது போல் பிரமை ஏற்படவே அவள் வீட்டு வேலைகளில் கவனமே இன்றி, எஜமானி கூறியதை இயந்திரமாகச் செய்து கொண்டிருந்தாள்.

அன்று சாயங்காலம், சமையலறையில் இரவு விருந்திற்காக இந்திராணி அவசரமாகத் தயார் செய்து கொண்டிருந்தாள். விருந்திற்கு அழைக்கப்பட்டிருந்த பெண்மணிகளில் இருவர் முன்னதாகவே வந்து விட்டதினால் அவர்களுடன் வார்த்தையாடிக் கொண்டு பங்காரு அம்மாள் சமையலறையை ஒட்டிய தாழ்வாரத்தில் அமர்ந்திருந்தாள். அவர்கள் பேச்சின் இடையே, ஜெகதா என்ற பெயர் அடிபடுவதைக் கேட்ட இந்திராணி திடுக்கிட்டு ஜன்னல் அருகே வந்து உற்றுக் கேட்டாள்.

''போன வாரம் பட்டணத்திற்குப் போனபோது, ஊரில் இதே பேச்சாக இருந்தது. ஜெகதாவை உங்களுக்குத் தெரியாதா? லேடீஸ் கிளப்பிற்கு அடிக்கடி வருவாளே, ஞாபகம் இல்லையா? அவளுக்கு டவுனிலே மூணு வீடு. எக்ஸ்டென்ஷனில் பங்களா, கார், அப்படி இப்படி என்று இருந்ததே, இல்லையா?'' என்று விருந்தாளிகளில் ஒருத்தி பேசிமுடிக்குமுன், ''யாரு! சோமசுந்தரம் பெண்சாதி ஜெகதாவையா சொல்றே? ஆமாம், நான் பட்டணத்திலிருந்த போது அவளை எனக்கு நன்றாகத் தெரியுமே! அவளுக்கு என்ன?'' என்று கவலையுடன் விசாரித்தாள் பங்காரு அம்மாள்.

''அவளுக்கு என்னவா? நாலு வீடு, பங்களா, கார், சொத்து, சுகம் எல்லாம் போய்விட்டன. உங்களுக்கு சங்கதியே தெரியாதா? யாரோ தங்கை பெண்ணை ஊரிலிருந்து படிக்கக் கொண்டு வந்து வச்சு வளர்த்தாளாம். அதை நம்ப பாக்குத் தூள் பழனியப்ப கவுண்டர் மகனுக்குக் கட்டி வைக்கத் திட்டமாகியிருந்ததாம். பெரிய இடத்து சம்பந்தம் கிடைக்கப் போகிறதுன்னு வீடுகளை வித்து, தாட்பூட்னு செலவு செய்துவிட்டாள். அந்தப் பெண்ணுடைய அக்காவின் நடத்தை என்னவோ சரியில்லைன்னு, கல்யாணம் நின்று விட்டதாம். கல்யாணத்தை நம்பி, கண்டதை வாங்கி ஊர் முழுவதும்

ஜெகதாவுக்குக் கடனாகி விடவே, வீடு வாசல், நகைநட்டு, பங்களா எல்லாத்தையும் விற்க நேரிட்டு விட்டது. பாவம், முன்பின் வைரம் வாங்கியறியாதவள் ஏமாந்து போய், மட்டக் கல்லுக்கு ஏக விலை கொடுத்து அட்டிகையும், வளையல்களும் செய்திருந்தாளாம்'' என்று இழுத்துவிட்டு இருமினாள் விருந்தாளிப் பெண்மணி.

''அவளுக்கு உடம்புக்கு ஏதாவது வந்துவிட்டதா என்ன?'' என்று ஆவலுடன் பங்காரு அம்மாள் வினவினாள்.

''உடம்புக்கு வந்தா தேவலையே, பணம் போச்சுதேங்கிற திகிலிலே, அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. பாவம், யாரோ அவள் புருஷனுக்கு தூர உறவுக்காரப் பையன் வந்து, அவளைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே கொண்டு, சேர்த்துவிட்டுப் போயிருக்கானாம். கேட்க கஷ்டமாக இருக்கிறது'' என்றாள்.

ஜெகதா பெரியம்மாவைப் பற்றிய இந்தத் திடுக்கிடும் செய்தி, இந்திராணியை நிலை மறக்கச் செய்துவிடவே அவள் சரேலென சமையலறையினின்று வெளிப்பட்டு ''உண்மையாகவா அம்மா! ஜெகதா அவர்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? அவர்கள் ஆஸ்பத்திரியிலா இருக்கிறார்கள்?'' என்று துயரத்தில் கண்களில் நீர் பொங்க நாக்குழறக் கேட்டாள்.

விருந்துக்கு வந்த இரு பெண்மணிகளும் அவளை ஆச்சர்யத்துடன் வெறித்துப் பார்த்தனர். அவர்கள் மேலே கேட்குமுன், ''இவள் எனக்கு ஊழியம் செய்யும் பணிப்பெண்'' என்று இந்திராணியை அவர்களுக்கு அறிமுகம் செய்வித்தாள் பங்காரு அம்மாள்.

''உனக்கு ஜெகதாவைத் தெரியுமா?'' என்று வியப்புடன் அந்த ஸ்திரீ கேட்ட பொழுதுதான் இந்திராணி தான் கேட்டது தவறு என்பதை உணர்ந்து கொண்டாள். ''ஒரு காலத்தில் அவர்கள் வீட்டில் நான் வேலை பார்த்திருக்கிறேன். அதனால் கேட்டேன். மன்னிக்கவும்'' என்று குழறிவிட்டு, பதை பதைக்கும் நெஞ்சுடன் சமையலறையில் சென்று மறைந்து கொண்டாள்.

அன்று இரவு விருந்தினர்கள் சாப்பிட்டு விடைபெற்றுக் கொண்டு சென்றதும் பங்காரு அம்மாள் இந்திராணியைத் தன்

அறைக்குள் வரும்படி அழைத்தாள். ''ஏன் இந்திராணி காரிகுளத்து சதாசிவத்தின் மகள்தானே நீ?'' என்று எடுத்த எடுப்பிலேயே அம்மூதாட்டி கேட்ட கேள்வி, அவளைத் திடுக்கிடச் செய்தது. ''அயலூர் பண்ணையார் மகனைத் தாக்கிக் காயப்படுத்தியதற்கு தண்டனை அடைந்துள்ள ஆனந்தன் உன் அண்ணன்தானே?'' என்று பங்காரு அம்மாள் மேலே விடாது கேட்டதும் திகிலில் இந்திராணியின் நாக்கு வரண்டு போய்விட்டது.

''என் சிநேகிதி ஜெகதா உனக்கு பெரியம்மா முறை அல்லவா?'' என்று அந்த அம்மாள் கேட்டதும் இந்திராணியின் கண்களில் நீர் பெருகி வழியத் தொடங்கியது. இரு கைகளையும் கூப்பி நாத் தழுதழுக்க, ''அம்மா! மன்னியுங்கள். இன்று மாலை நான் உண்மையை ஒப்புக் கொள்ள முடியாது ஒரு பெரும் பொய்யைச் சொன்னேன். காரிகுளம் சதாசிவம் அவர்களின் பெண் இந்திராணி நான்தான். சிலநாட்களாக ஆனந்தன் வழக்கில் வீட்டை விட்டு ஓடிவிட்டதாக பத்திரிகைகளில் அடிபடும் அந்த அபாக்கியவதி இந்திராணி நான்தான் அம்மா! பெற்ற தாயிடம் கூறுவது போல் சொல்கிறேன். வீட்டை விட்டு ஓடினேன் என்ற பழிச்சொல் தவிர, நான் உண்மையிலேயே தவறு ஏதும் செய்யவில்லை. ஆதலால், என்னை வேலையினின்று நீக்கி விடாது காப்பாற்ற வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். உங்களைத் தவிர இதுசமயம் எனக்கு உலகில் உற்ற துணை யாரும் கிடையாது'' என்று உணர்ச்சி வசத்தில் பேசிய இந்திராணி விம்மியழத் தொடங்கினாள்.

அனைத்தையும் நிதானமாகக் கேட்டுக் கொண்டிருந்த பங்காரு அம்மாளின் தளர்ந்த விழிகளில் ஒரு புதிய பிரகாசம் உண்டாகியது. இதழ் கடையில் லேசானதொரு முறுவல் நெளிந்தது. ''உன்னைப் பற்றிய விவரம் ஏதும் நீ கூறாவிட்டாலும், நீ யார் என்பதை நான் பல நாட்களாக அறிவேன். அது கிடக்கட்டும். இன்று தினம் கடைசியாக ஒரு விருந்தாளி சற்றுத்தாமதமாகச்சாப்பிட வந்திருக்கிறார். இரவு ஒரு சமயம் இங்கே தங்கினாலும் தங்குவார். ஆதலின் அவருக்காக மாடி அறையைச் சுத்தம் செய்ய வேலையாளுக்கு உத்தரவிட்டிருக்கிறேன். நீ சாப்பிடு முன் ஒரு தட்டில் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு மாடியறையில் வைத்துவிட்டு வா!'' என்று கூறிவிட்டு எழுந்த பங்காரு அம்மாள் இந்திராணி அருகில் வந்து, ''குழந்தாய், அழாதே!

தவறு செய்துவிட்டு பச்சாதாபமடைகிறவர்களை பகவான் மன்னித்து விடுகிறார். அப்படியிருக்கையில், மனிதர்கள் அவர்களை மன்னிக்க வேண்டியது முறை அல்லவா? ஆதலால் நானும் உன்னை மன்னித்து விட்டேன். போ, நான் சொன்ன காரியத்தைச் செய்துவிட்டு சீக்கிரம், தூங்கச் செல்'' என்றாள் மிகவும் அன்புடன்.

பங்காரு அம்மாளின் கனிவு மொழி இந்திராணியின் உள்ளத்தைத் தொட்டது. நன்றி பெருக்குடன் அவளை நிமிர்ந்து பார்த்துவிட்டு, 'சரி' என்பதற்கு அடையாளமாக அவள் தலையை அசைத்தாள். அவள் அறையை விட்டுப் போகுமுன், ''குழந்தாய், ஒரு வார்த்தை, பச்சாதாபத்தில் துடிக்கும் நீ பிறருடைய மன்னிப்பைப் பெரிதும் வேண்டுகிறாய் அல்லவா? அதுபோல், உனக்குத் தீங்கிழைத்த மனிதர்கள் யாராயிருந்தாலும் பச்சாதாபம் அடைந்து, தன் தவறை உணர்ந்து உன்னிடம் மன்னிப்புக் கோரினால், மன்னிக்க உன் உள்ளத்தில் பெருந்தன்மை ஏற்பட வேண்டும். தவறு செய்வது மனித இயற்கை. ஆனால், மன்னிக்கும் குணம் தெய்வத் தன்மையுடையது. மன்னிப்பில் இகழ்ச்சியோ, அவமானமோ இல்லை'' என்றாள்.

பங்காரு அம்மாளின் வார்த்தைகள் வியப்பையும் ஆனந்தத்தையும் உண்டாக்கவே இந்திராணி மௌனமாக ஒரு புன்முறுவல் செய்துவிட்டு, தனக்கு இட்ட பணியைச் செய்ய சமையலறைக்குச் சென்றாள்.

இவ்வளவு நாட்களாக அவள் உள்ளத்திலே அழுந்தியிருந்த பயமெனும் பாரம் நீங்கிவிடவே, அவள் மனம் சாந்தியடைந்தது. அழுது சிவந்திருந்த தன் முகத்தைக் கழுவிக் கொண்டு, கூந்தலைச் சரிப்படுத்திக் கொண்டு அவசரமாக ஒரு பெரிய வெள்ளித் தட்டில் உணவு வகைகளை எடுத்து நிரப்பிக் கொண்டாள். ஒரு கையில் தட்டும், மற்றொரு கையில் ஜலம் நிறைந்த கூஜாவும் எடுத்துக் கொண்டு, மாடியறைக்குள் சென்றாள். அங்கு ஜன்னலை நோக்கியபடி நின்று கொண்டிருந்த மனிதன் காலடி ஓசை கேட்டுத் திரும்பினான். ''நீங்களா'' என்று ஈனக்குரலில் வியப்புடன் கேட்ட இந்திராணி பேயால் அறையப்பட்டவள் போல், கிலியுடன் வேகமாகப் பாய்ந்து வெளியே ஓடலுற்றாள்.

''இந்திராணி நில்! தயவு செய்து நான் சொல்வதைக் கேள்'' என்று

கூவிக்கொண்டு சோமசேகர் பின்னால் தொடர்ந்து வருமுன், தன் சூழ்நிலையை மறந்து வேகமாகக் கீழே இறங்கி ஓடிய இந்திராணி, மாடிப் படிகளில் கால் இடறிக் கீழே விழுந்து மூர்ச்சித்துப் போனாள். அவள் கையிலிருந்த பாத்திரங்கள் பெரும் சப்தத்துடன் படிகளில் உருண்டன.

47

சில மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள், அந்திப் பொழுது நகரத்திலிருந்த பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்துவிட்டு கௌரியம்மாளும் அருணாவும் காரில் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். ஜெகதா புத்தி ஸ்வாதீனமின்றி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறாள் எனக் கேள்விப்பட்ட அருணா, அன்றுதான் முதல் முதலாகத் தன் பெரியம்மாவை நேரில் சென்று காண முடிந்தது. துஷ்டத்தனம் செய்யாத சாதாரண உன்மத்தமாக இருந்ததனால், ஜெகதாவை ஜுர நோயாளியைப் போல் சாதாரண வார்டிலே அனுமதித்திருந்தார்கள். பணம் போயிற்றே என்ற ஏக்கத்திலே மூளை கலங்கிவிட்டிருந்த ஜெகதா, ஆஸ்பத்திரியில் தங்கியிருந்த சில தினங்களிலேயே, இளைத்து துரும்பாகி விட்டிருந்தாள். மேலும் கொஞ்ச நஞ்சமிருந்த சொத்தைக் கட்டி ஆள வந்த தயாதிக்காரர்கள் ஆஸ்பத்திரியில் அவளை அனுமதித்ததும், கொஞ்சமும் சிரத்தை எடுத்துக் கொள்ளாது அசட்டையாக இருந்து விட்டார்கள். பைத்தியக்கார விடுதியின் பணியாளர் கருணை கொண்டு அப்போதைக்கு அப்போது போட்ட உணவை உண்டு, தன் நினைவு இன்றி, ஜெகதா தனி உலகில் வாழ்ந்து கொண்டிருந்த அக்காட்சியைக் காண மிகவும் பரிதாபகரமாக இருந்தது.

அலங்கிய கூந்தலும், ஆஸ்பத்திரி உடையுமாக, மிகவும் நலிந்த தோற்றத்திலே திருதிருவென விழித்தபடி கட்டிலில் அமர்ந்திருந்த அந்த நோயாளியைக் கண்டதும் அருணாவுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. பல வருஷங்கள் பழகிவிட்ட பாசம் குபீரென நெஞ்சில் குமுறியெழவே, அவள் அருகில் வந்து ஜெகதாவின்

கரங்களைத் தன் கையில் எடுத்துக் கொண்டு, ''பெரியம்மா! நான்தான் அருணா! என்னைப் பாருங்கள், உங்களை வீட்டிற்கு கூட்டிப்போக வந்திருக்கிறேன்'' என்றாள் துக்கத்தினால் தடைப்பட்ட மெல்லிய குரலில்.

கண்ணீர் வழிய தன்னை இரக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்த அருணாவையோ, இடுப்பில் கையை வைத்துக்கொண்டு ஆச்சர்யமும் பரிதாபமும் கலந்த பார்வையில் விறைத்து நோக்கிய வண்ணம் நின்ற கௌரியம்மாளையோ அவளுக்குப் புரியவில்லை. தன்னைச் சுற்றிலும் மிரள மிரள விழித்துவிட்டு, தனக்குள் மெல்லச் சிரித்துக் கொண்டாள். பிறகு திடீரென்று கௌரியம்மாள் பக்கம் திரும்பி, ''ஏனம்மா, உனக்குத் தெரியுமா? என் வீடுகள், நகை நட்டுகள் எல்லாம் கடனுக்குப் போயிடுச்சு, எல்லாப் பாவிகளும் என்னை மோசம் செய்துட்டாங்க. ஒரு ரூபாயா இரண்டு ரூபாயா, ஐம்பதாயிரம் ரூபாய் போச்சு அம்மா, போயிடுச்சு. ஐயோ நான் என்ன செய்வேன்!'' என்று வேகமாகத் தானே பேசிவிட்டு, கரங்களால் முகத்தை மூடிக் கொண்டு 'ஹோ'வென்று அழத் தொடங்கினாள்.

அதைக் கண்டு அருணா தாளமுடியாது, அவளை அணைத்துக் கொண்டு, ''பெரியம்மா! போகட்டும். விட்டுடுங்க, இங்கே பாருங்க. நான் அருணா, உங்களை வீட்டுக்குக் கூட்டிப்போக வந்திருக்கேன்'' என்று துயரத்துடன் குழைவாகச் சொன்னாள். ''ஐயோ என் பணம்! என் பணம்! என் பணம்'' என்ற ஜெகதா, அருணாவின் பிடியிலிருந்து திமிறிக் கொண்டு கூக்குரலிடுவதைக் கண்டதும், வார்டிலிருந்த இரண்டு தாதிப் பெண்கள், சமாதானப்படுத்த ஓடி வந்தனர். அருணாவின் தோள் மீது கையை வைத்த கௌரியம்மாள் மெல்ல அழுத்தி, ''உம் கிளம்பு!'' என்று கண்களால் ஜாடை செய்தாள்.

பெற்ற தாய் என்ற உறவு இல்லாவிடினும், சில வருஷங்கள் தங்க இடமும் சாப்பிடச் சோறும், வாழ்வு நலம் பெறக் கல்வியும் கொடுத்து, பல வழிகளிலும் சௌகர்யங்கள் தேடிக் கொடுத்த பெரியம்மா ஜெகதாவின் பரிதாபகரமான நிலை அருணாவின் உள்ளத்தை உருக்கிவிட்டது. தள்ளாத வயதில் கைப்பொருளை இழந்து சித்தமும் கலங்கி நிராதரவாய் நிற்கும் பெரியம்மாவை எப்பாடு பட்டாவது தான் காப்பாற்ற வேண்டியது கடமை என்று அவள் அது சமயம் உணர்ந்தாள். கௌரியம்மாளின் ஆதரவிலே

வாழ்ந்து கொண்டிருக்கும் வறிய நிலையில், தனக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பெரிய கடமையை எண்ணிய மாத்திரம், நிராசையினால் அவள் இதயம் வெடித்தது.

''இங்கே அதிக நேரம் நிற்பதில் பயன் இல்லை. இங்குள்ளவர்கள் பெரியம்மாவை நன்றாகக் கவனித்துக் கொள்வார்கள். நாமும் அடிக்கடி வந்து பார்த்துக் கொண்டிருப்போம். கண்களைத் துடைத்துக் கொண்டு கிளம்பு. போகலாம்'' என்று கௌரியம்மாள் காதோடு சொன்னாள்.

நெற்றி மீது புரண்டு கொண்டிருந்த ஜெகதாவின் நரைத்த கூந்தலைத் தனது கரங்களால் அன்புடன் ஒதுக்கிவிட்டு, அருணா தன் முந்தானையால் அவளது கன்னங்களில் வழிந்திருந்த கண்ணீரைத் துடைத்தாள். ''பெரியம்மா, அழாதீங்க! உங்க பணம் எல்லாம் வந்துடும். பயப்பட வேண்டாம்'' என்று குழந்தைக்குச் சமாதானம் கூறும் தோரணையில் ஆறுதல் சொல்லிவிட்டு, பிரிய மனம் இன்றி அவ்விடத்தினின்று புறப்பட்டு வாயிலில் நின்ற கௌரியம்மாளின் காரில் ஏறிக் கொண்டாள். அதற்கு மேல் சகிக்க முடியாதவளாக, அவள் காரின் ஆசனத்தில் சாய்ந்து கொண்டு சிறு குழந்தையைப் போல் விக்கி அழத் தொடங்கினாள்.

வெகு நேரம் மௌனமாகக் காரை ஓட்டிக் கொண்டிருந்த கௌரியம்மாள், தனது பொறுமையை இழந்தவளாக முடிவில் அருணா பக்கம் திரும்பி அதட்டும் குரலில் பேசினாள். ''கஷ்டங்கள் அனைத்தும் உனக்கு இன்னும் மன உறுதியை உண்டாக்கவில்லை. அதைக் காண ஆச்சர்யமாக இருக்கிறது. வாழ்விலே ஏற்படும் துன்பங்கள் ஒவ்வொன்றும் மன உறுதியை மேலும் மேலுமல்லவா பலப்படுத்த வேண்டும்? மனம் கடினமாக, எதற்கும் சட்டென்று தடுமாறாது இரும்பாகிவிட வேண்டாமா?

'அருணா, நீ இப்படிச் சபல சித்தமுள்ளவளாக இருந்தால் விரைவில் நீயும் உன் பெரியம்மா கதியைத்தான் அடைவாய். கோபித்துக் கொள்ளாதே. மன உறுதி இல்லாத கோழைகள்தான் தாளமுடியாத துயரமோ, கஷ்டமோ ஏற்படும்பொழுது தமது சித்தத்தைக் கலக்கிக் கொண்டு விடுகிறார்கள். உன் பெரியம்மா புத்தி

தடுமாறிப் போனதைக் கண்டு நான் வியப்படையவில்லை. பதட்டமும், ஆத்திரமும், சஞ்சலமும் சுபாவத்தில் அதிகம் கொண்ட கோழைப் பெண்மணி அவள். பணம்போன அதிர்ச்சி மூளையைக் கலக்கிவிட்டது. ஆனால் நீயும் இப்படி உன் பெரியம்மாபோல் சஞ்சலத்திற்கு இடமளித்து மன உறுதி குறைவதைக் காண எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. எதற்காக அழ வேண்டும்? நீ அழுவதனால் உன் பெரியம்மா குணமடைந்து விடப் போகிறாளா?'' என்று கேட்டாள்.

பதில் அளிக்காது அருணா கண்ணீருடன் திணறுவதைக் கண்ட கௌரியம்மாள் இரக்க வசப்பட்டுத் தன் அதட்டல் தோரணையைத் தணித்துக் கொண்டாள். ''அருணா! உன் பெரியம்மாவின் உடல் நிலையைப் பற்றி எனக்குத் தெரிந்த சிநேகிதி ஒருத்திக்கு முன்பே கடிதம் எழுதிப் போட்டிருந்தேன். அவள் நேற்று எனக்குப் பதில் எழுதியிருந்தாள். உன் பெரியம்மாவை நேரில் கண்ட பின்பு நிலைமையைத் தெரிந்து கொண்டு, அவளுக்குத் தக்க சிகிச்சை செய்விக்கலாம் என்பது என் நோக்கம்.

''செம்பங்கி தேவியார் கோயில் என்பதைப்பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாயே! அங்கே ஸாது ஒருவர் வசிக்கிறாராம். செம்பங்கி தேவியார் கோவிலில் ஒரு மண்டலம் தங்கி, அவர் மந்திரித்துக் கொடுக்கும் ரக்ஷையை வாங்கி அணிவித்தால் எப்பேர்ப்பட்ட மூர்க்கமான உன்மத்தங்களும் நீங்கி விடுகின்றனவாம். எனக்குப் பொதுவாக மந்திரம், தந்திரம் இவைகளில் நம்பிக்கை கிடையாது. ஆனால், ஆஸ்பத்திரி வைத்தியத்தில் குணமாகாவிடில், தெய்வ சக்தியைக் கோரி அங்கே செல்வது தவறில்லை என்று நம்புகிறேன். என் சிநேகிதி அந்த ஸாதுவின் மகிமையை வாயாரப் புகழ்ந்து எழுதியிருக்கிறாள். உன் பெரியம்மா சில மாதம் இங்கே இருக்கட்டும். குணமாகாவிடில் நாம் செம்பங்கி தேவியார் கோவிலுக்கு அனுப்பி வைப்போம்'' என்றாள்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அருணா ஆச்சர்யத்துடன் அவளைப் பார்த்தாள்.

''அதற்குப் பணத்திற்கு எங்கே போவது என்றுதானே யோசிக்கிறாய்? உன்னுடைய வீட்டில் வீடு அடமானமானது போக, சில பாத்திரங்கள், சாமான்கள் முதலியன இருக்கின்றன அல்லவா?

அவைகளில் மூன்றில் ஒரு பகுதி உனக்குச் சொந்தம் அல்லவா? அப்பகுதியை எனக்கு விற்று விடு. நான் அளிக்கும் அப்பணத்தைக் கொண்டு உன் பெரியம்மாவுக்கு உதவி செய். உன் கடமையைச் செய்த திருப்தி உனக்கு ஏற்பட்டு விடும். சரிதானே?'' என்று புன்முறுவலித்த கௌரியம்மாள், ''தயவு செய்து இறங்கி என்னுடன் வா. இந்தக் கடையில் நமது சமையற்காரிக்குத் தேவையான புடவை கிடைக்குமா என்று பார்க்க வேண்டும்'' என்றாள்.

நகரத்தின் பிரபலமான தெரு ஒன்றிலிருந்த அந்தத் துணிக்கடையின் முன்னால் கௌரியம்மாள் தன் காரை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தாள். அருணாவும் பின் தொடர்ந்தாள். வீணாகப் பொழுதைக் கழிக்க விரும்பாது விடுவிடுவென சாதாரண நூல் சேலைகள் வைத்திருக்கும் பீரோ அருகில் சென்று தனக்குத் தேவையான ரகத்தில் ஒரு சேலையைப் பொறுக்கி எடுத்துத் தனது வியாபாரத்தை முடித்துக்கொண்டு, அருணாவுடன் கடையைவிட்டு வெளிப்பட்டாள் கௌரியம்மாள்.

அது சமயம், கடையின் முன்பு புத்தம் புதியதொரு பெரிய கார் ஓசையின்றி வந்து நின்றது. அதனின்று இறங்கிய இளம் பெண், தன் முதுகு மட்டும் தெரியத் திரும்பிக்கொண்டு, காரின் ஆசனத்தில் குனிந்து ஏதோ தேடிக் கொண்டிருந்தாள். அந்த சில நிமிஷங்கள் அருணா அவளது பின் அழகை வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டாள்.

கருண்டு, அலைகள்போல் நெளிந்த கூந்தலின் நடுவே, பின் தலையில் வைத்துப் பின்னப்பட்டிருந்த வைர ராக்கொடிமீது கடை வாயிலினின்று எழுந்த மின்சார விளக்கொளி பட்டபோதெல்லாம் தகதகவென்று மின்னிக் கொண்டிருந்தது. கருநாகம்போல ஜடையின் அலங்காரம் அவளது அழகுக்கு அழகு செய்தவண்ணம் இருந்தது. மருதாணியில் சிவந்த தனது வெண்ணிற விரல்களை நீட்டி, காரின் கதவைத் தள்ளினாள் அந்தப் பெண். அவள் கையில் அணிந்திருந்த வைர வளையல்களிலிருந்து வீசிய வர்ண ஜாலத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டு தன்னை மறந்து நின்ற அருணா, அந்தப் பெண்ணின் முகம், மறுபக்கம் திரும்பியதும் திடுக்கிட்டுப் போனாள்.

கர்ப்பிணிபோல் தென்பட்ட கவுண்டர் செல்வ மகள் நளினி, தன் கணவர் வீட்டு உறவுப் பெண் ஒருத்தியுடன் கடைக்கு ஏதோ வாங்க வந்திருந்தாள். கழுத்தை வளைத்துக்கொண்டு, உடலை நெளித்தபடி சிரமப்பட்டு மூச்சு வாங்க, கடை வாயிற்படிகளின் மீது ஏறிய அவள் ஒரு கணம் நேருக்கு நேர் அருணாவைச் சந்திக்க நேர்ந்தது. அந்தக் கொஞ்ச நேரத்தில் நெஞ்சத்தில் குமுறியெழுந்த உணர்ச்சிக் கொந்தளிப்பில், அருணாவுக்கு நெஞ்சமே வெடித்துவிடும் போலிருந்தது.

'நளினி பேசினால் என்ன பேசுவது?... பேசுவாளா?' என்று பலவும் விரைவில் சிந்தித்த அருணா, நெஞ்சு பதற, ஆவலுடன் அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அதே சமயம் அருணாவைக் கவனித்த நளினியின் முகம் திடீரென்று சோபை இழந்து வெளிறடைந்து போயிற்று. ஏதோ சொல்ல வந்தவள், ஏற்பட்ட திகைப்பில் வார்த்தை தடுமாறச் சட்டென நின்று விட்டாள். ஆனால் அடுத்த நிமிஷம் சாமர்த்தியமாக அவள் தன் நிலையை சமாளித்துக்கொண்டு அருணாவை முன்பின் அறியாதவள்போல், கடுமையாகத் தன் முகபாவத்தை மாற்றிக் கொண்டு கடைக்குள் விர்ரென்று சென்று புகுந்து கொண்டு விட்டாள்.

அவமானமும் துயரமும் ஒருங்கே எய்திய அருணாவுக்குத் தன் உடல் திடீரென்று ஒரு சாணாகக் குறுகிவிட்டது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது. கனவில் செல்கிறவள் போல் கௌரியம்மாளைத் தொடர்ந்து வண்டியில் ஏறிக் கொண்டாள். கொஞ்ச தூரம் வண்டியைப் பேசாது செலுத்திய கௌரியம்மாள் அருணாவின் பக்கம் திரும்பி, ''பார்த்தாயா உன் மாஜி சிநேகிதியை! கல்யாணம் நின்று போனதென்றால், பல வருஷங்களாக ஏற்பட்ட நட்பும் தடைபட்டுப் போக வேண்டுமா? 'சௌக்கியமா, அருணா?' என்று கேட்டால் அவள் வாயினின்று முத்துக்கள் உதிர்ந்து விடுமா? பார்த்துக்கொள்! வாழ்வில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுக்குத் தக்கபடி உஷ்ணமானிபோல், பொங்கியும் மங்கியும் நட்புக் கொள்ளும் இந்த பண்பற்ற பிறவிகளின் பொருட்டு ஒரு காலத்தில் நீ எவ்வளவு கண்ணீர் வடித்திருக்கிறாய்? இந்த ஒட்டெட்டாம் புல்லுகளுக்காக நீ உருகியது எவ்வளவு தவறு என்று தெரிந்துகொள்!'' என்றாள்.

தொடர்ந்து ''அருணா, நளினியிடம் நீ கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு முக்கிய விஷயத்தை இன்று உன் கண்களால் கண்டாய். நளினியும் உன் போல், தன் மனத்தைத் தனக்கு வரப்போவதாக நிச்சயித்த ஒரு வாலிபனிடம் பறிகொடுத்தாள். கல்யாணம் நடக்காது நின்று போனதும் நளினி உடனே தற்கொலை செய்து கொண்டு விட்டாளா? அல்லது அவள் வாழ்வு அத்துடன் சூன்யமாகிவிட்டதா? ஜம்ஜம்மென்று அதே முகூர்த்தத்திலே அந்தஸ்திலும் அழகிலும் சற்றும் குறையாத வேறு ஒரு மணாளனுக்கு மாலையிடத் தன் கழுத்தை நீட்டிவிட்டாள். இன்று இல்லற இன்பத்திலே தாய்மை பெற்றுவிட்ட பெருமையை உலகிற்கு அறிவிப்பதுபோல் ஆடம்பரமாக வெளியே உலாவுகிறாள். சோமசேகரை மணக்காது தவறிவிட்ட நளினி இன்று ஆனந்தமாக இருக்கவில்லையா? அவள் செத்தா போய்விட்டாள்?'' என்று உரத்த குரலில் அதட்டிப் பேசினாள்.

அருணாவிற்கு ஏற்பட்ட துயரம் அவளது வார்த்தைகளைக் கேட்டதும் சற்று ஆறுதல் அடைந்தது. ''ஆமாம். நீங்கள் கூறுவது வாஸ்தவம். நளினி இருதயம் உடைந்து இறந்துவிடவில்லை. சந்தோஷமாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறாள்'' என்று பெருமூச்செறிந்தாள் அருணா.

''கொஞ்ச நாள் சென்றதும் நீயும் நளினியைப் போல் வேறு ஒருவனை மணந்து கொண்டு சந்தோஷமாகத்தான் வாழப்போகிறாய். இந்த உலகில் யாருக்காகவாவது, வேறு ஒருத்தர் உயிரை மாய்த்துக்கொள்ள முடிவதில்லை. காலம் மனப் புண்ணை விரைவில் குணப்படுத்திவிடும். இன்று பிரமாதமாகக் காணும் விஷயங்கள், நாளை அவ்வளவு அதிசயமாகத் தோன்றாது. அதற்கு மறுநாள் மறந்தேபோய்விடும். இது உலக நியதி. நீ மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்க மாட்டாய். ஆகவே என் அருமை அருணா கவலையை விடு!'' என்றாள் கௌரியம்மாள். இதற்குள் வண்டி வீட்டை அடைந்து விடவே, இருவரும் இறங்கி உள்ளே சென்றனர்.

மேஜைமீது வேலைக்காரப் பெண் கொண்டு வைத்த கடிதங்களை ஆராய்ந்த கௌரியம்மாள், ஒரு கடிதத்தை எடுத்து, ''அருணா, உனக்கு இந்தக் கடிதம் வந்திருக்கிறது. கிராமத்திலிருந்து வந்ததுபோல் காண்கிறது. படித்துப்பார்'' என்று கொடுத்தாள்.

ஆவலுடன் அக்கடிதத்தை வாங்கி அருணா பிரித்தாள். சாரிகுளத்திலிருந்து சிதம்பரம் அவளுக்கு எழுதியிருந்தான்.

''அன்புள்ள அருணா,

நீ தொடர்ந்து கலாசாலையில் சேர்ந்து படிப்பது அறிய மகிழ்ச்சி. உனது அரை வருஷப் பரிட்சை முடிந்ததும் விடுமுறை சமயம் நீ இங்கே வந்து போவது அவசியம் என வற்புறுத்த விரும்புகிறேன். தை மாதத் தொடக்கத்திலே, மூன்றாம் தேதி வாக்கில் ஆனந்தன் விடுதலையடைந்து வீட்டிற்கு வரக் கூடும் என்று அறிகிறேன். அது சமயம், நீ அருகிலிருந்து அவனை வரவேற்றால் அவனுக்கு மிகவும் ஆறுதலாக இருக்கும் அல்லவா?

உனது அண்ணன் ஆனந்தனைப்பற்றி நீ நன்கு அறிவாய். சுபாவத்தில் மென்மையான தன்மை படைத்த அவன் மனம், கடந்து போன பல சம்பவங்களினால் மிகவும் அதிர்ச்சி பெற்றிருக்கும். விடுதலை அடைந்த பின்பு ஊருக்கு வரவும், வீட்டில் திரும்ப வசிக்கவும் அவன் நாணி வெறுப்படையலாம். அவன் மனம் சோரவொட்டாது தடுத்து உற்சாகமூட்டி அவனது வாழ்வைத் திரும்பப் பொலிவுற வைக்க வேண்டியது நண்பன் என்ற முறையில் என் கடமை என நான் எண்ணுகிறேன். சகோதரி என்ற உறவில் நீயும் அவ்வாறேதான் எண்ணுவாய். ஆகவே தயவு செய்து விடுமுறையின்போது சுணங்காமல் நீ உனது உற்ற துணையான கௌரியம்மாள் அவர்களுடன் கிராமத்திற்கு வரவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். உனது ஒன்றுவிட்ட பாட்டியார் பெரியநாயகி என்பவரை ஞாபகம் இருக்கிறதா! அவர்கள் சமீபத்தில் ஒரு மாதத்திற்கு முன்பு தமது கிராமத்திலே காலமாகி விட்டாராம். அவர் மரணமடையு முன்பு தமது கையிலிருந்த இரண்டாயிரம் ரூபாய்களை, கிராமதபால் ஆபீஸ் சேமிப்பு நிதியில் போட்டு, அப்பணம் தமக்குப் பின் உன்னைச் சேர வேண்டுமென்று ஒரு உயில் எழுதி, தக்க சாட்சியங்கள் கையொப்பமிட அதை கிராம முனிசீப்பு ஐயாவிடம் பத்திரப்படுத்திவிட்டுப் போயிருக்கிறார்கள். இந்த சங்கதியை

உன்னைத் தேடிக்கொண்டு நேற்று இங்கு வந்த முன்சிப்பு ஐயாவின் ஆள் ஒருவர் கூறினார். உன்னை நேரில் அழைத்துக் கொண்டு அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ள வருவதாக நான் அவருக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டிருக்கிறேன். உன் பரிட்சை முடிந்ததும் நீ இங்கே வருவது பல காரியங்களைப் பொறுத்து மிகவும் நலமாகும்.

''சிதம்பரம்''

கடிதத்தைப் படித்து முடித்ததும் கௌரியம்மாளிடம் கொடுத்த அருணா, 'அம்மா! நான் என் வாழ்வில் யாருக்கெல்லாமோ கடமைப்பட்டிருக்கிறேன். பிரதிபலனே எதிர்பாராது அன்பை வருஷித்த என் பாட்டியார் பெரியநாயகி, தங்க இடமும் கல்வியும் அளித்த பெரியம்மா, துயர மேலிட்ட சமயம் தக்க ஆறுதல் மொழிகள் கூறி இடம் அளித்து உதவி செய்யும் தாங்கள், அண்டை வீட்டுக்காரர் என்ற முறையில் விரோதம் பாராட்டுவதற்கு எதிராக அதீதமான அன்பு காட்டி, உண்மையாக நட்புப் பாராட்டி உதவும் சிதம்பரம், இன்னும் தெரிந்தும் தெரியாமலும் பலர். இவ்வளவு பேருக்கும் நான் உயிருடன் உள்ளவரை நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த கடமை எனக்கு மிகவும் பாரமாகவல்லவா தென்படுகிறது...'' என்று உணர்ச்சியுடன் கூறினாள்.

''நமக்கு உதவி செய்யும் ஒவ்வொருவருக்கும் நாம் திரும்ப உதவி செய்தால்தான் கடமையாற்றினோம் என்று அர்த்தம் அல்ல. சில சமயம் நமது பிரதி உதவியை நாடாமலே அந்த ஆத்மாக்கள் இவ்வுலகை விட்டுப்போய் விடலாம். ஆனால் நாம் நமது வாழ்வில், நம்மால் முடிந்த உதவியைப் பிறருக்குச் செய்ய முயற்சித்தால் அதுவே போதும். உன் பாட்டியார் பெரியநாயகிக்குப் பிரதி உதவி செய்யக்கூடவில்லை என்று தற்சமயம் வருந்தாதே. வயோதிகத்தினால் தள்ளாடி, நோயினால் வேதனைப்படும் ஒவ்வொரு மூதாட்டியையும் நீ உன் பாட்டியார் பெரியநாயகி என எண்ணி, பிற்காலத்தில் நீ டாக்டராகும்போது பணிவிடை செய்துவிடு. உன் கடமை தீர்ந்துவிடும். கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார்'' என்றாள் கௌரியம்மாள்.

திடுக்கிட்டு ஆச்சர்யத்துடன் அருணா தன்னைப் பார்த்து விழிப்பதைக் கண்ட அவள் லேசாகச் சிரித்தாள். ''எனது ஆடை, எனது தோற்றம், எனது வெளிப்புற நடத்தை இவைகளைக் கண்டு நீ எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லையென்று ஒரு சமயம் இதுகாறும் தவறாக எண்ணிக் கொண்டிருக்கலாம். அதனால் இவ்வாறு ஆச்சரியப்படுகிறாய். பேச்சுக்குப் பேச்சு கடவுளை இழுத்து எனது பக்தியை நான் பறைசாற்றிக் கொள்வதில்லை. அதைத் தவிர சுபாவத்திலோ நம்பிக்கையிலோ, பழக்க வழக்கத்திலோ நான் எல்லோரையும் போன்ற ஒரு சாதாரணப் பெண்மணிதான். வெளித்தோற்றத்தில் எப்படியிருந்தாலும்' உள்ளத்திலே நான் உன்னையும், மற்ற எல்லோரையும் போல ஒரு சாதாரணப் பெண்மணியாகத்தான் வாழ விரும்புகிறேன்'' என்று கூறிவிட்டுப் புன்னகை செய்தாள்.

அன்று இரவு போஜனம் செய்த பின்பு, பத்திரிகை படித்துக் கொண்டிருந்த கௌரியம்மாள், ''அருணா! இங்கே வா. இதைப் படித்துப் பார்!'' என்று பரபரப்புடன் கூவியழைத்தாள். பாட புத்தகத்தை ஊன்றிப் படித்துக் கொண்டிருந்த அருணா அதைக் கேட்டு, ஆச்சரியத்துடன் எழுந்து ஓடிவந்தாள்.

''மாலை ஐந்தரை மணிக்கு, நகரசபை விளையாட்டு மைதானத்திற்கு எதிரே இரண்டு மோட்டார்கள் மோதி கோரவிபத்து ஏற்பட்டது. ஒன்று பாக்குத்தூள் பழனியப்பக் கவுண்டர் கார்; மற்றொன்று பிரபல வைர வியாபாரி கோஷிதாஸ் அவர்களுடைய வண்டி. காரை ஓட்டி வந்த சுரேஷ்குமாரன் என்பவர், சிறு காயங்களுடன் தப்பினார். ஆனால், வண்டியில் முன் ஆசனத்திலிருந்த அவரது மனைவி ஸ்தலத்திலேயே மரணமடைந்துவிட்டாள். கோஷிதாஸ் வண்டியை ஓட்டிய டிரைவர் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்'' என்ற செய்தியைப் படித்தாள்.

பத்திரிகையைத் திகிலுடன் கீழே நழுவவிட்ட அருணாவின் இருதயம், விவரிக்க இயலாத உணர்ச்சிக் கொந்தளிப்பில் படபடவென்று அடித்துக் கொண்டது.

48

அன்று தினம் அருணா கிராமத்திற்குப் புறப்படுவதாக ஏற்பாடாகியிருந்ததனால், பிரயாணத்திற்கு வேண்டியவைகளைச் சித்தப்படுத்திக் கொண்டிருந்தாள். ஆபீஸிலிருந்து கட்டுக் காகிதங்களுடன் வீட்டிற்கு வந்த கௌரியம்மாள், 'மன்னித்துக்கொள் அருணா! எப்படியும் குறித்த நேரத்திலே வண்டியைப் பிடித்துவிடலாம் என்ற நம்பிக்கை. எதிர்பாராவிதமாக நான் இன்று ஒரு இடத்திற்குப் போக வேண்டியிருந்தது. அங்கே கொஞ்சம் கால தாமதம் ஆயிற்று'' என்று பரபரப்புடன் பேசினாள். அவள் முகத்திலே மலர்ச்சி நிறைந்திருப்பதைக் கண்டு அருணா அதிசயித்தாள். எனினும், தனது ஆவலை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

அவசரமாக முகத்தைக் கழுவி, தலையைச் சீவிச் சீர்படுத்திக் கொண்டு வெளியே போக ஆயத்தம் செய்யத் தொடங்கிய கௌரியம்மாள் தானாகவே பேசலுற்றாள். ''உனக்குத் தெரியுமா, அருணா! அந்த மனோன்மணி இருக்கிறாளே, அவளை இன்று நான் 'சேவிகா மந்த'ரில் சந்தித்தேன். 'சேவிகாமந்திரி'ன் தலைவி நமது பத்திரிகை சம்பந்தமாக என்னைக் காண வேண்டி அழைத்திருந்தாள். அவர்களிடம் பேசிவிட்டு வெளியேறும்போது, அங்கிருந்த சில உபாத்தியாயினிகளைச் சந்திக்க நேர்ந்தது. அவர்களிடையே நின்று கொண்டிருந்த மனோன்மணியைக் கண்டதும் நான் திடுக்கிட்டே போய்விட்டேன். என்னுடைய அதிர்ச்சிக்கு காரணங்கள் இரண்டு ஆகும். 'சேவிகாமந்த'ரில், உலகப் பற்று நிறைந்த மனோன்மணிக்கு என்ன வேலை என்ற புதிர் ஒன்று, மற்றொன்று அவளுடைய தோற்றம்.

உண்மையிலேயே நீ இன்று அவளைக் கண்டால் அடையாளமே காணமுடியாது. அஜந்தா கொண்டையும், நகக் குழம்பும், உதட்டுச் சாயமும், மைசூர் ஜார்ஜெட்டுமாக நாகரிகமே உருவெடுத்து வந்தாற்போலிருந்த அந்த பழைய மனோன்மணியா இவள் என்று நான் திகைத்துப் போய்க் கண்களை அகலவிரித்து அதிசயத்துடன்

உற்றுப் பார்த்தேன்.வெள்ளைப் புடவையும் விபூதியுமாக சைவப் பழமாகக் காட்சியளித்தாள் அவள். என்னை அறிந்தவள் போல் காட்டிக் கொள்ளவில்லை. நானும் அவளை அறிந்தவள் போல் நடந்துகொள்ளவில்லை. வெளியே வருமுன் அங்கிருந்த ஆசிரியைகளில் ஒருத்தி என்னுடன் பேசிக் கொண்டு வாயில்வரை வந்து வழிவிட்டாள்.

அவள் பேசியதிலிருந்து நான் மனோன்மணியைப் பற்றி விவரம் அறிந்து கொண்டேன். சேவை மனப்பான்மையும், தமிழ் மொழிப்பற்றும், தெய்வ சிந்தனையும் உள்ள மனோன்மணி, தானாகவே ஆசிரமத்திற்கு வந்து ஆசிரியை பதவியேற்றுத் தொண்டு செய்ய விரும்புவதாகத் தலைவியிடம் கூறினாளாம். பழனியப்பக் கவுண்டரைப் போன்ற செல்வாக்குள்ள குடும்பத்திலிருந்து பெண்கள் வந்து சமூகத் தொண்டு செய்ய முன் வந்ததைத் தலைவி பெரும் பெருமையாகக் கருதி அவளைச் சேர்த்துக் கொண்டுவிட்டார்களாம்.

''மனோன்மணி வந்து, 'சேவிகா மந்த'ரில் புகுந்து சில மாதங்களுக்குள் பலவித அரும் சேவைகளைச் செய்து விட்டாளாம். ஏழைக் குழந்தைகள் நிதி என்பதற்குத் தன் சொத்திலிருந்து நாலாயிரம் ரூபாய் நன்கொடையாகக் கொடுத்தாளாம். 'மந்த'ரில் தமிழ்சங்கம் என்பதை நிறுவி அதற்குத் தலைவியாகி, வாரத்திற்கு இருமுறை காரைக்கால் அம்மையார், மங்கையற்கரசி போன்ற சைவப்பற்றுள்ள பெண்களின் வாழ்க்கை பற்றிய அரிய சொற்பொழிவுகளை ஆற்றி, தமிழுக்கும் தொண்டாற்றி வருகிறாளாம்.

''இதையெல்லாம் கேட்டதும் என் தலை கிறுகிறுத்தது. இது உண்மை என்பதை நான் மனோன்மணியை நேரில் காணாவிடில் நம்பியிருக்க மாட்டேன். பாவம் மனோன்மணி அசோகனது காதல் அவளுக்கு முடிவில் துறவறத்தைக் கொடுத்துவிட்டது'' என்று கூறிவிட்டு லேசாகச் சிரித்தாள்.

''நீங்கள் கூறிய அனைத்தும் கேட்க ஆச்சரியமாக இருக்கிறது. மனோன்மணிக்கு உல்லாசமான உலக வாழ்வின் மீது எத்தனை ஆசை? அவ்வளவையும் திரஸ்கரித்து விட்டுத் துறவி போல் பொது ஜனசேவை செய்வதென்றால் நம்ப முடியவில்லை'' என்றாள் அருணா.

''சில சமயங்களில் வாழ்க்கையில் நடக்கும் சில நிகழ்ச்சிகளை நம்பத்தான் முடியாது. மனோன்மணி துறவியானது முற்றிலும் உண்மை. இந்தச் சந்தர்ப்பத்திலே எனக்குப் புகழ் பெற்ற கதாசிரியர் ஒருவரின் மணிமொழி ஞாபகத்திற்கு வருகின்றது. 'துறவியின் கடந்த காலம் பாபம் நிறைந்ததென்றால், பாபியின் வருங்காலம் சுபிக்ஷம் நிறைந்ததாக இருக்க வேண்டும். இல்லையா?' என்பது அந்த வாக்கு. இதில் மனோன்மணி விஷயத்தில் உண்மை நிறைந்திருக்கிறது'' என்று பரிகாசமாகப் பேசிச் சிரித்தாள் கௌரியம்மாள்.

பிறகு திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவளாக ''அருணா! முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்ல மறந்து விட்டேனே! ஆபீஸ் விலாசத்திற்கு வந்த இந்த கடிதத்தை உன்னிடம் கொடுக்க மறந்துபோனது எவ்வளவு முட்டாள்தனம்!'' என்று கூறிவிட்டு, கைப் பையைத் திறந்து பரபரப்பாக ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள்.

ஆவலுடன் அதை வாங்கி, உறை மீதிருந்த கையெழுத்தைப் பார்த்த அருணாவின் நெஞ்சு படபடத்தது. நெற்றி மீது துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு, கடித உறையைக் கிழித்துப் படிக்க ஆரம்பித்தாள்.

''அன்புள்ள அருணா,

ஸ்ரீமதி கௌரியம்மாவின் ஆதரவில் நீ நகரத்தில் தங்கி வசிப்பதை அறிந்து அவர்கள் விலாசத்திற்கு உனக்குக் கடிதம் எழுதத் துணிந்தேன். இந்தக் கடிதம் உனக்கு ஆச்சர்யத்தையும், சிறிது துயரத்தையும் கொடுக்கக்கூடும். ஒரு சமயம், என் மீது உனக்கு மிக்க கோபமும் வெறுப்பும் ஏற்பட்டிருக்கலாம். நான் வீட்டை விட்டு வெளியேறிய பின், தொடர்ந்து ஏற்பட்ட பல துயரமான சம்பவங்களுக்கு ஓர் அளவு நான்தான் பொறுப்பாளி என்றாலும் எல்லாவற்றிற்குமே நூன்தான் காரணம் என்று நினைப்பது தவறு. எனினும், நடந்தது, நடந்து விட்டது. என்னால் உனக்கு நேர்ந்த பல அவமானங்களையும், கஷ்டங்களையும் நீ மறந்து என்னைச் சகோதரி என்ற முறையில் மன்னிக்க வேண்டுகிறேன்.

''கடிதத்தின் தலைப்பில் உள்ள விலாசம் உனக்கு அதிசயத்தையும், பிரமிப்பையும் உண்டாக்கலாம். ஆமாம்

அருணா! கடைசியில் பல தொல்லைகளுக்குப் பிறகு என் கனவு நனவாயிற்று. நான் ஸ்ரீமான் சோமசேகர் அவர்களைச் சில மாதங்களுக்கு முன்பு மணந்து கொண்டு விட்டேன். தற்சமயம் என் மாமனாரான அயலூர் பண்ணையார், மகன் மீது கொண்ட மனஸ்தாபத்தை மறந்து எங்கள் இருவரையும் குடும்பத்தில் ஏற்றுக்கொண்டு விட்டார்.

''உனக்கு எல்லாம் புதிர்போல் காண்கிறது. விளக்கமாகச் சொல்லுகிறேன். கேள். வீட்டைவிட்டு வெளியேறி ஓடியதும் நான் பல இன்னல்களை அனுபவித்தேன். அவைகளை நேரில் விவரமாகக் கூறினால்தான் புரியும். என் கஷ்டங்களுக்குக் காரணமாக என் கணவரே அமைந்தார் என்றாலும் மிகையில்லை. ஆனால் இப்பொழுது நான் அவரை மன்னித்து விட்டேன். பல கஷ்டங்களுக்குப் பிறகு, நான் முடிவில் ஒரு லாரி விபத்தில் சிக்கி, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்த நர்ஸ் உதவியால் பங்காரு அம்மாள் என்கிற பண்பு மிக்க மூதாட்டி ஒருவரின் வீட்டில் சமையற்காரியாக வேலைக்கு அமர்ந்தேன். அவர்களுக்குச் சோமசேகர் குடும்பத்தை நன்கு தெரியும். நான் யார் என்பதை அறிந்து கொண்டுவிட்ட அவர்கள், எப்படியோ சோமசேகரின் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு, அவர் எனக்கு இழைத்த அநீதியை எடுத்துக்கூறி, அவரது மனத்தை மாற்றி, அவரது தவறை உணரச் செய்து விட்டதோடு அவரை வரவழைத்து என்னைச் சந்திக்கச் செய்து இருவருக்குமிடையே இருந்து புத்தி சொல்லி, எங்கள் திருமணத்தையும் ஆர்ப்பாட்டம் இன்றித் தமது செலவிலேயே எளிய முறையில் நடத்தி வைத்துவிட்டார்.

''சோமசேகர் என்னை மணந்து கொள்வதற்கு ஒப்பி முன் வந்ததற்கும், என் மாமனார் விசயத்தை கேள்விப்பட்டு முதலில் மகன் மீது கொண்ட கோபம் மாறி, எங்கள் இருவரையும் குடும்பத்தில் ஏற்றுக் கொண்டதற்கும் பங்காரு அம்மாளேதான் காரணமானவர் என்று கூறமாட்டேன். நமது அடுத்த வீட்டிலே வசித்து, நமக்கு உற்ற நண்பராகத் திகழ்ந்த சிதம்பரத்திற்கு இந்தப் பெருமையில் ஒரு பகுதி சேர வேண்டியது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

''அன்புள்ள அருணா! நாம் சாதாரணமான அன்றாட வாழ்விலேகூட சில தவறுகள் செய்து விடுகிறோம். நமக்கு அண்டை வீட்டிலே வசிப்பவர்களை அறிந்து கொள்ளப் பொழுது இருப்பதில்லை. ஏன் நாம் முயற்சிப்பதும் இல்லை. அண்டை வீட்டுச் சிதம்பரத்தைப் பூரணமாக அறிந்துகொள்ள எனக்கு இப்பொழுதுதான் முடிந்தது. ஆரம்பத்திலே அவர் பிறர் விஷயங்களில் தலையிடும் முந்திரிக் கொட்டை மனிதர் என்றுகூடத் தவறாக நினைத்துவிட்டேன். அவரது தாயைப் பற்றியும் தாழ்வாக எண்ணினேன்.

''சிதம்பரம் தங்கமான மனிதர். அவர் நமது குடும்பத்துக்குச் செய்துள்ள உபகாரம் கொஞ்ச நஞ்சமல்ல. என்னைக் கண்டுபிடிக்க அரும்பாடுபட்டு சொந்தமாகப் பணச் செலவு செய்து கடைசியில் ஒருவாறு பங்காரு அம்மாளிடம் நான் தங்கியிருப்பதை அறிந்து கொண்டுவிட்டார். பங்காரு அம்மாளுக்கு உதவியாயிருந்து என் திருமணத்தை நடத்திவைத்தார். அத்துடன் என் மாமனாருக்குத் தக்க மனிதர்களைக் கொண்டு புத்தி சொல்லச் செய்து எங்களைக் குடும்பத்தில் ஏற்றுக்கொள்ள உதவினார். அண்ணன் ஆனந்தன் வழக்கில் மிக்க சிரத்தை எடுத்துக் கொண்டார். கடைசியாக அவர் நமக்குச் செய்துள்ள உபகாரத்தை நாம் உயிருள்ளவரை மறக்கவே முடியாது. ஆனந்தன் அண்ணன் வீடு வரும்போது நாம் அனைவரும் இருந்து அவரை வரவேற்று, அவருக்கு ஆறுதல் அளிக்க வேண்டியது என்ற ஏற்பாடு அவரது கடைசி ஏற்பாடு. எனக்கும் என் கணவருக்கும் ஆனந்தனைச் சந்திக்க மிகவும் பயமாகத்தான் இருக்கிறது. ஆனால் அண்ணனிடம் தாம் பேசி, எல்லோரையும் தாம் ஒன்று சேர்த்து வைத்துவிடப் போவதாகச் சிதம்பரம் உறுதி சொல்கிறார்.

''நீ அடுத்த வார ஆரம்பத்தில் உனது சிநேகிதி கௌரியம்மாளுடன் நகரத்திற்கு வரப் போவதை அறிகிறேன். கடந்து போனதை மறந்து முன்போல் நாம் அன்பு பூண்டு, ஒற்றுமையாக வாழ முயற்சிப்போம். நீ என்னை மன்னித்து வரவேற்பாய் என நம்புகிறேன்.

இப்படிக்கு உன் அன்புள்ள,
இந்திராணி

இந்திராணி,

குறிப்பு : எனது வாழ்வின் இலட்சியம் நிறைவேறியது. நான் விரும்பிய கணவருக்கு மாலையிட்டேன். வறுமையை உதறி விட்டேன். ஆனால் அன்புள்ள சகோதரி! அதை அடைய முயற்சித்த பாதை, மிக மிகத் துயரம் நிரம்பியதாக இருந்தது. என்னவோ என் ஒருத்திக்கு வெற்றி கிடைத்துவிட்டது. ஆனால் என்போல் துணிவுடன் இப்பாதையில் புகும் எல்லாப் பெண்களும் வெற்றி பெற்று விடுவார்கள் என்று சொல்வதற்கில்லை. வாழ்க்கை எனக்குக் கற்றுக் கொடுத்த கசப்பான போதனை இது.

இந்திராணி''

கடிதத்தைப் படித்து முடித்ததும், கௌரியம்மாளிடம் அதை அருணா கொடுத்துப் படிக்கச் சொன்னாள்.

ஆனந்தன் விடுதலை பெற்ற தினம் காலையிலே எழுந்து, சிதம்பரத்தின் வில் வண்டியில், அருணா, கௌரி, சௌந்திரம்மாள், சிதம்பரம் அனைவரும் நகரத்திற்குச் சென்றார்கள். சிறைசாலையினின்று வெளி வந்த அண்ணனது மாறிய தோற்றத்தைக் கண்டதும் அருணாவுக்குத் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. வாய் குழற ''அண்ணா'' என்று விம்மிக் கொண்டு ஓடி ஆனந்தனை அணைத்துக் கொண்டாள்.

தன்னை வரவேற்க வந்த உற்ற நண்பர்களின் மனக்குழைவு ஆனந்தனை மிகவும் துயர வசப்படுத்தவே, அவன் எல்லோரையும் கண்டு சிறு குழந்தைபோல் விம்மியழுதான். எப்பொழுதுமே அதட்டலாகப் பேசும் கௌரியம்மாளுக்குக் கூட இந்தக் காட்சி மனத்தை உருக்கிவிடவே, அவள் மறுபக்கம் தலையைத் திருப்பிக் கொண்டு வானத்தைப் பார்த்த வண்ணம் இருந்தாள்.

இது சமயம் சௌந்தரம்மாள், தாய்மை அன்பு நிறைந்த மெல்லிய குரலில், ''ஆனந்தா! வருத்தப்படாதே, நாங்கள் எல்லோரும் உன்னைக் கூட்டிப்போக வந்திருக்கிறோம். உன் தங்கையின் மானத்தைக் காக்க இந்தக் காரியம் நீ செய்தாய். அதனால் வெட்கப்பட ஒன்றுமில்லை'' என்று அன்புடன் ஆறுதல் சொன்னாள்.

வீட்டை அடைந்த பொழுது ஆனந்தனுக்கு எல்லாம் ஒரே அதிசயமாக இருந்தன. இரண்டு வீடுகளும் பெருக்கி மெழுகிக் கோலமிடப்பட்டிருந்தன. அவனுக்காக சுவை மிகுந்த ஒரு விருந்து காத்துக் கொண்டிருந்தது. சிதம்பரத்தின் ஏற்பாட்டின்படி முன்னதாகவே வந்து வீட்டில் காத்திருந்த இந்திராணி, ஆனந்தனைக் கண்டதும், ஓடி வந்து துயரத்துடன் அவனது கால்களில் விழுந்து நமஸ்கரித்தாள். ''அண்ணா! நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். அத்துடன் என் கணவரையும் மன்னிக்க வேண்டும்'' என்று கண்ணீருடன் அரற்றினாள்.

சிதம்பரம் வாயிலாக அனைத்தும் அறிந்திருந்த ஆனந்தன் திடுக்கிடவில்லை. ஆனால் சோமசேகர் தன் கையை நீட்டி, ''ஆனந்தா, நாம் ஒருவரை யொருவர் மன்னித்துக் கொண்டுவிடுவோம். உனது கத்திக் குத்தினால் நான் புனர்ஜன்மம் அடைந்து, நல்லதொரு மனிதனானேன். சட்டம் என்பதை யாரும் தமது கையில் எடுத்துக்கொள்ளக் கூடாது. நியாயம் வழங்குவது நியாய சபையின் உரிமை என்பதை நீயும் உணர்ந்து கொண்டாய். ஆகவே நம்மிருவரிடையே மனத்தாங்கலுக்கு இனி இடமிருக்கக்கூடாது'' என்று கூறியபோது, ஆனந்தன் தயக்கத்துடன் சோமசேகர் கரத்தைப் பிடித்து, ''எனக்கு உங்கள் மீது கோபமில்லை'' என்று முணு முணுத்தான்.

விருந்திற்குப் பிறகு, இந்திராணி கணவனுடன் தங்கள் வீட்டிற்குச் சென்று விட்டாள். சௌந்தரம்மாள் ஆனந்தனுடைய மனக் கவலையைப் போக்க ஏதோ பொது விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தாள். மீண்டும் ஒன்றுபட்ட இந்தக் குடும்பத்தில் தானும் கலந்து கொண்ட மகிழ்ச்சியும் சௌந்தரம்மாள் மேற்பார்வையில் தயாரிக்கப்பட்ட இனிய உணவருந்திய திருப்தியும் நிறைந்த கௌரியம்மாள் அன்று மாலை, லேசாக வீசிய பனிக்கு அடக்கமாக ஒரு கம்பளி மப்ளரைத் தலையில் சுற்றிக் கொண்டு கையில் சிறு கதர்ப் பையுடன் தன்னந்தனியாக ஊரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பி விட்டாள்.

தோட்டத்துக் கிணற்றில் கொஞ்சம் நீர் எடுத்துவரச் சென்ற

அருணா அங்கே சிதம்பரத்தைக் காண நேர்ந்தது. 'இரு வீடுகளுக்குமிடையேயிருந்த குட்டிச்சுவரும் இடித்துத் தள்ளப்பட்டுத் தோட்டம் ஒன்றாகிவிட்டிருந்தது. நமக்கு இடையே வித்தியாசம் ஏதுமில்லை என்பதற்குத் தரை மட்டமாகிவிட்ட இந்த இடைச்சுவரே சாக்ஷிபோதும்!' என்று கூறிவிட்டு அருணா சம்பாஷணையைத் துவக்கினாள். சிதம்பரம் தங்கள் குடும்பத்திற்குச் செய்துள்ள அநேக நன்மைகளுக்கு வந்தனம் செலுத்த வேண்டியது தனது கடமை என்று உணர்ந்து, அவள் மெதுவாக ''மிஸ்டர் சிதம்பரம், உங்களைப் பற்றி ஆரம்பத்திலே நான் தவறாக எண்ணியதற்கு மன்னிப்புக் கோருகிறேன். நீங்கள் எங்களுக்குச் செய்துள்ள உபகாரத்திற்கு நாங்கள் அனைவரும் மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம். அனைவருக்கும் சேர்த்து என் நன்றியைச் சமர்ப்பிக்கிறேன். இவ்வளவு அருகில், எங்கள் அண்டை வீட்டில் வசித்து வந்த உங்களை சரியாக அறிந்து கொள்ள முயற்சிக்காது, வெளி மனிதர்களைப் புரிந்து கொள்ள முயன்றது மதியீனம் என உணருகிறேன்'' என்றாள் உணர்ச்சி பொங்கும் தாழ்ந்த குரலில்.

பூச்செடி ஒன்றுக்கு களை செய்து, எருப் போட்டுக் கொண்டிருந்த சிதம்பரம், கையில் படிந்திருந்த மண்ணை உதறிவிட்டு எழுந்திருந்தான். வரிசையான தன் பற்கள் தெரிய லேசாகச் சிரித்துவிட்டு, ''என்னை அதீதமாகப் புகழ்கிறாய். கேட்க சங்கோஜமாக இருக்கிறது. அண்டை, அயலில் வசிக்கும் நாம் ஒருவருக்கொருவர் துன்ப காலத்தில் உதவி செய்துகொள்ள வேண்டியது மனிதப் பிறவி எடுத்ததன் கடமையாயிற்றே? அது இல்லையென்றால் நாம் மிருகத்திற்கும் கீழானவர்களாவோம். போகட்டும் அருணா, நான் உன்னிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன். ஆனால்...'' என்று கூறிவிட்டு நிறுத்தினான் தயக்கமாக.

அருணாவின் முகம் சிவந்துபோயிற்று. நெஞ்சு 'பக் பக்' என்று அடித்துக் கொண்டது. ''என்ன'' என்ற பாவத்தில் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்.

''உன்னை வெகு காலமாக நான் நேசிக்கிறேன். நீ என்னைக் கணவனாக ஏற்றுக்கொள்ள விரும்புவாயா என்று கேட்கத் துணிகிறேன். மனக்கிலேசத்தை உண்டு பண்ணினால் மன்னித்துவிடு. மற்றும் ஒரு முறை இதைப்பற்றி நான் பேசமாட்டேன் என்று

வாக்குறுதி அளிக்கிறேன்'' என்றான் நடுங்கும் மெல்லிய குரலில்.

அருணா முகத்தை முந்தானையால் துடைத்துக் கொண்டாள். ''இதற்குப் பதில் அளிக்கக் கொஞ்ச நாட்கள் அவகாசம் கொடுங்கள். எனக்கு ஒரே மனக் குழப்பமாக இருக்கிறது'' என்று படபடப்பாகப் பேசிய அருணா, அங்கிருந்து சரேலென உள்ளே சென்றுவிட்டாள்.

இரண்டு தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலை அருணாவிற்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அதைப் பிரித்த பொழுது அவளது கரங்கள் நடுங்கின.

அன்புள்ள அருணா,

சமீபத்தில் நடந்த கார் விபத்தைப்பற்றி அறிந்திருப்பாய். அதில் எனது மனைவி இறந்து போய்விட்டதையும் நீ கவனித்திருப்பாய். கடந்து போன எனது விவாகம் எனது மனசாட்சிக்கு முற்றிலும் விரோதமானது. உனது சகோதரர் சோமசேகரை மணந்து கொண்ட விஷயம் அறிந்தேன். எல்லோரும் ஒன்று பட்டுவிட்டதை அறிய மகிழ்ச்சி. என் பெற்றோர்களைத் திருப்தி செய்விக்க நான் நடந்துபோன விவாகத்தில் ஈடுபட்டேனே ஒழிய, உண்மையில் என்னால் உன் அன்பை மறக்க முடியவில்லை. நான் மீண்டும் உரிமை பெற்றுவிட்டதனால் உன்னை என் மனைவியாக ஏற்க விரும்புகிறேன். உன் ᐧ:ம்மதத்தை அறிய ஆவலுள்ளவனாக இருக்கிறேன்.

அன்புள்ள,

சுரேஷ்குமாரன்.''

கடிதத்தைப் படித்த பின்பு அவளுக்கு ஏற்பட்ட உணர்ச்சிப் போராட்டத்தை விவரிக்க முடியாது. கொஞ்ச நேரம் சிந்தித்த பின்பு, அவள் சுரேஷ்குமாரனுக்குப் பின் வருமாறு கடிதம் எழுதினாள்.

''அன்புள்ள நண்பர் சுரேஷ்குமாரனுக்கு,

தங்கள் கடிதத்திற்கு மெத்த வந்தனம். என் அன்பு கலந்த நன்றியும் கூட. தாங்கள் எனக்கு மனமுவந்து அளிக்க முன்வரும் அந்தஸ்தை நற்சமயம் ஏற்க முடியாததற்கு வருத்தம்

தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் அண்டை வீட்டில் வசிப்பவரும், என் தமையனின் நண்பருமான சிதம்பரம் என்பவருக்கும் எனக்கும் விவாகம் ஏற்கெனவே நிச்சயமாகிவிட்டது. தாங்களும் தங்கள் சகோதரியும் என் திருமணத்திற்கு வந்து தங்கள் மனங்கலந்த ஆசியை அளிக்க வேண்டுகிறேன்.

தங்கள்,

அருணா.''

கடிதத்தைத் தபாலுக்கு அனுப்பிவிட்டு, திடமானதொரு தீர்மானத்துடன் தோட்டத்திற்கு வந்தாள்.

பூஞ்செடிகளுக்கு எருவைத் தண்ணீர்விட்டு ஒரு வாளியில் கலக்கிக் கொண்டிருந்த சிதம்பரம் காலடி ஓசை கேட்டு நிமிர்ந்து பார்த்தான்.

அருணாவின் முகம் குப்பென சிவந்தது. வார்த்தைகள் தடுமாறின. அவளுக்குப் பயத்தில் இருதயம் இரண்டாகி விடும்போல் துடித்தது. ''சிதம்பரம்! முந்தா நாள் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்க வந்திருக்கிறேன்'' என்றாள் பெருமூச்சு வாங்க. திடுக்கிட்டுப்போன அவன் எழுந்து நின்றான்.

''உங்களை மணந்து கொள்ள மனப்பூர்வமாக இசைகிறேன்'' என்றாள் தடுமாற்றத்துடன்.

''உண்மையாகவா!'' என்று ஆச்சர்யத்துடன் கூவினான் சிதம்பரம்.

''உண்மைதான். புயல் போன்ற ஒரு பிரமையினால் உந்தப்பட்டு நான் இதற்கு ஒப்பவில்லை. உங்களைப்போல் ஒரு நல்ல மனிதர் இந்த உலகம் முழுவதும் தேடினால்கூட கிடைக்கமாட்டார் என்ற ஒரு நம்பிக்கை என்னை இதற்கு இசைய வைத்தது. நீங்கள் என்னை நேசிக்கும் அளவு உங்களை ஒருகால் என்னால் நேசிக்க முடியுமோ என்னவோ? ஆனால், அன்பானதொரு மனைவியாக இருக்க நான் மனப்பூர்வமாக முயற்சிப்பேன்'' என்று கூறிவிட்டு பேசமுடியாது திணறிய அருணா உள்ளே ஓடிவிட்டாள்.

இரவு வீட்டின் முற்றத்திலே அமர்ந்திருந்த கௌரியம்மாள், ''அருணா! உன் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். பொதுவாக எனக்கு ஆண்களைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கிடையாது. ஆனால் இந்த சிதம்பரம் கடவுள் தவறிப்போய் சிருஷ்டித்துவிட்ட ஒரு நல்ல மனிதன் என்று எனக்குப் படுகிறது. என் பாராட்டுதலை ஏற்றுக்கொள்'' என்று அவளது கரத்தைப் பற்றிக் குலுக்கினாள்.

நன்றியுடன் அருணா அவளை நோக்கினாள். கௌரி மேலும் தொடர்ந்தாள், ''மண வாழ்க்கையில் பெண்ணுக்கு வேண்டியது விலையுயர்ந்த ஆபரணங்கள், ஆடைகள் இவைகள் அல்ல. அநேக புருஷர்கள், பெண் ஒருத்தியை மணவாழ்க்கையில் விரும்புவது பொருளாதாரப் பாதுகாப்பு என நினைக்கிறார்கள். அது தவறு. பெண் உள்ளத்திலே கணவனிடம் எதிர்பார்ப்பது உணர்ச்சிகளின் பாதுகாப்பு. அது கிடைத்து விட்டால் தாம்பத்திய வாழ்க்கையில் பெண் வெற்றியடைவது நிச்சயம். சிதம்பரம் அதிக அழகான புருஷன் அல்ல; மிகுந்த பணக்காரனும் அல்ல. ஆனால், உன்னை மிகவும் அன்பாகப் பாதுகாத்து, என்றும் கடமை தவறாத கணவனாக இருக்கக்கூடிய மன உறுதி நிறைந்தவன். அவனை நீ மணந்து கொள்வது பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம். திடீரெனப் பார்த்த அளவில் தீ போல் பற்றி எரியக் கூடிய காதலைவிட, நீண்ட நாள் கணவன் மனைவி என்று பழகிய பின் ஏற்படும் அன்பு நீடித்திருக்கும் என்று நம்புகிறேன்'' என்று பிரசங்கித்தாள்.

அருணாவின் மனத்திலே அமைதி நிறைந்திருந்தது. நல்லதொரு சிநேகிதி, அன்பான கணவன், பாச மிகுந்த அண்ணன், இவர்கள் நடுவே தனது வருங்காலத்தைச் சிந்தித்துப் பார்த்த அவள் தனக்குள்ளே இளநகை செய்தாள். ஆமாம்! அவளது வருங்காலம் மிகவும் இனிமை மிகுந்து நீண்டு நெடும் பாதையாக அவள் மனக் கண்முன் விரிந்து கொண்டு வந்தது.

(சுபம்)